128.	தனபால், திரு. ம.	..	திருப்போரூர் (செ.வ.)
129.	தாமரைக்கனி, திரு. இரா.	..	ஸ்ரீவில்லிபுத்தூர்
130.	தாமோதரன், திரு. எம். சி.	..	நெல்லிக்குப்பம்

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

131.	திருநாவுக்கரசு, திரு. எஸ்.	..	அறந்தாங்கி
132.	துரை, திரு. எஸ். எம்.	..	ஆத்தூர்
133.	துரைமுருகன், திரு. கே. எஸ்.	..	பல்லடம்
134.	துரை ராமசாமி, திரு.	..	வெள்ளக்கோவில்
135.	தெய்வநாயகம், திரு. எ.	..	மதுரை (மத்தி)
136.	தென்னவன், திரு. மு.	..	இராமநாதபுரம்
137.	தேவராஜ், திரு. அ.	..	செய்யாறு
138.	தேனி பன்னீர்செல்வம், திரு.	..	போடிநாயக்கனூர்
139.	நடேசன், திரு. மு.	..	சேலம்-2
140.	நடேசன் பால்ராஜ், திரு. வெ.	..	நாங்குநேரி
141.	நாகூர் மீரான், திரு. எஸ்.	..	கடையநல்லூர்
142.	நிர்மலா, திருமதி பி.	..	திண்டுக்கல்
143.	நெடுஞ்செழியன், டாக்டர் இரா.	..	தேனி
144.	பஞ்சவர்ணம், திருமதி கே.	..	வலங்கைமான் (செ.வ.)
145.	பட்டாபிராமன், திரு. கா. ப.	..	காஞ்சிபுரம்
146.	பரந்தாமன், டாக்டர் ஜெ.	..	பேரணாம்பட்டு (செ.வ.)
147.	பரமசிவம், திரு. ஆர். பி.	..	சின்னசேலம்
148.	பரமசிவன், திரு. ஏ. எம்.	..	சோழவந்தான்
149.	பலராமன், திரு. உ.	..	பூங்காநகர்
150.	பழனிசாமி, திரு. இரா.	..	தாரமங்கலம்
151.	பழனிசாமி, திரு. க.	..	எடப்பாடி
152.	பழனிசாமி, திரு. நா.சா.	..	கிணத்துக்கடவு
153.	பழனிசாமி, திரு. வெ.	..	திருப்பூர்

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

154	பழனிசாமி, திரு. ஜி.	..	திருத்துறைப்பூண்டி (செ.வ.)
155.	பழனியம்மாள், திருமதி க.	..	ராசிபுரம்
156.	பன்னீர்செல்வம், திரு. என்.	..	திருவிடைமருதூர்
157.	பன்னீர்செல்வம், திரு. சா.	..	திண்டிவனம்
158.	பன்னீர்செல்வம், திரு. ஜெ.	..	திருநாவலூர்
159.	பாண்டியம்மாள், திருமதி இரா.	..	உசிலம்பட்டி
160.	பாப்பா சுந்தரம், திரு. அ.	..	குளித்தலை
161.	பாலகங்காதரன், திரு. ஜெ.	..	சிவகாசி
162.	பாலகிருஷ்ணன், திரு. சோ.	..	முதுகுளத்தூர்
163.	பாலசுப்பிரமணியன், திரு. கி.	..	பட்டுக்கோட்டை
164.	பாலசுப்பிரமணியன், திரு. வெ.	..	மயிலாப்பூர்
165.	பாலசுப்ரமணியன், திரு. எஸ்.ஆர்.	..	பொங்கலூர்
166.	பாலன், திரு. எம்.கே.	..	சைதாப்பேட்டை
167.	பாலையா, திரு. ஆ.	..	குளச்சல்
168.	பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ்.	..	தென்காசி
169.	புதுநயினார் ஆதித்தன், திரு. இரா.	..	சேரன்மகாதேவி
170.	புரட்சிமணி, திரு. ச.	..	மங்களூர் (செ.வ.)
171.	புருஷோத்தமன், டாக்டர் ஆ. வெ.	..	பெண்ணாகரம்
172.	பூராசாமி, திரு. எம்.	..	பூம்புகார்
173.	பெரியசாமி, திரு. ப.	..	பெருந்துறை
174.	பெரியசாமி, திரு. வே.	..	அந்தியூர் (செ.வ.)

175. பெரியவீரன், திரு. எம். .. பெரியகுளம்

176. பெருமாள், திரு. செ. .. ஏற்காடு (ம.ப.)

177. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)

178. பொன்னுசாமி, பேராசிரியர் க. .. மருங்காபுரி

179. பொன்னுசாமி, திரு. பெ. .. தருமபுரி

180. பொன்னுவேலு, திரு. ஏ.தா. .. வரகூர் (செ.வ.)

181. போளூர் வரதன், திரு. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)

182. மணிமேகலை, டாக்டர் சு. .. அரியலூர்

183. மணிமேகலை, திருமதி வி.ஜி. .. அருப்புக்கோட்டை

184. மணிவாசகம், திரு. கே.பி. .. உடுமலைப்பேட்டை

185. மதுசூதனன், திரு. இ. .. டாக்டர் இராதா கிருஷ்ணன் நகர்

186. மரியம் உல் ஆசியா, திருமதி கே. .. அரவக்குறிச்சி

187. மல்லிகா, செல்வி கோ. .. புவனகிரி

188. மனோகரன், திரு. கே.ஏ. .. ஓசூர்

189. மாணிக்கம், திரு. சி. .. ஈரோடு

190. மாலா, டாக்டர் ஜி.ஆர். .. திருச்சிராப்பள்ளி-2

191. முத்துசாமி, திரு. சு. .. பவானி

192. முத்தையா, திரு. இரா. .. சேடப்பட்டி

193. முருகானந்தம், திரு. கே.ஆர். .. சிவகங்கை

194. முருகையா பாண்டியன், திரு. ஆர்... அம்பாசமுத்திரம்

195. முனிரத்தினம், திரு. ஏ.எம். .. சோளிங்கர்

196. முனிவெங்கடப்பன், திரு. கே.	..	கிருஷ்ணகிரி
197. முனுசாமி, திரு. கா. பூ.	..	காவேரிப்பட்டினம்
198. முஹமது ஆசிப், திரு.	..	திருவல்லிக்கேணி
199. மூர்த்தி, திரு. து.	..	சீர்காழி (செ.வ.)
200. மோகனன், திரு. கோவி.எஸ்.	..	இராணிப்பேட்டை
201. மோசஸ், டாக்டர் எம்.	..	நாகர்கோவில்
202. ரகுபதி, திரு. சே.	..	திருமயம்
203. ரங்கநாதன், திரு. ப.	..	புரசைவாக்கம்
204. ரத்தினவேல், திரு. த.	..	திருவெறும்பூர்
205. ரமணி நல்லதம்பி, திருமதி	..	ராதாபுரம்
206. ரமேஷ், திரு. வி.பி.ஆர்.	..	தூத்துக்குடி
207. ரவிக்குமார், திரு. ஏ.	..	பொன்னேரி (செ.வ.)
208. ரவிச்சந்திரன், திரு. வி.	..	உப்பிலியாபுரம் (ம.ப.)
209. ராமசுப்பு, திரு. எஸ்.எஸ்.	..	ஆலங்குளம்
210. ராஜு, திரு. எச்.எம்.	..	உதகமண்டலம்
211. ராஜு, திரு. கே.ஆர்.	..	கூடலூர்
212. ராஜு, திரு. கே.பி.	..	பேரூர்
213. ராஜேந்திரன், திரு. என்.ஆர்.	..	காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
214. லட்சுமணன், திரு. வி.கே.	..	கோயம்புத்தூர் (கிழக்கு)
215. லாரன்ஸ், திரு. கு.	..	பத்மநாபபுரம்
216. லோகாம்பாள், திருமதி ஜெ.	..	லால்குடி
217. வரதராஜன், திரு. செ.து.	..	செங்கல்பட்டு

LEGISLATIVE ... TAMIL NADU
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

218. வீரபாண்டியன், டாக்டர் பெ. .. செங்கம் (செ.வ.)
219. வெங்கடராம ரெட்டி, திரு. மு. .. தளி
220. வெங்கடேசன், திரு. பி.ஆர்.எஸ். .. கடலூர்
221. வேடியப்பன், திரு. தா. .. போளூர்
222. வேலையா, திரு. டி. .. திருநெல்வேலி
223. ஜனார்தனன், திரு. தே. .. விழுப்புரம்
224. ஜானகிராமன், திரு. கோ. .. மேல்மலையனூர்
225. ஜீனத் சர்புதீன், திருமதி .. சேப்பாக்கம்
226. ஜெயகுமார், திரு. டி. .. ராயபுரம்
227. ஜெயக்குமார், திரு. எஸ். .. தியாகராயநகர்
228. ஜெயராமன், திரு. எஸ்.ஆர். .. சேலம்-1
229. ஜெயலலிதா, டாக்டர் ஜெ. .. பர்கூர்
230. ஜெய்சன் ஜேக்கப், டாக்டர் .. ஆரணி
231. ஸ்ரீதரன், டாக்டர் அ. .. வால்பாறை (செ.வ.)
232. பிட்ரிக்ஸ் டி' சோசா, டாக்டர் .. நியமனம்
233. (வெற்றிடம்) .. ஒரத்தநாடு
234. (வெற்றிடம்) .. ஆற்காடு
235. (வெற்றிடம்) .. துறைமுகம்

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

கிருஷ்ணமூர்த்தி, திரு. ஆர். .. தலைமை வழக்கறிஞர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மாசி 3, யுவ - திருவள்ளுவர் ஆண்டு 2027

1996, பிப்ரவரி 15, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில், பேரவை காலை 10.00 மணியளவில் கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

" தன்னுயிர் தான்அறப் பெற்றானை ஏனைய
மன்னுயி ரெல்லாம் தொழும் ".

தன்னுயிர் தனக்கு மட்டுமே என்ற தன்னலச் செறுக்கு நீங்கி வாழ்ந்து மறைந்தோரை, மண்ணுலகில் வாழும் அனைவரும் அவர்தம் பெருமைகளை உணர்ந்து, போற்றித் தொழுவர்.

1. இரங்கற் குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திருவாளர்கள் எம்.கே. இராஜமாணிக்கம் அவர்கள் 11-12-1995 அன்றும், செ.ஜெ. இராமசாமி அவர்கள் 25-12-1995 அன்றும், என்.வி. குருசாமி அவர்கள் 6-02-1996 அன்றும், எஸ். திருமலைசாமி கவுண்டர் அவர்கள் 8-02-1996 அன்றும் மறைவுற்றது குறித்து, இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம்.கே. இராஜமாணிக்கம் அவர்கள், 1980-ஆம் ஆண்டு முதல் 1984-ஆம் ஆண்டு வரை, திருச்சிராப்பள்ளி மாவட்டம் முசிறி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, செவ்வனே பணியாற்றியுள்ளார்கள்.

திரு. செ.ஜே. இராமசாமி அவர்கள், 1962–ஆம் ஆண்டு முதல் 1967–ஆம் ஆண்டு வரை, மற்றும் 1967–ஆம் ஆண்டு முதல் 1971–ஆம் ஆண்டு வரை, வட ஆற்காடு மாவட்டம் அரக்கோணம் தொகுயிலிருந்தும், மற்றும் 1977–ஆம் ஆண்டு முதல் 1980–ஆம் ஆண்டு வரை சோளிங்கர் தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, மிகச்சீரிய முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. என்.வி. குருசாமி அவர்கள், 1971–ஆம் ஆண்டு முதல் 1976–ஆம் ஆண்டு வரை மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்லமுறையில் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. எஸ். திருமலைசாமி கவுண்டர் அவர்கள், 1985–ஆம் ஆண்டு முதல் 1988–ஆம் ஆண்டு வரை, கோயம்புத்தூர் மாவட்டம் உடுமலைப்பேட்டைத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்புறப் பணியாற்றியுள்ளார்கள்.

அன்னார்களின் மறைவு குறித்து, அவர்களை இழந்துவிட்ட அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன். இயற்கை எய்திய அப்பெரியோர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(பின்னர் உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்).

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும் LEGISLATIVE ASSEMBLY

2. இரங்கல் தீர்மானம்

ஆந்திர மாநில முதல்வர் திரு. என்.டி. ராமாராவ் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கீழ்க்கண்ட இரங்கல் தீர்மானத்தைப் பேரவைமுன் வைக்கிறேன்:

“ஆந்திர மாநிலத்தின் முன்னாள் முதல் அமைச்சர் திரு. என்.டி. ராமாராவ் அவர்கள், 18–1–1996 அன்று அகால மறைவுற்றது குறித்து, இப்பேரவை மிகுந்த துயருறுகிறது.

திரு. செ.ஜே. இராமசாமி அவர்கள், 1962–ஆம் ஆண்டு முதல் 1967–ஆம் ஆண்டு வரை, மற்றும் 1967–ஆம் ஆண்டு முதல் 1971–ஆம் ஆண்டு வரை, வட ஆற்காடு மாவட்டம் அரக்கோணம் தொகுயிலிருந்தும், மற்றும் 1977–ஆம் ஆண்டு முதல் 1980–ஆம் ஆண்டு வரை சோளிங்கர் தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, மிகச்சீரிய முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. என்.வி. குருசாமி அவர்கள், 1971–ஆம் ஆண்டு முதல் 1976–ஆம் ஆண்டு வரை மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்லமுறையில் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. எஸ். திருமலைசாமி கவுண்டர் அவர்கள், 1985–ஆம் ஆண்டு முதல் 1988–ஆம் ஆண்டு வரை, கோயம்புத்தூர் மாவட்டம் உடுமலைப்பேட்டைத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்புறப் பணியாற்றியுள்ளார்கள்.

அன்னார்களின் மறைவு குறித்து, அவர்களை இழந்துவிட்ட அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன். இயற்கை எய்திய அப்பெரியோர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(பின்னர் உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்).

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2. இரங்கல் தீர்மானம்

ஆந்திர மாநில முதல்வர் திரு. என்.டி. ராமாராவ் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கீழ்க்கண்ட இரங்கல் தீர்மானத்தைப் பேரவைமுன் வைக்கிறேன்:

"ஆந்திர மாநிலத்தின் முன்னாள் முதல் அமைச்சர் திரு. என்.டி. ராமாராவ் அவர்கள், 18–1–1996 அன்று அகால மறைவுற்றது குறித்து, இப்பேரவை மிகுந்த துயருறுகிறது.

முற்பகல் 10.05

மறைந்த திரு. என். டி. ராமாராவ் அவர்கள், ஆந்திர மாநிலம், கிருஷ்ணா மாவட்டம், குடிவாடா தாலுக்காவில் உள்ள நிம்மகுரு கிராமத்தில், 1923-ஆம் ஆண்டு மே திங்கள் 28-ஆம் நாளன்று பிறந்தார்கள். பி.ஏ. பட்டம் பெற்று, பின்னர் 1948-ஆம் ஆண்டு அரசுப் பணியில் சப்-ரிஜிஸ்திராராக சில காலம் பணியாற்றினார். பின்னர் அவருக்கு இருந்த கலை ஆர்வம் காரணமாக அப்பதவியை இராஜினாமா செய்துவிட்டு, நடிப்புத் துறையில் ஈடுபடலானார். தெலுங்கு, தமிழ்த் திரைப்படங்கள் உட்பட 290 படங்களில் அவர் நடித்துள்ளார். சிறிதாகவும், பெரியதாகவும், 120 கதாபாத்திரங்களில் நடித்துள்ளார். மேலும், பல்வேறு படங்களின் தயாரிப்பாளராகவும், இயக்குநராகவும் திகழ்ந்துள்ளார். வறட்சி, புயல், வெள்ளம், கடல் கொந்தளிப்பு போன்ற இயற்கைச் சீற்றங்களால் நாட்டின் சில பல பகுதிகள் பாதிக்கப்பட்ட போதும், 1962-ஆம் ஆண்டு இந்தியா-சீனா போர் மூண்டபோதும், நிவாரண நிதியாக பல லட்ச ரூபாய் நிதி திரட்டிக் கொடுத்துள்ளார். அவரது கலைச் சேவைக்காக 1968-ஆம் ஆண்டு இந்திய அரசின் 'பத்மஸ்ரீ' பட்டமும், ஆந்திரப் பல்கலைக் கழகத்தின் மதிப்புறு 'டாக்டர்' பட்டமும் வழங்கப்பட்டுள்ளன.

அரசியலில் தீவிர ஈடுபாடு கொள்ள முடிவு எடுத்ததையடுத்து 1982-ஆம் ஆண்டு தெலுங்கு தேசக் கட்சியைத் தொடங்கிய அவர், 1983-ஆம் ஆண்டு நடைபெற்ற ஆந்திர சட்டமன்றப் பொதுத் தேர்தலிலும், பின்னர் 1985-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலிலும், அதன் பின்னர் அண்மையில் 1994-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலிலும், வெற்றி வாகை சூடி மூன்று முறை ஆந்திரப் பிரதேச முதலமைச்சராய் பொறுப்பேற்றுள்ளார். இந்திய தேசிய அரசியலிலும் தனக்கென ஓர் சிறப்பிடத்தைப் பெற்றுத் திகழ்ந்தார்.

இவ்வாறு அரசியலிலும், திரைப்படத் துறையிலும் சாதனைகள் பல நிகழ்த்திக் காட்டிய அவர், ஆந்திர மக்களின் நம்பிக்கைக்கு உரியவராகத் திகழ்ந்ததோடு, தமிழக மக்களின் அன்பையும், நன்மதிப்பையும் பெருமளவில் பெற்றவராய்த் திகழ்ந்தார். குறிப்பாக சென்னை மாநகரத்தின்மீது மிகுந்த அக்கறை கொண்டவராகவும் இருந்தார்.

அத்தகைய சிறப்பும், சால்பும் கொண்ட பெருந்தகையின் மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும் என இப்பேரவை கருதுகிறது.

அன்னாரது மறைவு குறித்து, அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கும், அவர்மீது பற்று கொண்ட அனைவருக்கும்

இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

இத்தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த அப்பெருமகனாருக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(பின்னர் உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

3. வினாக்கள்-விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் வினா எண் 1, டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு நிதி அமைச்சர்.

1--

வாக்குச் சாவடி அமைத்தல்

**87478--டாக்டர் ஜெ. பரந்தாமன்:*

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டம், பேர்ணாம்பட்டு 1-வது வார்டு எம்.ஜி.ஆர். நகர், பேர்ணாம்பட்டு தொகுதி (மசிக்கம்) ஓணான்குட்டை சாத்கர் பங்களா மேடு பகுதி ராஜாக்கல் ஊராட்சி, சங்கராபுரம் கிராமம் ஆகிய இடங்களில் வாக்குச் சாவடி அமைக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதியமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது ஒட்டர்பாளையம் என்றழைக்கப்படும் சங்கராபுரத்தில் ஏற்கெனவே ஒரு வாக்குச் சாவடி உள்ளது. ஏனைய கிராமங்களில் வாக்காளர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளதாலும், அவ்வாக்காளர்களுக்கு அமைக்கப்பட்டுள்ள வாக்குச் சாவடி இரண்டு

இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

இத்தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த அப்பெருமகனாருக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(பின்னர் உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

3. வினாக்கள்-விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் வினா எண் 1, டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு நிதி அமைச்சர்.

1--

வாக்குச் சாவடி அமைத்தல்

**87478--டாக்டர் ஜெ. பரந்தாமன்:*

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டம், பேர்ணாம்பட்டு 1-வது வார்டு எம்.ஜி.ஆர். நகர், பேர்ணாம்பட்டு தொகுதி (மசிக்கம்) ஓணான்குட்டை சாத்கர் பங்களா மேடு பகுதி ராஜாக்கல் ஊராட்சி, சங்கராபுரம் கிராமம் ஆகிய இடங்களில் வாக்குச் சாவடி அமைக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதியமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது ஒட்டர்பாளையம் என்றழைக்கப்படும் சங்கராபுரத்தில் ஏற்கெனவே ஒரு வாக்குச் சாவடி உள்ளது. ஏனைய கிராமங்களில் வாக்காளர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளதாலும், அவ்வாக்காளர்களுக்கு அமைக்கப்பட்டுள்ள வாக்குச் சாவடி இரண்டு

1996 பிப்ரவரி 15]

கிலோ மீட்டருக்குள் அமைந்திருப்பதாலும், தகுந்த கட்டிடங்கள் இல்லை என்பதாலும் ஒவ்வொரு கிராமத்திற்கும் தனித்தனியாக வாக்குச் சாவடி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதப்படுகிறது.

முற்பகல் 10-10

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள், உடல் ஊனமுற்றவர்கள், வயது முதிர்ந்தோர் கிட்டத்தட்ட 1 கிலோமீட்டர் தூரத்திற்கு மேல் நடந்து செல்வதற்கு சிரமமாக இருக்கிறது. அந்த தூரத்தின் அடிப்படையிலே கூட அந்த எல்லையைத்தான் குறித்திருக்கிறார்கள். அந்த எல்லையைத் தாண்டிக்கூட இப்போது கிராமங்கள் விரிவடைந்திருக்கின்றன. அதே போன்று தேர்தல் விதிமுறைகளின்படி மேற்கூறியவர்களை வாகனங்களில் அழைத்து வரக்கூடாது என்ற கட்டுப்பாடும் இருக்கிறது. எனவே அவர்களின் நலன் கருதியும் அதேபோன்று கட்டிடங்கள் இல்லாத பகுதியில் பஞ்சாயத்து அலுவலகங்களிலும், அல்லது வேறு வசதியான கட்டிடங்கள் இருந்தால் அந்தப் பகுதிகளில் முன்னுரிமை தந்து வாக்குச்சாவடிகள் அமைக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் ஆணையம் நிர்ணயித்துள்ள விதிமுறைகளின்படி அதிகபட்சம் ஒரு வாக்குச்சாவடியில் 1,200 வாக்காளர்கள் இருக்கலாம் என்று அமைக்கப்பட்டிருக்கின்றது. வாக்காளர்கள் நடந்துசென்று வாக்களிக்க வேண்டிய வாக்குச்சாவடிகளின் அதிகபட்ச தூரம் 2 கிலோ மீட்டர் அளவிற்கு மிகாமல் இருக்கவேண்டும் என்றும் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிடுகின்ற அந்த ஊர்களைப் பொறுத்தவரையிலும் பேரணாம்பட்டு 1-வது வார்டு எம்.ஜி.ஆர். நகர் வாக்காளர்களின் எண்ணிக்கை 578 ஆகும். அவர்கள் அரை கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள பேரணாம்பட்டு இஸ்லாமிய மேல்நிலைப்பள்ளியில் அமைப்பட்டுள்ள வாக்குச்சாவடிக்குச் சென்று வாக்களிக்கின்றனர். வாக்குச்சாவடிகளின் தற்போதைய அதாவது ஆண்கள், பெண்கள் ஆகிய இரண்டு வாக்குச் சாவடிகளின் மொத்த வாக்காளர்களுடைய எண்ணிக்கை 1,584 தான். சாத்கர் பஞ்சாயத்தைச் சேர்ந்த பிளாக் 5 பங்களாமேடு வாக்காளர்களின் எண்ணிக்கை 367 பேர். இவ்வாக்காளர்கள் சுமார் 1 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள பகுதி 12 ஆண்கள், பெண்கள் ஆகிய இரண்டையும் சேர்த்து மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 2,069 ஆகும். அதேமாதிரி மற்றைய இடங்களிலேயும் தூரம் 1½ கிலோ மீட்டர் அளவிற்குள்ளும், 0.2 கிலோ

மீட்டர் அளவிற்கு மேலும் அமைந்திருக்கின்ற காரணத்தினாலும், போதுமான அளவிற்கு தனித்தனி வாக்குச்சாவடிகள் இருப்பதற்கான வாக்காளர்கள் எண்ணிக்கை இல்லாத காரணத்தினாலும், ஒவ்வொரு கிராமத்திற்கும் வாக்குச்சாவடிகள் இருப்பது என்பதை ஆணையம் ஏற்றுக்கொள்ளாத காரணத்தினாலும், இந்த வாக்குச்சாவடிகள் எங்கே வைக்கவேண்டுமென்று விரும்புகிறார்களோ அங்கே பாதுகாப்பான கட்டிட வசதி இல்லை என்கிற காரணத்தினாலும் இப்போது இருக்கிற முறையே சரியாகவும், போதுமானவையாகவும் அமைந்திருக்கிறது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிக்கை அனுப்பியுள்ளார்கள்.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள், உடல் ஊனமுற்றோர், வயது முதிர்ந்தோர் போன்ற சிரமப்படுவர்களை மட்டுமாவது வாகனங்களில் அழைத்து வந்து வாக்களிக்க அரசு பரிந்துரை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இதில் அரசு முடிவெடுக்க முடியாது. தேர்தல் ஆணையம்தான் அதற்கான வழிமுறைகளைக் கூற வேண்டும். அப்படிப்பட்ட வழிமுறைகளை தேர்தல் ஆணையம் வகுக்குமேயானால் அப்போது அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 2, டாக்டர் மு. சீனியம்மாள், மாண்புமிகு சட்ட அமைச்சர்.

2--

தமிழ்நாடு சீட்டுக் கழகம்

*70703--**டாக்டர் மு. சீனியம்மாள்:**

மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) 1984-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு மூடப்பட்ட தமிழ்நாடு சீட்டுக்கழகம் மீண்டும் ஆரம்பிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாடு சீட்டுக் கழகம் மீண்டும் துவக்கப்படும் உத்தேசம் ஏதும் அரசுக்கு இல்லை.

மீட்டர் அளவிற்கு மேலும் அமைந்திருக்கின்ற காரணத்தினாலும், போதுமான அளவிற்கு தனித்தனி வாக்குச்சாவடிகள் இருப்பதற்கான வாக்காளர்கள் எண்ணிக்கை இல்லாத காரணத்தினாலும், ஒவ்வொரு கிராமத்திற்கும் வாக்குச்சாவடிகள் இருப்பது என்பதை ஆணையம் ஏற்றுக்கொள்ளாத காரணத்தினாலும், இந்த வாக்குச்சாவடிகள் எங்கே வைக்கவேண்டுமென்று விரும்புகிறார்களோ அங்கே பாதுகாப்பான கட்டிட வசதி இல்லை என்கிற காரணத்தினாலும் இப்போது இருக்கிற முறையே சரியாகவும், போதுமானவையாகவும் அமைந்திருக்கிறது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிக்கை அனுப்பியுள்ளார்கள்.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள், உடல் ஊனமுற்றோர், வயது முதிர்ந்தோர் போன்ற சிரமப்படுவர்களை மட்டுமாவது வாகனங்களில் அழைத்து வந்து வாக்களிக்க அரசு பரிந்துரை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இதில் அரசு முடிவெடுக்க முடியாது. தேர்தல் ஆணையம்தான் அதற்கான வழிமுறைகளைக் கூற வேண்டும். அப்படிப்பட்ட வழிமுறைகளை தேர்தல் ஆணையம் வகுக்குமேயானால் அப்போது அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 2, டாக்டர் மு. சீனியம்மாள், மாண்புமிகு சட்ட அமைச்சர்.

2--

தமிழ்நாடு சீட்டுக் கழகம்

70703--டாக்டர் மு. சீனியம்மாள்:

மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) 1984-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு மூடப்பட்ட தமிழ்நாடு சீட்டுக்கழகம் மீண்டும் ஆரம்பிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாடு சீட்டுக் கழகம் மீண்டும் துவக்கப்படும் உத்தேசம் ஏதும் அரசுக்கு இல்லை.

1996 பிப்ரவரி 15]

(ஆ) எழவில்லை.

டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனையோ தனி நிறுவனங்கள், தனி நபர்கள் மக்களைத் தவறான வழியில் கவர்ச்சிகரமான பரிசுகள் என்றும், எங்கோ மேய்கின்ற ஆடுகளையும், யாருக்கோ சொந்தமான இடங்களையும் காட்டி நிதி நிறுவனங்கள் நடத்தி வருகின்றனர். ஒரு பொருளின் விலையில் மூன்றில் ஒரு பங்கைக் கட்டினால் போதும் என்று லட்சக்கணக்கான மக்களின் பணத்தை வசூல் செய்துகொண்டு போகின்றனர். இதில் ஏமாற்றத்தால் உயிர், பொருள், உடைமைகளை இழக்கின்ற சூழ்நிலையில், நல்லாட்சி செய்து வருகின்ற எழுச்சி ரூபத்தின் புரட்சி நாயகி, டாக்டர் புரட்சித் தலைவியினுடைய நல்லாட்சியில் படித்த இளைஞர்களுக்கு வேலை கொடுக்கவும், நடுத்தர மக்கள், அரசு ஊழியர்கள் பங்குகொண்டு, பணப் பாதுப்பிற்காக ஏற்பாடு செய்யவும், அரசின் வருமானத்தைப் பெருக்குவதற்காகவும் மீண்டும் அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்ததைப்போல ஒரு காலத்தில் இருந்தது, இன்றும் இருக்கிறது. ஆனால் அண்மையில் மத்திய அரசின் சார்பாக இந்தச் சீட்டு நிறுவனங்களை எல்லாம் கட்டுப்படுத்த ஒரு சட்டம் அமைந்திருக்கிறது. அந்தச் சட்டத்தின் மூலமாக தவறு செய்கின்ற சீட்டு நிறுவனங்களை நடத்துபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால், தமிழக அரசு தனியாக சீட்டு நிறுவனங்களை ஆரம்பிக்கும் உத்தேசம் இல்லை.

முற்பகல் 10–15

டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தேசம் இல்லை என்று கூறினார்கள். திருவாங்கூர் பேங்க், மைசூர் பேங்க், பாட்டியாலா பேங்க், காஷ்மீர் பேங்க் போன்ற சமஸ்தானங்களால் நடத்தப்பட்டு வந்த வங்கிகளை ஒன்று இணைத்து ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா என்று இணைத்தது போல தமிழ் நாட்டில் உள்ள அனைத்து சிட் பண்டு கம்பெனிகளையும் ஒன்றாக இணைத்து ஒரு கார்ப்பொரேஷனாகச் செயல்படுத்தினால் தமிழ்நாட்டிலுள்ள சீட்டு கம்பெனிகளும் சிறப்பாக நடைபெறும், அதுமட்டும் இன்றி அதிகமான ஊக்க தொகை, வட்டி என்று இந்நிறுவனங்கள் கூறுவது போல, நாமும் கிராம மக்களுக்கு, நகை

சேமிப்பு, நகரத்தில் வீடு இல்லாதவர்களுக்கு குறைந்த விலையில் நிலம், கல்யாணத்திற்கு சீட்டு என்று பரிந்துரைத்து வைத்தால், அனைத்து வழிகளிலேயும் மக்களுக்கு பயன்பெறும் காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் புரட்சி யுகத்தின் தலைவியும், நினைத்ததை நடத்தி முடிக்கின்ற ஆற்றல் மிக்க முதலமைச்சர் உள்ள காலத்தில் நடத்திக் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மூலக் கேள்விக்கும், மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற இந்தத் துணைக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.எஸ் ராமசுப்பு.

திரு. எஸ்.எஸ் ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற இந்தக் கேள்வியானது மிக முக்கியமான கேள்வியாகும். ஏனென்று சொன்னால் இன்றைக்கு பெனிபிட் பண்ட் என்றும், சீட்டுக் கம்பெனிகள் என்றும் எந்த விதமான சட்ட ஒழுங்கிற்கும் கட்டுப்படாமல், ஏராளமாகத் திறந்து, அவைகளில் பல கம்பெனிகள் மூடப்பட்டதனால், பல ஊர்களிலே மக்களுக்கு இவை ஒரு பெரிய பிரச்சனையாகி, பணத்தையெல்லாம் இழந்து தவிக்கின்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. இவைகளைக் கட்டுப்படுத்துவதற்கு, சட்டங்களைக் கடுமையாகப் பயன்படுத்த வேண்டும். சில நல்ல கம்பெனிகள், சரியாக நடத்தக் கூடியவை, ஏன் சில வங்கிகள்கூட தடுமாறக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. பலவகையான விளம்பரங்கள் மூலமாக, டி.வி, ரேடியோ என்று எதைப் பார்த்தாலும், எதை எடுத்துக் கொண்டாலும் சரி, விளம்பரங்களைப் போட்டு மக்களை ஏமாற்றக்கூடிய நிலை உருவாகி இருக்கிறது. இது மிக வேகமாக் வளர்ந்து வருவதனால் இதைத் தடுப்பதற்கு, போலி கம்பெனிகளையெல்லாம், சட்ட பிரச்சினைக்கு உட்படாமல் இருப்பவைகளை எல்லாம் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய சட்டத்தினுடைய வாயிலாக மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு தக்க நடவடிக்கைகளையெல்லாம் போதுமான அளவுக்கு எடுத்து வருகிறது. முழு விவரமும் தேவையானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1996 பிப்ரவரி 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 3, திரு. என்.ஆர். சிவபதி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

3--

கிராமச் சாவடிகள் புதுப்பித்தல்

36629*--திரு என்.ஆர் சிவபதி:**

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வருவாய் கிராமங்களுக்கு கிராமச் சாவடிகள் புதுப்பித்து தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், நத்தம், காடுவெட்டி, அலகரை, மணமேடு, எம். புத்தூர், நாகைய நல்லூர் ஆகிய வருவாய் கிராமங்களின் கிராமச் சாவடிகளைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பழுதடைந்த கிராமச்சாவடிகளைப் பழுது பார்ப்பதற்காக அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என்.ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமச் சாவடிகள் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் உயர் அதிகாரிகள், கிராம அலுவலர்கள் ஆகியோர் இன்று அமர்ந்து, வரி வசூல் செய்யும் இடமாகவும், அதேநேரத்தில் விசாரணை செய்யும் இடமாகவும் இருப்பதால், எல்லாக் கிராமங்களிலும் இன்று நல்ல நிலையில் இருந்தாலும், பழுதடைந்த ஒரு சில வருவாய் கிராமங்களில் இருக்கும் கிராமச் சாவடிகளை அரசு புதுப்பித்துத் தருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் நீண்ட பல காலமாக சாவடிகள் இருந்திருக்கின்றன. சில சாவடிகள் மிகவும் பழுதடைந்து, அவை செப்பனிட முடியாத நிலையில் உள்ளன. சில சாவடிகள் செப்பனிடும் நிலையில் இருக்கின்றன. சில சாவடிகள் நல்ல நிலையில் இருக்கின்றன. செப்பனிடும் நிலையில் உள்ள சாவடிகளையெல்லாம் பழுது பார்ப்பதற்கு அரசு நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1996 பிப்ரவரி 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 3, திரு. என்.ஆர். சிவபதி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

3--

கிராமச் சாவடிகள் புதுப்பித்தல்

36629--**திரு என்.ஆர் சிவபதி:**

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வருவாய் கிராமங்களுக்கு கிராமச் சாவடிகள் புதுப்பித்து தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், நத்தம், காடுவெட்டி, அலகரை, மணமேடு, எம். புத்தூர், நாகைய நல்லூர் ஆகிய வருவாய் கிராமங்களின் கிராமச் சாவடிகளைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பழுதடைந்த கிராமச்சாவடிகளைப் பழுது பார்ப்பதற்காக அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என்.ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமச் சாவடிகள் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் உயர் அதிகாரிகள், கிராம அலுவலர்கள் ஆகியோர் இன்று அமர்ந்து, வரி வசூல் செய்யும் இடமாகவும், அதேநேரத்தில் விசாரணை செய்யும் இடமாகவும் இருப்பதால், எல்லாக் கிராமங்களிலும் இன்று நல்ல நிலையில் இருந்தாலும், பழுதடைந்த ஒரு சில வருவாய் கிராமங்களில் இருக்கும் கிராமச் சாவடிகளை அரசு புதுப்பித்துத் தருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் நீண்ட பல காலமாக சாவடிகள் இருந்திருக்கின்றன. சில சாவடிகள் மிகவும் பழுதடைந்து, அவை செப்பனிட முடியாத நிலையில் உள்ளன. சில சாவடிகள் செப்பனிடும் நிலையில் இருக்கின்றன. சில சாவடிகள் நல்ல நிலையில் இருக்கின்றன. செப்பனிடும் நிலையில் உள்ள சாவடிகளையெல்லாம் பழுது பார்ப்பதற்கு அரசு நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என்.ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐயா அவர்கள் அரசு நடவடிக்கை எடுக்கும் என்று சொன்னார்கள். தொட்டியம் ஒன்றியத்தில், நத்தம், காடுவெட்டி, அலகரை, மணமேடு, எம்.புத்தூர், நாகைய நல்லூர் ஆகிய கிராமங்களில் கிராமச் சாவடிகள் பழுதடைந்துள்ளன. இவை வருவாய் கிராமங்களில் அதிக மக்கள் தொகை இருக்கிற கிராமங்கள் ஆகவும், அதே நேரத்தில் அந்தந்தப் பகுதியில் முக்கிய வருவாய் கிராமங்களாகவும் இருப்பதால், அந்தக் கிராமச் சாவடிகளை எப்போது புதுப்பிக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும், அதற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு ஐயா அவர்கள் அறிவிப்பார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் என்று சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன நத்தம் சாவடிக்கு *75* ஆயிரம் ரூபாய், காடுவெட்டி கிராமச் சாவடிக்கு *75* ஆயிரம் ரூபாய், அலகரை, மணமேடு கிராமச் சாவடிக்களுக்கு *80* ஆயிரம் ரூபாய், எம். புத்தூர் கிராமச் சாவடிக்கு *1* லட்சத்து *26* ஆயிரம் ரூபாய், நாகையநல்லூர் கிராமச் சாவடிக்கு *50* ஆயிரம் ரூபாய் என்று மதிப்பீடு போட்டு, வேலை செய்ய வேண்டும் என்று அரசு முயற்சி செய்து கொண்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் *10–20*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *4*, திரு. வி.பி.ஆர். ரமேஷ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

4--

அரசு பொது மருத்துவமனையை நவினமாக்குதல்

38705--**திரு. வி.பி.ஆர். ரமேஷ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தூத்துக்குடி அரசு பொது மருத்துவமனையை நவீன மருத்துவ வசதி கொண்ட மருத்துவமனையாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

திரு. என்.ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐயா அவர்கள் அரசு நடவடிக்கை எடுக்கும் என்று சொன்னார்கள். தொட்டியம் ஒன்றியத்தில், நத்தம், காடுவெட்டி, அலகரை, மணமேடு, எம்.புத்தூர், நாகைய நல்லூர் ஆகிய கிராமங்களில் கிராமச் சாவடிகள் பழுதடைந்துள்ளன. இவை வருவாய் கிராமங்களில் அதிக மக்கள் தொகை இருக்கிற கிராமங்கள் ஆகவும், அதே நேரத்தில் அந்தந்தப் பகுதியில் முக்கிய வருவாய் கிராமங்களாகவும் இருப்பதால், அந்தக் கிராமச் சாவடிகளை எப்போது புதுப்பிக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும், அதற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு ஐயா அவர்கள் அறிவிப்பார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் என்று சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன நத்தம் சாவடிக்கு 75 ஆயிரம் ரூபாய், காடுவெட்டி கிராமச் சாவடிக்கு 75 ஆயிரம் ரூபாய், அலகரை, மணமேடு கிராமச் சாவடிக்களுக்கு 80 ஆயிரம் ரூபாய், எம். புத்தூர் கிராமச் சாவடிக்கு 1 லட்சத்து 26 ஆயிரம் ரூபாய், நாகையநல்லூர் கிராமச் சாவடிக்கு 50 ஆயிரம் ரூபாய் என்று மதிப்பீடு போட்டு, வேலை செய்ய வேண்டும் என்று அரசு முயற்சி செய்து கொண்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 4, திரு. வி.பி.ஆர். ரமேஷ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

4--

அரசு பொது மருத்துவமனையை நவீனமாக்குதல்

*38705--**திரு. வி.பி.ஆர். ரமேஷ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தூத்துக்குடி அரசு பொது மருத்துவமனையை நவீன மருத்துவ வசதி கொண்ட மருத்துவமனையாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

1996 பிப்ரவரி 15]

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தூத்துக்குடி அரசு பொது மருத்துவமனையில் தேவையான நவீன மருத்துவ வசதிகள் இயங்கி வருகின்றன. தேவை ஏற்பட்டால் மேலும் வசதிகள் செய்யப்படும்.

திரு. வி.பி.ஆர். ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி பல தொழிற்சாலைகள் நிறைந்த நகரம். வளர்ந்து வரும் நகரம். போக்குவரத்து அதிகம் உள்ள இடம். அங்கு அடிக்கடி விபத்து நடக்கின்றது. தூத்துக்குடி அரசாங்க மருத்துவமனையில் நவீன வசதி இல்லாததால், பாளையங்கோட்டை, மதுரை போன்ற நவீன வசதிகள் கொண்ட மருத்துவமனைகளுக்கு பாதிக்கப்படுபவர்களைக் கொண்டு செல்வதற்குள் அவர்கள் இறந்து விடுகிறார்கள். ஆதலால், தூத்துக்குடியும் மதுரை, பாளையங்கோட்டை போன்ற நவீன வசதிகளை கொண்ட மருத்துவமனையாக எப்போது ஆக்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, பாளையங்கோட்டை மருத்துவமனைகள் டீச்சிங் ஆஸ்பிடல்ஸ், ஆதலால், அங்கு கூடுதலாக வசதிகள் ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கின்றது. எனவே, அதற்கு சரிசமமான வாய்ப்புகளை இங்கே ஏற்படுத்துவது என்பது சிரமம் என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னக் கருத்துக்களை மனதில் வைத்து, நிதி நிலைமைக்கேற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. வி.பி.ஆர். ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில முக்கியமான ஸ்கேன் போன்ற அதி நவீன வசதிகள் கொண்ட மருத்துவமனையாக எப்போது ஆக்கித் தரப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சி.டி. ஸ்கேன் என்பது எல்லா மருத்துவமனைகளிலும் இல்லை. சொல்லப்போனால், இன்னும் அது சென்னை, தஞ்சாவூர் இப்படிப்பட்ட இடங்களிலேதான் இருந்தது. இப்போது சமீபத்திலே, திருநெல்வேலி, பாளையங்கோட்டை மருத்துவமனையிலே புதியதாக ஒரு சி.டி. ஸ்கேன் அமைக்கப்படுகிறது. எனவே, அதற்கு மிக அருகாமையிலேதான் இந்த மருத்துவமனையும் இருக்கிற காரணத்தினால், அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களுக்கு அது பயன்படும். ஆனால், மற்ற சிறிய அளவிலே இருக்கிற ஸ்கேன்கள் எல்லா

மருத்துவமனைகளுக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தூத்துக்குடி மருத்துவமனைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, சி.டி. ஸ்கேனைப் பொறுத்தவரை இப்போது பாளையங்கோட்டையிலே வருகிற அந்த மருத்துவமனையிலே இருப்பது அந்தப் பகுதிக்கும், தூத்துக்குடிப் பகுதிக்கும் பயன்படும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தூத்துக்குடிப் பற்றியது மூலக் கேள்வி. திரு. த. ரத்தினவேல்.

திரு. த. ரத்தினவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியில் ஒரு மருத்துவக் கல்லூரி வேண்டுமென்று

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்குத் தனிக்கேள்விப் போடுங்கள். உட்காருங்கள். திரு. சூ.சே. இராஜமன்னார்.

திரு. சூ.சே. இராஜமன்னார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரனார் மாவட்டம், நெல்லை மாவட்டத்திலிருந்து தனியாகப் பிரிவதற்கு முன்பு, நெல்லை மாவட்டம் ஒரே மாவட்டமாக இயங்கியபோது, அமைச்சர் அவர்கள் சொன்னது போல இப்போது டீச்சிங் ஆஸ்பிடலாக நெல்லையில் செயல்பட்டாலும், தூத்துக்குடிதான் அரசு பெரிய மருத்துவமனையாக அப்போது செயல்பட்டு வந்தது. அப்போது நெல்லையிலிருந்து தூத்துக்குடிக்கு சுகமில்லாதவர்களைக் கொண்டு வரும் சூழ்நிலைதான் இருந்தது. இப்போது, தூத்துக்குடியிலிருந்து நெல்லைக்குக் கொண்டு வரும் ஒரு சூழ்நிலையாக மாற்றியிருக்கிறார்கள். ஆகவே, அப்போதிருந்தவாறு, தூத்துக்குடி மருத்துவமனையையும் முன்பு போலவே பெரிய மருத்துவமனையாக, அனைத்து வசதிகளையும் கொண்ட மருத்துவமனையாக மாற்றித் தர அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மருத்துவமனை ஒரு தாலூகா மருத்துவமனையாகத்தான் இருந்தது. திருநெல்வேலி மாவட்டம் ஒன்றாக இருந்த நேரத்திலே திருநெல்வேலி, பாளையங்கோட்டை மருத்துவமனை கல்லூரி மருத்துவமனையாக இருந்து. அதே நேரத்திலே, தென்காசி மருத்துவமனைதான் அந்த மாவட்டத்தினுடைய தலைமை மருத்துவமனையாக இருந்தது. தூத்துக்குடி தாலூகா மருத்துவமனை எனற நிலையிலிருந்து இப்போது தலைமை மருத்துவமனையாக, அதாவது மாவட்டத் தலைமை மருத்துவமனையாக உயர்த்தப்பட்டிருக்கிறது. 496 படுக்கைகள் அங்கே இருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால்,

1996 பிப்ரவரி 15]

ஏற்கெனவே இருந்த வசதிகள் அங்கே குறைக்கப்படவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் கூடுதலாக வசதிகளை இந்த அரசு ஏற்படுத்தும். எனவேதான் நான் ஏற்கெனவே தெரிவித்தேன், ஒவ்வொரு மருத்துவமனையிலேயும் சி.டி. ஸ்கேன், போன் வசதிகள் ஏற்படுத்துவது என்பது முடியாத காரியம் என்று. அதனால்தான் மதுரை என்றால் மதுரையைச் சுற்றியிருக்கிற பகுதிக்கு, திருநெல்வேலி என்றால் திருநெல்வேலியைச் சுற்றி இருக்கிற பகுதிக்கு, கோவை என்றால் கோவையைச் சுற்றியிருக்கிற பகுதிக்கு, இப்படி ஒவ்வொரு பகுதியாகப் பிரித்து முக்கியமான கருவிகளை அங்கே வாங்கிக் கொடுத்து கொண்டிருக்கிறோம். இருந்தாலும், தூத்துக்குடியைப் பொறுத்தவரை அரசாங்கம் தனிக் கவனம் எடுத்துக்கொண்டு தேவையான மாவட்டத் தலைநகரத்திற்குத் தேவையான வசதிகள் இருந்தாலும்கூட, கூடுதலாக என்ன வசதி தேவை என்பதை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 5, திரு. இரா. தாமரைக்கனி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

5--

அரசு மூலிகைத் தோட்டம்

70715*--திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, செம்பகத்தோப்பு அருகே உள்ள ஸ்ரீஆண்டாள் கோயில் நிலத்தில் உள்ள அரசு மூலிகைத் தோட்டம் செயல்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஏனென்றால் மூலிகைப் பண்ணை அமைப்பதற்கான ஆரம்ப வேலைகளான நீண்ட காலக் குத்தகை அனுமதி கிணறு மற்றும் முள்வேலி அமைக்கத் தேவையான அனுமதியை தேவஸ்தானம் தரவில்லை. மேலும் பொருளாதாரம் மற்றும் தொழில் நுட்ப ரீதியாகத் திட்டம் வெற்றிகரமாக அமையாது என்று ஆய்வு தெரிவிக்கிறது.

1996 பிப்ரவரி 15]

ஏற்கெனவே இருந்த வசதிகள் அங்கே குறைக்கப்படவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் கூடுதலாக வசதிகளை இந்த அரசு ஏற்படுத்தும். எனவேதான் நான் ஏற்கெனவே தெரிவித்தேன், ஒவ்வொரு மருத்துவமனையிலேயும் சி.டி. ஸ்கேன், போன் வசதிகள் ஏற்படுத்துவது என்பது முடியாத காரியம் என்று. அதனால்தான் மதுரை என்றால் மதுரையைச் சுற்றியிருக்கிற பகுதிக்கு, திருநெல்வேலி என்றால் திருநெல்வேலியைச் சுற்றி இருக்கிற பகுதிக்கு, கோவை என்றால் கோவையைச் சுற்றியிருக்கிற பகுதிக்கு, இப்படி ஒவ்வொரு பகுதியாகப் பிரித்து முக்கியமான கருவிகளை அங்கே வாங்கிக் கொடுத்து கொண்டிருக்கிறோம். இருந்தாலும், தூத்துக்குடியைப் பொறுத்தவரை அரசாங்கம் தனிக் கவனம் எடுத்துக்கொண்டு தேவையான மாவட்டத் தலைநகரத்திற்குத் தேவையான வசதிகள் இருந்தாலும்கூட, கூடுதலாக என்ன வசதி தேவை என்பதை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 5, திரு. இரா. தாமரைக்கனி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

5--

அரசு மூலிகைத் தோட்டம்

70715--திரு. இரா. தாமரைக்கனி:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, செம்பகத்தோப்பு அருகே உள்ள ஸ்ரீஆண்டாள் கோயில் நிலத்தில் உள்ள அரசு மூலிகைத் தோட்டம் செயல்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஏனென்றால் மூலிகைப் பண்ணை அமைப்பதற்கான ஆரம்ப வேலைகளான நீண்ட காலக் குத்தகை அனுமதி கிணறு மற்றும் முள்வேலி அமைக்கத் தேவையான அனுமதியை தேவஸ்தானம் தரவில்லை. மேலும் பொருளாதாரம் மற்றும் தொழில் நுட்ப ரீதியாகத் திட்டம் வெற்றிகரமாக அமையாது என்று ஆய்வு தெரிவிக்கிறது.

[*1996 பிப்ரவரி 15*

முற்பகல் 10–25

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள செம்பகத்தோப்பில் ஆயிரக்கணக்கான மூலிகைகள் இருக்கின்றன. ஸ்ரீஆண்டாள் துளசிச் செடியிலேதான் அவதரித்தார் என்ற வரலாறுகள் எல்லாம் உண்டு. திருப்பதி ஏழுமலையானுக்கு ஸ்ரீவல்லிபுத்தூர் ஆண்டாள் கோயிலினுடைய துளசி மாலைதான் போகும். ஆய்வு பண்ணித்தான், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இருக்கும்போது அவரிடம் விசேஷ அனுமதி பெற்று மூலிகைத் தோட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 3 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டது. ** அங்கே தேவஸ்தானம் வேலி போட அனுமதி கொடுக்கவில்லை; அங்கே மூலிகைகள் எல்லாம் விளையாது என்று ** தகவல் அரசுக்கு செயற்குறிப்பு......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்திலே ** குற்றச்சாட்டு இருக்கக் கூடாது. ** என்பதும் கடைசியிலே சொன்ன ** என்ற அந்தச் சொல்லும் நீக்கப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வேண்டியிருக்கிறது. நான் அந்தத் தொகுதி எம்.எல்.ஏ. மாண்புமிகு தமிழக முதல்வராக இருந்த இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆய்வு பண்ணி,--அப்போது ஹண்டே அவர்கள் சுகாதார அமைச்சராக இருந்தார்--ரூபாய் எல்லாம் ஒதுக்கி, தேவஸ்தானத்திலிருந்து அனுமதி கொடுத்துத்தான் 33 ஏக்கர் கொடுத்தது. தவறான தகவலைச் சொல்கிறார்கள். புரட்சி தலைவர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. கலைஞர் கருணாநிதி ஆட்சிக் காலத்தில் மூடப்பட்டது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில் மீண்டும் அந்த மூலிகைத் தோட்டம் உருவாக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தேவஸ்தானம் குறுகிய குத்தகைக்குத்தான் கொடுக்கிறது. எனவே குறுகிய குத்தகைக்கு கொடுக்கின்றபோது அதிலே நிரந்தரமான முன்னேற்றங்களைச் செய்ய முடியாத நிலை, ஏற்படுகிறது என்று தெரிவிக்கிறார்கள். எனவே ஒரு நீண்டகாலக் குத்தகைக்குக் கொடுத்தால் அதில் கிணறு அமைப்பது, வேலி போடுவது மற்ற பல முன்னேற்றங்களை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

நம்மால் செய்ய முடியும். குறுகிய காலத்திற்குக் கொடுத்தால் இவற்றையெல்லாம் செய்த பின்னாலே அடுத்த முறை அவர்கள் நீட்டிக்க மறுத்தால் இதெல்லாம் வீணாகும் என்ற நிலையிலேதான் அதிகாரிகள் இதைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருக்கு இருக்கின்ற சந்தேகத்தைக் கிளப்பியிருக்கின்ற காரணத்தால் நான் வேண்டுமானால் நேரடியாக அந்த தேவஸ்தானத்திற்குக் கடிதம் எழுதுகிறேன். அவர்கள் ஒப்புக்கொண்டால் இதைச் செய்வதற்கு நமக்கு எள்ளளவும் தடை கிடையாது. நமக்குச் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் இருக்கிறது. ஆனால் இடையிலே இந்தச் சிக்கல் ஏற்பட்ட காரணத்தால் அதை விரைவாகச் செய்ய முடியவில்லை. தேவையென்றால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த தேவஸ்தானத்திடத்திலே பேச வேண்டும். நான் நேரடியாகக் கடிதம் எழுதுகிறேன். ஒப்புக்கொண்டால் கண்டிப்பாக இதைச் செய்யலாம்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, மூலிகைத் தோட்டம் 33 ஏக்கர் லீசுக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால் அதிகாரிகள் வந்து மூலிகைத் தோட்டமே பயிரிடப்படவில்லை. அவர்கள் சப்-லீசுக்கு வேறு ஆளுக்கு விட்டுவிட்டார்கள். இதுதான் உண்மையான நிலவரம். இன்னும் அந்த லீஸ் தொகை பாக்கி கொடுப்பதில் தகராறுகள் நடந்து கொண்டிருக்கின்றன. மாண்புமிகு தமிழக முதல்வரிடம் விசேஷ அனுமதி பெற்று தாங்களே இடத்திற்கு விஜயம் செய்து - ஒரு மூலிகைத் தோட்டம் ஆரம்பிப்பதற்கு எவ்வளவு தூரம் சிரமப்படுகிறோம்? திடீரென்று மூடிவிட்டார்களே - இதை ஆரம்பிப்பதற்கு விசேஷ கவனம் செலுத்தி மாண்புமிகு முதல்வரிடம் நீங்கள் கலந்தாலோசித்து நேரடியாக அந்த இடத்திற்கு வந்து மூலிகைத் தோட்டம் ஆரம்பிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பீர்களா என்று அறிய விரும்புகிறேன். சாக்குபோக்கு சொல்ல வேண்டாம் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே சாக்குபோக்கு சொல்கிற விஷயம் ஒன்றும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேண்டுமானால் நேரடியாகப்போய் அவர்களை ஒப்புக்கொள்ள வைத்துவிட்டால் பிரச்சினை இல்லை. ஐந்தாண்டுக் காலத்திற்கு மேலே அவர்கள் லீஸ் கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். இரண்டு முறை இப்படி நீட்டிக்கப்பட்டிருக்கிறது. எனவே இதிலே நிறைய பணத்தை செலவழித்துச் செய்த பின்னாலே, தேவஸ்தானம் நீட்டிக்கொடுக்க

மறுத்துவிட்டால் அந்தப் பணம் வீணாகப் போகும் என்ற அடிப்படையிலேதான் அவர்கள் அங்கே செய்வதற்கு மறுக்கிறார்கள். ஆனால் நிறைய இடங்களிலே, கொல்லிமலை போன்ற இடங்களிலே நூற்றுக்கணக்கான ஏக்கரை நாம் எடுத்து மூலிகைப் பண்ணையை ஏற்படுத்தி வருகிறோம். சென்னையிலே கூட மூலிகைப் பண்ணையை ஏற்படுத்தி வருகிறோம். எனவே அங்கே நல்ல மூலிகை கிடைக்கும் என்று சொன்னால் அதைப் போய் நாம் தட்டிக்கழிக்க வேண்டிய அவசியம் இல்லை. எனவே நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். அங்கே இருக்கின்ற தேவஸ்தானம் நமக்கு நீண்ட காலக் குத்தகைக்கு அந்த 33 ஏக்கரை கொடுப்பதற்குத் தயாராக இருந்தால் அதிலே எவ்வளவு வேண்டுமானாலும் செலவழித்து நாம் அங்கே பயிரிடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முடியும். அதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இருக்கின்ற செல்வாக்கைப் பயன்படுத்தி தேவஸ்தானத்திடத்திலே பேசி அதை நீண்டகாலக் குத்தகைக்குக் கொடுப்பதற்கான நடவடிக்கையை அவர்கள் எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அரசை பொறுத்தவரையிலே தயாராக இருக்கிறது.

மாண்புமிகு **பேரவைத் தலைவர்**: வினா எண் 6, திரு. கே.ஏ. மனோகரன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

6--

ஒசூர்-பெங்களூர் துரித இரயில்

*65342--திரு. கே.ஏ. மனோகரன்:

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தொழிற்சாலைகள் நிறைந்துள்ள ஒசூர் நகருக்கும் பெங்களூருக்கும் இடையே ஓர் துரித இரயில் (Fast Non-Stop Train) இயக்க மத்திய அரசுக்கு பரிந்துரைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்பொழுது சேலம்-பனஸ்வாடி மீட்டர்கேஜ் தடத்தில் பெங்களூரில் உள்ள பனஸ்வாடிக்கும் ஒசூருக்கும் இடையே மூன்று இணை பயணிகள் இரயில் வண்டிகள் இயக்கப்பட்டு வருகின்றன. இது தற்போதைய

மறுத்துவிட்டால் அந்தப் பணம் வீணாகப் போகும் என்ற அடிப்படையிலேதான் அவர்கள் அங்கே செய்வதற்கு மறுக்கிறார்கள். ஆனால் நிறைய இடங்களிலே, கொல்லிமலை போன்ற இடங்களிலே நூற்றுக்கணக்கான ஏக்கரை நாம் எடுத்து மூலிகைப் பண்ணையை ஏற்படுத்தி வருகிறோம். சென்னையிலே கூட முலிகைப் பண்ணையை ஏற்படுத்தி வருகிறோம். எனவே அங்கே நல்ல மூலிகை கிடைக்கும் என்று சொன்னால் அதைப் போய் நாம் தட்டிக்கழிக்க வேண்டிய அவசியம் இல்லை. எனவே நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். அங்கே இருக்கின்ற தேவஸ்தானம் நமக்கு நீண்ட காலக் குத்தகைக்கு அந்த 33 ஏக்கரை கொடுப்பதற்குத் தயாராக இருந்தால் அதிலே எவ்வளவு வேண்டுமானாலும் செலவழித்து நாம் அங்கே பயிரிடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முடியும். அதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இருக்கின்ற செல்வாக்கைப் பயன்படுத்தி தேவஸ்தானத்திடத்திலே பேசி அதை நீண்டகாலக் குத்தகைக்குக் கொடுப்பதற்கான நடவடிக்கையை அவர்கள் எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அரசை பொறுத்தவரையிலே தயாராக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 6, திரு. கே.ஏ. மனோகரன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

6--

ஓசூர்-பெங்களூர் துரித இரயில்

*65342--திரு. கே.ஏ. மனோகரன்:

மாண்புமிகு போக்குவரதது மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தொழிற்சாலைகள் நிறைந்துள்ள ஓசூர் நகருக்கும் பெங்களூருக்கும் இடையே ஓர் துரித இரயில் (Fast Non-Stop Train) இயக்க மத்திய அரசுக்கு பரிந்துரைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்பொழுது சேலம்-பனஸ்வாடி மீட்டர்கேஜ் தடத்தில் பெங்களூரில் உள்ள பனஸ்வாடிக்கும் ஓசூருக்கும் இடையே மூன்று இணை பயணிகள் இரயில் வண்டிகள் இயக்கப்பட்டு வருகின்றன. இது தற்போதைய

பயணிகள் போக்குவரத்துக்குப் போதுமானதாக உள்ளது. சேலம்-பனஸ்வாடி இடையே உள்ள மீட்டர் கேஜ் இரயில் பாதை அகலப் பாதையாக மாற்றப்படவுள்ளது. இதனால் ஒசூருக்கும் பெங்களூருக்கும் இடையே நேரடி இரயில் போக்குவரத்து ஏற்படவுள்ளதால் இதுகுறித்து மத்திய அரசுக்குப் பரிந்துரை அவசியம் இல்லையெனக் கருதப்படுகிறது

முற்பகல் 10.30

திரு. கே. ஏ. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் அந்த இரயில் பாதை அகல இரயில் பாதையாக மாற்றப்பட்டு வருகிறது. இரண்டாவது பல்வேறு நேரங்களில் கர்நாடகத்தில் நடக்கக்கூடிய பிரச்சினைகள் காரணமாக நம் மாநிலத்திலிருந்து செல்லக்கூடிய வண்டிகள் எல்லாம் ஒசூரிலே நிறுத்தப்பட வேண்டிய சூழ்நிலைகள் ஏற்படுகிற காரணத்தால் ஒசூருக்கும் பெங்களூருக்கும் துரித இரயில் விட மத்திய அரசுக்கு தாங்கள் சிபாரிசு செய்வீர்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போதுமான அளவுக்கு அங்கே தேவைக்கு ஏற்ப துரித இரயில்கள் இயக்கப்படுகின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அந்த இரயில்கள் இயக்கியவுடனேயே அதற்குரிய நடவடிக்கையை அரசு மேற்கொண்டு இருப்பதாக எங்களுக்கு மத்திய அரசிடமிருந்து கடிதங்கள் வரப்பெற்று இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்திய அரசினுடைய செல்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டு தாங்களே வேண்டும் என்றாலும் அந்த முயற்சியை மேற்கொள்ளலாம். உரிய கடிதங்கள் வேண்டும் என்றாலும் அரசு மத்திய அரசுக்கு அனுப்பியதற்குப் பிறகு அதனுடைய நகலை வேண்டுமானாலும் உங்களிடத்திலே ஒப்படைக்கும். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

திரு. கே. ஏ. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் இயக்கப்படுகின்ற ரயில்கள் இரவு நேரங்களிலே வருகின்றன. அங்கே தொழிற்சாலைகள் மிகவும் நிறைந்த பகுதியாக இருக்கிற காரணத்தால் தொழிலாளர்கள் வந்து போக வசதியாக இருக்க வேண்டும் என்ற காரணத்திற்காக துரித இரயில்கள் வேண்டும் என்று கேட்கிறோம். அரசு பரிந்துரை செய்தால் அதனுடைய நகலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது போல கொடுத்தால் மத்திய அரசிடம் நாங்களும் சென்று அதனை வாங்குவதற்கான

முயற்சிகளில் ஒத்துழைப்போம் என்று சொல்லி மீண்டும் மத்திய அரசுக்குத் தாங்கள் சிபாரிசு செய்வீர்களா எனக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவ்வளவு செல்வாக்கு தொடர்ந்து இன்னும் வைத்து இருக்கிறீர்களா!

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசைப் பொறுத்தவரையிலும் நினைப்பதற்குள்ளே முடிக்கக்கூடிய அரசாக ஆற்றல் மிக்க அரசாக இந்த அரசு இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளை மனதிலே கொண்டு இந்த அரசு உடனடியாகப் பரிந்துரை செய்து அந்த நகலை உங்களுக்கு அனுப்பும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கா. பூ. முனுசாமி.

திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒசூர் நகரமும், பெங்களூர் நகரமும் ஓரளவுக்கு இரண்டு நகரங்களும் ஒன்றாக ஆகிவிட்டன. எடுத்துக்காட்டாக தாம்பரமும் சென்னையும் போல இன்று ஒசூரும், பெங்களூரும் இருந்து கொண்டிருக்கின்றன. பல தொழிற்சாலைகள் ஒசூரிலே இருந்தாலும்கூட அங்கே பணியாற்றுகின்ற டெக்னீஷியன்கள் மற்றும் உயர் அதிகாரிகள் பெங்களூரிலிருந்து வந்து கொண்டிருக்கிறார்கள். எனவே இங்கே சென்னை மத்தியிலேயிருந்து சென்று கொண்டிருக்கின்ற மின்சார ரயிலைப் போல ஒசூரிலிருந்து பெங்களூருக்கு ரெகுலராகச் செல்லக்கூடிய வாய்ப்பை அரசு உருவாக்க மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட இடங்களில் தான் இந்த மீட்டர் கேஜ் போன்றவைகளை எல்லாம் மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல் மின்சார ரயில் விடப்பட்டிருக்கிறது. அதேபோல் பெங்களூருக்கும் ஒசூருக்கும் இயக்கப்படுமா என்பதை அரசு பரிசீலிக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வு எங்களுக்குப் புரிகிறது. பெங்களூரில் பல்வேறு பணிகளைச் செய்கின்றவர்கள் ஒசூரில் தங்கி தங்களுடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம் பெங்களூரில் இருக்கின்ற வாடகை, அங்கே உள்ள இடத்தினுடைய மதிப்பு ஆகியவை அதிகமாக இருக்கின்ற காரணத்தால்

1996 பிப்ரவரி 15]

பக்கத்திலே இருக்கின்ற தமிழகத்திலே அவர்கள் தங்கிக்கொண்டிருக்கிறார்கள். அதற்காக போதுமான அளவுக்கு பேருந்துகளை நாம் 24 மணி நேரமும் இயக்கிக்கொண்டிருக்கிறோம். தேவைக்கு ஏற்ப பேருந்துகளை நாம் இயக்குகிறோம். ஆகவே பேருந்துகள் இயக்கப்படுகின்றபோது நீங்கள் சொல்லுவது போல் மின்சார ரயில் விடுவதற்கு வாய்ப்பு இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. முனிவெங்கடப்பன்.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் மிகப்பெரிய தொழிற்சாலைகள் நிறைந்த நகரமாக ஓசூர் நகரம் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே கிருட்டிணகிரி பகுதியிலிருந்து நிறைய தொழிலாளர்கள் ஓசூருக்குச் சென்று வருகிறார்கள். ஆகவே, பெங்களூரிலிருந்து ஓசூருக்கு வருகின்ற இரயில் பாதையை கிருட்டினகிரி வரைக்கும் நீட்டிக்க மத்திய அரசுக்கு நம்முடைய அரசு பரிந்துரை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசிலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஆ. வெ. புருஷோத்தமன்.

டாக்டர் ஆ.வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் மும்பய்-திருநெல்வேலி அல்லது தூத்துக்குடி-திருநெல்வேலி, திருவனந்தபுரம்-மும்பய் இரயில்கள் அனைத்தும் ஓசூர் வழியாக எதிர்காலத்தில் செல்வதற்கு அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யுமா, இப்படி செய்தால் இந்தப் பிரச்சினை முழுமையாகத் தீரும் என்று......

முற்பகல் *10-35*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இன்னும் மீட்டர் கேஜை வைத்துக்கொண்டு பேசிக்கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் கேட்கிற பாதைகள் எல்லாம் பிராட் கேஜ் ஆக வர வேண்டும். அது வந்த பிறகு கேளுங்கள்.

வினா எண் *7*, டாக்டர் எஸ்.எஸ். ஆர். இராமதாஸ், மாண்புமிகு உணவு அமைச்சர்.

7--

அரசின் நவீன அரிசி ஆலை

44371--டாக்டர் எஸ்.எஸ்.ஆர். இராமதாஸ்:*

மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

(அ) பண்ருட்டி-வடலூர் சாலையில் உள்ள அரசின் நவீன அரிசி ஆலை இலாபகரமாக நடைபெற்று வருகிறதா?

(ஆ) ஆம் எனில், ஆலைக்குப் போதுமான அளவு அரவை நெல் உள்ளதா?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், உணவு அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): பண்ருட்டி-வடலூர் சாலையிலுள்ள அரசின் நவீன அரிசி ஆலை லாபகரமாக நடைபெற்று வருகிறது. ஆலைக்குப் போதுமான அளவு அரவை நெல் உள்ளது என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எஸ்.எஸ்.ஆர். இராமதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலையில் ஆண்டு முழுவதும் அரவை செயல்படுகிறதா? ஆலையில் அரவையில் வரும் தவிடு யர்ருக்கு எந்த விதிமுறையின்மூலம் விற்கப்படுகிறது? அதனால் அரசுக்கு வரும் வருமானம் எவ்வளவு? இந்த ஆலையில் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்காகவும் அரவை செயல்படுகிறதா? அதனால் ஆண்டு வரும் வருமானம் எவ்வளவு? ஆலையின் முழுத் திறமையும் ஆண்டு முழுவதும் செயல்படுகிறதா? இல்லையெனில் என்ன காரணம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 7 கேள்விகள் கேட்டு இருக்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் திறமை உண்டு. அனைத்திற்கும் பதில் சொல்வார்கள். உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த ஆலை லாபகரமாக ஓடுகிறதா என்று கேட்டார்கள். இந்த ஆலை ஆரம்பித்த நாள் முதல் இதுவரையில் லாபகரமாகவே ஓடிக்கொண்டு இருக்கிறது. இடையில் 1993-94-ஆம் ஆண்டில் மட்டுமே நட்டம் ஏற்பட்டது. இதற்குக் காரணம் ஏகபோகக் கொள்முதல் செய்த நேரத்தில் ஈரப்பதம் அதிகமாக

1996 பிப்ரவரி 15]

இருந்ததால் நெல் அரவை செய்வதற்கு தனியார் மறுத்ததினால், இந்த நவீன அரிசி ஆலையின் மூலமாக அரவை செய்ததன் காரணமாக 5.2 விழுக்காடு அளவிற்கு நொய் அதிகமாக வந்ததின் காரணமாக அந்த ஆண்டு மட்டுமே நட்டம் ஏற்பட்டது. தொடர்ந்து 1989-90-இல் ரூ. 14,49,063.70 அளவுக்கு லாபகரமாகவும், 1990-91-இல் ரூ. 17,19,090 அளவுக்கு லாபகரமாகவும், 1991-92-இல் 20 இலட்சம் ரூபாய் அளவுக்கு லாபகரமாகவும், 1992-93-இல் 16 இலட்ச ரூபாய் அளவுக்கு லாபகரமாகவும், 1993-94-இல் 7 இலட்சம் ரூபாய் நட்டமும், 1994-95-இல் ரூ. 1,14,832.95 அளவுக்கு லாபகரமாகவும், இந்த ஆண்டு 1995-96-இல் ரூ. 22,49,834 அளவுக்கு லாபகரமாகவும் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட மூலக் கேள்விக்கு மற்ற கேள்விகள் தொடர்பு இல்லாத காரணத்தினால் தவிடு போன்றவைகளை யாருக்கு விற்கிறார்கள் என்பது பற்றி தனிக் கேள்வி போட்டால் அதற்கான பதில் தர முடியும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், விரைவில் தனிக் கேள்வி போடுங்கள்.

வினா எண் 8 திரு. பி.வி. இராஜேந்திரன். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

8—

குறைந்த மின் அழுத்தத்தை சரி செய்தல்

*21962—திரு. **பி.வி. இராஜேந்திரன்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி உப கோட்டத்தில் மின் அழுத்தம் பகல் நேரங்களில் குறைவதால் விவசாய பம்பு செட்டுகள் செயல்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், குறைந்த மின் அழுத்தத்தை சரி செய்ய அரசு விரைவு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1996 பிப்ரவரி 15]

இருந்ததால் நெல் அரவை செய்வதற்கு தனியார் மறுத்ததினால், இந்த நவீன அரிசி ஆலையின் மூலமாக அரவை செய்ததன் காரணமாக 5.2 விழுக்காடு அளவிற்கு நொய் அதிகமாக வந்ததின் காரணமாக அந்த ஆண்டு மட்டுமே நட்டம் ஏற்பட்டது. தொடர்ந்து 1989-90-இல் ரூ. 14,49,063.70 அளவுக்கு லாபகரமாகவும், 1990-91-இல் ரூ. 17,19,090 அளவுக்கு லாபகரமாகவும், 1991-92-இல் 20 இலட்சம் ரூபாய் அளவுக்கு லாபகரமாகவும், 1992-93-இல் 16 இலட்ச ரூபாய் அளவுக்கு லாபகரமாகவும், 1993-94-இல் 7 இலட்சம் ரூபாய் நட்டமும், 1994-95-இல் ரூ. 1,14,832.95 அளவுக்கு லாபகரமாகவும், இந்த ஆண்டு 1995-96-இல் ரூ. 22,49,834 அளவுக்கு லாபகரமாகவும் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட மூலக் கேள்விக்கு மற்ற கேள்விகள் தொடர்பு இல்லாத காரணத்தினால் தவிடு போன்றவைகளை யாருக்கு விற்கிறார்கள் என்பது பற்றி தனிக் கேள்வி போட்டால் அதற்கான பதில் தர முடியும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், விரைவில் தனிக் கேள்வி போடுங்கள்.

வினா எண் 8 திரு. பி.வி. இராஜேந்திரன். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

8--

குறைந்த மின் அழுத்தத்தை சரி செய்தல்

21962--திரு.* **பி.வி. இராஜேந்திரன்:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி உப கோட்டத்தில் மின் அழுத்தம் பகல் நேரங்களில் குறைவதால் விவசாய பம்பு செட்டுகள் செயல்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், குறைந்த மின் அழுத்தத்தை சரி செய்ய அரசு விரைவு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி உப கோட்டத்தில் மின் அழுத்த மேம்பாட்டிற்காக பணிகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது மின்சாரம் சரியான அழுத்தத்தில் வழங்கப்பட்டு வருகிறது. அதற்கான பல பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

திரு. பி.வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அக்டோபர், 1992-ஆம் ஆண்டிலிருந்து சுமார் 36 மாதகாலமாக தமிழகத்திலேயே பவர் கட் இல்லை என்று அரசு நேற்று ஆளுநர் உரையின் மூலமாக அறிவித்து இருக்கிறது. நான் இந்தக் கேள்வியை ஓராண்டிற்கு முன்னதாகப் போட்டேன். அப்பொழுது மின் அழுத்தக் குறைவு இருந்தது. லோ-டென்ஷன் இருந்தது. இப்பொழுது அந்த ஏரியாவிலே கிட்டத்தட்ட பவர் கட்டே இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த லோ டென்ஷனை நிவர்த்தி செயவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு இருப்பதாகச் சொன்னார்கள். இந்தக் குறைந்த மின் அழுத்தத்தின் காரணமாகவே அப்பகுதி மக்களுடைய ரத்த அழுத்தம் மிக அதிகமாக உயர்ந்து விட்டது. விவசாயிகள், சிறுதொழில் நடத்துகின்றவர்கள், தொழிற்சாலை உரிமையாளர்கள் எல்லாம் எந்த நேரத்தில் மின்சாரம் போகும், எப்பொழுது மின்சாரம் வரும் என்றே தெரியாமல் இருக்கிறார்கள். பேராவூரணி தாலுக்கா industrially most backward area என்று அறிவிக்கப்பட்ட இடம். அங்கே இருக்கின்ற நிறைய சிறு தொழிற்சாலைகளுக்கெல்லாம் எந்த நேரத்தில் மின்சாரம் வரும், எப்போது போகும் என்று தெரியவில்லை. ஷிப்டிற்கு வரும் ஆட்கள் எப்பொழுது வீடு போவார்கள் என்று சொல்ல முடியவில்லை. ஆட்டோமேட்டிக் ஜெனரேட்டர் வாங்கி வைப்பது என்றாலும் மிக அதிகமான தொகையாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒருசில நடவடிக்கைகளை எடுத்து இருப்பதாகச் சொன்னார்கள். குறிப்பாக சப்-ஸ்டேஷன் கொண்டு வருவதற்கும் அல்லது இருக்கின்ற சப்-ஸ்டேஷனுடைய கெப்பாசிட்டியைக் கூட்டுவதற்கான நடவடிக்கைகளையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்து இருக்கின்றார்களா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரத்த அழுத்தம் அதிகம் ஆவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. எப்பொழுதுமே பயத்திலே இருந்தால்கூட அவர்களுக்குப் பிரஷர் ஜாஸ்தி வரும். ஆகவே, மின்சாரம் இல்லாவிட்டால் மாத்திரம் இரத்த அழுத்தம் வராது. பிரச்சினைகள்

1996 பிப்ரவரி 15]

அதிகமாக இருந்தாலும் அவர்களுக்கு வரும். பயம் அதிகமாக இருந்தாலும் வரும். மறுபடி தேர்தல் வருகின்ற நேரத்திலே சிலருக்கு இரத்த அழுத்தம் வரும். பல்வேறு காரணங்கள் இருக்கின்றன மனிதர்களுக்கு இரத்த அழுத்தம் ஏற்படுவதற்கு. ஆகவே, மின்சாரத்தைப் பொறுத்தமட்டில் இந்தப் பகுதியிலே என்னென்ன பணிகள் நடைபெற்றிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்டார்கள். அதை நான் அவர்களுக்குச் சொல்லுவது சரியாக இருக்கும் என்று கருதுகிறேன். 11 கிலோவாட் மின் பாதையில் 2 கிலோமீட்டர் தொலைவிற்குத் தாழ் அழுத்தப்பாதையில் ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்கு ஏற்கெனவே இருந்த சிறிய அளவு மின் கடத்திகளுக்குப் பதிலாகக் கூடுதல் திறன் உள்ள பெரிய அளவு மின் கடத்திகள் அந்தப் பகுதியிலே அமைக்கப்பட்டுள்ளன. 2 புதிய டிரான்ஸ்பார்மர்கள் அந்தப் பகுதியிலே போடப்பட்டு உள்ளன. பெரியநாயகபுரம் மின் மாறிகள் எண் 6 மற்றும் 8 இவைகளை இணைக்க ஒரு புதிய 11 கிலோவாட் இணைப்பு மின் பாதை ஏற்படுத்தப்பட்டுள்ளது. பேராவூரணி துணை மின் நிலையத்திலிருந்து வெளிவரும் திருச்சிற்றம்பலம் 11 கிலோவாட் மின் பாதையிலும், பெருமகளூர் 11 கிலோவாட் மின் பாதையிலும் தானியங்கி கெபாசிட்டர்கள் அந்தப் பகுதியிலே இப்பொழுது நிறுவப்பட்டுள்ளன. மேலும் புதிதாக 2 மின் மாற்றிகள் கரம்பக்காட்டிலும், கள்ளம்பட்டியிலும் நிறுவப்பட்டு இயக்கத்தில் கொண்டு வரப்பட்டுள்ளன. காரைக்குடி 110 கிலோவாட் துணை மின் நிலையத்திலிருந்து இப்பொழுது மின்சாரம் அளிக்கப்பட்டு வருகிறது. 31-3-96-க்குள் தற்போது பட்டுக்கோட்டையிலுள்ள 66/11 கிலோவாட் உள்ள மின் நிலையத்தை 110/66/11 என்கின்ற கிலோவாட் துணை மின் நிலையமாக உயர்த்திட திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் புதிய துணை மின் நிலையம் செயல்படத் துவங்கியவுடன் பேராவூரணி மின் நிலையத்திற்கு அந்தப் பகுதியிலிருந்து வழங்கப்பட இருக்கிறது. அது தவிர, பேராவூரணி உப கோட்டப் பகுதியில் சேதுபாவாசத்திரம் என்ற கிராமத்தில் புதிதாக 33/11 கிலோவாட் துணை மின் நிலையம் ஒன்றும் அமைக்கும் திட்டத்திற்கு இந்த அரசு ஒப்புதல் வழங்கி உள்ளது. ஆக, பேராவூரணி பகுதியிலே இந்த மின் அழுத்தத்தைச் சரி செய்வதற்காக இதுபோன்ற பணிகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. பொதுவாக, நம்முடைய மின்சார வாரியத்தைப் பற்றி, இந்தக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லாவிட்டாலும்கூட, அவருடைய கேள்விக்குப் பொருத்தமாக இருக்கும் என்று சில கருத்துக்களை இங்கே தெரிவித்தார்கள். அவர்களுக்கு அண்டை மாநிலங்களிலே மின் வெட்டு எப்படி இருக்கிறது

என்பதெல்லாம் தெரியும். அவர்களுக்குத் தெரியும் நன்றாக. தமிழ்நாடு திறமையாக நிலைமையைச் சமாளித்துக் கொண்டிருக்கிறது. கேரளாவிலேகூட நேற்றைக்கு 75 சதவீதம் மின்வெட்டு அமலில் இருக்கிறது. நேற்றைக்குக் கூட ஏற்பட்டப் பிரச்சினைக்கு அண்டை மாநிலம்தான் காரணம். திடீரென்று நம்முடைய சட்டமன்றத்திலேகூட, அதைக்கூட பத்திரிகையிலே எழுதியிருந்தார்கள். நெய்வேலியிலே ஒரு 300 மெகாவாட் அளவிற்கு கிரிட் டிஸ்டர்பன்ஸ்லே ஓவர் டிராயல் செய்த காரணத்தினாலேதான் நம்முடைய எண்ணூர் பாதிக்கப்பட்டு உடனடியாக நமக்கு அந்த மின் தடை ஏற்பட்டது. ஆகவே, இப்படிப்பட்ட பிரச்சினைகள் அண்டை மாநிலங்களுக்கு ஏற்படுகின்றபொழுது நமக்குப் பல சங்கடங்கள் இருக்கின்றன. சதர்ன் கிரிட் ஒன்றாக இருக்கின்ற காரணத்தினாலே நாம் தனியாக ஐசொலேட் செய்வதற்கு, நாடு ஒன்றாக இருக்கின்ற காரணத்தினாலே உடனடியாகச் செய்ய முடியவில்லை. பல்வேறு சங்கடங்கள், நிர்வாக ரீதியாகப் பல்வேறு சங்கடங்கள் நம்முடைய மின்சார வாரியத்திற்கு இருக்கிறது. அவர்களுக்குத் தெரியும். மின்சாரப் பற்றாக்குறை இன்றைக்கு புனல் மின் நிலையங்களிலே தண்ணீர் இல்லாத காரணத்தாலே, பருவ மழை பொய்த்துவிட்ட காரணத்தினாலே மிகவும் சிக்கலான சூழ்நிலையில் இருப்பதை நேற்றைக்கு நம்முடைய மாண்புமிகு கவர்னர் அவர்களுடைய உரையிலே தெரிவித்தார்கள். கவர்னர் அவர்களுடைய உரையின் தமிழாக்கத்தையும் நம்முடைய பேரவைத் தலைவரவர்கள் படித்தார்கள் என்னென்ன நடவடிக்கைகளை இந்த ஆண்டு மேற்கொள்ளுகிறோம் என்று. ஆகவே, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தமட்டிலே மின் பற்றாக்குறை இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் பேசின்பிரிட்ஜ் இரண்டாண்டுக்காலத்திலே இந்தத் திட்டத்தை இப்பொழுது இந்த மாதம் கொண்டு வர இருக்கிறோம். வட சென்னை அனல் மின் நிலையம் மூன்றாவது பகுதி வருகிறது. எப்படியும் கோடை காலத்திலும் சரி, நம்முடைய தமிழ் மாநிலத்திலே மின்சாரப் பற்றாக்குறை இல்லாமல் செய்ய வேண்டுமென்பதுதான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய நோக்கம். இயற்கை சில நேரங்களிலே பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றபொழுதும் நாம் சங்கடங்களை அனுபவிக்க வேண்டியிருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் இன்றைக்கு எல்லா மாநிலங்களையும் எடுத்துக் கொண்டீர்களானால் தமிழ்நாடு ஒன்றிலேதான் இன்றைக்கு அனைத்து தொழிற்சாலைகளும் ஓடிக் கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) பெங்களூரிலேகூட 6 மணி நேரம்தான் மின்சாரம் வருகிறது; ஹைதராபாத்திலே அப்படித்தான். ஏன், டெல்லியிலேயும் நிலைமை

1996 பிப்ரவரி 15]

அப்படித்தான் இருக்கிறது. குரானா கூடச் சொன்னார், முதலமைச்சர், நீங்கள் கரி கொடுக்கவில்லை என்றால் மின்சாரம் டெல்லியிலே வராது என்றுகூடச் சொன்னார், பாரதீய ஜனதா முதலமைச்சர். ஆகவே, தலைநகரினுடைய நிலைமையே அப்படி இருக்கிறது. ஆகவே, நாட்டிலே இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலை இதுதான். நம்முடைய மாநிலம்தான் இருக்கின்ற மாநிலங்களிலே அதிகமான அளவிற்குப் பிரச்சினைகள் இல்லாமல் இன்றைக்கு நிலைமையைச் சமாளித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, இதுபோன்ற பல்வேறு பணிகள் பேராவூரணி பகுதியிலே நடைபெற்றிருக்கின்றன. இன்னும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தப் புதிய திட்டங்களையெல்லாம் இந்த மார்ச் மாதத்திற்குள்ளே நிறைவேற்றப் போகிறோம். இந்த 110 சப்-ஸ்டேஷனும் 31-3-96-க்குள்ளே முடிக்கப்படுவதற்குள் பெரும்பாலான பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-45

திரு. பி.வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒரு நல்ல காம்ப்ரஹென்சிவ் ரிப்ளையைத் தந்தார்கள். புதிதாக எப்படியெல்லாம் பவர் ஜெனரேஷனுக்கு இந்த அரசு முன்னுரிமை கொடுத்துச் செயல்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். குறிப்பாக, சேதுபாவாசத்திரம் பகுதியில் ஒரு 33 கிலோவாட் சப் ஸ்டேஷனுக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். பட்டுக்கோட்டையில் இருக்கின்ற 66 கிலோவாட் சப்ளை செய்கின்ற சப் ஸ்டேஷனை 110 கிலோவாட்டுக்குக் கூடுதல் செய்ய இருக்கிறோம் என்று சொன்னார்கள். இதுதான் அந்த ஏரியாவினுடைய மின் அழுத்தத்தை உயர்த்துமே ஒழிய ஒட்டுமொத்தமாக நீங்கள் காரைக்குடியிலிருந்து மின்சாரத்தைத் தருவதால் எல்லாம்கூட அந்த ஏரியாவில் உயர்த்திவிட முடியாது. ஏனென்றால் வழியிலேயே டிராவல் அதிகமாக உள்ளது. மிக அதிகமாக உள்ளது. சேதுபாவாசத்திரத்திற்கு கேள்வி போட்டு ஒரு வருடத்திற்கு மேல் ஆகிறது. மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்கு கேள்வி வந்திருக்கும். சேதுபாவாசத்திரத்திற்கு சப்-ஸ்டேஷன் நீங்கள் வழங்கியிருந்தால் இந்தப் பிரச்சினை இன்றைக்கு இருந்து கொண்டிருக்காது. அல்லது பட்டுக்கோட்டையில் 110 கே.வி. யாக installed capacity-யைக் கூட்டியிருந்தால் இந்தப் பிரச்சினை, இந்த ஓராண்டுக்காலமாக இருந்து கொண்டிருக்க முடியாது. அதோடு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசின் பிரிட்ஜ் புராஜெக்டை இன்னும் மூன்று மாதங்களிலே கமென்ஸ்

பண்ணிவிடுவோம் என்று சொன்னார்கள். ஏற்கெனவே இப்படி நான் பலமுறை கேட்டிருக்கிறேன். அணுவில், அனலில், புனலில், நான்-கன்வென்ஷனல் சோர்சஸ் மற்றும் இன்றைக்கு கோ-ஜெனரேஷன் இன் சுகர் மில் என்று இதில் எல்லாம் கேள்விப் பட்டிருக்கிறோம். கேஸ் டர்பைன் குறிப்பாக தஞ்சை மாவட்டத்திலிருந்து, எங்கள் நாகை மாவட்டத்திலிருந்து இயற்கை எரிவாயு வருகிறது. நான் பலமுறை சொல்லிக்கூட அதிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அக்கறை எடுக்கவில்லையென்று நான் நினைக்கிறேன். *(குறுக்கீடு).* Yes, It is a question.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இராஜேந்திரன், இது பேராவூரணியில் மின் அழுத்தத்தை சரி செய்வது பற்றிய கேள்வி, அந்தக் கேள்விக்கு இடையிலே நீங்கள் சைடு கேள்வி முதலிலே கேட்டதனால் அமைச்சர் அவர்கள் விரிவாகப் பதில் சொன்னார். பவர் கட் இருக்கிறது என்று போனதனால் அமைச்சர் அவ்வளவு பதில் சொன்னார். நீங்கள் அதிலேயே துணைக் கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். இதிலே கேள்வி கேளுங்கள்.

திரு. பி.வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலிலே எல்லாவற்றையும் சொன்னார், தேர்தல் நேரம் ரத்த அழுத்தம் என்று.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் தான் சொன்னீர்கள். எல்லாமே நீங்கள் சொல்லிவிட்டு அமைச்சர் சொன்னார் என்று சொன்னால் எப்படி? *(குறுக்கீடு)* இந்த அழுத்தம் மட்டுமல்ல இரத்த அழுத்தமும் அங்கே கூடியிருக்கிறது என்று நீங்கள்தான் சொன்னீர்கள். நீங்கள் சொன்னதற்கு பதில் சொன்னார். அதற்கு மேலே மேலே திரும்பப் போய்க்கொண்டே இருக்கக்கூடாது.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்லிவிட்டேன். திரு. இராஜேந்திரன், இதிலே கேள்வி கேளுங்கள்.

திரு. பி.வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் விவசாயிகளுடைய ரத்த அழுத்தம் கூடுகிறது என்று சொன்னால், அதை நீங்கள் அந்த ஸ்பிரிட்டில்தான் எடுத்துக்கொள்ள வேண்டும். குறிப்பாக இன்று ரத்த அழுத்தம் ஏறுகின்றவர்களுக்கெல்லாம் ஆஸ்பத்திரியிலே நல்ல வசதிகளையெல்லாம் பண்ணியிருக்கிறீர்கள். நான் இல்லையென்று சொல்லவில்லை. *(குறுக்கீடுகள்)*

1996 பிப்ரவரி 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், கேள்வி கேட்பதாக இருந்தால் கேளுங்கள்.

திரு. பி.வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அங்கே இருக்கின்ற கேஸ் டர்பனை இயக்குவதற்கு கடந்த ஓராண்டுக் காலமாக நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கிறது. நரிமணம் ஏரியாவில், களப்பால் ஏரியாவில், நீங்கள் ஜெனரேஷனை....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாத கேள்வி. *(குறுக்கீடு)* பவர் ஜெனரேஷன் எல்லாவற்றிற்கும் கேட்க முடியாது. பேராவூரணியில் மின் அழுத்தத்தைக் கூட்டுவது பற்றி கேள்வி, உட்காருங்கள். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி பகுதியிலே மின் அழுத்தம் குறைவாக இருப்பது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகத் தெளிவான விளக்கத்தினை இங்கே சொன்னார்கள். குறிப்பிட்டு நான் ஒரு நிகழ்ச்சியை மட்டும் சொல்ல ஆசைப்படுகிறேன். நம்முடைய புரட்சித் தலைவியினுடைய அரசு வந்தவுடனேயே, முதலமைச்சருக்குக் கீழே பணியாற்றுகின்ற அத்தனை அமைச்சர்களும் மின்னல் வேகத்தில் செயல்படுகிறார்கள் என்பதற்கு ஒரு சிறிய உதாரணம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த மின்னல் வேகத்துக்கு வாருங்கள். *(சிரிப்பு)*

திரு. ஆர். சிங்காரம்: மின் அழுத்தத்தைப் பற்றித்தான் சொல்லுகிறேன். அவர் பேராவூரணியில் உள்ளவர்களுக்கு பிளட் பிரஷர் அதிகமாக இருக்கிறது மாதிரி, மின் அழுத்தம் குறைந்து போய் ரத்த அழுத்தம் அதிகமாக உள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள் அல்லவா, அதற்கு விளக்கம் சொல்கிறேன். நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர், போக்குவரத்துத் துறை அமைச்சர், உள்ளாட்சித் துறை அமைச்சர் ஆகியோர் பட்டுக்கோட்டைக்கு வந்தபோது, இந்தப் பகுதியிலே மின் அழுத்தம் குறைவாக இருக்கிறது. அதைச் சீர் செய்ய வேண்டுமென்று ஆயிரக்கணக்கான விவசாயிகள் அனவயல், பெரியநாயகபுரம் போன்ற அந்தப் பகுதியிலே இருக்கின்ற முத்தரையர் மக்கள், மற்ற இனத்தைச் சார்ந்த மக்கள் அனைவரும், புஞ்சை தரிசை நம்பி வாழ்கின்ற மக்கள் அனைவரும் ஒரு *1500* பேர் திரண்டு வந்து நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களைப் பார்த்து மனு கொடுத்தோம். அவர் உடனடியாக அதைச் செய்வதாகச் சொல்லிவிட்டு, சென்னை வந்து

தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடன் கலந்து உடனடியாக உத்தரவிட்டு, 4 டிரான்ஸ்பார்மர்களை உடனடியாக அமைப்பதற்கு உத்தரவிட்டு, 15 தினங்களுக்குள்ளாக அமைத்து அந்த மின் அழுத்தக் குறைவு சீர் செய்யப்பட்டு, மோட்டார்கள் யாவும் இயங்கின. அதுமட்டுமல்ல மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிய புள்ளிவிவரங்களுக்கு மேலே இன்னும் சொல்லப்போனால், இன்னும் ஒரு 6 டிரான்ஸ்பார்மர்களை....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பதில் சொல்ல வேண்டாம், கேள்வி கேளுங்கள்.

திரு. ஆர். சிங்காரம்: நான் மின் அழுத்தத்திற்குத்தான் வருகிறேன். மின் அழுத்தம் பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கிறேன். வேறு எதைப் பற்றியும் பேசவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தக் கேள்விக்கு வாருங்கள்.

திரு. ஆர். சிங்காரம்: அந்தக் கேள்விக்குத்தான் வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி கேளுங்கள்.

திரு. ஆர். சிங்காரம்: என் தொகுதியைப் பற்றிய கேள்வி. அதற்கு காரியங்கள் செய்தது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புரட்சித் தலைவியின் உத்தரவின் பேரில், பலன் அடைந்தவர்கள் என்னுடைய தொகுதி மக்கள். முயற்சி செய்த சட்டமன்ற உறுப்பினர் நான். ஆகவே, அதற்கு விளக்கம் தரவும், கேள்வி கேட்க வேண்டிய கடமையும் பொறுப்பும் எனக்கு இருக்கிறது. ஆகவே, அனுமதியுங்கள். நான் அதற்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் பட்டுக்கோட்டையிலே இருக்கின்ற 110 கே.வி. சப்-ஸ்டேஷன் அமைக்கும் பணி புயல் வேகத்திலே நடந்து கொண்டிருக்கிறது. அநேகமாக மார்ச் மாதத்திற்குள்ளாக வேலை முடிந்து பேராவூரணிக்குப் பலன் கிடைக்கும். அதுமட்டுமல்லாமல் மற்ற டிரான்ஸ்பார்மர்கள் பற்றிச் சொன்னார்கள். சேதுபாவாசத்திரத்தைப் பொறுத்தவரையில் அதை அமைத்திருக்கலாம் என்று சொன்னார்கள். அமைப்பதற்கு அரசு உத்தரவிட்டுவிட்டது. ஆனால் நாங்கள் இன்னும் இடம் கொடுக்கவில்லை. இடம் தேடிக் கொண்டிருக்கிறோம். இடம் கிடைத்தவுடன் அமைக்கப்படும். அதுமட்டுமல்ல. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. இராஜேந்திரன் அவர்கள் . . .

1996 பிப்ரவரி 15]

முற்பகல் *10-50*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ஆர். சிங்காரம்: திரு. பி.வி. இராஜேந்திரன் அவர்கள் பேசுகின்றபோது பேராவுரணித் தொகுதியில் மின்சார அழுத்தம் குறைவாக இருக்கிறது. ஆனால் மக்களுக்கு ரத்த அழுத்தம் அதிகமாகப் போய்விட்டது என்று சொன்னார்கள். மக்களுக்கு ரத்த அழுத்தம் அதிகமாக இருக்கவில்லை. தமிழகத்தில் இருக்கிற எதிர்க் கட்சியினருக்குத்தான் ரத்த அழுத்தம் அதிகரித்துவிட்டது. அதற்கு என்ன காரணம் என்றால்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் குற்றச் சாட்டுகள் கூடாது. எனவே கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ஆர். சிங்காரம்: நான் பிரச்சினைக்கு வருகிறேன். காரைக்குடி பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒரு கோரிக்கை. காரைக்குடியிலிருந்து வருகின்ற மின்சாரத்தில் தடை ஏற்படுவதன் காரணத்தால்தான் அங்கே மின்வெட்டு ஏற்படுகிறதே தவிர தமிழகத்திலே ஒட்டுமொத்தமாக ஏற்படுகிற தடைக்கும், பேராவூரணிக்கும் சம்பந்தம் இல்லை. பேராவுரணியைப் பொறுத்தவரையில் நம்முடைய அமைச்சர் அவர்கள், நம்முடைய தமிழகத்தின் முதல்வர் தானைத் தலைவி தங்கத் தலைவி அவர்களின் உத்தரவின்கீழ் சிறப்பான முறையில் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை நன்றிக் கடனோடு கூறி, விரைவில் *110* கே.வி. ஒன்று தனியாகத் துவங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னென்ன பணிகள் நடைபெறறுக்கொண்டு இருக்கின்றன என்பதைப் பற்றி சட்டமன்ற உறுப்பினர் அவர்களே மிகத் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். சேதுபாவாசத்திரத்தைப் பொறுத்தவரையில் உத்தரவு போட்டாகிவிட்டது. இடம் கொடுப்பதில் தான் பிரச்சினை. அதையும் தெளிவாகச் சொல்லிவிட்டார் உறுப்பினர். பட்டுக்கோட்டையைப் பொறுத்தவரையில் வேலை நடந்துகொண்டிருக்கிறது. அதாவது *110* கே.வி. சப் ஸ்டேஷன் அமைக்கும் வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. மார்ச் மாதத்திற்குள்ளாக முடிந்துவிடும். முடிந்தவுடனே காரைக்குடியிலிருந்து மாற்றி பட்டுக்கோட்டை வழியாகக் கொடுத்துவிடுவோம். அதுவரையில் கொடுக்க முடியாது. பட்டுக்கோட்டை சப் ஸ்டேஷன் வந்தால்தான்

பட்டுக்கோட்டையிலிருந்து கொடுக்க முடியும். ஆகவே இன்னும் ஒரு மாத காலம்தான் இருக்கிறது. இந்தப் பணி முடிந்தவுடன் பட்டுக்கோட்டைப் பகுதியிலிருந்து பேராவூரணிக்குக் கொடுக்கிறபோது இடையிலே தடங்கல் இல்லாமல் மின்சாரம் வழங்குவதற்கு வாய்ப்பு இருக்கும். இப்போது காரைக்குடியிலிருந்து, அதாவது அதிக தூரத்திலிருந்து வருகிறது என்பது உண்மை. ஆகவேதான் இந்த மாற்று ஏற்பாடு செய்திருக்கிறோம். இந்த ஆட்சிக் காலத்தில் உறுப்பினர்கள் சொன்னவுடனே நடவடிக்கைகள் எல்லாம் எடுத்திருக்கிறோம். ஆகவே மின்சாரப் பிரச்சினை ஏற்படுகிறபோது, அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறபோது, சரியான நடவடிக்கையை இந்த அரசு அவ்வப்போது எடுத்து வருகிறது என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 9, டாக்டர் சு. மணிமேகலை, இருக்கையில் இல்லை.

வினா எண் 10 திரு. கி. பாலசுப்பிரமணியன், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்.

10--

பட்டுக்கோட்டையில் பால் குளிரூட்டும் நிலையம்

*87886--திரு. **கி. பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பட்டுக்கோட்டையில் கூடுதலாக ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பட்டுக்கோட்டையில் கூடுதலாக ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க தற்சமயம் சாத்தியக்கூறுகள் இல்லை.

திரு. கி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடுதலாக ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று கேட்டேன். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சாத்தியம் இல்லை என்று சொன்னார்கள். இன்றைய நிலையில் இந்தப் பால் குளிரூட்டும் நிலையம் வீரக்குறிச்சியில் 15 கிலோ மீட்டர் நகருக்குப் புறம்பாக உள்ளது. ஆனால் இப்போது அங்கே பால்

பட்டுக்கோட்டையிலிருந்து கொடுக்க முடியும். ஆகவே இன்னும் ஒரு மாத காலம்தான் இருக்கிறது. இந்தப் பணி முடிந்தவுடன் பட்டுக்கோட்டைப் பகுதியிலிருந்து பேராவூரணிக்குக் கொடுக்கிறபோது இடையிலே தடங்கல் இல்லாமல் மின்சாரம் வழங்குவதற்கு வாய்ப்பு இருக்கும். இப்போது காரைக்குடியிலிருந்து, அதாவது அதிக தூரத்திலிருந்து வருகிறது என்பது உண்மை. ஆகவேதான் இந்த மாற்று ஏற்பாடு செய்திருக்கிறோம். இந்த ஆட்சிக் காலத்தில் உறுப்பினர்கள் சொன்னவுடனே நடவடிக்கைகள் எல்லாம் எடுத்திருக்கிறோம். ஆகவே மின்சாரப் பிரச்சினை ஏற்படுகிறபோது, அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறபோது, சரியான நடவடிக்கையை இந்த அரசு அவ்வப்போது எடுத்து வருகிறது என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 9, டாக்டர் சு. மணிமேகலை, இருக்கையில் இல்லை.

வினா எண் 10 திரு. கி. பாலசுப்பிரமணியன், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்.

10--

பட்டுக்கோட்டையில் பால் குளிரூட்டும் நிலையம்

*87886--திரு. **கி. பாலசுப்பிரமணியன்:***

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பட்டுக்கோட்டையில் கூடுதலாக ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பட்டுக்கோட்டையில் கூடுதலாக ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க தற்சமயம் சாத்தியக்கூறுகள் இல்லை.

திரு. கி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடுதலாக ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று கேட்டேன். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சாத்தியம் இல்லை என்று சொன்னார்கள். இன்றைய நிலையில் இந்தப் பால் குளிரூட்டும் நிலையம் வீரக்குறிச்சியில் 15 கிலோ மீட்டர் நகருக்குப் புறம்பாக உள்ளது. ஆனால் இப்போது அங்கே பால்

1996 பிப்ரவரி 15]

வளம் பெருகி உள்ளது. எனவே மேலும் ஒன்று வேண்டும் என்று ஜனத்தொகை அடிப்படையில் கூறப்பட்டுள்ளது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டிலே மறுபரிசீலனை செய்து மேலும் ஒரு நிலையத்தை உருவாக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன். அதுமட்டுமலலாமல் பட்டுக்கோட்டையில் தானியங்கி பால் விற்பனை நிலையங்களை மேலும் இரண்டு மூன்று இடங்களில் அமைக்க ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டையில் தற்போது நாள் ஒன்றுக்கு 10000 லிட்டர் கொள்திறன் உள்ள பால் குளிரூட்டும் நிலையம் இயங்கி வருகிறது. தற்போது பட்டுக்கோட்டைப் பகுதியில் அதிகபட்சமாக 4000 லிட்டர் பால்தான் நாள் ஒன்றுக்குக் கொள்முதல் செய்யப்படுகிறது. பட்டுக்கோட்டை குளிரூட்டும் நிலையத்தின் கொள்முதல் திறனுக்குக் குறைவாகக் கொள்முதல் உள்ளது. எனவே பட்டுக்கோட்டையில் கூடுதலாக ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க தற்சமயம் சாத்தியக் கூறுகள் இல்லை. தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள் அமைக்க முடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. கி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும் என்று சொன்னார்கள், அதற்கு மிகவும் நன்றி. இருந்தபோதிலும் பட்டுக்கோட்டையைச் சேர்ந்த ஒன்றியங்கள் 3 இருக்கின்றன. அந்த ஒன்றியங்களில் பால் வளம் மிகவும் பெருகி வருகிறது. கால்நடைகளும் அங்குள்ள மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இந்தமாதிரி சூழ்நிலையில் கூடியசீக்கிரம் அந்தப் பால் குளிரூட்டும் நிலையத்தை அமைத்துத் தருவார்களா என்று மீண்டும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டையில் உள்ள பால் குளிரூட்டும் நிலையத்தின் திறனுக்குக் குறைவாகத்தான் இப்போது பால் உற்பத்தியாகிறது. எனவே கொள்திறனுக்கு அதிகமாகப் பால் உற்பத்தி ஆகின்ற சமயத்தில்தான் அரசு அதைப் பற்றிப் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 11, திரு. ஏ. கே. சி. சுந்தரவேல், மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர்.

11--

அரியூர் பஞ்சாலையை இயக்குதல்

*64909--**திரு. ஏ. கே.சி. சுந்தரவேல்:**

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் அரியூர் பஞ்சாலை மூடப்படும் நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த ஆலையை இலாபகரமாக இயக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

முற்பகல் 10-55

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆலை இயங்கிக் கொண்டிருக்கிறது.

(ஆ) அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வியைப் போட்டு ஐந்து, ஆறு மாதங்களுக்கு மேல் ஆகின்றன. அப்பொழுது அந்த அரியூர் பஞ்சாலையிலே தொழிலாளர்கள் பிரச்சினை இருந்தது. மூடும் நிலையில் இருந்தது. ஆனால், இப்பொழுது அது நல்ல முறையில் இயங்கிக் கொண்டு வருகிறது. அந்த அரியூர் பஞ்சாலையிலே எத்தனைக் கதிர்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது 5,184 கதிர்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அரியூர் பஞ்சாலையை லாபகரமாக நடத்த அரசு என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலையை லாபகரமாக நடத்துவதற்கு நிதித்துறைச் செயலாளர், கைத்தறி மற்றும் கைவினைப் பொருள்கள் துறை செயலாளர் மற்றும் கைத்தறி ஆணையர் ஆகியோர் அடங்கிய

1996 பிப்ரவரி 15]

உயர் மட்டக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. அக்குழுவின் பரிந்துரையின் பேரில் 50 சதவிகிதம் ஆதாரக் குறைவைச் சரிகட்டவும், நிதியுதவி நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட கடன் நிலுவைத் தொகையை திரும்பச் செலுத்தவும் ரூ. 286.84 கோடி நிதியுதவி கோரிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன், முன்பு கேள்வியாகப் போட்ட பிரச்சினை இது. சிறப்புக் கவன ஈர்ப்பாகக் கருத வேண்டும் என்று என்னிடம் அனுமதி கேட்கிறீர்கள். துணைக் கேள்வி வேண்டுமானால் கேளுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐந்து மாதத்திற்கு முன் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி போட்டு இருந்தாலும்கூட, மூடப்பட்டிருந்த ஆலை 6-12-95-ஆம் தேதிதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வருவதற்கு முன்னால் திறக்கப்பட்டது. ஆனால், பிறகு மீண்டும் 4-1-96-லே மூடப்பட்டது என்பதை ஏற்கனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக்கூட கொண்டு வந்தேன். ஆனால், அவர்கள் தொடர்ந்து நடப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். 900 தொழிலாளிகள்தான் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகையால் 10 சதவிகிதம் வேலை ஆட்கள்தான் அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்களேயொழிய, 90 சதவிகிதம் வேலை ஆட்கள் வேலையின்றி அங்கே திக்குமுக்காடிக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முன்னுக்குப்பின் முரணாகப் பேசுகிறீர்களே! பழையபடி மூடப்பட்டது என்றும் சொல்கிறீர்கள், 10 சதவிகிதம் பேர் வேலை செய்கிறார்கள் என்றும் சொல்கிறீர்கள். சரி, கேளுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்த பிறகு இப்பொழுது 10 சதவிகிதம் தொழிலாளிகள் மீண்டும் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 5,184 கதிர்கள் இப்போது அங்கே இயங்கிக் கொண்டிருக்கின்றன என்று சொல்கிறார்கள். ஆனால், நான் கேட்பதெல்லாம் ஏற்கனவே பலமுறை கவன ஈர்ப்பாக இந்த அவையிலே கொண்டு வந்தும் சிறப்பு நிதி ரூ. 5 கோடியை நீங்கள் கொடுத்தால் நிச்சயமாக ஒரு நல்ல பஞ்சை நீங்கள் கொடுத்து, பஞ்சுக்கு பஞ்சம் இல்லாமல் செய்தால் ஆலை ஓடுவதற்குகான வாய்ப்பு இருக்கிற காரணத்தினாலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பஞ்சுக்கு மட்டும் எங்காவது கடன் பெற்றாவது தரமான பஞ்சை

சப்ளை செய்வார்கள் என்று சொன்னால் அங்கே தடை இல்லாமல் அந்த மில் ஓடுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, சிறப்பு நிதியாக ரூ. 5 கோடி இப்போது கொடுத்தால் அது நன்றாக இயங்கும் என்ற காரணத்தினாலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 286.84 கோடி ரூபாய்க்கு அரசுக்கு ஏற்கனவே புரபோசல் அனுப்பியிருந்தாலும்கூட, ரூ. 5 கோடி சிறப்பு நிதியாக வழங்கி அந்தக் கூட்டுறவு நூற்பாலையை இயக்குவதற்கான முயற்சியை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாணபுமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5,184 கதிர்கள் இயங்கிக் கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது என்று சொன்னார்கள். 5,184 கதிர்கள் உண்மையிலேயே இப்போது இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பதை உறுதியோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அது மட்டுமல்லாமல் ஆலையின் உற்பத்தித் திறனை அதிகரிக்க, கோவை சித்ரா நிறுவனம் மேற்படி ஆலையில் ஓடும் இயந்திரங்களின் உற்பத்தித் திறனை கண்காணித்து அதன்படி தொழிலாளர்களுக்கு வேலை பளுவை நிர்ணயம் செய்தது. ஆனால், இந்த வேலை பளுவை ஆலையின் தொழிற்சங்கங்கள் ஏற்றுக் கொள்ளாமல் அதிலே புறக்கணிப்பு செய்தன. அந்தப் பேச்சுவார்த்தையிலே சட்டமன்ற உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களும் தொழிற்சங்கங்கள் சார்பாக கலந்துகொண்டு பேசினார்கள். ஆனால், அவர்கள் தலைமையில் இருக்கிற தொழிற்சங்கங்கள் வேலைக்கு வராமல் மறுப்பு செய்தார்கள். அதனாலே மற்ற தொழிற்சங்கங்கள் இந்த சித்ரா நிறுவனம் நிர்ணயித்த வேலைப் பளுவை ஒப்புக்கொண்டு வேலைக்குச் செல்கிறார்கள். அவர்கள் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு பஞ்சு தரப்படுகிறது. தரமான பஞ்சு தரப்படுகிறது. உங்கள் தலைமையிலே இயங்குகிற தொழிற்சங்கங்களையும் நீங்கள் வேலைக்கு அனுப்பினால் அவர்களையும் ஏற்றுக்கொண்டு, அந்த சித்ரா நிறுவனம் நிர்ணயித்த வேலைப் பளுவை ஒத்துக்கொண்டால் அவர்களுக்கும் வேலை தரப்படும். பஞ்சாலை தொடர்ந்து மற்ற தொழிலாளர்களுக்கும் வேலை தரும். இதிலே எந்தவிதமான சங்கடமும் கிடையாது.

முற்பகல் 11-00

திரு. சி. ஞானசேகரன்: ஒரே ஒரு சிறு கிளாரிபிகேஷன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தின்போது என்ன கிளாரிபிகேஷன் (குறுக்கீடு) விதிகளிலே இடமில்லை, உட்காருங்கள்.

பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.

1996 பிப்ரவரி 15]

வினா எண் 12, திரு. ப. கலியபெருமாள், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

12--

வில்லியனூரில் ஆரம்பப் பள்ளி அமைத்தல்

38078*--திரு. ப. கலியபெருமாள்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருவையாறு தொகுதியில் விளாங்குடி ஊராட்சியில் ஒரு பகுதியான வில்லியனூர் கிராமத்தில் ஆரம்பப்பள்ளி அமைக்கப்படுமா?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவையாறு தொகுதி, விளாங்குடி ஊராட்சியில் வில்லியனூர் கிராமத்தில் ஆரம்பப் பள்ளி திறக்க அரசு ஆணை எண். 708, கல்வி அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், நாள் 6 செப்டம்பர் 1995-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் தொகுதியிலுள்ள விளாங்குடி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வில்லியனூர் கிராமத்தில் இந்த நாடு சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்து அந்தப் பகுதி மக்கள் அங்கு ஒரு ஆரம்பப் பள்ளி வேண்டுமென்று விண்ணப்பம் போட்டு, அந்த விண்ணப்பம் ஏற்கப்படாமல் இருந்த நிலையில், இன்று நாட்டு மக்கள் நலம் கருதி மக்களுடைய கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றி வரும் அம்மா ஆட்சியில் ஆணை பிறப்பித்து, அமைச்சரின் முயற்சியால் அந்த வில்லியனூரில் ஆரம்பப் பள்ளி தொடங்கப்பட்டு அந்தத் தொடக்க விழாவிலே நானும் கலந்து கொண்டு, அதன் பிறகு உடனடியாக...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ப. கலியபெருமாள்: ஆரம்பப் பள்ளிக்கூடம் கட்டித் தருவதற்கு ஆணை பிறப்பித்து வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட நிலையில் அதற்காக முயற்சி செய்த அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்கள் சார்பாகவும், அந்த வில்லியனூர் மக்கள் சார்பாகவும் நன்றி கூறிக் கொள்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 13, டாக்டர் பிட்ரிக்ஸ் டி' சோசா, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

13--

FEE GRANT TO ANGLO-INDIAN CHILDREN

*77341--**Dr. Beatrix D'Souza:**

Will the Hon'ble the Minister for Education be pleased to state--

Whether the Government has a proposal to update fee grant given to Anglo-Indian children studying in Anglo-Indian Schools ?

Hon'ble Professor K. Ponnusamy, Minister for Education: Hon'ble Speaker Sir,

As per the G.O. Ms. No.704, Education, dated 5th September 1994 the fee compensation grant for Anglo Indian student has been enhanced as follows: minimum fee from Rs.20/- to Rs.50/-, maximum from Rs.70 to Rs.100.

Dr. Beatrix D'Souza: Hon'ble Speaker Sir, the fee compensation grant for Anglo Indian children studying in Anglo Indian schools was updated after 13 years only because I made a personal appeal to the Hon'ble Chief Minister, We are grateful to her. The Finance Department, however, with its customary caution has been very niggardly in updating the grant. The Anglo Indian Schools have to pay the teachers and the periodical increase in D.A. only out of the fees. The present fee structure is Rs.180/- from I standard to V and Rs.235/-for XI and XII. There are altogether 28 Anglo Indian schools invloved and the total number of Anglo Indian children is 3,862. I would like to know whether the Government will consider raising the compensation grant to the present fee structure. It will cost the Government only Rs.30 lakhs annually. In this connection, I would like to state that in Karnataka, Anglo Indian children's fees are reimbursed in Government Aided Schools, Technical Institutions and Colleges.

Hon'ble Professor K. Ponnusamy: Hon'ble Speaker Sir, the compensation grant has been enhanced only on 5th September 1995 and there is another possibility for Anglo Indian Schools to write to the Government for deficit grants and on this aspect some of the schools which actually suffer may apply to the Government and the Government will consider.

1996 பிப்ரவரி 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 14, திரு. டி. வேலையா, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

14--

கூலித் தொழிலாளர்களுக்கு மருத்துவ ஈட்டுறுதித் திட்டம்

38525*--திரு. டி. வேலையா :**

திருமதி. கே. மரியம் உல் ஆசியா:

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழக்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கூலித் தொழிலாளர்களுக்கு மருத்துவ ஈட்டுறுதித் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

(இ) இல்லையெனில், இந்தத் திட்டத்தைக் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழாது.

(இ) எழாது.

முற்பகல் 11-05

திரு. டி. வேலையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூலித் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் ஆர்கனைஸ்டு லேபர் மற்றும் அன்ஆர்கனைஸ்டு லேபர் என்று இருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் அவர்கள் அன்ஆர்கனைஸ்டு லேபரில் வருகிறார்கள். பனைத் தொழிலாளர்கள், மீன்பிடித் தொழிலாளர்கள் இவர்களுக்கெல்லாம் சலுகைகள் வழங்கப்படுகின்றன. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். கூட 1977-ல் சொல்கிறபோது, கல் உடைப்போர், மண் சுமப்போர், மூட்டை தூக்குபவர், மாட்டு வண்டித் தொழிலாளர்கள் இவர்களுக்கெல்லாம் அரசாங்கத்தின் மூலமாக பல சலுகைகளெல்லாம் செய்து, கிராஜுடி, பென்ஷன், மெடிக்கல் இன்ஸ்யூரன்ஸ் போன்றவையெல்லாம் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். அப்படி இருந்தாலும்கூட

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இதுநாள் வரை அவர்களுக்கு எந்தவிதமான சோஷியல் பாதுகாப்பும், சமூகப் பாதுகாப்பும் இல்லை. ஆனால் வங்கிகளில், இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளில், ஏர்லைன்ஸ் மற்றும் அரசாங்க உத்தியோகங்களில் இருப்பவர்களுக்கு எல்லாம் மேலும் மேலும் நாம் சலுகைகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆதரவற்ற, அன்றாடம் ஏதாவது கூலி வேலை செய்தால்தான் பிழைக்க முடியும் என்று இருக்கின்ற மாட்டு வண்டித் தொழிலாளர்கள் போன்ற அன்றாடக் கூலித் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு எந்தவிதமான பாதுப்பும் இல்லை. அவர்களை எல்லாம், யார் யார் எந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற கணக்கினை எடுத்து, அடையாள அட்டை வழங்கி அவர்களுக்கும் அரசாங்கத்தின் மூலமான மெடிக்கல் இன்யூரன்ஸ், கிராஜுவட்டி, பென்ஷன் போன்ற சலுகைகளை எல்லாம் வழங்கி, அவர்களை சமூகப் பாதுகாப்பின்கீழ் கொண்டுவருவற்கு மாண்புமிகு புரட்சித் தலைவியின் அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் மருத்துவ ஈட்டுறுதிச் சட்டத்திற்கு மைய அரசு திருத்தம் கொண்டுவந்தால்தான் கூலித் தொழிலாளர்களுக்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்த இயலும். ஆகவே, சமூக நீதி காத்த வீராங்கனை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அரசு இதைச் செயல்படுத்த பரிந்துரை செய்ய ஆராயும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி கே. மரியம் உல் ஆசியா.

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரள மாநிலத்தில், கயிறு, மீன்பிடி, நெசவு, பீடித் தொழிலாளர்கள் போன்ற கூலித் தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு வழங்கும் நடவடிக்கையாக, சேம நலத் திட்டத்தை அமல்படுத்தியிருக்கிறார்கள். அத்தகைய நல வாரியம் ஒன்று தமிழ்நாட்டில் அமைக்கப்படுமா என்றும், மரம் ஏறும் தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள் ஆகியோர்கள் பணிக்காலத்தில் மரணம் அடைந்தால் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுவதைப்போல, பாரம் தூக்கும் கூலித் தொழிலாளர்களுக்கும், பீடித் தொழிலாளர்களுக்கும், மற்றுமுள்ள ஏனைய கூலித் தொழிலாளர்களுக்கும் இதுவரை எந்தவிதமான நலப் பணிகளும் மேற்கொள்ளப்படாததால் அவர்களுக்கு மருத்துவ ஈட்டுறுதி திட்டத்தையும், பணிக் காலத்தில் மரணம் அடைந்தால் இழப்பீட்டுத் தொகையும் எந்தவிதமான உத்தரவாதமும்

1996 பிப்ரவரி 15]

இன்று வறுமையில் வாடும் அவர்களுடைய சந்ததியினரான குழந்தைகளுக்கு இலவசக் கல்வி போன்ற வசதிகளையும் வழங்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைப்பு ரீதியில் இல்லாத தொழிலாளர்களுக்கு அந்தச் சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என்று சொன்னால், மத்திய அரசுதான் அதைக் கொண்டுவர வேண்டும். அதற்கு ஏற்றவாறு சட்டத் திருத்தம் கொண்டுவருவதற்கு நம்முடைய புரட்சித் தலைவியின் அரசு பரிந்துரை செய்து ஆராயும் என்பதை முதலில் தெரிவித்தேன். திருத்தம் கொண்டுவந்தால் அதற்கேற்றவாறு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 15, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

15--

கூட்டுறவு வங்கிகள் அமைத்தல்

**44305--திருமதி கே. மரியம் உல் ஆசியா:*

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ்நாட்டில் பெண்களே நடத்தும் கூட்டுறவு வங்கிகள் எத்தனை இருக்கின்றன?

(ஆ) மேலும் பெண்களே நடத்தும் கூட்டுறவு வங்கிகள் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன்: கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் பெண்களே நடத்தும் கூட்டுறவு வங்கிகள் மொத்தம் 28 செயல்பட்டு வருகின்றன.

(ஆ) மேலும் பெண்களே நடத்தும் கூட்டுறவு வங்கிகளை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறது. அந்தச் செயற்குறிப்புடன் இன்னும் 10 மகளிருக்கான கூட்டுறவு வங்கி கிளைகள் துவங்க புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி வடாற்காடு மாவட்டம், கமலாட்சிபுரத்திலும், சேலம் மாவட்டம் நாமக்கல்லிலும்,

1996 பிப்ரவரி 15]

இன்று வறுமையில் வாடும் அவர்களுடைய சந்ததியினரான குழந்தைகளுக்கு இலவசக் கல்வி போன்ற வசதிகளையும் வழங்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைப்பு ரீதியில் இல்லாத தொழிலாளர்களுக்கு அந்தச் சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என்று சொன்னால், மத்திய அரசுதான் அதைக் கொண்டுவர வேண்டும். அதற்கு ஏற்றவாறு சட்டத் திருத்தம் கொண்டுவருவதற்கு நம்முடைய புரட்சித் தலைவியின் அரசு பரிந்துரை செய்து ஆராயும் என்பதை முதலில் தெரிவித்தேன். திருத்தம் கொண்டுவந்தால் அதற்கேற்றவாறு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 15, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

15--

கூட்டுறவு வங்கிகள் அமைத்தல்

**44305--திருமதி கே. மரியம் உல் ஆசியா:*

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ்நாட்டில் பெண்களே நடத்தும் கூட்டுறவு வங்கிகள் எத்தனை இருக்கின்றன?

(ஆ) மேலும் பெண்களே நடத்தும் கூட்டுறவு வங்கிகள் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன்: கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் பெண்களே நடத்தும் கூட்டுறவு வங்கிகள் மொத்தம் 28 செயல்பட்டு வருகின்றன.

(ஆ) மேலும் பெண்களே நடத்தும் கூட்டுறவு வங்கிகளை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறது. அந்தச் செயற்குறிப்புடன் இன்னும் 10 மகளிருக்கான கூட்டுறவு வங்கி கிளைகள் துவங்க புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி வடாற்காடு மாவட்டம், கமலாட்சிபுரத்திலும், சேலம் மாவட்டம் நாமக்கல்லிலும்,

திருச்சி மாவட்டம் ஆண்டாள் வீதியிலும், காமராஜர் மாவட்டம் சிவகாசியிலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒன்று தெற்கு அலங்கத்திலும் இன்னொரு கிளை அதாவது தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி பக்கத்திலும், தென்னாற்காடு மாவட்டம் விழுப்புரம் பகுதியிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் காந்தி நகர் பகுதியிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் வடகரையிலும், புதுக்கோட்டையில் திருக்கோகர்ணத்திலும் பெண்களே நடத்தும் கூட்டுறவு வங்கிகளைத் திறக்க அரசு உத்தேசித்திருக்கிறது.

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது நாட்டில் 1924-ம் ஆண்டில் துவங்கிய கூட்டுறவு இயக்கமானது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில்தான் பொற்காலமாக விளங்குகிறது. பெண்களே நடத்துகின்ற கூட்டுறவு வங்கிகளை அமைக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய பதில் உரையில் இனிமேலும் பெண்களே நடத்துகின்ற கூட்டுறவு வங்கிகள் ஆரம்பிக்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். அப்படி ஆரம்பிக்கப்பட இருக்கின்ற மாவட்டங்கள் குறித்த விவரங்களை இங்கே தெரிவித்தார்கள். அந்த அடிப்படையிலே, குறிப்பாக, கோஷா பெண்கள் நிறைந்து வாழ்கின்ற எங்கள் பகுதியான பள்ளப்பட்டி நகரிலும், அதேபோன்று இஸ்லாமியப் பெருமக்கள் நிறைந்து வாழுகின்ற கடலோரப் பகுதிகளான காயல்பட்டினம், லால்பேட்டை, நாகர்கோயில், ராமநாதபுரம், இளையான்குடி, நாகூர், நாகப்பட்டினம், பரங்கிப்பேட்டை, கூத்தாநல்லூர், மயிலாடுதுறை, கும்பகோணம், திருவாரூர் போன்ற கடலோரப் பகுதிகளில் திரைகடலோடி திரவியம் தேடுவதற்காக வெளிநாடுகளுக்கு ஆண்கள் சென்றிருக்கிற நிலையில் அந்தப் பகுதிகளில் பெண்கள்தான் வங்கிகளைப் பயன்படுத்துகிறார்கள். மேலும் அந்தப் பகுதிகளில் பூர்வீக விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் லட்சக்கணக்கில் வரவு செலவுகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்தப் பகுதிகளில், கோஷா பெண்கள் அதிகம் நிறைந்த பகுதிகளில் பெண்களுக்கு என்று கூட்டுறவு வங்கிகள் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்ற பழமொழியோடு, தேடிவந்த திரவியத்தை கூட்டுறவு வங்கிகளிலே

1996 பிப்ரவரி 15]

போடு என்கிற பழமொழியும் இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கிறது. அந்த அடிப்படையிலே கோஷா பெண்களே அந்த வங்கிகளுக்குச் சென்று அவர்களுடைய லேவாதேவிகளைச் செய்து கொள்ள வேண்டும் என்கிற அடிப்படையில் கோஷா பெண்களுக்கு என்று ஆங்காங்கே பெண்களே நடத்தும் வங்கிகளை இன்றைக்குத் திறக்க இயலாது. ஆனால், பெண்களே நடத்துகின்ற வங்கிகளிலே கோஷா பெண்கள் சென்று தங்களுடைய லேவாதேவிகளைச் செய்து கொள்வதற்கு எந்தவிதமான தடையும் இல்லை. அப்படி இருக்கிற நேரத்தில் அதிகமாக கோஷா பெண்கள் இருக்கின்ற பகுதிகளில் நூற்றுக்கு அறுபது விழுக்காடு அல்லது எழுபது விழுக்காடு இருக்கின்ற பகுதிகளில் மட்டும் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனையைக் கருத்திற்கொண்டு அந்தப் பகுதிகளிலே பெண்களே நடத்தும் வங்கிக் கூட்டுறவுக் கிளைகளைத் திறக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 16, டாக்டர் எம். கருப்புசாமி, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

16--

மாடுகள் வாங்க மானியம்

21474--டாக்டர் எம். கருப்புசாமி:***

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

குன்னூர் தொகுதியில் ஆதி திராவிடர் மற்றும் பின்தங்கிய வகுப்பினருக்குக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்தின் மூலமாக உயர் ரக மாடுகள் வாங்குவதற்கு மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குன்னூர் தொகுதியில் ஆதிதிராவிடர் வகுப்பினருக்கு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்தின் மூலமாக உயர் ரக மாடுகள் வாங்க மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1994 மற்றும் 1995-ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட

1996 பிப்ரவரி 15]

போடு என்கிற பழமொழியும் இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கிறது. அந்த அடிப்படையிலே கோஷா பெண்களே அந்த வங்கிகளுக்குச் சென்று அவர்களுடைய லேவாதேவிகளைச் செய்து கொள்ள வேண்டும் என்கிற அடிப்படையில் கோஷா பெண்களுக்கு என்று ஆங்காங்கே பெண்களே நடத்தும் வங்கிகளை இன்றைக்குத் திறக்க இயலாது. ஆனால், பெண்களே நடத்துகின்ற வங்கிகளிலே கோஷா பெண்கள் சென்று தங்களுடைய லேவாதேவிகளைச் செய்து கொள்வதற்கு எந்தவிதமான தடையும் இல்லை. அப்படி இருக்கிற நேரத்தில் அதிகமாக கோஷா பெண்கள் இருக்கின்ற பகுதிகளில் நூற்றுக்கு அறுபது விழுக்காடு அல்லது எழுபது விழுக்காடு இருக்கின்ற பகுதிகளில் மட்டும் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனையைக் கருத்திற்கொண்டு அந்தப் பகுதிகளிலே பெண்களே நடத்தும் வங்கிக் கூட்டுறவுக் கிளைகளைத் திறக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 16, டாக்டர் எம். கருப்புசாமி, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

16--

மாடுகள் வாங்க மானியம்

**21474--டாக்டர் எம். கருப்புசாமி:*

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

குன்னூர் தொகுதியில் ஆதி திராவிடர் மற்றும் பின்தங்கிய வகுப்பினருக்குக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்தின் மூலமாக உயர் ரக மாடுகள் வாங்குவதற்கு மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குன்னூர் தொகுதியில் ஆதிதிராவிடர் வகுப்பினருக்கு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்தின் மூலமாக உயர் ரக மாடுகள் வாங்க மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1994 மற்றும் 1995-ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட

மாடுகளின் எண்ணிக்கை எவ்வளவு? அதனுடைய தொகை எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993-94 மற்றும் 1994-95-ஆம் ஆண்டுகளில் சங்கங்களுக்குத் தக்க அறிவிப்புச் செய்து, விண்ணப்பங்கள் பெறப்பட்டு, உதகை வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களுடைய சான்றிதழ் அடிப்படையில் நீலகிரி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் மூலம் மொத்தம் 42 விண்ணப்பங்கள் பரிந்துரை செய்யப்பட்டு வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. கடன் வழங்குவதற்கான அறிவிப்பு செய்தவுடன் அவர்களுக்கு உடனடியாக கறவை மாடுகள் வாங்குவதற்கு மான்யம் வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 17, திரு. ஆர். கோடிமாரி, மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.

17--

மீனவர்களைப் பாதுகாக்க நடவடிக்கை

*10201--திரு. ஆர். கோடிமாரி:

மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழக கடலோரப் பகுதிகளில் வாழும் மீனவர்கள் கடலுக்குள் மீன் பிடிக்கச் செல்லும் போது தமிழக எல்லையிலேயே இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீனளத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): விவர அறிக்கை தனியே சட்டமன்றப் பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

பொதுவாக இந்திய மீனவர்கள் மீன்பிடிக்கும்போது, காற்றின் திசை மாற்றத்தினால் இந்தியக் கடல் எல்லையைத் தாண்டி இலங்கைக் கடற் பகுதிக்குள் தவறிச் செல்ல நேரிடுகிறது. இதனால் இலங்கைக் கடற்படையினராலும், சில இலங்கை தீவிரவாத அமைப்புகளைச் சார்ந்தவர்களாலும் தாக்குதலுக்கு உள்ளாகின்றனர். இந்திய

மாடுகளின் எண்ணிக்கை எவ்வளவு? அதனுடைய தொகை எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993-94 மற்றும் 1994-95-ஆம் ஆண்டுகளில் சங்கங்களுக்குத் தக்க அறிவிப்புச் செய்து, விண்ணப்பங்கள் பெறப்பட்டு, உதகை வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களுடைய சான்றிதழ் அடிப்படையில் நீலகிரி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் மூலம் மொத்தம் 42 விண்ணப்பங்கள் பரிந்துரை செய்யப்பட்டு வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. கடன் வழங்குவதற்கான அறிவிப்பு செய்தவுடன் அவர்களுக்கு உடனடியாக கறவை மாடுகள் வாங்குவதற்கு மான்யம் வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 17, திரு. ஆர். கோடிமாரி, மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.

17--

மீனவர்களைப் பாதுகாக்க நடவடிக்கை

*10201--திரு. ஆர். கோடிமாரி:

மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழக கடலோரப் பகுதிகளில் வாழும் மீனவர்கள் கடலுக்குள் மீன் பிடிக்கச் செல்லும் போது தமிழக எல்லையிலேயே இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீனளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): விவர அறிக்கை தனியே சட்டமன்றப் பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

பொதுவாக இந்திய மீனவர்கள் மீன்பிடிக்கும்போது, காற்றின் திசை மாற்றத்தினால் இந்தியக் கடல் எல்லையைத் தாண்டி இலங்கைக் கடற் பகுதிக்குள் தவறிச் செல்ல நேரிடுகிறது. இதனால் இலங்கைக் கடற்படையினராலும், சில இலங்கை தீவிரவாத அமைப்புகளைச் சார்ந்தவர்களாலும் தாக்குதலுக்கு உள்ளாகின்றனர். இந்திய

1996 பிப்ரவரி 15]

மீனவர்களின் உயிருக்கும், உடைமைகளுக்கும் பாதிப்பு ஏற்படுகின்றது. எனவே இந்திய மீனவர்கள் இந்திய கடல் எல்லையைத் தாண்டாமல் இருப்பதற்கு அவர்களுக்கு அவ்வபோது செய்தித்தாள்கள் வாயிலாகவும், கூட்டங்கள் நடத்தியும் தக்க அறிவுரைகள் வழங்கப்படுகின்றன. மைய அரசின் அறிவரையின் பேரில், கடற்கரையோர மீனவர்கள் மீன்பிடிப்பதற்காக இந்தியக் கடல் எல்லையைத் தாண்டிச் செல்ல வேண்டாமென்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இலங்கைக் கடற்படையினர் இந்திய மீனவர்களைத் தாக்குவதைத் தடுக்கக் கோரி, தமிழக அரசு மைய அரசைத் தொடர்ந்து பலமுறை கேட்டுக் கொண்டுள்ளது. இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் மாறுதல் செய்து, இந்திய மீனவர்கள் இந்திய கடல் எல்லையைத் தாண்டி இலங்கை நீர்பரப்பில் எவ்விதத் தடையுமின்றி மீன்பிடிக்க ஏதுவாக ஒரு புதிய வரைவு ஒப்பந்தக் குறிப்பு (Mou) *1994-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் தயாரிக்கப்பட்டது. இது தொடர்பாக மாநில மற்றும் மைய அரசு அதிகாரிகள் 1994-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7-10 இல் இலங்கைச் சென்று, இலங்கை அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தினர். அவ்விவாதத்தின் போது, இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவது நிறுத்தப்படும் என இலங்கை அரசின் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார். இருந்தபோதிலும், இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து தாக்கப்பட்டு வருகிறார்கள். மேலும், மேற்படி விவாதத்தில் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. தற்போது இலங்கையில் புதிதாக தேர்ந்து எடுக்கப்பட்ட அரசு ஆட்சியில் உள்ளதால், மீண்டும் இரு நாட்டுப் பிரதிநிதிகளும் ஒப்பந்த குறிப்பு குறித்து கலந்து பேசுவதற்கு கூட்டம் ஒன்றினைக் கூட்டுமாறு 26-12-94-ல் மைய அரசின் வெளிவிவகாரத்துறையைக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இது குறித்து மைய அரசின் பதில் இன்னும் எதிர்பார்க்கப்படுகிறது.*

திரு. ஆர். கோடிமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவர அறிக்கை ஒன்று வைத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக, மீனவர்கள் கடலில் செல்லும் போது காற்றில் திசை மாற்றத்தால் இலங்கைக்குச் சென்று விடுகிறார்கள் என்று விவர அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். அதுபோன்று மீனவர்கள் யாரும் காற்றினுடைய மாற்றத்தால் அங்கே செல்வது இல்லை; செல்லமாட்டார்கள். அப்படிச் செல்வார்கள் என்றால், விசைப்படகு பழுதடைந்தால் மட்டும், அந்தத் திசையில் காற்று அடிக்கும்போது ஒருசிலர் சென்றிருக்கலாம். சமீபத்தில் 20 நாட்களுக்கு முன்பாக, என்னுடைய தொகுதியில் வேளாங்கன்னிக்கு

அருகில் சிறுகுடி என்ற கிராமத்தில் கட்டுமரத்தில் மீன்பிடிக்கச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் கட்டுமரத்தில் சென்றார்கள் என்றால், அவர்கள் இலங்கைக்கு அருகிலும் செல்ல முடியாது, மையப் பகுதிக்கும் செல்ல முடியாது. ஏனென்றால், இவர்களிடம் விசைப்படகு கிடையாது. துடுப்பு மூலமாகச் செல்லுகின்ற கட்டுமரம் அங்கு செல்ல இயலாத நிலை இருந்தும், அவர்கள் மீன்பிடிக்கச் சென்று கொண்டிருந்தபோது மாலை சுமார் 4 மணிக்கு அவர்களுடைய கட்டுமரத்தைச் சுற்றி கண் இமைக்கும் நேரத்தில் 3 கடற்படைக் கப்பல்கள் சூழ்ந்து கொண்டன. உடனடியாக இவர்கள் பயந்துகொண்டு கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த வலையைக் கடலில் போட்டு...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோடிமாரி, உங்களுடைய பேச்சு கடலுக்குள்ளேயே சென்று கொண்டிருக்கிறது. கொஞ்சம் கரைக்கு வாருங்கள். *(சிரிப்பு)*

திரு. ஆர். கோடிமாரி: அவர்களுடைய வலையைப் போட்டுவிட்டு இராணுவ அதிகாரிகள் கையைத் தூக்கச் சொல்லியிருக்கிறார்கள். உடனே இவர்கள் கையைத் தூக்கி அவர்கள் காலில் மண்டியிட்டு கெஞ்சியிருக்கிறார்கள். அதையும் அவர்கள் பொருட்படுத்தாமல் கண்மூடித்தனமாகச் சுட்டு தள்ளியிருக்கிறார்கள். இராமசாமி தகப்பனார் பெயர் கோவிந்தசாமி என்ற 35 வயது மதிக்கத்தக்க மீனவர் அதே இடத்தில் இறந்திருக்கிறார். இன்னொரு மீனவர் கால் துண்டாகியிருக்கிறது. அவர் தஞ்சை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இன்னொருவருக்கு வலது கரத்தில் குண்டு பாய்ந்து, குண்டு வெளியேற்றப்பட்டிருக்கிறது. இப்படியெல்லாம் அவர்கள் கொடுமை தாங்காமல் அல்லல்படுகிறார்கள். இறந்த அந்த மீனவர் குடும்பத்திற்கும், காயம்பட்ட மீனவர்களுக்கும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய நிவாரண நிதியிலிருந்து உதவித் தொகை வழங்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11–15

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக நிலப்பரப்பிலே அந்த பார்டரை நாம் தெரிந்து கொள்ள முடியும். ஆனால் கடலிலே பார்டரை தெரிந்து கொள்வது என்பது மிகவும் சிரமமான காரியம். நம்முடைய எல்லையைத் தெரிந்து கொள்வது மிகவும் சிரமமான காரியம். நம்முடைய மீனவர்கள் தெரிந்து கொண்டு எல்லைக்கு அருகில் செல்வதில்லை. தெரிந்தோ தெரியாமலோ, மீன் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் எல்லையை

1996 பிப்ரவரி 15]

நெருங்கி விடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் நம்முடைய மீனவர்களை இலங்கை கடற்படையினர் பிடித்து வைத்திருக்கும்போதோ அல்லது தீவிரவாத கும்பல் பிடித்துவைத்திருக்கும்போதோ நம்முடைய அரசுக்குத் தகவல் கிடைத்தவுடன் நம்முடைய தமிழகத்தின் முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் போர்க்கால நடவடிக்கைகளை எடுத்து நம்முடைய மீனவர்களை உடன் கொண்டுவந்து அவர்களுடைய வீட்டிற்குக் கொண்டுபோய் சேர்த்துவிடுகிறார்கள். சமீபத்திலேகூட கன்னியாகுமரி மாவட்டம், கோட்டைப்பட்டினம் அருகே, கடலிலே மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் இலங்கையில் இருக்கின்றார்கள் என்ற தகவல் வந்த உடனேயே நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் அரசாங்க செலவிலே விமானத்தின் மூலமாக அவர்களைத் தமிழகத்திற்குக் கொண்டுவந்து, அவர்களை வீட்டிலே சேர்த்தார்கள். நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய உத்தரவின்பேரிலே நான் அந்த மீனவர்களை 'ஏர் போர்ட்டு'க்குச் சென்று வரவேற்ற விஷயத்தினை செய்தித் தாள்களிலே நீங்கள் படித்திருக்க முடியும். அப்படி ஒரு மீனவன் காணாமல் போனால்கூட இந்த அரசு போர்க்கால அடிப்படையிலே எல்லாவித நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது. மீனவர்கள் இறக்கின்ற பட்சத்திலே உடனடியாக அவர்களுடைய குடும்பத்திற்கு உதவிட வேண்டுமென்ற வகையிலே மீனவர் விபத்து காப்புறுதித் திட்டம் என்ற வகையிலே மீனவர்களுக்கு நிவாரண உதவி வழங்கப்பட்டு வருகிறது. அது மட்டுமல்லாமல் மத்தியிலே இருக்கின்ற 'பிஸ்கோபெஃட்' என்று சொல்லக்கூடிய 'பெடரேஷன்' மூலமாகத்தான் நாம் அந்த நிவாரண உதவியைப் பெற்று மீனவர்களுக்குத் தர வேண்டும். இதற்குக் குறைந்தது மூன்று மாதங்கள் ஆகின்ற காரணத்தினால், அந்த மூன்று மாதங்கள்கூட ஆகாமல், உடனடியாக நிவாரணம் வழங்க வேண்டும்; காத்து இருக்கக்கூடாது என்ற வகையிலே 'கார்ப்பஸ் ஃபண்டு' என்று சொல்லக்கூடிய ஒரு நிதியை ஏற்படுத்தி, அந்த 'கார்ப்பஸ் ஃபண்டு'க்கு 30 இலட்சம் ரூபாயை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். மீனவர்கள் சுடப்பட்டு இறக்கும்போதோ அல்லது தொழில் செய்ய முடியாத ஒரு சூழ்நிலை மீனவர்களுக்கு உருவாகும்போதோ, அவர்களுக்கு உடனடியாக இந்த நிதியிலிருந்து எடுத்துக் கொடுக்கக் கூடிய வகையிலே இன்றைக்கு நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அந்த அளவிற்கு 30 இலட்சம் ரூபாயிலே அந்த நிதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த நிதியிலிருந்துகூட இறந்த மீனவர் குடும்பத்திற்கும், காயம்பட்டு தொழில் செய்யமுடியாது இருக்கின்ற

அந்த மீனவர்களுக்கும், அவர்கள் ஏற்கெனவே நிதி பெறாமல் இருந்தால், அவர்களுக்கு நிதி வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் பிடிக்கச் செல்கின்ற மீனவர்களுக்குத் தொடர்ந்து உயிர்ச் சேதம், உடமைச் சேதம் ஏற்பட்டு வருகிறது. இதைத் தடுப்பதற்கு தமிழக அரசின் சார்பிலே மீனவர் பாதுகாப்புப் படை என்ற அமைப்பை தனியாக அமைப்பதற்கு முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் எந்தவித ஒரு அமைப்பில் இருக்கிறோம் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். இந்திய நாடு என்ற அமைப்பிலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தனியாக ஒரு படையை நாம் ஏற்படுத்த முடியாது. ஆனால் *1974*-ஆம் ஆண்டு கச்சத் தீவு இலங்கைக்கு தாரை வார்த்துக் கொடுக்கப்பட்டது. அப்பொழுதிலிருந்து கச்சத் தீவை மீட்பதற்கோ, மீனவர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பதற்கோ கடந்த காலங்களிலே நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் நிச்சயமாக இல்லை. ஆனால் நம்முடைய ஆற்றல்மிக்க தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற பிறகுதான் முதன்முறையாக நம்முடைய அரசினுடைய செயலாளர் அவர்களும், வெளியுறவுத் துறைச் செயலாளர் அவர்களும் இலங்கைக்குச் சென்று நம்முடைய மீனவர்களுக்கு பாதுகாப்பை ஏற்படுத்த வேண்டுமென்ற நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய அந்தக் கொள்கையினை, அவர்களுடைய குரலை அங்கே வெளிப்படுத்தி வந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே *1974* மற்றும் *1976*-ஆம் ஆண்டு இந்திய இலங்கை ஒப்பந்தங்களை மீறும் வாய்ப்புளைத் தவிர்க்கக் கருதி இலங்கை நீர்ப்பரப்பில், இந்திய மீனவர்களுக்கு முறைப்படுத்தப்பட்ட மீன்பிடிப்பு அனுமதிக்கப்படுவது அவசியம் என்று கருதப்பட்டது. இதன்படி இலங்கை நீர்ப்பரப்பில் இந்திய மீனவர்களை அனுமதிக்கும் விதத்தில் *1994*, பிப்ரவரி மாதத்தில் வரைவு ஒப்பந்தக் குறிப்பு தயாரிக்கப்பட்டு, இலங்கை அரசுடன் விவாதிக்கப்பட்டு *1994*, மார்ச் மாதம் *7*-ஆம் தேதி இந்தியத் தரப்பில் இருந்து இந்திய அரசின் வெளியுறவு அமைச்சகம், உள்துறை அமைச்சகம், பாதுகாப்புத்துறை அமைச்சகம் ஆகியவற்றின் அலுவலர்கள் மற்றும் தமிழக அரசின் கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் துறை அரசுச் செயலாளர் ஆகியோரைக் கொண்ட குழு கொழும்பிற்குச் சென்று

வந்தது. இந்த தூதுக் குழு இலங்கையிலுள்ள இந்திய ஹை கமிஷனர் தலைமையிலேயும், இலங்கைத் தூதுக்குழு, இலங்கை வெளியுறவுத் துறைச் செயலாளர் தலைமையிலும் பாதுகாப்புத் துறைச் செயலாளர், மீன்துறை செயலாளர், கடல்படை தளபதி மற்றும் பிற அலுவலர்களை உறுப்பினர்களாகக் கொண்டு இந்த விவாதத்தில் கலந்து கொண்டது. இப்பொருள் குறித்து இன்னும் இறுதியான முடிவு எடுக்கப்படவில்லை.

முற்பகல் 11-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 18, திரு. கே. கந்தசாமி இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. எஸ்.ஆர். ஜெயராமன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

18--

சேலத்தில் ஓட்டல் தமிழ்நாடு கட்டுதல்

45613*--திரு. கே. கந்தசாமி:**

மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சேலத்தில் ஓட்டல் தமிழ்நாடு கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாநகரத்தில், இராமகிருஷ்ணா சாலையில் சுற்றுலாத் துறையின் மூலம் சுற்றுலா வளாகம் அமைக்கப்பட்டு வருகிறது.

திரு. எஸ்.ஆர். ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுற்றுலாத் துறை வளாகம் அமைப்பதாகச் சொல்லி இருக்கின்றார்கள். இன்று தமிழகத்திலே சேலம் மையப் பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், அங்கே சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருகின்றார்கள். அங்கே மேட்டூர்டேம், தாரமங்கலம் கோயில், ஏற்காடு மலை போன்றவை இருப்பதினால் அங்கே தமிழ்நாடு ஹோட்டல் அமைப்பதற்கு ஏற்பாடு செய்து இருக்கின்றாரா என்று அறிய விரும்புகிறேன்.

வந்தது. இந்த தூதுக் குழு இலங்கையிலுள்ள இந்திய ஹை கமிஷனர் தலைமையிலேயும், இலங்கைத் தூதுக்குழு, இலங்கை வெளியுறவுத் துறைச் செயலாளர் தலைமையிலும் பாதுகாப்புத் துறைச் செயலாளர், மீன்துறை செயலாளர், கடல்படை தளபதி மற்றும் பிற அலுவலர்களை உறுப்பினர்களாகக் கொண்டு இந்த விவாதத்தில் கலந்து கொண்டது. இப்பொருள் குறித்து இன்னும் இறுதியான முடிவு எடுக்கப்படவில்லை.

முற்பகல் 11-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 18, திரு. கே. கந்தசாமி இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. எஸ்.ஆர். ஜெயராமன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

18--

சேலத்தில் ஓட்டல் தமிழ்நாடு கட்டுதல்

45613--**திரு. கே. கந்தசாமி:**

மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சேலத்தில் ஓட்டல் தமிழ்நாடு கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாநகரத்தில், இராமகிருஷ்ணா சாலையில் சுற்றுலாத் துறையின் மூலம் சுற்றுலா வளாகம் அமைக்கப்பட்டு வருகிறது.

திரு. எஸ்.ஆர். ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுற்றுலாத் துறை வளாகம் அமைப்பதாகச் சொல்லி இருக்கின்றார்கள். இன்று தமிழகத்திலே சேலம் மையப் பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், அங்கே சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருகின்றார்கள். அங்கே மேட்டூர்டேம், தாரமங்கலம் கோயில், ஏற்காடு மலை போன்றவை இருப்பதினால் அங்கே தமிழ்நாடு ஹோட்டல் அமைப்பதற்கு ஏற்பாடு செய்து இருக்கின்றாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாவின் அடிப்படையில், சேலம் மாநகரத்தில் தமிழ்நாடு ஹோட்டல் கட்டப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பு ஏற்றதற்குப் பின்னால், 1992-93-ஆம் ஆண்டிலே உத்தரவிட்டு, அதனுடைய பணி ரூ.41.45 லட்சம் செலவில் கட்டுமானப் பணி அனுமதிக்கப்பட்டு, மத்திய பொதுப் பணித் துறையின் மூலம் அந்த வளாகம் கட்டப்பட்டு வருகின்றது. அந்த வளாகத்தைக் கட்டி முடித்து மார்ச் திங்களுக்குள் தமிழ்நாடு சுற்றுலாத் துறைக்கு ஒப்படைப்பதாக மத்திய பொதுப் பணித் துறை தகவல் அளித்து இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு. நடேசன்.

திரு. மு. நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் சமீபத்தில் சேலம் வந்தபோது அந்தப் பகுதியை, அந்த ஹோட்டலை பார்வையிட்டார்கள். அங்கே கான்ட்ராக்ட் எடுத்து இருக்கின்றவர்கள் குறிப்பிட்ட நேரத்திலே வேலை செய்யாத காரணத்தினாலே, வேலை மிகவும் காலதாமதமாக நடந்துகொண்டு இருக்கிறது. அதை உடனடியாக இந்த மார்ச் மாதத்திற்குள் செய்வதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூ. 41.45 லட்சம் அனுமதிக்கப்பட்டு அந்தக் கட்டிடம் கட்டுகிற பொறுப்பை மத்திய பொதுப்பணித் துறை கடந்த 3 ஆண்டுகளாக மேற்கொண்டு முடிக்காத தருவாயில் இருக்கிற காரணத்தால், நான் அண்மையில் சேலம் சென்றபோது நானே நேரடியாகச் சென்று பார்த்தேன்; மத்திய பொதுப்பணித் துறையில் உள்ள பொறியாளர்கள், மார்ச் திங்களுக்குள் வேலையை முடித்து மாநில சுற்றுலாத் துறையிடம் ஒப்படைப்பதாகத் தகவல் அளித்து உள்ளார்கள் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 19, திருமதி கவிநிலவு தர்மராஜ், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

19--

கால்நடை மருந்தகத்தை மருத்துவமனையாக்குதல்

**56148--திருமதி கவிநிலவு தர்மராஜ்:*

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாவின் அடிப்படையில், சேலம் மாநகரத்தில் தமிழ்நாடு ஹோட்டல் கட்டப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பு ஏற்றதற்குப் பின்னால், 1992-93-ஆம் ஆண்டிலே உத்தரவிட்டு, அதனுடைய பணி ரூ.41.45 லட்சம் செலவில் கட்டுமானப் பணி அனுமதிக்கப்பட்டு, மத்திய பொதுப் பணித் துறையின் மூலம் அந்த வளாகம் கட்டப்பட்டு வருகின்றது. அந்த வளாகத்தைக் கட்டி முடித்து மார்ச் திங்களுக்குள் தமிழ்நாடு சுற்றுலாத் துறைக்கு ஒப்படைப்பதாக மத்திய பொதுப் பணித் துறை தகவல் அளித்து இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு. நடேசன்.

திரு. மு. நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் சமீபத்தில் சேலம் வந்தபோது அந்தப் பகுதியை, அந்த ஹோட்டலை பார்வையிட்டார்கள். அங்கே கான்ட்ராக்ட் எடுத்து இருக்கின்றவர்கள் குறிப்பிட்ட நேரத்திலே வேலை செய்யாத காரணத்தினாலே, வேலை மிகவும் காலதாமதமாக நடந்துகொண்டு இருக்கிறது. அதை உடனடியாக இந்த மார்ச் மாதத்திற்குள் செய்வதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூ. 41.45 லட்சம் அனுமதிக்கப்பட்டு அந்தக் கட்டிடம் கட்டுகிற பொறுப்பை மத்திய பொதுப்பணித் துறை கடந்த 3 ஆண்டுகளாக மேற்கொண்டு முடிக்காத தருவாயில் இருக்கிற காரணத்தால், நான் அண்மையில் சேலம் சென்றபோது நானே நேரடியாகச் சென்று பார்த்தேன்; மத்திய பொதுப்பணித் துறையில் உள்ள பொறியாளர்கள், மார்ச் திங்களுக்குள் வேலையை முடித்து மாநில சுற்றுலாத் துறையிடம் ஒப்படைப்பதாகத் தகவல் அளித்து உள்ளார்கள் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 19, திருமதி கவிநிலவு தர்மராஜ், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

19--

கால்நடை மருந்தகத்தை மருத்துவமனையாக்குதல்

56148--திருமதி கவிநிலவு தர்மராஜ்:

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

1996 பிப்ரவரி 15]

பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியத்திலுள்ள அனைத்து கிராமங்களும் பயனடையும் வகையில் மொடக்குறிச்சியில் உள்ள கால்நடை மருந்தகத்தைக் கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.சி. தாமோதரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெரியார் மாவட்டம் மொடக்குறிச்சியில் உள்ள கால்நடை மருந்தகத்தைக் கால்நடை மருத்துவமனையாகக் தரம் உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு எதுவும் தற்சமயம் இல்லை.

முற்பகல் 11-25

திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்தியத் தாயின் மணி வயிற்றில் சுந்தரியாய்ப் பிறந்து, சுழன்று பணியாற்றி அரசியலில் சுறுசுறுப்பாய் வளர்ந்து, சுற்றி நின்ற எதிரிகளை வீழ்த்தி, பஞ்சமா பாதகர்களை பக்கத்திலிருந்து படுகுழி தோண்டியவர்களை அடக்கி, பஞ்ச பூதங்களையும் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் பஞ்சபூத நாயகியாக விளங்கி, அத்தனைபேரும் வியக்கக்கூடிய விதத்திலே 5 ஆண்டுக்காலம் பஞ்சமில்லா ஆட்சியை தமிழகத்திலே நடத்தி, மதுரை மாநாடு கண்டு களத்தையும் வென்று, திருச்சி மாநாட்டிலே திசையெல்லாம் திக்கெல்லாம் தீந்தமிழ் மொழியும் திரும்பும் திசையெல்லாம் போற்றக்கூடிய விதத்திலே கழக மாநாட்டை வெற்றியோடு நடத்தி, வெற்றிச் செல்வியாய், வீரச் செல்வியாய், தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சராய் விளங்கிக் கொண்டிருக்கிற மாண்புமிகு இதய தெய்வம் (பலத்த மேசையைத் தட்டும் ஒலி)

புரட்சித் தலைவியினுடைய பொன்னான ஆட்சியிலே மொடக்குறிச்சித் தொகுதியிலே கால்நடை மருத்துவமனையை நிறுவ வேண்டும் என்று நாங்கள் அமைச்சர் அவர்களிடம் கேட்டிருந்தோம். ஆனாலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செயல் குறிப்பு இல்லை என்று கூறியிருக்கிறார்கள். மொடக்குறிச்சித் தொகுதியிலே அதிகப்படியான கிராமங்களைக் கொண்டிருக்கிற மொடக்குறிச்சி ஒன்றியத்தில் கிட்டத்தட்ட 50000 பேருக்கு மேலாக அந்தப் பகுதியிலே கால்நடைத் தொழிலை நம்பிக் கொண்டிருக்கிறார்கள். விவசாயத்தையும், கால்நடைத் தொழிலையும் நம்பிக் கொண்டிருக்கிற அந்தப் பகுதியிலே வெறும் மருந்தகத்தை மட்டும் வைத்திருப்பதனால் எந்தப் பயனும் இல்லை என்ற அடிப்படையிலேதான் அந்தப் பகுதிக்கு மருவத்துவமனைக்

கொடுக்கக்கூடிய விதத்திலே, தரத்தை உயர்த்தி வழங்குமாறு நாங்கள் கேட்டிருக்கிறோம். இல்லை என்ற சொல்லுக்கு இலக்கணமே தெரியாத எதையும் சாதிக்கக்கூடிய பொன்னான ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிற அன்பு தெய்வத்தின் ஆட்சியிலே, மொடக்குறிச்சித் தொகுதி என்று சொல்லக்கூடிய, தலைநகரின் பெயரை வைத்திருக்கிற அந்த மொடக்குறிச்சியிலே இருக்கிற மருந்தகத்தை மாற்றி தரத்தை உயர்த்தி, மருத்துவமனையை அமைக்க வருகிற நிதியாண்டிலாவது அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம்.சி. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கால்நடை மருந்தகம் மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட வேண்டுமானால் கீழ்க்கண்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். அது வாடகையில்லா நிரந்தரக் கட்டிடத்தில் அமைந்திருக்க வேண்டும். கால்நடைகளை தங்க வைத்து வைத்தியம் செய்வதற்கு கொட்டகை கட்டப் போதிய இட வசதி இருக்க வேண்டும். போதிய தண்ணீர் வசதி இருக்க வேண்டும். கால்நடைகளின் தினசரி வருகை 50க்கு மேல் இருக்க வேண்டும். இப்படிப்பட்ட நிலைகள் இருக்குமாயின், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய அரசு வருகிற 1996-97-ஆம் நிதியாண்டில் இம்மருந்தகத்தை மருத்துவமனையாக தரம் உயர்த்தப் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 20, திரு. எஸ். சண்முகநாதன், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்.

20--

கோயிலைப் புதுப்பித்தல்

*40590--**திரு. எஸ். சண்முகநாதன்:**

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஆலங்குடி தொகுதி, குளமங்களம் பெருங்காளை முன்டையனார் கோயிலைப் புதுப்பிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்துப்பிள்ளை, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதுக்கோட்டை மாவட்டம், குளமங்களம் அருள்மிகு பெருங்காளை முன்டைய்யனார் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்ய போதிய நிதி

கொடுக்கக்கூடிய விதத்திலே, தரத்தை உயர்த்தி வழங்குமாறு நாங்கள் கேட்டிருக்கிறோம். இல்லை என்ற சொல்லுக்கு இலக்கணமே தெரியாத எதையும் சாதிக்கக்கூடிய பொன்னான ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிற அன்பு தெய்வத்தின் ஆட்சியிலே, மொடக்குறிச்சித் தொகுதி என்று சொல்லக்கூடிய, தலைநகரின் பெயரை வைத்திருக்கிற அந்த மொடக்குறிச்சியிலே இருக்கிற மருந்தகத்தை மாற்றி தரத்தை உயர்த்தி, மருத்துவமனையை அமைக்க வருகிற நிதியாண்டிலாவது அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம்.சி. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கால்நடை மருந்தகம் மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட வேண்டுமானால் கீழ்க்கண்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். அது வாடகையில்லா நிரந்தரக் கட்டிடத்தில் அமைந்திருக்க வேண்டும். கால்நடைகளை தங்க வைத்து வைத்தியம் செய்வதற்கு கொட்டகை கட்டப் போதிய இட வசதி இருக்க வேண்டும். போதிய தண்ணீர் வசதி இருக்க வேண்டும். கால்நடைகளின் தினசரி வருகை 50க்கு மேல் இருக்க வேண்டும். இப்படிப்பட்ட நிலைகள் இருக்குமாயின், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய அரசு வருகிற 1996-97-ஆம் நிதியாண்டில் இம்மருந்தகத்தை மருத்துவமனையாக தரம் உயர்த்தப் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 20, திரு. எஸ். சண்முகநாதன், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்.

20--

கோயிலைப் புதுப்பித்தல்

*40590--**திரு. எஸ். சண்முகநாதன்:**

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஆலங்குடி தொகுதி, குளமங்களம் பெருங்காளை முன்டையனார் கோயிலைப் புதுப்பிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்துப்பிள்ளை, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதுக்கோட்டை மாவட்டம், குளமங்களம் அருள்மிகு பெருங்காளை முன்டைய்யனார் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்ய போதிய நிதி

1996 பிப்ரவரி 15]

வசதி இல்லை. எனவே, இத்திருக்கோயிலுக்கு திருப்பணி குழு அமைக்கப்பட்டு அதன் மூலம் பொதுமக்கள் நன்கொடையாக, திருப்பணிச் செலவில் 2/3 பங்கு வசூலிக்கப்பட்டால், எஞ்சியுள்ள தொகைக்கு அரசு மானியம் அளிப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

திரு. எஸ். சண்முகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடித் தொகுதியில் இருக்கும் பெருங்காளை முன்டைய்யனார் திருக்கோவில் ஒரு வரலாற்று சிறப்புமிக்க திருக்கோவிலாகும். ஆசியாவிலேயே மிகவும் புகழ்பெற்றிருக்கிற, அய்யனார் சிலையைக் கொண்டிருக்கிற அந்தக் கோவில் இன்றைக்கு ஆசியாக் கண்டத்திலேயே மிக உயர்ந்த இடத்தைப் பெற்றிருக்கிறது. சுற்றுலாப் பயணிகளை எல்லாம் கவருகின்ற வகையிலே அதிகமான பக்தர்கள் கூடுகின்ற அந்தக் கோவிலை, வரலாற்றுச் சிறப்புமிக்க அந்தக் கோவிலைப் புதுப்பிப்பதற்கு, இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொதுமக்கள் கட்ட வேண்டியத் தொகையை கட்ட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தப் புராதனக் கலைகள் அழிந்துவிடும் சூழ்நிலையில், இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தக் கோவிலைப் புதுப்பிக்கிற வகையிலே எவ்வளவுத் தொகை கட்ட வேண்டும் என்று சொல்வார்களேயானால், அதை நாங்கள் கட்டுவதற்குத் தயாராக இருக்கிறோம். எவ்வளவு தொகை என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்கள் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்துபிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளமங்களம் அருள்மிகு பெருங்காளை முன்டைய்யனார் திருக்கோவிலும், அருள்மிகு மெய்நின்றநாதசுவாமி திருக்கோவிலும் ஆக இந்த இரு திருக்கோவில்களும் அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமித் திருக்கோவிலின் உப கோவில்கள் ஆகும். அருள்மிகு சுப்பிரமணியசாமித் திருக்கோவிலின் ஆண்டு வருமானம் ரூ.83,346/- இந்த நிதியை வைத்துக் கொண்டுதான் இந்த மூன்று திருக்கோவில்களுடைய அன்றாடப் பூஜை மற்றும் திருவிழாக்களை நடத்த வேண்டும். மேலே குறிப்பிட்டுள்ள பெருங்காளை முன்டைய்யனார் திருக்கோவிலின் நிதியினை மட்டும் மூலதனமாக வைத்துக் கொண்டு திருப்பணியைச் செய்ய இயலாது. அதற்குத்தான் நான் ஏற்கெனவே கூறியது போல, விரைவில் திருப்பணிக்குழு அமைக்கப்பெற்று திருப்பணிக்கு எவ்வளவு செலவாகும் என்பதைக் குறிப்பெடுத்துத்தான் பொதுமக்கள் எவ்வளவு நன்கொடை வசூலிக்கவேண்டும் என்று கூறமுடியும். அதன்பிறகு மீதியை மானியமாகத்

தருவதற்கு அரசுக்கு எந்தத் தயக்கமும் இல்லை என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

9--

அரியலூரில் மண்வள ஆராய்ச்சி மையம்

84806--டாக்டர் சு. மணிமேகலை:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரியலூரில் மண்வள ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

திருச்சி மாவட்டம், மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டதும், பெரம்பலூர்-திருவள்ளுவர் மாவட்டத்தின் கீழ்வரும் அரியலூரில், மண் பரிசோதனை நிலையம் அமைப்பது குறித்து பரிசீலனை செய்யப்படும்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்*

(பட்டியல்கள் 1 முதல் 4 வரை)

முதல் பட்டியல்

1--

இச்சிப்பாளைய கிராம வீடுகளுக்கு பட்டா வழங்குதல்

வினா எண் *33341*--திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கொடுமுடி ஒன்றியம் தாமரைப்பாளையம் கிராமத்திற்கு அருகேயுள்ள இச்சிப்பாளைய கிராமத்திலுள்ள வீடுகளுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

*குறிப்பு: இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

தருவதற்கு அரசுக்கு எந்தத் தயக்கமும் இல்லை என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

9--

அரியலூரில் மண்வள ஆராய்ச்சி மையம்

84806--டாக்டர் சு. மணிமேகலை:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரியலூரில் மண்வள ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

திருச்சி மாவட்டம், மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டதும், பெரம்பலூர்-திருவள்ளுவர் மாவட்டத்தின் கீழ்வரும் அரியலூரில், மண் பரிசோதனை நிலையம் அமைப்பது குறித்து பரிசீலனை செய்யப்படும்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்*

(பட்டியல்கள் 1 முதல் 4 வரை)

முதல் பட்டியல்

1--

இச்சிப்பாளைய கிராம வீடுகளுக்கு பட்டா வழங்குதல்

வினா எண் *33341*--திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கொடுமுடி ஒன்றியம் தாமரைப்பாளையம் கிராமத்திற்கு அருகேயுள்ள இச்சிப்பாளைய கிராமத்திலுள்ள வீடுகளுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

*குறிப்பு: இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

தருவதற்கு அரசுக்கு எந்தத் தயக்கமும் இல்லை என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

9--

அரியலூரில் மண்வள ஆராய்ச்சி மையம்

**84806--டாக்டர் சு. மணிமேகலை:*

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரியலூரில் மண்வள ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

திருச்சி மாவட்டம், மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டதும், பெரம்பலூர்-திருவள்ளுவர் மாவட்டத்தின் கீழ்வரும் அரியலூரில், மண் பரிசோதனை நிலையம் அமைப்பது குறித்து பரிசீலனை செய்யப்படும்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்*

(பட்டியல்கள் 1 முதல் 4 வரை)

முதல் பட்டியல்

1--

இச்சிப்பாளைய கிராம வீடுகளுக்கு பட்டா வழங்குதல்

வினா எண் 33341--திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கொடுமுடி ஒன்றியம் தாமரைப்பாளையம் கிராமத்திற்கு அருகேயுள்ள இச்சிப்பாளைய கிராமத்திலுள்ள வீடுகளுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

*குறிப்பு: இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

1996 பிப்ரவரி 15]

விடை--

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

ஈரோடு வட்டம், இச்சிப்பாளையம் கிராமம், தாமரைப் பாளையம், ரீ.ச. எண் 61/1, நத்தம் புறம்போக்கில் வசித்து வந்த 20 குடும்பங்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டு விட்டது.

2--

எஸ்.எஸ். குளம் ஒன்றியத்திலுள்ள நத்தம் புறம்போக்கு நிலம்

வினா எண் 36566--திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சிங்காநல்லூர் தொகுதி, எஸ். எஸ். குளம் ஒன்றியத்தில் நத்தம் புறம்போக்கு எவ்வளவு ஏக்கர் உள்ளது?

(ஆ) இந்த நிலத்தை பொது மக்களுக்கு அளித்து பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) சிங்காநல்லூர் தொகுதி, எஸ்.எஸ். குளம் ஒன்றியத்தில் மொத்தம் 716.55 ஏக்கர் நத்தம் புறம்போக்கு நிலம் உள்ளது.

(ஆ) இதில் 1038 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

3--

குடியிருப்போருக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கல்

வினா எண் 37109--திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதி, கெட்டி சமுத்திரம் ஊராட்சி, கிருஷ்ணபுரம் தாய் சேய் நலவிடுதி அருகில் வசிப்போருக்கு வீட்டு மனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

பெரியார் மாவட்டம், பவானி வட்டம், கெட்டி சமுத்திரம் கிராமம், ரீ.ச. எண்.69-2ல் உள்ள கரடு புறம்போக்கு என்ற வகைப்பாடு கொண்ட நிலத்தில் குடியிருந்துவரும் 46 போயர் இன மக்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்குவதற்கான நடவடிக்கை, இந்நிலம் சம்பந்தமாக ஐயப்பன் கோவில் நிர்வாகத்தினால் பவானி மாவட்ட முன்சீப் கோர்ட்டில் தொடரப்பட்ட வழக்கு முடிவுற்ற பின்புதான் எடுக்க இயலும்.

4--

வருவாய்த் துறை அலுவலர்களுக்கு வயர்லஸ் கருவி

வினா எண் 108017--திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கிராம நிர்வாக அலுவலர், வருவாய் அலுவலர் ஆகிய வருவாய்த் துறை அலுவலர்களுக்கு வயர்லஸ் கருவிகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை--

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

இல்லை.

5--

மாவட்ட தலைமை மருத்துவ மனைகளிலுள்ள மன நலம் புறப்பிணியாளர் பிரிவு

வினா எண் 38816--திரு. எச். எம். ராஜு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

1996 பிப்ரவரி 15]

(அ) எல்லா மாவட்ட தலைமை மருத்துவமனைகளிலும், மனநலம் புறப்பிணியாளர் பிரிவை விரிவுபடுத்தி 10 படுக்கைகள் அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

6--

உதகை தலைமை மருத்துவமனை மனநிலை புறப்பிணியாளர் பகுதிக்கு மனநல நிபுணர் நியமித்தல்

வினா எண் 38818--திரு. எச்.எம். ராஜு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) நீலகிரி மாவட்டம் உதகையிலுள்ள தலைமை மருத்துவ மனையில் மனநிலை புறப்பிணியாளர் பகுதிக்கு மன நல நிபுணர் இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மன நல நிபுணரை உடனடியாக நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): நீலகிரி அரசு தலைமை மருத்துவ மனைக்கு அரசு ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களில் மருத்துவர்கள் பணிபுரிகின்றனர். தற்சமயம் மனநல மருத்துவம் (DPM) படிப்பு படித்த மருத்துவர்கள் எவரும் இல்லாததால், இம்மருத்துவமனைக்கு மனநல மருத்துவரை நியமிக்க இயலவில்லை. தகுதியுடைய மருத்துவர்கள் கிடைத்ததும் இப்பணியிடம் நிரப்பப்படும்.

7--

பால்வினை நோய்களுக்கான சிறப்பு மருத்துவர் நியமனம்

வினா எண் 87509--திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பழனி அரசு தலைமை மருத்துவமனையில் பால்வினை நோய்களுக்கான சிறப்பு மருத்துவர் ஒருவரை விரைவில் நியமனம் செய்திட நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

பழனி அரசு மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட 12 பணியிடங்களிலும் உதவி மருத்துவர்கள் பணிபுரிகின்றனர். பால்வினை நோய்களுக்கான பிரிவில் டி.வி. பட்ட மேற்படிப்பு படித்த சிறப்பு மருத்துவர் யாரும் இல்லாததால் எம்.எஸ். பட்டப்படிப்பு படித்த மருத்துவர் ஒருவர் தற்போது பணிபுரிகின்றார். தகுதி வாய்ந்த சிறப்பு மருத்துவர் ஒருவர் கிடைத்ததும், இப்பிரிவில் நியமிக்கப்படுவார்.

8--

மருத்துவமனையில் வடிகால் கட்டுதல்

வினா எண் 87934--டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சென்னை மனநோய் மருத்துவமனையில் வடிகால் கட்டிட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) சிறப்பு பழுதுபார்த்தல் திட்டம் உள்ளது. முதுநிலை பட்டியல் மூலம் செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை சென்னை, அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

9--

மனநோய் மருத்துவமனையில் பிணவறை கட்டுதல்

வினா எண் 87935--டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சென்னை மனநோய் மருத்துவமனையில் பிணவறை கட்டிட அரசுக்கு பரிந்துரை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

10--

தாய்சேய் பாதுகாப்புத் திட்டம்

வினா எண் 97060--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தாய் சேய் பாதுகாப்புத் திட்டம் தமிழ்நாட்டில் எந்தெந்த மாவட்டங்களில் அமுல்படுத்தப்படுகிறது?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சிசு உயிர் பிழைத்தல் மற்றும் பாதுகாப்பான தாய்மை நலத்திட்டம் இம்மாநிலத்தில் படிப்படியான முறையில் கீழ்க்கண்டவாறு செயல்படுத்தப்படுகிறது :

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வ. எண்.	திட்டத்தின் நிலைகள்.	திட்டம் ஆரம்பமான ஆண்டு.	செயல் திட்டம் ஆரம்பமான மாவட்டங்கள்.
(1)	*(2)*	*(3)*	*(4)*
1	முதல் கட்டம்	1992-93	1 வட ஆற்காடு அம்பேத்கார்.
			2 திருநெல்வேலி கட்டபொம்மன்.
			3 தர்மபுரி.
			4 இராமநாதபுரம்.
2	இரண்டாவது கட்டம்	1993-94	1 மதுரை.
			2 திண்டுக்கல் அண்ணா
			3 காமராசர்.
			4 சேலம்.
3	மூன்றாவது கட்டம்	1994-95	1 சென்னை.
			2 செங்கை-எம்.ஜி.ஆர்.
			3 கோயம்புத்தூர்.
			4 பெரியார்
			5 நீலகிரி
			6 தஞ்சாவூர்
			7 நாகை காயிதே மில்லத்.
4	நான்காவது கட்டம்	1995-96	1 திருச்சிராப்பள்ளி
			2 புதுக்கோட்டை
			3 பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1996 பிப்ரவரி 15]

5. *1996-97* ஆம் ஆண்டில் ஐந்தாவது கட்டமாக எஞ்சியுள்ள 5 மாவட்டங்களில் (கன்னியாகுமரி, வ.உ. சிதம்பரனார், கடலூர்-வள்ளலார், விழுப்புரம்-ராமசாமி படையாச்சியார் மற்றும் திருவண்ணாமலை சம்புவராயர்) இத்திட்டம் அமுல்படுத்தப்படும்.

11--

மூலிகைப் பண்ணை அமைத்தல்

வினா எண் 108160--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் திருப்பத்தூர் தொகுதி ஏலகிரி கிராமத்தில் மூலிகைப்பண்ணை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

இல்லை.

12--

குடும்பக்கட்டுப்பாடு ஊக்கத் தொகையை உயர்த்துதல்

வினா எண் 108166--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் தம்பதிகளுக்கு வழங்கப்படும் ஊக்கத் தொகையை உயர்த்திக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் தம்பதிகளுக்கு வழங்கப்படும் ஊக்கத் தொகையை உயர்த்திக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

13--

குடும்ப நலக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை கட்டாயமாக்குதல்

வினா எண் 108311--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

குடும்ப நலக் கட்டுப்பாடு திட்டத்தை கட்டாயமாக்க சட்டம் கொண்டுவர மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

குடும்ப நலக் கட்டுப்பாடு திட்டத்தை கட்டாயமாக்க இவ்வரசிற்கு எண்ணம் எதுவும் இல்லை. எனவே, இது குறித்து சட்டம் கொண்டுவர மத்திய அரசை மாநில அரசு கேட்டுக்கொள்ளாது.

14--

மோட்டார் வாகன விபத்து வழக்குகள்

வினா எண் 46886--திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தருமபுரி மாவட்டத்தில் மோட்டார் வாகன விபத்து நஷ்டஈடு கோரி தாக்கலான வழக்குகளில் நிலுவையில் உள்ள வழக்குகள் எத்தனை?

(ஆ) அதை விரைவாக முடிப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விடை--

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

(அ) 5731

(ஆ) மாவட்டத்தில் மோட்டார் வாகன விபத்துக்கள் தொடர்பான வழக்குகளை சார்பு நீதிமன்றம் கிருஷ்ணகிரி, சார்பு நீதிமன்றம் தர்மபுரி ஆகியவைகள் விசாரித்து வருகின்றன. தற்போது

1996 பிப்ரவரி 15]

மாவட்டத்தில் தேங்கியுள்ள இம்மாதிரியான வழக்குகளை விசாரித்து நிலுவையில் உள்ள வழக்குகளை குறைக்கும் பொருட்டு கிருஷ்ணகிரி குற்றவியல் முதன்மை நீதிபதியும் விசாரிக்கலாம் என ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் Lok Adalats எனப்படும் மக்கள் தீர்ப்பாயங்கள் மாவட்ட தலைமையிடத்திலும் வருவாய் வட்ட தலைமையிடத்திலும் முறையாக ஏற்படுத்தப்பட்டு மோட்டார் வாகன விபத்து தொடர்பாக வழக்குகளை விசாரித்து வருகின்றன. மேற்சொன்ன நடவடிக்கைகளின் காரணமாக நிலுவையில் உள்ள வழக்குகள் விரைவில் முடிக்கப்பெறும் என நம்பப்படுகிறது.

15--

திருப்பத்தூர் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகப் பணிமனை

வினா எண் *99978*--**திரு. ஏ.கே.சி சுந்தரவேல்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூரில் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகப் பணிமனையை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை--

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

திருப்பத்தூரில் தற்போது உள்ள பணிமனையில் ரூபாய் ஒரு லட்சத்து தொண்ணூறு ஆயிரம் செலவில் பராமரிப்புக் கூடம் *1994-95* நிதியாண்டில் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் பணிமனையில் கான்கிரிட் தளம் அமைக்கும் பணி இந்த நிதியாண்டில் செயல்படுத்தப்பட உள்ளது.

16--

அவினாசி நரியம்பள்ளி மக்களுக்கு வழங்கப்படும் ரேஷன் பொருட்கள்

வினா எண் *22711*--**டாக்டர் மு. சீனியம்மாள்:** மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) அவினாசி நரியம்பள்ளி மக்கள் தொட்டக்காளம் புதூருக்கு சென்று ரேஷன் பொருள் வாங்க வேண்டியுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நரியப் பள்ளியில் மூன்று நாளும், தொட்டக்காளம் புதூரில் மூன்று நாளும் எனப் பிரித்து ரேஷன் பொருட்கள் தர அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், உணவு அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): கோயம்புத்தூர் மாவட்டம், நரியம்பள்ளி புதூரில் 301 குடும்ப அட்டைகளுடன் பகுதி நேரக் கடை துவக்கப்பட்டு 15 செப்டம்பர் 1994 முதல் செயல்பட்டு வருகின்றது.

17--

குடும்ப அட்டைகளை சோதனையிடல்

வினா எண் 41683--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தமிழகத்தில் பல இடங்களில் குடும்ப அட்டைகளை சோதனையிடச் சென்ற அலுவலர்கள் குடும்பத்திலுள்ளவர் வெளியில் சென்றிருப்பதால் பல குடும்ப அட்டைகளை ரத்து செய்துள்ளதை மீண்டும் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், உணவு அமைச்சர்:

போலி குடும்ப அட்டைகளை களையும் பொருட்டு மாநிலம் முழுவதிலும் மாதத்திற்கு ஒன்று அல்லது இரண்டு நியாய விலைக் கடைகள் வீதம் தணிக்கைக்கு எடுத்துக் கொண்டு, அக்கடையில் பதியப்பட்டுள்ள குடும்ப அட்டைகள் முழுவதும் 100% தணிக்கை செய்யப்படுகிறது. அத்தணிக்கையின் போது வீடு வீடாகச் சென்று தணிக்கை செய்யப்படுகிறது. அவ்வாறு தணிக்கைக்குச் செல்லும் பொழுது குடும்பத்தில் உள்ளவர்கள் வெளியே சென்றிருந்தால் அவர்கள் வெளியே சென்றிருக்கிறார்கள் என்ற ஒரே காரணத்திற்காக மட்டும் பொருள் நிறுத்தம் செய்யப்படுவதில்லை. அவர்கள் குறிப்பிட்ட முகவரியில் வசிக்கவில்லையென்றால் மட்டுமே பொருள் நிறுத்தம் செய்யப்படுகிறது. அவ்வாறு பொருள் நிறுத்தம் செய்யப்படுகின்ற

1996 பிப்ரவரி 15]

குடும்ப அட்டைகளுக்கு அவர்களுடைய முறையீட்டின்படி மீண்டும் தணிக்கை செய்து பொருள் வழங்க உத்தரவிடப்படுகிறது.

18--

பெரிய மோட்டூர் ஊராட்சிக்கென தனி கூட்டுறவு நியாய விலைக் கடை

வினா எண் 47448--திரு. ஏ.கே.சி சுந்தரவேல்: மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி ஜோலார்ப்பேட்டை ஒன்றியம், பெரிய மோட்டூர் ஊராட்சிக்கென தனியாக கூட்டுறவு நியாயவிலைக்கடை திறக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், உணவு அமைச்சர்:

திருப்பத்தூர் தொகுதி, பொன்னேரி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்தும் பொன்னேரி தலைமைக் கடையின் விவகார எல்லையில் பெரிய மோட்டூர் கிராமம் உள்ளது. பொன்னேரி தலைமையகக் கடையில் மொத்தம் 974 குடும்ப அட்டைகள் உள்ளன. பொன்னேரி தலைமையகக் கடைக்கும், பெரிய மோட்டூர் கிராமத்திற்கும் இடைப்பட்ட தூரம் 2½ கி.மீ. இரு கிராமங்களுக்கும் இடையே இயற்கை இடர்பாடுகள் ஏதுமில்லை. பெரிய மோட்டூர் கிராமத்தில் 210 குடும்ப அட்டைகளே உள்ளன. எனவே, பெரிய மோட்டூர் கிராமத்தில் தனியாக ஒரு புதிய நியாய விலைக்கடை அமைக்கவோ பகுதி நேரக்கடை அமைக்கவோ சாத்தியக் கூறுகள் இல்லை.

19--

தொட்டபெட்டரையில் நியாய விலைக் கடை துவங்குதல்

வினா எண் 48511--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தருமபுரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், தொட்டபெட்டரை கிராமத்தில் பொதுமக்களால் இலவசமாகக் கட்டிக் கொடுக்கப்பட்ட கட்டிடத்தில் கூட்டுறவு நியாய விலைக்கடையை துவக்குவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை--

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், உணவு அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், தொட்டபெட்டரை கிராமத்தில் பொதுமக்களால் இலவசமாகக் கட்டிக் கொடுக்கப்பட்ட கட்டிடத்தில் பகுதி நேரக் கடை துவக்க இசைவு அளிக்கப்பட்டு 30 ஜூன் 1995 முதல் செயல்பட்டு வருகிறது.

20--

நதிக்கரைகளில் படித்துறை அமைத்தல்

வினா எண் 15176--**திரு. பா. *கலியபெருமாள்:*** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருக்காட்டுப் பள்ளியில், காவிரியின் வலது கரையிலும் குடமுருட்டியின் வலது கரையிலும் படித்துறை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை--

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

திருக்காட்டுப் பள்ளியில், காவிரி மற்றும் குடமுருட்டி வலது கரைகளில் தேவையான இடங்களில் ரிவிட்மெண்டும் படித்துறையும் அமைத்துத்தர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

21--

அரவட்லா மலைப்பாறை

வினா எண் 77436--**டாக்டர் ஜெ. *பரந்தாமன்:*** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், அரவட்லா மலைப்பாதை கிராம சாலைகள் திட்டத்தில் சீரமைக்கப்படுமா?

விடை--

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1996 பிப்ரவரி 15]

அரவட்லா மலைப்பாதை சாலை கி.மீ. 1/8-10/0 வரையில் 8.20 கி.மீ. நீளத்திற்கு மேம்பாடு செய்வதற்கு தோராயமாக ரூ.35.00 இலட்சம் தேவைப்படும். தொகை அதிகம் தேவைப்படுவதால் இச்சாலையினை இனிவரும் ஆண்டுகளில் முன்னுரிமை அடிப்படையில் படிப்படியாக அரசின் நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப தகுதியுள்ள திட்டத்தில் சேர்க்கப்பட்டு மேம்பாடு செய்வதற்கு தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை) கிழக்கு கடற்கரை சாலை கிராம சாலை அவர்களால் பரிந்துரை செய்ய ஆவன செய்யப்படும்.

22--

அரவக்குறிச்சியில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலம் வீடுகள் கட்டுதல்

வினா எண் 47800--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரவக்குறிச்சியில் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரவக்குறிச்சியில் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

23--

புறம்போக்கு நிலத்தில் அடுக்குமாடி வீடுகள்

வினா எண் 73325--**டாக்டர் வெ. சரோஜா:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சேலம் மாவட்டம், சங்ககிரி-கொல்லுமாரிக் காட்டில் இருக்கும் 5 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலத்தில் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் அடுக்குமாடி வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை--

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

24--

பூம்புகார் விற்பனைக் கூடங்கள் அமைத்தல்

வினா எண் 87630--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சர்வதேச கண்காட்சிகளில் பூம்புகார் விற்பனைக் கூடங்கள் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

சர்வதேச கண்காட்சிகளில் பூம்புகார் விற்பனைக்கூடங்கள் அமைப்பதற்கான விசாரணை ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

25--

திருப்பத்தூரில் ஒழுங்குமுறை விற்பனை மையம் அமைத்தல்

வினா எண் 40329--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருப்பத்தூர் நகரில் காய்கறி, பழங்களுக்கான ஒழுங்குமுறை விற்பனை மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

1996 பிப்ரவரி 15]

வடஆற்காடு விற்பனைக் குழுமத்தைச் சார்ந்த திருப்பத்தூர் நகரில் உள்ள திருப்பத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் மூலம் அறிக்கையிடப்பட்ட வேளாண் விளைபொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. வடஆற்காடு மாவட்டத்தில், திருப்பத்தூர் ஒழுங்கு முறைக்கூடம் உட்பட காய்கறிகள் மற்றும் பழங்கள் இதுவரையில் அறிக்கையிடப்படவில்லை. வடாற்காடு மாவட்டம், திருப்பத்தூர் வட்டத்தில் மாம்பழம், கொய்யா, வாழைப்பழம், பலா, திராட்சை மாதுளை, சப்போட்டா, பப்பாளி, எலுமிச்சை போன்ற பழவகைகளும் மற்றும் கத்தரிக்காய், தக்காளி, வெண்டைக்காய், பீன்ஸ் மொச்சை மற்றும் அவரை வகை காய்கறிகள் பயிரிடப்படுகின்றன. எனவே, வடாற்காடு மாவட்டத்தில், திருப்பத்தூர் ஒழுங்குமுறைக் கூடம் உட்பட காய்கறி மற்றும் பழவகைகளை அறிவிக்கையிட தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. காய்கறி மற்றும் பழவகைகள் அறிவிக்கையிடப்பட்டதும் திருப்பத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் காய்கறி மற்றும் பழவகைகள் விற்பனை மேம்படுத்தப்படும்.

26--

கொடுமுடி பேரூராட்சியில் மஞ்சள் கிடங்கு அமைத்தல்

வினா எண் *48404*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி பேரூராட்சியில் மஞ்சள் சேமிப்பு கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடியில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் மத்திய மாநில உதவியுடன் ஓர் ஊரகக் கிடங்கு (Rural Godown) தற்போது கட்டப்பட்டு வருகின்றது. இதில் வேளாண் பெருங்குடி மக்கள் மஞ்சள் மட்டுமின்றி இதர வேளாண்மை விளைபொருட்களையும் இருப்பு வைத்து பொருளீட்டு கடன் பெற வசதி உள்ளது. கிடங்கு கட்டி முடிந்ததும் மஞ்சள் விளைபொருளை சேமித்து இருப்பு வைக்க உரிய வசதி செய்யப்படும். வரும் நிதிஆண்டுகளில் கொடுமுடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் கூடுதல் கிடங்கிகள் கட்டவும் ஆவன செய்யப்படும்.

27--

கரூரிலுள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் விவசாயிகள் தங்கும் விடுதி அமைத்தல்

வினா எண் 52069--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருச்சிராப்பள்ளி மாவட்டம், கரூரில் உள்ள ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்தில் விவசாயிகள் தங்கும் விடுதி அமைப்பதற்கு அரசுடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை--

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

கரூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கென 10.98 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டு போதிய இடவசதி இருந்தாலும், கரூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூட வருவாய் மற்றும் திருச்சி விற்பனைக்குழுவில் நிதிநிலை இடந்தராத காரணத்தால், விவசாயிகள் தங்கும் விடுதி இதுவரை கட்டப்படவில்லை. வரும் நிதி ஆண்டுகளில் விளைபொருட்கள் வரத்து அதிகரித்து, நிதி நிலை உயரும்போது விவசாயிகள் தங்கும் விடுதி கட்ட ஆவன செய்யப்படும்.

28--

அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் பருத்தி அரவை ஆலை அமைத்தல்

வினா எண் 52070--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பெரியார் மாவட்டம், அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் பருத்தி அரவை ஆலை அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் பருத்தி அரவை ஆலை அமைப்பது குறித்து தற்போதைக்கு கருத்து எதுவும் பரிசீலனையில்

1996 பிப்ரவரி 15]

இல்லை. அது தவிர பருத்தி அரவை ஆலை அமைத்திட சட்டம் மற்றும் விதிகளிலும் வழிவகை இல்லை என வேளாண்மை விற்பனை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

29--

மூலனூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் விவசாயிகளுக்கென தங்கும் விடுதி கட்டுதல்

வினா எண் *52074*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பெரியார் மாவட்டம், மூலனூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விவசாயிகள் தங்குவதற்காக தங்கும் விடுதி கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

பெரியார் மாவட்டம், மூலனூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விவசாயிகள் தங்குவதற்காக தங்கும் விடுதி கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தப் பணியினைத் துரிதமாக முடிக்க பெரியார் விற்பனைக்குழு செயலாளர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

30--

கொடுமுடி ஒன்றிய விளைபொருள் விற்பனைக் கூடத்திற்குக் கட்டிடம்

வினா எண் *53562*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியத்தில் விளை பொருள் விற்பனைக் கூடத்திற்கு கட்டிடம் கட்ட அரசு முன்வருமா?

விடை--

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

[1996 பிப்ரவரி 15

பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சித் தொகுதி, கொடுமுடியில் அமைந்துள்ள விளைபொருள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு ஏற்கனவே 8.99 ஏக்கர் நிலம் சொந்தமாக வாங்கப்பட்டு, அங்கு அலுவலகக் கட்டிடம், வியாபாரக் கொட்டகை, உலர்களம், ஆழ்துளைக் கிணறு, கழிவறை போன்ற கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டு விற்பனைக்கூடம் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. இவை தவிர 1994-95 ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட ரூ.5 இலட்சம் செலவில் விவசாயிகள் ஓய்வு அறை, ரூ.95,000 செலவில் சுற்றுச்சுவர், ரூபாய் ஒரு இலட்சம் செலவில் கப்பிச் சாலைகள் மற்றும் ரூ.15,000 செலவில் சாலைப் பாலம் போன்ற கட்டுமானப்பணிகள் முடிவுறும் தருணத்தில் உள்ளன. மேலும் கொடுமுடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு ஊரகக் கிட்டங்கி கட்டுமானப் பணி ரூ.8 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மத்திய அரசு அனுமதி வழங்கி உள்ளது. முதல் தவணையாக மத்திய அரசு ஒரு இலட்சமும், மாநில அரசு உதவியாக ரூ.2 இலட்சமும் அரசு ஆணை எண் 314, வேளாண்மைத் துறை, நாள் 3-6-1994-ன் படி அனுமதிக்கப்பட்டுள்ளது. இவை தவிர தேவைப்படும் கூடுதல் வசதிகள் வரும் நிதி ஆண்டுகளில் படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

31--

தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் எண்ணெய் வித்துக்கள்

வினா எண் 54196--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தமிழ்நாட்டில் எண்ணெய் வித்துக்கள் எவ்வளவு உற்பத்தி செய்யப்படுகின்றன?

விடை--

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

1994-95-இல் 14.88 இலட்சம் ஹெக்டேரில் பயிர் செய்யப்பட்டு 21.59 இலட்சம் டன் எண்ணெய் வித்து உற்பத்தி செய்யப்பட்டது.

உண்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1996 பிப்ரவரி 15]

32--

வேளாண்மைக் கருவிகளை பழுது பார்த்து சோதனை செய்ய தொழிற்கூடம்

வினா எண் 97775--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

வேளாண்மைக் கருவிகளைப் பழுது பார்ப்பதற்கும், சோதனை செய்வதற்கும் தொழிற்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

வேளாண்மைக் கருவிகளைப் பழுது பார்ப்பதற்குத் தொழிற்கூடம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை. வேளாண்மைக் கருவிகளைத் தனியார் பணிமனைகளில் பழுது பார்த்துக் கொள்ள வழிவகைகள் உள்ளன. இவை தவிர 'என்கோபெட்' நிறுவனத்துடன் இணைந்துள்ள 'அக்ரோ சர்வீஸ்' சென்டர்களில் வேளாண்மைக் கருவிகளைப் பழுது பார்க்கலாம். எனவே, இவற்றைப் பழுது பார்க்க அரசு தொழிற்கூடம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

வேளாண்மைக் கருவிகளை சோதனை செய்து பார்க்கத் தமிழ்நாட்டின் அரசுத் துறையில் வசதிகள் இல்லை. ஆனால் மைய அரசு வேளாண்மைக் கருவிகளை சோதிப்பதற்கான ஒரு அமைப்பினை திருச்சி மாவட்டத்தில் நிறுவ இசைவளித்துள்ளது. இதற்கான தொடர் நடவடிக்கை அரசால் எடுக்கப்பட்டு வருகிறது.

33--

ஆதிதிராவிட மகளிர் பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள்

வினா எண் 40005–**டாக்டர் வெ. சரோஜா:** *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--*

(அ) தமிழகத்தில் எத்தனை ஆதிதிராவிட மகளிர் பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் இயங்குகின்றன.

(ஆ) நிலவள வங்கிகள் மூலம் வழங்கும் கடன்களில் 30 சத விகிதம் ஆதிதிராவிட மகளிருக்கு கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்:

(அ) தமிழகத்தில் தற்சமயம் 51 ஆதிதிராவிட மகளிர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன.

(ஆ) பிரதம நிலவள வங்கிகள் முக்கியமாக நில மேம்பாட்டு காரியங்களுக்கு கடன் வழங்கி வருவதோடு விவசாய மற்ற காரியங்களுக்கும், பண்ணைசாரா காரியங்களுக்கும் கடன்கள் வழங்கி வருகின்றன. இவ்வாறான கடன்கள் சொத்து ஈட்டின் பேரில் வழங்கப்படுகின்றன. எனினும் சொத்துரிமையற்ற விவசாய கூலி தொழிலாளர்களுக்கு அரசு உத்தரவாதத்தின் அடிப்படையிலும் இவ்வாறான கூலி தொழிலாளர்களுக்கு அவர்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கான தொழில் புரிய தேவையான கடனுதவிகளையும் நிலவள வங்கிகள் செய்து வருகின்றன. இந்நிலையில் சொத்துரிமை பெற்ற அனைவரும் ஆண் பெண் பாகுபாடின்றி நிலவள வங்கிகளில் கடன் பெறும் வாய்ப்புள்ளது. எனவே நிலவள வங்கிகள் மூலம் மகளிருக்கு மட்டில், குறிப்பாக ஆதிதிராவிட மகளிருக்குக் கடன் வழங்குவதற்கான பிரத்தியேகமான குறியீடு நிர்ணயம் ஏதும் தற்சமயம் இல்லை.

34--

வேலூரில் தானியங்கி நிலையம் அமைத்தல்

வினா எண் 40998--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டம், வேலூரில் தானியங்கி பால் நிலையம் அமைக்கப்படுமா?

விடை--

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்:

வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டம், வேலூரில் தானியங்கி பால் விற்பனை நிலையம் அமைக்க தற்போது செயல் திட்டம் எதுவுமில்லை.

1996 பிப்ரவரி 15]

35--

திருப்த்தூர் தொகுதியில் புதிய பால் வழித்தடங்கள் ஏற்படுத்தல்

வினா எண் *41001*--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் பால் உற்பத்தியை அதிகப்படுத்த புதிய பால் வழித்தடங்கள் ஏற்படுத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை--

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்:

வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் தற்சமயம் புதிய பால் வழித்தடங்கள் ஏற்படுத்தும் திட்டம் ஏதும் இல்லை.

36--

பட்டுக்கோட்டையில் ஆவின் தானியங்கி பால் நிலையம்

வினா எண் *71557*--**கி. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா---

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையில் ஆவின் தானியங்கி பால் நிலையம் ஆரம்பிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையில், தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தால் தற்சமயம் நாள் ஒன்றுக்கு 287 லிட்டர் பால்தான் விற்பனை செய்யப்படுகின்றது. எனவே தற்சமயம் பட்டுக்கோட்டையில் ஆவின் தானியங்கி பால் நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

37--

ரப்பர் வியாபாரிகள் விவரம்

வினா எண் 35150--**திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:** மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் வியாபாரிகள் எவ்வளவு பேர் உள்ளனர்?

(ஆ) அவர்களில் எத்தனைபேர் வணிகவரித்துறையில் தங்கள் பெயரை பதிவு செய்து வரிவிதிப்பு (Registration) எண் பெற்றுள்ளனர்?

விடை--

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிகவரிகள் துறை அமைச்சர்:

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் இரப்பர் வியாபாரிகள் 170 பேர்கள் உள்ளனர்.

(ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டம், 1959ன் கீழ் பதிவு செய்து வரிவிதிப்பு எண் பெற்றிருந்த 94 நபர்களில் 40 பேர்களின் பதிவுச் சான்று இரத்து செய்யப்பெற்றுவிட்டது. எனவே, தற்போது வரி விதிப்பு எண் பெற்றுள்ளவர்கள் 54 பேர் ஆவர்.

38--

செஞ்சி வட்டத்தில் நூற்பாலை தொடங்குதல்

வினா எண் 44246--**திரு. எஸ். எஸ். ஆர். இராமதாஸ்:** மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:--

1996 பிப்ரவரி 15]

(அ) செஞ்சி வட்டத்தில் நூற்பாலை ஒன்றைத் தொடங்குவதற்கான திட்டம் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டும் இதுவரையில் அது தொடங்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் விரைவில் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை--

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர்:

(அ) செஞ்சி வட்டத்தில் நூற்பாலை ஒன்றைத் தொடங்குவதற்கான திட்டம் ஏதும் அரசால் இதுவரை அனுமதிக்கப்படவில்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

39--

திருப்பத்தூரில் கலை அரங்கம் கட்டுதல்

வினா எண் 108292--**திரு. ஏ.கே. சி. சுந்தரவேல்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் நகராட்சியில் செய்தி மற்றும் சுற்றுலாத்துறை மூலம் கலை அரங்கம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாணபுமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்:

இயலாது.

40--

நடுநிலைப்பள்ளிகளை உயர்நிலைப்பள்ளிகளுடன் இணைக்கும் திட்டம்

வினா எண் *36979*--**திரு. ஆ. சுப்புரத்தினம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நடுநிலைப்பள்ளிகளை அருகில் உள்ள உயர்நிலைப்பள்ளிகளுடன் இணைக்கும் திட்டம் தற்போது எந்நிலையில் உள்ளது?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

இத்திட்டத்தை அரசு தற்பொழுது தற்காலிகமாக தள்ளிவைக்கத் தீர்மானித்துள்ளது.

41--

மதுக்கூர் ஒன்றியம், ஆலந்தூர் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம்.

வினா எண் *43523*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம் மதுக்கூர் ஒன்றியம் ஆலந்தூர் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டித்தர அரசின் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

அரசின் செயற்குறிப்பு ஏதுமில்லை.

42--

திருவட்டார் தொகுதி பள்ளிகளுக்கு கூடுதல் கட்டிட வசதி

வினா எண் *44785*--**திரு. இரா. அப்பு நடேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் தொகுதியில் வியன்னூர் உண்ணியூர் கோணம், திருவரம்பு, செருப்பாலூர் ஊர்களிலுள்ள அரசு

உயர்நிலைப் பள்ளிகளுக்கு போதிய கூடுதல் கட்டிட வசதி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

அரசாணை எண் 741, கல்வி, நாள் 30-8-1994-ன்படி திட்ட மதிப்பீட்டில் 50 சதவீதம் தொகையை பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் செலுத்த முன்வரும் பள்ளிகளுக்கு வகுப்பறை கட்டிடம் கட்டித் தரப்படும். ஆனால் மேற்படி பள்ளிகள் இத்திட்டத்தில் 50 சதவீதம் தொகையை பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் கட்ட முன்வரவில்லை. உள்ளியூர் கோணம் அரசு நடுநிலைப் பள்ளியில் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது.

43--

மேலகரத்திலுள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குதல்

வினா எண் 48998--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், தென்காசி ஊராட்சி ஒன்றியம், மேலகரத்தில் இயங்கிவரும் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

தற்பொழுது அரசின் ஆய்வில் இல்லை.

44--

தாராபுரத்தில் பொறியியல் கல்லூரி துவங்குதல்

வினா எண் 48999--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பெரியார் மாவட்டம், தாராபுரத்தில் பொறியியல் கல்லூரி துவங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

அரசு பொறியியல் கல்லூரி தாராபுரத்தில் துவக்க திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

45--

ஊத்துக்குளி அரசு மேல்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானத்திற்கு சுற்றுப்புற சுவர்.

வினா எண் *49005*--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பெரியார் மாவட்டம், ஊத்துக்குளி அரசினர் மேல்நிலைப் பள்ளி விளையாட்டு மைதானத்திற்கு சுற்றுப்புறச் சுவர் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

ஊத்துக்குளி அரசினர் மேல்நிலைப் பள்ளி விளையாட்டு மைதானத்திற்கு தற்போது தற்காலிகமாக தாவர முள்வேலி அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி பள்ளிக்கு நிரந்தர சுற்றுச்சுவர் கட்ட தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

46--

நூலகம் அமைத்தல்

வினா எண் *54430*--திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி மொடக்குறிச்சி ஒன்றியம் பழமங்கலம் ஊராட்சி, புதூர் குட்டப்பாளையம், பழமங்கலம் ஊராட்சி ஆதிதிராவிடர் காலனி மற்றும் செம்மாண்டம் பாளையம் ஆகிய கிராமங்களில் நூலகம் அமைப்பது குறித்து செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

1996 பிப்ரவரி 15]

இந்த கிராமங்களில் போதுமான மக்கள் தொகை இல்லாத காரணத்தால் பொது நூலக விதிகளின்படி கிளை நூலகம் திறக்க வழிவகையில்லை. இருப்பினும், அக்கிராம மக்கள் கீழ்க்காணும் வசதிகளை செய்து தந்தால், அக்கிராமங்களில் பகுதி நேர நூலகம் அமைத்துத்தர தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

நிபந்தனைகள்:

1. பகுதிநேர நூலகம் இயங்க வாடகையில்லாத நல்ல நிலையிலுள்ள கட்டிடம் ஒன்றினை கிராம மக்கள் வழங்கவேண்டும்.

2. பகுதிநேர நூலகத்திற்குக் கட்டிடம் கட்ட பத்து சென்ட் காலிமனை இலவசமாக மாவட்ட நூலக ஆணைக் குழுவிற்கு பொது மக்களால் பத்திரம் பதிவு செய்துத் தரப்பட வேண்டும்.

3. ரூ. 2,000 மதிப்புள்ள, நூலகத்திற்கு தேவையான தளவாடங்களோ அல்லது நிதியோ இலவசமாக வழங்கப்பட வேண்டும்.

4. பகுதிநேர நூலகத்திற்குத் குறைந்தது நூறு உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

5. ரூ. 1,000 வீதம் செலுத்தி புரவலர் ஒருவர் ஒவ்வொரு பகுதிநேர நூலகத்திலும் சேர்க்கப்பட வேண்டும்.

47--

சேலம் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம்

வினா எண் *72344*--டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சேலம் அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

சேலம் அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

48--

பீடித் தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயம்

வினா எண் *47983*--**திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பீடித் தொழிலுக்கு கிராமப்புறங்களில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் அளிக்கப்படும் கூலி நிர்ணயத்தை முறையாக கொடுக்காமல் இருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) சம்பந்தப்பட்டவர்கள்மீது நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) இல்லை. தமிழ்நாட்டில் பீடிச் சுற்றும் தொழிலுக்கு மாநிலம் தழுவிய கூலி விகிதம் மறு நிர்ணயம் செய்யப்படுகிறது. இத்தொழிலுக்கு அரசாணை எண் 47, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை , நாள் 21-7-1995ல் குறைந்த பட்ச கூலி நிர்ணயம் செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவ்வாணையின்படி ஒவ்வொரு தொழிலாளியும் குறைந்தபட்ச கூலியாக சுமார் ரூ. 31.00 வரை பெறுகிறார்கள்.

(ஆ) கேள்வி எழவில்லை.

49--

கூட்டுறவு தொழிற்சாலைகள் அமைத்தல்

வினா எண் *87627*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பீடித் தொழிலாளர்களுக்காக கூட்டுறவு தொழிற்சாலைகள் அமைப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

1996 பிப்ரவரி 15]

விடை--

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்:

பீடித் தொழிலாளர்களுக்காக கூட்டுறவு தொழிற் சாலைகள் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

50--

அண்ணா மாவட்டத்தில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 8045--திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் அண்ணா மாவட்டத்தில் நடப்பு நிதியாண்டில் செயற்படுத்த மேற்கொள்ளப்பட்ட திட்டங்களின் விவரம் என்ன?

(ஆ) இவற்றிற்காக அரசு செலவிடும் தொகை எவ்வளவு?

விடை--

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

(அ) 1991-92-ல் திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் கூட்டுக்குடிநீர்த் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் இரண்டு:

(1) பசுபதிபுதூர் கூட்டுக் குடிநீர் திட்டம்.

(2) திருக்குராணம் மற்றும் ஐந்து குடியிருப்புகள் கூட்டுக் குடிநீர் திட்டம்.

(ஆ) பசுபதிபுதூர் கூட்டுக் குடிநீர் திட்ட மதிப்பீடு ரூ. 23.50 இலட்சங்கள். 30-6-1994 வரை ரூ. 25.16 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளது.

திருக்குராணம் கூட்டுக் குடிநீர்த் திட்ட மதிப்பீடு ரூ. 6.67 இலட்சங்கள். 30-6-1994 வரை ரூ. 6.72 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளது.

51--

குளத்தில் படிக்கட்டு கட்டுதல்

வினா எண் 12413-**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பேராவூரணி ஒன்றியம், பின்னவாசல் ஆதிதிராவிடர் தெருவிலுள்ள குளத்தில் படிக்கட்டு கட்டி வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

பேராவூரணி ஒன்றியம், பின்னவாசல் ஆதிதிராவிடர் தெருவிலுள்ள குளத்தில் படித்துறை அமைக்கும் பணி 93-94-ம் ஆண்டு ரூ. 18,476 செலவில் செய்து முடிக்கப்பட்டு விட்டது.

52--

கொடுமுடி ஒன்றியத்தில் தெருவிளக்கு அமைத்தல்

வினா எண் 19806-**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், சென்னசமுத்திரம், கொல்லம் புதுப்பாளையத்தில் தெருவிளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

சென்ன சமுத்திரம் பேரூராட்சிக்குட்பட்ட கொல்லம் புதுப்பாளையத்திற்கு ஏற்கனவே கீழ்க்கண்ட விபரப்படி தெருவிளக்கு அமைக்கப்பட்டுள்ளது:

1. கொல்லம் புதுப்பாளையம் ஊர் 8 (நான்கடி குழல்விளக்கு)
2. அரிசன காலனி 6 (நான்கடி குழல் விளக்கு)

1996 பிப்ரவரி 15]

3. ஆதிதிராவிடர் காலனி 4 (நான்கடி குழல் விளக்கு)

4. வாய்க்கால் மேடு 6 (நான்கடி குழல் விளக்கு)

1994-95-ஆம் ஆண்டு சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப புதியதாக 12 குழல் விளக்குகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

53--

சாலையை தார்சாலையாக மாற்றுதல்

வினா எண் 20286-திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பூதலூர் நாகப்பட்டினம், கடலூர் சாலையில் இருந்து பிரிந்து ஆவாரம்பட்டி, நத்தவனம்பட்டி, பெரிய முத்தாண்டிப்பட்டி வழியாக கடலூர் சாலையில் இணையும் சாலையை தார்ச் சாலையாக மாற்றியமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையின் மொத்த நீளம் 5.80 கி.மீ. 1992-93 மற்றும் 1993-94-ல் இச்சாலையில் கி.மீ. 2/0-5/0 வரையிலும் கருங்கல் ஜல்லி சாலையாக ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மாற்றியமைக்கப்பட்டது. இவ்வொன்றியப் பொது நிதியின் நிலைமை போதுமானதாக இல்லாததால் இச்சாலையை தார் சாலையாக மாற்றும் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

54--

மேல்நிலைத் தொட்டியை அகற்றுதல்

வினா எண் 22228--திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் ஒன்றியத்தில் ஓடைமேட்டில் கட்டியுள்ள மேல்நிலைத் தொட்டி இடிந்து விழும் நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அத்தொட்டியை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை--

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

(ஆ) ஆம். பெரியார் மாவட்டம், அந்தியூர் ஒன்றியம், ஓடைமேட்டில் கட்டியுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுது பார்க்கப்பட்டு தற்போது நல்ல நிலையில் உள்ளது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

55--

குடிநீர் மேல்நிலைத் தொட்டி கட்டுதல்

வினா எண் 22614--திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சேலம் மாவட்டம், கெங்கவல்லி ஒன்றியம், ஆணையாம்பட்டி ஆதிதிராவிடர் தெருவிற்கு தனியாக குடிநீர் மேல்நிலைத் தொட்டி கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை--

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) போதிய நீர் ஆதாரம் ஏற்படுவதற்கு வகை செய்யப்பட்டு, நீராதாரம் கிடைக்கப்பெற்ற பின்பு, மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி கட்டி குடிநீர் வசதி செய்துதரும் திட்டம் 1995-96-ம் நிதியாண்டில் எடுத்துக் கொள்ளப்படும்.

56--

திருப்பத்தூர் தொகுதியில் நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டுதல்.

வினா எண் 23655--திரு. ஏ.கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

1996 பிப்ரவரி 15]

திருப்பத்தூர் தொகுதியில் *1992*ஆம் ஆண்டில் உயர்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் எத்தனை கட்டி முடிக்கப்பட்டது?

(ஆ) 1993-ஆம் ஆண்டு எத்தனை உயர்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட உள்ளன?

விடை--

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

(அ) வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் *1992*-ம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மொத்தம் ஆறு *(6)*, அவை:--

1. சோமநாயக்கன்பட்டி, ஜோலார்பேட்டை ஒன்றியம்.
2. வீரப்பள்ளி, ஜோலார்பேட்டை ஒன்றியம்.
3. திரியாலம், ஜோலார்பேட்டை ஒன்றியம்
4. தாமலேரி முத்தூர், ஜோலார்பேட்டை ஒன்றியம்
5. புதுப்பேட்டை, ஜோலார்பேட்டை ஒன்றியம்.
6. குன்னத்தூர், ஜோலார்பேட்டை ஒன்றியம்.

(ஆ) 1993-ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மொத்தம் *(3)*, அவை:-

1. ஜெயபுரம், ஜோலார்பேட்டை ஒன்றியம்.
2. அண்ணான்பட்டி, திருப்பத்தூர் ஒன்றியம்.
3. கருப்பனூர், திருப்பத்தூர் ஒன்றியம்.

57--

புதிய சாலை ஏற்படுத்துதல்

வினா எண் *23959*--டாக்டர் மு. **சீனியம்மாள்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) அவினாசி ஒன்றியம், லூர்துபுரம் மங்கரசு வலையபாளையம், பேரநாயக்கன்பாளையம் வரை புதிய சாலை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும்?

விடை--

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): இச்சாலையை மேம்பாடு செய்யும் திட்டம் இந்த ஆண்டில் இல்லை.

58--

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 23961--**டாக்டர் மு. சீனியம்மாள்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) அவிநாசி ஒன்றியம் மங்கரசுவலையபாளையத்திலிருந்து ஆலத்தூர் பிரிவு வரை ஊராட்சி சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

விடை--

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): இச்சாலையை கிராம சாலைகள் மேம்பாடு திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

59--

முதலிப்பாளையம் பிரிவு சாலை அமைத்தல்

வினா எண் 23966--**டாக்டர் மு. சீனியம்மாள்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

1996 பிப்ரவரி 15]

(அ) அவினாசித் தொகுதி பாப்பான்குளம் ஊராட்சி சேவூர் நடுவச்சேரி சாலையில் முதலிப்பாளையம் பிரிவு சாலை அமைப்பது குறித்து அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை--

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): இச்சாலையை மேம்பாடு செய்ய ஊராட்சி ஒன்றியப் பொது நிதியில் போதிய வசதியின்மையால் இப்பணி எடுத்துச் செய்ய இயலாது.

60--

பாலங்கள் கட்டுதல்.

வினா எண் *24474*--**திரு. வே. பெரியசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) அத்தாணி பெருமாபாளையம் சாலையில் இரு இடங்களில் சிறிய பாலங்கள் கட்டினால்தான் போக்குவரத்து வசதி செய்து கொடுக்க முடியும் என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது இரு பாலங்களும் கட்டப்படும்.

விடை--

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): இச்சாலையில் கி.மீ. 1/4-ல் கட்டப்படவேண்டிய சிறுபாலம் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்ட கருத்துருவில் ரூ. 1 இலட்சம் தொகையில் சேர்க்கப்பட்டு பாலம் கட்டும் பணி அந்தியூர் ஊராட்சி ஒன்றியத்தினால் பணி துவங்கப்பட உள்ளது.

61--

பவானி ஆற்றில் படிக்கட்டு கட்டுதல்

வினா எண் *26017*--**திரு. வே. பெரியசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

[1996 பிப்ரவரி 15

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் ஒன்றியம், குப்பாண்டாம்பாளையம் ஊராட்சி, நஞ்சுண்டாபுரம் மக்கள், பவானி ஆற்றில் குளிக்கும் இடத்தில் படிக்கட்டு இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம், எனில் எப்பொழுது படிக்கட்டு கட்டப்படும்?

விடை––

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): பவானி ஆற்றில் படிக்கட்டு கட்ட குப்பாண்டாம்பாளையம் ஊராட்சியும், அந்தியூர் ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலும் போதுமான நிதி வசதி இல்லை. ஆதலால் தற்சமயம் இப்பணியை செய்ய இயலாது.

62––

சாலையை இணைத்தல்

வினா எண் 28986––திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா––

புதுக்கோட்டை தொகுதி, சோத்துப்பாளை சாலையில் இருந்து சொக்கநாதம்பட்டி வழியாக பெரம்பலூர் மானாமதுரை சாலையை இணைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை––

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பெரம்பலூர் மானாமதுரை சாலையில் பிரியும் சொக்கநாதம்பட்டி சாலை கி.மீ. 0/0-2/6' ஆகும். இந்த சாலையில் கி.மீ. 0/0-1/0 வரையுள்ள பகுதியினை ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் (1994–95) கீழ் கற்தளமாக மாற்றி அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

1996 பிப்ரவரி 15]

63--

ஒசூர் தொகுதியில் பாலம் கட்டுதல்

வினா எண் *32993*--**திரு. கே. ஏ. மனோகரன்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஒசூர் தொகுதி, சூளகிரி போகிபுரம் சாலையில் *0/8* கி.மீ. அருகே பாலம் கட்ட அரசு முன்வருமா?

விடை--

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

இப்பாலம் சூளகிரி போகிபுரம் சாலை *0/8* கி.மீ. சின்னார் நீர் பிடிப்புப் பகுதியில் கட்டப்பட வேண்டும். இவ்விடத்தின் நீர் பிடிப்பு பகுதியின் நீளம் *100* மீட்டர் ஆகும். இதனை உயர்த்தி, ஒரு கண் கொண்ட உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு தோராயமாக ரூ. *30.00* லட்சம் தேவைப்படும். தற்சமயம் இவ்வேலையை எடுத்துச் செய்ய சாத்தியக்கூறு இல்லை.

64--

புவனகிரி தொகுதியில் தார்சாலை அமைத்தல்

வினா எண் *33072*--**செல்வி கோ. மல்லிகா:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம் காரைக்கட்டு சாவடி, பொன்னத்திட்டு வரை தார்ச்சாலையாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை--

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) இச்சாலையில் கி.மீ. *0/0-0/8* வரை உள்ள பகுதி *1991-92*-ம் ஆண்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் தார் சாலை

பரப்பு வரை மேம்பாடு செய்யப்பட்டது. கி.மீ. 0/8-1/5 வரை உள்ள பகுதியில் தார் சாலை வரை மேம்பாடு செய்ய ரூ. 2.10 லட்சம் செலவாகும்.

(ஆ) நிதி வசதியின்மையால் இச்சாலையை மேம்பாடு செய்ய தற்சமயம் சாத்தியக்கூறு இல்லை.

65--

சாலையை மேம்பாடு செய்தல்

வினா எண் 33368--திரு. கே. ஏ. மனோகரன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஒசூர் வட்டத்திலுள்ள நகர பேருந்து செல்லும் வி.சி.சி. சாலை முதல் கீழ்பக்கனபள்ளி சான்று வரை மேம்பாடு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை--

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்.

இச்சாலையில் கி.மீ. 0/0-1/2வரை 94-95ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டததில் கப்பிச்சாலையாக எடுத்துச் செய்யப்பட்டுள்ளது. இச்சாலையை தார் சாலையாக மாற்றவும் சிறுபாலங்கள் அமைக்கவும் ரூ. 12 இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஒன்றியத்தில் இப்பணிக்கான நிதி ஆதாரம் இல்லை. 1995-96-ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இப்பணியை மேற்கொள்ள முன்னுரிமை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

66--

நலப் பணித் திட்டங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்குதல்

வினா எண் 33381--டாக்டர் ஆ. வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம், பாப்பாரப்பட்டி பேரூராட்சிகளின் மக்கள் நலப் பணித்திட்டங்களுக்கு என கூடுதலாக நிதி ஒதுக்க அரசு ஆவன செய்யுமா?

1996 பிப்ரவரி 15]

விடை--

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

பெண்ணாகரம், பாப்பாரப்பட்டி ஆகிய பேரூராட்சிகளின் மக்கள் நலப் பணித்திட்டங்களுக்கு கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்ய வழிவகைகள் இல்லை.

67--

தெருவிளக்கு பற்றாக்குறையைப் போக்குதல்

வினா எண் 33919--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதி கொடுமுடி ஒன்றியம், சிட்டப்புள்ளாபாளையம் கிராமத்திற்கு தெருவிளக்கு பறறாக்குறையைப் போக்க அரசு இந்த ஆண்டில் நடவடிக்கை எடுக்குமா?

விடை--

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதி கொடுமுடி ஒன்றியம் சென்ன சமுத்திரம் பேரூராட்சிக்குட்பட்ட சிட்டப்புள்ளாபாளையத்தில் வக்கீல் ராமசாமி வீடு அருகில் மற்றும் சொளக்காபாளையம் பிரிவு அருகில் 40 வாட்ஸ் குழல் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது. பள்ளிக்கூடம் அருகில் மெர்க்குரி விளக்கு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. கருப்பண்ண கவுண்டர் வீடு, தங்கவேல் வீடு, வீரன் வீடு, இராமசாமிவீடு, பழனி வீடு முருகையன் வீடு, லோகநாதன் வீடு, முருகையன் தொண்டு பட்டி, ஆசாரியம்மா பெட்டிக்கடை, மதுரை வீரன் கோயில், சுந்தரம் வீடு, கிட்டான் வீடு, கணேசன் வீடு, துரைசாமி வீடு, குப்புசாமி வீடு, லோகநாதன் வீடு ஆகியவற்றின் அருகில் 40 வாடஸ் குழல் விளக்குகள் தலா ஒன்று வீதம் அமைக்கப்பட்டு மொத்தம் 19 விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட 19 விளக்குகளும் நன்கு எரிகின்றன. தற்போது இது போதுமானதாக உள்ளது.

68--

நத்தமேட்டிற்குச் சாலை அமைத்தல்

வினா எண். *36290*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கொடுமுடியிலிருந்து நத்தமேட்டிற்குச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

இந்த சாலையின் மொத்த நீளம் 6.00 கி.மீ. (0/0-6/0) இதில் கி.மீ. 0/0-1/0ல் பகுதியினை மேம்பாடு செய்ய வேண்டும் நடப்பு ஆண்டில் (1994-95) தார் சாலை அமைக்கும் வேலையை ரூ. 2.00 லட்சத்தில் கொடுமுடி ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து பெற்று செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

69--

பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல்

வினா எண் *36913*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா?

மொடக்குறிச்சி தொகுதி, முத்துக்கவுண்டன்பாளையம் வரை வழங்கப்படும் பாதுகாக்கப்பட்ட குடிநீரை லக்காபுரம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்குக் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

லக்காபுரத்திற்கு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மின்விசைப் பம்பு திட்டத்தில் ஆழ் துளை குழாய் கிணற்றை ஆதாரமாகக் கொண்டு ஒரு லட்சம் லிட்டர்கள் கொள்ளவு கொண்ட மேல்நிலை தொட்டியில் இருந்தும் ஊராட்சி ஒன்றியத்தால் 2 திறந்தவெளிக் கிணறுகளை

1996 பிப்ரவரி 15]

ஆதாரமாகக் கொண்டு, 500 லிட்டர்கள் கொள்ளவுள்ள இரண்டு தரைமட்டத் தொட்டியிலிருந்தும் 32 பொதுக்குழாய்கள் மூலம் குடிநீர் தற்போது விநியோகம் செயயப்பட்டு வருகிறது. லக்காபுரம் முழு அளவு குடிநீர் வசதி பெற்ற ஊராக வகைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே புதிய திட்டங்கள் தேவையில்லை.

70--

குருநாதபுரம் ஆதிதிராவிடர் குடியிருப்புக்கு குடிநீர் வழங்கல்

வினா எண் 37632--திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா?

அந்தியூர் தொகுதி, சங்கராபாளையம் ஊராட்சி, காக்கயனூர் திறந்தவெளிக் கிணற்றிலிருந்து வட்டக்காடு வரை வரும் குடிநீரை நீரேற்றி மூலம் சங்கரபாளையம் கிராமம், குருநாதபுரம் ஆதிதிராவிடர் குடியிருப்பு வரை குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

காக்கயனூரில் உள்ள திறந்தவெளிக் கிணற்றின் சுவர்கள் இடிந்து விழுந்து பாழடைந்த நிலையில் உள்ளதால் இதனை குடிநீர் ஆதாரமாகக் கொண்டு சங்கராபாளையம் குருநாதபுரம் கிராமங்களுக்கு குடிநீர் வழங்க இயலாது. காக்கயனூரில் 1988-89-ல் அமைக்கப்பட்ட ஆழ்குழாய் கிணறு தற்போது பயனில் உள்ளது. மேலும் தற்போது சங்கராபாளையம் ஊராட்சியைச் சேர்ந்த அனைத்து கிராமங்களுக்கும் அந்தியூர் அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியங்களில் விடுபட்ட கிராமங்களுக்கும் குடிநீர் வழங்க கூட்டுக் குடிநீர் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் தற்போது ஆய்வில் உள்ளது.

71--

முகையூர் தொகுதி ஊராட்சிகளை திருவெண்ணைநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் இணைக்கும் திட்டம்

வினா எண் 38116--திருமதி ஆர். சாவித்திரி அம்மாள்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

முகையூர் தொகுதி, முகையூர் ஊராட்சி ஒன்றியம் மாரைங்கூர் ஊராட்சி, கொங்கராயனூர் ஊராட்சி பையூர் ஆகிய ஊராட்சிகளை திருவெண்ணைநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் இணைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

முகையூர் ஊராட்சி ஒன்றியம், மாரைங்கூர், கொங்கராயனூர், பையூர் ஆகிய ஊராட்சிகளை திருவெண்ணெய்நல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் இணைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

72--

வெள்ளித் திருப்பூரில் புதிய மேல்நிலைத் தொட்டி கட்டுதல்

வினா எண் *39820*--**திரு. வே. பெரியசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதி, அம்மாப்பேட்டை ஒன்றியம், வெள்ளித்திருப்பூர் ஊராட்சி, வெள்ளித் திருப்பூரில் புதிய மேல்நிலைத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

ஆம். பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதி, அம்மாப் பேட்டை ஒன்றியம், வெள்ளித் திருப்பூர் ஊராட்சி, வெள்ளித் திருப்பூரில் தற்போது *60,000* லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

73--

பாலக்குட்டை ஆழ்க்குழாய்க் கிணற்றிலிருந்து நீர்த்தேக்கத் தொட்டிமூலம் குடிநீர் வழங்கல்

வினா எண் *39822*--**திரு. வே. பெரியசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

1996 பிப்ரவரி 15]

பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதி, அந்தியூர் ஒன்றியம், மைக்கேல்பாளையம் ஊராட்சி பாலக்குட்டை ஆழ்குழாய்க் கிணற்றில் கம்ப்ரஸர் மோட்டார் பொருத்தி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதி, அந்தியூர் ஒன்றியம் மைக்கேல்பாளையம் ஊராட்சி, பாலக்குட்டை கிராமம் ஆழ்குழாய் கிணற்றில் கம்ப்ரஸர் மோட்டார் பொருத்தி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் வழங்கும் பணி மேற்கொள்ளப்படுவதில்லை. மேலும், இக்கிராமம் தற்போது ஆய்வில் உள்ள நகலூர், சின்னதம்பிபாளையம் மற்றும் மைக்கேல் பாளையம் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.

74--

அட்டக்கல்லூரிக்கு குடிநீர் குழாய் மூலம் குடிநீர் வசதி ஏற்படுத்தல்

வினா எண். *39823*--**திரு. வே. பெரியசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதி, அந்தியூர் ஒன்றியம், பிரம்மதேசம் ஊராட்சி, பாறையூரில் உள்ள மேல்நிலைத் தொட்டியிலிருந்து குளியூர் சாலை வழியாக அட்டக்கல்லூரிக்கு குடிநீர் குழாய் போட்டு குடிநீர் வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதி, அந்தியூர் ஒன்றியம்-பிரம்மதேசம் ஊராட்சி, பாறையூரில் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அக்கிராம மக்களின் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு ஏற்ப கொள்ளளவு கொண்டுள்ளவாறு கட்டப்பட்டுளளது. ஆகையால் பாறையூரிலிருந்து அட்டக்கல்லூரிக்கு குடிநீர் வழங்க தொழில் நுட்ப சாத்தியக் கூறுகள் இல்லை.

75--

மீனவர் நலனுக்காக அறக்கட்டளை துவக்குதல்

வினா எண் *23916*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) மீனவர் நலனுக்காக புதியதாக அறக்கட்டளை துவக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும்?

விடை--

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீனளத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)*: மீனவர் நலனுக்காக புதிதாக அறக்கட்டளை துவக்குவதற்கான வாய்ப்பு ஏதும் இல்லை. ஆயினும், படகு உரிமையாளர்களையும், மீனவர்களையும் உள்ளடக்கி, அவர்களிடமிருந்து வசூலிக்கப்படுகின்ற சந்தாத்தொகைமூலம் மீனவர்கள் எதிர்பாராத விதமாக இறக்க நேரிட்டால் அவர்களுக்கு ரூபாய் ஒரு இலட்சம் வழங்குவதற்காக "தனி மீனவர் விபத்துக் காப்புறுதித் திட்டம்" ஒன்று செயல்படுத்தப்பட்டு உள்ளது.

76--

மீனவர்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா

வினா எண் *43616*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், ஏரிப்புறக்கரை மீனவர்களுக்கு இலவச மனைப்பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீனளத்துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டை வட்டம், ஏரிப்புறக்கரை கிராமம், அதிராமப்பட்டினம் பேரூராட்சி எல்லைக்குட்பட்டதாகும். அப்பகுதியில் உள்ள நிலம் அரசால் ஒப்படை வழங்கத் தடை

1996 பிப்ரவரி 15]

விதிக்கப்பட்ட நீர்நிலைப் புறம்போக்கு நிலமாகும். ஆகவே, ஏரிப்புறக்கரை மீனவர்களுக்கு மேற்படி நிலத்தில் இலவச வீட்டுமனைப்பட்டா வழங்க இயலாது. எனவே, அரசிடம் இது சம்பந்தமான செயற்குறிப்பு ஏதும் இல்லை.

77--

ஆண்டாள் கோவில் திருப்பணி செய்தல்

*வினா எண் 187--***திரு. இரா. தாமரைக்கனி:** *மாண்புமிகு இந்து சமயஅறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--*

(அ) காமராஜர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் ஸ்ரீ ஆண்டாள் கோவில் திருப்பணியை முடிக்க அரசு எடுத்த நடவடிக்கை யாது?

(ஆ) அதன் விவரம் யாது?

விடை--

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்துபிள்ளை, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): காமராஜர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் அருள்மிகு ஆண்டாள் திருக்கோயிலைச் சார்ந்த வடபத்ரசயனர் சன்னதி இராஜகோபுரத் திருப்பணியின் முதற்கட்ட பணிகள் தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தின் மூலம் ரூபாய் 49.75 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பெற்றது. இரண்டாம் கட்டப் பணிகளை ரூபாய் 60.00 இலட்சம் செலவில் மேற்கொள்ள தமிழ்நாடு திருக்கோவில் நிர்வாக வாரியத்தால் 25–5–1995இல் நிர்வாகம் மற்றும் தொழில் நுட்ப அனுமதிகள் வழங்கப்பட்டு அப்பணிகள் விரைவில் துவங்கப்படவுள்ளன. ஸ்ரீ ஆண்டாள் சன்னதி மூலஸ்தான திருப்பாவை விமானம், ஸ்ரீ ஆண்டாள் திருக்கோயில் முன் இராஜகோபுரம் புதுப்பித்தல் ஆகிய பணிகளுக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் பரிசீலனையில் உள்ளது.

78--

கோயில் நிலங்களை விவசாயிகளுக்கு உரிமையாக்குதல்

*வினா எண் 682--***திரு. ஆர். சிங்காரம்:** *மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

கோயில் நிலங்களை நீண்டகாலமாக குத்தகைதாரராக, அனுபவித்து வரும் ஏழை விவசாயிகளுக்கே உரிமை ஆக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை--

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்துபிள்ளை, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

இல்லை.

79--

குறிச்சி சிவாலயத்தை சீரமைத்தல்

வினா எண் 2328--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

த்ஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், குறிச்சியில் உள்ள சிவாலயத்தை சீரமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்துபிள்ளை, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

மேற்படி திருக்கோயிலின் திருப்பணி வேலைகளுக்கு ரூ. 2.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

80--

உளூர் மழை மாரியம்மன் கோவிலை புதுப்பித்தல்

வினா எண் 2590--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், புதுக்கோட்டை உளூர் மழை மாரியம்மன் கோவிலை புதுப்பிக்கவும் மகாமண்டபம் கட்டவும், அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

1996 பிப்ரவரி 15]

விடை--

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்துபிள்ளை, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், புதுக்கோட்டை உளூர் மழை மாரியம்மன் கோவிலைப் புதுப்பிக்கும் பெரும்பாலான பணி உபயதாரர்கள் மூலமாகவே முடிக்கப்பட்டு விட்டது. மேற்படி திருக்கோயிலின் மகாமண்டபம் திருப்பணி தொடர்பாக இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

81--

கல்லூரிக்கு புதிய கட்டிடம் விடுதி அமைத்தல்

வினா எண் 2620--திரு. **சோ. இராசாராமன்:** *மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--*

(அ) திருவையாறு நகரில் சத்திரம் நிர்வாகத்தில் இயங்கும் அரசர் கல்லூரிக்கு புதிய கட்டிடம் விடுதி அமைக்க சுமார் 21 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், கட்டுமான திட்ட மதிப்பீடு எவ்வளவு?

விடை--

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்துபிள்ளை, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

(அ) ஆம். இக்கல்லூரியின் 100ஆவது ஆண்டு நிறைவு விழா நடவடிக்கையின் ஒரு பகுதியாக இசைக்கல்லூரி அமைக்க, 20.85 ஏக்கர் நிலம், நிலமெடுப்பு சட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) சத்திரம் நிர்வாகத்திடம் போதிய நிதிவசதி இல்லாத காரணத்தால் இசைக்கல்லூரி அமைக்கும் பணி துவக்கப்படவில்லை. எனவே, திட்ட மதிப்பீடு தயார் செய்யப்படவில்லை.

82--

ஆலங்குடி தொகுதியில் கோயில் திருப்பணிகள்

வினா எண் 4797--**திரு. எஸ். சண்முகநாதன்:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) ஆலங்குடி தொகுதி கரம்பக்குடி ஒன்றியத்தில் சில கோயில்களின் நிலங்கள் தனியார் வசம் இருப்பதால் அங்கு திருப்பணி செய்வது தாமதமாவதை அரசு அறியுமா?

(ஆ) அந்த நிலங்களை அரசு எடுத்துக்கொண்டு கோயில்களுக்கு திருப்பணி செய்ய அரசு முன்வருமா?

விடை--

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) ஆலந்தூர் தொகுதி கறம்பக்குடி ஒன்றியத்தில் உள்ள திருக்கோயில்களின் நிலங்கள் எதுவும் தனியார் வசமில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

83--

வரதராஜப்பெருமாள் கோயில் திருப்பணி

வினா எண் 4878--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தஞ்சை மாவட்டம் அதிராம்பட்டினம் அருள்மிகு வரதராஜப்பெருமாள் கோவில் திருப்பணி வேலைகளுக்கான நிதி, அரசால் அனுமதிக்கப்பட்ட பின்பும், பணிகள் துவக்கப்படாமலிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

விடை--

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்துபிள்ளை, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

1996 பிப்ரவரி 15]

(அ) அதிராம்பட்டினம் அருள்மிகு வரதராஜப் பெருமாள் கோவில் திருப்பணி வேலைகள் முடிவுற்று *5-5-1995*ஆம் தேதியில் குடமுழுக்கு விழா நன்கு முடிந்துவிட்டது.

(ஆ) எழவில்லை.

84--

கோயில் திருப்பணிக்கு நிதி உதவி

வினா எண் *5659*--**திரு. வே. பெரியசாமி:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பெரியார் மாவட்டம் பர்கூர் ஊராட்சிக்குட்பட்ட தாமரைக்கரை வீரபத்திரகாளியம்மன் கோவிலுக்கு மண்டபம் அமைத்துக் கொடுக்கவும், கோயில் திருப்பணிக்கும் அரசு உதவி அளிக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது பணி ஆரம்பிக்கப்படும்?

விடை--

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்துபிள்ளை, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) பெரியார் மாவட்டம், பர்கூர் ஊராட்சிக்குட்பட்ட தாமரைக்கரை என்ற ஊரில் வீரபத்திரக்காளியம்மன் என்ற பெயரில் திருக்கோயில் ஏதுமில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

85--

சாவித்திரி அம்மன் ஆலயத்தைப் புதுப்பித்தல்

வினா எண்கள் *18706, 18708, 18817*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு இந்து அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(1) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம் வரகூர் அருள்மிகு சாவித்திரியம்மன் ஆலயத்தை புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிபபு உள்ளதா?

(2) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம் வரகூர் அய்யாசாமி மற்றும் சுப்புலெட்சுமி கட்டளை ஆலயங்களை புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(3) தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம் தெற்கு நானலூர் சபாநடேஸ்வரர் கோயிலை புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

(1) (2) மற்றும் (3): இல்லை.

86--

தெப்பக்குளம் பராமரித்தல்

வினா எண் 20549--**திரு. கே. செல்வராஜ்:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கோயம்புத்தூர் அருள்மிகு அரங்கநாதர் கோவில் தெப்பக்குளம் பராமரிக்கப்பட்டு ஆழப்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்பபடும்?

விடை--

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

(அ) மற்றும் (ஆ): கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப் பாளையம் வட்டம், காரமடை அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலின் தெப்பக்குளத்தில் தண்ணீர் நிறைந்து வற்றாமல் உள்ளதால் இத்தெப்பக் குளத்தை ஆழப்படுத்தும் பணியை மேற்கொள்ள இயலவில்லை. தண்ணீர் வற்றியவுடன் இத்தெப்பக் குளத்தினை ஆழப்படுத்தும் பணி ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும். இத்தெப்பக்குளத்தின் படிக்கட்டுகள், சுற்றுச்சுவர்கள் ஆகியவற்றை சீர் செய்யும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

87--

மாரியம்மன் கோயிலைப் புதுப்பித்தல்

வினா எண் 20838--**செல்வி கோ. மல்லிகா:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியம், பு. முட்லூர் காந்தி நகரில் பழுதடைந்துள்ள மாரியம்மன் கோயிலை புதுப்பித்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை--

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இல்லாத திருக்கோயில் என்பதால் விதிகளின்படி திருப்பணிக்கு நிதி உதவி வழங்க இயலாது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

88--

ஆலயத்தைப் பாதுகாத்தல்

வினா எண் 22713--**டாக்டர் மு. சீனியம்மாள்:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) அவினாசி வட்டம், பேரநாயக்கன்புதூர் ஆதி திராவிடர் காலனி பட்டத்தரசிஅம்மன் ஆலையத்தின் முன்னுள்ள வேம்பு மரத்தின் வேரினால் கட்டிடம் பிளவு பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மரத்தை வெட்டி ஆலயத்தை பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): கோவை மாவட்டம், அவினாசி வட்டம், பேரநாயக்கன்புதூர் ஆதிதிராவிடர் காலனி பட்டத்தரசியம்மன் கோவில் முன்னுள்ள வேம்பு மரத்தின் வேரினால் கட்டிடம் சிறிதளவு பாதிக்கப்பட்டுள்ளது. வேம்பு மரத்தின் வேரினால் பாதிக்கப்படாத வண்ணம் இம்மரத்தை விட்டு சற்றுத் தள்ளி புதிய கட்டிடம் கட்டப்பட உள்ளது. எனவே, இத் திருக்கோயிலில் உள்ள வேம்பு மரத்தை வெட்ட வேண்டிய அவசியமில்லை.

89--

ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

வினா எண் *34165*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி ஒன்றியம் லக்காபுரம் கருப்பண்ணசாமி கோவில் வழித்தடத்திலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை--

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சி ஒன்றியம், லக்காபுரம் கருப்பண்ணசாமி கோவில், வழித்தடமானது அத்திருக்கோயிலுக்குரியது அல்ல. இது ரோடு புறம்போக்கில் உள்ளது. வினாவில் குறிப்பிட்டுள்ள ஆக்கிரமிப்பை அகற்ற வருவாய்த் துறையால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆக்கிரமிப்பாளர் ஈரோடு சார்பு நீதி மன்றத்தில் இந்த இடம் குறித்து ஒரு வழக்கு தொடர்ந்துள்ளார்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1996 பிப்ரவரி 15]

90--

உலகுடையார் திருக்கோயில் திருப்பணி செய்தல்

வினா எண் *38211*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், சங்கரன் கோயில் ஒன்றியம் வடநத்தம்பட்டி அருள்மிகு உலகுடையார் திருக்கோவில் திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்துபிள்ளை, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

இல்லை.

91--

விநாயகர் கோயிலைப் பழுது பார்த்தல்

வினா எண் *38349*--**செல்வி கோ. மல்லிகா:** மாண்புமிகு இந்து அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம், சின்னக் குப்பம், விநாயகர் கோயிலை பழுது பார்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பழுது பார்க்கப்படும்?

விடை--

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) இல்லை

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

92--

சலுகை விலையில் மனையை விற்கும் திட்டம்

வினா எண் *38444*--**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழகத்திலுள்ள ஆலயங்களுக்கு சொந்தமான மனையில் பல ஆண்டுகளாக வீடு கட்டி குடியிருந்து கொண்டு மனை வாடகை செலுத்துவோருக்கு சலுகை விலையில் அந்த மனையை விற்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அது செயல்படுத்தப்படும்?

விடை--

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

(அ) இல்லை

(ஆ) எழவில்லை.

93--

துணியிலான காலுறை அளித்தல்

வினா எண் *40269*--**திரு. செ.து. வரதராஜன்:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஊனமுற்றோர் தோலால் செய்த செயற்கைக் காலுடன் திருக்கோயிலுக்கு உள்ளே செல்ல அனுமதிக்கப்படுவதில்லை என்பதால் அவர்களுக்குத் துணியிலான காலுறை அணிந்து செல்ல அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

காலுறை அணிந்து வரும் ஊனமுற்றோர், கால் உறையைக் கழற்றி வேறு நபர்கள் உதவியுடன் கைத்தாங்கலாக, திருக்கோயிலுக்குள் அனுமதிக்கப்படுகின்றனர். எனவே, ஊனமுற்றோர் துணியிலான காலுறை அணிந்து வர வேண்டிய தேவை எழவில்லை.

94--

அர்ச்சகர்களுக்கு மாதந்தோறும் சம்பளம் வழங்குதல்

வினா எண். *44218*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

1996 பிப்ரவரி 15]

கோவில் அர்ச்சகர்களுக்கு மாதந்தோறும் சம்பளம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் :

நிதி வசதி மிக்க திருக்கோயில்களில் அர்ச்சகர்களுக்கு மாதாமாதம் சம்பளம் வழங்கப்பட்டு வருகின்றது. நிதி நிலைமை திருப்தியில்லாத திருக்கோயில்களில் நிதி ஆதாரம் கிடைத்தவுடன் அர்ச்சகர்களுக்கு சம்பளம் உடனடியாக வழங்கப்படுகிறது. நிதி வசதியற்ற திருக்கோயில்களில் பணி புரியும் அர்ச்சகர்களுக்கு ஏற்படும் சம்பள பாக்கி "ஆலய ஊழியர்கள் நல நிதி" முதலீடு ரூபாய் ஒரு கோடியிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து ஒவ்வொரு நிதியாண்டும் வழங்கப்பட்டு வருகின்றது.

95--

திருமண மண்டபம் கட்டுதல்

வினா எண் *45944*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அரவக்குறிச்சியில் காசி விஸ்வநாதர் ஆலயத்தில் திருமண மண்டபம் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

திருச்சிராப்பள்ளி மாவட்டம், கரூர் வட்டம், அரவக்குறிச்சி அருள்மிகு காசி விஸ்வநாதர் திருக்கோயிலுக்கு திருமண மண்டபம் கட்டுவதற்கு செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

96--

திருக்கோயில்களில் திருமண மண்டபம் கட்டுதல்

வினா எண் *52175*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பெரியார் மாவட்டம் தாராபுரம் வட்டம், மணக்கடவு கிராமத்திலுள்ள காட்டம்மன் திருக்கோவில் மற்றும் அருள்மிகு நீலாம்பூர் காளியம்மன் திருக்கோயில் ஆகியவற்றில் திருமண மண்டபம் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை--

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

பெரியார் மாவட்டம், தாராபுரம் வட்டம், மணக்கடவு கிராமம் ஆத்தூர் புதூரிலுள்ள அருள்மிகு காட்டம்மன் திருக்கோயில் மற்றும் கொளத்துப்பாளையம் கிராமம் அருள்மிகு நீலாம்பூர் காளியம்மன் திருக்கோயில் ஆகியவற்றில் போதுமான இடவசதியும் நிதி ஆதாரமும் இல்லை என்பதால் இத்திருக்கோயில்களில் திருமண மண்டபம் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதுமில்லை.

97--

நாமக்கல் ஆஞ்சநேயர் கோவிலைச் செப்பனிடல்

வினா எண் 52179--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சேலம் மாவட்டம், நாமக்கல் கோட்டையிலுள்ள பழமையான ஆஞ்சநேயர் கோவிலைச் செப்பனிட அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை--

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், நாமக்கல் கோட்டையிலுள்ள அருள்மிகு ஆஞ்சநேயர் கோயிலைச் செப்பனிடுவதற்கு ரூ. 12.70 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதியும், தொழில் நுட்ப அனுமதியும் தமிழ்நாடு திருக்கோயில் நிர்வாக வாரியத்தால் உபயதாரர்களுக்கு வழங்கப்பட்டு, மேற்படி திருக்கோயிலை செப்பனிடும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

1996 பிப்ரவரி 15]

98--

ஆஞ்சநேயர் கோயிலைச் செப்பனிடுதல்

வினா எண் 52180--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பெரியார் மாவட்டம், தாராபுரத்திலுள்ள ஆஞ்சநேயர் திருக்கோயிலை செப்பனிடவும் திருமண மண்டபம் கட்டவும் அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

பெரியார் மாவட்டம், தாராபுரம் வட்டம் மற்றும் நகர் அருள்மிகு ஆஞ்சநேயர் என்கிற காடு அனுமந்தராயசாமி திருக்கோவிலுக்கு 1986-ஆம் ஆண்டில் திருப்பணிகள் செய்து குடமுழுக்கு விழா நடத்தப்பட்டுள்ளதாலும், ஆலய கட்டிடங்கள் நல்ல முறையில் உள்ளதாலும், தற்போது இக்கோவிலில் திருப்பணிகள் செய்ய வேண்டிய அவசியம் ஏதுமில்லை. போதிய இடவசதி மற்றும் நிதி ஆதாரங்கள் இத்திருக்கோவிலுக்கு இல்லாமையால் இத்திருக்கோயில் சார்பில் திருமண மண்டபம் கட்ட திட்டம் ஏதும் இல்லை.

99--

நத்தமுடையார் கோவிலில் திருமண மண்டபம் கட்டுதல்

வினா எண் 52185--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சிதம்பரனார் மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் ஊராட்சி ஒன்றியம், தோழப்பன் பண்ணை கிராமத்திலுள்ள நத்தமுடையார் கோவிலில் திருமண மண்டபம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

சிதம்பரனார் மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் ஊராட்சி ஒன்றியம், தோழப்பன் பண்ணை கிராமத்தில் உள்ள நத்தமுடையார் திருக்கோயில்

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

இந்து சமய அறநிலையத்துறையின் ஆளுகையின் கீழ் இல்லாத ஒரு திருக்கோயில் எனவே, அக் கோவிலில் துறையின் மூலம் திருமண மண்டபம் கட்ட இயலாது.

100--

ஆத்தூர் சோளியம்மன் திருக்கோயிலை செப்பனிட்டு திருமண மண்டபம் கட்டுதல்

வினா எண் 52186--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருச்சிராப்பள்ளி மாவட்டம், கரூர், ஆத்தூர் சோளியம்மன் திருக்கோயிலை செப்பனிடவும், அங்கு திருமண மண்டபம் கட்டுவதற்கும் அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை--

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

இல்லை.

இரண்டாம் பட்டியல்

1--

பேர்ணாம்பட்டில் குற்றவியல் நீதிமன்றம் அமைத்தல்

வினா எண் 87472--**டாக்டர் ஜெ. பரந்தாமன்:** மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம், பேர்ணாம்பட்டில் குற்றவியல் நீதிமன்றம் அமைக்கப்படுமா?

1996 பிப்ரவரி 15]

விடை--

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்:

வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம், பேர்ணாம்பட்டில் குற்றவியல் நீதிமன்றம் அமைப்பது குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

2--

வடாற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் போலி சான்றிதழ்கள்

*வினா எண் 61325--***திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:** *மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--*

(அ) 1993-94-ஆம் ஆண்டில் வடாற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் ஆதி திராவிடர் எனக் கொடுக்கப்பட்ட போலிச் சான்றிதழ்கள் எத்தனை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன?

(ஆ) அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை--

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): வடாற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் 1993-94-ஆம் ஆண்டில் "ஆதி திராவிடர்" என வழங்கப்பட்ட சான்றிதழ்களில் போலிச் சான்றிதழ் என எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை.

3--

ஏழை விவசாயக் கூலிகளுக்கு குடிமனைப் பட்டா

*வினா எண் 61800--***திரு. ஆர். சிங்காரம்:** *மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

பட்டுக்கோட்டை ஒன்றியம், முதல் சேரியிலுள்ள வீடு மனையற்ற ஏழை விவசாயக் கூலிகளுக்கு குடிமனைப்பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டை வட்டம், முதல்சேரி கிராமத்தில் வீடு மனையற்ற ஏழை விவசாயக் கூலிகள் சுமார் 39 குடும்பத்தினர் உள்ளனர்.

அவர்கள் ஒப்படைக்குத் தடை செயயப்பட்ட இனமான நீர்நிலைப் புறம்போக்குகளில் வீடுகள் கட்டிக் கொண்டு வசிக்கிறார்கள். எனவே, இவர்களுக்கு குடிமனைப்பட்டா வழங்கிட செயற்குறிப்பு ஏதும் நிலுவையில் இல்லை.

4--

பேராவூரணி தொகுதியில் குடிமனைப்பட்டா வழங்குதல்

வினா எண் 61804--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சை மாவட்டம் பேராவூரணி தொகுதி சின்னமனைக்கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளி தெருவில் வசிப்போருக்கு குடிமனைப்பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை---

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

தஞ்சை மாவட்டம் பேராவூரணி தொகுதி சின்னமனைக் கிராமத்தில் புல எண் 109-இல் 120 குடும்பங்கள் வசித்து வரும் நிலம் அருள்மிகு சிதம்பரநாத சுவாமி தேவஸ்தானத்திற்கு சொந்தமான பட்டா நிலமாகும். எனவே இந்த நிலத்தில் குடியிருப்போருக்கு மனைப்பட்டா வழங்க இயலாது.

5--

ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர்கள் வருகை

வினா எண் 8854--திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா---

(அ) சங்கராபுரம் தொகுதியில் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரியும் அரசு மருத்துவர்கள் வாரத்திற்கு ஒருமுறை மட்டுமே ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வருவதாக புகார்கள் வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

1996 பிப்ரவரி 15]

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள்' நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): சங்கராபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒப்பளிக்கப்பட்ட இரண்டு பணியிடங்களில் தற்பொழுது ஒரு மருத்துவர் மட்டும் பணிபுரிகிறார். அவர் பணியிடத்திலே தங்கி எந்தவித புகாரும் இல்லாமல் பணிபுரிந்து வருகின்றார்.

6--

மருத்துவமனையில் கழிப்பறை வசதிகள் அமைத்தல்

*வினா எண் 45692--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் நவீன கழிப்பறை வசதிகள் செய்ய அரசு முன்வருமா?

விடை---

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

திருப்பத்தூர் அரசினர் மருத்துவமனையில் 26 நவீன கழிப்பறை வசதிகள் தற்போது உள்ளன. மேற்கொண்டு தேவைப்படின் சிறு பணிகளுக்கு ஒதுக்கப்படும் நிதியிலிருந்து தேவைப்படும் வசதிகளை மேற்கொள்ளும்படி வேலூர் சுகாதாரப் பணிகள் இணை இயக்குநருக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

7--

குலவிளக்கு ஊராட்சியில் பிரசவ விடுதி அமைத்தல்

*வினா எண் 55755--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், குலவிளக்கு ஊராட்சி, குலவிளக்கு ஆதிதிராவிடர் காலனி, மொசுகவுண்டன் புதூர், கணக்கம்பாளையம், பூசாரிப்பாளையம், புதுப்பாளையம்,

கோவில்பாளையம், ஆதிதிராவிடர் காலனி கோவில்பாளையம் ஆகிய கிராமங்களில் பிரசவ விடுதி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

இல்லை

8--

விளக்கேத்தி ஊராட்சியில் பிரசவ விடுதி அமைத்தல்

வினா எண் *55765*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி மொடக்குறிச்சி ஒன்றியம் விளக்கேத்தி ஊராட்சி அத்தப்பம்பாளையம், செம்மாண்டபுரம் ஓலப்பாளையம், பச்சாகவுண்டர்வலசு, கொக்கிரி காட்டுப்புதூர், விளக்கேத்திபுதூர் அம்மாண்டிபாளையம், வெடிக்காரன்பாளையம் ஆகிய கிராமங்களில் பிரசவ விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

இல்லை.

9--

காகம் ஊராட்சியில் பிரசவ விடுதி அமைத்தல்

வினா எண் *55773*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம் காகம் ஊராட்சி கொளத்துப்பாளையம், காகம், கொமரன்வலசு, தென்னம்பிள்ளைபுதூர், சாணார்பாளையம், புதுப்பாளையம் கானியம்பாளையம், காகம் ஊராட்சி ஆதிதிராவிடர் காலனி மேற்குபாளையம், எல்லப்பாளையம், தோக்காத்தான் வலசு ஆகிய கிராமங்களில் பிரசவ விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

இல்லை.

10--

முருங்கியாம்பாளையம் ஊராட்சியில் பிரசவ விடுதி அமைத்தல்

வினா எண் 55796--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், முருங்கியாம்பாளையம் ஊராட்சி, பூலாவலசு, சொரியாம்பாளையம் கிராமங்களில் பிரசவ விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

இல்லை.

11--

பிரசவ விடுதி அமைத்தல்

வினா எண் 55798--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், எல்லைக்காடு ஊராட்சி, எல்லக்காடுபுதூர் கிராமத்தில் பிரசவ விடுதி அமைக்க அரசு திட்டம் உள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

இல்லை.

12--

ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம்

வினா எண் *67771*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருச்சிராப்பள்ளி மாவட்டம், தா. பழூர் ஊராட்சி ஒன்றியம், விக்கிரமங்கலம் அரசினர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிட வசதி செய்து தருவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

விக்கிரமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டத் தேவையான நிலம் இன்னும் பெறப்பாடாமையால் கட்டிடம் கட்டுவதற்கு வாய்ப்பில்லை.

13--

ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் படுக்கை வசதிகள்

வினா எண் *67778*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருச்சிராப்பள்ளி மாவட்டம், சின்னதாராபுரம் அரசினர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் படுக்கை வசதிகள் செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

சின்னதாராபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கூடுதல் படுக்கை வசதி செய்து தரும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. இனிவரும் காலங்களில் அரசின் நிதி நிலைமைக்கேற்பப் பரிசீலிக்கப்படும்.

1996 பிப்ரவரி 15]

14--

கிளை சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 67781--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

தர்மபுரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், தொட்டமெட்டரையில் கிளை சுகாதார நிலையம் அமைப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

தொட்டமெட்டரை கிராம மக்கள் தொகை 900 ஆகும். இக்கிராமத்தின் சுகாதாரத் தேவையை மூன்று கிலோ மீட்டரில் உள்ள லிங்கனாம்பட்டி துணை சுகாதார நிலையம் பூர்த்தி செய்வதால், தொட்டமெட்டரையில் துணை சுதாதார நிலையம் அமைக்க இயலாது.

15--

எய்ட்ஸ் விழிப்புணர்வு பிரச்சாரத்திற்கு உதவி

வினா எண் 67793--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--*

(அ) எய்ட்ஸ் விழிப்புணர்வு பிரச்சாரத்திற்காக தமிழக அரசுக்கு அமெரிக்காவின் உதவி கிடைத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) உலக வங்கி உதவியுடன், எய்ட்ஸ் விழிப்புணர்வு பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கென அமெரிக்காவிடமிருந்து அரசுக்கு எந்தவித உதவியும் கிடைக்கவில்லை. எனினும், தனியார் தொண்டு நிறுவனங்களுக்கு எய்ட்ஸ் தடுப்புப் பணி செய்வதற்காக, சென்னையிலுள்ள வாலண்டரி ஹெல்த் சர்வீஸ் நிறுவனத்துக்கும் அமெரிக்க அரசு நிதி உதவி அளித்துள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

16--

மூலிகைகளைக் காப்பாற்ற திட்டம்

வினா எண் 70711--**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ்நாட்டில் உள்ள மூலிகைகளைக் காப்பாற்ற அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): ஆம். தமிழ்நாட்டில் மூலிகைப்பண்ணைகள் அமைத்து, மூலிகைகள் பயிரிடுவதற்கு என்றே தனியாக தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகம் ஒன்று, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் 14-2-1983 நாளிட்ட அரசாணை எண். 207-ன்படி 27-9-1983 அன்று நிறுவப்படடுள்ளது. இது தற்பொழுது சென்னை அரும்பாக்கத்தில அறிஞர் அண்ணா இந்தியமுறை மருத்துவமனை வளாகத்தில் இயங்கி வருகிறது.

17--

எக்ஸ்ரே கருவியைப்/உபகரணத்தைப்/பழுதுபார்த்தல்

வினா எண் 81987--**டாக்டர் எம். கருப்புசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் அரசு லாலி மருத்துவமனையில் எக்ஸ்ரே எடுக்கும் கருவி பழுதடைந்து இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): குன்னூர் அரசு மருத்துவமனையில் பழுதடைந்துள்ள எக்ஸ்ரே உபகரணத்தைப் பழுதுபார்க்க மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

18--

கண் வங்கித் திட்டம்

வினா எண் 82044--டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) மாவட்டந்தோறும் கண்வங்கி அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) சென்னை, ஸ்டான்லி மற்றும் எழும்பூர் கண் மருத்துவமனை, திருச்சி மாவட்ட தலைமை மருத்துவமனை, தஞ்சாவூர் இராஜா மிராசுதார் மருத்துவமனை, மதுரை இராஜாஜி மருத்துவமனைகளிலும் சேலம் மோகன் குமாரமங்கலம், கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் தேசிய கண்ணொளி இழப்பு தடுப்புத் திட்டத்தின் கீழ், கண் வங்கிகள் ஏற்படுத்தப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. மற்ற மாவட்டங்களில் மைய அரசின் குறியீட்டிற்கேற்ப கண் வங்கிகள் ஏற்படுத்தப்படும்.

19--

மேல்சான்றோர் குப்பம் ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 87488--டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வட—ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், பேர்ணாம்பட்டு தொகுதி, மேல் சான்றோர் குப்பம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டப்பட்டும், நன்கொடை கட்டிடத்திலேயே இயங்கி வருவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், சொந்தக் கட்டிடத்திற்கு எப்போது மாற்றப்படும்?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நலவாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : பேர்ணாம்பட்டு தொகுதியில் உள்ள மேல் சான்றோர் குப்பம் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடம் 13-5-1995 அன்று பொதுப்பணித் துறையினரால் ஒப்படைக்கப்பட்டு தற்போது புதிய கட்டிடத்தில் ஆரமப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

20--

உயிர் காக்கும் மூலிகைகள்

வினா எண் 87489--டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம், பேர்ணாம்பட்டு தொகுதி, வெலிதிசலி, பண்டா, அரவட்லா, சாரங்கல், மேற்ததானா பத்தலபல்லி ஆகிய இடங்களில் வளர்ந்து வரும் உயிர் காக்கும் மூலிகைகளைப் பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தற்போது வனத் துறையினர் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள இடங்களில் வளர்ந்து வரும் மூலிகைகளைப் பாதுகாத்து வருகின்றனர். வடஆற்காடு மாவட்டம், பேர்ணாம்பட்டு தொகுதியில் வளர்ந்து வரும் மூலிகைகளைப் பாதுகாப்பதற்கு மூலிகைப் பண்ணை அமைக்கப்படுவதற்கான அனைத்து சாத்தியக் கூறுகளையும் ஆராய்ந்த பின்புதான் முடிவு செய்ய இயலும்.

21--

மூலிகைப் பண்ணைகள் செயல்பாடு

வினா எண் 87505--**திரு. ஆ. சுப்புரத்தினம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்து கழகம் தற்போது நட்டத்தில் செயல்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மறறும் மூலிகை மருந்து கழகம் தற்போது லாபத்தில் செயல்படுகிறது.

வருடம்	லாபம் (ரூ. லட்சத்தில்)
1993-94 ..	3.66
1994-95 ..	4.62

22--

அரசு மருத்துவமனைக்கு கூடுதல் பெண் மருத்துவர் நியமனம்

வினா எண் 88147---**திரு. என். ஆர். ராஜேந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

காட்டுமன்னார்கோயில் தாலுக்கா அரசு மருத்துவமனைக்கு கூடுதல் பெண் மருத்துவர் நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

காட்டுமன்னார்கோயில் அரசு மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட இரண்டு பணியிடங்களில் ஆண் உதவி மருத்துவர்கள் பணிபுரிகின்றனர். இங்கு பணியிடம் காலியாகும்போது பெண் மருத்துவர் நியமிக்கப்படுவார். கூடுதலாக பெண் உதவி மருத்துவர் பதவி உருவாக்க செயற்குறிப்பு ஏதும் இல்லை.

23--

மருத்துவமனையை மேம்படுத்துதல்

வினா எண் *108206*--**திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வடஆற்காடு அம்பேத்கார் மாவட்ட மருத்துவமனையில், ரத்த சேமிப்பு வங்கி சிறப்புப் பிரிவுகள் சரியாக இயங்கவும், அதற்கு ஸ்கேன் கருவி வாங்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

போர்ட்டபிள் ஸ்கேன் கருவி ஏற்கனவே செயல்பட்டு வருகிறது. மாற்று அடிப்படையில் மற்றொரு ஸ்கேன் கருவி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. ரத்த சேமிப்பு வங்கி சிறப்புப் பிரிவுகள் சரியாக இயங்கி வருகின்றன.

24--

சென்னையில் இரண்டு/மூன்று சக்கர வண்டிகள் விவரம்

வினா எண் *67484*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்துறை மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சென்னை மாநகரில் எவ்வளவு மூன்று சக்கர வண்டிகள் மற்றும் இரண்டு சக்கர வண்டிகள் ஓடிக்கொண்டிருக்கின்றன?

(ஆ) எத்தனை வண்டிகள் விபத்துக்கள் சம்பந்தப்பட்டவை?

1996 பிப்ரவரி 15]

விடை--

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:

(அ)	சென்னை நகரில் ஓடிக்கொண்டிருக்கும் மூன்று சக்கர வாகனங்களின் எண்ணிக்கை	..	*21,598*
	இரண்டு சக்கர வாகனங்களின் எண்ணிக்கை	..	*4,97,640*
(ஆ)	சாலை விபத்துக்களில் சம்பந்தப்பட்ட மூன்று சக்கர வாகனங்களின் எண்ணிக்கை	..	*829*
	இரண்டு சக்கர வாகனங்களின் எண்ணிக்கை	..	*557*

25--

அகல ரயில்பாதை அமைத்தல்

வினா எண் *67568*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மதுரையிலிருந்து கோட்டயத்திற்கு சபரிமலை வழியாக புதிய அகல ரயில் பாதை அமைக்குமாறு மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

விடை--

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:

மதுரை-திண்டுக்கல் இடையே ஏற்கனவே அகல இரயில் பாதை உள்ளது. திண்டுக்கல்-சபரிமலை இடையே புதிய வழித்தடம் அமைப்பதற்கான ஒரு முன்னோட்ட ஆய்வு நடத்த இரயில்வே வாரியத்தினால் அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்தப் பணி *1995-96*-ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படும். கோட்டயம் சபரிமலையைப் பொறுத்தமட்டில் கோட்டயத்திலிருந்து புனலூருக்கு ஒரு புதிய அகல ரயில்பாதை அமைக்கவும், எருமேலியிலிருந்து சபரிமலைகது ஒரு இணை இருப்புப்பாதை அமைக்கவும் பொறியியல் மற்றும் போக்குவரத்துக்கான தொடக்கநிலை ஆய்வு முடிவு பெற்று, அது தொடர்பான அறிக்கையின் மீது முடிவு எடுக்கப்பட்டு வருகிறது.

26--

தீரன் சின்னமலை போக்குவரத்துக்கழக கிளை துவங்குதல்

வினா எண் *82035*--**திரு. அ. பாப்பாசுந்தரம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழக்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

குளித்தலை நகராட்சியில் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழக கிளை பிரிவு துவங்கும் எண்ணம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:

குளித்தலை பகுதி கிராமங்களுக்கு நகரப் பேருந்துகள் *5* கிலோ மீட்டர் அருகாமையில் முசிறி கிளையிலிருந்து இயக்கப்பட்டு வருவதால் குளித்தலையில் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழக கிளைப் பிரிவு துவக்கும் எண்ணம் அரசிடம் இல்லை.

27--

தேசீய நெடுஞ்சாலையில் போக்குவரத்துக்கழக ஒய்வு அறைகள்

வினா எண் *96996*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்துக் கழக, ஓய்வு அறைகள் ஒவ்வொரு *50* கி.மீ. தூரத்திற்கும் அமைப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:

போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரை தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களான சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம், நாகர்கோவில் போன்ற இடங்களில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான பேருந்து நிலையங்களில் ஏற்கெனவே பயணிகள் ஓய்வு

எடுப்பதற்காக அனைத்து வசதிகளுடன் கூடிய ஓய்வுக் கூடங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. ஒவ்வொரு 50 கி.மீ. தூரத்திற்கும் ஓய்வு அறைகள் அமைக்கும் திட்டம் இல்லை.

28--

பகுதிநேர நியாயவிலைக் கடைகள் திறத்தல்

வினா எண் 34280--**டாக்டர் ஆ. வெ. புருஷோத்தமன்:** மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) மக்களுக்குப் பயன்தரும் வகையில் தேவைக்கு ஏற்ற இடங்களில் பகுதிநேர நியாயவிலைக் கடைகள் திறப்பதில் ஏற்படும் காலதாமதத்தை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரை செய்யும் இடத்தில் பகுதிநேர நியாயவிலைக் கடை திறக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், உணவு அமைச்சர்:

(அ) கூடுமான வரையில் தாமதமின்றி பகுதிநேர நியாயவிலைக் கடைகள் மக்களுக்குப் பயன்தரும் வகையில் திறக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) அரசின் 828, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை 19-10-1989 நாளிட்ட அரசாணையில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படுமானால் சட்ட மன்ற உறுப்பினர் பரிந்துரை செய்யும் இடங்களில் பகுதிநேர நியாயவிலைக் கடைகள் திறக்க அரசு ஆவன செய்யும்.

29--

ரேஷன் கார்டுகளில் போட்டோ ஒட்டுதல்

வினா எண் 38588--**திரு. சிங்கை கோவிந்தராசு:** மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ரேஷன் கார்டுகளில் குடும்பத் தலைவர் போட்டோ ஒட்டுவது குறித்து அரசின் பரிசீலனையிலுள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், உணவு அமைச்சர் :

தமிழ்நாட்டில் குடும்ப அட்டைகளில் குடும்பத் தலைவரது புகைப்படம் ஒட்டப்படும் செயற்குறிப்பு அரசிடம் ஏதுமில்லை.

30--

குடும்ப அட்டைகள் பெற்றோர் விவரம்

வினா எண் *55299*--**திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:** மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருப்பத்தூர் தொகுதியில் *1994*ஆம் ஆண்டு குடும்ப அட்டைகள் பெற எத்தனை நபர்கள் விண்ணப்பித்து உள்ளனர்?

(ஆ) அதில் எத்தனை நபர்களுக்குக் குடும்ப அட்டைகள் கொடுக்கப்பட்டுள்ளன?

விடை--

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், உணவு அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): திருப்பத்தூர் தொகுதியில் *1994*-ஆம் ஆண்டு *1254* நபர்கள் புதிய குடும்ப அட்டை கோரி விண்ணப்பித்துள்ளனர். அதில் *221* தகுதியான நபர்களுக்கு மட்டும் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

31--

கூட்டுறவுத்துறை ரேஷன் கடைகள்

வினா எண் *55365*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கடைகளுடன் கூட்டுறவுத்துறை ரேஷன் கடைகளை இணைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், உணவு அமைச்சர் :

தமிழ்நாட்டு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேசன் கடைகளுடன் கூட்டுறவுத்துறை ரேஷன் கடைகளை இணைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

32--

நியாயவிலைக் கடை திறத்தல்

வினா எண் 80201--**திரு. கி. தருமலிங்கம்:** மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், அணைக்கட்டு ஒன்றியம், ஒங்கப்பாடி கிராம கூட்டுறவு நியாயவிலைக் கடையிலிருந்து, சென்றாயன் கொட்டாய் கிராமத்தில் ஒரு பகுதிநேர நியாயவிலைக் கடை திறக்கப்படுமா?

விடை--

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், உணவு அமைச்சர்:

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், அணைக்கட்டு ஒன்றியம், ஒங்கப்பாடி கிராமக் கூட்டுறவு நியாயவிலைக் கடை 467 குடும்ப அட்டைகளுடன் இராஜபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியினால் நடத்தப்பட்டு வருகிறது. சென்றாயன் கொட்டாய் கிராமத்தின் குடும்ப அட்டைகள் இக்கிராம கடையுடன் இணைக்கப்பட்டுள்ளன. ஒங்கப்பாடி கிராம கூட்டுறவு நியாயவிலைக் கடைக்கும் உத்தேச பகுதிநேரக் கடை அமைக்கக் கோரும் சென்றாயன் கொட்டாய் கிராமத்திற்கும் இடையே ஒரு கிலோ மீட்டர் தூரமே உள்ளது. சென்றாயன் கொட்டாய் கிராமத்தில் 160 குடும்ப அட்டைகளே உள்ளன. எனவே, சென்றாயன் கொட்டாய் கிராமத்தில் ஒரு பகுதிநேரக் கடை அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை.

33--

அரிசி நெல் கையிருப்பு (விவரம்) அறிவித்தல்

வினா எண் 84217--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அரிசி நெல் கையிருப்பை அரசிற்கு உடனுக்குடன் அறிவிக்குமாறு அரிசி ஆலை அதிபர்களுக்குக் கண்டிப்பான உத்தரவிட அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை--

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், உணவு அமைச்சர்:

அரிசி ஆலை ஒழுங்குமுறைச் சட்டம் 1958-ன் பிரிவு 9(2)-ன்படி அரிசி ஆலை அதிபர்களிடத்தில் உள்ள இருப்பு விவரத்தினை உரிமம் வழங்கும் அதிகாரிக்கு பிரதிமாதம் 5-ம்தேதிக்குள் அதற்காக ஏற்படுத்தப்பட்ட படிவம் 5-ல் தெரிவிக்க வேண்டும்.

34--

நியாயவிலைக் கடைகள் மூலம் மண்ணெண்ணெய் வழங்குதல்

வினா எண் 84221--**திரு வே. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நியாயவிலைக்கடைகளில் மண்ணெண்ணெயை முன்னரே அடைத்து வைக்கப்பட்ட டின்களிலோ அல்லது பாலிதீன் கேன்களிலோ வழங்க ஆவன செய்யப்படுமா?

விடை--

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், உணவு அமைச்சர்:

மண்ணெண்ணெயை டின்களிலோ அல்லது பாலிதீன் கேன்களிலோ அடைத்து விற்பனை செய்ய நேரிடின், மண்ணெண்ணெயின் விலையோடு டின்கள் அல்லது பாலிதீன் கேன்கள் ஆகியவற்றின் விலையையும் மண்ணெண்ணெயை அவற்றுள் அடைத்து நிரப்புவதற்கான கூலியையும் சேர்க்க வேண்டும். இதனால் பொது விநியோகத் திட்டத்தில் மண்ணெண்ணெயின் விலை மிக அதிகரிக்க நேரிடும். இதனை குடும்ப அட்டைதாரர்கள் ஏற்க முன்வரமாட்டார்கள். எனவே, நியாயவிலைக் கடைகளில் மண்ணெண்ணெயை அடைத்து வைக்கப்பட்ட டின்களிலோ அல்லது பாலிதீன் கேன்களிலோ வழங்க வழிவகைகள் இல்லை.

35--

ஏரிகளுக்கு மத்தியில் பாலம்

வினா எண் 61338--**திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி மடவாளம் அருகே மடவாளம் ஏரிக்கும் செலந்தம்பள்ளி ஏரிக்கும் மத்தியில் பாலம் கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை--

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:-

(அ) மற்றும் (ஆ) : சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலம் திருப்பத்தூர் ஆலங்காயம் சாலை கி.மீ 6/10ல் உள்ள பாலம். இச்சாலை ஒரு பெரிய மாவட்ட சாலை. மடவாளம் ஏரியிலிருந்து வெளிவரும் உபரிநீர் இப்பாலம் வழியாக செலந்தம் பள்ளி ஏரிக்கும் செல்கிறது. இப்பாலம் 1.58 கி.மீ அகலம் உடைய 5 கண்கள் உடைய கருங்கல் மூடு பாறையிலானது. இந்த இடம் குறுகலாகவும் மூடுபாறைகள் சில இடங்களில் வலுவிழந்தும் உடைந்தும் காணப்படுகின்றன. இப்பாலத்தை திரும்பக்கட்ட ரூ 5.00 இலட்சம் செலவாகும். இங்கு பாலம் கட்டுவதற்கு இதுவரை அரசின் அங்கீகரிக்கப்பட்ட யாதொரு திட்டத்திலும் இடம் பெறவில்லை.

ஆண்டுதோறும் திட்டப்பணிகளுக்கு அரசு நிதி ஒதுக்கீடு குறைவாக இருப்பதால் மேற்படி பாலத்தை அண்மைக்காலத்தில் திரும்பக் கட்டும் சாத்தியக்கூறுகள் இல்லை.

36--

கடலரிப்பு விவரம்

வினா எண் 78627--திரு. ஆ. ***பாலையா:*** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) குளச்சல் தொகுதி, கடியப்பட்டணம், மண்டைக்காடு, புதூர் குறும்பனை ஆகிய மீனவர் கிராமங்கள் கடலரிப்பால் பாதிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

TRUTH ALONE TRIUMPHS

விடை--

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) கடியப்பட்டணம் கிராமத்தில் பாத்திமா தெருவில் கற்குவியல் கடற்சுவர் கட்டும் பணிக்கு எல்.எஸ். 0மீ முதல் 76.50 மீ. வரை கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் ஜவஹர் வேலைவாய்ப்பு மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட மாவட்டத் திட்டம் ஆகியவற்றின் கீழ் ஆட்சி ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, மாவட்ட ஆட்சியரிடமிருந்து பண ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றவுடன் இப்பணிகள் மேற்கொள்ளப்படும். அதேபோல கடியப்பட்டணம் கிராமத்தில் எல்.எஸ். 80 மீ முதல் 150 மீ வரையுள்ள பணிக்கு விரைவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அரசின் ஒப்புதல் பெறத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மண்டைக்காடு புதூர் கிராமத்தில் கற்குவியல் கடற்சுவர் கட்டும் பணிக்கு, ஒப்பந்தப்புள்ளியும் கோரப்பட்டுள்ளது. ஒப்பந்தக்காரர் நிர்ணயிக்கப்பட்டவுடன் பணிகள் துவங்கப்படும். இடையில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள கடற்கரை பகுதியைக் காத்திட, மண்டைக்காடுபுதூர் கிராமத்தில் கற்குவியல் கடற்சுவர் கட்டுதல் பணிக்கு ரூ. 2.00 இலட்சத்திற்கு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவரால், ஆட்சி ஒப்பளிப்பு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வேலை முடியும் தருவாயில் உள்ளது.

குறும்பனை கிராமத்தில் கற்குவியல் கடற்சுவர் கட்டுவதற்கு அவ்வூர் மக்கள் வேறுபட்ட கருத்து கொண்டு உள்ளனர். ஊர் பொதுமக்கள் அனைவரும் ஒத்த விருப்பம் தெரிவித்தால் தடுப்புச் சுவர் கட்ட தீர்மானிக்கப்பட்டு மதிப்பீடு தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

37--

மாவட்ட தலைநகரங்களில் குடிசைமாற்று வாரியத்தின் பணிகள்

வினா எண் 84899--**திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் பணிகள் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் செயல்படுத்தப்பட அரசு ஆவன செய்யுமா?

1996 பிப்ரவரி 15]

விடை--

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்:

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பணிகள் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

38--

குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டுதல்

வினா எண் *87929*--**டாக்டர் ஜெ. பரந்தாமன்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் பேரணாம்பட்டு பெரிய காலனி மற்றும் உதயேந்திரம் பேரூராட்சி மேட்டுப்பாளையம் ஆகிய இடங்களில் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டித்தரப்படுமா?

விடை--

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் பேரணாம்பட்டு பெரிய காலனி மற்றும் உதயேந்திரம் பேரூராட்சி, மேட்டுப்பாளையம் ஆகிய இடங்களில் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

39--

தொழிலாளர்களுக்கு வாடகை குடியிருப்புக் கட்டுதல்

வினா எண் *88158*--**திரு. என்.ஆர். ராஜேந்திரன்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

காட்டுமன்னார் கோயில் தொகுதி அண்ணாமலை நகர் பேரூராட்சி, காட்டுமன்னார் கோயில் பேரூராட்சி ஆகிய இடங்களில் தொழிலாளர் வாடகை குடியிருப்பு கட்டிடங்கள் கட்டித் தரப்படுமா?

விடை--

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்:

காட்டுமன்னார் கோயில் தொகுதி அண்ணாமலை நகர் பேரூராட்சி காட்டுமன்னார் கோயில் பேரூராட்சி ஆகிய இடங்களில் தொழிலாளர்களுக்கான வாடகை குடியிருப்பு கட்டும் திட்டம் எதுவும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திடம் இல்லை. பொதுவாக தற்பொழுது தொழிலாளர்களுக்கு வாடகை வீடுகட்டும் திட்டம் எதுவும் வாரியத்தால் நிறைவேற்றப்படுவதில்லை. தொழிலாளர் மலிவு விலை வீட்டுவசதி (SIHS) திட்டம் தற்பொழுது செயலாக்கத்தில் இல்லை.

40--

ஆழ்குழாய் கிணறு தோண்டப் பயன்படும் இயந்திரம்

வினா எண் *47911*--திரு. **ஆர். சிங்காரம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழக்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் பணிக்கூட்டுறவு இணையத்திற்கு ஆழ்குழாய்க் கிணறு தோண்டப்பயன்படும் துளைபோடும் இயந்திரம் (Rig) சொந்தமாக எத்தனை உள்ளன?

(ஆ) தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்திற்கு அது போன்ற இயந்திரம் வாங்கப்படுமா?

விடை--

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) தற்போது தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் பணிக்கூட்டுறவு இணையத்திற்குச் சொந்தமாக பதிவு என்.டி. எண் *09* ஏ *3489* ஆழ்துளை இயந்திரம் (DS 450 DTH Rig) ஒன்று மட்டும் உள்ளது.

(ஆ) தற்போதைக்கு புது இயந்திரங்கள் வழங்கும் திட்டம் ஏதும் இல்லை.

41--

செயல் விளக்க திடல்கள் அமைத்தல்

வினா எண் 47918--திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) ஒருங்கிணைந்த வாசனைத் திரவியப் பயிர்கள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மஞ்சள் பயிரில் *450* செயல் விளக்க திட்டங்கள் அமைக்கப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கே அமைக்கப்பட்டன ?

1996 பிப்ரவரி 15]

விடை--

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

(அ) 1994-95-ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த வாசனைத் திரவியப் பயிர்கள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மஞ்சள் பயிரில் 900 செயல் விளக்கப் பாத்திகள் அமைக்கப்பட்டன.

(ஆ) கீழ்க்கண்ட மாவட்டங்களில செயல்விளக்கப் பாத்திகள் அமைக்கப்பட்டன:-

	மாவட்டம்	எண்ணிக்கை
1	சேலம்	600
2	பெரியார் }	
3	கோயம்புத்தூர் }	100
4	திருச்சிராப்பள்ளி }	
5	தென்னாற்காடு வள்ளலார்	100
6	தர்மபுரி	100
	மொத்தம்	900

42--

வாசனைத் திரவியம் பயிர்கள் அபிவிருத்தி

வினா எண் 47922--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) ஒருங்கிணைந்த ஊரக வாசனை திரவியப் பயிர்கள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சிறுவாசனை சாகுபடி பயிர்களுக்கு 600 தெளிப்பான்கள் வழங்கப்பட்டதா?

(ஆ) யார் யாருக்கு வழங்கப்பட்டது?

விடை--

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

(அ) 1994-95-ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த வாசனைத் திரவியப் பயிர்கள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சாகுபடியாளர்களுக்கு 927 தெளிப்பான்கள் தோட்டக்கலைத்துறையால் வழங்கப்பட்டன.

(ஆ) கீழ்க்கண்ட மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன:

மாவட்டம்		எண்ணிக்கை
1.	நீலகிரி	475
2.	சேலம்	100
3.	பெரியார்	
4.	கோயம்புத்தூர்	
5.	மதுரை	150
6.	திருச்சிராப்பள்ளி	50
7.	புதுக்கோட்டை	16
8.	தென்னாற்காடு வள்ளலார்	36
9.	தர்மபுரி	100
	மொத்தம்	927

43--

வெங்காய சாகுபடி மேம்பாடு திட்டம்

வினா எண் 47927--திரு. **ஆர். சிங்காரம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழகத்தில் வெங்காய சாகுபடி மேம்பாடு திட்டத்தின் கீழ் 1994-95-ல் வெங்காயம் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) திண்டுக்கல்லில் சாகுபடி தொடங்கப்பட்டுள்ளதா

விடை--

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) வெங்காய ஏற்றுமதிப் பணி, செயற்படுத்தப்படும் சாகுபடித் திட்டத்துடன் இணைந்தது அல்ல. எனினும், வெங்காய சாகுபடியாளர்கள் ஏற்றுமதி வாய்ப்பினைப் பயன்படுத்திட எடுத்துரைக்கப்பட்டு வருகிறார்கள். ஏற்றுமதிக்குரிய வெங்காய விதைகள் மற்றும் தொழில்நுட்ப அறிவுரைகள் தோட்டக்கலை துறையின் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

(ஆ) ஆம். திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் வெங்காய சாகுபடி தொடங்கப்பட்டுள்ளது.

44--

விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை

வினா எண் 48382--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு ளோண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

1996 பிப்ரவரி 15]

தமிழ்நாட்டில் மஞ்சள் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்க அரசு முன்வருமா?

விடை--

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் மஞ்சள் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு மத்திய அரசு திட்டம் மூலம் கீழ்க்கண்ட ஊக்கத்தொகைகள் அளிக்கப்பட்டு வருகின்றன:

1. புதிய ரக மஞ்சள் விதைக் கிழங்குகள் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகிக்கும் பொருட்டு 0.1 ஹெக்டேர் பரப்புள்ள மஞ்சள் செயல் விளக்கப் பாத்திகள் அமைக்கவும் அதற்கு ஆகும் இடுபொருள் செலவினத்தில் 50 சதவீதம் மானியம் வழங்கியும் புதிய ரகங்கள் புகுத்தப்படுகின்றன.

2. புதியதாக மஞ்சள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு முதல் ஆண்டில் இடுபொருள் செலவில் 25 சதவிதம் மானியம் நிதி ஒதுக்கீட்டிற்குத் தக்கவாறு வழங்கப்படுகிறது.

3. அறுவடைசெய்து பதப்படுத்திய மஞ்சளை நவீன முறையில் பாலிஷ் செய்ய 'பாலீஷ் ட்ரம்' வாங்க மானியம் ரூ.1500 வீதம் குறைந்த எண்ணிக்கையிலான விவசாயிகளுக்கு தோட்டக்கலை துறையால் வழங்கப்படுகின்றது. மேலும் இத்திட்டம் மத்திய அரசு நிதி ஒதுக்கீட்டின்படி (குறிப்பிட்ட இனத்திற்கு) செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

45--

கடலெண்ணெய் தயாரிக்கும் ஆலை

வினா எண் 61409--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் திருப்பத்தூர் தொகுதியில் நிலக்கடலை அதிகமாக விளைவதால் கடலெண்ணெய் தயாரிக்கும் ஆலை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

வடஆற்காடு அம்பேத்கார், திருவண்ணாமலை சம்புவராயர் மற்றும் செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டங்களுக்கு என்று தமிழ்நாடு எண்ணெய்

வித்துக்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தின் மூலமாக திருவண்ணாமலையில் கடலை எண்ணெய் பிழியும் ஆலை நிறுவப்பட்டுள்ளது. இதன் மூலம் முழுமையாக அரைவையினைச் செய்யாத நிலையில் அதே மாவட்டத்தில் திருப்பத்தூர் தொகுதியில் மற்றும் ஒரு ஆலை அமைக்க அரசிடம் தற்போது உத்தேசம் இல்லை.

46--

மண்மாதிரி குறிப்பு அட்டைகள்

வினா எண் 87312--திரு. கே.ஏ. மனோகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தர்மபுரி மாவட்டம், ஒசூர் ஒன்றியத்தில் மண்மாதிரி குறிப்பு அட்டைகள் எத்தனை பண்ணைக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன?

விடை---

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

விவசாயிகளுக்கு மண் வள அட்டை வழங்கும் திட்டம் 1994-95 ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்டம், ஒசூர் வட்டாரத்தில் ஒரு சிறப்புத் திட்டமாகக் கொண்டுவரப்பட்டது. இங்குள்ள மண் பரிசோதனை நிலையம் மற்றும் நடமாடும் மண் ஆய்வுக் கூடம் மூலம் 10,061 மண் மாதிரி ஆய்வு செய்யப்பட்டு உரப் பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது. ஒசூர் வட்டாரத்தில் பேகப்பள்ளி கிராமத்தில் 125 விவசாயிகளுக்கு மண் வள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

47--

பால் உற்பத்தியாளர் சங்க ஊழியர்களுக்கு ஊதியம் வழங்குதல்

வினா எண் 65005--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கிராமப்புறப் பால் உற்பத்தியாளர் சங்க ஊழியர்களுக்கு பால்வளத் துறையிலிருந்து ஊதியம் வழங்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

1996 பிப்ரவரி 15]

விடை--

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): கிராமப்புற பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஒவ்வொன்றும் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகளின்கீழ் பதிவு செய்யப்பட்டு செயல்பட்டு வரும் தனிப்பட்ட நிறுவனங்கள் ஆகும். எனவே, கிராமப்புற பால் உற்பத்தியாளர் சங்க ஊழியர்களுக்கு பால்வளத் துறையிலிருந்து ஊதியம் வழங்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

48--

நகரங்களில் தானியங்கி பால் வழங்கும் நிலையம்

வினா எண் *84887*--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சென்னையில் உள்ளது போல் தமிழகத்தில் உள்ள அனைத்து நகரங்களிலும் தானியங்கி பால் வழங்கும் நிலையம் அமைக்கப்படுமா?

விடை--

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர்:

மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் நிதி நிலைமை மற்றும் சாத்தியக்கூறுகளைக் கணக்கில் கொண்டு சென்னையில் உள்ளது போல் தமிழகத்தில் உள்ள அனைத்து நகரங்களிலும் தானியங்கி பால் வழங்கும் நிலையம் அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

49--

திருப்பத்தூரில் ஆவின் பால் நிலையம்

வினா எண் *84893*--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூரில் ஆவின் பால் நிலையம் திறக்கப்பட அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர்:

வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூரில் ஆவின் பாலகம் (சூடான பால் விற்பனை நிலையம்) ஏற்கெனவே கோர்ட் வளாகம் அருகாமையில் ஆரம்பித்து ஒன்றிய ஊழியர் ஒருவரை நியமித்து செயல்பட்டு வருகிறது. அங்கு சரிவர விற்பனை ஆகாத நிலையில், திருப்பத்தூரில் புதிய பஸ் நிலையத்தில் இடம் கோரி, நகராட்சி ஆணையர் அவர்களுக்கு ஒன்றியத்தினால் கடிதம் எழுதப்பட்டு அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், திருப்பத்தூரில் பொது மக்களிடமிருந்து புகார்கள் வந்தால் விற்பனைப் பிரிவில் உள்ள ஆய்வுக்குழு (Squad) உடனடியாகச் சென்று நேரில் விசாரணை செய்து குறைகள் நிவர்த்தி செய்யப்படுகின்றன.

50--

பால் குளிரூட்டும் நிலையத்தை மாற்றி அமைத்தல்

வினா எண் 86918--**டாக்டர் சு. மணிமேகலை:** *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரியலூர் ஒன்றியம், விளாங்குடியில் கைக்காட்டி எனும் இடத்தில் ஜெயங்கொண்டத்திலுள்ள பால்குளிரூட்டும் நிலையத்தை மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. தே. ஜனார்த்தனன், பால்வளத் துறை அமைச்சர்:

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஜெயங்கொண்டத்திலுள்ள பால் குளிரூட்டும் நிலையத்தை விளாங்குடியில் கைக்காட்டி எனும் இடத்திற்கு மாற்றி அமைப்பதற்கான கருத்துரு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

51--

மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

வினா எண் 87355--**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--*

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதியில் மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) மேலும் ஏற்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர்:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதியில் 31-8-1995-ம் தேதி வரை, 9--மகளிர் மற்றும் அனைத்து மகளிர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு, செயல்பட்டு வருகின்றன.

(ஆ) மேலும், 2 மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 1995-96-ம் ஆண்டில் அமைக்கப்பட்டு உள்ளன.

52--

ரப்பர் ஏற்றுமதி

வினா எண் 65133--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

இயற்கை ரப்பரை ஏற்றுமதி செய்ய அனுமதி வழங்குமாறு மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா?

விடை---

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

மத்திய அரசின் தற்போதைய ஏற்றுமதி கொள்கையின்படி இயற்கை ரப்பரை ஏற்றுமதி செய்ய எந்தத் தடையுமில்லை. எனவே இது குறித்து மாநில அரசு மத்திய அரசுக்கு எவ்விதப் பரிந்துரையும் செய்யத் தேவையில்லை.

53--

கோ-ஆப்டெக்ஸ் மையங்கள்

வினா எண் 61464--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ்நாட்டில் வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் எத்தனை கோ-ஆப்டெக்ஸ் மையங்கள் உள்ளன?

(ஆ) கோ-ஆப்டெக்ஸ் மையங்கள் விற்பனையை அதிகரிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

விடை--

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:

(அ) வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் 11 கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் இயங்கி வருகின்றன.

(ஆ) தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழகம் போன்ற நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் உதவி பெற்று கோ-ஆப்டெக்ஸ் விற்பனை மையங்களை நவீனப்படுத்தி விற்பனையினை அதிகரிக்க, தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அத்துடன் விற்பனை மேம்பாட்டிற்கு அரசு, ஒரு ஆண்டில் 100 நாட்களுக்கு சிறப்புத் தள்ளுபடி வழங்கி வருகின்றது. மேலும் பண்டிகைக்கால விற்பனையை ஊக்குவிக்க, பரிசுக் கூப்பன் திட்டம் போன்றவையும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

54--

கூட்டுறவுத்துறை நூற்பாலைகள்

வினா எண் 61465--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறை நூற்பு ஆலைகள் எத்தனை உள்ளன?

(ஆ) அவைகள் இலாபத்தில் இயங்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

விடை--

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாட்டில் மொத்தம் 18 கூட்டுறவு நூற்பாலைகள் உள்ளன:

(ஆ) பஞ்சின் விலை அதிகரித்துள்ள நிலையில் நூற்பாலைகளில் உள்ள இயந்திரங்கள் பழுதடைந்து செயல் திறனில் பின்தங்கிய நிலைமையில் உள்ளதால், நூற்பாலைகளை இலாபகரமாக இயக்க முடியவில்லை. ஆயினும் ஆலைகளின் தொடர்ந்த இயக்கத்தினைக்

கருதி "நிவாரணத்திற்குத் தகுதியான நிறுவனம்" (Relief Undertakings) எனவும் அரசு அறிவித்து உள்ளது.

55--

வெளி மாநிலங்களில் கைத்தறி விற்பனை நிலையங்கள்

வினா எண் *61469*--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வெளி மாநிலங்களில் கைத்தறி விற்பனை நிலையங்கள் எங்கெங்கு உள்ளன?

(ஆ) அவை அனைத்தும் லாபத்தில் இயங்குகின்றனவா?

விடை---

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:

(அ) வெளி மாநிலங்களில் *174* கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் இயங்கி வருகின்றன மாநிலங்கள் வாரியாக அவைகள் இயங்கும் விவரம் கீழ்வருமாறு:

(1)	ஆந்திரப் பிரதேசம்	..	*54*
(2)	கர்நாடகம்	..	*38*
(3)	கேரளா	..	*37*
(4)	மகாராட்டிரா	..	*10*
(5)	மத்தியப் பிரதேசம்	..	*3*
(6)	கோவா	..	*1*
(7)	குஜராத்	..	*1*
(8)	புதுதில்லி	..	*7*
(9)	உத்திரபிரதேசம்	..	*6*
(10)	பஞ்சாப்	..	*1*
(11)	ராஜஸ்தான்	..	*1*
(12)	மேற்கு வங்காளம்	..	*7*
(13)	பீகார்	..	*2*
(14)	ஒரிசா	..	*4*
(15)	பாண்டிச்சேரி யூனியன் பிரதேசம்.	..	*2*
	மொத்தம்	..	***174***

(ஆ) இவற்றுள், 65 விற்பனை நிலையங்கள் இலாபத்தில் இயங்கி வருகின்றன.

56--

கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை விரிவுபடுத்துதல்

வினா எண் 61470--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருப்பத்தூரில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை விரிவுபடுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:

'இல்லை'

57--

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் தயாரிக்கும் கைத்தறித் துணிகள்

வினா எண் 65129--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

உலக நாடுகளில் நடக்கும் துணிக் கண்காட்சியில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் தயாரிக்கும் கைத்தறித் துணிகளை வைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:

இவ்வாண்டு, கீழ்க்காணும் உலக நாடுகளில் நடந்த வர்த்தகக் கண்காட்சிகளில், "தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம்" கலந்துகொண்டு, தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் கைத்தறித் துணிகளை அறிமுகப்படுத்தியுள்ளது :

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வ.எண்.	வர்த்தகக் கண்காட்சி பெயர்	இடம்	நாள்
1	எய்ம் டெக்ஸ்டைல் கண்காட்சி	பிராங்பர்ட் ஜெர்மனி	ஜனவரி 11–14–1995
2	இண்டர்நேஷனல் ஸ்பிரிங் கண்காட்சி 1995.	சிங்கப்பூர்	மே 17–21–1995
3	பைய்யர் செல்லர் மீட்	டோக்கியோ, ஜப்பான்.	ஜூன், 6–8–1995.
4	இந்தியா–அமெரிக்கா எக்ஸ்போ.	அட்லாண்டிக் நகர் அமெரிக்கா.	ஜூன், 14–16–1995.

மேலும் இனிவரும் வெளிநாட்டு வர்த்தகக் கண்காட்சிகளிலும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் கலந்துகொண்டு ஏற்றுமதியை விரிவுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

58--

கோ-ஆப்டெக்ஸ் விற்பனைக் கடைகள் துவக்குதல்

வினா எண் 65309--**டாக்டர் ஜெ. பரந்தாமன்:** மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பேரணாம்பட்டு தொகுதி, உதயேந்திரம், துத்திபட்டு பேரூராட்சிகளில் கோ–ஆப்டெக்ஸ் விற்பனைக் கடைகள் துவக்கப்படுமா?

(ஆ) ஆமெனில், இந்த ஆண்டு துவக்கப்படுமா?

விடை--

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:

(அ) உதயேந்திரம் பேரூராட்சி வாணியம்பாடி கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்திலிருந்து 2 கிலோமீட்டர் தொலைவில் உள்ளதாலும், துத்திப்பட்டு ஊராட்சி ஆம்பூர். கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில், மிக அருகாமையில் உள்ளதாலும், இந்த இரண்டு ஊர்களிலும் உள்ள பொதுமக்கள் தற்போது தங்கள் கைத்தறித் துணித் தேவைகளை வாணியம்பாடி

மற்றும் ஆம்பூர் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களில் வாங்கிப் பூர்த்தி செய்துகொள்கிறார்கள். இந்த இரண்டு ஊர்களிலும் மிகக் குறைவான மக்கள் தொகை உள்ளதால் அங்கு நிரந்தமாகக் கோ-ஆப்டெக்ஸ் நிலையங்கள் திறப்பதற்கான உத்தேசம் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

59--

ஆபாச சுவரொட்டிகளைத் தடை செய்தல்

வினா எண் *64954*--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்**: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஆபாச சினிமா சுவரொட்டிகளை ஒட்டுவதற்குத் தடை செய்வதைக் குறித்து அரசிடம் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

விடை---

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:

ஆபாச சினிமா சுவரொட்டிகளை ஒட்டுவதற்குத் தடை செய்வதற்காக. இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தவெளி இடங்கள் (அழகு கெடுக்கப்படுவதைத் தடுத்தல்) திருத்தச் சட்டம் ஆகியவற்றில் போதிய வழிவகைகள் செய்யப்பட்டு உள்ளதால், இது குறித்து அரசிடம் புதிய செயற்குறிப்பு ஏதுமில்லை.

60--

திரைப்படக் கல்லூரியில் மாணவர்களைச் சேர்த்தல்

வினா எண் *81837*--**திருமதி ப. சரஸ்வதி**: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திரைப்படக் கல்லூரியில் மாணவர்களைச் சேர்ப்பதற்குத் தகுதி யாது?

(ஆ) கிராமப்புற மாணவர்கட்கு சலுகை அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1996 பிப்ரவரி 15]

விடை--

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ):

***(1) பட்டயப் பயிற்சிகள்* (Diploma Courses)**

(i)	இயக்குதல் மற்றும் திரைக்கதை எழுதுதல். (Direction and Screen play Writing)	திரைப்படக் கல்லூரியில் மேற்கண்ட பாடத்தில் பட்டயப் பயிற்சியில் மூன்று ஆண்டுகள் பயிலுவதற்கு பல்கலைக் கழகத்தில் ஏதேனுமொரு பட்டப் படிப்பை கல்வித் தகுதியாக பெற்றிருத்தல் வேண்டும்.
(ii)	ஒளிப்பதிவு, (Cinematography)	பட்டயப் பயிற்சியில் மூன்று ஆண்டுகள் பயிலுவதற்கு மேல்நிலை பள்ளித் தேர்வில் (Plus two) பௌதீகம், இரசாயனம் ஆகியவற்றில் சிறப்புப் பாடமாக அல்லது ஒரு குறிப்பிட்ட தொழில் சார்ந்த பயிற்சியில் (Vocational) போட்டோ பாடம் சிறப்புப் பாடமாகவும் எடுத்து முதல் முயற்சியில் எல்லா இனத்தவரும் 60% மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு இணையாக கல்வித் தகுதிகள் பெற்றிருத்தல் வேண்டும்.
(iii)	ஒளிப்பதிவு மற்றும் ஒலிப் பொறியியல். (Sound Recording and Sound Engineering)	இப்பாடத்தில் பட்டயப் பயிற்சியில் மூன்று ஆண்டுகள் பயிலுவதற்கு மேல்நிலைப் பள்ளித் தேர்வில் (Plus two) பௌதீகம், இரசாயனம் ஆகியவற்றை சிறப்புப்

		பாடமாகவும் அல்லது ஒரு குறிப்பிட்ட தொழில் சார்ந்த பயிற்சியில் (Vocational) வானொலி மற்றும் தொலைக்காட்சி அல்லது வீட்டு உபயோக மின் அணுக்கருவிகள் ஆகியவற்றை சிறப்புப் பாடமாகவும் எடுத்து முதல் முயற்சியில் எல்லா இனத்தவரும் 60% மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு இணையான கல்வித்தகுதி பெற்றிருத்தல் வேண்டும்.
(iv)	பிலிம் சுருள் பதனிடுதல் (Film Processing)	படக்கழுவுதல் டிப்ளமோ பயிற்சியில் மூன்று ஆண்டுகள் பயிலுவதற்கு மேல்நிலைப் பள்ளித் தேர்வில் (Plus two) பௌதீகம் மற்றும் இரசாயனம் ஆகியவற்றை சிறப்புப் பாடமாகவும் அல்லது ஒரு குறிப்பிட்ட தொழில் சார்ந்த பயிற்சியில் (Vocational) படம் எடுப்பதை சிறப்புப் பாடமாகவும் எடுத்து முதல் முயற்சியில் எல்லா இனத்தவரும் 60% மதிப்பெண்களுடன், தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு இணையான கல்வித் தகுதி பெற்றிருத்தல் வேண்டும்.
(v)	படத் தொகுப்பு: (Film Editing)	பட்டயப் பயிற்சியில் மூன்று ஆண்டுகள் பயிலுவதற்கு மேல்நிலைப் பள்ளித் தேர்வில் (எந்த பிரிவாக இருந்தாலும்) முதன்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1996 பிப்ரவரி 15]

	முயற்சியில் எல்லா இனத்தவரும் *60%* மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.
(3) சான்றிதழ் பயிற்சி (Certificate Course) (i) நடிப்பு (Acting)	நடிப்புப்பாடச் சான்றிதழ் பயிற்சியில் ஓராண்டு பயிலுவதற்கு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு செய்து மேல்நிலைப்பள்ளியில் சேர்வதற்கு தகுதியுடையவராய் இருத்தல் வேண்டும்.

(2) கிராமப்புற மாணவர்கட்கு எனத் தனியாக சலுகைகள் அளிக்க அரசிடம் செயற்குறிப்பு எதுவுமில்லை. இருப்பினும், நகர்ப்புற மாணவர்களைவிட சமீப காலங்களில் கிராமப்புற மாணவர்கள் இந்நிறுவனத்தில் அதிக அளவில் சேர்ந்து பயிற்சி பெற்று வருகின்றனர்.

61--

தவில் வித்வான் என்.டி. மீனாட்சி சுந்தரம்பிள்ளை நூற்றாண்டு விழா

வினா எண் *87555*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மறைந்த தவில் வித்வான் நீடாமங்கலம் என்.டி. மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:

இது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

62--

கவிஞர் பாரதியார் பவள விழா

வினா எண் *91974*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தேசிய கவிஞர் பாரதியாரின் பவள விழாவை அரசு விழாவாக நாடு முழுவதும் கொண்டாடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை---

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:

இதுகுறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

63--

உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக உயர்த்துதல்

வினா எண் 48992---**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

பெரியார் மாவட்டம், தாராபுரம் வட்டம் புஞ்சைத் தலையூர் அரசினர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

தற்போதைக்கு இல்லை.

64--

குலவிளக்கு ஊராட்சியில் நூலகம் அமைத்தல்

வினா எண் 54411--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், குலவிளக்கு ஊராட்சி பூசாரிபாளையம், பின்னம்பாளையம், காளியம்பாளையம், பூசாரிபாளையம் அரிசன தெரு, புதுப் பாளையம், கோவில்பாளையம் ஆதிதிராவிடர் காலனி, கோவில்பாளையம், கனகம்பாளையம், மொசுக்கவுண்டன் புதூர், எல்லக்காடு புதூர் ஆகிய கிராமங்களில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

1996 பிப்ரவரி 15]

விடை––

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

மேற்படி கிராமங்களில் மக்கட்தொகை *1000*–க்கும் கீழ் உள்ளதால், பொது நூலக விதிமுறைப்படி அக்கிராமங்களில் கிளை நூலகங்கள் அமைக்க வழிவகையில்லை. இருப்பினும், அக்கிராமங்களில் பகுதிநேர நூலகம் அமைப்பதற்காக கீழ்க்கண்ட வசதிகளைச் செய்து தந்தால், அக்கிராமங்களில் பகுதிநேர நூலகம் அமைக்கத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் :

1. பகுதிநேர நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட பத்து சென்ட் காலிமனை மாவட்ட நூலக அலுவலர் பெயரில் பத்திரம் பதிவு செய்து தரப்பட வேண்டும்.

2. ரூ.2,000/– (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) மதிப்புள்ள நூலகத்திற்குத் தேவையான தளவாடங்கள் இலவசமாகவோ அல்லது தொகையோ வழங்கப்பட வேண்டும்.

3. பகுதிநேர நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டப்படும் வரை நூலகம் செயல்படுத்த நல்ல நிலையிலுள்ள உறுதியான இலவசக் கட்டடம் வழங்கப்பட வேண்டும்.

4. பகுதிநேர நூலகத்திற்குக் குறைந்தது *100* உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

5. ரூ.1000/– செலுத்தி புரவலர் ஒருவர் சேர்க்கப்பட வேண்டும்.

65––

மொடக்குறிச்சி ஒன்றிய கிராமங்களில் நூலகம் அமைத்தல்

வினா எண் *54438*––**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா––

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், முகாசி அனுமன்பள்ளி ஊராட்சி, ராயபாளையம், அனுமன் பள்ளி, பொத்து முட்டி பாளையம், கள்ளக் கவுண்டர் பாளையம், கோப்பன் காட்டு ஆதி திராவிடர் தெரு, ரொட்டிபாளையம், கள்ளக்கவுண்டன் பாளையம், கொளத்தூர் வில்லி காட்டுப் புதூர், கோவில் பாளையம், பவளத்தான் கவுண்டன் வலசு, ஆகிய கிராமங்களில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

பொது நூலக விதி 45 (பி)-ன் படி ஒரு கிராமத்தின் மக்கட் தொகை 5,000 க்கும் மேல் இருந்தால் மட்டுமே அக்கிராமத்தில் கிளை நூலகம் திறக்க வழிவகையுள்ளது.

மேற்படி கிராமங்களில் 1991-ம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்பின்படி 1000-க்கும் குறைவாக மக்கள் தொகை உள்ளதால், அக்கிராமங்களில் கிளை நூலகங்கள் திறக்க வழி வகையில்லை.

இருப்பினும், அக்கிராமங்களில் வசிக்கும் மக்களின் நலன் கருதி அப்பகுதிகளில் பகுதி நேர நூலகங்கள் அமைத்துத்தர அக்கிராம மக்கள் கீழ்க்கண்ட வசதிகளைச் செய்து தந்தால், உடனடியாக பகுதி நேர நூலகங்கள் அமைத்துத் தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும் :

1. பகுதிநேர நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட பத்து சென்ட் காலிமனை மாவட்ட நூலக அலுவலர் பெயரில் பத்திரம் பதிவு செய்து தரப்பட வேண்டும்.

2. ரூ.2,000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) மதிப்புள்ள நூலகத்திற்குத் தேவையான தளவாடங்கள் இலவசமாகவோ அல்லது தொகையோ வழங்கப்பட வேண்டும்.

3. பகுதிநேர நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டப்படும் வரை நூலகம் செயல்பட நல்ல நிலையிலுள்ள உறுதியான இலவசக் கட்டடம் வழங்கப்பட வேண்டும்.

4. பகுதிநேர நூலகத்திற்குக் குறைந்தது 100 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

5. ரூ.1,000/- செலுத்தி புரவலர் ஒருவர் சேர்க்கப்பட வேண்டும்.

66--

சிவகிரி ஊராட்சியில் நூலகம் அமைத்தல்

வினா எண் 54462--திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், சிவகிரி ஊராட்சி சின்னரங்க கவுண்டன் வலசு, ரங்க சமுத்திரம், தொப்ப பாளையம்,

1996 பிப்ரவரி 15]

கவுண்டன்பாளையம், வேலாயுதம் பாளையம், சானார் பாளையம், பாலமேட்டுப் புதூர், கஸ்பா, கொமாரவலசுர், அண்ணாமலை கோட்டை, கோட்டைப்புதூர், தலைய நல்லூர், சின்னிய கவுண்டன் பாளையம், மொசு கவுண்டன் புதூர், பெரிய காட்டூர், எல்லப்பாளையம், சிலுவம் பாளையம், நம்ம கவுண்டம் பாளையம், மோளவிநாயகம், வேட்டுவ பாளையம், மாரப்பம்பாளையம் ஆகிய கிராமங்களில் நூலகம் அமைப்பது பற்றிய செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

மேற்படி கிராமங்களில் *1991*-ம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்பின்படி *500* மக்கட் தொகைக்கும் கீழ் உள்ளது. அக்கிராமங்களில் பொது நூலக வசதி விதி *45* (பி)-யின்படி போதுமான மக்கள் தொகை இல்லாததால் கிளை நூலகங்கள் அமைக்க வழிவகையில்லை. எனினும் அக்கிராம மக்கள் நலம் கருதி அவர்கள் கீழ்க்கண்ட வசதிகளைச் செய்து தந்தால், அக்கிராமங்களில் பகுதி நேர நூலகம் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் ;

1. நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட பத்து சென்ட் காலிமனை நன்கொடையாக மாவட்ட நூலக அலுவலரின் பெயரில் பத்திரம் பதிவு செய்து தரப்பட வேண்டும்.

2. தற்போதைக்கு பகுதி நேர நூலகம் இயங்க உறுதியான நல்ல நிலையிலுள்ள கட்டடம் வாடகையின்றி வழங்கப்பட வேண்டும்.

3.. ரூ.*2,000/-* (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) ரொக்கமாகவோ அல்லது நூலகத்திற்குத் தேவையான தளவாடங்களாகவோ நன்கொடையாக வழங்கப்பட வேண்டும்.

4. குறைந்த பட்சம் நூறு உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

5. ரூ.*1,000/-* செலுத்தி புரவலர் ஒருவர் சேர்க்கப்பட வேண்டும்.

67--

கொந்தளம் ஊராட்சியில் நூலகம் அமைத்தல்

வினா எண் *54482*--திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், கொத்தளம் ஊராட்சி வீரசங்கிலி, மாரியம்மன் கோவில் புதூர், கொந்தளம், ஆதி திராவிடர் காலனி, கொந்தளம் காளி பாளையம், கள்ளாபுரம் கோட்டை, பூசாரி பாளையம், மஸ்திட்டு, கோட்டைக்காட்டு வலசு, புதூர், ஆண்டிக்காட்டுப் பாளையம், வேளாண்காட்டுப் பாளையம், திட்டான்பாளையம், பொண்ணாங்காட்டூர், குள்ள கவுண்டனூர், முத்தையன் வலசு, பெரும் பருப்பு, காரக்காட்டு வலசு, ஆகிய கிராமங்களில் நூலகம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

பொது நூலக விதி 45(பி)-யின்படி போதுமான மக்கள் தொகை இல்லாததால், கிளை நூலகங்கள் திறக்க வழிவகையில்லை. இருப்பினும், அக்கிராமங்களில் பகுதிநேர நூலகம் திறக்க கீழ்க்கண்ட நிபந்தனைகளை அக்கிராம மக்கள் பூர்த்தி செய்து தந்தால் பகுதி நேர நூலகங்கள் திறக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம் :

நிபந்தனைகள் :-

1. பகுதிநேர நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட பத்து சென்ட் காலிமனை மாவட்ட நூலக அலுவலர் பெயருக்கு பத்திரம் பதிவு செய்து தரப்பட வேண்டும்.

2. ரூ.2,000/- மதிப்புள்ள நூலகத்திற்குத் தேவையான தளவாடங்களோ அல்லது தொகையோ நன்கொடையாக வழங்கப்பட வேண்டும்.

3. பகுதிநேர நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் வரை நூலகம் செயல்பட நல்ல நிலையிலுள்ள இலவசக் கட்டடம் வழங்கப்பட வேண்டும்.

4. பகுதிநேர நூலகத்திற்குக் குறைந்தது 100 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

5. புரவலர் ஒருவர் ரூ.1,000/- செலுத்தி சேர்க்கப்பட வேண்டும்.

68--

அஞ்சூர் ஊராட்சியில் நூலகம் அமைத்தல்

வினா எண் 54502--திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

1996 பிப்ரவரி 15]

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், அஞ்சூர் ஊராட்சி நடுப்பாளையம், வடக்கு நல்ல செல்லிபாளையம், முத்துக்கவுண்டன்பாளையம், தெற்கு நல்ல செல்லிபாளையம், பருத்திக் கொட்டாம் பாளையம், குள்ளம்பாளையம், காரவலசு, காட்டூர், பொரசப்பாளையம், ராமநாதபுரம் ஆகிய கிராமங்களில் நூலகம் அமைப்பது பற்றி அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

தமிழ்நாடு நூலக விதி 45 (பி)-ன் படி 5,000-க்கு மேல் மக்கட்தொகை உள்ள கிரமங்களில் மட்டுமே கிளை நூலகங்கள் திறக்க வழிவகை உள்ளது.

மேற்படி கிராமங்களில் மக்கட் தொகை 1,000-க்கும் கீழ் உள்ளதால், அக்கிராமங்களில் தற்போது நூலகம் அமைக்க வழிவகையில்லை. இருப்பினும், அக்கிராம மக்கள் கீழ்க்காணும் வசதிகளை உருவாக்கித் தந்தால் அக்கிராமங்களில் பகுதிநேர நூலகங்கள் அமைக்கத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

நிபந்தனைகள்:

1. பகுதி நேர நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட 10 சென்ட் காலிமனை மாவட்ட நூலக அலுவலர் பெயருக்கு பத்திரப்பதிவு செய்து தரப்பட வேண்டும்.

2. ரூ.2,000/- மதிப்புள்ள நூலகத்திற்குத் தேவையான தளவாடங்களோ அல்லது தொகையோ நன்கொடையாக வழங்கப்பட வேண்டும்.

3. பகுதிநேர நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் வரை நூலகம் செயல்பட நல்ல நிலையிலுள்ள இலவசக் கட்டடம் வழங்கப்பட வேண்டும்.

4. பகுதிநேர நூலகத்திற்குக் குறைந்தது 100 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

5. ரூ.1,000/- செலுத்தி புரவலர் ஒருவர் சேர்க்கப்பட வேண்டும்.

69--

பழநத்தத்தில் தொடக்கப்பள்ளி துவக்குதல்

வினா எண் 57178--திரு. கே.ஏ. மனோகரன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஒசூர் ஊராட்சி ஒன்றியம் முத்தாளி ஊராட்சி பழநத்தம் கிராமத்தில் தொடக்கப் பள்ளி துவக்க அரசு முன் வருமா?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

ஒசூர் ஊராட்சி ஒன்றியம், முத்தாளி ஊராட்சி, பழநத்தம் கிராமத்தில் தொடக்கப் பள்ளி துவங்கக் கோரி அரசுக்கு எந்தப் பரிந்துரையும் பெறப்படவில்லை. மேற்படி பழநத்தம் கிராமத்தில் புதிய தொடக்கப் பள்ளி துவங்கக் கோரி கருத்துருக்கள் பெறப்பட்டால் தேவையின் அடிப்படையில் பரிசீலனை செய்ய இயலும்.

70--

காலகம் ஊராட்சியில் தொடக்கப்பள்ளி தொடங்குதல்

வினா எண் 59812--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், காலகம் ஊராட்சி, அஞ்சூரணிக் காட்டில் ஒரு துவக்கப் பள்ளி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

பேராவூரணி ஒன்றியம் காலகம் ஊராட்சி அஞ்சூரணிக் காட்டில் புதிய ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு எதுவும் இல்லை. இப்பொருள் குறித்து மேற்படி கிராமத்தில் 1995-96-ம் கல்வியாண்டில் புதிய துவக்கப்பள்ளி துவங்கக் கோரி கருத்துருக்கள் எதுவும் பெறப்படவில்லை. கருத்துருக்கள் பெறப்பட்டால் தேவையின் அடிப்படையில் பரிசீலிக்க இயலும்.

71--

ஓராசிரியர் பள்ளி அமைத்தல்

வினா எண் *61869*--திரு. இரா. தங்கராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஆண்டிமடம் தொகுதி, தெத்தேரியில் ஓராசிரியர் பள்ளி ஒன்று அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: ஆண்டிமடம் தொகுதி, தெத்தேரியில் ஓராசிரியர் பள்ளி ஒன்று அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

கருத்துருக்கள் பெறப்பட்டால் பரிசீலிக்க இயலும்.

72--

கொங்குடையாம் பாளையம் ஊராட்சியில் நூலகம் அமைத்தல்

வினா எண் *67216*--திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், கொங்குடையாம் பாளையம் ஊராட்சி, சத்திரக்காட்டு வலசு, திட்டுப்பாறைபுதூர் சத்திரக்காட்டு வலசு, புதூர் புதுக்காட்டு வலசு ஆகிய கிராமங்களில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: தமிழ்நாடு பொது நூலக விதிகளின்படி நூலகம் தொடங்க போதுமான மக்கள் தொகை இல்லாததால், கிளை நூலகம் அமைக்க வழிவகை இல்லை. இருப்பினும், பகுதி நேர நூலகம் அமைக்க கீழ்க்கண்ட நிபந்தனைகளை அக்கிராம மக்கள் பூர்த்தி செய்து தரும் பட்சத்தில் பகுதிநேர நூலகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

நிபந்தனைகள்:

1. பகுதி நேர நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட *10* சென்ட் காலிமனை மாவட்ட நூலக அலுவலர் பெயருக்கு பத்திரப்பதிவு செய்து தரப்பட வேண்டும்.

2. ரூ.2,000/- மதிப்புள்ள நூலகத்திற்குத் தேவையான தளவாடங்களோ அல்லது தொகையோ நன்கொடையாக வழங்கப்பட வேண்டும்.

3. பகுதிநேர நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டப்படும் வரை நூலகம் செயல்பட நல்ல நிலையிலுள்ள இலவசக் கட்டடம் வழங்கப்பட வேண்டும்.

4. பகுதிநேர நூலகத்திற்கு குறைந்தது 100 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

5. ரூ.1,000/- செலுத்தி புரவலர் ஒருவர் சேர்க்கப்பட வேண்டும்.

73--

மொடக்குறிச்சியில் நூலகம் அமைத்தல்

வினா எண் 67220--திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், மொடக்குறிச்சி ஊராட்சி, மொடக்குறிச்சி கிராமத்தில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

மொடக்குறிச்சி கிராமத்தில் ஏற்கனவே கிளை நூலகம் ஒன்று இயங்கி வருகிறது.

74--

மொடக்குறிச்சி ஒன்றியத்தில் நூலகம் அமைத்தல்

வினா எண் 67221--திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், புஞ்சலைக்காபுரம் ஊராட்சி, கொமாரபாளையம், புஞ்சலைக்காபுரம், புதுவலசு, புஞ்சலைக்காபுரம் ஆதி திராவிடர் காலனி ஆகிய கிராமங்களில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

1996 பிப்ரவரி 15]

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

தமிழ்நாடு பொது நூலக விதிகளின்படி போதிய மக்கள் தொகை இல்லாத காரணத்தால், அக்கிராமங்களில் கிளை நூலகம் அமைக்க வழிவகையில்லை. தற்போதைக்கு பகுதி நேர நூலகம் அமைக்கக் கீழ்க்காணும் நிபந்தனைகளை அக்கிராம மக்கள் பூர்த்தி செய்து தந்தால், பகுதி நேர நூலகங்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம்.

நிபந்தனைகள்:

1. பகுதி நேர நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட பத்து சென்ட் காலிமனை மாவட்ட நூலக அலுவலரின் பெயருக்கு பத்திரம் பதிவு செய்து தரப்பட வேண்டும்.

2. ரூ.2,000/- மதிப்புள்ள நூலகத்திற்குத் தேவையான தளவாடங்களோ அல்லது தொகையோ நன்கொடையாக வழங்கப்பட வேண்டும்.

3. பகுதிநேர நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டப்படும் வரை நூலகம் செயல்படுத்த நல்ல நிலையிலுள்ள இலவசக் கட்டடம் வழங்கப்பட வேண்டும்.

4. பகுதிநேர நூலகத்திற்கு குறைந்தது 100 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

5. ரூ.1,000/- செலுத்தி புரவலர் ஒருவர் சேர்க்கப்பட வேண்டும்.

75--

வேலம்பாளையம் ஊராட்சியில் நூலகம் அமைத்தல்

வினா எண் 67225--திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், வேலம்பாளையம் ஊராட்சி, நொச்சிக்காட்டுவலசு, புதூர், வெள்ளபெத்தம்பாளையம், விளாங்காடு, கருமாண்டம் பாளையம், புதுவள்ளியாம்பாளையம், குன்னாங்காட்டுவலசு, பூமாண்டம் வலசு, வேலாம்பாளையம் ஆகிய கிராமங்களில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

மேற்படி கிராமங்களில் பொது நூலகம் அமைக்க போதிய மக்கட் தொகை இல்லாததால், அக்கிராமங்களில் தற்போது கிளை நூலகங்கள் அமைக்க வழிவகை இல்லை. இருப்பினும், அக்கிராம மக்கள் பகுதிநேர நூலகங்கள் அமைக்கத் தேவையான கீழ்க்கண்ட வசதிகளைச் செய்து தந்தால், அக்கிராமங்களில் பகுதிநேர நூலகங்கள் அமைக்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

1. பகுதி நேர நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட பத்து சென்ட் காலிமனை மாவட்ட நூலக அலுவலர் பெயரில் பத்திரம் பதிவு செய்து தரப்பட வேண்டும்.

2. ரூ.2,000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) மதிப்புள்ள நூலகத்திற்குத் தேவையான இலவச தளவாடங்களோ அல்லது தொகையோ நன்கொடையாக வழங்கப்பட வேண்டும்.

3. பகுதிநேர நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டப்படும் வரை நூலகம் செயல்படுத்த நல்ல நிலையிலுள்ள உறுதியான இலவசக் கட்டடம் வழங்கப்பட வேண்டும்.

4. பகுதிநேர நூலகத்திற்கு குறைந்தது 100 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

5. ரூ.1,000/- செலுத்தி புரவலர் ஒருவர் சேர்க்கப்பட வேண்டும்.

76--

கொடுமுடி ஒன்றியத்தில் நூலகம் அமைத்தல்

வினா எண் *67234*--திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம் கொல்லங்கோவில், ஊராட்சி, சின்னதாண்டம் பாளையம், வள்ளியம்பாளையம், புதூர், விலாங்காட்டி வலசு, மேட்டு ஆதிதிராவிடர் காலனி, மோளபாளையம், வள்ளியம்பாளையம், பெரிச்சி கவுண்டன் பாளையம், அம்மன்கோவில், தோட்டம், கருக்கம் பாளையம், கந்தசாமி பாளையம், கொலங்கோவில்

நத்தமேடு, ஆதிதிராவிடர் காலனி, காளிபாளையம், எலவநத்தம், ஆகிய கிராமங்களில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

இந்த இடங்களில் போதுமான மக்கள் தொகை இல்லாத காரணத்தால் நூலக விதிகளின்படி கிளை நூலகங்கள் அமைக்க வழிவகை இல்லை. இருப்பினும், கீழ்க்காணும் வசதிகளை கிராம மக்கள் அளித்தால், பகுதி நேர நூலகங்கள் அமைத்துத்தர தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

1. பகுதி நேர நூலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட *10* சென்ட் காலிமனை மாவட்ட நூலக அலுவலரின் பெயரில் பத்திரம் பதிவு செய்து தரப்பட வேண்டும்.

2. ரூ.*2,000/–* (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) மதிப்புள்ள நூலகத்திற்குத் தேவையான தளவாடங்களோ அல்லது தொகையோ நன்கொடையாக வழங்கப்பட வேண்டும்.

3. பகுதிநேர நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் வரை நூலகம் செயல்படுத்த நல்ல நிலையிலுள்ள இலவசக் கட்டடம் வழங்கப்பட வேண்டும்.

4. பகுதிநேர நூலகத்திற்கு குறைந்தது *100* உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

5. ரூ.*1,000/–* செலுத்தி புரவலர் ஒருவர் சேர்க்கப்பட வேண்டும்.

77--

காமராஜர்புரத்தில் உயர்நிலைப்பள்ளி கட்டுதல்

வினா எண் *67641*--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

புதுக்கோட்டை, காமராஜர் புரத்தில் உயர்நிலைப் பள்ளி கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

புதுக்கோட்டை, காமராஜர்புரத்தில் உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிடம் கட்டுவதற்கு செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

78--

பொறியியல் கல்வியைத் தமிழ் மூலம் கற்பித்தல்

வினா எண் 67646--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பொறியியல் கல்வியைத் தமிழ் மூலம் கற்பிக்கத்தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

பொறியியல் கல்விக்கான பாடத் திட்டங்கள் எல்லா பல்கலைக் கழகங்களிலும் ஆங்கிலத்திலேயே உள்ளன. மேலும், பொறியியல் பட்டம் பயிலும் மாணவர்கள் எண்ணிக்கையை பார்க்கையில் அனைவருக்கும் தமிழ்நாட்டிலேயே வேலை வாய்ப்பு அளிக்க இயலாத நிலை உள்ளது. உலகின் பல்வேறு பகுதிகளில் பணியாற்றிட வேண்டிய சூழ்நிலையில் உள்ள பொறியியல் பட்டதாரி மாணவர்களுக்கு தமிழில் பாடத் திட்டத்தினை உருவாக்கினால், அவர்கள் பெறும் பட்டத்தினால் அவர்களுக்கு பயனில்லாமல் போய்விடும். எனவே, பொறியியல் பாடத் திட்டத்தினை தமிழ் மூலம் கற்பிக்க இதுவரை திட்டமிடப்படவில்லை.

79--

உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்

வினா எண் 67666--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகை-காயிதே மில்லத் மாவட்டம், திருத்துறைப் பூண்டி அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலை பள்ளியாக உயர்த்துவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த சாத்தியக் கூறுகள் இல்லை.

1996 பிப்ரவரி 15]

80--

துவக்கப் பள்ளி துவங்கும் திட்டம்

வினா எண் *77428*--திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கிருஷ்ணகிரி தொகுதி, கிருஷ்ணகிரி ஒன்றியம் எர்ரபையனபள்ளி கிராமத்திற்கு துவக்கப்பள்ளி துவங்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

கிருஷ்ணகிரி தொகுதி, கிருஷ்ணகிரி ஒன்றியம் எர்ரபையனபள்ளி கிராமத்திற்கு துவக்கப்பள்ளி துவங்கும் திட்டம் தற்போது இல்லை. கருத்துருக்கள் ஏதும் பெறப்பட்டால் இது குறித்து பரிசீலிக்க இயலும்.

81--

ஒன்றிய துவக்கப் பள்ளி துவக்குதல்

வினா எண் *77447*--டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பேர்ணாம்பட் தொகுதி, வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், சின்னபரவக்கல் காலனியில் ஒன்றியத் துவக்கப் பள்ளி துவக்கப்படுமா?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம் சின்னபரவக்கல் காலனியில் ஊராட்சி ஒன்றியப் பள்ளி துவக்கும் கருத்துருக்கள் ஏதும் தற்போது இல்லை. கருத்துருக்கள் ஏதும் பெறப்பட்டால் இது குறித்து பரிசீலிக்க இயலும்.

82--

துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்துதல்

வினா எண் *77448*--டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

[*1996 பிப்ரவரி 15*

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம் பேர்ணாம்பட் தொகுதி மதனாபள்ளி துவக்கப் பள்ளி நடுநிலைப் பள்ளியாக உயர்த்தப்படுமா?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம் பேர்ணாம்பட் தொகுதி மதனாபள்ளி துவக்கப்பள்ளி நடுநிலைப் பள்ளியாக உயர்த்தும் கருத்துருக்கள் ஏதும் தற்போது இல்லை. கருத்துருக்கள் ஏதும் பெறப்பட்டால் பரிசீலிக்க இயலும்.

83--

தியாகி வைத்தியநாதய்யர் பெயரில் பொறியியல் கல்லூரி

வினா எண் *78572*--திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தியாகி வைத்தியநாதய்யர் அவர்கள் பெயரால் மதுரை மாவட்டத்திலோ அல்லது திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்திலோ அரசு பொறியியல் கல்லூரி ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

மதுரை மாவட்டம் மற்றும் திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் தியாகி வைத்தியநாதய்யர் அவர்கள் பெயரால் அரசு பொறியியல் கல்லூரி ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. மதுரை மாவட்டத்தில் ஏற்கெனவே அரசு நிதி உதவி பெறும் பொறியியற் கல்லூரி ஒன்று இயங்கிவருகிறது. மேலும், 1995-96-ஆம் ஆண்டிற்கு புதியதாக சுயநிதி அடிப்படையில் பொறியியற் கல்லூரி ஒன்று துவங்க அனைத்திந்திய தொழில் நுட்ப கல்விக் குழு, புதுடெல்லி அங்கீகாரம் வழங்கியுள்ளது, திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில், ஏற்கெனவே சுயநிதி அடிப்படையில் நடத்தப்பெறும் இரண்டு பொறியியற் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. ஆகவே, புதிய அரசு பொறியியற் கல்லூரி ஏதும் மதுரை மாவட்டத்திலோ அல்லது திண்டுக்கல் அண்ணா மாவட்டத்திலோ நிறுவும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

84--

ஆலங்குளம் நூல் நிலையம்

வினா எண் 81828--திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) ஆலங்குளம் நகரில் உள்ள நூல் நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்டிக் கொடுக்கப்படுமா?

(ஆ) ஆமெனில், எப்பொழுது?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ):* நூல் நிலையத்திற்கு தற்பொழுது புதிய கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அக்கட்டிடத்திற்கு மின் வசதி பெறப்பட்ட பின்னர் நூலகம் அக்கட்டிடத்திற்கு மாற்றம் செய்யப்படும்.

85--

புள்ளமங்கலம் அரசு உயர்நிலைப்பள்ளி

வினா எண் 82013--திரு. கு. சீனிவாசன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

(அ) மன்னார்குடி தொகுதி புள்ள மங்கலம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

86--

கோட்டைக் கருங்குளத்தில் கிளை நூலகம்

வினா எண் 84248--திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நெல்லை மாவட்டம் ராதாபுரம் தொகுதியிலுள்ள கோட்டைக் கருங்குளத்தில் கிளை நூலகம் திறக்க அரசு முன்வருமா?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

நூலக விதிகளின் படி போதுமான மக்கள் தொகை இல்லாத காரணத்தால் கிளை நூலகம் திறக்க வழி வகையில்லை. எனினும் தற்போதைக்கு கிராம மக்களின் நலம் கருதி அப்பகுதியில் ஒரு பகுதி நேர நூலகம் அமைத்து தர கீழ்க்காணும் நிபந்தனைகளை அக்கிராம மக்கள் பூர்த்தி செய்து தந்தால், பகுதி நேர நூலகம் அமைத்துத் தர நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

நிபந்தனைகள்:

1. பகுதி நேர நூலகத்திற்குக் கட்டிடம் கட்ட பத்து சென்ட் காலிமனை இலவசமாக வழங்கப்பட வேண்டும்.

2. தற்போதைக்கு பகுதி நேர நூலகம் இயங்க நல்ல நிலையிலுள்ள வாடகையில்லாத கட்டடம் வழங்கப்பட வேண்டும்.

3. ரூ.2,000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) அல்லது அதற்கிணையான நூலகத்திற்குத் தேவையான தளவாடப் பொருட்களை நன்கொடையாக வழங்கப்பட வேண்டும்.

4. குறைந்தது நூறு உறுப்பினர்களைச் சேர்த்தல் வேண்டும்.

5. ரூ.1000/- செலுத்தி புரவலர் ஒருவர் சேர்க்கப்பட வேண்டும்.

87--

சோழவரத்தில் தொடக்க வேளாண்மை வங்கி

வினா எண் 84839--திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் வேலூர் வட்டம் கணியம்பாடி ஒன்றியம் போலூர் தொகுதி சோழவரம் கிராமத்தில் தொடக்க வேளாண்மை வங்கிக்கு கட்டிடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

1996 பிப்ரவரி 15]

சோழவரம் கிராமத்திலுள்ள சோழவரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிக்கு கட்டிடம் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

88--

கூட்டுறவுத் துறை மூலம் சமுதாய திருமணக்கூடம்

வினா எண் *84896*--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூரில் கூட்டுறவுத் துறை மூலம் ஒரு சமுதாய திருமணக் கூடம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன், கூட்டுறவுத்துறை அமைச்சர்:

இல்லை.

89--

களத்தூரில் மயானச் சாலை அமைத்தல்

வினா எண் *7288*--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், களத்தூர் கிழக்கு ஆதிதிராவிடர்களுக்கு மயானச் சாலையும், தகரக் கொட்டகையும் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

களத்தூர் கிழக்கு கிராமத்தில் ஆதிதிராவிடர்களுக்கு மயானச் சாலையும், மயான கொட்டகையும் அமைத்துத் தருவதற்குத் தற்போது அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

[*1996 பிப்ரவரி 15*

90--

கடல்பொருள் ஏற்றுமதி

வினா எண் *84162*--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கடல் பொருள் ஏற்றுமதியை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை--

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், மீனளத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : ஆம்.

கடல் மீன் உற்பத்தி மற்றும் கடல் பொருள்களின் ஏற்றுமதியை அதிகரிக்க தமிழக அரசு கீழ்க்கண்ட திட்டங்களை நிறைவேற்றி வருகின்றது;

1. உட்பொருத்தும் மற்றும் வெளிப்பொருத்தும் இயந்திரங்களை வாங்குவதற்கு மான்யம் அளித்தல், மீனவர்கள் பாரம்பரியமாக உபயோகப்படுத்திவரும் கட்டுமரம் மற்றும் வள்ளம் போன்ற மீன்பிடிக் கலன்கள் கடலில் அண்மையிலேயே மீன்பிடிப்பில் ஈடுபடுகின்றன. இதனால், கடலின் இப்பகுதியில் மீன்வளம் குறைந்துள்ளது. இக்கலன்கள், கடலில் அதிக தூரம் சென்று மீன்பிடிப்பில் ஈடுபட்டால், மீன் உற்பத்தி பெருகக் கூடும் என்று கருதி இவ்வகைக் கலன்களை இயந்திர மயமாக்க உட்பொருத்தும் மற்றும் வெளிப் பொருத்தும் இயந்திரங்களை வாங்குவதற்கு மீனவர்களுக்கு *50%* மானியம் வழங்கப்பட்டு வருகிறது. வெளிப்பொருத்தும் இய்ந்திரம் வாங்க ரூ.*10,000* வரையிலும் உட்பொருத்தும் இயந்திரம் வாங்க ரூ.*12,000* வரையிலும், மொத்த விலையில் *50%* மிகாமல் மீனவர்களுக்கு உதவி அளிக்கப்பட்டு வருகிறது. மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தின் கீழ் *1987-88* முதல் இதுவரை, *4664* வெளிப்பொருத்தும் இயந்திரங்களுக்கும், *584* உட்பொருத்தும் இயந்திரங்களுக்கும் மான்யத்துடன் வழங்கப்பட்டுள்ளன.

2. கட்டுமரம், விசைப்படகு, வள்ளம் மெரின் ப்ளைவுட் படகுகள் வாங்குவதற்கு உதவி:

1996 பிப்ரவரி 15]

இத்திட்டத்தின் கீழ் மீன்பிடிக் கலன்களின் விலையில் 60% வங்கிக் கடன் 20% மீனவர் பங்காக இருந்தால், மீதமுள்ள 20 சதவிகிதத்தை, கீழ்க்கண்ட வரம்பிற்குட்பட்டு மானியமாக அரசு மீனவர்களுக்கு வழங்கி வருகிறது.

1. கட்டுமரத்திற்கு ரூ.3000/- வரையிலும்.

2. மீன்படி விசைப்படகுகளுக்கு ரூ.1.00 இலட்சம் வரையிலும்.

3. மெரின் பிளைவுட் படகுகளுக்கு ரூ.30,000 வரையிலும்.

4. வள்ளங்களுக்கு ரூ.12,000 வரையிலும், மொத்த விலையில் 20% மிகாமல், மானியமாக அளிக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், 1987-88 முதல் 1992-93 வரை, 605 கட்டுமரங்களுக்கும், 170 மீன்பிடி விசை படகுகளுக்கும், 22 வள்ளங்களுக்கும் மற்றும் 28 மெரின் ப்ளைவுட் படகுகளுக்கும் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

பாரம்பரிய மீன்பிடிக் கலன்கள் இயந்திரமயமாக்குவதால், மீனவர்கள் தூரக் கடல் பகுதிக்குச் சென்று மீன்பிடிக்க வாய்ப்பு ஏற்படுவதுடன், அவர்கள் நீண்ட நேரம் மீன் பிடிப்பில் ஈடுபடவும் முடிகிறது. மீன்பிடிக் கலன்கள் வாங்குவதற்கு மானியம் அளிக்கப்படுவதால், மீன்பிடிப்பில் ஈடுபடும் கலன்களின் எண்ணிக்கை அதிகமாகிறது. இதன் காரணமாக தமிழ்நாட்டில் மீன் உற்பத்தி பெருகுவதுடன் அதிக அளவு அந்நியச் செலவாணி ஈட்டக்கூடிய இறால் கனவாய் போன்ற மீன்களை பிடிக்கவும் சாத்தியமாகிறது.

இதன் காரணமாக தமிழ்நாட்டில் மீன் உற்பத்தியும் ஏற்றுமதியும் கடந்த வருடங்களில் கீழ்க்கண்டவாறு பெருகியுள்ளது.

வருடம்	கடல் மீன் உற்பத்தி (டன்களில்)	தமிழ் நாட்டு துறைமுகங் கங்கள் மூலம் ஏற்றுமதி (டன்கள்)	விலை (ரூபாய் இலட் சத்தில்)
(1)	(2)	(3)	(4)
1991-92	2,99,942	25,048	23,053.00
1992-93	3,07,349	30,963	33,745.00
1993-94	3,17,716	20,473	46,188.00
1994-95	3,30,729	23,827	67,237.00

91--

கதர்த்துறை மூலம் வேலை வாய்ப்பு

வினா எண் 82023--திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கதர் துறையின் மூலம் ஏழை ஆதிதிராவிட பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்தின்மூலம் *(கிளஸ்டர் திட்டம்)* இதுவரை கட்டபப்பட்ட கதர் தொழில்நூற்பு ஆலைகள் எத்தனை?

(ஆ) அதன் மூலம் பயனடைந்து வரும் பெண்களின் எண்ணிக்கை மாவட்ட வாரியாக எத்தனை?

விடை--

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர் துறை அமைச்சர்:

(அ) கதர் வாரியத்தின் மூலம் ஏழை ஆதிதிராவிட பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு (கிளஸ்டர் வளர்ச்சி திட்டத்தின் கீழ்) இதுவரை *111* கிராமிய நூற்பு நிலையங்கள் தொடங்கப்பட்டு தற்போது *49* கிராமிய நூற்பு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) இந்த *49* கிராமிய நூற்பு நிலையங்களில் மாவட்ட வாரியாக *1470* பெண்கள் கீழ்க்கண்டவாறு பயன்பெறுகின்றனர்.

வ.எண்.	மாவட்டம்	நபர்கள்-பயனாளிகளின் எண்ணிக்கை
(1)	*(2)*	*(3)*
1.	தஞ்சாவூர்	*30* நபர்கள்
2.	திருச்சி	*30* நபர்கள்
3.	புதுக்கோட்டை	*60* நபர்கள்
4.	கோவை	*180* நபர்கள்
5.	பெரியார்	*150* நபர்கள்
6.	சேலம்	*180* நபர்கள்
7.	திருநெல்வேலி	*60* நபர்கள்
8.	தர்மபுரி	*90* நபர்கள்
9.	வட ஆற்காடு-அம்பேத்கார்	*30* நபர்கள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1996 பிப்ரவரி 15]

10.	திண்டுக்கல்–அண்ணா	150 நபர்கள்
11.	வ.உ. சிதம்பரனார்	90 நபர்கள்
12.	இராமநாதபுரம்	90 நபர்கள்
13.	கன்னியாகுமரி	90 நபர்கள்
14.	திருவண்ணாமலை	240 நபர்கள்
	மொத்தம்	1470 நபர்கள்

92--

கதர் கிராமிய சிறு தொழில்களுக்கென தனி இயக்குநரகம்

வினா எண் *92018*--திருமதி மரியம் உல் ஆசியா: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கதர் கிராம சிறு தொழில்களுக்கென்று தனியாக இயக்குநரகம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை--

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த் துறை அமைச்சர்:

இல்லை.

93--

செம்மக்குடியில் கால்நடை மருந்தகம்

வினா எண் *86911*--டாக்டர் சு. மணிமேகலை: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அரியலூர் திருமானூர் ஒன்றியம், குலமாணிக்கம் செம்மக் குடியில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. எம்.சி. தாமோதரன், கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்:

குலமாணிக்கம் செம்மக்குடியில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்த தற்போது உத்தேசமேதுமில்லை.

[1996 பிப்ரவரி 15

94--

பட்டத்தரசி அம்மன் ஆலயத்தைப் புதுப்பித்தல்

வினா எண் 21529--டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) அவினாசி தொகுதி, மங்கரசு, வளையபாளையம் கிராமத்தில் பேரநாயக்கன்புதூர், ஆதிதிராவிடர் காலனியிலுள்ள பட்டத்தரசி அம்மன் கோவிலைப் புதுப்பிக்க அரசு மான்யம் வழங்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை--

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ):* கோவை மாவட்டம், அவினாசி வட்டம், மங்கரசு, வளையபாளையம், கிராமம், பேரநாயக்கன் புதூர், ஆதிதிராவிடர் காலனியில் உள்ள பட்டத்தரசியம்மன் கோவில் திருப்பணிகள் ஒரு லட்ச ரூபாய் செலவில் அரசு நிதி மூலம் மட்டுமே செய்யவேண்டிய சூழ்நிலை உள்ளது. எனவே கிராமப்புற திருக்கோவில் நிதியுதவி திட்டத்தின் மூலம் முதல் கட்டமாக ரூபாய் 25,000 செலவில் இத்திருக்கோவிலின் மூலஸ்தானத்தில் திருப்பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

95--

கரூர் வட்டத்தில் கோயில்களை புதுப்பித்து திருமண மண்டபம் கட்டுதல்

வினா எண் 52193--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருச்சிராப்பள்ளி மாவட்டம், கரூர் வட்டம், பத்தாம்பூர் கிராமம், பி. வடுகப்பட்டியில் உள்ள அருள்மிகு முத்தாளம்மன் திருக்கோயில், ஆத்தூர் சோளியம்மன் கோயில், சின்ன தாராபுரம் மாரியம்மன் திருக்கோயில் ஆகியவற்றை புதுப்பித்து அங்கு திருமண மண்டபம் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

1996 பிப்ரவரி 15]

விடை--

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

இல்லை.

96--

ஒரு கால பூஜைத் திட்டத்தில் பயன்பெற்ற ஆலயங்கள்

வினா எண் *57169*--திரு. கே.ஏ. மனோகரன்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா--

ஒரு கால பூஜை திட்டத்தில் ஒசூர் தேன்கனிக்கோட்டை வட்டத்தில் பயன் பெற்ற ஆலயங்கள் எத்தனை?

விடை--

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

ஒரு கால பூஜை திட்டத்தின் கீழ், ஒசூர் வட்டத்தில் *53* திருக்கோயில்களும், தேன்கனிக்கோட்டை வட்டத்தில் *46* திருக்கோயில்களும் பயன்பெற்றுள்ளன.

97--

அர்ச்சகர்களுக்கு பயிற்சி நிலையம்

வினா எண் *61449*--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும வினாவிற்கு விடையளிப்பாரா--

கோவில்களில் தமிழில் அர்ச்சனை செய்யவும், வழிபாட்டு முறைகளைத் தெரிந்து கொள்ளவும், கோயில் அர்ச்சகர்களுக்கு பயிற்சி நிலையம் அமைக்க செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

தமிழகத்தின் பல திருக்கோயில்களில் சேவார்த்திகள் வேண்டுகோளின்படி தமிழிலும் அர்ச்சனை செய்யப்பட்டு வருகின்றது.

அர்ச்சகர்கள் தமிழ் வழிபாட்டு முறைகளையும் தெரிந்து வைத்துள்ளனர். எனவே, தமிழக திருக்கோவில்களில் தமிழில் அர்ச்சினை செய்யவும், வழிபாட்டு முறைகளைத் தெரிந்து கொள்ளவும், அர்ச்சகர்கட்கு பயிற்சி அளிக்கும் திட்டம் தற்போது இல்லை.

98--

கெங்கம்மன் திருக்கோயிலை செப்பனிடுதல்

வினா எண் *65284*--திருமதி கே. மரியம் உல் ஆசியா: *மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--*

திருச்சி மாவட்டம், அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், வண்டரிச்சினம்பட்டி கிராமத்திலுள்ள ஸ்ரீகெங்கம்மன்சாமி கோவிலை செப்பனிடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள திருக்கோயில், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் மேற்பார்வையில்லாத தனியார் கோயிலாகும். மேலும் மூலவர், கற்சிலை, விக்ரகங்கள், கோபுரம் போன்ற பொது மக்கள் வழிபடும் அமைப்புகள் ஏதும் இல்லை. எனவே, இக்கோவிலை அரசு செலவில் செப்பனிடுவதற்கு செயற்குறிப்பு ஏதுமில்லை.

99--

திருக்கோயில்களை திருப்பணி செய்தல்

வினா எண் *78552*--திரு. ப. கலியபெருமாள்: *மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

திருவையாறு தொகுதியிலுள்ள பூதலூரில் (வடக்கு) உள்ள ஆபத்சகர்யா என்ற சிவன் கோயிலையும், வானராங்குடியிலுள்ள சிவன் கோயிலையும் திருப்பணி செய்து குடமுழுக்கு விழா நடத்த அரசு ஏற்பாடு செய்யுமா?

1996 பிப்ரவரி 15]

விடை--

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

இத்திருக்கோயில்கள் புராதனக் கோயில்களாவோ அல்லது பாடல் பெற்ற கோயில்களாவோ பிரசித்திப்பெற்றவையல்ல. இத்திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்வது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் இல்லை.

100--

பழனி திருக்கோயில் மின் இழுவை இரயிலைப் பழுதுபார்த்தல்

வினா எண் 87500--திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலில் பழுதாகியுள்ள மின் இழுவை இரயிலைப் பழுது பார்த்து மீண்டும் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை--

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலின் பழுதாகியுள்ள மின் இழுவை ரயிலை மாற்றியமைத்து அதற்கு தேவையான உதிரிபாகங்களை வாங்கி, பழுது பார்த்து மராமத்து செய்ய ரூ.16,10,900–க்கு ஒப்பந்தப் புள்ளி பெறப்பட்டு அதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இவ்வேலைகளை தொடங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மூன்றாம் பட்டியல்

1--

மல்லசமுத்திரத்தில் வாக்குச்சாவடி அமைத்தல்

வினா எண் 84296--டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மல்லசமுத்திரம்--மதுரைவீரன் தெரு பொது மக்களுக்கு வாக்குச் சாவடி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை--

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதியமைச்சர்:

இல்லை.

2--

மகளிருக்கென தனிச்சிறைச்சாலை

வினா எண் 108236--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் மகளிருக்கென தனிச் சிறைச்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்:

இம்மாவட்டத்திலுள்ள வேலூரில் ஏற்கனவே மகளிருக்கென ஒரு தனிச் சிறைச்சாலை இயங்கி வருகிறது. எனவே, மகளிருக்கென வேறு ஒரு சிறைச்சாலை இம்மாவட்டத்தில் அமைக்கும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

3--

SIDDHAR VAIDYA ASHRAM MEDICINE TO ANNA HOSPITAL

Question No.12741--Thirumathi K. Mariam-Ul-Asia: Will the Hon'ble Minister for Health be pleased to state--

(a) Whether the Siddhar Vaidya Ashram in Bangalore has offered any medicine to Anna Hospital for curing AIDS in recent times; and

1996 பிப்ரவரி 15]

(b) The details thereof

Answer–

Hon. Thiru S. MUTHUSWAMY, Minister for Public Health:

(a) No.

(b) Does not arise.

4--

புற்றுநோயால் இறந்தோர் விவரம்

வினா எண் 33382--திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கடந்த ஐந்து ஆண்டுகளில் இம்மாநிலத்தில், மார்பக புற்றுநோயால் இறந்தவர்களின் மொத்த எண்ணிக்கை?

(ஆ) அது பற்றிய மாவட்ட வாரியான விவரங்கள் யாவை?

(இ) மார்பக புற்று நோய்க்கான காரணங்கள் பற்றி நடத்தப்பட்ட ஆய்வு பற்றிய விவரங்கள் யாவை?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ)	1990	1991	1992	1993	1994
	199	199	186	207	489

(ஆ) சென்னை	..	414
செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்.	..	255
கோயம்புத்தூர்	..	46
மதுரை	..	55
தஞ்சாவூர்	..	510

(இ) (1) திருமணமாகாத பெண்கள்.

(2) கருவுறாக்கருப்பை உடைய பெண்கள்.

(3) கருத்தடை மாத்திரை சாப்பிடும் பெண்கள்.

(4) முதுமையில் அதிர்ச்சி.

(5) காரணமற்ற நோய்கள்.

(6) வயது கடந்த திருமணம்.

(7) வயது கடந்த பின்னர் பிள்ளை பேறு.

(8) குழந்தையின்மை.

(9) குடும்பத்தில் வேறு எவருக்கேனும் மார்பு புற்று நோய் இருத்தல்.

(10) (தாமதமாய்) மாதவிடாய் நிற்றல்.

(11) தாய்ப்பால் ஊட்டாமல் விட்டுவிடுதல்.

(12) அதிக பருமன் மற்றும் நடைமுறை வாழ்க்கையில் மாற்றம்.

(13) முலைக்காம்பில் கசிவு ஏற்படுதல்.

(14) நெறிகட்டுதல்.

(15) முலைக்காம்பு உள்ளடங்குதல்.

(16) தோல் ரணமாதல்.

(17) தோலில் ஏதாவது மாற்றம் உண்டாதல்.

(18) புற்றுநோய் கட்டி ஏற்படுதல்.

(19) சம்பந்தப்பட்ட இடங்களில் நெறிக்கட்டுதல்.

(20) மற்ற அவயங்களில் (organs) புற்றுநோய் மாற்றங்கள்.

5-

பிரசவ விடுதி அமைத்தல்

வினா எண் 55783--திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், முகாசி அனுமன்பள்ளி ஊராட்சி, அனுமன்பள்ளி, நஞ்சசப்பம் பாளையம், கொளத்தூர், கள்ளக்கவுண்டன்பாளையம், கோப்பன்காட்டு,

1996 பிப்ரவரி 15]

ஆதிதிராவிடர் தெரு, கள்ளக்கவுண்டர்பாளையம், ரெட்டிப்பாளையம், பவளத்தான்கவுண்டன்வலசு, கொத்துமுட்டிபாளையம், கோவில் பாளையம், ராயபாளையம், வில்லகாட்டுபுதூர், அஞ்சுராம்பாளையம் ஆகிய கிராமங்களுக்கு பிரசவ விடுதி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

இல்லை.

6--

மொடக்குறிச்சி ஒன்றியத்தில் பிரசவ விடுதி அமைத்தல்

வினா எண் *55799*--திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், வள்ளிபுரம் ஊராட்சி, கொங்காணி வலசு, சுருக்கம்பாளையம், கோக்காட்டூர் ஆகிய கிராமங்களில் பிரசவ விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

இல்லை.

7--

சென்னை அரசு பொது மருத்துவமனையில் நவீன சிகிச்சை முறை

வினா எண் *61814*--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மூளையில் ஏற்படும் கட்டியை ஆபரேஷன் இல்லாமல் அகற்ற நவீன சிகிச்சை முறையை சென்னை அரசு பொது மருத்துவமனையில் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மூளையில் ஏற்படும் கட்டியை அறுவை சிகிச்சை இல்லாமல் அகற்றும் நுண்கதிர் வீச்சுக் கருவியின் விலை ஏறத்தாழ பத்துக்கோடி ரூபாய் ஆகும். இதனால் ஏழை பொது மக்கள் எந்த அளவிற்கு பயன் பெறுவார்கள் என்பது சிந்திக்கப்பட வேண்டிய விஷயம். ஆதலின், இக்கருவியை வாங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

8--

உயிர்காக்கும் மருந்துகள் வழங்குதல்

***வினா எண் 63610*--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், வேலூர் தலைமை மருத்துவமனைக்குப் போதிய உயிர்காக்கும் மருந்துகள் வழங்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், போதுமான மருந்துகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ):* வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், வேலூர் தலைமை மருத்துவமனைக்குப் போதிய உயிர் காக்கும் மருந்துகள் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம் மூலமாக வழங்கப்பட்டு இருப்பில் உள்ளது.

9--

மருத்துவ மனைகளில் படுக்கை வசதிகள்

***வினா எண் 63617*--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

1996 பிப்ரவரி 15]

மக்கள் தொகை அடிப்படையில் 500 பேருக்குக் ஒரு படுக்கை என்கிற விகிதத்தில் கணக்கிட்டு மருத்துவமனைகளில் படுக்கை வசதிகளை அதிகரிக்க அரசு முன் வருமா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மக்கள் தொகை அடிப்படையில் 500 பேருக்கு ஒரு படுக்கை என்கிற விகிதத்தில் கணக்கிட்டு மருத்துவமனைகளில் படுக்கை வசதிகளை அதிகரிப்பது பற்றிய செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

10--

சுகாதார நிலையத்தில் ஆழ்துளை கிணறு அமைத்தல்

வினா எண் 65311--டாக்டர் ஜெ. பரந்தாமன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--*

(அ) பேர்ணாம்பட்டு தொகுதி, மேல் காணான்குப்பம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒரு ஆழ்துளைகிணறு அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டு அமைக்கப்படுமா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): மேல் காணான்குப்பம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய ஆழ்துளை கிணறு அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் தற்சமயம் இல்லை. இந்நிலையில் கிணற்றில் தண்ணீர் உள்ளது.

11--

பேர்ணாம்பட்டு மருத்துவமனை

வினா எண் 65315--டாக்டர் ஜெ. பரந்தாமன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--*

(அ) பேர்ணாம்பட்டு அரசு மருத்துவமனைக்கு கூடுதல் கட்டிடம் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) 1995-96-ம் பகுதி II திட்டத்தில் பேர்ணாம்பட்டு அரசினர் மருத்துவமனைக்கு ரூ.3 லட்சம் செலவில் நுண்கதிர் கட்டிடம் (X-ray Block) கட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

12--

தா. பழூர் ஊராட்சி ஒன்றியம் அரசு ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 67766--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருச்சிராப்பள்ளி மாவட்டம், தா. பழூர் ஊராட்சி ஒன்றியம், ஸ்ரீபுரந்தாள் அரசினர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிட வசதி செய்து தருவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தா. பழூர் வட்டத்தில் உள்ள குணமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்த திருபுரந்தாள் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் தற்போது அரசு கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது.

13--

கொடைக்கானலில் நறுமனச் செடிகள் பயிரிடுதல்

வினா எண் 78502--திரு. ஆர்.பி. பரமசிவம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

1996 பிப்ரவரி 15]

(அ) தமிழ்நாடு மூலிகை மருந்துக்கழகம் மூலம் கொடைக்கானலில் நறுமணச் செடிகள் பயிரிட்டு நறுமணத்தைலங்கள் தயாரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)*: கொடைக்கானலில் நறுமணச் செடிகள் பயிரிட்டு நறுமணத் தைலம் தயாரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

14--

விழுப்புரம் அரசு மருத்துவமனையில் சூரிய சுடுநீர் கலன் அமைத்தல்

வினா எண் *78506*--திரு. ஆர்.பி. பரமசிவம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) விழுப்புரம் அரசு மருத்துவமனையில் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் *2,000* லிட்டர் கொள்ளவு கொண்ட சூரிய சுடுநீர் கலன் ஒன்றை நிறுவ அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆமெனில், இந்த நிதியாண்டில் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)*: விழுப்புரம் அரசினர் மருத்துவமனை, தாலுக்கா தலைமை மருத்துவமனையாகச் செயல்பட்டு சமீபத்தில்தான் அரசு மாவட்ட தலைமையிட மருத்துவ மனையாக மாற்றப்பட்டது. தற்சமயம் உள்ள கட்டிட அமைப்புகள் சூரிய சுடுநீர் கலன் அமைப்பதற்கு தகுதியற்றவையாக இருப்பதால், தமிழ் நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் *2,000* லிட்டர் கொள்ளவு கொண்ட சூரிய சுடுநீர் கலன் அமைக்க வாய்ப்பில்லை.

TRUTH ALONE TRIUMPHS

15--

குழந்தைகள் நலப்பிரிவிற்கு கட்டிடம் கட்டுதல்

வினா எண் 81988--டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நீலகிரி மாவட்டம் குன்னூர் அரசு மருத்துவமனையில் குழந்தைகள் நலப்பிரிவுக்காக கட்டப்பட்ட கட்டிடம் எப்பொழுது திறக்கப்படும்?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

குன்னூரில் குழந்தைகள் நலப்பிரிவுக்காக கட்டப்பட்ட கட்டிடம் 20-8-1994ல் ஒப்புக்கொள்ளப்பட்டு தற்போது குழந்தை நோயாளிகள் அனுமதிக்கப்படுகிறார்கள்.

16--

கூட்டுறவு முறையில் மருத்துவமனைகள்

வினா எண் 84223--திருமதி க. பழனியம்மாள்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தமிழகத்தில் கூட்டுறவு முறையில் மருத்துவமனைகள் இயக்கப்படுகின்றனவா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தமிழகத்தில் கூட்டுறவு முறையில் மருத்துவமனைகள் ஏதும் இயங்கவில்லை.

17--

டி. கள்ளிக்குளத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுதல்

வினா எண் 84230--திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

1996 பிப்ரவரி 15]

(அ) நெல்லை மாவட்டம், ராதாபுரம் தொகுதியில் கள்ளிக்குளம் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் பணி எந்த நிலையில் உள்ளது?

(ஆ) அது எப்போது திறக்கப்படும்?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் ராதாபுரம் ஊராட்சி ஒன்றியம் டி. கள்ளிக்குளம் ஆரம்ப சுகாதார நிலைய கட்டிட கட்டுமானப் பணிகள் பொதுப் பணித்துறையினரால் முடிக்கப்பட்டு 2-6-1995 முதல் புதிய கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

18--

பரமக்குடி மருத்துவமனையில் காலரா வார்டு கட்டுதல்

வினா எண் 87332--டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பரமக்குடியில் அரசு மருத்துவமனையில் காலரா வார்டு கட்டப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

19--

பழனி அரசு தலைமை மருத்துவமனை

வினா எண் 87506--திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பழனி அரசு தலைமை மருத்துவ மனையில் உள்ள ஆம்புலன்ஸ் வண்டிகள் தற்பொழுது இயங்காத நிலையில் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): பழனி அரசு மருத்துவமனையில் உள்ள 2 நோயாளர் ஊர்தி மற்றும் 1 விபத்து மற்றும் அவசர கால ஊர்தி ஆக 3 ஊர்திகளும் நல்ல முறையில் இயங்கி வருகின்றன.

20--

மன நோயாளிகள் தொழில் செய்ய ஊக்குவித்தல்

வினா எண் 87932--டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சென்னை, மனநோய் மருத்துவமனையில் உள்ள நோயாளிகள் நோய் குணமான பின்பு அங்கேயே தொழில் செய்ய ஊக்குவிக்கப்படுகிறார்களா?

(ஆ) ஆம் எனில், என்னென்ன தொழில்கள் செய்ய ஊக்குவிக்கப்படுகிறார்கள்?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) மனநோய் மருத்துவமனையில் உள்நோயாளியாக தங்கி சிகிச்சை பெறும்போது மட்டும் அவர்களுக்கு தொழில் வழி மருத்துவம் சிகிச்சையில் ஒரு பகுதியாக அளிக்கப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1996 பிப்ரவரி 15]

21--

காட்டுமன்னார் கோயில் அரசு மருத்துவமனை

வினா எண் 88148--திரு. என்.ஆர். ராஜேந்திரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

காட்டுமன்னார் கோயில் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் வழங்கப்படுமா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

நிதிநிலைமைக்கேற்ப 50 படுக்கைகளும், அதற்கு மேலும் உள்ள தாலுகா தலைமை மருத்துவமனைகளுக்கு படிப்படியாக நோயாளர் ஊர்தி வழங்கப்படுகிறது. காட்டு மன்னார் கோயில் அரசு மருத்துவமனைக்கு அனுமதிக்கப்பட்ட படுக்கைகள் 32. எனவே, இதற்கு தற்சமயம் நோயாளர் ஊர்தி வழங்க இயலாது.

22--

சித்தா மருத்துவ வளர்ச்சியை மேம்படுத்துதல்

வினா எண் 97068--திருமதி கே. மரியம் உல் ஆசியா: *மாண்புமிகு மக்கள்நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

சித்தா, யுனானி போன்ற இந்திய மருத்துவ வளர்ச்சியை மேம்படுத்த அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சித்தா, ஆயுர்வேதா, யுனானி போன்ற இந்திய மருத்துவ வளர்ச்சியை மேம்படுத்த அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறது. தமிழ்நாட்டில் பொதுமக்களுக்கு இந்திய முறை மருத்துவ வசதியளிக்கும் பொருட்டு பரவலாக இந்தியமுறை மருத்துவமனை/இந்தியமுறை மருத்துவப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. மேலும் விரிவாகத் திட்டங்களை

அரசின் நிதிநிலைக்கேற்ப படிப்படியாக நிறைவேற்ற அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

23--

புதிய கருத்தடை மருந்து

வினா எண் 97075--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஆண்களுக்கு ஊசிமூலம் செலுத்தக் கூடிய புதிய கருத்தடை மருந்தை அரசு அறிமுகப்படுத்தியிருக்கிறதா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

ஆண்களுக்கு கருத்தடை மருந்தை ஊசிமூலம் செலுத்தும் திட்டம் தமிழகத்தில் இன்னமும் அறிமுகப்படுத்தப்படவில்லை. மேலும் இது குறித்து மைய அரசிடமிருந்து எந்தத் திட்டமும் இருப்பதாக விவரம் இல்லை.

24--

மூலிகை மருந்து ஏற்றுமதி

வினா எண் 97076--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தமிழகத்திலிருந்து மூலிகை மருந்துகள் ஏற்றுமதி செய்யப்படுகிறதா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தமிழகத்திலிருந்து மூலிகை மருந்துகள் சில தனியார் நிறுவனங்களாலும், தனி நபர்களாலும் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1996 பிப்ரவரி 15]

25--

சித்த மருத்துவர்களை பண்டைய தமிழ் மருத்துவர்களாக அங்கீகரித்தல்

வினா எண் *97088*--திருமதி கே. மரியம் உல் ஆசியா: *மாண்புமிகு மக்கள்நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

பாரம்பரியமாக சித்த மருத்துவ பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களை பண்டைய தமிழ் மருத்துவர்கள் ஆக அங்கீகரித்து அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு இந்திய மருத்துவக் கழகத்திலும் பரம்பரை சித்த மருத்துவர்கள் என்ற பெயரிலேயே பதிவு செய்யப்பட்டு வருவதாலும், அகில இந்திய அளவிலும் பரம்பரை சித்த மருத்துவர்கள் என்ற பெயரிலேயே வழங்கப்பட்டு வருவதாலும் பாரம்பரியமாக சித்த மருத்துவப்பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களை பண்டைய தமிழ் மருத்துவர்கள் ஆக அங்கீகரிக்க அவசியம் இல்லை.

26--

மொடக்குறிச்சி ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் *98971*--திருமதி கவிநிலவு தர்மராஜ்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், அவல் பூந்துறை ஊராட்சியில் உள்ள அனைத்து கிராமங்களும் பயனடையும் வகையில் பிரசவ விடுதி மற்றும் இரத்த வங்கியுடன் கூடிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியத்தில் 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதால் மக்கட் தொகை அடிப்படையில் மொடக்குறிச்சி ஒன்றியம் அவல் பூந்துறை ஊராட்சியில் மேலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. ஆரம்ப சுகாதார நிலைய செயல்பாட்டின்படி இரத்த வங்கி ஆரம்ப சுகாதார நிலையங்களில் நிறுவிட சாத்தியக்கூறுகள் இல்லை. பிரசவ விடுதியுடன்கூடிய இரத்தவங்கி ஊரக மருத்துவ நிறுவனங்களில் இல்லை. வட்டார மருத்துவமனைகளில் மட்டுமே இவ்வமைப்பு உள்ளது.

27--

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 106657--திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், தானத்தம்பாளையம் ஊராட்சி செட்டிக்குட்டை வலசு களத்துமின்னம்பாளையம், கொமாரபாளையம், ராக்கியா பாளையம், பூசாரிபாளையம், ஆதி திராவிடர் காட்டுவலசு, களத்துமின்னம்பாளையம், அரிசன காலனி, செட்டிக்குட்டைவலசு அரசினகாலனி, மடத்துப் பாளையம் ஆதிதிராவிடர் காட்டுவலசு, மடத்துப்பாளையம், வாத்தி காட்டுவலசு, ஒட்டங்காட்டு வலசு, தானத்தம்பாளையம், ஆகிய கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியத்தில் தானத்தம்பாளையம் ஊராட்சி அமைந்துள்ளது. இவ்வொன்றியத்தில், மக்கட்தொகை அடிப்படையில் 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. இவை இம்மக்களின் மருத்துவ

தேவையை பூர்த்தி செய்கின்றன. 30,000 மக்கட் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற கொள்கைப்படி புதிய ஆரம்ப சுகாதார நிலையம் மொடக்குறிச்சி ஒன்றியம் தானத்தம்பாளையம் ஊராட்சியில் உள்ள கிராமங்களில் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

28--

ஈச்சம்பள்ளி ஊராட்சியில் சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் *106670*--திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், ஈச்சம்பள்ளி ஊராட்சி, கீரமடை அரிசன காலனி, முத்துக் கவுண்டன்பாளையம், வெள்ளபாறையூர், வெட்டுக்காட்டு வலசு, அரிசனகாலனி, பொன்னம்பாளையம், கீரமடை வடக்கு, பொன்னம்பாளையம், புராபானிக்காட்டுவலசு, வெட்டிக்காட்டு வலசு, முத்துக்கவுண்டன்பாளையம், அரசின காலனி ஆகிய இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் அரசு அமைக்குமா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சி ஒன்றியத்தைச் சேர்ந்தது ஈச்சம்பள்ளி ஊராட்சி. இவ்வொன்றியத்தில் ஏற்கெனவே 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. இவை இம்மக்களின் மருத்துவ தேவையைப் பூர்த்தி செய்கின்றன. மக்கட்தொகை அடிப்படையில் மேலும் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் ஈச்சம்பள்ளி ஊராட்சியில் உள்ள கிராமங்களில அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

29--

நஞ்சகள மங்கலம் ஊராட்சிப் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் *106680*--திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், நஞ்சுகள மங்கலம் ஊராட்சி செம்புளியாம்பாளையம், நஞ்சகளமங்கலம், பன்னாதம்பாளையம், நஞ்சைஊத்துக்குளி, தம்பிரான் வலசு, கருந்தேவம் பாளையம், சின்னயம்மன்பாளையம், சாமிநாதன்புரம், சாமிநாதன்புரம் புதூர் சென்னப்பநாயக்கன் பாளையம், பள்ளக்காட்டுபுதூர், ஆகிய கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் அரசு அமைக்குமா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியத்தைச் சேர்ந்தது நஞ்சகளமங்கலம் ஊராட்சி, மொடக்குறிச்சி ஒன்றியத்தில், மக்கட்தொகை அடிப்படையில் ஏற்கெனவே 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. இவை இம்மக்களின் மருத்துவ தேவையை பூர்த்தி செய்கின்றன. எனவே விதிமுறைகளின்படி புதிய ஆரம்ப சுகாதார நிலையம் மொடக்குறிச்சி ஒன்றியம், நஞ்சகளமங்கலம் ஊராட்சியில் உள்ள கிராமங்களில் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

30--

புதூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் *106691*--திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

1996 பிப்ரவரி 15]

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், புதூர் ஊராட்சி ஈ.பி. நகர், அம்மன் நகர், குதிரைப்பாளி, குதிரைப்பாளி ஆதி காலனி, சின்னகருக்கம்பாளையம், ஆனைக்கல்பாளையம், நொச்சிக்காட்டுவலசு, பெரியசெட்டிப்பாளையம், சுப்பிராயவலசு, பச்சப்பாளி, கருக்கம்பாளையம், வெள்ளாளபாளையம், புதூர், சின்னசெட்டிபாளையம் ஆகிய கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சி ஒன்றியத்தில் மக்கட் தொகைக்கு ஏற்ப ஏற்கெனவே 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. இவை இம்மக்களின் மருத்துவ தேவையை பூர்த்தி செய்கின்றன. 30,000 மக்கட்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற கொள்கைப்படி மேலும் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் மொடக்குறிச்சி ஒன்றியத்தில் புதூர் ஊராட்சியில் உள்ள கிராமங்களில் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

31--

மொடக்குறிச்சி தொகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 106705--*திருமதி கவிநிலவு தர்மராஜ்:* மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், மொடவாண்டி சத்தியமங்கலம் ஊராட்சி, மொடவாண்டி சத்தியமங்கலம், நரிக்காட்டுவலசு, பள்ளபாளையம், ஆதி திராவிடர் தெரு, மேட்டுக்காட்டுவலசு, ஆனிச்சாம்பாளையம, பேட்டை ஆகிய கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் அரசு அமைக்குமா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதியில் மொடக்குறிச்சி ஒன்றியத்தில் அமைந்துள்ளது மொடவாண்டி சத்தியமங்கலம் ஊராட்சி. இவ்வொன்றியத்தில் ஏற்கெனவே 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருவதால் மக்கட் தொகை அடிப்படையில் மேலும் ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் மொடவாண்டி சத்தியமங்கலம் ஊராட்சியில் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

32--

புஞ்சைகாளமங்கலத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 106712--திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், புஞ்சைகாள மங்கலம் ஊராட்சி பச்சாம் பாளையம், உத்தாண்டிபாளையம் புதூர், பச்சாம்பாளையம் புதூர், கணபதி பாளையம், நச்சப்ப கவுண்டன் பாளையம் புதூர், சாணார் பாளையம், ஆயகவுண்டன்பாளையம், உத்தாண்டி பாளையம், கண்ணுடையாம்பாளையம், கருப்பகவுண்டன் வலசு, புஞ்சைகாளமங்கலம், ஆதிதிராவிடர் தெரு, செப்பகவுண்டன் வலசு, முத்தாபாளையம், கொளத்துபாளையம், வேலம்பாளையம், காட்டூர், காட்டுப்புதூர் ஆகிய கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் அரசு அமைக்குமா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சி ஒன்றியத்தில் ஏற்கெனவே 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. இவை இவ்வொன்றியத்தில் வசிக்கும் மக்களின் மருத்துவ தேவையை பூர்த்தி செய்ய போதுமானது. மக்கள் தொகை அடிப்படையில்

1996 பிப்ரவரி 15]

மொடக்குறிச்சி ஒன்றியம், புஞ்சைகாளமங்கலம் ஊராட்சியிலுள்ள கிராமங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்திய கூறுகள் ஏதும் இல்லை.

33--

கருத்தடை அறுவை சிகிச்சை செய்தவர்களுக்கு சிறப்பு சலுகைகள்

வினா எண் 107867--டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

"One Child norm" விரும்பி ஏற்றுக் கொண்டு, நிரந்தர கருத்தடை அறுவை சிகிச்சையை ஏற்றுக் கொண்டுள்ள தம்பதிகளின் ஆண் குழந்தைக்கு அரசு சிறப்பு சலுகைகள் ஏதேனும் அளித்துள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

"One Child norm" விரும்பி ஏற்றுக் கொண்டு நிரந்தர கருத்தடை அறுவை சிகிச்சையை ஏற்றுக் கொண்டுள்ள தம்பதிகளின் ஆண் குழந்தைகளுக்கு சிறப்பு சலுகைகள் ஏதும் அளிக்கப்படவில்லை.

34--

ஓமியோபதி பிரிவு ஏற்படுத்துதல்

வினா எண் 108169--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் அரசு பொது மருத்துவமனையில் ஓமியோபதி பிரிவு ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் அரசு தாலுக்கா மருத்துவமனையில் 1989 முதல் ஓமியோபதி பிரிவு இயங்கி வருகிறது.

35--

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 108178--திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, காக்கனாம்பாளையம், அருந்ததியம் காலனியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ள காக்கனாம்பாளையம் கிராமத்தின் மக்கள் தொகை 900. இக்கிராமத்திலிருந்து 5 கி.மீ. தொலைவில் கதிராம்பட்டு ஆரம்ப சுகாதார நிலையமும் 10 கி.மீ. தொலைவில் ஆண்டியப்பனூர் ஆரம்ப சுகாதார நிலையமும் 12 கி.மீ. தொலைவில் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருகின்றன. இவை இக்கிராம மக்களின் மருத்துவ தேவையை பூர்த்தி செய்கின்றன. தற்போது உள்ள விதிமுறைகளின்படி காக்கனாம்பாளையத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட சாத்தியக்கூறுகள் இல்லை.

36--

கொசு ஒழிப்பு நடவடிக்கைகளை கிராமப்புறங்களில் விரிவாக்குதல்

வினா எண் 108191--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

1996 பிப்ரவரி 15]

கொசு ஒழிப்பு மற்றும் கொசுவினால் பரவும் நோய் தடுப்பு நடவடிக்கைகளை கிராமப் புறங்களில் விரிவாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கிராமப்புறங்களில் பஞ்சாயத்து யூனியன் மூலமும் ஆரம்ப சுகாதார நிலையங்களின் மூலமும் தேவைப்பட்ட இடங்களில் கொசு ஒழிப்புப் பணிகள் செயற்படுத்தப்பட்டு வருவதால், வினா தொடர்பான செயற்குறிப்பு தனியாக எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

37--

தாலுக்கா மருத்துவமனைகளில் கண்சிகிச்சை

வினா எண் 108193--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

கண் நோயை ஆரம்ப நிலையிலேயே கண்டுபிடிக்கும் இயந்திரம் ஒவ்வொரு தாலுக்கா மருத்துவமனையிலும் வைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தாலுக்கா மருத்துவமனைகளில் அன்றி மக்கள் எளிதில் அணுகக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், கண் சிகிச்சைக்கென போதிய உபகரணங்களோடு கண் சிகிச்சை உதவியாளர்கள் பணியாற்றுகின்றனர். இவர்கள், ஆரம்ப நிலையில் உள்ள கண் கோளாறுகளை கண்டுபிடித்து சிகிச்சை அளிப்பதுடன், சிறப்பு மற்றும் அறுவை சிகிச்சை தேவைப்படுவோரை மாவட்ட மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளுக்கு அனுப்பி வைக்க ஆவன செய்கின்றார்கள்.

38--

ஏலகிரி மலைப்பகுதிகளில் மரக்கன்றுகள் நடுதல்

வினா எண் *45696*--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி ஜோலார்பேட்டை ஒன்றியம், பொன்னேரி வழியாக ஏலகிரி மலைக்கு செல்லும் மலைச் சாலையில் தேக்கு, வேம்பு, யூகலிப்ட்ஸ் மரக்கன்றுகள் நட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை--

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, ஜோலார்பேட்டை ஒன்றியம், ஏலகிரி மலைக்குச் செல்லும் மலைச்சாலையில், மலைவாழ் மக்கள் முன்னேற்றத் திட்டத்தின் கீழ் *1992-93*ல் *5* கிலோ மீட்டர் தூரம் புளியன், புங்கன், வேம்பு செடிகளை கொண்டு சாலையோரத் தோட்டம் எழுப்பப்பட்டது. நடப்பு நிதி ஆண்டில் *(1995-96)* மீதமுள்ள *5* கிலோ மீட்டர் தூரமுள்ள சாலையில் சாலையோர தோட்டம் எழுப்பப்பட்டு வருகிறது.

39--

கிராம வனக்குழு அமைத்தல்

வினா எண் *65013*--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சமூக நல காடுகளைப் பாதுகாக்க கிராம அளவில் கிராம வனக்குழு அமைக்கப்படுகிறதா?

விடை--

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

சமூக காடுகள் செயல்படும் கிராமங்களில் சமூக நலக்காடுகளைப் பாதுகாக்கவும், வனத்துறைக்கும், கிராம மக்களுக்கும் இடையே தொடர்பு

1996 பிப்ரவரி 15]

கொள்ளவும் கிராம அளவில் கிராம வனக்குழுக்கள் அமைக்கப்பட்டிருந்தன. இதற்கு ஊராட்சி மன்றத் தலைவர்கள் தலைவராகச் செயல்பட்டனர். தற்போது தேர்ந்தெடுத்த ஊராட்சி மன்றங்கள் இல்லையாதலால் இக்குழுக்கள் செயல்பாட்டில் இல்லை.

40--

பிக்னிக் ரயில் இயக்குதல்

வினா எண் *67564*--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நீலகிரி மலையில் உதகமண்டலம்-ரண்ணிமேடு இடையே 25 கி.மீ. தூரத்துக்கு "பிக்னிக் ரயில்" விடுமாறு மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

விடை--

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

தற்பொழுது உதகமண்டலம் ரண்ணிமேடு இடையே பிக்னிக் ரயில், விடுவது குறித்த கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை. மேட்டுப்பாளையம்-உதகமண்டலம் பிரிவில் இரண்டு இணை ரயில்கள் (one pair) இயங்குகின்றன. கூனூர்-உதகமண்டலத்திற்குமிடையே 4 இணை ரயில்கள் (two pairs) இயங்குகின்றன. இதுதவிர கோடை பருவத்தில் (Seasons) மேட்டுப்பாளையத்திற்கும் உதகமண்டலத்திற்கும் இடையே கூடுதல் ரயில் வண்டிகள் இயக்கப்படுகின்றன.

41--

சமூகநலக் காடுகள் மூலம் அரசுக்கு கிடைத்த வருமானம்

வினா எண் *82859*--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கடந்த ஆண்டில் சமூக நலக்காடுகளின்மூலம் அரசுக்கு கிடைத்த வருமானம் எவ்வளவு?

விடை--

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

1994-95ல் சமூகக் காடுகள் மூலம் அரசுக்கு கிடைக்கப் பெற்ற வருவாய் ரூ. 1034.29 இலட்சம் ஆகும்.

42--

யூகலிப்டஸ் மரங்கள் குறைந்த விலைக்கு விற்பனை

வினா எண் 87954--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வனத் துறை வளர்த்துள்ள யூகலிப்டஸ் மரங்களை சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்கு குறைந்த விலைக்கு விற்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

வனத்துறை வளர்த்துள்ள யூகலிப்டஸ் மரங்களை சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்கு குறைந்த விலைக்கு விற்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

43--

மரக்கன்றுகள் உற்பத்தி திட்டம்

வினா எண் 107828--திரு. வி.கே. லட்சுமணன்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

Tissu culture மூலம் மூங்கில், சந்தனமரம் போன்றவைகளை இனப்பெருக்கம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

வனத்துறை மூலம் சோதனைக் குழாயில் மரக்கன்று உற்பத்தி செய்யும் திட்டம் ஏதும் நடைமுறையில் இல்லை.

1996 பிப்ரவரி 15]

44--

பட்டுக்கோட்டை வட்டத்தில் அரசு நெல் கொள்முதல் நிலையம் அமைத்தல்

வினா எண் *61831*--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை தாலுக்கா, காயாவூரில் அரசு நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், உணவு அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், காயாவூரில் அரசு நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

45--

நடமாடும் நெல் கொள்முதல் நிலையங்கள் அமைத்தல்

வினா எண் *84158*--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தமிழ்நாட்டில் கூடுதலாக நடமாடும் நெல் கொள்முதல் நிலையங்கள் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், உணவு அமைச்சர்:

நடமாடும் கொள்முதல் நிலையங்கள் என்று தனியாக ஏதும் இம்மாநிலத்தில் இல்லை. இருந்தபோதிலும், இங்கே இணைக் கொள்முதல் முறை நடைமுறையில் இருப்பதால் 10 டன்னுக்கு மேல் நெல் வைத்திருக்கும் ஒவ்வொரு விவசாயிடமிருந்தும், அவரவர் அருகில் உள்ள நேரடி கொள்முதல் நிலையத்தில் தகவல் தெரிவிக்கும் பட்சத்தில் அவர்தம் இருப்பிடத்திலேயே கொள்முதல் செய்யப்படும் முறை கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இம்முறை, சீராகவும் செம்மையாகவும் நடைபெற்று வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

இதன்மூலம், நடமாடும் கொள்முதல் நிலையத்தின் நோக்கம் இயல்பாகவே நிறைவேறுகிறது. தேவைக்கேற்ப இதன் செயற்பாட்டினை விரிவாக்கம் செய்து கொள்ளலாம்.

46--

அரிசி ஆலைகள் உரிமம் விவரம்

வினா எண் 98944--திருமதி கே. மரியம் உல் ஆசியா: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

அரிசி ஆலைகளை நடத்த உரிமம் பெறத் தேவையில்லை என்று மத்திய அரசு மாநில அரசுக்குத் தாக்கீது அனுப்பியுள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், உணவு அமைச்சர்:

இல்லை.

47--

கழிவுநீரை அகற்ற நடவடிக்கை

வினா எண் 35936--திரு. ஆர். பி. பரமசிவம்: *மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--*

(அ) தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், கொரட்டூர் கோட்டம்-- திருமுல்லைவாயல் வீட்டுவசதி வாரிய குடியிருப்பில் (பிளாக் 8 முதல் 20 வரை) கழிவு நீரை அகற்ற நிரந்தர ஏற்பாடு செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விரைவில் நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை--

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): திருமுல்லைவாயல் திட்டப்பகுதியின் கழிவுநீர், ரயில்வே சிறுபாலத்தின் அருகிலிருந்து அம்பத்தூரில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்ட கழிவு நீரேற்று நிலையத்தில் கொண்டு விடப்பட்டு அப்புறப்படுத்துவதற்கான பணி ஏற்கெனவே

1996 பிப்ரவரி 15]

திட்டமிட்டபடி 1994-ம் ஆண்டு அக்டோபர் மாதம் முடிவு பெற்று தற்போது கழிவு நீர்க்குழாய் மூலம் அப்புறப்படுத்தும் பணி செயல்பட்டு வருகிறது.

48--

திருவில்லிபுத்தூர் நகரில் அரசு ஊழியர்களுக்கு வீடுகள்

வினா எண் *70718*--**திரு. இரா. தாமரைக்கனி:** *மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--*

(அ) திருவில்லிபுத்தூர் நகரில் அரசு ஊழியர்களுக்கு வீடுகட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

விடை--

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) இல்லை. திருவில்லிபுத்தூர் ஓர் வட்டாட்சியர் தலைமையிடமாக இருப்பதால் அங்கு அரசு ஊழியர்களுக்கு வாடகை குடியிருப்புத் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

49--

மகளிர் கூட்டுறவு சங்கங்கள் விவரம்

வினா எண் *57149*--**திரு. கே. ஏ. மனோகரன்:** *மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

1993-94-ஆம் ஆண்டில் எந்தெந்த தொழில்களில் மகளிர் தொழில் முனைவோர் கூட்டுறவுச் சங்கங்கள் எந்தெந்த மாவட்டங்களில் எத்தனை தொடங்கப்பட்டுள்ளன?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை--

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத்தொழில் துறை அமைச்சர்: 1993-94 ஆண்டில் மகளிருக்காக பதிவு செய்யப்பட்ட தொழிற்கூட்டுறவு சங்கங்களின் பட்டியல் பின்வருமாறு:--

தொழில்களின் விவரம்	மாவட்டம்	எண்ணிக்கை
(1)	(2)	(3)
கைவினைப்பொருட்கள்	பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்	1
கைவினைப்பொருட்கள்	நெல்லை-கட்டபொம்மன்	1
கைவினைப்பொருட்கள்	திருவண்ணாமலை-சம்புவராயர்	1
கைவினைப்பொருட்கள்	தர்மபுரி	1
பாலிதின்	மதுரை	1
பாலிதின்	சேலம்	1
கயிறு	மதுரை	2
கயிறு	தர்மபுரி	1
கயிறு	நாகை-காயிதே மில்லத்	1
கயிறு	இராமநாதபுரம்	2
கயிறு	திருச்சி	1
கயிறு	கோயம்புத்தூர்	1
தையற்கலை	பெரியார்	1
	மொத்தம் ..	15

50-

புதியதாக தொழில் கூடங்கள் அமைத்தல்

வினா எண் 61414--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் தொழில் கூடங்கள் அமைக்க என்ன நெறிமுறைகளைப் பின்பற்றுகிறது?

1996 பிப்ரவரி 15]

(ஆ) தற்போது எந்தெந்த மாவட்டங்களில் இதன் தொழில் கூடங்கள் உள்ளன?

(இ) எந்தெந்த மாவட்டங்களில் புதிதாக தொழில் கூடங்கள் அமைக்க இந்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது?

விடை--

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில்துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் ஒரு தொழிற்பேட்டையை நிறுவும்போது முதலில் அங்கு தொழிற்கூட தேவை கணிப்பு முறையை கடைபிடித்து மாவட்ட சிறுதொழில் மையம் அவர்களுடன் கூட்டம் நடத்தி அந்த தொகுதியில் உள்ள சிறுதொழில் முனைவோர்களின் தேவையை முதலில் அறிந்து பிறகு தகுந்த அரசு தரிசு நிலங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடன் கலந்தாலோசித்து தேர்வு செய்து அவ்விடத்தில் தொழிற்பேட்டை துவங்க அடிப்படை வசதிகள் உள்ளனவா என்பதனை அறியும். பிறகு நிலங்களைச் கையகப்படுத்தி அவ்விடத்தில் தொழில் முனைவோர்களின் தேவைக்கேற்ப தொழிற்கூடங்களைக் கட்டி ஒதுக்கீடு செய்யும். தொழிற்கூட மதிப்பினை முழுமையாக செலுத்துபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(ஆ) ஏற்கனவே செங்கல்பட்டு--எம்.ஜி.ஆர், சிதம்பரனார், கோயம்புத்தூர், தர்மபுரி, திண்டுக்கல்--அண்ணா, காமராஜர், கன்னியாகுமரி, சென்னை, மதுரை, நாகப்பட்டினம்--காயிதே மில்லத், நெல்லை கட்டபொம்மன், வட ஆற்காடு--அம்பேத்கார், பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர், பெரியார், புதுக்கோட்டை, ராமநாதபுரம், சேலம், தென் ஆற்காடு--வள்ளலார், தஞ்சாவூர், நீலகிரி, திருச்சி, திருவண்ணாமலை--சம்புவராயர் ஆகிய மாவட்டங்களில் இதன் தொழிற்கூடங்கள் உள்ளன.

(இ) தற்போது செங்கை--எம்.ஜி.ஆர்., தர்மபுரி, திருச்சி, கோயம்புத்தூர், நெல்லை--கட்டபொம்மன், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் தொழிற்பேட்டைகள் அமைக்க இந்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

51--

பட்டுத் தொழிலை ஊக்குவித்தல்

வினா எண் *64949*--திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் பட்டுத் தொழிலை ஊக்குவிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா?

விடை--

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

ஆம். திருப்பத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு தொழில்நுட்ப சேவை மையம் ஒரு பட்டு வளர்ப்பு உதவி ஆய்வாளர் தலைமையில், *7* இளநிலை ஆய்வாளர்களுடன் செயல்படுகின்றது.

இப்பகுதியில் *355* ஏக்கர் பரப்பளவில் *683* விவசாயிகளால் முசுக்கொட்டை பயிர் செய்யப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிற்கு *150* ஏக்கர் பரப்பளவில் புதிய முசுக்கொட்டை தோட்டம் உருவாக்குவதற்கு குறியீடு நிர்ணயிக்கப்பட்டு அதனை அடைவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நிலமுள்ள ஆதிதிராவிடர் திட்டத்தின் கீழ் தகுதியுள்ள பயனாளிகளை தேர்வு செய்து மல்பரி நடவு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு இம்மையத்திற்கு ரூ. *4.00* லட்சம் செலவில் சொந்தக் கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

52-

காட்டுமன்னார்கோயில் தொகுதியில் கயிறு தொழிற்சாலை ஏற்படுத்துதல்

வினா எண் *88160*--திரு. என்.ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

காட்டுமன்னார்கோயில் தொகுதியில் சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் மூலம் கயிறு திரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்தப்படுமா?

விடை--

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

இல்லை.

1996 பிப்ரவரி 15]

53--

தென்னை அபிவிருத்தி வாரியம்

வினா எண் 61829--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தென்னை தொழில்கள் அபிவிருத்திக்கு தனி வாரியம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

இல்லை. தென்னை வளர்ச்சி வாரியம், கொச்சி மூலம் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவதால் தனி வாரியம் அமைக்க ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

54--

தென்னை மகசூல் விவரம்

வினா எண் 63624--திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழகத்தில் எந்தெந்த மாவட்டங்களில் தென்னை அதிகமாக பயிரிடப்படுகிறது?

(ஆ) எந்தெந்த மாவட்டங்களில் மகசூல் அதிகரித்துள்ளது?

விடை--

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) தமிழகத்தில் கீழ்க்கண்ட மாவட்டங்களில் தென்னை அதிகமாக பயிரிடப்படுகிறது:

	பரப்பளவு (எக்டேர்)	
	1992–93	1993–94
1. கோயம்புத்தூர்	50.762	57.384
2. தஞ்சை	30.461	24.696
3. மதுரை	14.348	16.031

4.	வடஆற்காடு-அம்பேத்கார்	16.308	16.725
5.	பெரியார்	9.068	15.910

ஆ. கீழ்க்கண்ட மாவட்டங்களில் மகசூல் அதிகரித்துள்ளது:

		தேங்காய் (இலட்சத்தில்)	
		1992–93	1993–94
1.	தஞ்சை மற்றும் நாகை-காயிதே மில்லத்	3,370	5,513
2.	திருநெல்வேலி	733	1,011
3.	பெரியார்	1,780	3,167
4.	கோயம்புத்தூர்	4,065	5,221
5.	தருமபுரி	3,014	3,174
6.	சேலம்	1,245	1,824

55--

பட்டுக்கோட்டையில் விவசாயக் கல்லூரி

வினா எண் 61714--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையில் விவசாயக் கல்லூரி துவங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

தற்போது தமிழ்நாட்டில் நான்கு வேளாண்மைக் கல்லூரிகள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கீழே முறையே கோயம்புத்தூர், மதுரை, கிள்ளிகுளம் மற்றும் திருச்சி மாவட்டத்தில் நாவலூர் குட்டப்பட்டு ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. மேலும், அண்ணாமலைப் பல்கலைக்கழகக் கட்டுப்பாட்டின் கீழ் ஒரு விவசாயக் கல்லூரி செயல்பட்டு வருகின்றது. தற்போது சுமார் இரண்டாயிரம் வேளாண்மை பட்டதாரிகள் வேலை வாய்ப்பின்றி இருக்கின்றனர். புதியதாக ஒரு வேளாண்மைக் கல்லூரி துவங்க வேண்டுமானால், 500 ஏக்கர் நிலமும், இதர வசதிகள் தவிர ரூ. ஆறு கோடியும் தேவைப்படுகிறது. மிக அதிகமான இந்த முதலீட்டுத் தொகையின் அளவு மற்றும்

1996 பிப்ரவரி 15]

வேளாண்மைப் பட்டதாரிகளின் வேலையற்ற நிலை இவைகளைக் கருத்தில் கொண்டு பார்க்கையில் தஞ்சை மாவட்டத்தில் புதியதாக ஓர் வேளாண்மைக் கல்லூரி அமைக்க வாய்ப்பில்லை. எனவே, அரசிடம் இதற்கான செயற்குறிப்பும் இல்லை.

56--

வேளாண்மைக் கல்லூரி மாணவர்களின் விவரம்

வினா எண் 78569--திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: *மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

1994–95ம் வருடத்தில் மதுரையில் உள்ள வேளாண்மைக் கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் எண்ணிக்கை எவ்வளவு?

விடை--

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

1994–95ம் வருடத்தில் மதுரையில் உள்ள வேளாண்மைக் கல்லூரியில் 450 மாணவர்கள் இளநிலை விவசாயப் பட்டப்படிப்பும், 183 மாணவர்கள் பட்ட மேற்படிப்பும் படித்து வருகிறார்கள்.

57--

விதை நெல்லை பாதுகாக்க வசதி

வினா எண் 82011--திரு. கு. சீனிவாசன்: *மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

மன்னார்குடி தாலுக்கா, காஞ்சிக்குடிக்காட்டில் உள்ள விதை நெல் சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிக்கப்படும் விதை நெல்லை பாதுகாக்க போதுமான வசதி கொண்ட கிடங்கு கட்டப்படுமா?

விடை--

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

இல்லை. விவசாயிகளின் விதைப் பண்ணையிலிருந்து கொண்டு வரப்படும் கள விதைகளையும், அரசு விதைப் பண்ணை,

காஞ்சிக்குடிக்காட்டிலிருந்து வரும் விதை நெல் மற்றும் தானியங்களையும் ஏற்கனவே உள்ள இரண்டு விதைக் கிடங்குகளில் பாதுகாத்து இருப்பு வைத்திட போதுமான இடவசதி உள்ளது. எனவே காஞ்சிக்குடிக்காட்டில் உள்ள விதை சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிக்கப்படும் விதை நெல்லை பாதுகாக்க மேற்கொண்டு புதிய விதைக் கிடங்கு கட்டவேண்டிய அவசியம் எழவில்லை.

58--

விவசாய கிணற்றுக்கு மின் இணைப்பு

வினா எண் *82407--டாக்டர் எஸ். சுந்தரராஜ்:* மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, மஞ்சூர் கிராமத்தில் உள்ள விவசாயக் கிணற்றிற்கு (சமுதாய கிணறு) மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், இக்கிணறு நீர் இதுவரை எத்தனை ஏக்கர் நிலங்களில் பாசனத்திற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது?

விடை--

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: வேளாண்மைத்துறை அமைச்சர்:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, மஞ்சூர் கிராமத்தில் இரண்டு சமுதாயக் கிணற்றிற்கான பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒரு சமுதாயக் கிணற்றிற்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. மற்றொரு சமுதாயக் கிணற்றிற்கு மின் இணைப்பு வேண்டி *5-2-1992*ல் மின் வாரியத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. இதுவரை மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை.

(ஆ) மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ள ஒரு சமுதாயக் கிணறு *33* ஏக்கர் பரப்பில் உள்ள நிலங்களின் பாசனத்திற்கு பயன்படுத்தப்பட்டு வந்தது. இக்கிணற்று நீர் விவசாயத்திற்கு பயன்படுமளவிற்கு போதுமானதாக இல்லாததால், இக்கிணறு இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண் ஆர்.ஓ.சி. *21,89488/91*ன் நாள்: *8-11-1991*க்கிணங்க குடிநீர்

வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டு குடிநீர் உபயோகத்திற்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. மின் இணைப்பு வேண்டி மின்வாரியத்திடம் விண்ணப்பிக்கப்பட்டுள்ள மற்றொரு கிணற்றுக்கு நீர்மூழ்கி மோட்டார் மற்றும் உபகரணங்கள் வாங்கப்பட்டு தயார்நிலையில் உள்ளது. மின் இணைப்பு பெறப்பட்டதும் இக்கிணறு விவசாயிகளின் பயன்பாட்டுக்கு ஒப்படைக்கப்படும்.

59--

வேளாண்மை அறிவியல் மையம் அமைத்தல்

வினா எண் 97795--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சேலத்தில் வேளாண்மை அறிவியல் மையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை--

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

ஆம்.

மத்திய அரசின் வேளாண்மைக் குழுமம், தமிழ்நாட்டில் சேலம் மாவட்டத்தில் ஓர் வேளாண்மை அறிவியல் மையம் அமைக்க ஒப்புதல் தெரிவித்ததின் பேரில், வேளாண் சாகுபடிக்கு உகந்த 50 ஏக்கர் நிலம் சந்தியூர் ஏரிப் புறம்போக்கு மற்றும் அம்மாபாளையம் ஏரிப் புறம்போக்கு ஆகியவற்றில் எடுக்கப்படவுள்ளது. இதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. அத்தியாவசியப் பணிகள் அமைக்கும் பொருட்டு ரூ. 55.62 இலட்சம் மத்திய அரசு ஒதுக்கியுள்ளது. இவ்வறிவியல் வேளாண்மை மையம் 1-11-1994 முதல் சந்தியூரில் வாடகை கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

60--

தீப்பெட்டிக்கு விற்பனை வரி விலக்கு அளித்தல்

வினா எண் 65183--திருமதி கே. மரியும் உல் ஆசியா: மாண்புமிகு வணிகவரி துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

குடிசைத் தொழிலான தீப்பெட்டிக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிகவரிகள் துறை அமைச்சர்:

குடிசை தொழிலான கையினால் செய்யப்பட்ட தீப்பெட்டிக்கு *1-4-1994* முதல் வரிசை எண் *79* பகுதி பி. 1ஆவது அட்டவணைப்படி *3* விழுக்காடு வரி, முதல் விற்பனையில் விதிக்கப்படுகிறது. குடிசைத் தொழில் தழைத்தோங்க வேண்டும் என்ற எண்ணத்துடன் தான் கையினால் செய்யப்படும் தீப்பெட்டிக்கு மிகக் குறைந்த வரியான *3* சதவிகித விற்பனை வரி, அரசு நன்றாக ஆலோசித்து தீர்மானத்துடன் *1-4-1994* முதல் விதித்துள்ளது. இந்த வரி விதிப்பின் அமைப்பு நல்ல முறையில் இயங்கி வருகிறது. இத்தகைய நிலையில் கையினால் செய்யப்பட்ட தீப்பெட்டிக்கு வரியிலிருந்து விலக்கு அளிக்க தற்பொழுது அரசுக்கு உத்தேசம் ஏதும் இல்லை.

61--

ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு திருமணமண்டபம்

வினா எண் 77441--டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை பணியாளர்களுக்கென திருமண மண்டபம் கட்டப்படுமா?

விடை--

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்:

தற்பொழுது பரிசீலனையில் ஏதும் இல்லை.

62--

அம்பேத்கார் மாவட்டத்தில் சிமெண்ட் தொழிற்சாலை அமைத்தல்

வினா எண் 108026--திரு. ஏ. கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் சிமெண்ட் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்:

1996 பிப்ரவரி 15]

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் சிமெண்ட் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் தற்போது எதுவும் அரசின் செயற்குறிப்பில் இல்லை.

63--

ஆண்டிசெட்டிப்பாளையத்தில் நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டுதல்

வினா எண் 92016-- திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருச்சி மாவட்டம், க. பரமத்தி ஊராட்சி ஒன்றியம், சி. கூடலூர் மற்றும் ஆண்டிசெட்டி பாளையத்தில் நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை--

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:

இல்லை.

64--

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் நெசவாளர்களுக்கு விடுகள் கட்டுதல்

வினா எண் 99996--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு சமூகநலம், மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள் கட்ட அரசு முன்வருமா ?

விடை--

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:

இல்லை.

65--

புதுக்கோவிலில் கூட்டுறவு நூற்பாலை துவங்குதல்

வினா எண் 99996--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு சமூகநலம், மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வடஆற்காடு--அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, புத்துகோவிலில் கூட்டுறவு நூற்பு ஆலை அமைக்க அரசு முன்வருமா?

விடை--

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:

வட ஆற்காடு--அம்பேத்கார் மாவட்டம் திருப்பத்தூர் தொகுதி, புத்துகோவிலில் கூட்டுறவு நூற்பு ஆலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

66--

திருப்பத்தூரில் கூட்டுறவு நூற்பாலை துவங்குதல்

வினா எண் 108373-- திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வடஆற்காடு--அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூரில் கூட்டுறவு நூற்பாலை துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:

தற்போது வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூரில் கூட்டுறவு நூற்பாலை துவக்க அரசிடம் குறிப்பேதும் பரிசீலனையில் இல்லை.

67--

சினிமா காட்சிகளை அதிகரித்தல்

வினா எண் 43432--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சினிமா காட்சிகளை அதிகரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்:

சினிமாக் காட்சிகளை அதிகரிக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

1996 பிப்ரவரி 15]

68--

பொருட்காட்சிகளில் மத்திய அரசின் துறைகள் பங்கேற்பு

வினா எண் *45939*--திருமதி கே. மரியம்-உல்-ஆசியா: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தமிழக அரசு நடத்தும் பொருட்காட்சிகளில் மத்திய அரசின் துறைகள் கலந்து கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

விடை--

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசு நடத்தும் மாவட்ட அளவிலான பொருட்காட்சிகளில் மத்திய அரசுத் துறைகள், சார்பு நிறுவனங்களை பங்கேற்குமாறு இத்துறையிலிருந்து அழைப்பு அனுப்பப்படுகின்றது. *1994-95* நிதி ஆண்டில் நடத்தப்பட்ட பொருட்காட்சிகளில் கோவையில் மட்டும் இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் நிறுவனம் பங்கேற்றுள்ளது. மாவட்ட அளவிலான பொருட்காட்சிகளில் மத்திய அரசுத் துறைகள் சார்பு நிறுவனங்கள் பங்கேற்பதில்லை. *1995*-ஆம் ஆண்டு சென்னையில் தமிழ்நாடு அரசு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில் நடத்தப்பட்ட அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் தென்னக இரயில்வே, சென்னை துறைமுகம், சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம், காயர்போர்டு ஆகிய மத்திய அரசுத் துறைகள், சார்பு நிறுவனங்கள் பங்கேற்றன.

69--

உ.வே. சாமிநாத அய்யருக்கு நினைவுத்தூண்

வினா எண் *87618*--திருமதி மரியம்-உல்-ஆசியா: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாத அய்யரின் பிறந்த ஊரான உத்தமதானபுரத்திலும் அவர் மறைந்த திருக்கழுக்குன்றத்திலும் நினைவுத் தூண்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்:

இயலாது.

70--

தியாகி சுப்பிரமணிய சிவாவிற்கு நினைவு மண்டபம்

வினா எண் 99975--திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

விடுதலைப் போராட்டவீரர் தியாகி சுப்பிரமணிய சிவாவிற்கு நினைவு மண்டபம் நிறுவ அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்:

இல்லை.

71--

திருப்பத்தூரில் பொருட்காட்சி அமைத்தல்

வினா எண் 108291--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வடாற்காடு--அம்பேத்கார் மாவட்டம் திருப்பத்தூரில் அரசுப் பொருட்காட்சி அமைக்க அரசு முன் வருமா?

விடை--

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்:

மாவட்டத் தலைநகரங்களிலும் மற்றும் முக்கிய நகரங்களிலும் நிதி நிலைக்கேற்ப அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன. திருப்பத்தூரில் அரசுப் பொருட்காட்சி நடத்தும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

1996 பிப்ரவரி 15]

72--

தொடக்கப்பள்ளிகளுக்கு ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்குதல்

வினா எண் *43485--* **திரு.** *ஆர்.* **சிங்காரம்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

பட்டுக்கோட்டை ஒன்றியம், ஏரிப்புறக்கரை தொடக்கப்பள்ளிக்கு ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்குவதற்கு 1994-95-இல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

பட்டுக்கோட்டை ஒன்றியம், ஏரிபுறக்கரை தொடக்கப்பள்ளிக்கு நான்கு பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டு, நான்கு ஆசியர்களும் பணியாற்றி வருகிறார்கள். எனவே, கூடுதல் ஆசிரியர்கள் வழங்குவதற்கு அவசியம் எழவில்லை.

73--

மானியக்காடு தொடக்கப்பள்ளிக்கு ஆசிரியர்கள் நியமனம்

வினா எண் *43574--***திரு.** *ஆர்.* **சிங்காரம்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

பட்டுக்கோட்டை ஒன்றியம், மானியக்காடு தொடக்கப்பள்ளிக்கு ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்குவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

பட்டுக்கோட்டை ஒன்றியம், மானியக்காடு தொடக்கப்பள்ளிக்கு 3 ஆசிரியர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஒரு இடைநிலை ஆசிரியர் பணியிடம் காலியாகவுள்ளது. அப்பணியிடம் நிரப்பப்பட்டுவிட்டால் போதுமானது ஆகும். கூடுதல் பணியிடம் வழங்க மாணவர்கள் வருகை போதுமானதாக இல்லை என்பதால் கூடுதல் பணியிடம் வழங்கும் பிரச்சினை எழவில்லை.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

74--

அவுரிக்காடு ஒன்றிய தொடக்கப்பள்ளிக்கு கூடுதல் ஆசிரியர்

வினா எண் 43591--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம் தலைஞாயிறு வட்டாரம், அவுரிக்காடு ஒன்றிய தொடக்கப் பள்ளியில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை என்ன?

(ஆ) பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்கள் எவ்வளவு?

(இ) மேற்படி பள்ளியில் உள்ள ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க 1994-95-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) மொத்தம் 35 மாணவர்கள், அதில் ஆண்கள்--13 பெண்கள்-22.

(ஆ) இரண்டு ஆசிரியர்கள்.

(இ) தற்போது 35 பிள்ளைகள் பதிவில் உள்ளனர். எனவே, ஆசிரியர் பற்றாக்குறை என்ற பிரச்சனை எழ வாய்ப்பில்லை.

75--

நுழைவுத் தேர்வு முறையில் அரசு ஒதுக்கீடு

வினா எண் 47183--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பொறியியல் கல்வி நிறுவனங்களில் நுழைவுத் தேர்வு மூலம் செய்யப்படும் தேர்வு முறையில் 10 சதவீத அரசு ஒதுக்கீடு வைத்து பொருளாதாரத்தில் நலிந்த பிரிவு மாணவர்களுக்கு பயன்பெறும் வகையில் சீர்திருத்தம் செய்ய அரசு முன்வருமா?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

பொறியியல் கல்வி நிறுவனங்களில் நுழைவுத் தேர்வு மூலம் செய்யப்படும் தேர்வு முறையில் 10 சதவீத அரசு ஒதுக்கீடு வைத்து பொருளாதாரத்தில் நலிந்த பிரிவு மாணவர்கள் பயன்பெறும் வகையில்

1996 பிப்ரவரி 15]

சீர்திருத்தம் செய்வதற்கான செயற்குறிப்பு மூலம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஏற்கனவே, சமூக ரீதியில் பின்தங்கியவர்களுக்கு அரசியல் சட்டத்தின்படி அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் இன பிரிவினர்களுக்கும் போதிய இட ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளதால், பொருளாதாரத்தில் நலிந்த பிரிவு மாணவர்களுக்கு என 10 சதவீத அரசு இட ஒதுக்கீடு செய்வதற்கான சாத்தியக் கூறுகள் ஏதுமில்லை. மேலும் பொறியியல் கல்லூரி தேர்வு முறைகள் AICTE-யின் நெறிமுறைகள் வழிகாட்டிக்குட்பட்டது என்பதால் ஏற்கனவே உள்ள இட ஒதுக்கீட்டுக்கு மேல் புதிய இட ஒதுக்கீடு ஏதும் செய்ய அவசியம் எழவில்லை.

76--

குடியான குப்பத்தில் ஆரம்ப பள்ளியை நடுநிலைப் பள்ளியாக்குதல்

வினா எண் 48035--திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, ஜோலார்பேட்டை ஒன்றியம் குடியான குப்பத்தில் உள்ள ஆரம்பப் பள்ளியை நடுநிலைப்பள்ளியாக ஆக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி ஜோலார்பேட்டை ஒன்றியம் குடியான குப்பத்தில் உள்ள தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்தும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

77--

ஆரம்பப் பள்ளியை நடுநிலைப்பள்ளியாக்குதல்

வினா எண் 48313--திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், பழமங்கலம் ஊராட்சி, வடக்கு பாளையம் கிராமத்திலுள்ள ஆரம்ப பள்ளியை நடுநிலைப்பள்ளியாக ஆக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், பழமங்கலம் ஊராட்சி வடக்கு பாளையம் கிராமத்திலுள்ள ஆரம்பப் பள்ளியை நடுநிலைப்பள்ளியாக ஆக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

78--

சௌந்தராபுரம் தொடக்கப்பள்ளியை நடுநிலைப்பள்ளியாக்குதல்

வினா எண் *49018*--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கரூர் கல்வி மாவட்டம், அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், சௌந்தராபுரம் தொடக்கப் பள்ளியை நடுநிலைப்பள்ளியாக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

கரூர் கல்வி மாவட்டம், அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், சௌந்தராபுரம் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

79--

ஆரம்பப்பள்ளிகளை நடுநிலைப்பள்ளிகளாக மாற்றுதல்

வினா எண் *53480*--திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், கொத்தளம் ஊராட்சி ஆண்டிக்காட்டுப்பாளையம், கொத்தளம், மாரியம்மன் கோவில் புதூர், வீரசங்கிலி, வேளாண் காட்டுப்பாளையம், கொத்தளம் ஆதிதிராவிடர் காலனி, குள்ளக்கவுண்டனூர் முத்தையன் வலசு, காரக்காட்டு வலசு, மணயதிட்டு ஆகிய கிராமங்களில் உள்ள ஆரம்ப பள்ளிகளை நடுநிலைப்பள்ளிகளாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

1996 பிப்ரவரி 15]

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

1995–96-ம் ஆண்டில் மேற்சொன்ன தொடக்கப்பள்ளிகளை நடுநிலைப்பள்ளிகளாக உயர்த்துவதற்கான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

80--

திருப்பத்தூர் தொகுதியில் ஆரம்பப் பள்ளிகள் துவங்குதல்

வினா எண் *61306*--**திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருப்பத்தூர் தொகுதியில் ஆரம்பப் பள்ளிகள் ஆரம்பிக்க வேண்டி பரிந்துரைக்கப்பட்ட இடங்கள் எத்தனை?

(ஆ) அவ்விடங்களில் எந்த ஆண்டு ஆரம்பப் பள்ளிகள் துவக்கப்படும்?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) திருப்பத்தூர் தொகுதியில் அடங்கிய திருப்பத்தூர் சோலையார்பேட்டை, நாட்ராம்பள்ளி ஊராட்சி ஒன்றியங்களில் *1995–96*-ஆம் கல்வி ஆண்டில் ஊராட்சி ஒன்றிய பள்ளிகள் துவக்க கருத்துக்கள் எதுவும் பெறப்படாததால் பரிந்துரைக்கப்படவில்லை.

(ஆ) வரும் *1996–97*ம் கல்வியாண்டில் கருத்துருக்கள் பெறப்பட்டால் பரிசிலிக்க இயலும்.

81--

ஆரம்பப்பள்ளியை நடுநிலைப்பள்ளியாக உயர்த்துதல்

வினா எண் *82306*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், காங்கயம் பாளையம் ஊராட்சி, காங்கயம்பாளையம் கிராமத்தில் உள்ள ஆரம்ப பள்ளியை நடுநிலைப்பள்ளியாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை––

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், காங்கயம் பாளையம் ஊராட்சி, காங்கயம் பாளையம் கிராமத்தில் உள்ள ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

82––

கல்லூரிகளில் பணிபுரியும் பட்டதாரி பயிற்றுநர்களுக்குப் பணி மேம்பாடு

வினா எண் *84225*––திருமதி க. பழனியம்மாள்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா––

கல்லூரிகளில் பட்டதாரி பயிற்றுநர் விளக்குநர்களாகவே பல ஆண்டுகளாகப் பணிபுரியும் ஆசிரியர்கள் பணிமேம்பாடு செய்யப்படுவார்களா?

விடை––

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

கல்லூரிகளில் பட்டதாரி பயிற்றுநர் விளக்குநர்களாகவே பல ஆண்டுகளாகப் பணிபுரியும் ஆசிரியர்கள், போதிய கல்வித் தகுதி பெற்றிருக்காத காரணத்தால் அவர்களை விரிவுரையாளர்களாகப் பதவி மேம்பாடு செய்ய இயலாது.

83––

மாவட்டந்தோறும் இசைப்பள்ளிகள் அமைத்தல்

வினா எண் *91932*––திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா––

மாவட்டங்கள் தோறும் இசைப் பள்ளிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை––

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

மாவட்டந்தோறும் இசைப் பள்ளிகளை ஆரம்பிக்கும் கோரிக்கை ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. ஏற்கனவே உள்ள

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1996 பிப்ரவரி 15]

மூன்று இசைக் கல்லூரிகளுக்கு மேல் புதிய கல்லூரியோ பள்ளியோ ஆரம்பிக்கும் தேவை தற்போது எழவில்லை. எதிர்காலத்தில் தேவையின் அடிப்படையில் புதிய இசைக் கல்லூரிகள் துவங்குவது கருதப்படும்.

84--

கல்லூரிகளில் நாணயவியல் துவங்குதல்

வினா எண் 91955--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கலைக் கல்லூரிகளில் நாணயவியல் துறை துவக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

85--

நடுநிலைப் பள்ளிக்குக் கூடுதல் ஆசிரியர்கள் நியமனம்

வினா எண் 99958 திரு. ஏ. கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஜவ்வாது மலை நெல்லிப்பட்டு நாடு கிராமத்தில் நடுநிலைப் பள்ளிக்குக் கூடுதல் ஆசிரியர்கள் நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

இந்த ஆண்டில் கூடுதல் பணியிடங்கள் ஏதும் வழங்கப்படவில்லை. வருங்காலத்தில் மாணவர் சேர்க்கையை பொருத்து மேற்சொன்ன பள்ளிக்குக் கூடுதல் பணியிடங்கள் வழங்குவது குறித்து பரிசீலிக்க இயலும்.

86--

முந்திரி ஆலைத் தொழிலாளர்களுக்கு பணிக்கொடை வழங்குதல்

வினா எண் 81875--திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் பணிபுரியும் முந்திரி ஆலைத் தொழிலாளர்கள் வேலையை விட்டுச் செல்லும்போது அவரவர்களுக்குரிய 'கிராசுவிட்டி' வழங்காதது பற்றி அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

விடை--

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) 1985ஆம் ஆண்டு முதல் 1995ஆம் ஆண்டு இது நாள் வரையிலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் முந்திரி ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களில் பணிக்கொடை கிடைக்கப்பெறாத 30 தொழிலாளர்கள் திருநெல்வேலி பணிக்கொடை பட்டுவாடா சட்டக்கட்டுப்பாடு அதிகாரியான திருநெல்வேலி தொழிலாளர் துணை ஆணையர் அலுவலக தொழிலாளர் உதவி ஆணையரிடம் மனுக்களைத் தாக்கல் செய்ததின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட நிருவாகங்கட்கு, தொழிலாளர்களுக்கு சட்டப்படி சேரவேண்டிய பணிக்கொடையை வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. பணிக்கொடை கிடைக்கப்பெறாத தொழிலாளர்கள் எவரேனும் இருந்தால் அவர்கள் தங்களுடைய முறையீட்டு விண்ணப்பத்தை பணிக்கொடை பட்டுவாடா அதிகாரியான திருநெல்வேலி தொழிலாளர் துணை ஆணையர் அலுவலக உதவி ஆணையரிடம் சமர்ப்பித்தால் அவர்களுக்குரிய பணிக்கொடை கிடைக்க சம்பந்தப்பட்ட முந்திரி ஆலை நிர்வாகங்களுக்கு உத்தரவிடுவார்.

87--

ஆட்டோ ஓட்டுவதற்குச் சிறப்புப் பயிற்சி

வினா எண் 82415--டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

1996 பிப்ரவரி 15]

(அ) பரமக்குடி தொழில்நுட்ப பயிற்சி நிலையத்தில் ஆட்டோ ஓட்டுவதற்கு 'ட்ரைசம்' மூலம் சிறப்பு பயிற்சி வழங்கிட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

விடை--

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)*: பரமக்குடி தொழிற் பயிற்சி நிலையத்தில் ஆட்டோ ஓட்டுவதற்கு ட்ரைசம் (TRYSEM) மூலம் சிறப்புப் பயிற்சி வழங்கிட அரசிடம் திட்டம் ஏதும் இல்லை. ஆனால், ஆட்டோ ஓட்டுவதற்கு பயிற்சியாளர்களைத் தேர்வு செய்து, இராமநாதபுரம் திட்ட அலுவலர் அனுப்பி வைத்தால், தற்போது பரமக்குடி தொழிற் பயிற்சி நிலையத்தில பயிற்றுவித்து வரும் இரண்டு சக்கர வண்டி பழுது பார்த்தல் தொழிற் பிரிவினைக் கொண்டு ஆட்டோ ஓட்டுவிக்கும் பயிற்சியினை அளித்திட அரசு ஏற்பாடு செய்ய இயலும்.

88--

சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு வாரியம்

வினா எண் *97025*--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு தனி வாரியம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்:

சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு தனி வாரியம் அமைத்திட அரசிடம் செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை எனினும் சுமை தூக்கும் தொழிலாளர்களைப் போன்ற அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களின் பணியினையும் வேலை நிலைமையினையும் முறைப்படுத்திடும் நோக்குடன் அரசு *1982* ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் (பணி மற்றும் வேலை நிலைமை

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

முறைப்படுத்துதல்) சட்டம் என்ற சட்டத்தினை இயற்றியுள்ளது. இந்தச் சட்டத்தின் அட்டவணையில் இனம் எண் 1 ஆக சுமை தூக்கும் தொழிலாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இருந்த போதிலும் இவர்களுக்கென வாரியம் ஏதும் இதுவரை ஏற்படுத்தப்படவில்லை.

89--

அங்காடிகள் அமைத்தல்

வினா எண் 83010--திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம் அமுதம் கூட்டுறவு அங்காடிகளுக்கு அன்னியூர், அய்யம்பேட்டையில் சொந்தக் கட்டிடமும், வில்லியநல்லூர், மணவாள நல்லூரில் புதிய அங்காடிகளும் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(1) நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதியில், குடவாசல் ஒன்றியத்திலுள்ள அன்னியூர் கிராம அட்டைகளுக்குண்டான அமுதம் கூட்டுறவு நியாயவிலைக்கடை தனது சொந்தக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

(2) அய்யம்பேட்டையிலுள்ள நியாய விலைக்கடை தனியார் கட்டிடத்தில் மாத வாடகை ரூ. 60/-ல் இயங்கி வருகிறது. இந்த அங்காடிக்கு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் சொந்த கட்டிடம் கட்ட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(3) வில்லியநல்லூர் கிராமத்தில் 103 குடும்ப அட்டைகளே உள்ளன. இந்த கிராமம் தாய் அங்காடி செயல்படும் விஷ்ணுபுரத்திலிருந்து 2½ கி.மீ. தூரத்தில் உள்ளது. எனவே, வில்லியநல்லூர் கிராமத்தில் புதிய நியாய விலைக் கடை அமைக்க வாய்ப்புகள் இல்லை. எரவாஞ்சேரி என்ற கிராமத்தை தலைமையிடமாகக் கொண்டு மணவாளநல்லூரில் ஒரு நியாயவிலைக் கடை நடந்து வருகிறது.

1996 பிப்ரவரி 15]

90--

வேந்தோணியில் கூட்டுறவு வங்கி ஏற்படுத்துதல்

வினா எண் *87352*--டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழக்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி ஒன்றியம் வேந்தோணியில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி ஏற்படுத்திட பரிந்துரை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாவை?

விடை--

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி ஒன்றியம், வேந்தோணியில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி ஏற்படுத்திட பரிந்துரை ஏதும் வரவில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

91--

தானியங்களைச் சேமிக்க கட்டிடம்

வினா எண் *87356*--டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் "டான் பெட்" மூலம் கொள்முதல் செய்யும் தானியங்களைச் சேமித்து வைக்க கட்டிடம் கட்ட பரிந்துரை ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாவை?

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் *(ஆ)*: தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் பரமக்குடியில் கிடங்கு கட்ட, இடம் எதுவும் தேர்வு செய்யப்படவில்லை.

எனினும் அரசு நிலம் அலலது தனியார் நிலம் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களுக்குச் சொந்தமான இடங்கள் காலியிருந்தால் தேர்வு செய்து வாங்குவதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

92--

திண்டுக்கல் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்துதல்

வினா எண் *8863*--திருமதி பி. நிர்மலா: மாணபுமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திண்டுக்கல் நகராட்சிக்கு உரிமையுடைய பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) பேருந்து நிலையத்தில் பிளாட்பாரத்தில் பயணிகள் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ள கடைகள் அப்புறப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(இ) நகராட்சி நிர்வாகம் எந்த அடிப்படையில் இந்த கடைகளை வைக்க அனுமதித்து உள்ளது?

விடை--

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 32.5 இலட்சம் ஒதுக்கீடு பெற்று மூன்றாம் கட்டப்பகுதி பணி, பகுதி-1, பகுதி 2-ல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ஆ) பேருந்து நிலையத்தில் அவ்வப்பொழுது ஏற்படுத்தப்படும் தற்காலிக ஆக்கிரமிப்புகள் அவ்வப்போது அகற்றப்பட்டு வரப்படுகிறது. மேலும் வருங்காலத்தில் தற்காலிக ஆக்கிரமிப்புகளை முழுமையாக தவிர்க்கும் பொருட்டு, பேருந்து நிலையத்திலுள்ள காவல் துறை அதிகாரிகளைக் கொண்டே அகற்றிட ஆவன செய்யும்படி மாவட்ட காவல் துறை கண்காணிப்பு அதிகாரி, திண்டுக்கல் அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

(இ) அனுமதியற்ற நிலையில் எவ்வித கடைகளையும் பேருந்து நிலையத்தில் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படவில்லை.

1996 பிப்ரவரி 15]

93--

சாரதி மாளிகையைத் திறத்தல்

வினா எண் 20048--திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வேலூர் நகராட்சியில் புதிதாக கட்டப்பட்ட சாரதி மாளிகை விரிவுக் கட்டிடம் கட்டி முடித்து ஒரு ஆண்டு ஆகியும் திறக்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது திறக்கப்படும்?

விடை--

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

(அ) வேலூர் நகராட்சிக்கு சொந்தமான மா. பா. சாரதி மாளிகையில், இரண்டாவது கட்டப் பணியாக உலக வங்கி நிதி திட்டத்தின்கீழ் வடக்கு பகுதியில் 30 கடைகளும் தெற்கு பகுதியில் 52 கடைகளும் கட்டப்பட்டு, அனைத்து கடைகளும் முழுமையாக பொது ஏலத்தில் விடப்பட்டுவிட்டது. ஆனால் வடக்குப் பகுதியில் உள்ள 30 கடைகளுக்கு மின் இணைப்பு வழங்க ஒருவர் தடை ஆணை பெற்று 30 கடைகளுக்கும் மின் இணைப்பு வழங்க இயலாத சூழ்நிலையை ஏற்படுத்தியதால், இக்கடைகளுக்கு மட்டும் ஏலம் விட்டும் இன்னும் வாடகை வசூல் செய்ய இயலவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

94--

குடிநீர் குழாய் இணைப்பு வசதி செய்து தருதல்

வினா எண் 37448--திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கொடுமுடி ஊராட்சி, சிவகிரி நெசவாளர் புதுக்காலனிக்கு குடிநீர்க் குழாய் இணைப்பு வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சிவகிரி பேரூராட்சிக்கான குடிநீர்த் திட்டம் 1982-ஆம் ஆண்டு முடிக்கப்பட்டு உள்ளாட்சித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு, தற்போது அவர்களின் பராமரிப்பில் உள்ளது. சிவகிரி புதுக்காலனிக்கு 24-5-1994இல் ஒரு குழாய் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும். இரு ஆழ்குழாய்க் கிணறுகள் நெசவாளர் சங்கத்தினரால் அமைக்கப்படவுள்ளது. ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் நெசவாளர் சங்கத்தினரால் கட்டப்படவுள்ளது. இது ஒரு பிரச்சினை இல்லாத காலனி. எனவே, புதிதாக குடிநீர்க் குழாய் இணைப்பு வழங்கும் திட்டம் இல்லை.

95--

மேல்மாடி வணிக வளாகம் கட்டுதல்

வினா எண் 38002--டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பரமக்குடி நகராட்சிப் பேருந்து நிலையத்தில் மேல்மாடி (Shopping Complex) வணிக வளாகம் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு திட்டம் செயல்படுத்தப்படும்?

விடை--

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

96--

போயர் சமூகத்தை ஆதிதிராவிடர் வகுப்பில் சேர்த்தல்

வினா எண் 69459--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

போயர் சமூகத்தை ஆதிதிராவிடர் வகுப்பில் சேர்க்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

1996 பிப்ரவரி 15]

விடை--

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:

எந்த ஒரு இனத்தவரையும் ஆதி திராவிடர்/பழங்குடியினர் இனப்பட்டியலில் சேர்ப்பதோ/நீக்குவதோ மைய அரசின் அதிகார வரம்பிற்கு உட்பட்டதாகும். போயர் இன மக்களிடமிருந்து பெறப்பட்ட பல்வேறு கோரிக்கைகளை இவ்வரசு ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரை கலந்தாலோசித்ததில் போயர் இன மக்கள் தீண்டாமையினால் பாதிக்கப்படாததினால் அவர்களை ஆதி திராவிடர் இன பட்டியலில் சேர்க்கத் தேவையில்லை என்று தெரிவித்துள்ளார். இதை அரசும் ஏற்று, மைய அரசுக்கும் தெரிவித்துள்ளது.

97--

மலை சாதியினரின் விவரம்

வினா எண் *79975*--**டாக்டர் எம். கருப்புசாமி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் மலை சாதியினரின் பிரிவுகளும், எண்ணிக்கைகளும் எத்தனை?

(ஆ) ஒவ்வொரு பிரிவினருக்கும் வழங்கப்படும் சலுகைகள் விவரம் என்ன?

விடை--

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்:

(அ) நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் மலை சாதியினரின் பிரிவுகள் மற்றும் எண்ணிக்கைகளின் விவரம்:--

சாதி.	1991 வரை. மத்திய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி
(1)	(2)
1. குரும்பர்	11,605
2. இருளர்	14,402

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

3.	பனியர்	13,705
4.	தோடர்	3,818
5.	காட்டுநாயக்கன்	3,403
6.	கோட்டா	3,363
	மொத்தம்	50,296

(ஆ) மேற்குறிப்பிட்ட பிரிவினர் அனைவருமே பண்டை பழங்குடி இனத்தவர். இவர்களுடைய முன்னேற்றத்திற்காக ஆடுகள், கறவை மாடுகள், விவசாயக் கருவிகள் முதலியன வழங்கப்படுகின்றன. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவுக்கூறு 275(1)ன் கீழ் குடியிருக்க வீடு கட்டித் தருதல், தெரு விளக்குகள், குடிதண்ணீர் வசதி, சாலை வசதி போன்றவைகளும் செய்து தரப்படுகின்றன. தோடர் இனப் பெண்களில் "எம்ப்ராய்டரி" தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களை மேலும் ஊக்குவிக்க வேண்டி அதற்கான பொருளதவியும் செய்ய தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

98--

கதர்த்துறை மூலம் காலணி தயாரிப்புக்கூடம் அமைத்தல்

வினா எண் 92007--திருமதி க. பழனியம்மாள்: மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

இராசிபுரம் தொகுதியில் கதர்துறையின் மூலம் காலணி தயாரிக்கும் கூடம் ஒன்றை அமைக்க அரசு முன்வருமா?

விடை--

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த்துறை அமைச்சர்: சேலம் மாவட்டத்தில் நாமக்கல் மற்றும் சேந்தமங்கலம் ஆகிய இரு இடங்களில் வாரியத்தின் கீழ் இயங்கும் காலணி உற்பத்தி அலகுகள் உள்ளன. இவை தவிர, இராசிபுரம் தொகுதியில் கதர்த்துறை மூலம் காலணிகள் தயாரிக்கும் அலகு அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

99--

கதர் கிராமத் தொழில் வாரியம் மூலம் உற்பத்தியாகும் பொருட்கள்

வினா எண் 92010--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

1996 பிப்ரவரி 15]

கதர் கிராமத் தொழில் வாரியம் மூலம் உற்பத்தியாகும் பொருட்கள், துணி முதலியவற்றை வெளிநாடுகளில் நடைபெறும் கண்காட்சிகளில் இடம் பெறச் செய்வதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை--

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த்துறை அமைச்சர்:

கதர் கிராமத் தொழில் வாரியம் மூலம் உற்பத்தியாகும் பொருட்கள், துணி முதலியவற்றை வெளிநாடுகளில் நடைபெறும் கண்காட்சிகளில் இடம் பெறச் செய்வதற்கு செயற் குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

100--

திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் கோழிப்பண்ணை அமைத்தல்

வினா எண் 65009--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டம் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் 1993-94 ஆம் ஆண்டு தனியாக கோழிப் பண்ணை அமைக்க எத்தனை பேருக்குக் கடன் வழங்கப்பட்டு உள்ளது?

(ஆ) பயன் பெற்றவர்களில் ஆதி திராவிடர் எத்தனை பேர்?

விடை--

மாண்புமிகு திரு. எம். சி. தாமோதரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): கால்நடை பராமரிப்புத் துறையின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களில் வடாற்காடு–அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் பல்வகையான கால்நடை விஸ்தரிப்பு திட்டங்களை செயல்படுத்தும் பொருட்டு ரூ.56,72,000 ஒதுக்கப்பட்டன. இத்தொகை உழைக்கும் காளைகள், பால் கொடுக்கும் கால்நடைகள் ஆகியவற்றை வாங்குவதற்காகப் பயன்படுத்தப்பட்டது. நிதி போதாமையின் காரணமாக 1993–94 ஆம் ஆண்டில் தனியார் கோழிப்பண்ணை அமைக்க தனியாக எவருக்கும் கடன் வழங்கப்படவில்லை.

[1996 பிப்ரவரி 15

நான்காம் பட்டியல்

1--

இரண்டாவது திருமணப் பதிவைத் தடுத்தல்

வினா எண் 77355--டாக்டர் பீட்ரிக்ஸ் டி. சோசா: மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

Whether the Government has proposals to prevent the Registration of Second bigamous marriages?

விடை--

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்:

திருமணச் சட்டம் மூன்று பிரிவுகளாக நிர்வகிக்கப்படுகின்றன.

1. இந்து திருமணச் சட்டம் 1955, 2. தனித் திருமணச் சட்ட்ம். 1954, 3. இந்திய கிறிஸ்துவ திருமணச் சட்டம் 1872 எனப்படும். இவைகள் ஒவ்வொன்றிலும் இருதார திருமணம் தடை செய்யப்பட்டுள்ளது. இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு 17ல் இருதார திருமணத்திற்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இந்து திருமணச் சட்டத்தின் பரிவு 8ன் கீழ் பதிவு செய்யப்படும் திருமணங்கள் குறித்த மனு மற்றும் உறுதிமொழியில் தவறான விவரங்கள் அளித்து பதிவு செய்தால் இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். தனித்திருமணச் சட்டத்தின் கீழ் திருமணம் துறையின் திருமண அலுவலரால் முறைப்படுத்தப்படுகின்றன. தனித் திருமணச் சட்டம் பிரிவு 4ல் உள்ள நிபந்தனைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்க வேண்டும். தனித் திருமணச் சட்டம் பிரிவு 15ன் கீழ் சில திருமணங்கள் பதிவு செய்யப்படுகின்றன. இதிலும் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் பூர்த்திசெய்யப்படுகின்றனவா என பரிசீலித்த பின்பே பதிவு செய்யப்படுகின்றன. மேலும் தனித்திருமணச் சட்டம் பிரிவு 44ன் கீழ் உள்ள நிபந்தனைகள் மீறப்பட்டால் பிரிவு 24ன் கீழ் திருமணத்தினை நீதிமன்றம் மூலம் செயலற்றதாக்க வகை செய்யப்பட்டுள்ளது. இந்திய கிறிஸ்துவ திருமணச் சட்டத்தின் கீழ் இரண்டாவது திருமணம் சட்டப்படி குற்றமாதலால் இரண்டாவது திருமணத்தை பதிவு செய்யும் வினா எழவில்லை.

2--

வழக்கறிஞர் பணியிடம் நிரப்புதல்

வினா எண் 87524--திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

1996 பிப்ரவரி 15]

(அ) பழனியில் அரசுத் துறைகளின் வழக்குகளை நடத்தும் வழக்கறிஞர் பணியிடம் (Government Pleaders) நீண்ட நாட்களாக நிரப்பப்படாமல் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் அப்பணியிடத்தை நிரப்ப ஆவன செய்யப்படுமா?

விடை---

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தற்போது 18-10-1995 நாளிட்ட அரசு நிலை ஆணை எண் 1567-ன் மூலம் அப்பணியிடம் நிரப்பப்பட்டுள்ளது.

3--

அரசு கட்டிடங்கள் கட்ட நிலம் ஒதுக்கீடு செய்தல்

வினா எண் *38574*--டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பரமக்குடி நகராட்சி பகுதியிலுள்ள நத்தம் புறம்போக்கு நிலம் எவ்வளவு உள்ளது?

(ஆ) அரசு கட்டிடங்கள் கட்டிட அவைகளை ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா?

விடை--

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

(அ) பரமக்குடி நகராட்சிப் பகுதியில் அரசுக்கு சொந்தமான நத்தம் புறம்போக்கு நிலங்கள் ஏதும் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

4--

குளத்தூர் வட்டத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

வினா எண் *39322*--திரு. சி. குழந்தைவேலு: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) குளத்தூர் தொகுதி, விராலிமலை யூனியன், நல்லூர் அண்ணா நகர் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு பட்டா வழங்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு எப்போது பட்டா வழங்கப்படும்?

விடை--

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)*: குளத்தூர் வட்டம், விராலிமலை யூனியன், நல்லூர் அண்ணா நகர் பகுதியில் வசித்து வந்த *19* ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

5--

திருப்பத்தூர் தொகுதியில் பட்டா வழங்குதல்

வினா எண் *43437*--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருப்பத்தூர் தொகுதி, பூங்குளம் உயர்நிலைப்பள்ளி பட்டா இல்லாத இடத்தில் இருப்பதால் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை--

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் திருப்பத்தூர் தொகுதி வாணியம்பாடி வட்டம் பூங்குளம் கிராமம் அரசு உயர்நிலைப்பள்ளி கட்ட கோரிய புல எண் *209/1*-இன் மொத்த விஸ்தீரணம் *3.07.0* ஹெக்டேர் ஆகும். இது கிராம கணக்குகளில் தோப்பு புறம்போக்கு என பாகுபாடு செய்யப்பட்டுள்ளது. இந்நிலத்தில் *1,46.0* ஹெக்டேர் நிலத்தை நிலமாற்றம் செய்யக்கோரி கல்வித்துறையினர் விண்ணப்பித்துள்ளனர். இந்நிலத்தில் *631* பனை மரங்கள் உள்ளன. இவற்றை வெட்டி அகற்றியபின்தான் அரசு உயர்நிலைப்பள்ளிக்கூடம் கட்ட இயலும். எனவே இந்நிலத்தை தற்போதைக்கு கல்வித்துறைக்கு மாற்ற இயலாது.

1996 பிப்ரவரி 15]

6--

விடுகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

வினா எண் 49046--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தருமபுரி மாவட்டம் பெண்ணாகரம் பேரூராட்சி முள்ளுவாடியைச் சேர்ந்த கொள்ளமாரியம்மன் கோவில் தெருவிலுள்ள 25 வீடுகளுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம் பெண்ணாகரம் வட்டம் மற்றும் கிராமம் கொள்ளமாரியம்மன் கோவில் தெருவில் புல எண் 34/ஏ1-இல் உள்ள நிலம் : பாட்டை எனவும் புல எண் 34/ஏ2-ல் உள்ள நிலம் ரப்பீஸ் டிப்போ எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவை பேரூராட்சியில் பிற்காலத் தேவைக்கு ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளதால் நத்தமாக வகைமாற்றம் செய்து இதில் குடியிருக்கும் 25 குடும்பத்திற்கு வீட்டு மனைப்பட்டா வழங்க இயலாது.

7--

பதிவாளர் அலுவகங்களில் புகார் புத்தகம் வைத்தல்

வினா எண் 67825--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஒவ்வொரு பதிவாளர் அலுவலகங்களிலும் பொதுமக்கள் நலன் கருதி புகார் புத்தகம் மற்றும் புகார் பெட்டிகள் வைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

பதிவுத்துறை அனைத்து சார்பதிவகங்களிலும் புகார் புத்தகம் மற்றும் புகார் பெட்டிகள் வைக்க ஏற்பாடு ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டுள்ளது.

8--

பரமக்குடி நகராட்சியில் வீட்டுமனைப் பட்டா

வினா எண் 82000--டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பரமக்குடி நகராட்சி பகுதியில் பட்டா வேண்டி பெறப்பட்ட விண்ணப்பங்களில் நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள் எத்தனை?

(ஆ) அதன் மீது துறை எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை--

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) பரமக்குடி நகராட்சி பகுதியில் வீட்டுமனை ஒப்படை கோரி 13 மனுக்கள் வந்துள்ளன.

(ஆ) மனுக்கள் விரைவில் முடிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

9--

தாலுகா மருத்துவமனைகளுக்கு ஆம்புலன்ஸ் வசதி

வினா எண் 61394--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

எல்லா தாலுகா மருத்துவ மனைகளுக்கும் ஆம்புலன்ஸ் வசதி செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

அரசின் கொள்கையின்படி தற்போது 50 படுக்கைகளுக்கும், அதற்கு மேற்பட்ட படுக்கை கொண்ட அரசு தாலுகா மருத்துவமனைகளுக்கும் நோயாளர் ஊர்தி வசதி படிப்படியாக வழங்கப்பட்டு வருகிறது. 50 படுக்கைகளுக்கு கீழ் உள்ள தாலுகா மருத்துவமனைகளுக்கு நோயாளர் ஊர்தி வழங்கிட தற்போது இயலாது.

1996 பிப்ரவரி 15]

10--

அரசு மருத்துவமனைகளுக்கு அவசரகால ஊர்தி

வினா எண் *81968*--திரு. எஸ். ஆசைமணி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், குத்தாலம் மற்றும் குடவாசல் அரசு மருத்துவமனைகளுக்கு " அவசரகால ஊர்தி" (ஆம்புலன்ஸ்) வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

அரசின் கொள்கையின்படி 50 அல்லது அதற்கு மேற்பட்ட படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனைகளுக்கு மட்டுமே படிப்படியாக நோயாளர் ஊர்தி வழங்கப்பட்டு வருகிறது. நாகை-காயிதே மில்லத் மாவட்டத்திலுள்ள குத்தாலம் மற்றும் குடவாசல் ஆகிய இடங்களிலுள்ள அரசு மருத்துவகனைகளில் 50-க்கும் குறைவான படுக்கைகள் உள்ளன என்பதால் அங்கு தற்போது "அவசர கால ஊர்தி" வழங்கிட இயலாது.

11--

ரப்பர் கழகத் தொழிலாளர்களுக்கு பஞ்சப்படியை வழங்குதல்

வினா எண் *46786*--திரு. மா. சுந்தரதாஸ்: *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு ரப்பர் கழகத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு *1-8-1993* முதல் வழங்கப்பட வேண்டிய பஞ்சப்படியை உடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:

அரசு ரப்பர் கழகத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு 1-8-1993 முதல் வழங்கப்பட வேண்டிய பஞ்சப்படி சம்பந்தமாக தொழிற்சங்கத்

தலைவர்களுடன், தொழிலாளர் நல இணை ஆணையர் (சமரசம்) முன்பாக பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. தொழில் தகராறு சட்டத்தின் 12 (3)வது பிரிவின் கீழ் கன்னியாகுமரியில் உள்ள பிற ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு பஞ்சப்படி மாற்றித் தருவது மற்றும் பிற பணிப்பயன்கள் குறித்து 4-9-1995 அன்று ஏற்பட்ட உடன்படிக்கையினை ஒட்டி அரசு ரப்பர் தோட்டக்கழகத் தொழிலாளர்களுக்கு பஞ்சப்படியில் மாற்றம் மற்றும் பிற பயன்கள் குறித்த உன்படிக்கை ஒன்று, தொழிலாளர் நல ஆணையர் (சமரசம்) முன்னிலையில். தொழிற்சங்கத் தலைவர்களுடன் 4-9-1995 அன்று கையெழுத்திடப் பட்டது. பழைய உடன்படிக்கை 30-6-1993 வரை அமுலில் இருந்தமையால், இவ்வுடன்படிக்கை 1-7-1993 லிருந்து செயல்முறைக்கு கொண்டுவரப்பட்டு, 31-12-1997 வரை அமுலில் இருக்கும். இதன்படி அரசு ரப்பர் தோட்டக் கழக தொழிலாளர்களுக்கு 1-8-1993 லிருந்து வழங்கப்பட வேண்டிய பஞ்சப்படி மற்றும் பிறபடிகள் மாற்றி அமைக்கப்பட்டு, செப்டம்பர் மாதத்தில் தொழிலாளர் அனைவருக்கும் பழைய நிலுவைத் தொகை உட்பட வழங்கப்பட்டு விட்டன. தொழிலாளர்களுக்கு நிலுவைத் தொகை வழங்கப்பட்டதால் அரசு ரப்பர் தோட்டத் கழகத்திற்கு ரூ. 80.53 லட்சம் செலவினம் ஏற்பட்டுள்ளது. இதன் மூலம் பயனடைந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 2360 ஆகும்.

12--

ஈரோடு-கோயம்புத்தூர்-பாலக்காடு மின்மயமாக்கும் திட்டம்

வினா எண் 67532--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கோயம்புத்தூரிலிருந்து ஈரோடு வரை மற்றும் ஈரோடிலிருந்து பாலக்காடு வரை மின்சார இரயில்களை இயக்குமாறு மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

விடை--

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

ஈரோடு-கோயம்புத்தூர்-பாலக்காடு பிரிவினை மின் மயமாக்கும் திட்ட வேலைகள் முன்னேற்ற நிலையில் உள்ளது, தற்பொழுது ஈரோடு-கோயம்புத்தூருக்கிடையே ஓடிக்கொண்டிருக்கும் இரயில்கள் கோயம்புத்தூர்-பாலக்காடு தடத்தில் இயக்கும் இரயில்களைப் போன்று டீசல் எஞ்சின்களுக்கு பதிலாக மின்சார எஞ்சின்களினால் இயக்கப்படும்.

1996 பிப்ரவரி 15]

தேவையான .E.M.U. கருவிகள் கிடைக்கப் பெற்றபின் சென்னை புறநகர் இரயில் இயங்குவது போன்றே மேற்கண்ட இரயில் தடங்களிலும் மின்சார இரயில்களை இயக்க பரிசீலிக்கப்படும் என தென்னக இரயில்வே தெரிவித்துள்ளதால் இது குறித்து மத்திய அரசை வலியுறுத்தும் அவசியம் எழவில்லை.

13--

துணை துறைமுகம் அமைத்தல்

வினா எண் *67600*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சென்னையருகே துணை துறைமுகம் அமைக்குமாறு மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

விடை--

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

எண்ணூரில் ஆசிய விரிவாக்க வங்கி (Asian Development Bank)யின் நிதி உதவியுடன் ரூ.593,90 கோடி செலவில் சென்னைக்கு அருகே ஒரு புதிய துறைமுகம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

14--

திருப்பத்தூர் வனச்சரக அலுவலக இடவசதி

வினா எண் *84894*--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருப்பத்தூர் வட்டம் வனத்துறை அலுவலகத்தைப் போதுமான இட வசதியுடன் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

திருப்பத்தூர் வனச்சரக அலுவலகம், திருப்பத்தூர் நகரில் வனத்துறை வளாகத்தில் அமைந்துள்ளது, அலுவலகம் நடத்தப்போதுமான இட

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

வசதியுடன் உள்ளது, எனவே தற்போது புதிய கட்டிடம் கட்ட அவசியம் ஏதும் இல்லை.

15--

எக்ஸ்பிரஸ் இரயில்கள் திருவள்ளூரில் நின்று செல்லுதல்

வினா எண் *92002*--திரு. ஆர் பி. பரமசிவம்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருவள்ளூர் வழியே செல்லும் எக்ஸ்பிரஸ் இரயில்கள் திருவள்ளூரில் நின்று செல்ல மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

விடை--

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

தற்போது 6 ஜோடி விரைவு இரயில்களும், 1 ஜோடி பயணிகள் இரயில்களும் திருவள்ளூரில் நின்று செல்லுமாறு வகை செய்யப்பட்டுள்ளது, அனைத்து மெயில்/விரைவு இரயில்களை திருவள்ளூரில் நின்று செல்லுமாறு அனுமதிக்கும் பட்சத்தில் அவைகளின் திட்டமிட்ட வருகை மற்றும் புறப்படும் நேரங்கள் பாதிக்கப்படும், மேலும் ஏற்கனவே ஆவடி பெரம்பூர் போன்ற முக்கிய இரயில் நிலையங்களிலும் இரயில்கள் நின்று செல்ல வேண்டும் என்ற கோரிக்கை இருப்பதால் இத்தகைய ஏற்பாடுகள் நெடுந்தூர பயணிகளின் பயணத்தை பாதிக்கக் கூடியதாக உள்ளது, மேலும் திருவள்ளூர் பயணிகளுக்கு வசதியாக மின்சார இரயில் இணைப்புகள் சென்னை சென்டிரல்- அரக்கோணம் ஆகிய இடங்களில் உள்ளன, மத்திய அரசை இது குறித்து வலியுறுத்தும் அவசியம் மாநில அரசுக்கு எழவில்லை.

16--

சென்னை-கோவை எக்ஸ்பிரஸ் ரயில் திருப்பத்தூரில் நின்று செல்லுதல்

வினா எண் *107939*--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

1996 பிப்ரவரி 15]

சென்னை-கோவை எக்ஸ்பிரஸ் வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் திருப்பத்தூர் இரயில் நிலையத்தில் நின்று செல்ல மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

விடை--

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

தற்போது 4 நேரடி விரைவு இரயில்களால் சென்னை மற்றும் கோயம்புத்தூர் இணைக்கப்பட்டுள்ளன, இது தவிர சென்னையிலிருந்தும் பிற இடங்களிலிருந்தும் இயங்கும் 7 ஜோடி மெயில்/விரைவு இரயில்களும் கோயம்புத்தூர் சென்னையை இணைக்கின்றன. சென்னை-மங்களூர் வெஸ்ட்-கோஸ்ட் விரைவு இரயில் (எண் 6027/6028 திருப்பத்தூரில் நின்று செல்கிறது, மேலும் ஒரு நாளைக்கு சராசரியாக 8 பயணச் சீட்டுகளே விநியோகப்படும், இந்த இரயில் நிலையத்தில் 150 கீ. மீட்டர் பயணத்திற்காக கூடுதல் விரைவு இரயில்களை அந்நிலையத்தில் நிறுத்துவதற்கான நியாயமான காரணங்கள் இல்லை என்பதால் மத்திய அரசை வலுயுறுத்தும் அவசியம் எழவில்லை.

17--

இரயில் பாதை அமைத்தல்

வினா எண் 107941--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம் ஜோலார்பேட்டையிலிருந்து கிருஷ்ணகிரி வழியாக ஓசூர் செல்லும் பழைய இரயில் பாதையை மீண்டும் அமைத்துக் கொடுக்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

விடை--

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் ஜோலார்பேட்டையிலிருந்து கிருஷ்ணகிரி வழியாக ஓசூர் செல்லும் பழைய இரயில் பாதையை மீண்டும் அமைக்க கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை என்று தென்னக இரயில்வே தெரிவித்துள்ளது. எனினும் பிரிதொரு நிகழ்வில், இதே வினா குறித்து மத்திய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

18--

புதிய இரயில் இயக்குதல்

வினா எண் *107942*--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம் ஜோலார்பேட்டை-சென்னைக்கு அகல இரயில் பாதையில் புதிய இரயில்விட மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

விடை--

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

தற்போது ஜோலார்பேட்டை செல்லும் பயணிகளின் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு 20 ஜோடி விரைவு இரயில்களும் 1 ஜோடி பயணி இரயில்களும் இயங்கி வருகின்றன. சென்னை-ஜோலார்பேட்டை விரைவு இரயில் (எண் 6089/6090) மற்றும் அரக்கோணம்-ஜோலார்பேட்டை விரைவு இரயில் (எண் 6085/6086)-களோடு மின்சார இரயில் இணைப்புகளும் சென்னைக்கு, ஜோலார்பேட்டை பயணிகளின் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு இயங்கி வருகின்றன. ஜோலார் பேட்டைக்கு கூடுதலாக இரயில்களை இயக்க தேவையான போக்குவரத்து காரணங்கள் இல்லை. கூடுதலாக இரயில்களை இயக்குவது சரக்கு போக்குவரத்தை பாதிக்கும், மேற்கண்ட காரணங்களினால் கூடுதல் இரயில் இயக்குவது சாத்தியமில்லை என்று தென்னக இரயில்வே கருத்து தெரிவித்துள்ளது. மேற்கூறிய காரணங்களினால் புதிய இரயில் விட மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்தும் எண்ணம் இல்லை.

19--

ஜோலார்பேட்டை-பாண்டிச்சேரி இரயில் இயக்குதல்

வினா எண் *107945*--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

1996 பிப்ரவரி 15]

வடஆற்காடு–அம்பேத்கார் மாவட்டம் ஜோலார்பேட்டையிலிருந்து பாண்டிச்சேரிக்கு புதிய இரயில் இயக்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

விடை––

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

ஜோலார்பேட்டை சந்திப்பு அகல இரயில் பாதையாகவும் பாண்டிச்சேரி மீட்டர்கேஜ் இரயில் பாதையாகவும் உள்ளன. தற்பொழுது ஜோலார் பேட்டையிலிருந்து பாண்டிச்சேரிக்கு இரயில்கள் ஓடுவதற்கு ஏற்ற நேரடி அகல இரயில் பாதை இல்லை. மேலும் இத்தகைய இணைப்புகளை அமைக்க நியாயமான போக்குவரத்து காரணமும் இல்லை. எனினும் இணைப்பு இரயில் வசதிகள் இருப்பதால் பயணிகளால் அவற்றை உபயோகிக்க இயலும், இக்காரணங்களால் மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்தும் அவசியம் எழவில்லை.

20––

சிறு தொழிற் கூடங்கள் கட்டுதல்

வினா எண் *64939*––**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா––

தொழில் துறையில் பின்தங்கிய வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் திருப்பத்தூர் தொகுதியில் சிறு தொழிற்கூடங்கள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை––

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரக தொழில் துறை அமைச்சர்:

ஆம், வடஆற்காடு–அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் சிட்கோ நிறுவனம் மண்டல்வாடி, பந்தாரப்பள்ளி ஆகிய இடங்களில் பட்டா நிலங்களையும், அரசு தரிசு நிலங்களையும் புதிய தொழிற்பேட்டைகள் அமைப்பதற்காக தேர்வுசெய்து, நிலங்களைப் பெற நடவடிக்கை எடுத்து வருகிறது. நிலங்களைப் பெற்றவுடன் சிட்கோ நிறுவனம் அதன் நிதிநிலைமையைப் பொறுத்து அங்கு தொழிற்கூடங்களை கட்டி புதிய தொழிற்பேட்டைகளை அமைக்க ஏற்பாடு செய்யும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

21--

மகளிர் தொழில்பேட்டை அமைத்தல்

வினா எண் *91981*--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மகளிர் தொழில் முனைவோருக்கு தனித்தொழில் பேட்டை அமைக்க சிறப்பு கவனம் செலுத்த அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை--

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரக தொழில் துறை அமைச்சர்:

ஆம். தர்மபுரி மாவட்டம், பர்கூருக்கு அருகில், கொண்டப்ப நாயன்பள்ளி மற்றும் அச்சமங்கலம் ஆகிய கிராமங்களிலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் நாஞ்சிக்கோட்டை கிராமத்தில் சிட்கோ நிறுவனம் மகளிர் தொழில் முனைவோருக்காக தனி தொழிற்பேட்டை அமைத்து தொழிற் கூடங்கள் கட்டும் பணி நடந்து வருகிறது. வேளச்சேரியில் ஏறக்குறைய 135 ஏக்கர் நிலத்தைத் தேர்வு செய்து அதில் மகளிருக்காக தொழிற் பேட்டை அமைக்க ஆயத்தப்பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் 1000 ஏக்கர் நிலப்பரப்பில் ஆவடிக்கு அருகில் புதியதாக அமைக்கப்பட இருக்கும் தொழில் நகரத்தில் 100 ஏக்கர் நிலத்தில் மகளிர் தொழிற்பேட்டை அமைக்கப்பட உள்ளது.

22--

தொழிற்கூடங்கள் அமைத்தல்

வினா எண் *97036*--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், கடைய நல்லூர் கிராமம், சிட்கோ தொழிற்பேட்டையில் கூடுதலாக தொழிற்கூடங்கள் அமைப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1996 பிப்ரவரி 15]

விடை--

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரக தொழில் துறை அமைச்சர்:

ஆம். திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள கடையநல்லூரில் 10 ஏக்கர் நிலத்தில் அமையப்பட்ட சிட்கோ தொழிற்பேட்டையில் 5 தொழிற்கூடங்கள் கட்டப்பட்டு ஒதுக்கீடு செய்யும் நிலையில் உள்ளது. மேலும் 5 தொழிற்கூடங்கள் கூடுதலாக அமைக்க சிட்கோ நிறுவனம் முடிவு செய்துள்ளது.

23--

கோவையில் தொழிற்சாலைகள் தொடங்குதல்

வினா எண் *107838--***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கோவையில் கூட்டுறவுத் துறை மூலம் பனியன் மற்றும் பம்புசெட் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரக தொழில் துறை அமைச்சர்:

இல்லை.

24--

செயின் ஸ்டோர்ஸ் நிறுவனத்திற்கு அனுமதி

வினா எண் *43412--***திரு. சோ. இராசாராமன்:** மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சென்னை மைலாப்பூரில் லஸ்சர்ச் சாலையில் உள்ள 172/அ ஆம் இலக்கத்தில் வியாபார ரீதியில் தொழில் நடத்த திருவாளர்கள் சொக்கானை செயின் ஸ்டோர்ஸ் நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா?

(ஆ) பொதுமக்கள் பொருட்களை வாங்கும்போது இந்த நிறுவனத்தின் பேரில் முறையாக பில் தரப்படுகிறதா?

(இ) மேற்குறிப்பிட்ட இந்த இடத்தில் மற்ற கடைகளும் அனுமதிக்கப்பட்டுள்ளதா? அதன் விவரங்கள்.

விடை--

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிகவரிகள்துறை அமைச்சர்:

(அ) சென்னை மயிலாப்பூர் வணிகவரி கோட்டத்தில் வணிகவரி அலுவலரின் புத்தகத்தில் திருவாளர்கள் சொக்கானை செயின் ஸ்டோர் மற்றும் இன்வெஸ்ட்மென்ட் பிரைவேட் லிமிடெட் வணிகவரி செலுத்துமாறு கேட்கப்பட்டு வியாபார ரீதியில் தொழில் நடத்த முறையாக அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) வியாபார ரீதியில் விற்பனை சீட்டு அனைத்தும் சொக்கானை செயின் ஸ்டோர் மற்றும் இன்வெஸ்மென்ட் பிரைவேட் லிமிடெட் என்ற பெயரில் தரப்பட்டுள்ளது.

(இ) மேற்படி நிறுவனத்திற்கு முன்பாக கீழ்க்கண்ட கடைகள் நடைபெற்று வருகிறது :

1. ஒரு பழக்கடை
2. ஒரு எஸ்.டி.டி. தொலைபேசி நிலையம்
3. டேவிஸ் துரித உணவு
4. ஆவின் பாலகம்

25--

வணிகர் நல வாரியத்தை மேம்படுத்துதல்

வினா எண் *92064*--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வணிகர் நல வாரியத்தை மேம்படுத்த அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை--

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிகவரிகள்துறை அமைச்சர்:

வணிகர் நல வாரியத்தை மேம்படுத்த அரசிடம் தற்போது செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

26--

கிரானைட் குவாரிகளில் பணி துவக்கம்

வினா எண் 47195--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ்நாடு கனிம நிறுவனம் எவ்வளவு ஏக்கர் கிரானைட் குவாரிகளில் பணியைத் துவங்காமல் வைத்துள்ளது ?

(ஆ) இதனால் அரசிற்கு ஏற்பட்ட இழப்பு எவ்வளவு ?

விடை--

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாடு கனிம நிறுவனம் 996.61.37 ஹெக்டேர் குத்தகை நிலப்பரப்பில் கருப்பு மற்றும் வண்ணக்கல் வெட்டி எடுக்கும் பணியை இனிதான் தொடங்க வேண்டும். கருப்புக்கல் வெட்டி எடுப்பதற்கு 81 இடங்களிலும், வண்ணக்கல் வெட்டி எடுப்பதற்கு 57 இடங்களிலும் அரசிடமிருந்து குத்தகை உரிமம் பெற்றுள்ளது. இதில் கருப்புக்கல் 15 இடங்களிலும், வண்ணக்கல் 16 இடங்களிலும் குத்தகை உரிமம் அடிப்படையில் குவாரி உற்பத்திப் பணி நடைபெற்று வருகிறது. மேலும் கடந்த இரண்டு வருடங்களாக சந்தனக் கடத்தல் வீரப்பனை பிடிப்பதற்கு அரசின் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால் குத்தகை உரிமம் பெற்ற 12 இடங்களில் குவாரிப் பணியை தொடர்ந்து நடத்த இயலாமல் உள்ளது.

(ஆ) உரிமம் பெற்ற குவாரிகளில் பணி தொடங்காமல் இருப்பதால் அரசுக்கு எந்தவிதமான நஷ்டமும் இல்லை. மேலும் குவாரிப்பணி துவக்கப்படாத குவாரிகளுக்கு முடக்கு வரியை (Deep Rent) இந்நிறுவனம் அரசுக்கு செலுத்தி வருகிறது. இதுவே அரசுக்கு வருமானமாகவும் உள்ளது.

27--

சங்ககிரியில் கிரானைட் தொழிற்சாலை அமைத்தல்

வினா எண் 84293--டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சங்ககிரியில் கிரானைட் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

விடை--

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): சங்ககிரியில் கிரானைட் தொழிற்சாலையை தமிழ்நாடு கனிம நிறுவனம் (டாமின்) அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை. ஏனெனில் ஏற்கனவே டாமின் (TAMIN) இரண்டு கிரானைட் தொழிற்சாலைகளை சென்னை அருகாமையிலுள்ள மணலியிலும், தர்மபுரி மாவட்டத்தில் பர்கூருக்கு அருகாமையிலும் அமைத்து கிரானைட் பொருள்களை ஏற்றுமதி செய்துவருகிறது. டாமினைத் தவிர, பல தனியார் கிரானைட் தொழிற்சாலைகளும் உலகச் சந்தைக்குத் தேவையான கிரானைட் பொருட்களை ஏற்றுமதி செய்து வருகின்றன. ஆகையால் தற்பொழுது தமிழ்நாட்டில் உள்ள மொத்த கிரானைட் தொழிற்சாலைகள், ஏற்றுமதி கிராக்கியை முழுமையாக பூர்த்தி செய்யக் கூடிய அல்லது உபரி உற்பத்தித் திறனைக் கொண்டுள்ளன. தற்பொழுது உலகச் சந்தையில் பிரேசில், அமெரிக்கா, சீனா மற்றும் கொரியா போன்ற நாடுகள் மிகக் குறைந்த விலையில் சுமாரான வகைக் கற்களை ஏற்றுமதி செய்து வருவதால் பாரம்பரியமாக ஏற்றுமதி செய்து வரும் இந்தியா போன்ற நாடுகளுக்கு சவாலாக உள்ளன. மேலும் இந்த நாடுகள் கிரானைட் பொருட்களை இறக்குமதி செய்யும் நாடுகளுக்கு மிக அருகாமையில் அமைந்திருப்பதால் விரைவான போக்குவரத்து வசதி மற்றும் அதற்கான செலவினங்கள் மிகக் குறைவாகவே இருப்பது அந்த ஏற்றுமதி நாடுகளுக்கு சாதகமாக உள்ளன. மற்றும் இறக்குமதி செய்யும் சிங்கப்பூர், மலேசியா, துபாய் மற்றும் தைவான் போன்ற நாடுகள் தங்கள் நாடுகளிலேயே கிரானைட் தொழிற்சாலைகளை அமைத்து, சுய தேவையை பூர்த்தி செய்ய முனைப்புடன் ஏற்பாடுகள் செய்து வருகின்றன. ஆகையால் இந்த நிலையில் புதிய தொழிற்சாலை துவங்குவது உசிதமானது அல்ல. எனினும், வருங்காலத்தில் தமிழ்நாடு கிரானைட் பொருட்களுக்கு அதிக அளவில் வெளிநாடுகளில் தேவைப்படும்பொழுது, தேவைக்கேற்ப, அடிப்படை வசதியை நன்கு ஆய்ந்து, பொருத்தமான இடத்தில் கிரானைட் தொழிற்சாலையை தமிழ்நாடு கனிம நிறுவனம் துவங்கும்.

1996 பிப்ரவரி 15]

28--

திருப்பத்தூர் தொகுதியில் விசைத்தறி அமைத்தல்

வினா எண் *64925--***திரு.** *ஏ.கே.சி சுந்தரவேல்:* மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் விசைத்தறி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை--

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் விசைத்தறி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் தற்போது இல்லை.

29--

பிரகட கோட்டையா கமிட்டியின் அறிக்கை

வினா எண் *65114--***திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கைத்தறிக்கு 22 ரகங்கள் ஒதுக்கீடு குறித்து உச்சநீதி மன்றத் தீர்ப்பைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட பிரகட கோட்டையா கமிட்டியின் அறிக்கை மீது எடுத்த நடவடிக்கை குறித்து மாநில அரசிற்கு மத்திய அரசு தெரிவித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை--

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:

(அ) உச்சநீதி மன்றத் தீர்ப்பைத் தொடர்ந்து கைத்தறி ரக ஒதுக்கீடு சட்டத்தைத் தீவிரமாக நடைமுறைப்படுத்த பிரகட கோட்டையா கமிட்டி என்ற ஒரு கமிட்டி மத்திய அரசால் நியமிக்கப்படவில்லை. ஆனால் மத்திய அரசு நியமித்த உயர்மட்டக்

குழுவால் நியமிக்கப்பட்ட 5 துணைக் குழுக்களில் தென் மண்டல குழுவின் அங்கத்தினர்களில் ஒருவரே திரு. பிரகட கோட்டையா மேற்படி தென் மண்டலக் குழு, தமிழ்நாட்டில் கடந்த பிப்ரவரி 1994-ல் விஜயம் செய்து கைத்தறி மற்றும் விசைத்தறி மிகுந்த பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டது. மேற்படி உப குழுக்கள் அறிக்கை குறித்து விவாதிக்க உயர்மட்டக் குழுவின் கூட்டம் 28-11-1994-ல் புதுடில்லியில் நடைபெற்றது. மேற்படி கூட்ட நடவடிக்கைகள் தொடர்பாக அறிக்கை எதுவும் மாநில அரசுக்கு இதுவரை பெறப்படவில்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

30--

கைத்தறிகளுடன் விடுகள் கட்டுதல்

வினா எண் 84283--டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சங்ககிரி தொகுதி, சங்ககிரி ஒன்றியம், அன்னதானப்பட்டி கிராமம் அஞ்சலூரில் கைத்தறிகளுடன் கூடிய வீடுகள் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டிலேயே நடைமுறைப் படுத்தப்படுமா?

விடை--

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

31--

திருச்சியில் நெசவாளர்களுக்கு வீடு கட்டுதல்

வினா எண் 88127--டாக்டர் ச. ஆரோக்கியசாமி: மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருச்சியில் நெசவாளர்களுக்கு வீடு கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அது எப்பொழுது நிறைவேற்றப்படும்?

1996 பிப்ரவரி 15]

விடை--

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

32--

ராசிபுரம் தொகுதியில் சாயத் தொழிற்சாலை

வினா எண் *92005*--திருமதி க. பழனியம்மாள்: மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ராசிபுரம் தொகுதியில், வெண்ணந்தூர் பிள்ளாநல்லூர் பேரூராட்சிகளில் நெசவாளர்கள் நலன் கருதி, சாயத் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை--

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:

ராசிபுரம் தொகுதியில் வெண்ணந்தூர், பிள்ளாநல்லூர் பேரூராட்சிகளில் கைத்தறி நெசவாளர்கள் வேஷ்டி ரகங்களையே உற்பத்தி செய்து வருகின்றனர். அதற்கு உபயோகப்படுத்தப்படும் கரை கலர் நூல் அதாவது சாயம் தோய்க்கப்பட்ட நூல் மிகக் குறைந்த அளவே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எனவே, இராசிபுரம் தொகுதியில் வெண்ணந்தூர், பிள்ளாநல்லூர் பேரூராட்சிகளில் சாயத் தொழிற்சாலை அமைக்கும் சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை. மேலும், பிள்ளாநல்லூர், வெண்ணந்தூர், ராசிபுரம் பருத்தி மற்றும் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் மற்றும் ஆர். புதுப்பாளையம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் இயங்கும் சாயச் சாலைகளே தேவைகளைப் பூர்த்தி செய்துவிடுகின்றன.

33--

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனங்கள் துவங்குதல்

வினா எண் *92029*--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அனைத்து கிராமப் புறங்களிலும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனங்களைத் துவக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை--

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:

இல்லை.

34--

பார்த்திபனூரில் சலவைப்பெட்டி வழங்குதல்

வினா எண் 37696--டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பரமக்குடி வட்டம், பார்த்திபனூரில் சலவைப்பெட்டி வேண்டி பிற்பட்டோர் நலத்துறையில் நிலுவையில் உள்ள மனுக்கள் எத்தனை?

(ஆ) சலவைப் பெட்டிகள் எப்போது வழங்கப்படும்?

விடை--

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): பார்த்திபனூர் கிராமத்தில் இலவச சலவைப்பெட்டி கோரி பார்த்திபனூர் கிராமம் 2/68-1 புதுத் தெருவைச் சார்ந்த திரு. இராமு (த/பெ) முத்து என்பவர் மட்டுமே விண்ணப்பித்திருந்தார். இவரது மனு பதிவேட்டில் நவம்பர் 1994-ல் பதிவு செய்யப்பட்டு முன்னுரிமைப்படி 29-5-95-ல் அவருக்கு சலவைப்பெட்டி வழங்கப்பட்டுவிட்டது. 1994 மற்றும் 1995-ம் ஆண்டுகளில் பார்த்திபனூரைச் சார்ந்த வேறு எவரும் மனு செய்யவில்லை.

35--

சினிமா தியேட்டர்கள் அமைக்க கடனுதவி

வினா எண் 91970--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

1996 பிப்ரவரி 15]

புதியதாக சினிமா தியேட்டர்கள் அமைக்க வழங்கப்படும் கடனுதவியை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்:

தமிழ்நாடு திரையரங்கு கழகம் மூலம் திரையரங்கு கட்ட நிதியுதவி வழங்கப்பட்டது. மேற்படி தமிழ்நாடு திரையரங்கு கழகம், அரசாணை எண் 130, செய்தி மற்றும் சுற்றுலாத்துறை, நாள் 19–5–1993–ல் தமிழ்நாடு திரைப்பட வளர்ச்சிக் கழகம் என பெயர் மாற்றப்பட்டு ஜெ. ஜெயலலிதா திரைப்பட நகரத்தை நடத்தி வருகிறது. எனவே, தற்போது புதியதாக திரையரங்கு கட்டுவதற்காக கடனுதவி ஏதும் வழங்கப்படுவதில்லை.

36--

ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்குதல்

வினா எண் *43575*--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பட்டுக்கோட்டை ஒன்றியம், பள்ளிகொண்டான் தொடக்கப் பள்ளிக்கு ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்குவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

பட்டுக்கோட்டை ஒன்றியம் பள்ளிகொண்டான் நடுநிலைப் பள்ளியில் ஒரு தலைமை ஆசிரியர், 5 இடைநிலை ஆசிரியர் மற்றும் ஒரு பகுதி நேர கைத்தொழிலாசிரியர் பணிபுரிகிறார்கள். மாணவர்களின் பதிவின் அடிப்படையில் கூடுதலாக ஆசிரியர் பணியிடங்கள் வழங்க விதிகளின்படி போதுமான மாணவர்கள் இல்லை என்பதால் கூடுதல் ஆசிரியர் பணியிடங்கள் வழங்கும் பிரச்சினை எழவில்லை.

37--

கொங்குடையாம்பாளையம் ஊராட்சி கிராமங்களில் நூலகம் அமைத்தல்

வினா எண் *53414*--திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், கொங்குடையாம்பாளையம் ஊராட்சி, வானபூர் தோட்டவலசு, மொசுவலாங்காட்டுவலசு, தம்பிரான்வலசு, கெங்காளிகட்டு புதூர், மணமேட்டு வலசு, சேனாதிபதிபுரம், கொல்லன்வலசு ஆதிதிராவிடர் தெரு, காசிபாளையம், கொமாரபாளையம் ஆகிய கிராமங்களில் நூலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

பொது நூலகம் விதி *45(பி)*-ன்படி, மேற்கண்ட கிராமங்களில் போதுமான மககள் தொகை இல்லாத காரணத்தால் அக்கிராமங்களில் தற்சமயம் கிளை நூலகம் திறக்க வழிவகையில்லை. இருப்பினும், பகுதிநேர நூலகம் திறக்க, விதிக்கப்பட்டுள்ள கீழ்க்காணும் நிபந்தனைகளை பூர்த்தி செய்து தந்தால், அக்கிராமங்களில் பகுதிநேர நூலகம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம்:

நிபந்தனைகள்:

(1) நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட பத்து சென்ட் காலிமனை நன்கொடையாக மாவட்ட நூலக அலுவலரின் பெயரில் பத்திரம் பதிவு செய்து தரப்பட வேண்டும்.

(2) தற்போதைக்கு பகுதி நேர நூலகம் இயங்க உறுதியான நல்ல நிலையிலுள்ள கட்டிடம் வாடகையின்றி வழங்கப்பட வேண்டும்.

(3) ரூ.*2,000* (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) ரொக்கமாகவோ அல்லது நூலகத்திற்கு தேவையான தளவாடங்களாகவோ நன்கொடையாக வழங்கப்பட வேண்டும்.

(4) குறைந்தபட்சம் நூறு உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

(5) ரூ.*1,000* செலுத்தி புரவலர் ஒருவர் சேர்க்கப்பட வேண்டும்.

38--

விளக்கேத்தி ஊராட்சியின் கிராமங்களில் நூலகம் அமைத்தல்

வினா எண் *54421*--திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், விளக்கேத்தி ஊராட்சி, செம்மாண்டபுரம், ஓலப்பாளையம், அத்தபெடுபாளையம்,

1996 பிப்ரவரி 15]

வெடிக்காரன்பாளையம், அம்மாண்டி பாளையம், கொக்கிரிகாட்டுப்புதூர், விளக்கேத்தி புதூர், பச்சா கவுண்டன்வலசு, விளக்கேத்தி கஸ்பா, ஆகிய இடங்களில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

இந்த கிராமங்களில் மக்கள் தொகை 1000-க்கும் கீழ் உள்ளதால், பொது நூலக விதிமுறைப்படி இக்கிராமங்களில் கிளை நூலகங்கள் திறக்க வழிவகையில்லை. இருப்பினும், இக்கிராம மக்கள் கீழ்க்காணும் வசதிகளை உருவாக்கித்தந்தால் இக்கிராமங்களில் பகுதி நேர நூலகம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

நிபந்தனைகள்:

(1) நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட பத்து சென்ட் காலிமனை நன்கொடையாக மாவட்ட நூலக அலுவலரின் பெயரில் பத்திரம் பதிவு செய்து தரப்பட வேண்டும்.

(2) தற்காலிகமாக பகுதி நேர நூலகம் இயங்க உறுதியான நல்ல நிலையிலுள்ள கட்டிடம் வாடகையின்றி வழங்கப்பட வேண்டும்.

(3) ரூ.2,000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) ரொக்கமாகவோ அல்லது நூலகத்திற்கு தேவையான தளவாடங்களாகவோ நன்கொடையாக வழங்கப்பட வேண்டும்.

(4) குறைந்தபட்சம் நூறு உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

(5) ரூ.1,000 செலுத்தி புரவலர் ஒருவர் சேர்க்கப்பட வேண்டும்.

39--

மொடக்குறிச்சி ஒன்றிய கிராமங்களில் நூலகம் அமைத்தல்

வினா எண் *54451*--திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், அட்டவணை அனுமன்பள்ளி ஊராட்சி, அஞ்சராம்பாளையம்--வாழையம்பாளையம், முருங்கம்பாளையம், அமராவதிபாளையம், வேமாண்டம்பாளையம், மாப்பிள்ளை கவுண்டன் தோட்டத்து, புதூர், கரும்புளியாம்பாளையம்,

மாப்பிள்ளை பெரியபாளையம், வேமாண்டம்பாளையம், ஆதிதிராவிடர் தெரு வெள்ளிவலசு, ஊஞ்சப்பாளையம், ஆகிய கிராமங்களில் நூலகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை.--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

போதுமான மக்கள் தொகை இல்லாத காரணத்தால் நூலக விதி 45(பி)-க்கிணங்க அக்கிராமங்களில் கிளை நூலகங்கள் அமைக்க வழிவகையில்லை. எனவே அக்கிராமங்களில் பகுதி நேர நூலகங்கள் அமைக்க கீழ்க்காணும் நிபந்தனைகளை பூர்த்தி செய்து தந்தால், அக்கிராமங்களில் பகுதி நேர நூலகங்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்:

நிபந்தனைகள்:

1. பகுதி நேர நூலகத்திற்குச் சொந்தக் கட்டிடம் கட்ட பத்து சென்ட் காலிமனை நன்கொடையாக மாவட்ட நூலக அலுவலர் பெயரில் பத்திரம் பதிவு செய்து தரப்பட வேண்டும்.

2. ரூ.2,000 மதிப்புள்ள நூலகத்திற்குத் தேவையான தளவாடங்களோ அல்லது தொகையோ நன்கொடையாக வழங்கப்பட வேண்டும்.

3. பகுதி நேர நூலகத்திற்குச் சொந்த கட்டடம் கட்டும் வரை நூலகம் செயல்படுத்த நல்ல நிலையிலுள்ள இலவசக் கட்டடம் வழங்கப்பட வேண்டும்.

4. பகுதி நேர நூலகத்திற்கு குறைந்தது 100 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

5. ரூ.1,000 செலுத்தி புரவலர் ஒருவர் சேர்த்தல் வேண்டும்.

40--

முருங்கியாம்பாளையம் ஊராட்சி பகுதிகளில் நூலகம் அமைத்தல்

வினா எண் 54500--திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், முருங்கியாம் பாளையம் ஊராட்சி, பூலாவலசு, தொரியாம்பாளையம் கிராமங்களில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

1996 பிப்ரவரி 15]

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

இந்த கிராமங்களில் போதுமான மக்கள்தொகை இல்லாத காரணத்தால் பொது நூலக விதி 45 (பி)-ன்படி தற்சமயம் கிளை நூலகம் திறக்க வழிவகையில்லை. இருப்பினும், அக்கிராம மக்கள் பகுதி நேர நூலகம் அமைப்பதற்கான கீழ்க்காணும் வசதிகளை உருவாக்கித் தந்தால், அக்கிராமங்களில் பகுதிநேர நூலகம் அமைத்துத்தர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்:

நிபந்தனைகள்:

1. பகுதிநேர நூலகம் இயங்க வாடகையில்லாத நல்ல நிலையிலுள்ள கட்டடம் ஒன்றினை கிராம மக்கள் வழங்க வேண்டும்.

2. பகுதிநேர நூலகத்திற்கு கட்டடம் கட்ட பத்து சென்ட் காலிமனை இலவசமாக மாவட்ட நூலக ஆணைக் குழுவிற்கு பொதுமக்கள் பத்திரம் பதிவு செய்து தர வேண்டும்.

3. ரூ.2,000 மதிப்புள்ள நூலகத்திற்குத் தேவையான தளவாடங்களை இலவசமாகவோ அல்லது நிதியாகவோ வழங்கப் பட வேண்டும்.

4. பகுதிநேர நூலகத்திற்குக் குறைந்தது நூறு உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

5. புரவலர் ஒருவர் ரூ.1,000 வீதம் செலுத்தி இருவர் ஒவ்வொரு பகுதிநேர நூலகத்திலும் சேர்க்கப்பட வேண்டும்.

41--

காங்கயம் பாளையத்தில் நூலகம் அமைத்தல்

வினா எண் 67215--திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், காங்கயம்பாளையம் ஊராட்சி, காங்கயம்பாளையம் கிராமத்தில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

தமிழ் நாடு பொது நூலக விதிப்படி 5,000 மக்கட்தொகைக்கு மேல் உள்ள கிராமங்களில் மட்டுமே கிளை நூலகம் அமைக்க வாய்ப்பிருக்கும் நிலையில், காங்கயம்பாளையம் கிராமத்தில், போதிய மக்கள் தொகை இல்லாததால், அங்கு கிளை நூலகம் அமைக்க தற்சமயம் வழிவகை யில்லையிருப்பினும் மேற்படி கிராம மக்களின் நலன்கருதி கீழ்க்கண்ட நிபந்தனைகளை அக்கிராம மக்கள் பூர்த்தி செய்து தரும் பட்சத்தில் அக் கிராமத்தில் பகுதிநேர நூலகம் அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

நிபந்தனைகள்:

(1) பகுதி நேர நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட பத்து சென்ட் காலிமனை மாவட்ட நூலக அலுவர் பெயரில் பத்திரம் பதிவு செய்துத் தரப்பட வேண்டும்.

(2) ரூ.2,000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) மதிப்புள்ள நூலகத்திற்குத் தேவையான தளவாடங்களோ அல்லது தொகையோ இலவசமாக வழங்கப்பட வேண்டும்.

(3) பகுதி நேர நூலகத்திற்கு சொந்த கட்டடம் கட்டப்படும் வரை நூலகம் செயல்பட நல்ல நிலையிலுள்ள உறுதியான இலவசக் கட்டடம் வழங்கப்பட வேண்டும்.

(4) பகுதிநேர நூலகத்திற்கு குறைந்தது 100 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

(5) ரூ.1,000 செலுத்தி புரவலர் ஒருவர் சேர்க்கப்பட வேண்டும்.

42--

அரச்சலூர் ஊராட்சியில் நூலகம் அமைத்தல்

வினா எண் 67247--திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், அரச்சலூர் ஊராட்சி, நடுப்பாளையம், பூசாரியூர், வீரப்பன் பாளையம், ஊசிபாளையம், அரச்சலூர், ஓடாநிலை, வெட்டுகாட்டு வலசு,

நல்லமங்காபாளையம் புதுவலசு. நாச்சிவலசு, கொமாரபாளையம், குள்ளரங்கன்பாளையம், ஓலவலசு, நல்லகவுண்டன்வலசு. மீனாட்சி வலசு, பத்தையன் பாளையம், புதூர் செல்லப்பாளையம், ஆதிதிராவிடர் காலனி மேட்டூர், அழக கவுண்டன்பாளையம், ஆகிய கிராமங்களில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

மேற்படி கிராமங்களில், அரச்சலூர், கிராமத்தில் ஏற்கெனவே ஒரு கிளை நூலகம் இயங்கி வருகிறது. இதர கிராமங்களில் மக்கள் தொகை குறைவாக உள்ளதால் தமிழ் நாடு பொது நூலக விதி 45 (பி)-ன்படி கிளை நூலகங்கள் அமைக்க வழிவகையில்லை. அக்கிராமங்களில் பகுதிநேர நூலகங்கள் அமைத்துத் தர அக்கிராம மக்கள் கீழ்க்கண்ட வசதிகளைச் செய்து தந்தால் அக் கிராமங்களில் பகுதிநேர நூலகங்கள் திறப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

1. பகுதிநேர நூலகம் இயங்க வாடகையில்லாத நல்ல நிலையிலுள்ள கட்டடம் ஒன்றினை கிராம மக்கள் வழங்க வேண்டும்.

2. பகுதிநேர நூலகத்திற்கு கட்டடம் கட்ட பத்து சென்ட் காலிமனை இலவசமாக மாவட்ட நூலக ஆணைக் குழுவிற்கு பொது மக்கள் பத்திரம் பதிவு செய்து தரப்பட வேண்டும்.

3. ரூ.2,000 மதிப்புள்ள நூலகத்திற்குத் தேவையான தளவாடங்களை இலவசமாகவோ அல்லது நிதியோ வழங்கப் பட வேண்டும்.

4. பகுதிநேர நூலகத்திற்குக் குறைந்தது நூறு உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

5. ரூ.1,000 வீதம் செலுத்தி இருவர் ஒவ்வொரு பகுதிநேர நூலகத்திலும் சேர்க்கப்பட வேண்டும்.

43--

வடுகப்பட்டி ஊராட்சி பகுதிகளில் நூலகம் அமைத்தல்

வினா எண் *67267*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், வடுகப்பட்டி ஊராட்சி, நத்தமேடு ஆதிதிராவிடர் தெரு, வடுகப்பட்டி,

கோட்டூர்பாளையம், தொட்டியன்கிணற்றுபுதூர், பாம்ப கவுண்டன்வலசு, எலவநத்தம் ஆதி திராவிடர் காலனி, அவரைக் கவுண்டன்புதூர், பண்ணைகிணர், மேட்டுமலைபுதூர், தம்பிரான்வலசு, வாங்கலான்வலசு, நல்லகாட்டுப்பாளையம், எலவநத்தம் ஆதிதிராவிடர் காலனி, சுத்தம்பட்டி ஆதி திராவிடர் காலனி, வெட்டுகொட்டுவலசு, தேவணாம்பாளையம், சுத்தம் பட்டி, தச்சங்காட்டு வலசு, சுத்திகாட்டு ஆதிதிராவிடர் காலனி, வரக்குட்டை, தேவணாம்பாளையம், தேவணாம்பாளையம் ஆதி திராவிடர் காலனி, சின்னக்கிணத்துப்பாளையம், ஒடக்காட்டு வலசுபுதூர், காரமடை, நெய்க்காரன்பாளையம், பச்சாக் குட்டை, கருமகவுண்டன்வலசு, எல்லைக்காட்டு வலசு, நாவிதன்காட்டுப்புதூர், பொங்காளிவலசு, ரங்கம்மாபுதூர் அமராவதி பாளையம், ராக்கம்மாபுதூர் ஆதி திராவிடர் தெரு ஆகிய கிராமங்களில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

பொது நூலக விதிகளின்படி போதிய மக்கள் தொகை இல்லாத காரணத்தால், இந்த கிராமங்களில் கிளை நூலகங்கள் அமைக்க இயலவில்லை. இருப்பினும், மேற்படி கிராமங்களில் பகுதிநேர நூலகங்கள் அமைக்கத் தேவையான கீழ்க்கண்ட வசதிகளை, அக்கிராம மக்கள் செய்து தந்தால், இக்கிராமங்களில் பகுதிநேர நூலகங்கள் அமைத்துத் தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்:

(1) பகுதி நேர நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட பத்து சென்ட் காலிமனை மாவட்ட நூலக அலுவலர் பெயரில் பத்திரம் பதிவு செய்துத் தரப்பட வேண்டும்.

(2) ரூ.2,000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்,) மதிப்புள்ள நூலகத்திற்குத் தேவையான தளவாடங்களோ அல்லது தொகையோ இலவசமாக வழங்கப்பட வேண்டும்.

(3) பகுதி நேர நூலகத்திற்கு சொந்த கட்டடம் கட்டப்படும் வரை நூலகம் செயல்பட நல்ல நிலையிலுள்ள உறுதியான இலவசக் கட்டடம் வழங்கப்பட வேண்டும்.

(4) பகுதிநேர நூலகத்திற்கு குறைந்தது 100 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

(5) ரூ.1,000 செலுத்தி புரவலர் ஒருவர் சேர்க்கப்பட வேண்டும்.

1996 பிப்ரவரி 15]

44--

ஆய்வுநூலகம் அமைத்தல்

வினா எண் *67700*--திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கோயம்புத்தூரில் ஆய்வு நூலகம் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

தற்சமயம் இயலாது.

45--

திருவாரூரில் நூலகம் அமைத்தல்

வினா எண் *78586*--திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருவாரூர் நகரத்தில் மத்திய நூலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

46--

கிளை நூலகம் அமைத்தல்

வினா எண் *81978*--திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், குடவாசல் தாலுகா காட்டூர் கிராமத்தில் கிளை நூலகம் ஒன்று அமைத்துத் தர அரசு முன்வருமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

இக்கிராமத்தில் தற்சமயம் முழுநேர கிளை நூலகம் திறக்க வழிவகையில்லை. இருப்பினும், கீழ்க்காணும் வசதிகளை அக்கிராம மக்கள் அளித்தால் பகுதிநேர நூலகம் அமைத்துத்தர தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(1) பகுதி நேர நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட பத்து சென்ட் காலிமனை மாவட்ட நூலக அலுவலர் பெயருக்கு இலவசமாக வழங்கி பத்திரம் பதிவு செய்துத் தரப்பட வேண்டும்.

(2) ரூ.2,000 மதிப்புள்ள நூலகத்திற்குத் தேவையான தளவாடங்களோ அல்லது தொகையோ நன்கொடையாக வழங்கப்பட வேண்டும்.

(3) பகுதி நேர நூலகத்திற்கு சொந்த கட்டடம் கட்டப்படும் வரை நூலகம் செயல்பட நல்ல நிலையிலுள்ள உறுதியான இலவசக் கட்டடம் வழங்கப்பட வேண்டும்.

(4) பகுதிநேர நூலகத்திற்கு குறைந்தது 100 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

(5) ரூ.1,000 செலுத்தி புரவலர் ஒருவர் சேர்க்கப்பட வேண்டும்.

47--

இராமநாதபுரம் அரண்மனையைச் செப்பனிடுதல்

வினா எண் 87585--திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மிகவும் பழுதடைந்துள்ள இராமநாதபுரம் அரண்மனையை செப்பனிடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

ஆம்.

1996 பிப்ரவரி 15]

48--

கலை வித்தகர் விருதுகள் வழங்குதல்

வினா எண் 91941--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

கலைத் துறையில் பணியாற்றுபவர்களுக்கு சர்வதேச அளவில் உள்ள விருதைப்போல் மிக உயர்ந்த கலை வித்தகர் விருதுகள் வழங்குவதற்குத் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்திடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

இல்லை.

49--

கல்லூரிகளில் பணிப்பளு நிர்ணயம்

வினா எண் 107815--திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) உதவிபெறும் கலைக் கல்லூரிகளில் ஆசிரியர்களின் பணிச்சுமை நிர்ணயிக்கப்பட்டு விட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) அரசு உதவி பெறும் தனியார் கல்லூரிகளில் பணிப்பளு நிர்ணயம் செய்வது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

இதனை முடிவு செய்யும்வரை உதவி பெறும் தனியார் கல்லூரிகளில் பணி ஓய்வு, பணித்துறப்பு மற்றும் இறப்பு போன்ற காரணங்களினால், ஏற்பட்டுள்ள காலிப் பணியிடங்களில் இரண்டும் அதற்கு மேற்பட்ட காலிப் பணியிடங்கள் உள்ள துறைகளில் 75 விழுக்காடும் பணியிடங்களை நிரப்புவதற்கு 18-8-1995 நாளிட்ட அரசு கடிதம் எண். 14252/இசட்.1/ 95-1ல் அரசு அனுமதித்துள்ளது.

இதன்படி செயல்பட தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ஆ) பதில் ஏதுமில்லை.

50--

நகராட்சிப் பணியாளர்களுக்கு பட்டா வழங்குதல்

வினா எண் *36484--திரு. சி. ஞானசேகரன்:* மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வேலூர் நகராட்சிக்குச் சொந்தமான ஓட்டேரிக்கு பக்கத்தில் நீர்ப்பிடிப்பின்றி கரையைக் கடந்துள்ள இடத்தை நகராட்சிப் பணியாளர்களுக்குகென ஒதுக்கி பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

மாண்புமிகு *திரு. டி.எம். செல்வகணபதி,* **உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் நகராட்சிக்குச் சொந்தமான ஓட்டேரி முழுவதும் நீர்ப்பிடிப்பு இடமாக வரையறுக்கப்பட்டுள்ளது. மேலும் இதை ஒட்டி உள்ள அரசு புறம்போக்கு நிலமும், நீர்ப்பிடிப்பு இடமாகவே பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த இடம் நகராட்சி எல்லைக்கு வெளியே உள்ளதாகும். இத்தகைய வரையறுக்கப்பட்டுள்ள நிலங்களை பட்டா வழங்க மாற்றம் செய்ய இயலாது என்ற நிலையில் நகராட்சி பணியாளர்களுக்கு பட்டா வழங்க இயலாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

5. தகவல் கோரல்

(அ) முன் அனுமதியின்றி பிரச்சினை எழுப்புதல்

. முற்பகல் 11-30

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒன்றுமே கொடுக்கவில்லையே நீங்கள். என்னிடம் ஏதாவது கொடுத்துவிட்டுக் கேளுங்கள்.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னிடம் அறிவிப்பு கொடுத்துவிட்டுத்தான் நீங்கள் எழுந்திருக்க வேண்டும். சில முறைகள் வைத்திருக்கிறோம். என்னிடம் அறிவிப்பு கொடுத்துவிட்டுக் கேளுங்கள். (குறுக்கீடு) இதெல்லாம் முறையில்லை. என்னிடம் அறிவிப்புக் கொடுக்காமல் பேசுகிற எதுவும் அவைக் குறிப்பில் இருக்காது. உட்காருங்கள். இதெல்லாம் முறையல்ல. என்னிடம் ஏதாவது அறிவிப்புக் கொடுக்காமல் பேசுகிற எதுவும் அவைக்குறிப்பில் இருக்காது. உட்காருங்கள். (குறுக்கீடு) என்னிடம் ஏதாவது அறிவிப்புக் கொடுத்தால் தானே எழுப்பலாம். (குறுக்கீடு) திடீரென்று எழுப்ப முடியாது. இது சந்தைக் கடையல்ல. உட்காருங்கள். எதற்கு அறிவிப்பு கொடுக்க வேண்டுமென்று வைத்திருக்கிறோம்? (குறுக்கீடு) அரசாங்கம் சம்பந்தப்பட்டதற்கு எழுதிக் கொடுத்து பதில் பெறுவதற்காகத்தான் என்னிடம் அறிவிப்புக் கொடுக்க வேண்டுமென்று வைத்திருக்கிறோம்.

திரு. தாமரைக்கனி, உட்காருங்கள். (குறுக்கீடு) அதற்கு நான் அனுமதி மறுத்திருக்கிறேன். அனுமதி மறுத்ததை எழுப்ப முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடு)

(ஆ) போலி இராஜினாமா கடிதம் மீதான நடவடிக்கை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாமரைக்கனி, நீங்கள் எழுதியதாக எனக்கு வந்த ஒரு கடிதத்தைப் பற்றி உங்களிடம் நான் சில குறிப்புகள் கேட்டிருக்கிறேன். எனக்கு உங்கள் பெயரால் ஒரு கடிதம் வந்தது. நான் மற்ற மற்ற பேரவைத் தலைவர்களைப் போல அவசரப்பட்டு, ஆத்திரப்பட்டு ஒரு முடிவு எடுக்கிறவன் இல்லையென்கிற காரணத்தாலேதான், முறைப்படி, விதிப்படி உங்களை அழைத்து, இந்தக் கடிதம் வந்திருக்கிறதே, நீங்கள் எழுதியதா எனறு கேட்டேன். நீங்கள்

5. தகவல் கோரல்

(அ) முன் அனுமதியின்றி பிரச்சினை எழுப்புதல்

. முற்பகல் 11-30

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒன்றுமே கொடுக்கவில்லையே நீங்கள். என்னிடம் ஏதாவது கொடுத்துவிட்டுக் கேளுங்கள்.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னிடம் அறிவிப்பு கொடுத்துவிட்டுத்தான் நீங்கள் எழுந்திருக்க வேண்டும். சில முறைகள் வைத்திருக்கிறோம். என்னிடம் அறிவிப்பு கொடுத்துவிட்டுக் கேளுங்கள். (குறுக்கீடு) இதெல்லாம் முறையில்லை. என்னிடம் அறிவிப்புக் கொடுக்காமல் பேசுகிற எதுவும் அவைக் குறிப்பில் இருக்காது. உட்காருங்கள். இதெல்லாம் முறையல்ல. என்னிடம் ஏதாவது அறிவிப்புக் கொடுக்காமல் பேசுகிற எதுவும் அவைக்குறிப்பில் இருக்காது. உட்காருங்கள். (குறுக்கீடு) என்னிடம் ஏதாவது அறிவிப்புக் கொடுத்தால் தானே எழுப்பலாம். (குறுக்கீடு) திடீரென்று எழுப்ப முடியாது. இது சந்தைக் கடையல்ல. உட்காருங்கள். எதற்கு அறிவிப்பு கொடுக்க வேண்டுமென்று வைத்திருக்கிறோம்? (குறுக்கீடு) அரசாங்கம் சம்பந்தப்பட்டதற்கு எழுதிக் கொடுத்து பதில் பெறுவதற்காகத்தான் என்னிடம் அறிவிப்புக் கொடுக்க வேண்டுமென்று வைத்திருக்கிறோம்.

திரு. தாமரைக்கனி, உட்காருங்கள். (குறுக்கீடு) அதற்கு நான் அனுமதி மறுத்திருக்கிறேன். அனுமதி மறுத்ததை எழுப்ப முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடு)

(ஆ) போலி இராஜினாமா கடிதம் மீதான நடவடிக்கை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாமரைக்கனி, நீங்கள் எழுதியதாக எனக்கு வந்த ஒரு கடிதத்தைப் பற்றி உங்களிடம் நான் சில குறிப்புகள் கேட்டிருக்கிறேன். எனக்கு உங்கள் பெயரால் ஒரு கடிதம் வந்தது. நான் மற்ற மற்ற பேரவைத் தலைவர்களைப் போல அவசரப்பட்டு, ஆத்திரப்பட்டு ஒரு முடிவு எடுக்கிறவன் இல்லையென்கிற காரணத்தாலேதான், முறைப்படி, விதிப்படி உங்களை அழைத்து, இந்தக் கடிதம் வந்திருக்கிறதே, நீங்கள் எழுதியதா எனறு கேட்டேன். நீங்கள்

அதற்கு அப்படி நான் எழுதவே இல்லை என்று சொன்னதற்கு பிறகு, உங்களுடைய கையெழுத்தையும், அதையும் சரிபார்க்கிறபோது முழுக்க முழுக்க மாறுபாடாக இருந்தது. அதற்குப் பின்னர் உங்களிடம் கேட்டிருக்கிறேன். (குறுக்கீடு) அதை காவல் துறைக்கு அனுப்பி என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ எடுக்கலாம். (குறுக்கீடு) பேரவைக்கு நானே தெரிவித்து விடுகிறேன். திரு. தாமரைக்கனி அவர்கள் தன்னுடைய சட்டமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்துவிட்டதாக எனக்குத் தபால் மூலம் ஒரு கடிதம் வந்தது. அந்தக் கடிதம் வந்தவுடன், திரு. தாமரைக்கனியை நேரில் அழைத்து இந்தக் கடிதம் நீங்கள் எழுதியதா என்று காண்பித்துக் கேட்டபோது, தான் எழுதவேயில்லையென்று மறுத்தார். அதன் பின்னர் அவருடைய இயற்கையான கையெழுத்தையும், இதனுடைய கையெழுத்தையும் சரிபார்க்கிறபோது, அது முழுமையாக மாறுபாடாக இருந்த காரணத்தால், யாரோ வேண்டுமென்று செய்திருக்கிறார்கள் என்று தெரிய வந்தது. அதை காவல் துறைக்கு அனுப்பி உரிய நடவடிக்கை எடுக்கச் செய்யலாம் என்பதை தாமரைக்கனிக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்ற பேரவைத் தலைவர்களானால் உடனடியாக பத்திரிகையைக் கூப்பிட்டு ஒருவர் இராஜினாமா செய்து விட்டார் என்று அறிவித்திருப்பார்கள். நான் விதிமுறைப்படி நடக்கிறவன் என்கிற காரணத்தாலே, தாமரைக்கனியையே கூப்பிட்டு அழைத்துப் பேசினேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. அறிவிப்புகள்

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 உள்விதி (1)-ன் கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களைப் பேரவையின் 11-வது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairmen) நியமிக்கிறேன்.

1. திரு. வி.பி. சந்திரசேகர்
2. டாக்டர் எஸ். சுந்தரராஜ்
3. திருமதி கே. மரியம் உல் ஆசியா
4. திரு. வி. கே. லட்சுமணன்
5. திரு. ஆர். சிங்காரம்
6. திரு. செ.கு. தமிழரசன்

அதற்கு அப்படி நான் எழுதவே இல்லை என்று சொன்னதற்கு பிறகு, உங்களுடைய கையெழுத்தையும், அதையும் சரிபார்க்கிறபோது முழுக்க முழுக்க மாறுபாடாக இருந்தது. அதற்குப் பின்னர் உங்களிடம் கேட்டிருக்கிறேன். (குறுக்கீடு) அதை காவல் துறைக்கு அனுப்பி என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ எடுக்கலாம். (குறுக்கீடு) பேரவைக்கு நானே தெரிவித்து விடுகிறேன். திரு. தாமரைக்கனி அவர்கள் தன்னுடைய சட்டமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்துவிட்டதாக எனக்குத் தபால் மூலம் ஒரு கடிதம் வந்தது. அந்தக் கடிதம் வந்தவுடன், திரு. தாமரைக்கனியை நேரில் அழைத்து இந்தக் கடிதம் நீங்கள் எழுதியதா என்று காண்பித்துக் கேட்டபோது, தான் எழுதவேயில்லையென்று மறுத்தார். அதன் பின்னர் அவருடைய இயற்கையான கையெழுத்தையும், இதனுடைய கையெழுத்தையும் சரிபார்க்கிறபோது, அது முழுமையாக மாறுபாடாக இருந்த காரணத்தால், யாரோ வேண்டுமென்று செய்திருக்கிறார்கள் என்று தெரிய வந்தது. அதை காவல் துறைக்கு அனுப்பி உரிய நடவடிக்கை எடுக்கச் செய்யலாம் என்பதை தாமரைக்கனிக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்ற பேரவைத் தலைவர்களானால் உடனடியாக பத்திரிகையைக் கூப்பிட்டு ஒருவர் இராஜினாமா செய்து விட்டார் என்று அறிவித்திருப்பார்கள். நான் விதிமுறைப்படி நடக்கிறவன் என்கிற காரணத்தாலே, தாமரைக்கனியையே கூப்பிட்டு அழைத்துப் பேசினேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. அறிவிப்புகள்

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 உள்விதி (1)-ன் கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களைப் பேரவையின் 11-வது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairmen) நியமிக்கிறேன்.

1. திரு. வி.பி. சந்திரசேகர்
2. டாக்டர் எஸ். சுந்தரராஜ்
3. திருமதி கே. மரியம் உல் ஆசியா
4. திரு. வி. கே. லட்சுமணன்
5. திரு. ஆர். சிங்காரம்
6. திரு. செ.கு. தமிழரசன்

(ஆ) 10-வது பேரவையின் இறுதி கூட்டத்தொடர் முடியும் நாளுக்குள் வினாக்களுக்கு அமைச்சர்கள் விடைகளைப் பெற்றுத்தர வேண்டியது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விகள் பற்றிய ஓர் அறிவிப்பு. பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து கேள்விகள் வரப்பெற்று அவற்றுக்குரிய பதில்கள் பெறப்பட்டிருக்கின்றன. இந்தக் கூட்டத் தொடருக்குள் எல்லாக் கேள்விகளுக்கும் உரிய பதில்கள் உறுப்பினர்களுக்கு வழங்கவேண்டும் என்று கருதுகிறேன். இந்தக் கூட்டத் தொடருக்குரிய ஒவ்வொரு நாளும் 20, 20 கேள்விகள் எடுத்து போக, எஞ்சியிருக்கிற எல்லாக் கேள்விகளுக்கும் உரிய பதில்கள் இந்தக் கூட்டத் தொடரின் இறுதி நாளுக்குள் வழங்கவேண்டும் என்று கருதப்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர்கள் தங்கள் கட்டுப்பாட்டிலுள்ள துறையில் நிலுவையில் உள்ள வினாக்களுக்குரிய விடைகளை உடனடியாக சட்டமன்றப் பேரவைச் செயலகத்திற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கக் கேட்டுகொள்கிறேன்.

6. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம், திருமதி கே. மரியம் உல் ஆசியா.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1996–ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 14–ம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு @ தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. காஞ்சி பன்னீர்செல்வம்.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மரியம் உல் ஆசியா அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

@ 361 முதல் 412 வரையிலான பக்கங்களில் இணைப்பாகச் சேர்க்கப் பெற்றுள்ளன.

(ஆ) 10-வது பேரவையின் இறுதி கூட்டத்தொடர் முடியும் நாளுக்குள் வினாக்களுக்கு அமைச்சர்கள் விடைகளைப் பெற்றுத்தர வேண்டியது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விகள் பற்றிய ஓர் அறிவிப்பு. பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து கேள்விகள் வரப்பெற்று அவற்றுக்குரிய பதில்கள் பெறப்பட்டிருக்கின்றன. இந்தக் கூட்டத் தொடருக்குள் எல்லாக் கேள்விகளுக்கும் உரிய பதில்கள் உறுப்பினர்களுக்கு வழங்கவேண்டும் என்று கருதுகிறேன். இந்தக் கூட்டத் தொடருக்குரிய ஒவ்வொரு நாளும் 20, 20 கேள்விகள் எடுத்து போக, எஞ்சியிருக்கிற எல்லாக் கேள்விகளுக்கும் உரிய பதில்கள் இந்தக் கூட்டத் தொடரின் இறுதி நாளுக்குள் வழங்கவேண்டும் என்று கருதப்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர்கள் தங்கள் கட்டுப்பாட்டிலுள்ள துறையில் நிலுவையில் உள்ள வினாக்களுக்குரிய விடைகளை உடனடியாக சட்டமன்றப் பேரவைச் செயலகத்திற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கக் கேட்டுகொள்கிறேன்.

6. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம், திருமதி கே. மரியம் உல் ஆசியா.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1996–ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 14–ம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு @ தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. காஞ்சி பன்னீர்செல்வம்.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மரியம் உல் ஆசியா அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

@ 361 முதல் 412 வரையிலான பக்கங்களில் இணைப்பாகச் சேர்க்கப் பெற்றுள்ளன.

முற்பகல் 11–35

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 10–ஆம் சட்டமன்றப் பேரவையின் கடைசி கட்டத் தொடரில் மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தை முன்மொழிந்து, இந்த மாமன்றத்தில் பேசுகின்ற வாய்ப்பினை அளித்த உலகம் போற்றும் உத்தமத் தலைவி சரித்திர நாயகி, சகாப்தத் தலைவி திராவிட இயக்கத்தின் இதயக் கனி, எங்கள் வழிகாட்டி, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு எங்களது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அறிவுக்கோர் திருவிளக்காக, பெண் குலத்தின் பொன் விளக்காக விளங்கும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் தலைமையிலான அரசு தொடர்ந்து 6–வது முறையாக ஆளுநர் உரையை இந்த மாமன்றத்தில் அளித்திருப்பது வரலாற்றுச் சிறப்பாகும். இந்த அரசு இன்றைக்கு முழு வடிவத்தோடு இருக்கிறது, முழு வார்ப்போடு இருக்கிறது என்றால் அதற்குக் காரணம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்தான். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இந்தியாவிலேயே மக்களுக்காக பல்வேறு நலத் திட்டங்களைத் தீட்டுகின்ற ஒரே அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் தலைமையிலான தமிழக அரசுதான். அடித்தளத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக அதிகம் சிந்தித்து செயல்பட்டு வருகிறார் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள மற்ற மாநிலங்கள் தமிழகத்தைக் கூர்மையாகக் கவனிக்கின்றன. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிர்வாக இயந்திரத்தையே ஒரு சாதனைக் கூடமாக மாற்றிப் புதிய சகாப்தத்தைப் படைத்துக் கொண்டிருக்கிறார். இராமன் வாழ்ந்த அயோத்தியும், கிருஷ்ணன் ஆட்சி செலுத்திய துவாரகையும் சிறப்படைந்திருப்பதைப்போல், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் செங்கோல் பிடித்துள்ள தமிழகம் இன்று பெருமை பெற்றுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

இலட்சியங்கள் எந்த அளவிற்குத் தூய்மையானதாக இருக்கிறதோ, அந்த அளவிற்குப் பாதைகளும் தூய்மையானதாக இருக்க வேண்டும் என்பதுதான் புரட்சித் தலைவி அவர்கள் அரசின் மகத்தான கொள்கையாகும்.

ஆளுநர் அவர்கள் உரையில் கூறப்பட்டுள்ள புரட்சித் தலைவி அவர்கள் அரசின் சாதனைகள் தங்கத் தாம்பாளத்திலே பதிக்கப்பட்ட மரகத மணிகளாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன.

ஆளுநர் பதவியை ரத்து செய்யத் தீர்மானம் போட்டவர்கள் சட்டப் பேரவையில் அவரைப் பேச அனுமதித்தது ஏன்? என்று சிலர் கேட்கின்றார்கள். பத்திரிகைகளில் இந்தச் செய்தி வெளிவந்துள்ளது. ஆணித்தரமாக சொல்கின்றோம். ஆளுநர் பதவி அவசியமற்றது என்பது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் முடிவு. அந்தப் பதவி இருக்கிறவரை அவர் உரை நிகழ்த்துவதும், அவரது உரைக்கு நன்றி சொல்வதும் நமது மரபு.

எங்கள் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் புனிதத் தலைமை முடிவுகளுக்கு முரண்பட்டுப் போனதுமில்லை, மரபுகளுக்கு மரியாதை தரத் தவறியதுமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் நம் தமிழ் மாநிலம் மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டும் அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்து வருகின்றது. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்பதற்கு முன்பு தமிழகம் வன்முறையாளர்களின் அராஜகப் பிடியிலே சிக்குண்டு தவித்துக் கொண்டிருந்தது. அப்படிப்பட்ட தீவிரவாதிகளின் வன்முறைச் சூறாவளியில் சிக்கித் தமிழகக் கப்பல் முழுவதும் மூழ்கிப் போய்விடுமோ என்று மக்கள் அஞ்சித் துடித்துக் கொண்டிருந்த வேளையிலேதான் தாம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்று அமைதித் துறைமுகம் நோக்கி தமிழகக் கப்பலை மீட்டுக் கொண்டு வந்து சேர்த்தார் வீறு நடைபோடும் புரட்சி வீராங்கனையான மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்.

அண்டையில் இருக்கின்ற ஆந்திராவில் நக்சலபாரிகளின் அட்டகாசம், அண்மையில் ஒரு காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினரின் உயிரையே பறித்துவிட்டது. அசாமில் உல்பா தீவிரவாதிகளின் அக்கிரமச் செயல்கள் அடக்கப்படவில்லை. இன்னும் பஞ்சாபில் காலிஸ்தான் தீவிரவாதிகள். காஷ்மீரில் பயங்கர வன்முறையாளர்கள், தேசத்தின் திக்குகள்தோறும் தீவிரவாதிகளால் மக்கள் திக்குமுக்காடிக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால், தமிழ்நாட்டில் என்ன நிலைமை? ஒரு காலத்தில் விடுதலைப் புலிகளின் வேட்டைக் காடாகத் தமிழ்நாடு விளங்கியது. அவர்களை அஞ்சா நெஞ்சத்தோடும், ஆன்ம பலத்தோடும்

எங்கள் அரிமாத் தலைவி அடக்கிய பிறகுதான் (மேசையைத் தட்டும் ஒலி) அமளிக்காடாக இருந்த தமிழகம் அமைதிப் பூக்காடாக மாறியது. மாற்றியவர் யார்? இந்த மாநில முதல்வர், எங்கள் மாணிக்கத் தலைவி மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தென் மாவட்டங்களில் அண்மையில் ஏற்பட்ட வன்முறைக் கலவரச் சம்பவங்கள் உடனடியாகக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. தமிழகத்தின் பாதுகாவலர் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சென்று நேரடியாகத் தலையிட்டதால் பொது மக்களிடத்தில் நம்பிக்கை உணர்வு தோற்றுவிக்கப்பட்டது. அங்குள்ள அதிகாரிகள் உடனடியாக, உறுதியான நடவடிக்கை எடுக்கவும் வழிவகை செய்தது. இந்நடவடிக்கைகளினால் தென் மாவட்டங்களில் மீண்டும் அமைதி திரும்பியது என்று மேதகு ஆளுநர் தமது உரையில் கூறியிருக்கின்றார்.

முற்பகல் 11-40

எதிலுமே குறையை மட்டுமே பார்க்கின்ற எதிர்க்கட்சித் தலைவர், மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பார்களே, அதுபோல, ஆளுநர் உரையில் குறிப்பிட்டுள்ள உண்மைக்கு, திரை போட்டு மூடிவிடலாம் என்று கருதுகிறார். அவருக்கு ஒன்றை ஞாபகப்படுத்துவது எனது கடமை. ஒரு முதலமைச்சர் கலவரப்பகுதியில் எப்படி நடந்துகொள்ள வேண்டும், இரு தரப்பில் மோதல்கள் ஏற்படும்போது, அரசு உடனடியாக என்ன செய்ய வேண்டும் என்பதற்குப் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் தெளிவான வழியைக் காட்டியிருக்கிறார்.

முதுகுளத்தூர் கலவரத்தை நாடு மறந்திருக்காது. முதுகுளத்தூர் கலவரம் ஆரம்பமான 1957 செப்டம்பர் 14, 15 மற்றும் 16-ஆம் தேதிகளில், அன்றைய முதலமைச்சர் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் மதுரையில்தான் இருந்திருக்கிறார். ஆனால் உடனடியாக சம்பவம் நடந்த இடத்திற்குப் போகாமல் சென்னைக்கு வந்திருப்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கலவரப் பகுதியில் முதலமைச்சர் உடனடியாகச் சென்றால், பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேலும் மேலும் துன்பம் ஏற்படும் வகையில், கூட்டம் கூடுவார்கள் என்பதை உணர்ந்தவர் பெருந்தலைவர் காமராஜர். அந்த வகையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரணம் கிடைக்கவும், மேலும் மேலும் மோதல்கள் உருவாகாமல் இருக்கவும் உடனடி நடவடிக்கை எடுத்த பாதுகாவலர் முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள். (மேசையைத்

தட்டும் ஒலி). அவர்களின் செயல்பாடுகளைக் குறை சொல்வதன் மூலம் அரசியல் லாபம் அடையத் துடிப்பவர்களைப் பார்த்து நாடு நகைக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

காலில் முள் குத்தினாலும் அல்லது உடலில் எந்தப் பாகத்தில் காயம் ஏற்பட்டாலும் கண்கள்தான் அழுகின்றன. அந்தக் கண்களுக்கு அவ்வளவு பொறுப்புணர்ச்சி இருக்கிறது. அதேபோல், தமிழகத்தைக் கண்ணின் இமைபோல் கட்டிக்காத்து வருகின்ற டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், எந்தச் சமுதாயம் பாதிக்கப்பட்டாலும் தாயுள்ளம் கொண்ட புரட்சித்தலைவி அவர்கள் உடனடியாக உதவிகள் செய்து வருகிறார்கள். முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் இளவயது முதல் தன் வாழ்க்கையை ஒரு ஒளிவிளக்கு போல் அமைத்துக் கொண்டவர். எப்படி எரிகின்ற ஒரு தீபம் ஒரு திக்கை நோக்கியோ ஒரு திசையை நோக்கியோ எரியாமல் அனைத்துப் பகுதிகளையும் பார்த்து அந்த தீபவிளக்கு ஒளியூட்டுகிறதோ அதேபோல் அனைத்து சமுதாய மக்களுக்கும், மக்கள் வாழ்வுக்கும் ஒளி ஏற்றிவைக்க வேண்டும் என்று இதயபூர்வமாக இயங்குபவர் நமது முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள்.

அலைகடல் தாலாட்டும் வங்கக்கடலோரம் முன்பனி இரவின் பின்பனிக் காற்றில் வெண்பனி அமுத புல்வெளி அருகே உறங்குகிறாரே பேரறிஞர் அண்ணா அவர்கள்-அவர்கள் மறைந்து கால் நூற்றாண்டுக் காலமாக வேறு யாரும் செய்யாத நிலையில், இமயமலையை போன்று உயர்ந்த நோக்கும், இந்துமகா சமுத்திரத்தைப் போல ஆழமான அறிவும் படைத்த திராவிட இயக்கத்தின் தனிப்பெருந்தலைவி மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) ஒருவர்தான் பேரறிஞர் அண்ணாவின் கொள்கைகளுக்கும் படைப்புகளுக்கும் செயல்வடிவம் கொடுத்திருக்கிறார் என்பதை அறிஞர்கள் உலகம் வரவேற்கிறது.

காரல் மார்க்ஸ் அவர்களின் தத்துவங்களுக்கு ஃபிரடரிக் ஏங்கல்ஸ் செயல்வடிவம் கொடுத்ததைப் போல, பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கைகளுக்கு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் இன்றைக்குச் செயல்வடிவம் கொடுத்துக் கொண்டிருக்கிறார். பேரறிஞர் அண்ணாவின் இலக்கியப் படைப்புகளை நாட்டு மக்கள் படித்துப் பயனடைய வேண்டும். தெளிவு பெறவேண்டும் என்பதற்காக, அவரது குடும்பத்திற்கு 75 லட்ச ரூபாய் அளித்து அவரது படைப்புகளை நாட்டுடமை ஆக்கியிருக்கின்றார்.

தனது படைப்புக்குத் தானே ராஜராஜன் விருது பெற்ற புண்ணியவானும் இந்த மண்ணில் முதலமைச்சராக இருந்திருக்கிறார். இந்தியநாட்டின் விடுதலை நாளை, சுதந்திர நாளை, "ஆகஸ்ட் 15 – நமக்கு இன்ப நாள்" என்று சொன்னாரே பேரறிஞர் அண்ணா, அதற்காக அவர் எழுத்தோவியம் அடங்கிய 'திராவிடநாடு' ஏட்டை தமிழ்வளர்த்த தஞ்சையில் தீயிட்டுக்கொளுத்திய மகானுபாவன்தான் அதே தஞ்சையில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரால் உருவாக்கப்பட்ட ராஜராஜன் விருதைத் தமக்குச் சொந்தமாக்கி கொண்டவர். அவர்தான், அண்ணா வழியில் அயராது உழைப்போம் என்று தமக்குத் தாமே மார்தட்டிக் கொள்கின்றார்.

நமது நாட்டில் பெண்கள் எப்படி இருந்தார்கள் என்பதைப் பற்றி அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வெளியிட்டிருக்கின்ற 'இந்திய தேச சரித்திரம்' என்ற புத்தகத்தில் பேராசிரியர் சத்தியநாத அய்யர் அவர்கள் மிகத் தெளிவாக எழுதியிருக்கின்றார். அதிலே, பெண்கள் கொடுமைப்படுத்தப் பட்டதாகவும், அவர்களுக்கு கல்வியறிவு அளிக்க மறுக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டிருக்கிறார். அதேபோல, 'வோல்காவிலிருந்து கங்கை வரை' என்ற புகழ்பெற்ற பல புத்தகங்களை எழுதிய ராகுலசாங்கிரித்திரயன் அவர்கள், 'ராஜஸ்தானத்து அந்தப்புரங்கள்' என்ற புத்தகத்தில், வட இந்தியாவில் பெண்கள் எப்படி நடத்தப்பட்டார்கள் என்று சித்தரித்திருப்பதைப் படிகின்றபோது, கண்களிலே இரத்தம் கசிகின்றது. பெண் குழந்தைகள் பிறந்தால், உடனடியாக அந்தப் பெண் குழந்தைகளுக்கு அபினைக் கொடுத்து மூச்சித் திணறும்படியாக்கிக் கொன்று விடுவார்கள். கருவிலே பெண் குழந்தைகளை அழித்துவிடுகின்ற நிலைமை முன்பிருந்தது. எங்கே, எது, எப்படியிருந்தாலும், மாறிவரும் புது உலகில் நமது தமிழ்நாட்டுப் பெண்களின் நிலை இன்று முற்றிலும் மாறியிருக்கிறது.

"மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்" என்ற பாரதியாரின் சத்தியக்குரல் இன்று வெற்றி பெற்றிருக்கிறது. மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் இன்று பெண்கள் சமுதாயம் அனைத்து நிலைகளிலும் தலைநிமிர்ந்து நிற்கிறது. வடக்கே ஒரு காங்கிரஸ்காரர், தன்னுடைய மனைவியைக் கொளுத்திய கொடுமை நடந்தது. இப்படி ஆண்களால் பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்பதை உணர்ந்து, பெண்களால் பெண்களுக்காகவே நடத்தப்படும் காவல் நிலையங்களை–அனைத்து மகளிர் காவல் நிலையங்களைக் கொண்டு வந்தார் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். ஏறத்தாழ 36 காவல் நிலையங்களை மாண்புமிகு முதல்வர் அவர்களே தமது திருக்கரத்தால் திறந்து வைத்திருக்கிறார்.

முற்பகல் 11-45

பக்கத்து நாடான பாகிஸ்தானில் ராவல்பிண்டியில் அந்நாட்டுப் பிரதமர் பெனாசிர் புட்டோ அண்மையில் ஒரே ஒரு மகளிர் காவல்நிலையத்தைத் திறந்து வைத்தார். அப்போது அந்த நாட்டிலுள்ள அயல்மொழிப் பத்திரிகைகாரர்கள் எல்லாம் பாகிஸ்தானில் திறக்கப்படும் மகளிர் காவல் நிலையத் திட்டத்திற்கு முன்னோடி யார் தெரியுமா, வழிகாட்டி யார் தெரியுமா, தமிழக முதலமைச்சர் அவர்கள் தான் என்று பாராட்டி எழுதினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைத்தான் ஆளுநரும் தமது உரையில் 'மகளிருக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களைத் தடுக்க இம்மாநிலத்தில் 57 அனைத்து மகளிர் காவல்நிலையங்களைத் தொடங்கியதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னோடியாகத் திகழ்வதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். இந்த முயற்சியை மக்கள் பெரிதும் வரவேற்றுள்ளதுதான் உலக நாடுகள் அளவிலும் பரந்த அளவில் பாராட்டப்பட்டுள்ளது' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

பெண் சிசுக்களை அழிக்கின்ற கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைத்தது டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு. குப்பையிலே தூக்கி எறியப்பட்ட குழந்தையை தொட்டிலிலே தாலாட்டி வளர்க்கின்ற 'தொட்டில் குழந்தைத் திட்டம்' உலகிலேயே மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசுதான் கொண்டு வந்திருக்கிறது. பெண் குழந்தைகளுக்கு கௌரவத்தையும், அந்தஸ்தையும், கண்ணியத்தையும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசுதான் அளித்து வருகிறது.

'நகரேஷு காஞ்சி;

நாரிஷு ரம்பா;

புருஷேஷு விஷ்ணு'

என வட மொழியிலே மகாகவி காளிதாசன் பாடினான், 'நகரிலே அழகியது காஞ்சி, பெண்களில் பேரழகி ரம்பை, ஆண்களில் அழகன் விஷ்ணு' என்று பாடினான் காளிதாசன். அவன் இன்றிருந்தால் பெண்களில் ஆற்றலும், அறிவும் மிக்கவர் யார் என்றால் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்தான் என்றே எழுதியிருப்பான். (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அரசியல் வளர்பிறையாகவே எப்பொழுதும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார். அந்த முழுநிலவை இடையிலேயே மறைக்க முயன்ற சில மேகங்களும் வெட்கி விலகினவே தவிர அந்த

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அறிவு நிலா சித்ரா பௌர்ணமியாகவே சிந்தனைக் கதிர்களைப் பரப்பிக் கொண்டிருக்கிறது. புரட்சித் தலைவி அவர்களையும், அவரது அரசையும் அழிக்க இமயங்களாகப் புறப்பட்டவை எல்லாம் இலையுதிர் காலத்துச் சருகாகி வருகின்றன. சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழும் மக்கள், நடுத்தர மக்கள், உயர்வடைய வேண்டும். அந்தச் சமுதாய சந்ததியினர் தலைசிறந்த டாக்டர்களாக, என்ஜினியர்களாக உருவாக வேண்டும் என்ற பரந்த எண்ணத்தின் அடிப்படையில் திருச்சி நகரில் பல்வேறு கல்விக்கூடங்களை கொண்ட 'கல்வி வளாகம்' அமைக்க 190 ஏக்கர் நிலமும், 10 கோடி ரூபாய் நிதியும் தந்திருப்பவர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். இந்த சிந்தனை ஏதோ திடீரென எழுந்தது அல்ல. சிலர் ஒன்பது வயதிலேயே அரசியலில் கொடிபிடித்து, சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களை பரப்பியவன் என்பார்கள். ஆனால் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் எந்தவித பலனையும் எதிர் பார்க்காமல் இன்றைக்கு 28 ஆண்டுகளுக்கு முன்பே திருச்சியில் மருத்துவக் கல்லூரி அமைய வேண்டும் என்பதற்காக 'காவிரி தந்த கலைச் செல்வி' நாட்டிய நாடகம் நடத்தி, நிதி திரட்டிக் கொடுத்தவர். இராமன் கால் பட்டு கல்லாக இருந்த அகலிகை சாப விமோசனம் அடைந்தது போல் இன்றைக்கு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அருள் பார்வையால் திருச்சி மாவட்டம் கல்வித் தரத்தில் மேன்மை அடைந்துள்ளதை எண்ணிப் பெருமை அடைகிறோம். மாண்புமிகு முதல்வர், கல்வி வள்ளல், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு தமிழகத்தின், தமிழ்ச் சமுதாயத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புராணத்துக் கடவுள்கூட பக்தனில் தபசு முடியும் போதுதான் காட்சி தந்து வரம் தருகின்றனர். ஆனால் மாண்புமிகு முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களோ வேண்டுகோள் முடிவதற்கு முன்பே வேண்டுகோளில் நியாயம் கண்டதும் தந்தேன் என்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் பல்வேறு ஆற்றல்கள், பன்முகச் செயல்திறன்கள், ஆயிரமாயிரம் நற்பண்புகள் அனைத்தும் ஒருங்கே படைத்த அற்புதத் தலைவியாகத் திகழ்கிறார். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இந்திய உப கண்டத்தில் நம்பிக்கை நட்சத்திரமாக, ஒரு தலைசிறந்த தேசியத் தலைவராக விளங்குவதால்தான் வட மாநிலங்களிலும் மக்களின் அமோக ஆதரவினை புரட்சித் தலைவி அவர்கள் பெற்று வருகிறார்கள்.

கலை உலகம் தந்த அருந்தவப் புதல்வர்கள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., ஆந்திர மாநில மக்களின் ரட்சகனாக விளங்கிய

என்.டி. இராமாராவ், தன் இறுதிச் சொட்டு ரத்தத்தைக்கூட இந்திய மண்ணின் அமைதிக்காக அர்ப்பணித்த அன்னை இந்திரா காந்தி, இவர்களெல்லாம் கண்ட கனவு ஆந்திராவில் கிருஷ்ணா நதி நீர் சென்னை நகர மக்களின் தாகத்தைத் தீர்க்கும் தெலுங்கு-கங்கையாகப் பாய்ந்து வர வேண்டும் என்பதுதான். சென்னைக்குக் குடிநீர், ஆந்திர ராயலசீமா பகுதிக்கு பசுமைப் புரட்சி என்ற அடிப்படையில் செயல்படுத்தப்பட்ட தெலுங்கு-கங்கை, ஆந்திரப் பகுதியில் தடைப்பட்டு நிற்பது திராவிட மொழி பேசும் நமக்கெல்லாம் வேதனைக்குரிய ஒன்று. மேதகு ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டுள்ளதுபோல மறைந்த முப்பெரும் தலைவர்களின் தொலைநோக்கு நிறைவேற ஆந்திர அரசு தெலுங்கு-கங்கையை தமிழ் மண்ணில் தவழ விட வேண்டும் என்று பேரவை உறுப்பினர்கள் சார்பாக வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். இந்தியா ஒரே நாடு என்பதற்கு நதிகள் மூலம் நாம் வழிகாட்ட வேண்டும் என்பதையும் வற்புறுத்துகிறேன்.

தமிழ் நாட்டுக்கு காவிரியில் 205 டி.எம்.சி. அடி தண்ணீர் தர வேண்டும் என்று இடைக்கால நிவாரணம் தந்தது உச்ச நீதிமன்றத்தில் நிறுவப்பட்ட நடுவர்மன்றம். அன்றைக்கு கர்நாடக முதலமைச்சராக இருந்த காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பங்காரப்பா, ‘நடுவர் மன்றத் தீர்ப்பை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம்’ என்றார். அன்றைக்கு மத்திய சர்க்கார் அவரைக் கண்டிக்க மறந்துவிட்டது, மறுத்து விட்டது, ‘வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்’ என்றார் அருட்பெருஞ்ஜோதி தனிப்பெரும் கருணை வடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகள். அப்படி காவிரி பாசனப் பகுதியில் பச்சைப் பயிர்கள் வாடியதைக் கண்டு தன் உடலையும் உள்ளத்தையும் வருத்தி 84 மணி நேரம் உண்ணாவிரதம் இருந்தவர், தம் உயிரையே பணயம் வைக்கத் துணிந்தவர் முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

‘கடைவிரித்தேன் கொள்வார் இல்லை’ என்று வள்ளலார் தன் முயற்சியில் தோற்றதை ஒப்புக் கொண்டார். ஆனால் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களோ எடுத்த காரியத்தை முடிக்காமல் விட்டதில்லை. வாதாடியும், வழக்குமன்றத்துக்குப் போயும் அசையாத மத்திய அரசை அசைத்தவர் வரலாற்றுச் சிறப்புக்குரிய முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள். மத்திய அரசு காவிரி நீர் பிரச்சினையில் தலையிட வேண்டும் என்று இந்திய நாட்டின் உச்ச நீதிமன்றம் சொன்னது. அதன் விளைவு கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆனது போல் பிரதமர் தலையிட்டு 6 டி.எம்.சி. அடி தண்ணீர்தான்

நமக்குக் கிடைத்துள்ளது. இன்றைக்குக் காவிரியில் நமது உரிமை நிலைநிறுத்தப்படாததால் 10 லட்சம் டன்னுக்கும் அதிகமான உணவு தானிய உற்பத்தி குறைந்துள்ளது.

முற்பகல் 11–50

காவிரி தமிழக மக்களைக் கைவிரித்து விட்டதற்கு யார் காரணம் என்பதை சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். 'பரந்தாமா, நீ நடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்' என்று அவர் எழுதிய வசனத்தையே அவருக்குத் திருப்பிச் சொல்கிறோம். கடந்தகால வரலாறுகளை சற்று திரும்பிப் பார்ப்போமானால் நஞ்சையும், புஞ்சையும் நன்றாக விளைந்தபோதே, தமிழகத்தை அவர் பஞ்ச பூமி ஆக்கியதை மறந்துவிட முடியாது.

ஆனால், இன்றைக்கு தஞ்சை, திருச்சி போன்ற காவிரிப் பாசனப் பகுதிகளில் தண்ணீரின் வறண்டுபோன நிலை. அப்படியிருந்தும், முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் குடும்ப அட்டைக்கு ஒரு கிலோ 2 ரூபாய்க்கு அரிசி தந்து கொண்டிருக்கிறார். ஒரு குடும்ப அட்டைக்கு 20 கிலோ ரேஷன் அரிசி தந்து கொண்டிருக்கிறார். தமிழகத்து தாய்மார்கள் முதல்வர், டாக்டர், புரட்சித் தலைவி அவர்களை மனதார வாழ்த்துகிறார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் படி அரிசித் திட்டத்தைக் கொண்டு வந்து கோவைக்கும், சென்னைக்கும் முதன்முதலில் அமல்படுத்தினார். பேரறிஞர் அண்ணாவிற்குப் பிறகு வந்த கருணாநிதி அதைச் சீரழித்தார். 200 ரூபாய்க்குக் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு மட்டுமே படி அரிசித் திட்டம் என்று அளவுகோல் வைத்தார். ஆனால் இன்றைக்கு நமது தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி, அம்மா அவர்கள் ஏழை பணக்காரர் வித்தியாசமின்றி அனைவருக்கும் 20 கிலோ அரிசி வழங்குகிறார். ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்க்கு வழங்குகிறார். மாதம் 70 கோடி ரூபாய் கூடுதலாகச் செலவிட்டு வெளிமாநிலங்களிலிருந்து அரிசியை வாங்க உத்தரவிட்டிருக்கிறார்.

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கடந்த பொதுத் தேர்தலில் மகத்தான வெற்றியடைந்த பிறகு முதன் முதலில் தொலைக் காட்சியில் பேட்டி அளிக்கும்போது, தமிழக மக்கள் எனக்கு வரலாறு காணாத வகையில் இமாலய வெற்றியைத் தந்து இருக்கிறார்கள். அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இருந்தாலும், தேர்தலில் கூறிய வாக்குறுதிகளை எப்போது முழுமையாக

நிறைவேற்றுகிறோனோ அப்போதுதான் இதயத்தின் அடித்தளத்திலிருந்து உண்மையான நன்றியினை உங்களுக்கு காணிக்கையாக்குவதாக அர்த்தம் என்று கூறினார்கள். மேலும், இதுநாள் வரையில் எங்களுக்கு வாக்கு அளிக்காதவர்களும் இனி வருகின்ற தேர்தலில் எங்களுக்கு வாக்களிக்கின்ற வகையில் சிறப்பாக பணியாற்றுவோம் என்று கூறினார்கள்.

நான் கடந்து வந்த பாதை மலர்ப்பாதையல்ல. கற்களும் முட்களும் நிறைந்த கரடுமுரடான பாதை. நான் இந்த நிலையை அடைய, பட்ட கஷ்டங்கள் சொல்லிமாளாது, எனது அரசியல் வரலாறு கல்லடியும், சொல்லடியும் நிறைந்த வரலாறு, எனது அரசியல் வாழ்க்கை மக்கள் நலனுக்காகவே பயன்படும். இது வார்த்தையல்ல. மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து எழுந்துதித்த (மேசையைத் தட்டும் ஒலி) உணர்ச்சிப் பெருமுழக்கத்தின் வெளிப்பாடு, தனது எண்ணம், செயல் அத்தனையும் மக்கள் நலன் காக்கவே என்று மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கூறியது, வரலாற்று உண்மையாகும்.

அரசியல் வாழ்வில், உலகில் எந்தப் பெண்ணும் படாத துன்பத்தை தன்னந்தனியாக நின்று எதிர்த்து வெற்றி கண்டவர் புரட்சித் தலைவி அவர்கள். அதேபோல், உலகில் வேறு எந்தப் பெண்ணும் பெறாத பெருமையை, மாபெரும் வெற்றியைப் பெற்றவர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

"ஏழைகளையும், அல்லல்படுப்வர்களையும் நினைவில் வைத்து அவர்களுக்கு உரியன செய்தல் வேண்டும். இவ்வாறு செய்வது நல்ல அரசுக்கு சிறந்த இலக்கணம்" என்றார் சிந்தனையாளர் கன்பூசியஸ். அந்த இலக்கணத்திற்கு இலக்கியமாக இருப்பவர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்.

பிரிட்டிஷ் பேராசிரியரும், தொழிற்கட்சித் தலைவருமான உலகப் புகழ்பெற்ற 'ஹெரால்டு லாஸ்கி' அவர்களின் 'GRAMMER OF POLITICS' 'அரசியல் இலக்கணம்' என்பது போன்ற புத்தகங்களைப் படித்து, அறிவு ஜீனியாக விளங்குவதால்தான் மிகச் சிறந்த பார்லிமெண்டேரியனாக, ராஜதந்திரியாக, தலைசிறந்த அரசியல் ஞானியாக, இந்த நூற்றாண்டில் இணையில்லா அரசியல் மேதையாக விளங்குகிறார். முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சிங்கத்தை அச்சுறுத்தும் துணிச்சல் மட்டுமல்ல, குள்ளநரிகளைச் சமாளிக்கும் தந்திரமும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களிடம் உண்டு. *(மேசையைத் தட்டும் ஒலி)* இன்றைக்குத் திருச்சி மாநகரில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் புரட்சி யுகத்தின் எழுச்சி மாநாட்டினையும், 5004 திருமணங்களையும் உலகமே வியக்கும் வண்ணம் நடத்திக் காட்டியவர், முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்.

சிலருக்குப் புரட்சி என்ற வார்த்தையே பிடிக்கவில்லை. அந்த வார்த்தைகள் அவர்களின் காதுகளில் தேள் கொட்டுவது போல் இருக்கிறது. 1972-ஆம் ஆண்டில் புரட்சித் தலைவர், எம்.ஜி.ஆரில் துவங்கி இன்று தமிழகத்தின் பாதுகாவலர் முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் திருப்பெயரை நாம் சொல்லும்போதெல்லாம் அவர்கள் துடிதுடிக்கிறார்கள். அவர்களின் கண்களுக்கு இருட்டைத் தவிர வேறு எதுவும் தெரியவில்லை.

இன்றைக்குத் தமிழகத்தின் ஆட்சித் தேரைச் செலுத்திக்கொண்டு இருக்கும் நமது முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 1972-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் அரசியல் உலகில் அடியெடுத்து வைக்கவேண்டும் என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் விரும்பினார். அன்று கூட்டணி சேர்ந்து எதிர்த்தவர் இன்றுக் கூட நமது முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை எதிர்க்க வேறு கட்சிகளின் கூட்டணியைத் தேடி ஓடுகிறார், ஓடுகிறார். இப்போது அவர் ஓடுகிற ஓட்டம் அவரது வாழ்க்கையின் கடைசிக்கு ஓடுகிற ஓட்டம் என்பதை வருகிற தேர்தலில் மக்கள் நிருபிப்பார்கள்.

1972 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 5, 6 ஆகிய தேதிகளில் எந்த மதுரை நகர் மாவட்ட தி.மு.க. மாநாட்டில் முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் அரசியல் பிரவேசத்தை கருணாநிதி தடுத்தாரோ, அதே மதுரை மாநகரில்தான் 1986-ல் புரட்சித் தலைவர், எம்.ஜி.ஆர், அவர்கள் திராவிட இயக்கத்தின் இதயக் கனியாம், முதல்வர், டாக்டர், புரட்சித் தலைவி அவர்கள்தான், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், எதிர்கால அரசுக்கும் தலைமைப் பொறுப்பை வகிக்கும் ஆற்றல்மிக்க தலைவி என்பதை நாட்டுக்கும் நமக்கும் அடையாளம் காட்டிவிட்டுச் சென்றார்.

முற்பகல் 11-55

புரட்சியுகத்தின் எழுச்சி மாநாட்டை ஒரு அரசியல் கட்சியின் தலைவர் கேலியும் கிண்டலும் செய்திருக்கிறார். சோவியத் ரஷ்யாவில்

புரட்சி ஏற்பட்டபோது ஜார் மன்னனால் தாங்கிக் கொள்ள முடிந்ததா? ஆட்சியில் இருந்தபோது மாமன்னராகவே நினைத்துச் செயல்பட்டவரால் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடத்திய "புரட்சி யுகத்தின் எழுச்சி மாநாட்டை தாங்கிக் கொள்ள முடியாதுதான்".

இங்கிலாந்து நாடு ஜெர்மனியினால் தாக்கப்பட்டபோது, இங்கிலாந்தில் பிரதமராக இருந்த வின்செண்ட் சர்ச்சில் "எப்படிப்பட்ட தாக்குதலையும், இங்கிலாந்து தாங்கிக்கொள்ளும்" என்று சொன்னார். அதைத்தான் இந்த நாட்டிலுள்ள அரசியல்வாதிகளுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறோம். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் இயக்கத்தின் மீது எப்படிப்பட்ட தாக்குதல்களை நடத்தினாலும் அதைத் தாங்கிக் கொள்ளும் சக்தி படைத்தவர்கள் கழகத்தின் ஆற்றல் மறவர்கள். எத்தகைய தாக்குதலையும் தாங்கிக் கொள்ளும் தெம்பினை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தந்து வருகிறார்கள்.

"துறைதோறும் துறைதோறும் தொண்டு செய்வாய் துடித்தெழுந்தே" என்றார் பாவேந்தர் பாரதிதாசன். அந்த வகையில் கடந்த ஆண்டு அகிலமே போற்றும் வகையில் தஞ்சைத் தரணியில் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டை நடத்தியவர் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். தமிழுக்குப் பெருமை சேர்க்க, தமிழ் மொழி விஞ்ஞானத்திலும் ஆதிக்கம் செலுத்த வழிவகை செய்தவர் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்.

இயல்-இசை-நாடகம் என்று இருந்த தமிழுக்கு, நான்காவது தமிழாக அறிவியல் தமிழ் கொண்டு வந்து பெருமை சேர்த்தவர். அன்றும் தமிழ் - இன்றும் தமிழ் - என்றும் தமிழ் என்று புத்துயிர் தந்தவர் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்.

இன்றைக்குத் தமிழை மத்திய சர்க்கார் ஆட்சி மொழியாக அறிவிக்க வேண்டும் என்று தீர்மானம் போடுகிறார்கள். ஒரு காலத்தில் டெல்லியே எங்களைக் கேட்டுத்தான் நடக்கிறது என்று மார்தட்டிக் கொண்டார்களே, அப்போது டெல்லியில் சொல்லி தமிழை மத்திய ஆட்சி மொழியாக ஆக்கி இருக்கக் கூடாதா? ஏன் அப்போது செய்யவில்லை? மத்திய சர்க்காரில் மந்திரி பதவி - மாநிலத்தில் சுரண்டுவது இந்த இரண்டைத் தவிர வேறு எதையும் அவர்கள் சிந்திக்கவே இல்லை.

அப்பழுக்கற்ற வகையில் 25 ஆண்டுக்காலம் பணியாற்றியுள்ள அரசுப் பணியாளர்களுக்கு 500 ரூபாய் மதிப்புள்ள இந்திர விகாஸ்

பத்திரம் ஒன்றைப் பரிசாக வழங்கும் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அரசின் திட்டத்தை அரசு ஊழியர்கள் வரவேற்கிறார்கள், பாராட்டுகிறார்கள். வானத்து சந்திரனிலேயே குறை இருக்கிறது என்று இலக்கியங்களில் விவாதங்கள் எழுந்ததுண்டு. அப்பழுக்கற்ற வகையில் என்பதை மாற்றி பதவி உயர்வு பெறத் தகுதி அடைந்த, 25 ஆண்டுக்காலம் பணியாற்றியுள்ள அரசுப் பணியாளர்கள் என்று சற்று மாற்றியமைத்தால் அரசுப் பணியாளர்கள் வாழும் காலம் வரை டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் புகழ் வாழும்.

தமிழகம் இந்தியாவுக்கே வழிகாட்டி என்பது பல்வேறு சந்தர்ப்பங்களில் நிரூபிக்கப்பட்டிருந்தாலும் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சத்துணவுத் திட்டமும், முதியோர் ஓய்வூதியத் தொகையும், மகப்பேறுகாலப் பயன்களும், குடும்பநல உதவித் திட்டங்களும், வேறு பெயர்களில் மத்திய அரசு அமல்படுத்தி வருவது வரவேற்கத்தக்கது. ஆனால் இந்தத் திட்டங்களில் தமிழக அரசு மூலம் பயன்பெறுபவர்கள் எண்ணிக்கை அதிகம். மத்திய அரசு தரும் உதவிகள் குறைவு. இந்தத் திட்டங்களுக்கான ஒதுக்கீட்டு நிதியை மத்திய அரசு நேரடியாக வழங்குவது கூட்டாட்சி அமைப்பில் மத்திய மாநில நிதி உறவுகளில் இருக்க வேண்டிய நம்பிக்கைக்கு உகந்ததாக இல்லை என்று ஆளுநர் தெரிவித்திருக்கிறார். தமிழ்நாடு போன்ற மாநிலத்தில் மத்திய அரசின் இதுபோன்ற நேரடி தலையீடு நிர்வாக இடர்பாடுகளையும், குழப்பத்தையும் மட்டுமே ஏற்படுத்தும். இவை தவிர்க்க வேண்டியவை என்று கூறுகிறோம்.

ஆனால் இதிகாச ராமன் மீது மயங்கிவிட்ட சூர்ப்பனகை எதிரே வந்து கொண்டிருந்த சீதையைப் பார்த்து "அவள் ஒரு ராட்சசி, அவளிடம் என்ன அழகு இருக்கிறது, என்னைப்பார்; எல்லா அழகும் என்னிடம் குடிகொண்டுள்ளது" என்று சொன்ன கதை போல மாநிலங்களைவிட மத்திய அரசு, தான்தான் ஏதோ மக்கள் மீது அக்கறை கொண்டிருப்பது போல காட்டிக் கொள்கிறது.

இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத ஜவகர்லால் நேரு விளையாட்டு அரங்கம், செயற்கைப் புல்தரை ஹாக்கி விளையாட்டு அரங்கம் - டென்னிஸ் விளையாட்டு அரங்கம் - நவீன நீச்சல் வளாகம் - பலநோக்கு அகவிளையாட்டு அரங்கம் - சுடுகளம் ஆகியவை அண்மையில் நடந்த தெற்காசிய நாடுகள் கூட்டமைப்பு விளையாட்டுகளுக்காக ரூ. 58 கோடி செலவில் கட்டித் தந்த சாதனையாளர் சரித்திரத் தலைவி புரட்சித் தலைவி அவர்கள்.

அதுமட்டுமல்ல, 101 கோடி ரூபாய் செலவில் சகல வசதிகளும் கொண்ட விளையாட்டு கிராமம். முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தி வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் அளித்த உற்சாக மொழிகளின் விளைவாக, ஊக்க உணர்வூட்டியதன் பயனாகத்தான் தெற்காசிய நாடுகள் விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா 106 தங்கப் பதக்கங்களையும் (மேசையைத் தட்டும் ஒலி) 60 வெள்ளிப் பதக்கங்களையும், 19 வெண்கலப் பதக்கங்களையும் பெறமுடிந்தது என்று சொன்னால் அதை விளையாட்டுப் பேச்சாக யாரும் எடுத்துக் கொள்ள மாட்டார்கள் என்றே கருதுகிறேன். 'தங்கத் தலைவி நடத்திய யோகம், தங்கம் குவித்தது இந்திய தேசம்' ஆக தங்கநிகர் தலைவியின் ஆட்சியில் தமிழகம் இந்திய அளவில் பேசப்படுகிறது. உலக அளவில் போற்றப்படுகிறது.

நண்பகல் 12-00

புரட்சித் தலைவி அவர்கள் தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் டாக்டர் பட்டங்களைப் பெற்றவர் மட்டுமல்ல; ஆந்திர மாநிலத்தவரால் "மகிள சிரோன்மணி" என்றும் கேரள மாநிலத்தவரால் "ராஷ்டிரிய பீஷ்மாச்சாரியா" என்றும், இரும்புப் பெண்மணி என்றும், சிகாகோ நகர மக்களால் இந்த ஆண்டின் சிறந்த பெண்மணி என்றும் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி), வீர நடைபோடும் வீராங்கனை என்றும் பாராட்டப்படுகிறார்.

''தமிழுக்கு அமுதென்று பேர் - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்''

- எனப் பாடினார் பாவேந்தர்.

உயிர்நிகர் தமிழுக்கு உலகளாவிய மாநாடு நடத்தி உயர் புகழ் பெற்றவர்கள் பேரறிஞர் அண்ணாவும், பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆரும், அவர்கள் வழிவந்த எங்கள் முதல்வர் புரட்சித் தலைவியும்தான். பெண்ணடிமை ஒழியவும், பெண்ணுரிமை தழைக்கவும் பெரியார் வழியில் பேரறிஞர் அண்ணா பாடுபட்டார். பெண்ணினத்தைப் போற்றிப் புகழ்ந்து மதித்து வளர்த்து பெரும் புகழ் பெற்றவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.

பெண்குலமே பெற்ற பெருமையாக - பெண் குலத்திற்கே கிடைத்த பெரு வெற்றியாக - இன்று தமிழகத்தின் அரியணையை அலங்கரித்துக் கொண்டிருப்பவர் -

புறநானூற்றுப் புதுக்கவிதை - இந்த
பூமிக்கு வந்த புது வசந்தம்

டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தாய்ப்பறவை குஞ்சுகளை அரவணைத்துச் செல்வதைப் போல், தணல் வீசும் பாலை நிலத்து கங்காரு வயிற்றுப்பையில் வைத்து தனது குட்டியைப் பாதுகாத்து வளர்ப்பதுபோல், வரிப்புலி தான் ஈன்ற குட்டிகளை தன் நெருப்பு விழிகளையே அபாய விளக்காக உருட்டிக்காட்டி எதிரிகளிடமிருந்து அதைக் காத்து வருவது போல்,

தமிழகத்து மக்களை கண்ணின இமை போல, பாதுகாத்து வருகின்ற தமிழகத்தின் ஒளிவிளக்கு, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புனிதமான அரசின் சாதனை மலர்கள் இந்த ஆளுநரின் உரையில் மணம் வீடுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

தென்பொதிகை தவழ்ந்து வந்த தென்றல்
தீங்கனியின் சுவை குழைத்த தேன்
அகிலும் சந்தனமும் அரைத்தெடுத்த குழம்பு
இத்தனைக்கும் மேலாக இந்த ஆளுநர் உரை

அமைந்திருப்பதை வரவேற்று, பாராட்டி, அமர்கிறேன், நன்றி வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ச. அழகிரி

திரு. ச. அழகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களை நான் சொல்ல விழைகின்றேன். இந்த முறை ஆளுநர் உரை எதிர்பார்த்ததை விட சூமுகமாக, சிறப்பாக இருந்ததாக நாங்கள் கருதுகிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆளுநரை அன்பாக வரவேற்று, புன்முறுவலோடு வழி அனுப்பி வைத்தார்கள். அது பார்ப்பதற்கு நன்றாக இருந்தது. அந்தக் காட்சி ரம்மியமாகவும் இருந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆரம்பிக்கிறபோதே தனிப்பட்ட முறையில் வேண்டாம். நீங்கள் பாராட்டுகிறீர்கள், அது வேறு விஷயம். ஆளுநரை வரவேற்கிறபோது எப்போதும் நல்ல முறையில் வரவேற்றுத் தான் வழி அனுப்பி வைத்திருக்கிறோம். (சிரிப்பு) எப்போதும் வரவேற்று வழி அனுப்பித்தான் வைத்திருக்கிறோம். சரி பேசுங்கள். இதையும்

சேர்த்துக் கொள்ளுங்கள். எப்போதும் அவரை நல்ல முறையில் வரவேற்று நல்ல முறையில் தான் வழி அனுப்பி வைக்கிறோம்.

திரு. ச. அழகிரி: அடுத்ததாக, சமீபத்திலே நடைபெற்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டிலே, 356-வது அரசியல் சட்டப்பிரிவை ரத்து செய்ய வேண்டும் என்று ஒரு தீர்மானத்தை நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள். 5 ஆண்டுகளுக்கு முன்பு அதே சட்டப் பிரிவைப் பயன்படுத்தித்தான், திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தை கலைக்க வேண்டும் என்று இன்றைய முதலமைச்சர் அன்றைக்கு ஆணித்தரமாக வாதிட்டார்கள். இந்த 5 ஆண்டுக் காலத்தில் அரசியல் ரீதியாக என்ன பரிணாம வளர்ச்சி உங்களை இதைப் போன்ற ஒரு மாற்று கருத்தைக் கொண்டு வரச் செய்திருக்கிறது என்பதனை நாங்கள் தெரிந்துக் கொள்ள ஆசைப்படுகிறோம்.

அடுத்தபடியாக இந்த முறை ஆளுநர் உரையிலே வழக்கமாக வருகிற ஒன்று இல்லை. ஒவ்வொரு முறையும் ஜெயங்கொண்டம் அனல் மின் நிலையம் ஆடம்பரமாக வந்து போகும். ஆரவாரமாக வந்து போகும். முதலில் 5 ஆயிரம் கோடி ரூபாயில் 1500 மெகாவாட் என்று சொன்னார்கள். அதன்பிறகு 7500 கோடியில் 1500 மெகாவாட் என்று சொன்னார்கள். ஆனால் இந்த முறை அந்த ஜெயங்கொண்டம் அனல் மின் நிலையத் திட்டமே புகைபட்டுப் போயிருக்கிறது. இதற்கான காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தமாக திட்டங்களைச் சொல்லியிருக்கிறார்கள். எத்தனை மெகாவாட்டுக்கு நாம் ஒப்பந்தங்களைப் போட்டிருக்கிறோம் என்று. இந்தத் திட்டம் சிறப்பு அடிப்படையின் கீழே நம்முடைய 'டிட்கோ' மூலம், ஜெர்மனி உதவியோடு இந்த திட்டத்தை நிறைவேற்றிட வேண்டும் என்று ஜெனரேஷன் வித் மைனிங், அடிப்படையில் இந்தத் திட்டத்திற்கான பெனிபிட் காஸ்ட் ரேஷியோ, அந்த விலை விகிதம், யூனிட் விலை விகிதம் போன்றவை எல்லாம் ஒப்பிட்டுப்பார்க்கிறபோது, இதன் காஸ்ட் அதிகமாக இருக்கிறது என்பதற்காக நிபுணர் குழுவை அமைத்து, ஆய்வு செய்து அதற்குப் பின்னாலே முழு வடிவம் கிடைக்கலாம் என்பதற்காக பரிசீலனையில் இருக்கிறது. புகைப்பட்டுப் போனதாக சொன்னார்கள். அது தவறு. ஒரு திட்டம் பரிசீலனையில் இருப்பதை முழுமையாக கவர்னர் உரையிலே சொல்வதற்கு இயலாது.

பரிசீலனைகள் முடிந்து முழுமையான திட்ட வடிவமாக வந்த திட்டங்களைத்தான் சொல்லியிருக்கிறோம். எம்.ஓ.யு.-அதாவது மெமோரெண்டம் ஆப் அண்டர்ஸ்டேன்டிங் போடப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறோம். பரிசீலனையில் இருந்து, ஆய்விலே இருக்கிற திட்டங்களைப் பற்றி விரிவாகச் சொல்லவில்லை. கவர்னர் உரையிலே அனைத்துத் திட்டங்களையும் விரிவாகச் சொல்ல இயலாது. குறிப்பிட்டவைகளைப் பற்றி மட்டும் தான் சொல்ல முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12-05

***மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மெமோராண்டம் ஆப் அண்டர்ஸ்டேண்டிங் கையெழுத்திட்டபோது, அப்போது இந்த ஜெயங்கொண்டம் புராஜெக்ட்டினுடைய காஸ்ட் 7,500 கோடி ரூபாய் என்று கணக்கிடப்பட்டது. ஆனால், பின்னர் அதில் லிக்னைட் மைனிங் காம்போனெண்ட்-ம் இருப்பதால், அந்த மைனிங் இயந்திரங்களை எஸ்டாபிளிஷ் செய்து அதனைச் செய்வதற்கு மிகவும் அதிகப்படியாகச் செலவாகும் என்று கணக்கிடப்பட்டு, இப்போது அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதென்றால் 18 ஆயிரம் கோடி ரூபாய் செலவாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. டிட்கோவுடன் பாரின் கொலபரேட்டார்ஸ்-சீமென்ஸ் என்ற ஜெர்மனியைச் சேர்ந்த கம்பெனியின் தலைமையில் (கன்சார்ட்டியம் ஆப் கம்பெனிஸ்) பேசி அவர்கள் இப்போது இந்த 18 ஆயிரம் கோடி ரூபாய் செலவை ஏற்றுக்கொள்வதற்குச் சற்றுத் தயங்குகிறார்கள். ஆகவே, இப்போது மீண்டும் அதுகுறித்துப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எப்படியும் இந்தத் திட்டம் செயல்பட்டே தீரும். இது புதை குழிக்கு அனுப்பப்படவில்லை என்பதைத் தெளிவுபடுத்துகிறேன்.

திரு. ச. அழகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசாங்கத்தினுடைய பெரிய திட்டமாகவே அறிவிக்கப்பட்டது ஜெயங்கொண்டம் திட்டம்தான். 5 ஆண்டுக் காலமாக அது இன்னும் பரிசீலனையிலேயே இருக்கிறதென்றால், பரிசீலனை ஆரம்பிக்கப்பட்டபோதே, தொழில்நுட்ப ரீதியாகவோ அல்லது பிற விஷயங்களிலோ தமிழக அரசாங்கம் சரியான கவனத்தைச் செலுத்தவில்லை என்பதுதான் அதற்குக் காரணமேயொழிய, எந்தவொரு திட்டமும் 5 ஆண்டுக் காலமாக பரிசீலனையில் இருந்தால், அதன்பிறகு

எப்போது அதைச் செயல்படுத்துவது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே போல...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ம்ாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, முதலிலே இந்தத் திட்டம் 7,500 கோடி ரூபாய் என்று கணக்கிடப்பட்டது. பிறகு, தொழில்நுட்பங்களையெல்லாம் தீர ஆராய்ந்தபோது, 18 ஆயிரம் கோடியாக ஆனது. ஆகவே, அதனை சாத்தியமில்லை என்று அந்தக் குழு கருதியபோது, மைனிங் செய்ய என்று தனியாக ஒரு கம்பெனியை அவர்கள் தேடிக்கொண்டிருக்கிறார்கள். இப்போது கூட, சென்ற மாதம் கூட, ஒரு போர்ட் மீட்டிங் நடந்திருக்கிறது. ஆகவே, வருகிற இரண்டு மாதத்திற்குள்ளாக மைனிங் கம்பெனியை தனியாகத் தேர்ந்தெடுத்து, மைனிங்குக்கு மாத்திரம் பயன்படுத்தினால் அதனுடைய காஸ்ட் குறையும். அப்போது நமது தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அந்த யூனிட்டை அவர்கள் விற்கின்றபோது, தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய ரேட்டுக்கு ஏற்ப அவர்களால் விற்கமுடியும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அழகிரி குறிப்பிட்டதைப்போல இந்தத் திட்டம் புதைக்குழிக்குப் போகவில்லை. ஒரு பெரிய திட்டம் 18 ஆயிரம் கோடி, 20 ஆயிரம் கோடி என்கின்றபோது, திடீரென்று அவர்கள் தீர்மானித்துவிட்டால், பின்னால் அதை நடத்தமுடியாத ஒரு நிலைமை ஏற்பட்டால், இப்போதே அதைத் தீர ஆராய்ந்துவிட்டால், நிச்சயமாக அந்தத் திட்டம் வரும். இந்தத் திட்டத்தினுடைய உயிர்நாடியே இதுவரைக்கும் சுரங்கங்களைத் தோண்டி எடுக்கிற உரிமை மத்திய அரசாங்கத்திற்கு மட்டும்தான் இருந்து கொண்டிருந்தது. நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய தீவிர முயற்சியின் காரணமாகத்தான் அந்தச் சுரங்கத்தைத் தோண்டி எடுக்கிற உரிமையே மாநில அரசுக்கு மாற்றப்பட்டது என்பதை இப்போது உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. ச. அழகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையிலே புதிய வீராணம் திட்டத்தைக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் 21 கோடி ரூபாயில் அந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டு, அது தோல்வியைத் தழுவியது. அதன் பிறகு, 1993-ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 500

கோடி ரூபாயில் அந்தத் திட்டத்தில் கொண்டு வருவதாக இந்த அவையிலே அறிவித்தார்கள். தற்போது 1638 கோடி ரூபாயில் உலக வங்கியினுடைய நிதியுதவியோடு அந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டு 2.45 டி.எம்.சி அடி தண்ணீர் சென்னைக்குக் கொண்டுவரப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் உலக வங்கிக்குக் கொடுத்திருக்கிற அறிக்கை ஒரு தவறான அறிக்கை என்பதனை இந்த அவையிலே நான் மேற்கோள்களுடன் காட்ட விரும்புகிறேன். என்னவென்றால், தண்ணீர் எங்கிருந்து சென்னைக்கு வருவது என்பதைப் பற்றிய அந்த ஆதாரத்தைப் பார்க்கிறபோது, அந்த அறிக்கையிலே கூறியிருக்கிறீர்கள் மேட்டூரிலிருந்து தண்ணீர் வரவில்லை என்றால் அதற்குப் பதிலாக வீராணத்தினுடைய நீர்ப் பிடிப்பு பகுதிகளிலிருந்து மழைக்காலங்களில் கிடைக்கின்ற தண்ணீரைக் கொண்டு வந்து, அதன்மூலமாக 2.45 டி.எம்.சி. அடி தண்ணீரை நாங்கள் சென்னைக்கு கொண்டு வருவோம் என்று உலக வங்கிக்கு முன்பு ஒரு அறிக்கையைப் நாம் கொடுத்திருக்கிறோம். இப்படி ஒரு அறிக்கையைக் கொடுப்பதற்கு முன்பு தீர ஆராய்ந்து பார்க்கவேண்டும். வீராணம் ஏரியை வரலாற்று ரீதியாகப் பார்க்கிறபோது 1991–ஆம் ஆண்டு மட்டும்தான் 19 டி.எம்.சி. அடி தண்ணீர் அதிலே நிரம்பியிருக்கிறது. வேறு எந்தக் காலத்திலும் அந்த அளவுக்கு அதிலே தண்ணீர் கிடையாது. விவசாயத்திற்கு மட்டுமே 12 டி.எம்.சி அடி தண்ணீர் தேவை. ஆனால் 12 டி.எம்.சி. அடி தண்ணீர் கூட இதுவரை ஒருபொழுதும் நிரம்பியது கிடையாது. அப்படியிருக்கின்றபொழுது மேட்டூரிலிருந்தும் காவிரி நீரை நீங்கள் பெற முடியாது. வீராணத்திலே இருக்கின்ற மழை பிடிப்பு பகுதிகளிலிருந்து மழை நீரும் உங்களுக்குப் போதுமான அளவுக்குக் கிடைக்காது. அப்படி இருக்கின்றபொழுது 1638 கோடி ரூபாயை நீங்கள் செலவு செய்து 2.45 டி.எம்.சி அடி தண்ணீரைச் சென்னைக்குக் கொண்டுவர முடியுமா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஏனென்றால் உலக வங்கி கொடுக்கக்கூடிய 1638 கோடி ரூபாய் என்பது மானியம் அல்ல. கடன். அந்தக் கடனை மக்களுடைய வரிப் பணத்திலிருந்து இந்த அரசாங்கம் திருப்பிச் செலுத்தியாக வேண்டும். எனவே நீங்கள் திட்டத்தை....

பிற்பகல் 12–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவைக்கு ஒரு தவறான கருத்தை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள்

பேசுகின்றபொழுது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 21 கோடியாக இருந்த திட்டம் இடையிலே கைவிடப்பட்டது என்று சொன்னார்கள். அதற்குண்டான காரணத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே நன்றாக அறிவார்கள். திராவிட முன்னேற்றக் கழகத் தலைமையிலே, ஆட்சியிலே, எந்த அளவுக்கு அவர்கள் போட்ட திட்டத்திலே, குறைபாடுகள் இருந்தன. எந்த அளவுக்கு அதிலே ஊழல் பெருகியிருந்தது, எந்தக் காரணத்தினாலே அந்தத் திட்டம் நிறைவேறவில்லை என்பதையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் நன்றாக அறிவார்கள். இன்றைக்குப் புதிய வீராணம் திட்டத்தைப் பொறுத்தவரை சென்னை நகருக்கு மட்டும் குடிநீர் அல்ல. வழியோரக் கிராமங்களுக்கும், வழியோரத்திலே இருக்கின்ற பேரூர்களுக்கும், சிற்றூர்களுக்கும் சேர்த்துதான் இந்தத் திட்டம் போடப்பட்டிருக்கிறது. இன்றைய நிலையிலே ஒரு தவறான அறிக்கையை உலக வங்கிக்குக் கொடுத்திருக்கிறோம் என்று சொன்னார்கள், அது உண்மையல்ல, காரணம் உலக வங்கி இதைப் பொறுத்தவரை அவர்களாகவே ஒரு கன்சல்டன்சியை நியமித்து இந்தத் திட்டத்தை முறைப்படுத்துவதற்கு எவ்வளவு மதிப்பீடு தேவைப்படுகிறது, அதைப்போல எந்த அளவுக்கு இதை நாம் செயல்படுத்த வேண்டும் என்றெல்லாம் கணக்கிட்டு, அவர்களுடைய அப்ரைஸலுக்குப் பிறகுதான், அவர்களாகவே நிர்ணயித்தத் தொகை இந்தத் தொகை. 1638 கோடி ரூபாய் என்று தமிழக அரசு, மாநில அரசு நிர்ணயித்தது அல்ல. முதலிலே அதை உறுப்பினர் அவர்கள் நன்றாகப் புரிந்துகொள்ளவேண்டும்.

இரண்டாவதாக, இந்த நீர் அளவைப் பொறுத்தவரை கடந்த 40 ஆண்டுக்காலமாக எந்த அளவுக்கு வீராணம் ஏரியிலே நீர் வரத்து இருந்தது. எந்த அளவுக்கு ஒவ்வொரு காலகட்டத்திலும் நீர் அளவு இருந்து வந்தது; லீன் ஸீஸனிலே எந்த அளவுக்கு இருந்தது, லீன் ஸீஸனில் குறைந்த அளவு இருந்தால்கூட சென்னைக்குக் குடிநீர் கொண்டு வருகிற அளவிற்கு அங்கே நீர் வரத்து இருக்கிறது என்பதை கருத்தில் எடுத்துத்தான், ஆய்விலே எடுத்துத்தான் எக்ஸ்பர்ட் ஒப்பினீயன் பெற்றுத்தான் இந்த அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறது. அதையும் உலக வங்கி ஏற்றுக்கொண்டிருக்கிறது. உலக வங்கி என்பது பல நிபுணர்களைக் கொண்டிருக்கின்ற வங்கி, ஆகவே இதைத் தவறாகச் சொல்ல வேண்டாம். நிச்சயமாக அந்தத் திட்டம் ஒரு நல்ல திட்டம். சென்னை மாநகர மக்களுக்குப் பயன்படுகிற திட்டம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீராணம் ஏரியைப் பொறுத்தமட்டிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சில கருத்துக்களைச் சொன்னார்கள். அதிலே சிலவற்றை நான் தெளிவுபடுத்துவது சரியாக இருக்கும் என்று கருதுகிறேன். பொதுவாக கேச்மெண்ட் ஏரியா என்று சொல்லப்படுகின்ற நீர் வரத்து வருகின்ற பகுதி மிக அதிகமாக இருக்கின்ற ஒரே ஏரி நம்முடைய வீராணம் ஏரி. தமிழ்நாட்டிலேயே மிகப் பெரிய ஏரியான வீராணம் ஏரிக்கு கேச்மெண்ட் ஏரியா அதிகமாக இருக்கிறது. சாதாரணமாக மழை பெய்தால்கூட அந்த வீராணம் ஏரி நிரம்புகின்ற வாய்ப்பு ஏற்படுகின்றது. அது தவிர நாம் காவேரியிலிருந்து தண்ணீரைக் கொண்டுவருவதற்கு--வடவாறு சேனல் மூலம் கொண்டுவருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்தக் கால்வாயைப் பராமரிப்பதற்காக நிதி ஒதுக்கியிருக்கிறோம். வீராணம் ஏரியின் கரையை உயர்த்துவதற்காக அந்தத் திட்டத்திலே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான ஒப்பந்தங்கள் கோரப்பட்டுள்ளன. அங்கே இருக்கின்ற கால்வாய்களைச் சீரமைப்பது, நீர் வரத்து பகுதிகளில் இருக்கின்ற ஆக்கிரமிப்புகளை அகற்றுவது, காட்டாமணக்கு போன்ற செடிகளை எல்லாம் அகற்றி அந்த ஏரியை மிகப் பெரிய ஏரியாக மாற்றி அதனுடைய கொள்ளளவை, கெப்பாசிட்டியை இன்கிரீஸ் செய்வது போன்ற நடவடிக்கைகள் எல்லாம் இந்தத் திட்டத்திலே சேர்க்கப்பட்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூடத்தான் அன்றைக்குப் பாராட்டினார்கள். நானும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் செல்கின்றபோது அவர்களும் அந்தப் பகுதிக்கு வந்து, வீராணம் ஏரியை பலப்படுத்துகின்ற இந்தத் திட்டம், மிகவும் நல்ல திட்டம், இதனால் அந்த பாசனப் பகுதி பாதிக்கப்படுமா என்றெல்லாம் கேட்டார்கள். அவர்களுக்கு நாங்கள் நேரிலே விவரம் சொன்னோம். அங்கேயிருந்த விவசாயிகள், தி.மு.க வினுடைய முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அத்தனை பேரும் வந்து கேட்டார்கள். அவைகளை எல்லாம் நாங்கள் தெளிவுபடுத்தியதற்குப் பின்னாலேதான், அதிகாரிகள் வந்து முறையாகப் பார்வையிட்டு, உலக வங்கி அதிகாரிகள் கணிப்பு செய்து தீர்மானம் செய்து, அவர்கள் உரிய டெக்னிக்கல் எக்ஸ்பர்ட்ஸை வைத்து அதற்கான அறிக்கைகள் எல்லாம் தயாரித்து இன்றைக்கு உலக வங்கி நிதி உதவிக்கு வந்திருக்கிறது. ஆக, இது போன்ற நடைமுறைகளை எல்லாம் பின்பற்றி, முறையாக விதிமுறைகளைப் பின்பற்றித்தான் அந்தத் திட்டம்

1996 பிப்ரவரி 15] [திரு. எஸ். கண்ணப்பன்]

கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆகவே அந்தத் திட்டத்திலே தொய்வு கிடையாது. முறைகேடு கிடையாது. மக்களுக்குப் பயன்படுகின்ற திட்டம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

திரு. ச. அழகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர்கள் அந்த ஏரியைப் பார்க்க வருகிறபோது அந்த ஏரி வறண்டு கிடந்தது. நான் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களிடம் கூடக் காட்டினேன். மக்கள் எல்லாம் அதிலே விளையாடிக்கொண்டு இருந்தார்கள். குறுக்கு வழியாகப் போய் கொண்டிருந்தார்கள். இதிலிருந்து தண்ணீரை எப்படி சென்னைக்கு எடுத்துச் செல்லமுடியும் என்று நான் அவரிடம் கேட்டேன். அவர்கள் என்னைப் பார்த்து சிரித்தார்கள். அதுதான் அன்றைக்கு நடந்தது.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறு. வறட்சிக் காலங்களிலே தண்ணீரைப் பொறுத்தவரையில் எப்படி என்று அவர்கள் கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் சிரிப்பதற்கு நேரம் இருக்கிறது. பிரச்சினைகள் நேரத்திலே சிரிப்பவர்கள் அல்ல நாங்கள். மக்கள் பிரச்சினையிலே நீங்கள் வேண்டுமானால் அதை விளையாட்டாக, நகைப்பாக எடுத்துக்கொள்ளலாமே தவிர இந்த அமைச்சரவையைப் பொறுத்தவரையில் அது ஒரு முக்கியமான திட்டம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எப்படியும் சென்னைக்குத் தண்ணீர் கொண்டுவர வேண்டும் என்று இருக்கிறார்கள். கிருஷ்ணா நதிநீர்த் திட்டம் எதிர்க்காலத்தில் வந்தாலும்கூட, தண்ணீர் பற்றாக்குறை அதிகமாக இருக்கும், வளர்ந்து வருகின்ற சென்னை நகருக்கு மாற்றுத் திட்டம் தேவை என்ற அடிப்படையில் தான் இந்த இரண்டு திட்டங்களையும் நிறைவேற்ற வேண்டும் என்று கருதி, இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அன்றைக்குக் கூட பல்வேறு குற்றச்சாட்டுகள் வந்தநேரத்திலேகூட, வீராணம் என்று சொன்னாலே ஊழல் என்ற சொல்லுகிற நிலை இருக்கிறது என்று சொல்லுவதை எல்லாம் முறியடித்து இந்தத் திட்டம் மக்களுக்கு வேண்டும் என்பதற்காக ஆய்வு செய்து நடைமுறைப்படுத்த இருக்கிறார்கள். ஒரே ஒரு திட்டம் அண்டை மாநிலத்திலிருந்து வருகின்ற திட்டம் தெலுங்கு கங்கை திட்டம். ஆனால் நம்முடைய மாநிலத்திலிருந்தே நீர் ஆதாரம் கொண்டு வருகின்ற திட்டம் சென்னை நகருக்கு வேண்டும். எதிர்காலத்தில் பிரச்சினைகள் ஏற்பட்டால் நம்முடைய திட்டம் என்று

ஒன்று இருந்தால்தான் சென்னை நகருக்கு நிலையாகக் குடிநீர் வழங்கமுடியும் என்ற அடிப்படையில் தான் இந்தத் திட்டத்தைப் போட்டார்கள். அதை வந்து பார்வையிடுகிறபோது அந்த ஏரிப் பிரச்சினைகளைப் பற்றி நீங்கள் சொன்னீர்கள். அங்கிருந்து தண்ணீர் எடுத்துப் போனால் அந்த வயல்களுக்கு எல்லாம் பாசனம் நீங்கள் கொடுப்பீர்களா என்று கேட்டீர்கள். நான் சொன்னேன், இந்த ஏரியை ஆழப்படுத்தி, கரையை உயர்த்தி கால்வாய்களை எல்லாம் சீர்படுத்தி கொள்ளளவை அதிகப்படுத்துகின்றபோது பாசனத்திற்கும் தண்ணீர் கொடுப்போம், சென்னைக்கும் தண்ணீர் கொண்டு செல்வோம்; இதனால் அவர்களுக்குப் பாதிப்பு இருக்காது என்று சொன்னபோது நீங்கள் எல்லாம் மனமாற ஏற்றுக்கொண்டீர்கள். அன்றைக்கு வறட்சி நேரத்தில் அந்த ஏரியில் தண்ணீர் இல்லாமல் இருந்து இருக்கலாம். ஓரளவுக்கு இருந்தது. அந்த ஆக்கிரமிப்புகளை எல்லாம் அகற்றி நாம் தண்ணீர் கொண்டு வந்து தேக்கி வைக்கின்ற நேரத்தில் இந்தப் பிரச்சினைகள் எல்லாம் வராது. இந்தத் திட்டம் ஒரு அருமையான திட்டம். அதைக் கொச்சைப்படுத்த வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ச. அழகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய வீராணம் திட்டத்தைப் பொறுத்தவரையில் என்னுடைய ஒரே கேள்வி அதற்கான நீர் ஆதாரம் ஏது என்பதுதான். உலக வங்கிக்கு நீங்கள் கொடுத்திருக்கிற அறிக்கை என்னுடைய கையில் இருக்கிறது. அதிலே நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். மேட்டூரிலிருந்து நீங்கள் தண்ணீர் கொண்டுவரப்போவது இல்லை. காரணம் அது காவிரி நீர் ஒப்பந்தத்திற்கு எதிரானதாகப் போய்விடும். முதலமைச்சர் அவர்கள் பெரிய முயற்சி செய்து, பிரதமர் அவர்கள் அதிலே முயற்சி செய்து 6 டி.எம்.சி. தண்ணீர் கொண்டு வருவதற்கே போதுமான முயற்சிகள் நாம் எவ்வளவு மேற்கொண்டு அது ஒரு பகீரத முயற்சியாக இருக்கிறது. அப்படி இருக்கிறபோது நீங்கள் மேட்டூரிலிருந்து வீராணத்திற்குத் தண்ணீர் சொண்டு வந்து, அதை சென்னைக்குக் கொண்டு வர முடியாது. அது காவிரி நீர் ஒப்பந்தத்திற்கு விரோதமாகப் போய்விடும். எனவே, தான் நீங்கள் அதிலே நீர் ஆதாரம் என்றால், நாங்கள் மழை நீரைப் பிடித்து அதைக் கொண்டு வருவோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதுவே உங்களுடைய அறிக்கையில் இருக்கிறது. பொதுப்பணித் துறையினுடைய அறிக்கையிலே இருக்கிறது. அந்த NEERI ரிப்போர்ட்டில் இருக்கிறது. அதிலே அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால் வரலாற்று ரீதியாகப் பார்க்கிறபோது 1991 ஆம் ஆண்டு மட்டும் தான் 19 டி.எம்.சி. தண்ணீர் வீராணத்தில் இருந்து இருக்கிறது. வேறு எந்தக் காலகட்டத்திலும் இல்லை என்பது உங்களுடைய அறிக்கையிலே தான்

இருக்கிறது. எனவே, நீர் ஆதாரமே இல்லாத ஒரு இடத்திலிருந்து நீரை சென்னைக்கு நீங்கள் எப்படிக் கொண்டு வர முடியும் என்பது தான் என்னுடைய கேள்வியே ஒழிய வேறு எதுவும் இல்லை என்பதை நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அது நடைமுறைப்படுத்த முடியாத ஒரு திட்டம் என்பதை உங்களுக்கு நான் நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்*

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெளிவாகக் குறிப்பிட்டேன். 40 ஆண்டுக் காலம் எந்த அளவுக்கு ஒவ்வொரு ஆண்டும் நீர் அளவு அந்த ஏரியிலே இருந்தது என்பதைக் கணக்கிட்டுத்தான், லீன் சீசனிலேகூட மழை இல்லாத காலத்திலேகூட எந்த அளவுக்கு அதிலே நீர் அளவு இருந்தது என்பதைக் கணக்கிட்டுத்தான், நிச்சயமாக 2.4 டி.எம்.சி. தண்ணீரை எந்தக் காலக் கட்டத்திலும் எடுக்க முடியும் என்ற சூழ்நிலையை ஆராய்ந்து பார்த்துத் தான் அதை எடுத்து இருக்கிறோம். ஆகவே, ஒரு நல்ல திட்டத்தைக் கொச்சைப்படுத்த வேண்டாம். அன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே இருந்தபோதுகூட அங்கே நீர் இருந்தது. வறட்சியான காலத்திலேகூட அன்றைக்கு அங்கே நீர் இருந்தது. நாங்கள் அத்தனை பேரும் பார்த்தோம். எந்த இடத்திலே பம்பிங் செய்யப் போகிறோமோ, அந்த பர்ட்டிகுலர் பிளேசில், அந்த இடத்திலே எந்த அளவுக்கு நீர் இருக்கிறது என்பதுதான் முக்கியம். 40 ஆண்டுக்காலம் அறிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு மழை பெய்து இருக்கிறது. அந்த அளவுக்கு அந்த ஏரியினுடைய அளவு இருந்திருக்கிறது என்பதை நாங்கள் மட்டும் பார்க்கவில்லை, உலக வங்கியும் பார்த்திருக்கிறது, அதனுடைய எக்ஸ்பர்ட்டுகளும் அதனைப் பார்த்திருக்கிறார்கள். ஆகவே, நீர் ஆதாரமே இல்லை என்று சொல்லுவது தவறான வாதம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

பிற்பகல் 12-20

திரு. ச. அழகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்ததாக ஆளுநர் உரையிலே ஒரு சிறந்த நிர்வாக அமைப்பை தமிழக முதலமைச்சர் கொடுத்து இருப்பதாக ஆளுநர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அப்படி கொடுத்திருப்பார்களேயானால் அதிலே மகிழ்ச்சி அடைகிறவர்களிலே முதன்மையானவர்களாக நாங்கள் தான்

இருப்போம். (சிரிப்பு). ஆனால் உண்மை நிலை அப்படி இல்லை என்பதனை காம்ப்ட்ரோலர் அண்ட் ஆடிட்டர் ஜெனரனுடைய ரிப்போர்ட் ஒன்று இங்கே கூறுகிறது. அரசாங்கத்தினுடைய சொத்து, அதாவது அசெட்ஸ் 17 சதவீதம்தான் கடந்த ஐந்தாண்டுகளிலே அதிகரித்திருக்கிறது. ஆனால் அரசாங்கத்தினுடைய கடன், லயபிலிட்டீஸ் 89 சதவீதம் அதிகரித்திருக்கிறது. தயவு செய்து நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். ஒரு வங்கியிலே வீடு கட்டுகிறேன் என்று சொல்லிக் கடன் வாங்கினால் அந்த வீட்டை வாங்கியிருக்க வேண்டும். ஏனென்றால் கடன் வாங்கியதற்கு ஒரு அசெட் - ஒரு சொத்து இருக்க வேணடும். எனவே, நாம் கடனை அதிகமாக வாங்கியிருக்கிறோமே ஒழிய, கடன் வாங்கிய தொகையை நாம் எப்படிச் செலவு செய்திருக்கிறோம் என்று பார்க்கிறபொழுது அது சொத்தாக இல்லை; கடனாகவேதான் இருக்கிறது அசெட் 17 சதவீதம் அதிகரித்திருக்கிறது; ஆனால் லயபிலிட்டீஸ் கடன் 89 சதவீதம் அதிகரித்திருக்கிறது. ஆடிட்டர் ஜெனரல் ரிப்போர்ட் அதைக் கூறுகிறது. காரணம் என்ன? அரசாங்கம் ஊதாரித்தனமாகச் செலவு செய்திருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆடிட்டர் ஜெனரல் ரிப்போர்ட்டெல்லாம் மத்திய அரசுக்கும் வைக்கிறார்கள்; வருடத்திற்கு 40,000 கோடி ரூபாய்க்கும் மேலே வட்டி கட்டிக்கொண்டிருக்கின்ற மத்திய அரசையும் பார்க்கிறோம். ஆகவே, சொத்துக்களைப் பொறுத்தமட்டிலே ஒரு குறிப்பிட்ட திட்டத்திற்கு நாம் கடன் வாங்குகின்றபொழுது அல்லது ஒரு புராஜக்ட் என்று சொல்லப்படுகின்ற அளவிற்கு நாம் கடன்களை வாங்குகின்றபொழுது அந்தத் திட்டங்களுக்குச் சொத்துக்கள் வரும். சில மக்கள் நலத் திட்டங்களுக்கு, சமூக நலத் திட்டங்களுக்காக உலக வங்கி உதவி செய்கின்றபொழுது, அதாவது குழந்தைகளுக்கு உதவுகின்ற திட்டம், இதுபோன்ற கருவுற்ற தாய்மார்களுக்கெல்லாம் சிடா போன்றவைகள் எல்லாம் உதவி செய்கின்றார்களோ, அது போன்ற திட்டங்களையெல்லாம் நாம் கடன் உதவியாகப் பெறுகின்றோம். அதெல்லாம் மக்கள் நலத் திட்டங்கள். அதற்கு நிலையான சொத்துக்களை உருவாக்க முடியாது. இப்பொழுது டபிள்யூ,ஆர்.சி.பி., என்று ஒரு திட்டம் போடுகிறோம். வாட்டர் ரிசோர்சஸ் கன்சாலிடேஷன் ப்ராஜக்ட், அதில் 1200 கோடி நாம் கடன் வாங்குகிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த 1200 கோடிக்கும் நாம் சொத்தை உருவாக்க முடியும். கால்வாய்களைக் கட்ட முடியும்; அணைக்கட்டுக்களைக் கட்ட முடியும். நீர் ஆதாரங்களைப் பெருக்குவதற்கான நிலையான திட்டங்களைத் தர முடியும். அதைப்போல

ரோடு செக்டார் ப்ராஜக்ட் என்று வைத்துக் கொள்கிறோம். 1100 கோடி வாங்குகிறோம். அதற்கு 300 பாலங்களைக் கட்ட வேண்டுமென்று திட்டத்திலே சேர்க்கிறோம். பெரிய சாலைகளைப் போடுகிறோம் என்றால் அதை நிலையான சொத்தாக உருவாக்க முடியும். ஆக, இரண்டு விதங்களிலே ஒரு அரசாங்கம் செயல்படுகிறது. நிலையான சொத்துக்களை உருவாக்குவதற்காகக் கடன்களை நாம் பெறுகிறோம். மக்கள் நலத் திட்டங்கள் - சோஷியல் வெல்பேர் ஸ்கீம்ஸ் என்ற அடிப்படையில் ஏழை எளியவர்களுக்கு உதவி செய்கின்ற திட்டங்களுக்காக நாம் கடன் உதவிகளைப் பெறுகின்றபொழுது அதற்காக நாம் நிலையான சொத்துக்களை உருவாக்க முடியாது; மக்கள் நலனைத்தான் பார்க்க முடியும்.

ஆகவே, மத்திய அரசாக இருந்தாலும், மாநில அரசாக இருந்தாலும் வெறும் நிலையான சொத்துக்களை மாத்திரம் வைத்துக்கொண்டு அரசாங்கம் நடக்க முடியாது. அதைத்தான் இன்றைக்குப் பல சலுகைகளை ரத்து செய்த மத்திய அரசுகூட மறுபடியும் மக்கள் நலத் திட்டங்களுக்குச் சலுகைகளைத் தர வேண்டும்; மானியங்களைத் தர வேண்டும் என்கின்ற நிர்ப்பந்தத்திற்கு மாண்புமிகு பிரதமர் அவர்கள்கூட ஆளாக்கப்பட்டு இன்றைக்குத் திட்டங்களை அறிவித்துக் கொண்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

திரு. ச. அழகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தணிக்கை அறிக்கை சமூக நலத் துறை குறித்து மட்டும் சொல்லவில்லை. நீங்கள் இலவசமாகக் கொடுப்பது என்பது மட்டும் இதிலே கணக்கிலே வரவில்லை. அசெட்ஸ் அதாவது சொத்துக்களை உருவாக்குகிறோம் என்று சொல்லி நாம் வாங்கி இருக்கிற திட்டங்கள் செம்மையாக நிறைவேற்றப்படாத காரணத்தினால்தான் சொத்துக்களுடைய சதவீதம் குறைவாகவும், கடன்களுடைய சதவீதம் அதிகமாகவும் இருக்கிறது என்று தணிக்கை அதிகாரி அவர்கள் இங்கே கூறியிருக்கிறார்கள். ஆனால் அமைச்சரவர்கள் பொதுப்படையாகப் பதில் சொல்கிறார்கள் என்பதனை....

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட அந்தத் தணிக்கை அறிக்கையிலே நாம் பெற்ற கடன்களுக்கு மாறுபாடாகச் செலவழிக்கிறோம் என்பதே எங்கும் கிடையாது. மொத்தமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதை முழுமையாக நான் பார்த்த பிறகு வேண்டுமானால் நாளைக்கு அதற்கு முழுமையான பதிலைத் தருகிறேன். திடீரென்று அவர்

பேசுகின்ற பொழுது, சரியான புள்ளி விவரங்களை நாம் அவைக்குத் தெரிவிக்க வேண்டும். பொதுவான கருத்து என்னவென்று சொன்னால், இப்பொழுது கல்வித் துறைக்குக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு உலக வங்கியோ அல்லது மற்ற நிறுவனமோ உதவி செய்கிறார்கள். 100 கோடி கொடுக்கிறார்கள் என்று வைத்துக் கொண்டால், அதிலே கட்டிடம்தான் கட்ட முடியும். அதை வேறு இனங்களுக்குப் பயன்படுத்த முடியாது. நிபந்தனைகள் எல்லாம் வைத்துத்தான் கடன்கள் வழங்குகிறார்கள். நாம் எங்கே கடன் வாங்கினாலும்கூட, உடனடியாக அவர்கள் கொடுத்துவிடுவது கிடையாது. எல்லாக் கண்டிஷன்களைப் போட்டு, அந்தக் கண்டிஷன்களை நாம் முறையாகப் ஃபாலோ பண்ணினால்தான் அந்தக் கடன்களைத் தருவார்கள். ஆகவே, சொத்துக்காக வாங்கப்படுகிற, நிலையான திட்டங்களுக்காக வாங்கப்படுகின்ற கடன்களுக்கு மீறி நாம் வேறு வழியிலே செலவு செய்ய முடியாது. அப்படிச் செலவு செய்வதையும் நம்முடைய கடன் தருகின்ற நிறுவனங்கள் ஏற்றுக் கொள்ளாது என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. அழகிரி அவர்கள் எந்த ஆண்டினுடைய ஆடிட்டர் அன்ட் கம்ப்ட்ரோலர் ஜெனரலுடைய ரிப்போர்ட்டை ரெஃபர் செய்து பேசுகிறார்கள் என்பதைக் குறிப்பிட வேண்டும். அதோடு, குறிப்பிட்ட இனங்களைப் பற்றி அவர் குறிப்பிட்டு அதில் என்ன தவறுகள் நடைபெற்றிருக்கின்றன என்று அவர் கூறினால் என்னுடைய பதிலுரையில் அதற்கான புள்ளி விவரங்களைப் பெற்று சரியான பதிலைத் தருகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 12–25

திரு. ச. அழகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிடுகிற தணிக்கை ரிப்போர்ட் for the year ended 31st March 1994, No.2 civil.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதிலே அந்தப் பத்தியை சரியாக, முழுமையாக நீங்கள் படியுங்கள்.

திரு. ச. அழகிரி: முழுமையாகப் படித்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தப் பத்தியை நீங்கள் படியுங்கள். லோன் எதற்காக வாங்கப்பட்டது? மொத்தமாக வாங்கிய லோனைப் பற்றி சொல்கிறீர்களா அல்லது for creation of assets என்பதைப் பற்றிச் சொல்கிறீர்களா?

திரு. ச. அழகிரி: நான் படிக்கிறேன் "The Assets of the State Government increased by 17% from Rs.6012 crores to Rs.7020 crores during 1989-90 to 1993-94. While the liabilities grow by 89% from Rs.6166 crores to Rs. 11,680 crores." அதாவது 6166 கோடி ரூபாயாக இருந்த கடன் சுமை 11,680 கோடி ரூபாயாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது 89-ஆம் ஆண்டிலிருந்து 94-ஆம் ஆண்டிற்குள்ளாக. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதியமைச்சர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அழகிரி சொல்கின்றபோது தணிக்கை அறிக்கையை எடுத்து குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார். அது Statement of fact-- ஏ தவிர, அதாவது எந்தவகையிலே அசெட்ஸ் ஏற்பட்டிருக்கிறது, எந்தவகையிலே லையபிலிட்டீஸ் ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தவிர வேறொன்றுமில்லை. அதில் ஊதாரித்தனமாகச் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்ற குறிப்புகள் எதுவும் கிடையாது. அப்படிப்பார்த்தால் மத்திய அரசாங்கம் வாங்கி இருக்கின்ற கடன்களையெல்லாம் எடுத்துப் பார்த்தால் 53 ஆயிரம் கோடி வட்டி மட்டும் அவர்கள் கட்டுகிறார்கள். வெளிநாட்டுக் கடன் மட்டும் 2 இலட்சத்து 50 ஆயிரம் கோடிக்கு மேல் இருக்கும். இந்தக் கணக்கோடு ஒப்பிட்டுப் பார்த்தால் மத்திய அரசாங்கமும் சரி, மாநில அரசாங்கமும் சரி, அசெட்டைவிட லையபிலிட்டீஸ் கொஞ்சம் அதிகமாகத்தான் இருக்கும். ஆகவே, அந்தவகையிலே பார்க்கின்றபோது statement of fact -ஐச் சொல்லியிருக்கிறார்களே தவிர இந்தச் செலவு ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் ஊதாரிச் செலவு என்று தணிக்கை அறிக்கையிலே எங்கும் குறிப்பிடப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ச. அழகிரி.

திரு. ச. அழகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தனியார் நிறுவனத்திலே இதைப் போல தணிக்கை செய்யப்பட்டிருந்தால் அந்தக் கம்பெனி திவாலாக ஆகியிருக்கும். ஆனால் இது அரசாங்கம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு அரசாங்கத்தை ஒரு தனியார் நிறுவனம் போல நடத்த முடியாது. இங்கே எல்லாவற்றிற்கும் லாப நஷ்டக் கணக்கு பார்த்துக் கொண்டிருக்க முடியாது. *(மேசையைத் தட்டும் ஒலி)* நாட்டில் ஏழ்மை நிறைய இருப்பதால், மக்களுக்காக சில நலத் திட்டங்களை நாம் செய்ய வேண்டியிருக்கிறது, செயல்படுத்த வேண்டியிருக்கிறது. இதைத்தான் Social safety net என்று குறிப்பிடுகிறோம். ஏழை எளிய மக்கள் பாதுக்காக்கப்பட வேண்டும். அதற்காக அவர்களுக்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். அரிசியை நியாய விலையில் மக்களுக்குக் கொடுக்க வேண்டும், குறைந்த விலையில் கொடுக்க வேண்டும் என்பதற்காக பல கோடிக் கணக்கில் மானியச் சுமையை சுமந்து கொண்டிருக்கிறோம். நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற ஏழை எளிய மக்கள் ஆண்டுக்கொருமுறையாவது பொங்கல் திருநாள் அன்று புத்தாடை உடுத்த வேண்டும் என்பதற்காக அவர்களுக்கு இலவசமாக வேட்டி சேலைகளை வழங்குகிறோம். அதற்கு மட்டும் இந்த ஆண்டு 72 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. அதைப்போலவே தாழ்த்தப்பட்ட மக்கள், ஆதிதிராவிட பெரு மக்கள், அவர்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப வேண்டும், குறிப்பாக பெண் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப வேண்டும் என்பதற்காக, அதற்கு ஊக்கத் தொகை வழங்குகின்ற திட்டத்தைச் செயல்படுத்துகிறோம். விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இலவசமாக மின்சாரத்தை வழங்கிக் கொண்டிருக்கிறோம். அதற்கு மட்டும் ஆண்டுக்கு ஆயிரம் கோடி ரூபாய் செலவாகிறது. இப்படி வரிசைப்படுத்திக் கொண்டே போனால், இந்தப் பட்டியலில் இடம் பெறுகின்ற இனங்கள் எண்ணில் அடங்கா. அத்தனை நல்ல திட்டங்களை, நலத் திட்டங்களை ஏழை எளிய மக்களுக்காகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். எனவே, ஒரு தனியார் நிறுவனத்தோடு அரசாங்கத்தை, அதுவும் ஒரு மக்கள் நல ஆட்சியை, மக்கள் நல அரசாங்கத்தை ஒப்பிடுவது எந்தவகையிலும் பொருத்தமுடையதல்ல. *(மேசையைத் தட்டும் ஒலி)* ஒரு தனியார் நிறுவனம் எந்தக் குறிக்கோளுடன் இயங்குகிறது ? லாபத்தை ஈட்ட வேண்டுமென்ற ஒரே குறிக்கோளுடன்தான். அந்த லாபத்தை எப்படிக் கணக்கிடுகிறார்கள்? பணத்தில்தான். எவ்வளவு பணம் கிடைத்தது லாபமாக என்பதில்தான் கணக்கு எடுக்கிறார்கள். ஆனால், நம்மைப் போன்ற ஓர் மக்கள் நல அரசாங்கம் அப்படிக் கணக்கிட்டுச் செயல்பட முடியாது. இந்த நாட்டில் எத்தனையோ ஏழை எளிய மக்கள் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் கை தூக்கிவிட வேண்டும்,

அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை நாம் உயர்த்த வேண்டும். அவர்களுடைய வாழ்க்கையை நாம் மேம்பாடு அடையச் செய்ய வேண்டும். அதற்காக இலாபத்தைப் பற்றிக் கவலைப்படாமல், பணம் செலவாகிறதே என்பதைப் பற்றிக் கவலைப்படாமல் பல்வேறு நலத் திட்டங்களை நாம் செயல்படுத்த வேண்டியிருக்கிறது. From the womb to the tomb என்பதுபோல கருவில் இருக்கிற குழந்தை முதற்கொண்டு, அந்தக் குழந்தை பிறந்து, பள்ளிக்குச் சென்று, வளர்ந்து, பின்பு முதியவர் ஆகும் வரை எல்லா மட்டத்திலும் பாதுகாப்புத் திட்டங்களை இந்த ஆட்சியில்தான் நாம் செயல்படுத்திக்கொண்டிருக்கிறோம். *(மேசையைத் தட்டும் ஒலி)* இவற்றை எல்லாம் எதற்காகச் செய்கிறோம்? எதிர்காலத்தில் இந்தச் சமுதாயம் ஒரு ஆரோக்கியமான சமுதாயமாக வளரவேண்டும்; எதிர்காலத் தலைமுறையினர் ஆரோக்கியம் உள்ளவர்களாக, கல்வி அறிவு உள்ளவர்களாக வளரவேண்டும். ஆகவே இந்தச் சமுதாயம் மேன்மை அடைந்து நல்ல ஆரோக்கியமான மக்களை நாம் எதிர்காலத்திலே உருவாக்கினோமானால், அதைத்தான் நாம் இலாபமாகக் கருதுகிறோம். *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆகவே this is not an investment in business; this is an investment in Human Resources Development. இதை அழகிரி போன்றவர்கள் உணர வேண்டும் என்று தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 12–30

திரு. ச. அழகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசாங்கத்தினுடைய மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களைப் பொறுத்தவரையில் அளிக்கப்படக்கூடிய மானியங்கள் முழுவதையும் மாநில அரசாங்கமே ஏற்றுக்கொள்வது கிடையாது. உதாரணமாக நீங்கள் ஆட்சிக்கு வருகிறபோது 600 கோடி மத்திய அரசு மானியமாக வழங்கி இருக்கிறது. ஆனால், இன்றைக்கு 1008 கோடி ரூபாய் உங்களுக்கு மானியமாக, அதாவது கிரான்ட்ஸ் ஆகக் கொடுத்திருக்கிறது மத்திய அரசு. எனவே உங்களுக்குக் கொடுக்கக்கூடிய மானியத்தை எல்லாம் அஸட்ஸ்–ஆக ஆக்கவேண்டும் என்று நான் சொல்லவில்லை. அது வேறு. ஆனால், திட்டச் செலவுகள் என்று வருகிறபோது அந்தத் திட்டச் செலவுகளைச் செம்மைப்படுத்தி, சிக்கனப்படுத்தி முறையாகச் செலவு செய்திருந்தால் அஸட்ஸ் அதிகமாக ஆகி இருக்கும் என்பதுதான் என்னுடைய கருத்து என்பதை நான் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தத் திட்டத்தில் இந்த அரசு ஊதாரித்தனமாகச்

செலவு செய்திருக்கிறது, எந்தத் திட்டத்தில் உருவாக்கப்பட வேண்டிய அஸட்ஸ் உருவாக்கப்படவில்லை என்று பொதுவாகப் பேசாமல், திரு. அழகிரி அவர்கள் குறிப்பிட்டுச் சொல்வார்களேயானால் என்னுடைய பதிலுரையில் இதற்குத் தகுந்த பதில் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ச. அழகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக உலக வங்கியைப் பொறுத்தவரையில், இலவசமாக வழங்குகிற எதற்கும் அவர்கள் கடன் கொடுப்பது கிடையாது. துணி கொடுப்பதற்குக் கொடுப்பது கிடையாது. செருப்பு தைக்கக் கொடுப்பது கிடையாது வேறு எந்தவிதமான இலவச வேலைகளுக்கும் அவர்கள் கடன் கொடுப்பது கிடையாது. அஸட்ஸ் அதாவது சொத்துக்களை உருவாக்க வேண்டும் என்றுதான் உலக வங்கி உங்களுக்குக் கடன் கொடுக்கிறது. அந்த வகையில் வருகிறபோதுதான், இந்த வழிவகையிலே அப்படி வாங்கப்பட்ட கடன்களில் 17 சதவீதம்தான் சொத்து உருவாக்கப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கொடுத்திருப்பதில் பொதுவானக் கடன்கள் என்றுதான் இருக்கிறதே தவிர for creation of assets என்பதற்காக வாங்கப்பட்ட கடன்கள் என்று சொல்லவில்லை. அதனால்தான் முழுவதையும் படியுங்கள் என்று சொன்னேன். (குறுக்கீடு) மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சின்ன விளக்கம் தர விரும்புகிறேன். உலக வங்கி கொடுக்கின்ற கடன்களுக்கு மாத்திரம் என்று அந்த ஆடிட் ரிப்போர்ட்டில் கிடையாது. இதைத்தான் சொனனோம். திட்டச் செலவுகளைப் பொறுத்த வரையில் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தெரிவித்ததைப் போல இந்தியாவில் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில், குறைந்த செலவில், அதாவது 'லோ காஸ்ட்'– என்று சொல்லப்படுகிற அளவுக்கு, திட்டங்களை இன்றைக்கு நடைமுறைப்படுத்துவது நம்முடைய தமிழ்நாடு அரசுதான், அதுவும் டாக்டர் புரட்சித் தலைவியின் அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி) திட்டச் செலவினங்களுக்கான செலவுகள் என்று பார்க்கிறபோது கட்டிடங்கள் கட்டுவதானாலும் சரி, சாலை அமைப்பதானாலும் சரி, பெரிய பெரிய திட்டங்களை நிறைவேற்றுவதானாலும் சரி, பெரிய நிர்மாணிப்புகள் என்கிற கட்டிட அமைப்புகளானாலும் சரி, இரயில்வே மற்றும் சென்ட்ரல் பி.ட்பிள்யூ.டி. ஆகியவற்றோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோதும், அண்டை மாநிலங்களான கேரளம், கர்நாடகம், ஆந்திரம் ஆகியவற்றோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோதும் குறைந்த

செலவில் திட்டங்களை நிறைவேற்றுகிற மாநிலம் தமிழ்நாடு தான். அந்த மாநிலங்கள் அதிகமாகத்தான் செலவழிக்கின்றன என்பதைத் திட்டவட்டமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–35

திரு. ச. அழகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநருடைய உரையில் சட்டம், ஒழுங்கு தமிழகத்திலே சிறப்பாக இருப்பதாக ஆளுநர் அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். தமிழில் ஒரு பழமொழி உண்டு. கொண்டை அழகாக இருக்கிறது. அதிலே தாழம்பூ வைக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், உள்ளே ஈறும் பேனும் இருக்கிறது என்று கிராமங்களிலே ஒரு முதுமொழி சொல்வார்கள். எனவே, நீங்கள் சொல்லியிருக்கிற அந்த சட்டம் ஒழுங்கைப் பாராட்டுகிற விஷயம் அதற்கு இணையாகத்தான் வந்து இருக்கிறது என்பதை மெத்த வருத்தத்தோடு நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தென் மாவட்டங்களிலே இனக்கலவரங்கள் நடைபெற்று சரியாக ஆறு மாதங்கள் கழித்து அந்தப் பகுதிக்கு விஜயம் செய்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கே செல்கிறபோது 45 உயிர்கள் பலியாக்கப்பட்டிருக்கின்றன. 45 பேர்கள் இறந்த பிறகுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கே சென்றிருக்கிறார்கள். நான் உங்களைப் பார்த்து தயவுசெய்து கேட்கிறேன். அந்த மாவட்ட நிர்வாகம், அந்த ஆறுமாத காலத்தில் அந்தப் பகுதியிலே இருக்கிற தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களையோ, பாராளுமன்ற உறுப்பினர்களையோ அல்லது அந்தப் பகுதியிலே இருக்கிற அரசியல் கட்சித் தலைவர்களையோ அழைத்து ஏதாவது கூட்டம் போட்டார்களா, இதைப் பற்றி விவாதித்தார்களா என்பதை தயவுசெய்து நீங்கள் ஒரு வெள்ளை அறிக்கையாகத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மூத்த அமைச்சர்கள்கூட, ஒருசிலர் கொடியங்குளம் மட்டுமே சென்றார்களேயொழிய சிதம்பரனார் மாவட்டத்திற்கோ, தென்காசிக்கோ, திருநெல்வேலிக்கோ செல்லவில்லை என்பதையும் நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏன் போகவில்லை என்பதற்கு இன்றைக்கு ஒரு நொண்டிச்சாக்கு சொல்கிறார்கள். பெருந்தலைவர் காமராஜர் அவர்களைத் தேடி ஓடுகிறார்கள். உங்களுக்குச் சொல்கிறேன். அன்றைய நிலை வேறு; இன்றைய நிலை வேறு. நீங்கள் அதையும் இதையும் ஒப்பிட்டுப் பேசக்கூடாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கண்டிப்பாகப் போய் இருக்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உண்மையிலேயே செயல்படக்கூடிய

முதலமைச்சராக இருந்திருந்தால் நிச்சயமாக அவர் அங்கே சென்று (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார் செயல்படக்கூடியவர்கள், யார் செயல் இழந்திருக்கிறார்கள் என்பதை நாடு நன்றாக அறியும். ரயில்வே இலாகாவை தன் பொறுப்பிலே வைத்துக்கொண்டிருக்கிற பாரதப் பிரதமர் ஆயிரக்கணக்கான பேர்கள் இறந்து, அங்கே பிணங்களாகக் கிடந்து, கை, கால் உடைந்து அடையாளம் தெரியாது இருந்த நிலையிலும்கூட ஐந்து நாட்களுக்குப் பின்புதான் சென்றிருக்கிறார் என்பதை உறுப்பினர் அவர்களுக்கு நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செயல்படுவது என்று சொன்னால் ஒவ்வொரு சம்பவம் நடைபெறுகின்ற இடத்திற்குச் சென்றுதான் செயல்படுவது என்பது இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு போன்ற ஒரு பெரிய மாநிலத்தில் அவ்வப்போது ஏதோ ஒரு சம்பவம், ஏதோ ஒரு நிகழ்ச்சி தினமும் ஏதோ ஒரு மூலையில் நடந்துகொண்டுதான் இருக்கிறது. ஒவ்வொன்றுக்கும் முதலமைச்சர் இங்கிருந்து ஓடிக்கொண்டிக்க முடியாது. ஆகவே, நேரில் அந்த இடத்திற்குச் சென்றால்தான் செயல்படுவது என்று பொருள் எடுத்துக் கொள்ள முடியாது. இங்கிருந்தே செயல்பட முடியும். இங்கிருந்தே எல்லாவற்றையும் கண்காணிக்க முடியும். அதைத்தான் நானும் செய்துகொண்டு வந்திருக்கிறேன். காவல்துறையை வைத்து எடுக்கவேண்டிய நடவடிக்கைக்கு உத்தரவிட்டு, ஆணையிட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குத் தகுந்த இன்ஸ்ட்ரெக்ஷன்ஸ் வழங்கப்பட்டு, அவர்களும் உரிய நேரத்தில் நடவடிக்கைகள் எடுத்துள்ளார்கள். அதன் பிறகும் ஒரு சம்பவம் நடைபெற்றபோதுதான் நானே, அன்று சாஃப் கேம்ஸ் நிறைவுவிழா இருந்ததையும் உதறித் தள்ளிவிட்டு நேரிலே சென்றேன். அதன் பின்னர் அந்தப் பகுதிகளில் எந்தவொரு சட்டம் ஒழுங்குப் பிரச்சினையும் எழவில்லை. அங்கே அமைதி திரும்பியிருக்கிறது என்பதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இந்த அரசு

நிச்சயமாக செயல்படுகின்ற அரசு, இந்த முதலமைச்சர் மற்ற எல்லா முதலமைச்சர்களையும் விட மிகவும் தீவிரமாக, வேகமாக (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு நாளுக்கு கிட்டத்தட்ட இருபது மணிநேரம் உழைக்கும் முதலமைச்சர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி).*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ச. அழகிரி.

திரு. ச. அழகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செல்ல வேண்டும் என்று நான் சொல்லவில்லை. செல்லவும் முடியாது. அவருடைய பணியினுடைய தன்மை அப்படி. ஆனால், இது ஒரு தொடர் கலவரம். 45 பேர்கள் அங்கே கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஆறு மாதகாலம் இந்தக் கலவரம் நடைபெற்றிருக்கிறது. சொல்லப்போனால் ஜூலை மாதம் ஆரம்பித்து டிசம்பர் மாதம் வரை நடைபெறுகிறது. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டிசம்பர் மாதம் 26-ஆம் தேதி தான் சென்றார். நான் உங்களைக் கேட்கிறேன். இந்த ஆறு மாத காலம் சென்னையில் இருந்துதான் அந்தக் கலவரத்தை அடக்க வேண்டுமா? நீங்களே சொல்கிறீர்கள், 'நான் சென்ற பிறகு அங்கு எதுவும் நடக்கவில்லை என்று'. அப்படி இருக்கிறபோது முன்கூட்டியே சென்றிருப்பீர்களேயானால் அந்த 45 உயிர் பலியைத் தடுத்து இருக்க முடியாதா என்பதனை (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12-40

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யூகத்தின் அடிப்படையில் நடவடிக்கையை எடுக்க முடியாது. ஒரு சம்பவம் நடைபெறுகிறது, சில உயிர்கள் பலியாகின்றன. அதனையடுத்து மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், காவல்துறைக்கும் சில ஆணைகள் பிறப்பிக்கின்றோம். அவர்களும் நடவடிக்கையை எடுக்கிறார்கள். கலவரம் அடங்குகிறது. பின்னர் சில அரசியல்வாதிகள், சில அரசியல் கட்சித் தலைவர்கள் இந்த ஆட்சிக்கு ஒரு சோதனையை ஏற்படுத்த வேண்டும், ஒரு தர்மசங்கடத்தை ஏற்படுத்த வேண்டும், அந்த மாவட்டங்களில் மக்கள் நிம்மதியாக வாழக்கூடாது என்று கங்கணம் கட்டிக்கொண்டு அங்கே அடிக்கடி விஜயம் செய்து, கூட்டங்கள் போட்டு, மக்களுடைய உணர்வுகளைத்

தூண்டிவிட்டு அவர்கள் அந்தப் பகுதிக்கு வந்து சென்ற சில மணி நேரங்களுக்குள் மீண்டும் கலவரம் ஏற்பட்டு, மீண்டும் சில கொலைகள் நடைபெறும் சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். இதெல்லாம் அரசுக்குத் தகவல் கிடைத்து புரிவதற்கு சில காலம் ஆயிற்று. அதன் பின்னர்தான் சம்பந்தப்பட்ட அந்த நபர்கள் அந்த மாவட்டங்களுக்குள்ளேயே நுழையக் கூடாது என்று ஒரு உத்தரவு போடப்பட்டு தடை போடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அதன் பின்னர்தான் அங்கே அமைதியும் திரும்பியிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். ஆகவே தொடர் நடவடிக்கையாக இப்படி நடைபெறும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. மீண்டும் மீண்டும் இத்தகைய கலவரங்கள் ஏன் ஏற்படுகின்றன? அதற்கு யார் காரணம்? என்ன காரணம்? என்று ஆராய்ந்து கொண்டுதான் இருந்தோம். அவ்வப்போது ஒரு கலவரத்தை அடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தோம். அது அடங்கியும் போயிற்று. ஆனால், மீண்டும் புதிதாக ஒரு இடத்தில் வெடிக்கும். அதற்கு என்ன காரணம் என்று ஆராய்ந்த பின்னர்தான் சம்பந்தப்பட்ட சில நபர்கள் வேண்டுமென்றே இத்தகைய செயல்களில் ஈடுபட்டு அவர்கள் அங்கே கலவரத்தைத் தூண்டுகிறார்கள் என்று தெரிந்த பின்னர்தான் அதற்காக நடவடிக்கையை நாங்கள் எடுத்தோம். அதன் பின்னர் நானும் நேரில் சென்றேன். அதன் பின்னர் அமைதி திரும்பி இருக்கிறதா, இல்லையா? அதைத்தான் நாம் பார்க்க வேண்டும். பிறகு மீண்டும் இத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெறாவண்ணம் இந்த ஆட்சி எல்லாவிதமான பாதுகாப்பு நடவடிக்கைகளையும் எச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

***திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. ஒவ்வொரு சம்பவம் நடைபெறும்போதும் முதலமைச்சர் அங்கே செல்ல வேண்டுமா என்று கேட்டார். ஒவ்வொரு சம்பவமும் நடைபெறும்போதும் செல்ல வேண்டுமென்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. ஆனால் தொடர் கலவரங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கலவரம் பரவுவதற்கும் மேல்நடவடிக்கை எடுப்பதற்கும் காரணம் அச்சம், அவநம்பிக்கை. இந்த அச்சமும், அவநம்பிக்கையும் வருவதற்குக் காரணம் வதந்திகள் பரப்பப்படுவது. முதலமைச்சர் அந்தப் பகுதிக்கு ஒரு முறை சென்று ஓரிரு நாட்கள் அங்கே தங்கியிருப்பாரேயானால் மக்கள் மத்தியிலே

நம்பிக்கை பிறக்கும். அதிகாரிகள் நேர்மையாகச் செயல்படவும் வழிவகுத்திருக்கும். நிச்சயமாக விலை மதிக்க முடியாத இவ்வளவு உயிர்கள் பலியாகி இருக்காது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், அண்ணாசாமி என்கிற ஒரு பெரியவர், அவர் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர் அல்ல, பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் நல்லகண்ணு அவர்களுக்கு மிக நெருங்கிய உறவினர், காங்கிரஸ் கட்சியிலே இருந்தவர். 80, 85 வயதானவர். அவர் இந்தக் கலவரங்களிலே யாரோடும் கலந்துகொள்ளாதவர். தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலே அவர்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதற்காகவே தாழ்த்தப்பட்ட அரிசன மக்கள் அதிகமாக வாழ்கின்ற அந்தக் கிராமத்திலே வாழ்ந்தவர். அவருடைய உயிர் பறிக்கப்பட்டிருக்கிறது. உயிர் இழப்பு என்று சொன்னால் அதற்குக் காரணம் mutual fear and suspicion அதை அடக்குவதற்கு முதலமைச்சர் விஜயம் நிச்சயமாக துணை புரிந்து இருக்கும். இதில் அவர் தவறிவிட்டார் என்றுதான் நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராஜர் எடுத்த நடவடிக்கையை இங்கே துணைக்கு அழைக்கிறீர்களா என்று கேட்டார்கள். ஆனால், இப்படியொரு கலவரம் நடைபெற்ற பின்னர் உரிய வகையிலே நடவடிக்கை எடுத்தால்தான் சரியாக இருக்குமேயொழிய, உடனடியாக அந்த இடத்திற்கு அரசியல் கட்சிகளோ அல்லது அரசியல் சம்பந்தப்பட்ட ஒரு முதலமைச்சர் போன்றவர்களோ அங்கே போவது நிச்சயமாக இன்னும் கூடுதலான பிரச்சினையை உருவாக்கும் என்ற நிலைதான் ஏற்படுகிறது. இதை நடைமுறையிலும் நாம் பார்த்து இருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், இது இரண்டு ஜாதிகளுக்கு இடையே ஏற்பட்ட கலவரம் என்று நாங்கள் நிச்சயமாக நினைக்கவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, அரசியல் கட்சிகள் தூண்டிவிட்டு நடத்தப்பட்ட திட்டமிட்ட காரியம் என்றுதான் நாங்கள் முழுமையாக நம்புகிறோம். எங்களுக்குக் கிடைத்திருக்கிற செய்தியும் அப்படித்தான் இருக்கிறது. எனவே அப்படி இருக்கிறபோது, அந்தச் செய்தியெல்லாம் கிடைத்திருக்கின்ற நேரத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கே போய் அதிலே நடவடிக்கை எடுக்கிறபோது, நேரிடையாகவே அந்த ஸ்பாட்டிலே நடவடிக்கை எடுக்கிறபோது, வேண்டுமென்றே இன்னும் தூண்டப்பட்டு மிக

மோசமான நிலைமைக்கு கொண்டு போய்விடுமோ என்று தெரிந்து இருந்த காரணத்தாலேதான் என்னென்ன நடவடிக்கையெல்லாம் அங்கே போய் முதலமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டுமோ அத்தனையும் இங்கிருந்தே அவர் எடுத்தார் என்பதை யாரும் கொஞ்சம்கூட மறுக்க முடியாது.

பிற்பகல் 12–45

இன்னும் சொல்லப்போனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களில் சில பேரை அனுப்பினார்கள். அதிகாரிகள் சிலபேரை அனுப்பினார்கள். அத்தனை நிலைமைகளையும் தெரிந்துகொண்டு அதற்கேற்ப நடவடிக்கை எடுத்தார்கள். அதுமட்டுமல்லாமல் அன்றாடம் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று அவர்கள் உத்தரவிட்டது மாத்திரம் அல்லாமல் நேரடியாக அங்கே வந்தபோது அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசினார்கள். அங்கே இருந்த அனைத்துக்கட்சி உள்ளூர் தலைவர்களும் தனித்தனியாக ஒவ்வொரு கட்சியாக எங்களை சந்திக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார்கள். மொத்தமாக ஒரு இடத்தில் சந்திப்பது என்று முதலில் கருதினார்கள். ஆனால், அந்தத் தலைவர்கள் தனித்தனியாக சந்திக்க வேண்டுமென்று கேட்டபோது, நேரம் அதிகமானாலும் பரவாயில்லை, உண்மை நிலைமை நமக்குத் தெரிய வேண்டும், ஒவ்வொரு கட்சியும் இதிலே என்ன நினைக்கிறார்கள் என்பது நமக்குப் புரிய வேண்டும் என்பதற்காக தனித்தனியாக நேரம் ஒதுக்கிப் பார்த்தார்கள். வந்த அத்தனை கட்சித் தலைவர்களும் அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளை முழுமையாகப் பாராட்டினார்கள். முதலமைச்சர் அவர்கள் எடுத்த நடவடிக்கைகளை அவர்கள் வரவேற்றார்கள் என்பதை இந்த நேரத்திலே குறிப்பிடுவது மிக முக்கியமானது என்று நான் கருதுகிறேன் (மேசையைத் தட்டும் ஒலி). அதோடு மட்டுமல்லாமல், நான் இங்கே வெளிப்படையாகச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பிட்ட சில பெயர்களைக் குறிப்பிட்டு, அவர்களால்தான் இந்தக் கலவரமே ஏற்பட்டிருக்கிறது, இந்தக் கலவரம் தொடங்குவதற்கும், அதற்குப் பின்னர் தொடர்வதற்கும் அவர்கள்தான் காரணம் என்று ஒரு அரசியல் கட்சி இல்லாமல், அத்தனை கட்சிகளும் முதலமைச்சர் அவர்களிடத்திலே தெரிவித்தார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே அது இரண்டு சாதிகளுக்கிடையே ஏற்பட்ட கலவரம் அல்ல, அது சிலபேரால் தூண்டிவிடப்பட்டு இந்த அரசாங்கத்திற்கு இடையூறு விளைவிக்க வேண்டும், இந்த அரசாங்கத்திற்கு ஆபத்தை விளைவிக்க வேண்டும்--வேறு வழியே இல்லை--என்ற காரணத்தால் ஏற்படுத்தப்பட்ட திட்டமிட்ட சதி என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இந்த நேரத்திலே நான் ஒன்றைத் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கே சென்ற பின்னாலேதான் அங்கே அமைதி நிலவியிருக்கிறது. அந்தப் பிரச்சினையிலே, இங்கு நேரத்தைப் பயன்படுத்திக்கொண்டு அதில் பெரிய விவாதத்தை ஏற்படுத்த வேண்டுமென்று நீங்கள் கருதுவீர்களேயானால், இந்தப் பிரச்சினை நின்றுவிட்டதிலே எல்லோருக்கும் வருத்தம் இருக்கிறது என்றுதான் கருத வேண்டியிருக்கிறது. இந்தப் பிரச்சினைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று சொன்னால், அதைப்பற்றி அதிகமாக விவாதிக்காமல் இருப்பதுதான் நல்லதாக இருக்க முடியும். (மேசையைத் தட்டும் ஒலி). எனவே, தேவை இல்லாமல் விவாதித்து மேலும் அந்தக் கலவரம் தொடர வேண்டுமென்று கருதுகிறீர்களோ என்ற அச்சம் எங்களுக்கு ஏற்படுகிறது என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன் (மேசையைத் தட்டும் ஒலி). அவசியம் ஏற்படுகிறபோது, முதலமைச்சர் அவர்கள், எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் விட்டுவிட்டு ஓடோடி வருவதற்குத் தயாராக இருக்கிற முதலமைச்சராக இங்கே இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). நான் உதாரணம் சொல்ல வேண்டுமென்று சொன்னால், காவிரி நீர் பிரச்சினை வந்தபோது, அடுத்த நாள் மாலை *3* மணிக்கு டெல்லிக்குப் புறப்பட வேண்டும் என்ற நிலையில்--டெல்லியில் எவ்வளவு பிரச்சினைகள் ஏற்பட்டும்கூட, காலதாமதம் ஏற்பட்ட சூழ்நிலையில்--அவர்கள் காலையிலே *6.00* மணிக்கெல்லாம் புறப்பட்டு இங்கேயிருந்து பட்டுக்கோட்டை சென்று, வயலிலே இறங்கி நிலைமைகளைப் பார்த்து, அந்தப் பயிர்களை எடுத்துக்கொண்டுபோய் பிரதம அமைச்சரிடம் கொடுத்து, பிரதம அமைச்சருக்கு அதைப் புரியவைக்க வேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டது. அன்றைக்கு அதைப் புரட்சித் தலைவி அவர்கள் செய்தார்கள். எனவே, அவசியம் ஏற்படுகிறபோது உரிய நேரத்திலே அதைச் செய்யத்தான் செய்வார்கள். அவசரப்பட்டு, போகிறபோது நிலைமை இன்னும் மோசமாகப் போவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. இரண்டு பக்கமும் முனை உள்ள கத்தி என்ற வகையிலேதான் அதைப் பயன்படுத்த வேண்டியிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்து கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன். எனவே அங்கே நடைபெற்று இருக்கிற அந்த சம்பவத்திற்கு முற்றுப்புள்ளி தேவை என்று சொன்னால் நீங்கள் பேசுவதற்கும் ஒரு முற்றுப்புள்ளி தேவை என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அழகிரி, இப்போது மணி *12.48* ஆகிவிட்டது. இன்னும் இரண்டு நிமிடங்களில் உரையை முடித்துக்கொள்ளவும்.

திரு. ச. அழகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கே சென்றதிலே எங்களுக்குச் சந்தோஷம்தான். யாரும் அதை வருத்தமாகச் சொல்லவில்லை. எனது கண்டனம் முதலமைச்சர் அவர்கள் முன்கூட்டியே அங்கே செல்லவில்லை என்பதுதானே தவிர, சென்றதிலே எங்களுக்கு நிச்சயமாக சந்தோஷம்தான் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்ததாக சட்டம் ஒழுங்குப் பிரச்சினை பற்றி மேலும் சொல்ல வேண்டியிருக்கிறது. இந்த அரசாங்கம் சட்டம் ஒழுங்கைக் கட்டிக் காப்பதாகக் கூறுகிறது. மாண்புமிகு சகோதரி மரியம் உல் ஆசியா பேசுகின்றபோது சொன்னார்கள். மனைவியை எரித்த காங்கிரஸ்காரர் அங்கே கைது செய்யப்பட்டார் என்று சொன்னார்கள். அவர் கைது செய்யப்பட்டார் என்பதுதான் அங்கே இருக்கிற முக்கியமான விஷயமே. அவர் தப்பித்துவிடவில்லை, தப்பிக்கவிடவில்லை, இதை நீங்கள் மனதிலே வைத்துக்கொள்ள வேண்டும் (குறுக்கீடு) அவர் மனைவியை எரித்தது உண்மை, அதற்காக கண்டிக்கப்பட்டதும் உண்மை, அவர் சிறையிலே வைக்கப்பட்டதும் உண்மை, அவரைக் கைது செய்திருக்கிறார்கள் என்பதும் உண்மை. அவருக்கு யாரும் பாதுகாப்பு கொடுக்கவில்லை என்பதும் உண்மை. நீங்கள் அதை உணர்ந்து பார்க்க வேண்டும். இன்றைக்கு என்ன நடந்திருக்கிறது? **

பிற்பகல் 12-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது சப் ஜுடிஸ் இல்லையா? (குறுக்கீடு)

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: அப்படியானால் அந்த அம்மாள் சொன்னது மட்டும் சப்-ஜுடிஸ் இல்லையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த அம்மாள் ஒன்றும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. அவர் சொன்னது பொதுவாக. அவர் தெரிவித்த கருத்து ஒரு பெண் எரித்துக் கொல்லப்பட்டிருக்கிறார் என்பது. (குறுக்கீடு) வட நாட்டிலே ஒரு பெண் எரித்துக் கொல்லப்பட்டிருக்கிறார் என்கிற செய்தியைத்தான் அவர்கள் சொன்னார்கள். அவர்களுடைய உணர்வைத் தெரிவித்தார்கள். அந்த வழக்குக்குள் போகவில்லை. ஆனால் இவரோ ** என்பதற்குள் செல்கிறார். அது வழக்கு மன்றத்தில் இருக்கிறது. (கூச்சல்-குழப்பம்). திருமதி மரியம் உல் ஆசியா பேசுகிறபோது, மேலெழுந்தவாரியாக ஒரு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பெண் எரித்துக் கொல்லப்பட்டது பற்றிய அந்தச் செய்தியைத்தான் சொல்வதிலே அவர்கள் பிரயத்தனமாக இருந்தார்களே தவிர (குறுக்கீடுகள்), திரு. அழகிரி சொல்வதுபோல, ** என்பதற்குள் போகவில்லை. அதெல்லாம் வழக்குமன்றத்தில் உள்ளன. வழக்கு மன்றத்தால் அவைகள் விசாரிக்கப்பட வேண்டும். இது விசாரிக்கப்பட வேண்டிய செய்தி. இதை எப்படி அனுமதிக்க முடியும்? (குறுக்கீடுகள்) நீங்கள் வழக்குமன்றத்திற்கு போயுள்ள பிரச்சினையைப் பற்றி சொல்லுகிறீர்கள். அதை வழக்குமன்றம் முடிவு செய்ய வேண்டும். (குறுக்கீடுகள்).

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: அதுவும்தான் வழக்குமன்றத்தில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி மரியம் உல் ஆசியா சொன்னதில் என்ன சப்-ஜுடிஸ் இருக்கிறது? வழக்குமன்றப் பிரச்சினைக்குள் அவர் போகவில்லை. வட நாட்டிலே ஒரு பெண் எரித்துக் கொல்லப்பட்டிருக்கிறார் என்ற அந்த உணர்வைத்தான் அவர்கள் தெரிவித்தார்கள். (குறுக்கீடு) திரு. அழகிரி அப்படிச் சொல்லவில்லை. ** என்றெல்லாம் அவர் பிரச்சினைக்குள் சென்றார். இவைகளெல்லாம் வழக்குமன்றம் முடிவு செய்ய வேண்டிய விஷயம். திரு. அழகிரி சீக்கிரம் பேசி முடியுங்கள். வழக்கின் உள்ளே செல்ல வேண்டாம். அவைகள் நீதிமன்றத்தால் முடிவு செய்யப்பட வேண்டியவை. அவையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

திரு. ச. அழகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் விசாரணையில் இருக்கிற விஷயத்தைச் சொல்லவில்லை. விசாரணை முடிந்து, பத்திரிகைகளிலே வந்திருக்கிற, எல்லோருக்கும் தெரிந்த விஷயத்தை நான் உங்களிடத்திலே விசாரிக்கிறேன். விவாதிக்கிறேன். ஏனென்றால் அது சப்ஜுடிஸ்-ஆக வராது. நீங்கள் நன்றாக அதை உணர வேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. உணர்ந்துதான் சொல்கிறேன். பத்திரிகைகளில் வருவது எல்லாம்--பத்திரிகைகாரர்கள் போடலாம். ஆனால் நமக்கு சில விதிமுறைகள், சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. பத்திரிகைகாரர்கள் என்ன வேண்டுமானாலும் எழுதலாம். பத்திரிகைகளில் வந்துவிட்ட காரணத்தினாலே இங்கே

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பேச முடியாது. நமக்கு சில கட்டுப்பாடுகள் இருக்கின்றன. அதை நீங்கள் புரிந்து கொண்டு பேசுங்கள்.

திரு. ச. அழகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வழக்கிலே, ** (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் சொல்கிறேன். அதுதான் வழக்கு மன்றத்திலே இருக்கிறது. அந்தப் பிரச்சினை வழக்கு மன்றத்திலே இருக்கிறது. ** என்பதெல்லாம் வழக்கு மன்றத்திலே முடிவு செய்ய வேண்டிய விஷயம். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்வெஸ்டிகேஷனைப் பொறுத்தமட்டிலே பொதுவான சில விவரங்களை மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்களுக்கு நான் சொல்ல விரும்புகிறேன். காவல் துறையாக இருந்தாலும், சில நடவடிக்கைகள் எடுக்கிறார்கள். இன்வெஸ்டிகேஷன் செய்கிறார்கள். சி.பி.ஐ.-யில்கூட ஒரு வழக்கினை ஒப்படைத்தால் சி.பி.ஐ.-ஆல்கூட--பாரதீய ஜனதா அலுவலகத்தை குண்டு வைத்துத் தகர்த்தவர்களை அவர்களால் கைது செய்ய முடியவில்லை. உண்மையான குற்றவாளிகளை நம்முடைய தமிழ்நாட்டுக் காவல்துறைதான் கைது செய்தது. ஆகவே, சி.பி.ஐ. வழக்கை விசாரிப்பதாலோ, சார்ஜ்-ஷீட் போடுவதாலோ ஒருவர் குற்றவாளி என்று நாம் தீர்மானிக்க முடியாது. அவர்களுக்கும் உள்ளார்த்தம் செய்தவற்கு அங்கே இருக்கிறது. அவர்களையும் இன்புளுயன்ஸ் செய்வதற்கு சக்திகளெல்லாம் இருக்கின்றன. ஆகவே, தமிழ்நாடு அரசு காவல் துறையை நீங்கள் குற்றஞ்சாட்டுவதுபோல், மத்திய அரசினுடைய கன்டிரோலிலே இருக்கிற சி.பி.ஐ.-யையும் நாங்கள் சொல்ல முடியும். ஆகவே, இன்வெஸ்டிகேஷனாக இருந்தாலும், சார்ஜ்-ஷீட் போட்டாலும், நீதிமன்றத்திலே அது நிரூபிக்கப்பட்டால்தான், உண்மையான முடிவைத் தரமுடியுமே தவிர .விசாரிப்பதால் மட்டும் அது உண்மையாகி விடாது. சி.பி.ஐ. விசாரிப்பதால் மட்டும்--அது எங்கேயிருந்தோ இறங்கி வந்தது போல் நினைத்துக் கொள்ளக்கூடாது. யாருடைய இன்வெஸ்டிகேஷனாக இருந்தாலும், முடிவு வந்தால்தான் அதனைத் தெளிவுபடுத்தலாம். ஆகவே, நீதிமன்றத்தினுடைய உத்தரவு வந்தால்தான் அதைத் தெளிவாக்க முடியும். இன்வெஸ்டிகேஷனைப் பொறுத்தமட்டிலே பல்வேறுப் பிரச்சினைகள் இருக்கத்தான் செய்யும். எத்தனையோ

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இன்வெஸ்டிகேஷன் செய்கிறார்கள். கீழ்க்கோர்ட்டிலே சொன்ன ஜட்ஜ்மெண்ட் மேல் கோர்ட்டிலே தள்ளுபடி செய்யப்படுகிறது. முன்சீப் கோர்ட்டிலே சொன்ன ஜட்ஜ்மெண்ட் சப்-கோர்ட்டிலே மாறுகிறது. அந்த ஜட்ஜை என்ன பண்ணுகிறோம்? முன்சீப் கோர்ட்டிலேயிருக்கிற ஜட்ஜை டிஸ்மிஸ் பண்ணிவிடுகிறார்களா? தீர்ப்புகள் திருத்தப்படலாம். Condemn பண்ணுகிறார்கள். Condemn பண்ணலாம். ஆனால், அதே சமயத்தில் எல்லா தீர்ப்புகளையும் Condemn பண்ணுவது கிடையாது. ஆகவே, இதுபோன்ற விசாரணைகளிலே பிரச்சினைகள் ஏற்பட்டு மறு விசாரணைகள் செய்கிறபோது பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. முடிவு நீதிமன்றம்தான் செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12-55

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. அழகிரி அவர்கள் பேசியதற்கு ஏன் ஆட்சேபணைத் தெரிவிக்கிறோம்? ஒரு ஐசோலேட்டட் இன்சிடன்டை வைத்துக் கொண்டு, இதனால் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று முடிவு பண்ணிவிடக்கூடாது. சகோதரி, மாண்புமிகு திருமதி மரியம் உல் ஆசியா அவர்கள், ஒருவர் தன்னுடைய மனைவியைக் கொன்றார் அல்லது ஒரு பெண் தன்னுடைய கணவரால் கொல்லப்பட்டார் என்றுதான் குறிப்பிட்டாரே தவிர (குறுக்கீடு) ஆமாம், காங்கிரஸ்காரரர் என்று குறிப்பிட்டார். அதனால், நாட்டிலே சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது, பிரதமர் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவில்லை என்றெல்லாம் பழிபோட்டாரா? அந்த, குறிப்பிட்ட இன்சிடெண்டைச் சொன்னார். அவ்வளவுதான். அதைப்போலவே, இங்கே வழக்கறிஞர் விஜயன் தாக்கப்பட்டது என்பது ஒரு ஐசோலேட்டட் இன்சிடெண்ட். அதற்கான நடவடிக்கையை காவல் துறையினர் எடுத்திருக்கிறார்கள். இப்போது வழக்காடு மன்றத்திலும் அந்த வழக்கு இருக்கிறது. இப்படி ஒரு சம்பவம் நடைபெற்றது என்று அழகிரி சொன்னால் பரவாயில்லை. ஆனால், மாண்புமிகு அழகிரி அவர்கள் அதற்கு மாறாக, அதை உதாரணம் காட்டி, இங்கே சட்டம் ஒழுங்கே கெட்டுவிட்டது, இதற்கு இந்த ஆட்சிதான் பொறுப்பு என்று கூறுவது ஏற்புடையது அல்ல. அதைத்தான் ஆட்சேபிக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அழகிரி, சீக்கிரம் பேச்சை முடித்துக்கொள்ளலாம்.

திரு. ச. அழகிரி: பேரவைத் தலைவர் அவர்களே, அதிலே குற்றவாளிகளைக் கைது செய்யமுடியவில்லை என்பதுதான் இருக்கிற பிரச்சினை. குற்றவாளிகளைக் கைது செய்யச் சொல்லி உச்சநீதிமன்றம் சொல்லி இருக்கிறது. சி.பி.ஐ. உங்களிடம் அனுமதி கேட்டிருக்கிறார்கள். ஆனால், நீங்கள் அனுமதி தர மறுக்கிறீர்கள். என்ன காரணம் என்பதுதான் கேள்வி? *(குறுக்கீடு).*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, சி.பி.ஐ. அனுமதி கேட்டால்-தமிழக அரசு காவல் துறையைப் பொறுத்தவரை, அவர்கள் அந்த வழக்கை விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்க முடியும் என்று இருக்கிறபொழுது, ஏன் அனுமதியை நீங்கள் தரவேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்கள்? எனவே, அதிலே ஏதோ உள்நோக்கம் உங்களுக்கு இருக்கிறது என்று எங்களுக்குச் சந்தேகம் வருகிறது. உங்கள் பக்கம் அது சி.பி.ஐ.க்கு கிடைத்துவிட்டால், அதை வைத்துக்கொண்டு, இந்த அரசாங்கத்தை ஏதாவது செய்யலாமா என்று உங்களுக்கு அந்த உள்நோக்கம் இருக்கிறது என்று எங்களுக்குச் சந்தேகம் வருகிறது. அதற்கு நீங்கள் என்ன பதில் சொல்லுகிறீர்கள். *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, I am on a point of order. இந்த மன்றத்திலே உள்நோக்கம் கற்பித்துப் பேசக்கூடாது என்பது விதி. இப்போது நண்பர் அழகிரி அவர்கள் has placed a most pertinent question to the Government. Why you have not helped the investigation. That is our question. When the High Court and the Supreme Court have ordered that the investigation should be proceeded with the C.B.I. and the C.B.I. has requested an arrest, which is a step in the investigation. Why the State Governent does not help the investigating agency, that is our question for which you have to answer.

Hon'ble Speaker : What is the point of order in it ? (interruptions) He raises the same question (interruption) Hon'ble Chief Minister.

Hon'ble Dr. J. Jayalalitha : "Government has not helped the C.B.I. enquiry" என்று யார் சொல்லுகிறார்கள்? பத்திரிகையிலே வருகிறது இந்தச் செய்தி. இத்தகைய குற்றச்சாட்டுகள் பத்திரிகைகளிலே

வெளிவருதாலேயே அவைகள் உண்மையாக ஆகிவிடாது. We have been co-operating with the C.B.I. at every step.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், இந்த அவையிலே உள்நோக்கம் கற்பித்துப் பேசக்கூடாது என்று விதி இருக்கிறது என்று ஒப்புக் கொண்டதற்காக மிக்க நன்றி. ஆனால், பேசுவது எல்லாம் உள்நோக்கத்தோடு இருக்கிறது என்பதற்காக நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள் என்று எங்களுக்குத் தெரிய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, பேசுகின்ற பேச்சுக்குத்தான் உள்நோக்கம் கற்பிக்கக் கூடாது. இந்த அவையிலே மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் குறுக்கிடுகின்ற நேரத்திலே எல்லாம், வாதத்திற்குப் பதில் சொல்ல முடியவில்லை என்றால் பேசுபவர்கள் மீது உள்நோக்கம் கற்பிப்பதுதான் அவருடைய பழக்கமாக இருந்து வருகிறது. (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர், அவர் உள்நோக்கம் கற்பிக்கவே இல்லை, உள்நோக்கம் கற்பிக்கக் கூடாது என்பதை அவர் வற்புறுத்துகிற முறையில் சொல்கிறார் (குறுக்கீடு). நீங்கள் புரசீடிங்ஸைப் படித்துப் பாருங்கள். (குறுக்கீடு). எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் இப்படிப் பேசக் கூடாது. முறையாக பேசவேண்டும். உட்காருங்கள். முதலிலேயிருந்து பார்க்கிறேன். அழகிரி கேட்ட அதே கேள்வியை பீட்டர் அல்போன்ஸ் ஆங்கிலத்திலே கேட்கிறார். அது என்ன பாயின்ட் ஆஃப் ஆர்டர்? (குறுக்கீடு) ஆமாம், அதுதான் பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று சொன்னால்--ஒருவர் தமிழிலே பேசியதை இன்னொருவர் ஆங்கிலத்திலே அப்படியே பேசினார்--எதிர்க்கட்சித் தலைவரோ அதுதான் பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று சொன்னால், இப்படிப்பட்ட எதிர்க்கட்சித் தலைவரை வைத்துக் கொண்டு என்ன செய்வது? (குறுக்கீடுகள்) திரு. அழகிரி, சீக்கிரம் பேச்சை முடித்துக் கொள்ளலாம். (குறுக்கீடு) மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, நான் எப்போதாவது ஒருமுறை பேசுகிறபோதெல்லாம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு இன்கன்வீனியன்ட்டாக இருந்தால் இப்படிச் சொல்வது சரியாக இல்லை. நான் இங்கே வந்து பதில் சொல்ல முடியாமல் இருந்த நிலைமை இருந்தது இல்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையே இல்லை. ஆனால், நீங்கள், ஏதாவது ஒன்றிலாவது இந்த அரசாங்கத்தை பதில் சொல்ல முடியாமல் அனுப்ப முடியுமா என்று கருதுகிறீர்கள். ஏறத்தாழ 4½ ஆண்டுக்காலமாக உங்களால் வெற்றிபெற முடியவில்லை. இனிமேலும் முடியாது. நான் ஒன்றை மட்டும் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். நீங்கள் உள்நோக்கம் கற்பிக்க வேண்டுமென்ற உணர்வோடு பேசுகிறீர்கள் என்பதுதான் உண்மை. அது எல்லோருக்கும் தெரியும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1.00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அழகிரி, முடித்துவிடலாம்.

திரு. ச. அழகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், விசாரணைகளுக்கு தமிழக அரசாங்கம் முழுமையாக ஒத்துழைக்கிறது என்று சொன்னார்கள். அதற்காக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், உண்மை நிலை வேறாக இருக்கிறது. சண்முகசுந்தரம் வழக்கிலே சி.பி.ஐ., எஸ்.பி ஹை கோர்ட்டிலே ஒரு 'அபிடவிட்' கொடுத்திருக்கிறார். அதிலே மாநில அரசாங்கம் இந்த வழக்கினை விசாரணை செய்வதற்கு எங்களுக்கு எந்தவிதமான உதவியும் செய்யவில்லை என்று சொல்லியிருக்கிற 'அபிடவிட்'டை சி.பி.ஐ. கொடுத்திருக்கிறது. நாங்கள் பத்திரிக்கையிலே உள்ளதை வைத்து (குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே நான் ஏற்கெனவே சொல்லி இருக்கிறேன். சி.பி.ஐ. சொன்னால் அது என்ன வேதவாக்கா? சி.பி.ஐ.-ன் சார்பில் ஏதாவது குற்றச்சாட்டுக்கள் சொன்னார்கள் என்றால் அதெல்லாம் அப்படியே உண்மையாக வேண்டுமா? அதை நான் ஆணித்தரமாக மறுக்கிறேன்.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர். சி.பி.ஐ. சொன்னால் அது வேதவாக்கா என்று முதலமைச்சர் அவர்கள் கேட்கிறார்கள். அப்படியானால்

சிந்தாதிரிப்பேட்டையிலே பி.ஜே.பி. அலுவலகம் குண்டு வைத்துத் தாக்கப்பட்டது. அதற்கு மட்டும் சி.பி.ஐ. விசாரணை தேவை என்று முதலமைச்சர் அவர்கள் (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதில் பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்ன இருக்கிறது? உட்காருங்கள். இது பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இல்லை.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வழக்கில் inter-state ramification இருக்கும் என்று நாங்கள் சந்தேகப்பட்டதால்; அத்தகைய தகவல்கள் கிடைத்ததால், எங்களுடைய அதிகார வரம்பு தமிழ்நாட்டிற்குள் மட்டும் இருப்பதால் வேறு மாநிலங்களில் உள்ளவர்களும் அந்த வழக்கில் சம்பந்தப்பட்டிருப்பதால் அதனை நாங்கள் சி.பி.ஐ.-க்கு ஒப்படைத்தோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அழகிரி, உரையை இத்துடன் முடித்துவிடலாம்.

திரு. ச. அழகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் கடைசியாக தமிழ்நாடு அரசாங்கத்திடமும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும் மிகவும் வேண்டிக் கேட்டுக் கொள்வது, தவறு செய்கிற அதிகாரிகளை உடனடியாகத் தண்டிக்கக்கூடிய அதிகாரம் உங்களிடம் இருக்கிறது. அதை நீங்கள் செயல்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், முதலமைச்சர் அவர்களே சொன்னார்கள், தான் மிகவும் செயல்படக்கூடிய முதலமைச்சர், ஒரு நாளைக்கு 20 மணி நேரம் உழைக்கிறேன் என்று சொன்னார்கள். எனக்கு அதிலே மெத்த உடன்பாடு உள்ளது. எனக்கு அதிலே மாற்றுக் கருத்து கிடையாது. ஆனாலும்கூட ஏதோ சில விஷயங்கள் மறைக்கப்பட்டு, அதனால் சில நடவடிக்கைகள் தாமதப்படுகின்றன என்பதை நான் ஒரு குற்றமாகச் சொல்கிறேன். சமீபத்திலே ஒரு துறையைச் சேர்ந்த ஒரு அதிகாரியினுடைய வீட்டிலே ஒரு துறையினுடைய தலைவர் வீட்டிலே பெருமளவிற்குக் கறுப்புப் பணம் கைப்பற்றப்பட்டிருக்கிறது. அன்னிய கரன்சி அவர் வீட்டிலேயிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது. இவைகளெல்லாம் சட்டப்படியான குற்றங்கள். நாம் வெளிநாட்டுக்குச் சென்றால்கூட 500 டாலர்தான் வைத்துக்கொள்ளலாம். ஆனால் அவர் 5000 டாலர் வைத்திருக்கிறார். கோடிக்கணக்கான ரூபாய் அவருடைய வீட்டிலே இருந்து எடுக்கப்பட்டிருக்கிறது. அவருடைய அரசாங்க அலுவலகத்திலே இருந்து எடுக்கப்பட்டிருக்கிறது. அவர் 5 ஆண்டுக்காலமாக ஒரே

துறையில் இருக்கிறார். மூன்று ஆண்டுகளுக்கு மேல் நாம் யாரையும் அனுமதிப்பது கிடையாது. (மணியடிக்கப்பெற்றது) ஆனால் அந்த தனிப்பட்ட நபருக்கு மட்டும் 5 ஆண்டுக்காலம் ஒரே துறையிலே நாம் கொடுத்திருக்கிறோம். அப்படி இருக்கும்போது அவருடைய வீட்டிலே 'ரெய்டு' செய்யப்பட்டு கோடிக்கணக்கான ரூபாய் எடுக்கப்பட்டிருக்கிறது. யாருடைய பணம் அது? அந்தப் பணம் எங்கிருந்து அவருக்கு வந்தது? அவருடைய மாதச் சம்பளம் என்ன? அவருடைய சொத்து என்ன? அவருடைய கடந்த கால வாழ்க்கை முறை என்ன? அப்படி இருக்கிறபோது இவ்வளவு கோடிக்கணக்கான ரூபாய்கள் அவருடைய அலுவலகத்திலே, வீட்டிலே வைத்திருக்கிறார் என்றால், அந்த 'ரெய்டு' செய்யப்பட்ட பிறகும் இந்த அரசாங்கம் ஏன் அவர் மீது நடவடிக்கை எடுக்கவில்லை? அதற்குத் தடையாக எது இருக்கிறது என்பதனை நான் கேட்க விரும்புகிறேன். எனக்கு முதலமைச்சர் அவர்கள்மீது நம்பிக்கை இருக்கிறது. ஆனால், அவர் மீது நடவடிக்கை எடுப்பதற்குத் தடையாக யாரோ இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு நான் பதில் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு அழகிரி அவர்கள், ஐ.ஏ.எஸ். அதிகாரி தியானேஸ்வரன் அவர்களைப் பற்றி இங்கே கூறி, அவர் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று கூறுவது தவறு என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாடு கனிம நிறுவனத்தின், அதாவது 'டாமின்' நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநராகப் பணியாற்றிய திரு. ஏ.என். தியானேஸ்வரன் வீட்டில் வருமான வரித்துறை அலுவலர்கள் 19-1-1996 அன்று 'ரெய்டு' ஒன்றை நடத்தியுள்ளார்கள். இந்தச் சோதனையின்போது என்னென்ன பொருட்கள், விவரங்கள் கிடைத்தன என்பது பற்றிய முதல் அறிக்கையை வருமான வரித்துறை இயக்குநர் ஜெனரல் தமிழக அரசுக்கு 22-1-1996 தேதியிட்ட கடிதம் மூலம் அனுப்பி வைத்திருந்தார்கள். இந்தக் கடிதம் தமிழக அரசுக்கு 25-1-96 அன்று கிடைக்கப்பெற்றுள்ளது. அறிக்கை கிடைத்த அதே நாளே, அதாவது, 25-1-1996 அன்றே, உடனடியாக இது குறித்து முதற்கட்ட, பிரிலிமினரி விசாரணையை மேற்கொண்டு அறிக்கை அனுப்பி வைக்குமாறு விழிப்புப்பணி மற்றும் ஊழல் தடுப்பு இயக்குநருக்கு இந்த வழக்கு அனுப்பி வைக்கப்பட்டது. The case was referred to the Director of Vigilance and Anti-Corruption for a preliminary enquiry on the 25th

January 1996 itself. பொதுவாக ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியின்மீது குற்றம் சாட்டப்பட்டு இருந்தால், அந்தக் குற்றங்களின் உண்மை நிலையைக் கண்டறிய, அவரைவிட முதுநிலையிலுள்ள ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை வைத்து விசாரணை செய்து, அந்த விசாரணை அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படுவது வழக்கமும் முறையும் ஆகும். எனவே, அதன் அடிப்படையில் 3 முதுநிலை ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், அதாவது, தொழில் துறை முதன்மைச் செயலாளர் திரு. சி. ராமச்சந்திரன், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தலைவர் திரு. ஏ.பி. முத்துசாமி மற்றும் டிட்கோ நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. அரவிந்த் ஆகியோரைக் கொண்ட குழு ஒன்று *12-2-1996* அன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பதையும், இந்தக் குழு அவர்மீது சாட்டப்பட்டுள்ள குற்றங்கள் குறித்து முழுமையாக விசாரணை செய்து தனது விரிவான அறிக்கையை அரசுக்கு அனுப்பி வைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இந்த அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கூறுவது தவறு.

பிற்பகல் *1-05*

வருமானவரித் துறையினர் 'ரெய்டு' நடத்திய உடனேயே தமிழக அரசு திரு. ஏ.என். தியானேஸ்வரன் அவர்களை ஏன் பணி நீக்கம் செய்யவில்லை. இன்னும் ஏன் சஸ்பெண்ட் செய்யவில்லை என்று திரு. அழகிரி அவர்கள் கேட்கக்கூடும்; இன்னும் பேசவிட்டு இருந்தால், நிச்சயம் கேட்டு இருப்பார். இதற்கு முன்பாக திரு. இன்பசாகரன் என்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி வீட்டில் வருமானவரித் துறை சோதனை மேற்கொண்டபோதும் தமிழக அரசு அவரை உடனடியாகப் பணி நீக்கம் செய்யவில்லை. ஏனென்றால், அவரை முறைப்படி பணி நீக்கம் செய்வதற்கு முன்பு, திரு. கே. இன்பசாகரன் மீது எடுத்த நடவடிக்கை குறித்து வருமானவரித் துறையின் அறிக்கை கிடைக்கப்பெற்ற பின்பு, அதனை விழிப்புப் பணி மற்றும் ஊழல் தடுப்புப் பிரிவு இயக்குநருக்கு, Director of Vigilance and Anti-Corruption-க்கு அனுப்பி அவரது முதல் அறிக்கையைக் கேட்டுப் பெற்ற பின்பு, அந்த அறிக்கையின் பரிந்துரையின் அடிப்படையில்தான் தமிழக அரசு அவரை பணி நீக்கம் செய்து ஆணை பிறப்பித்தது என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, ஏ.என். தியானேஸ்வரன்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று இங்கே உள்நோக்கத்துடன் கூறிய குற்றச்சாட்டுகள் உண்மைக்குப் புறம்பானவை என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

திரு. கே. இன்பசாகரன் வீட்டில் நடைபெற்ற 'ரெய்டு' குறித்து எழுத்துப்பூர்வமான அறிக்கை தமிழக அரசுக்கு 21-9-1993-ஆம் நாளன்று கிடைத்தது. உடனடியாக விழிப்புப் பணி மற்றும் ஊழல் தடுப்புப் பிரிவு இயக்குநருக்கு 24-9-1993 அன்று அனுப்பி வைக்கப்பட்டு, முதல் அறிக்கை கேட்கப்பட்டது. இயக்குநரின் அறிக்கை 14-10-1993-ல் அரசுக்குக் கிடைக்கப்பெற்றது. அவரது பரிந்துரையின் அடிப்படையில் திரு. இன்பசாகரன் அவர்களை தமிழக அரசு அன்றே, அதாவது, அறிக்கை கிடைத்த நாளான 14-10-1993 அன்றே தற்காலிகப் பணி நீக்கம், சஸ்பென்ஷன் செய்து ஆணை பிறப்பித்தது. எனவே, எங்கள் அரசு எத்தகைய பாரபட்சமுமின்றி, சரியான முறையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மேலும், திரு. தியானேஸ்வரன் அவர்கள் தொடர்ந்து 5 ஆண்டுக்காலம் அதே பதவியில் நீடித்தார்; இன்னும் நீடித்துக்கொண்டு இருக்கிறார் என்றெல்லாம் திரு. அழகிரி அவர்கள் பேசி இருக்கிறார். குறிப்பிட்ட சில காரணங்களுக்காக சில குறிப்பிட்ட அதிகாரிகள் ஒரே பதவியில் 5 ஆண்டுகள், அதற்கு மேலும் இருந்ததற்கு, பதவி வகித்ததற்கு முன்னுதாரணங்கள் உண்டு.

மேலும் நான் தெரிவிக்க விரும்புவது, திரு. தியானேஸ்வரன் 13-2-1996 தேதியிட்ட தனது கடிதத்தில் தனக்கு ஒரு மாதம் விடுப்பு வழங்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். அதன் அடிப்படையில் அவருக்கு 13-2-1996 முதல் ஒரு மாத காலம் விடுப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதையும், அவர் தற்போது தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் பொறுப்பில் இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ச. அழகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும் கேட்டீர்கள்; பதில் கிடைத்துவிட்டது. (குறுக்கீடு) முடிந்தது. (குறுக்கீடு) கடைசியாகத் தானே நீங்கள் கேட்டீர்கள்.

திரு. ச. அழகிரி: முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நான் அளித்த விளக்கத்திற்குப்

பின்னராவது, இந்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை, முதலமைச்சர் நடவடிக்கை எடுக்கத் தயங்குகிறார்; யாரோ அதற்குத் தடையாக இருக்கிறார்கள் என்பன போன்ற உள்நோக்கம் உடைய குற்றச்சாட்டுகளை மாண்புமிகு அழகிரி அவர்கள் பேசக் கூடாது, சொல்லக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் *1–10*

திரு. ச. அழகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரும்பாத எதையும் நான் பேசமாட்டேன் என்பதை அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு நல்ல தெளிவான அறிக்கையை இங்கே வாசித்தார்கள். முதலமைச்சருக்கு இன்றைக்கு நெருக்கமாக இருக்கக்கூடிய நண்பர் பீகாரிலே இருக்கிற திரு. லல்லு பிரசாத் யாதவ் அவர்கள் கால்நடைத் துறையிலே ஊழல் ஏற்பட்டிருக்கிறது என்று கேள்விப்பட்டவுடனே 70 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளையும் மற்றும் அவர்களுக்குக் கீழே இருக்கிறவர்களையும் சஸ்பெண்ட் செய்தார்கள். அதற்குப் பெயர் தான் நடவடிக்கை. நடவடிக்கை என்றால் அப்படி ஒரு முடிவு எடுத்தால் அதற்குப் பெயர்தான் நடவடிக்கை. (குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது அந்த அரசாங்கத்திலே நடைபெற்ற ஒரு குற்றம். அந்த அரசாங்கத்திலே நடைபெற்ற ஒரு தவறு. அதனால் முதலமைச்சர் உடனடியாக நடவடிக்கை எடுத்தார். ஆனால் இங்கே வருமான வரித்துறை ஒரு ரெய்டு நடத்தியிருக்கிறது. அவர்கள் ஒரு தகவலை அரசுக்கு அனுப்புகிறார்கள். இப்படி ஒரு ரெய்டு நடத்தினோம், இன்னார் இல்லத்தில் இத்தகைய பொருட்கள் கைப்பற்றப்பட்டன என்று ஒரு அறிக்கையை மட்டும் ஒரு தகவல் அறிக்கையை மட்டும் அவர்கள் அனுப்புகிறார்கள். அதை வைத்துக் கொண்டு அது உண்மையா? இல்லையா? இதற்கு என்ன விளக்கம் என்று Enquiry நடத்தாமல் suo moto ஆக ஒரு Government அத்தகைய suspension நடவடிக்கையையோ வேறெந்தக் கடுமையான நடவடிக்கையையோ எடுக்க முடியாது. ஆகவே இதற்கெல்லாம் ஒரு முறை இருக்கிறது. அதனால்தான் இதற்கு வேறு முன்னுதாரணம் கூற வேண்டும் என்றால் திரு. இன்பசாகரன் வழக்கைத்தான் கூறவேண்டும். அதனால் தான் அதை நான் உங்களுக்கு இப்போது விளக்கிக் காட்டினேன். திரு. இன்பசாகரன் விஷயத்திலும் அவர்மீது இத்தகைய குற்றச்சாட்டு எழுந்தபோது நாங்களாகவே suo moto ஆக அவரை suspend

செய்யவில்லை. அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதற்கெல்லாம் ஒரு procedure இருக்கிறது. அதனை உடனே Directorate of Vigilance and Anti Corruption-க்கு refer செய்தோம். அவர்கள் ஒரு அறிக்கையைக் கொடுத்தார்கள். Preliminary Report. அதில் அவர்களை suspend செய்ய வேண்டும், செய்தால் நல்லது என்று பரிந்துரைத்திருந்தார்கள். அதை வைத்துத்தான் செய்தோம். அதைப்போல இப்போது திரு. தியானேஸ்வரன் மீது ஒரு enquiry-க்கு ஆர்டர் செய்திருக்கிறோம். ஆணையிட்டுள்ளோம். அது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதை விசாரிக்கும் குழுவினர் அவர்கள் அறிக்கையைக் கொடுத்த பிறகு, அவர்கள் என்ன பரிந்துரை செய்கிறார்களோ அதன்படி அவர் மீது இந்த அரசு மேல் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கா.பூ. முனுசாமி. (குறுக்கீடு)

திரு. ச. அழகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம்தான் முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். ஒரு நிமிடம் தான் கேட்டீர்கள், ஒரு நிமிடம் கொடுத்தாகிவிட்டது. மணி 1-12 ஆகிறது. இன்னும் நீங்களே பேசிக் கொண்டிருக்கிறீர்கள். உட்காருங்கள், திரு. கா.பூ. முனுசாமி.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

திரு. கா.பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 10-வது சட்டமன்றப் பேரவையினுடைய கடைசி கூட்டத் தொடரில் எனது கருத்துக்களை வழங்குவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு தங்களுக்கும் இங்கே பேசுகின்ற நிலையை உருவாக்கித் தந்த என்னுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தினை உரித்தாக்கிக் கொள்கிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கடந்த தேர்தலிலே, தேர்தல் அறிக்கையை முன்னிறுத்தி மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் கட்டிலிலே அமர்ந்து 4½ ஆண்டுக்காலம் முடிவு பெற்றிருக்கிறது. இந்த 4½ ஆண்டுக்காலத்தில் ஆட்சியிலே இருக்கிற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு ஆட்சி கலைக்கப்பட்டுவிடும் என்று நாள் குறித்தார்கள். அப்படி நாள் குறிப்பிட்டவர்கள் ஏதோ அரசியல் கட்சித் தலைவர்கள் மட்டுமல்ல இந்தப் பேரவையிலே அமர்ந்திருக்கிற எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் கூட படையெடுத்து இந்த ஆட்சியைக் கலைக்கவேண்டும்

என்று மத்திய ஆட்சிக்கு எடுத்துச் சொன்னார்கள். அப்படி எடுத்துச் சொன்னபிறகும்கூட இந்த ஆட்சி தொடர்ந்து நடைபெறுகிறது என்று சொன்னால், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆட்சியைக் காப்பாற்றுவதற்கு, யார் ஆட்சியைக் கலைக்கும் அதிகாரத்தில் இருக்கிறார்களோ அந்த அதிகாரம் படைத்தவர்களிடத்திலே மண்டியிட்டு நிற்கவில்லை. அதற்கு மாறாக இந்த ஆட்சியை நீங்கள் கலைத்துப் பாருங்கள் என்று சவால் விட்டுத்தான் இந்த 4½ ஆண்டுக்காலமாக இந்த ஆட்சியை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நடத்திக்கொண்டு வந்திருக்கிறார்கள். அப்படி ஆட்சியைக் கலைக்க முடியாது என்ற நிலையில் இருந்தாலும்கூட, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நான்கரை ஆண்டுகளில் தமிழக மக்களுக்கு ஆற்றிய பணியை இங்கே குறிப்பிடுவது என்னுடைய கடமையென்று கருதுகிறேன். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், தேர்தல் காலத்திலே நாங்கள் ஆட்சிக்கு வந்தால் இந்த நாட்டு மக்களுக்கு இந்த இந்தப் பணிகளைச் செய்வோம் என்று தேர்தல் அறிக்கையில் வைத்தார்கள். அந்தத் தேர்தல் அறிக்கையை நிறைவேற்றிய காரணத்தினால்தான் இங்கே தேசிய அளவில் பொருளாதார வளர்ச்சி 1991-92-லே 2.69 சதவிகிதமாக இருந்தது. 1994-95-லே 4.90 சதவிகிதமாக உயர்ந்தது. இது எதன் அடிப்படையில் உயர்ந்திருக்கிறது என்று சொன்னால் சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்து அமைதியான ஆட்சி நடைபெற்று வந்த காரணத்தால் பொருளாதார வளர்ச்சி நான்கு ஆண்டுக் காலத்திற்குள்ளாக 2.69 சதவிகிதமாக இருந்தது இரட்டிப்பு மடங்காக அதாவது 4.90 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது.

பிற்பகல் 1-15

இங்கே சட்டம் ஒழுங்கு பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி சொன்னார்கள். சட்டம் ஒழுங்கு அமைதி இல்லை என்று சொன்னால் இந்தப் பொருளாதார வளர்ச்சி மேம்பாடு இருக்காது. அதற்கு உதாரணம் இன்றைக்கு அண்டை நாட்டிலே, இலங்கையிலே பொருளாதாரம் வீழ்ச்சியிலே இருக்கிறது. காரணம் உள்நாட்டுப் போர். அதே போல மற்ற மாநிலங்களுடைய பொருளாதார வளர்ச்சியோடு பார்க்கும்போது இந்தியத் துணைக் கண்டத்திலே இந்தக் குறைந்த 4 ஆண்டுகளுக்குள் எந்த மாநிலத்திலேயும் பொருளாதார வளர்ச்சி உருவாகவில்லை. இதற்கு அடிப்படைக் காரணம் இங்கே சட்டம் ஒழுங்கு அமைதி இருக்கிற காரணத்தால் இவ்வளவு பெரிய பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

அதே போல இங்கே மேலும் வேலை வாய்ப்பு பற்றி சொல்லித்தான் ஆகவேண்டும். டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிப் பொறுப்பேற்றபோது எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்குள்ளாக 1.59 இலட்சம் கூடுதல் வேலை வாய்ப்புகளும் உருவாக்கவேண்டுமென்று சொல்லி அதன் அடிப்படையில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி பொறுப்பேற்றதற்கு பின்பு மூன்றாண்டுகளுக்குள்ளாக 1.29 லட்சம் வேலை வாய்ப்புகளை இந்த அரசு உருவாக்கியிருக்கிறது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் ஆண்டு ஒன்றுக்கு 32,000 வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டுமென்று நினைக்கப்பட்ட நிலைமை மாறி புரட்சித் தலைவியினுடைய அரசு புதிய தொழில் கொள்கை அடிப்படையிலே புதிய புதிய தொழில்கள் மாநிலத்தில் உருவாக்கப்பட்டதன் காரணமாக 32,000 வேலைவாய்ப்புகளுக்குக் கூடுதலாக இன்றைக்கு ஆண்டுக்கு 42,000 வேலை வாய்ப்புகளை உருவாக்கி இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல புரட்சித் தலைவி அரசு பொறுப்பேற்பதற்கு முன்பாக வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மக்கள் தொகை, இந்திய துணைக் கண்ட அளவிலே 1987-88-ல் 39.8 சதவிகிதமாக இருந்தது. 1987-88-ல் தமிழ்நாட்டினுடைய வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள மக்களுடைய கணக்கீடு 45.8% ஆக இருந்தது. அதாவது தமிழகத்தில் வாழ்ந்துக் கொண்டிருக்கிற மக்களுடைய சரிபாதி தொகை வறுமைக் கோட்டிற்குக் கீழே இருந்தது. ஆனால் இதய தெய்வம் புரட்சித் தலைவி பொறுப்பேற்ற பிறகு இன்றைய நிலைமை 1994-95-ல் தேசிய அளவில் வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ள சராசரி 37.53 சதவிகிதமே. ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 32.64 விழுக்காடு வறுமைக் கோட்டுக்கு கீழே இருக்கிறது. அதாவது 70 விழுக்காடு இன்று புதிய பொருளாதாரக் கொள்கை மூலம் புரட்சித் தலைவி அரசு கொண்டு வந்த தொழில் கொள்கை மூலம் இன்று இந்த நிலைமை உருவாகி இருக்கிறது என்பதை இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதோடு இன்று இந்தியத் துணைக் கண்டத்திலே வேளாண் துறையிலே தமிழகத்தைப் பொறுத்தவரையில் நான்கரை ஆண்டுக் காலத்தில் புரட்சித் தலைவி அரசு வேளாண் துறைக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்த காரணத்தால்தான் வேளாண் துறையிலே உற்பத்தி எந்த ஆண்டிலும் இல்லாமல் மிக உயர்ந்த அளவிற்கு உயர்ந்திருக்கிறது என்பதை சுட்டிக்காட்டியாக வேண்டும். இங்கே வேளாண் துறையிலே உணவு தானியங்கள் மொத்த உற்பத்தி 1990-91-லே 74.94 லட்சம் டன்னாக இருந்ததை 1994-95-ல் 100 இலட்சம் டன்னாக இருக்கிற நிலைமையை

இதய தெய்வம் புரட்சி தலைவி அரசு உருவாக்கி இருக்கிறது. அப்படிப் பார்க்கின்றபொழுது, தேசிய சராசரியினுடைய வளர்ச்சி 5.5 என்று இருக்கின்ற நிலையிலே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இரண்டு மடங்குக்கு மேலாக, இரண்டரை மடங்குக்கு மேலாக வேளாண் உற்பத்தியில் 12.5 விழுக்காடு அளவுக்கு உயர்ந்திருக்கின்றது என்று சொன்னால், வேளாண் துறையிலே இந்த அரசு எந்த அளவுக்கு முனைப்பாகச் செயல்பட்டிருக்கும் என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1–20

அரிசியை எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால், 1990–91–லே 57.8 லட்சம் டன் உற்பத்தியானது. 1995–லே 78 லட்சம் டன்னாக உயர்ந்திருக்கிறது. சிறு தானியத்தை எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால் 13.5 லட்சம் டன் 1991–லே என்று சொன்னால், 1995–லே 17.20 லட்சம் டன்னாக உயர்ந்திருக்கிறது. இப்படி ஒவ்வொரு விளைபொருளாக எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால், இரண்டு மடங்காக, மூன்று மடங்காக உயர்ந்திருக்கிற நிலைமை வேளாண் துறையிலே உருவாகி இருக்கிறது. வேளாண் துறையிலே எந்த அளவுக்கு உருவாகி இருக்கிறதோ அதேபோல தொழில் துறையிலேயும் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மிக முக்கியத்துவமாக ஈடுபட்டு, 1991–லே இருந்து இன்றுவரை ரூ.2,674.20 கோடி முதலீடு செய்யக்கூடிய சுமார் 327 வெளிநாட்டு முதலீட்டுத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்து இன்று இந்த மாநிலத்திலே அவைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். இப்படி, வேளாண் துறையானாலும் சரி, தொழில் துறையானாலும் சரி, இன்று தமிழகம் முன்னணியிலே இருக்கக்கூடிய நிலையிலே இருந்து கொண்டிருக்கிறது. இது இவ்வாறு இருக்க கிராமப்புறங்களில் வாழ்ந்துகொண்டிருக்கிற ஏழை எளிய விவசாயிகளுக்கு, தொழிலாளர்களுக்கு அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்ற நல்ல திட்டங்களைத் தீட்டி, ஆட்சிப் பொறுப்பை ஏற்ற உடனேயே ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாய் என்ற திட்டத்தை உருவாக்கி, ஒவ்வொரு கிராமத்திற்கும் தேவையான அடிப்படையான பாதுகாக்கப்பட்ட குடிநீர், சாலை வசதி, மின்விளக்குகள் இவை அனைத்தும் இன்று நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இங்கு மேதகு ஆளுநர் குறிப்பிட்டபோது, தமிழகத்தைப் பொறுத்தவரையில் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் இன்னும் 50 குடியிருப்புகளுக்குத்தான் கொடுக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார். இது எவ்வளவு பெரிய மகத்தான உண்மை. மற்ற மாநிலங்களை எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால், வட மாநிலங்களைப்

பார்ப்போம் என்று சொன்னால், இன்றும்கூட ஒரு கிராமத்திலே இருக்கிற பெண்மணி தண்ணீர் எடுக்க வேண்டுமென்று சொன்னால், இரண்டு கிலோமீட்டர், 3 கிலோமீட்டர் சென்று தண்ணீர் எடுக்க வேண்டிய அவல நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அப்படி இரண்டு கிலோமீட்டர், மூன்று கிலோமீட்டர் சென்றாலும் அங்கே பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்கிறதா என்று சொன்னால் அங்கே பாதுகாக்கப்பட்ட தண்ணீர் கொடுக்கப்பட முடியவில்லை. ஆனால், தமிழகத்தைப் பொறுத்தவரையில், இந்த 50 கிராமங்களைத் தவிர மற்ற அனைத்து கிராமங்களிலேயும் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை, இந்த 4½ ஆண்டுக் காலத்திற்குள்ளாக இந்த அரசு நிறைவேற்றியிருக்கிறது.

அதோடு மட்டுமல்லாமல், இப்பொழுது 50 குடும்பங்கள் எங்கே வாழ்ந்துகொண்டிருக்கின்றதோ அங்கு எல்லாம் உலகச் செய்திகளைத் தெரிந்துகொள்வதற்கும், நாட்டு நடப்புகளைத் தெரிந்துகொள்வதற்கும், மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்கும், வண்ணத் தொலைகர்ட்சிப் பெட்டி கொடுக்க வேண்டுமென்று கிட்டத்தட்ட 45,302 தொலைகாட்சிப் பெட்டிகளை இந்த அரசு கொடுக்கிறது. அநேகமாக இந்தியத் துணைக் கண்டத்திலே எத்தனை தொலைக்காட்சிப் பெட்டிகள் செய்கின்ற தொழிற்சாலைகள் இருக்கிறதோ அத்தனை தொழிற்சாலைகளிலேயும் சொல்லி இந்த 45 ஆயிரம் தொலைகாட்சிப் பெட்டிகள் அநேகமாக தமிழ்நாட்டுக்கு வந்துகொண்டிருக்கின்றன என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அதேபோல, இன்று ஏழைத் தொழிலாளிகளுக்காக வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு எந்தத் துறையாக இருந்தாலும் அவர்கள் வாழ்க்கை வசதிகளை உயர்த்துவதற்காக அவர்களுக்கு ஏற்ற நல்ல திட்டங்களை புரட்சித் தலைவி அவர்கள் செய்துகொண்டு இருக்கிறார்கள். அதேபோல, 72 லட்சம் ஏழைத் தாய்மார்களுக்கு இலவசமாகப் புடவை கொடுத்திருக்கிறார்கள். 68 லட்சம் ஏழைத் தொழிலாளர்களுக்கு இலவசமாக வேட்டி வழங்கப்பட இருக்கிறது. இப்படி ஒவ்வொரு நிலையிலேயும் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக புரட்சித் தலைவி அவர்கள் நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற காரணத்தால்தான் மனித மேம்பாட்டு நிலைமையை ஆய்வு செய்கின்ற நேரத்திலே இந்தியத் துணைக் கண்டத்திலே, கேரளம், பஞ்சாபிற்கு அடுத்தபடியாக தமிழகத்தில் ஒவ்வொரு தனி மனிதனுடைய வாழ்க்கைத் தரமும் உயர்ந்திருக்கிறது என்ற

மகிழ்ச்சிகரமான செய்தியை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இது புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாட்சிக்கு ஒரு எடுத்துக்காட்டு.

அதேபோல பிறப்பு, இறப்பு விகிதம். இங்கே இதை நான் குறிப்பிட்டாக வேண்டும். இந்த ஆட்சி நல்லாட்சியாக இருக்கின்ற காரணத்தால்தான் மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது இந்த நாட்டிலே பிறக்கின்ற குழந்தைகள் எத்தனை பேர்? அப்படிப் பிறக்கின்ற குழந்தைகளில் எத்தனை இறக்காமல் பிறக்கின்றன என்பதை இங்கே ஆய்வு செய்தாக வேண்டும். கி.பி.2000 ஆண்டிலே வரையறுக்கப்பட்ட பிறப்பு-இறப்பு விகித தேசிய இலக்கை தமிழ்நாடு ஏற்கெனவே அடைந்துள்ளது என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டாக வேண்டும்.

பிற்பகல் 1-25

2010 ஆம் ஆண்டிலே பிறப்பு விகிதம் 1000-க்கு 21 என்று தேசிய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இருக்க, இங்கே தமிழ்நாட்டிலே 1994-ஆம் ஆண்டிலேயே 1000-க்கு 19 என்று குறைக்கப்பட்டிருக்கிற சாதனை நடந்திருக்கிறது. அதாவது தேசிய அளவில் 2010-ல் 1000-க்கு 21 என்று குறைக்க வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், 1994-லிலேயே இந்த 21 என்பது குறைக்கப்பட்டு, 19 ஆக ஆக்கப்பட்டிருக்கிறது. இது 2010-க்கு வருகிறபோது, நிச்சயமாக புரட்சித் தலைவியின் நல்லாட்சியின் காரணமாக 10-க்குக் கீழே குறையும் என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இறப்பு விகிதத்தைப் பொறுத்தவரையிலே, 2010-ஆம் ஆண்டிலே 1000-க்கு 9 என்ற தேசிய இலக்கு இருக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் கடந்த ஆண்டே, இங்கே ஒரு சுகாதாரமான ஆட்சி நடந்து கொண்டிருக்கிற காரணத்தால், 1994-லிலேயே அது 7.1 என்று குறைந்திருக்கிறது. இதன்படி பார்த்தால், 2010-ல் இறப்புவிகிதம் 1000-க்கு 2 என்று வரும் என்று சொன்னால் அது மிகையாகாது. அதேபோல, பிறக்கின்ற குழந்தைகள் விகிதம், தேசிய அளவில் 1000-க்கு 73 என்று இருக்கிறது. ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், கடந்த ஆண்டே 1000-க்கு 59 என்று குறைந்திருக்கிறது. இது எதைக் காட்டுகிறது என்றால், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தாம் கொண்டு வந்த 15 அம்சத் திட்டங்களின் அடிப்படையில், செயல்பட்டதால்தான் இந்த இறப்பு விகிதம் குறைவு ஏற்பட்டிருக்கிறது. பிறக்கின்ற குழந்தைகள் நல்ல விதமாக வளருகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், நாட்டிலே 2000 ஆண்டுக் காலமாக ஒரு சமூகம் பாதிக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு தேர்தல் நெருங்கி விட்ட காரணத்தால், அரசியல் கட்சித் தலைவர்கள் எல்லாம் ஒரு தனிப்பட்ட சமூகத்திற்கு இந்த அரசும் ஆட்சியும் எதுவும் செய்துவிடவில்லை என்று சொல்கிறார்கள். இங்கேகூட சொன்னார்கள், சட்டம் ஒழுங்கு பாதிக்கப்பட்டிருக்கிறது. தென் மாவட்டங்களில் வன்முறைக் கலாச்சாரம் உருவாகியிருக்கிறது என்று. அதற்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் விளக்கமாகப் பதில் அளிக்கும்போது, ஒரு தனிப்பட்ட நபரின் விருப்பு வெறுப்பு என்ற காரணத்தால், கலவரம் நடந்தது என்று சொன்னார்கள். அந்த அடிப்படையில் பார்க்கிறபோது, ஆண்டாண்டுக் காலமாக அந்த ஆதிதிராவிட இனத்திற்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அம்பேத்கார் ஆட்சிப்பொறுப்பிலே இருந்தால்கூட, அம்பேத்காரே முதலமைச்சராக இருந்தால்கூட அந்தச் சமூகத்திற்கு இவ்வளவு பெரிய பணியை, உதவியை, திட்டங்களைச் செய்திருப்பாரா என்று சொன்னால் நிச்சயமாக நிறைவேற்றியிருக்க மாட்டார்கள். காரணம், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தச் சமூகம் மேலும் வளர்ந்து மற்ற சமூகங்களுக்கு இணையாக வாழவேண்டுமென்று, தான் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடனே அவர்களுக்காக ஒரு பத்து அம்சத் திட்டத்தை இங்கே அறிமுகப்படுத்தினார்கள். அதன் அடிப்படையிலே இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப்பொறுப்பை ஏற்றபின்பு, 8.4 லட்சம் வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இங்கே நான் ஒன்றைக் குறிப்பிட்டாக வேண்டும். ஒரு குடும்பத்திற்கு ஒரு வீட்டுமனைப்பட்டா என்று வைத்துக் கொள்வோம். அந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு குடும்பத்தில் 6 பேர் 10 பேர் இருக்கிறார்கள் என்றாலும், அந்த அளவில் எட்டரை லட்சம் குடும்பங்கள் இருக்கின்றன என்று ஒரு கணக்கு வைத்தாலும் 60 லட்சம் ஏழை அரிசன மக்களுக்கு இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்கள் குடியிருக்க நிலப்பட்டா வழங்கியிருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1–30

அதோடு மட்டுமல்ல, 1981–லேயிருந்து 1990–வரை கிட்டத்தட்ட பத்தாண்டுக்காலம் ஆதிதிராவிட மக்களுக்காகவே ஆட்சி செய்தோம் என்று சொல்லிக்கொள்கிற பல தலைவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தும்கூட. இந்தச் சமூகத்திற்கு அவர்கள் செய்கின்ற சேவை, பத்தாண்டுக்காலம் செய்த சேவை என்ன என்றால், 91, 801 வீடுகள்தான் கட்டிக்கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இதயதெய்வம் டாக்டர்

புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற நான்கரை ஆண்டுகளுக்குள்ளாக 1,27,000 கான்கிரீட் வீடுகள் கட்டிக்கொடுத்திருக்கிறார்கள். அதேபோல், இந்த நடப்பு ஆண்டைப் பொறுத்தவரையில், 70 ஆயிரம் பேருக்கு வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அதாவது, ஒட்டுமொத்தமாக இந்த 5 ஆண்டுகளாகப் பார்த்தால், ஆதிதிராவிட சமூகத்திற்கு 2 லட்சம் கான்கிரீட் வீடுகள் புரட்சித் தலைவி அவர்கள் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். 10 ஆண்டுக்காலம் ஆட்சியில் இருந்தவர்கள் 90,000 வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். 5 ஆண்டுக்காலமாக ஆட்சியில் இருக்கிற இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இரண்டு இலட்சம் கான்கிரீட் வீடுகளை அந்தச் சமூகத்தினருக்குக் கட்டிக் கொடுத்து இருக்கிறார்கள். கட்டிக் கொடுத்த வீடுகளுக்கு எல்லாம் மின் இணைப்பு. கிட்டத்தட்ட 4.14 இலட்சம் குடும்பங்களுக்கு நேரடியாக நிதியுதவியை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கொடுத்து இருக்கிறார்கள். இப்படி ஆதிதிராவிட மக்களுக்கு மட்டுமல்லாமல் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டுமென்று ஆண்டாண்டு காலமாக போராடி வந்த திராவிட இயக்கத்தினுடைய கொள்கைப் பிடிப்பை, 69 சதவீத இட ஒதுக்கீட்டை இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே நிறைவேற்றி இருக்கிறார்கள். இப்படி எந்தச் சமூகமானாலும் சரி, அந்தச் சமூகத்திற்குத் தேவையான அடிப்படைத் தேவைகள், அவர்கள் ஆண்டாண்டுக் காலமாகக் கோரிய கோரிக்கைகள். அனைத்தையும் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். இப்படி நிறைவேற்றிக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவி அவர்களின் நல்ல காரியங்களுக்கு இங்கேயிருக்கிற எதிர்கட்சித் தலைவர்கள் ஆதரவு கொடுக்கவில்லை என்றாலும், அவர் செய்த பெரும் பணிக்கு இந்த மாநிலத்தைச் சேர்ந்த பல பல்கலைக்கழகங்கள் டாக்டர் பட்டம் கொடுத்து கௌரவித்ததோடு மட்டுமல்லாமல் தங்களுக்கு ஒரு மரியாதையும் ஏற்படுத்திக் கொண்டன. அதோடு நின்றுவிடவில்லை. பக்கத்து மாநிலம் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்குப் பட்டம் கொடுக்கிறது. கேரள மாநிலம் பீஷ்மாச்சார்யா பட்டம் கொடுக்கிறது. இப்படி அண்டை மாநிலங்கள் கொடுத்தது போதாது என்று இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் சிறு குழந்தைகளுக்கு, சிறார்களுக்கு, பாதிக்கப்பட்ட பெண்களுக்கு, புதிய புதிய திட்டங்களை, புதிய கண்ணோட்டத்தோடு கொண்டு வந்த திட்டங்கள் இந்தியத் துணை கண்டத்திற்கு

மட்டுமல்லாமல் உலகத்திற்கே எடுத்துக்காட்டான திட்டங்கள் என்ற காரணத்தால் அமெரிக்காவிலிருந்து பட்டம் இங்கே வந்து கொடுத்துச் சென்று இருக்கிறார்கள். தெற்காசிய நாடுகள் கூட்டமைப்பு சார்பாக 1995-ஆம் ஆண்டின் சிறந்த பெண்மணி என்று பட்டத்தைக் கொடுத்து இருக்கிறார்கள். இந்தப் பட்டம் மட்டுமல்லாமல் அடுத்து வருகிற தேர்தலில் வெற்றி பெறச் செய்து, மீண்டும் தமிழகத்தின் முதல்வராக இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்று, உலகளாவிய பட்டங்கள் பல பெற வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. காஞ்சி பன்னீர்செல்வம்.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை மீதான விவாதத்திற்கு நன்றி கூறும் தீர்மானத்தை வழிமொழிந்து பேசுகிற வாய்ப்பினை அளித்த, ஆறு கோடி தமிழர்கள் நெஞ்சத்தில் நிறைந்த தெய்வமாக, திராவிட இயக்க வரலாற்றில் தனிப்பெரும் சக்தியாக, கோடானு கோடி மக்கள் மனக்கோவிலில் குடியிருக்கும் வாடாத பாரிஜாதமாக, மாணிக்க தீபமாக, தெய்வத்தால் கிடைத்த செல்வமாக, தெள்ளு தமிழர் இல்லங்களில் காவல் தெய்வமாக விளங்கிக் கொண்டிருக்கிற, எங்களைப் போன்ற சாதாரண தொண்டர்கள் எல்லாம் இந்த அவையிலே பேசுகிற வாய்ப்பினை உருவாக்கித் தந்திருக்கிற, என்னை ஆளாக்கிய இதய தெய்வம், தமிழகத்தின் நிரந்தர முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பாதங்களைத் தொட்டு, அவர் இருக்கிற திசை நோக்கி வணங்கி என்னுடைய உரையை இங்கே தொடங்குகிறேன்.

சட்டம் ஒழுங்கு நிலைமை குறித்து இங்கே பேசியவர்கள் எந்த அளவுக்கு புரட்சித் தலைவி அவர்கள் மீது, புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு மீது, புழுதிவாரித் தூற்ற வேண்டுமென்று இங்கே பேசினார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்திருந்தாலும்கூட, நேற்றையதினம் ஆளுநர் அவர்களே இங்கே மிகத் தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள். இதய தெய்வம், தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற இந்த 4½ ஆண்டுக்காலத்தைத் தாண்டி, ஐந்தாம் ஆண்டை நெருங்கிக் கொண்டிருக்கிற இந்தக் காலக்கட்டத்திலே, தீவிரவாத சக்தியையும், பயங்கரவாதத்தையும் தமது தீவிரமான நடவடிக்கைகளால் அகற்றி தமிழகத்தை மீண்டும் அமைதிப் பூங்காவாக மாற்றி இந்த ஐந்தாண்டுக் காலத்திற்குள்ளே புரட்சித்

தலைவி அவர்களுடைய அரசு எந்த அளவுக்குச் செயல்பட்டு இருக்கிறது என்பதை நேற்றையதினம் ஆளுநர் அவர்களே குறிப்பிட்டு இருக்கிறார்கள். இன்றைக்குச் சட்டம் ஒழுங்கு முறையாகப் பராமரிக்கப்பட்டு வந்துள்ளது என்பதை இங்கே பேசியவர்கள் மட்டுமல்ல, வெளியே இருக்கின்ற நாட்டு மக்களும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கின்ற பல மாநிலங்களை எண்ணிப் பார்க்க வேண்டும். காஷ்மீர் மாநிலத்தில் தேர்தல் நடத்த முடியுமா? தேர்தல் நடக்குமா, மக்கள் அங்கே உயிரோடு இருப்பார்களா, இருக்கமாட்டார்களா என்ற நிலை எல்லாம் கூட அங்கே இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், டெல்லியிலே கூட இந்த நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆக, இப்படி பல மாநிலங்களிலே சட்டம் ஒழுங்கு சரியாக இல்லாத சூழ்நிலையில் இன்றைக்கு நாடு இருந்து கொண்டிருக்கிறது. ஆனால், புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற காலத்திலேயிருந்து, எப்படி இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். அதற்கு முன்னாலே அரசாங்கங்கள் எல்லாம் இருந்தபோதும், எந்த அளவுக்கு சட்டம்-ஒழுங்கு சீரழிந்து கெட்டுப் போய் இருந்தது என்பதை இந்த நாடு நன்றாக அறியும். அதற்குப் பின்னால், புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பின்னால், தன்னுடைய உயிரையும்கூட துச்சமென மதித்து, இங்கே தீவிரவாதிகளை ஒடுக்க வேண்டும் அடக்க வேண்டும் என்று முடிவு எடுத்து, அவர்களை அடக்கி, இன்றைக்குத் தமிழகத்தை ஒரு அமைதிப் பூங்காவாக மாற்றி, புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு இன்றைக்கு நல்லமுறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

பிற்பகல் 1–35

அதேபோல், தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றவுடனே, கையெழுத்திட்ட முதல் கோப்பு இந்த நாட்டில் உள்ள ஏழை எளிய மக்கள், தாழ்த்தப்பட்ட சமுதாயத்து மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்து கொண்டிருக்கிற மக்கள், ஒருவேளைச் சாப்பாட்டிற்கேகூட உணவு இல்லாத நிலைமையில் வாழ்ந்து கொண்டிருக்கிற மக்கள் மத்தியிலே எந்த அளவுக்கு மாற்றத்தைக் கொண்டு வந்தது என்பது உங்களுக்குத் தெரியும். இந்த அரசுக்கு முன்னாலே ஒரு அரசு இருந்தது. அந்த அரசு மலிவு விலையிலே மது தருகிறோம் என்று சொல்லி, அந்தக் குடும்பங்களை எல்லாம் சீரழித்தது. ஆனால், புரட்சித் தலைவி அவர்கள், அந்தக் குடும்பங்களிலே வாழ்ந்து கொண்டிருக்கிற

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

தாய்மார்களை எண்ணிப் பார்த்து, அந்தக் குடும்பங்கள் சீரழிந்து இருக்கின்ற நிலைமையை எண்ணிப் பார்த்து, அந்த மலிவு விலை மதுவை ஒழித்ததோடு மட்டுமல்ல, இன்றைக்குத் தமிழகத்திலே அது எந்த நிலையிலும் இருக்கக்கூடாது என்ற அளவில் சட்டத்தைக் கொண்டு வந்து, திட்டத்தைக் கொண்டு வந்து, காவல் துறை மூலமாக அடக்கி, ஒடுக்கியிருக்கிறார்கள் என்பதை நான் பெருமையோடு, மகிழ்ச்சியோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதனால், நாட்டு மக்கள் மகிழ்ச்சியோடு அதிலும் குறிப்பாக, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள, பிற்படுத்தப்பட்ட மக்கள் எல்லாம், நாங்கள் தொகுதிக்குப் போகின்ற நேரத்திலே மிகத் தெளிவாக, புரட்சித் தலைவி அவர்களைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இங்கே பேசியவர்கள் தொழில் துறையிலே பின்தங்கிய மாநிலமாக இந்த மாநிலம் இருந்து கொண்டு இருக்கிறது என்று ஒருசிலர் காழ்ப்புணர்ச்சியோடு சொன்னார்கள். நான் அவர்களுக்கு எல்லாம் சொல்லிக் கொள்வேன். தொழில்துறையிலே இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கிற மாநிலங்களிலேயே முதல் மாநிலமாக நம்முடைய தமிழகம் இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கிற முதல் முதலமைச்சராக உள்ள இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்களிடம் வெளிநாடுகளிலேயிருந்து பலர் தாங்களாகவே முன்வந்து தமிழகத்திலே தொழிலைத் தொடங்க வேண்டும் என்று தமிழக அரசை அணுகிய நேரத்திலே, புரட்சித் தலைவி அவர்கள், - தமிழகத்திலே அது எந்தத் துறையாக இருந்தாலும் - தொழில்துறையில், தமிழகம் எந்த நிலையிலும் உயர்வு பெற்றாகவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில், தொழில் துறையிலே முதலீடு செய்ய வருகின்றவர்களின் எண்ணிக்கையை அதிகமாக்கி, அதன் மூலமாக இந்த 5 ஆண்டுகளில் மட்டும் 85 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் மேலும் தமிழ்நாடு தொழில் துறையில் வளர்ச்சி பெற சென்னைக்கு அருகேயிருக்கின்ற மறைமலை நகரிலே ஆண்டு ஒன்றுக்கு 1 லட்சம் கார்கள் தயாரிக்கும் தொழிற்சாலையை உருவாக்குவதற்கு இன்றைக்கு வழிவகை செய்திருக்கிறார்கள்.

அதேபோல் சிறு தொழிலாக இருந்தாலும்கூட, ஏழை எளிய மக்களும் தொழிலைத் தொடங்குவதற்கு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு இன்றைக்கு முனைப்பாகச் செயல்பட்டு, திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

இந்த நாட்டிலே இருக்கின்ற ஏழை எளிய மக்கள், அதிலும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், வறுமைக் கோட்டிற்குக்கீழே வாழ்ந்து கொண்டிருக்கிற மக்கள் எல்லாம் அன்றைக்குப் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சியிலே ஒரு கிலோ அரிசியை 1 ரூபாய் 75 காசுக்குக் கொடுத்தபோது, எப்படி அவர்களை வாயார வயிராற வாழ்த்தினார்களோ, அதேபோல், அவர்களுடைய வாரிசாக இருக்கின்ற தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர், எங்கள் இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை இன்றைக்கு ஏழை எளிய மக்கள் வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். காரணம், 4 ஆண்டுக்காலமாக மழை அதிகமாகப் பெய்து கொண்டிருக்கிற சூழ்நிலை இருந்தாலும்கூட, கடந்த 6 மாத காலமாக மழை இல்லாத சூழ்நிலை இருந்து, வறட்சியாக ஒரு சில மாவட்டங்கள் இருந்து கொண்டு இருக்கிற நிலையிலேகூட, இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் ஒரு கிலோ அரிசியை இரண்டு ரூபாய்க்கு மக்களுக்குக் கொடுக்கின்ற திட்டத்தை நாட்டு மக்கள் நெஞ்சாரப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். அரிசி கொடுக்கிற இந்தத் திட்டத்தில் மட்டும், சுமார் 600 கோடி ரூபாய் அளவுக்கு அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்டிருந்தாலும்கூட, அதையெல்லாம் பொருட்படுத்தாமல், 1996 ஜனவரி முதல் நாளிலிருந்து ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் 12 கிலோ அரிசி என்று இருந்ததை, இன்றைக்கு 20 கிலோவாக உயர்த்திக் கொடுத்ததை நாட்டு மக்கள் நெஞ்சார பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 1-40

அதுமட்டுமல்ல. இன்றைக்கு நதி நீர் பிரச்சினை பற்றிச் சொன்னார்கள். நதி நீர் பிரச்சினையிலே இங்கே பேசியவர்கள் எல்லாம் சொன்னார்கள். இங்கே வீராணம் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். சென்னைக்கு வந்து விடுமா என்று கேட்டார்கள். நான் அவர்களுக்கு எல்லாம் சொல்லிக்கொள்வேன். மறைந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களும் அன்றைக்குப் போட்ட அந்தத் திட்டத்தை இன்றைக்கு புரட்சித் தலைவர் அவர்களுடைய வாரிசாக இருக்கின்ற புரட்சித் தலைவி அவர்கள் மறைந்த என்.டி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலே முனைப்பாக அந்தத் திட்டத்தில் முடிவு எடுத்து செயல்படுத்த வேண்டும், இந்த டிசம்பருக்குள் தண்ணீரைச் சென்னைக்கு கொண்டு வரவேண்டுமென்று சொல்லி, அவர்களிடத்திலே பேசி, முடிவு எடுத்து, அதற்குண்டான வழிவகைகளைச் செய்தார்கள். அதற்குத் தேவையான தொகையை இந்த அரசு கொடுக்கவேண்டுமென்று

சொன்னவுடனேயே கூட, அப்போது நிதியாதாரத்தை புரட்சித் தலைவி அவர்கள் கொடுத்தார்கள். கொடுத்து நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னார்கள். காலத்தின் சூழ்நிலை அவர் மறைந்துவிட்ட காரணத்தினாலே இடையிலே ஒரு அரசாங்கம் இன்றைக்கு ஆந்திராவிலே வந்திருக்கிறது. மாற்றாந்தாய் மனப்போக்கு என்று சொல்வார்கள். அதைப்போன்று இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற, கேட்டிருக்கின்ற கிருஷ்ணா தண்ணீரைக் கொடுப்பதற்கு மறுத்து, இன்றைக்கு தடுத்திருக்கிறது. நான் இன்றைக்கு மத்திய அரசைக் கேட்டுக்கொள்வேன். அப்பேறபட்ட திட்டங்களைத் தடை செய்து கொண்டிருக்கிற ஆந்திர முதலமைச்சரிடத்திலே மத்திய அரசாங்கம் தலையிட்டு சென்னைக்குக் கொடுக்க வேண்டிய அந்த கிருஷ்ணா நீரைக் கொடுப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல காவிரிப் பிரச்சினை. இன்றைக்கு காவிரி நதி நீர்ப் பிரச்சினை பற்றி எல்லோரும் சொன்னார்கள். காவிரிப் பிரச்சினை இன்றைக்கு நேற்றைக்கு மட்டுமல்ல, தொன்று தொட்ட காலம் என்று சொல்வார்களே, அந்தக் காலக் கட்டத்திலிருந்து இருக்கிற ஒரு பெரிய பிரச்சினை. இருந்தாலும் கூட, எத்தனையோ தலைவர்கள் தமிழகத்திலே வாழ்ந்தார்கள், ஆண்டார்கள். ஆனால் அவர்கள் எல்லாம்கூடப் போராடினார்களே தவிர, சில தலைவர்கள் முதலமைச்சராக இங்கே இருந்த காலத்திலே குறுக்கே அணை கட்டுவதற்குத் துணை இருந்தார்களே தவிர, ஆனால் பேறறிஞர் அண்ணாவிற்குப் பின்னாலே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய வாரிசாக இன்றைக்கு அவருடைய அடியொற்றி வந்து கொண்டிருக்கிற புரட்சித் தலைவி ஒருவர்தான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற இந்தக் காலக்கட்டத்திலே தன்னுடைய உயிரைக்கூட துச்சம் என மதித்து புரட்சித் தலைவி அவர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். உண்ணாவிரதம் இருந்த நேரத்திலே தருகிறோம் என்று சொன்னார்கள். இருந்தாலும்கூட புரட்சித் தலைவி ஒருவர்தான் கடந்த ஒரு மாத காலத்திற்கு முன்னாலே டில்லிக்குச் சென்று அங்கே செய்ய வேண்டிய பணிகளை எல்லாம் செய்து வாதாட வேண்டிய பிரச்சினையை மைய அரசிடத்திலே, பிரதமரிடத்திலே வாதாடி இன்றைக்கு நடுவர் மன்றத் தீர்ப்பைத் தந்திருக்கின்ற அந்தத் திட்டத்தினை நிறைவேற்றித் தரவேண்டுமென்று போராடினார்கள். போராடியது மட்டுமல்ல, போராடி அதைப் பெற்றுத் தந்தார்கள். 6 டி.எம்.சி. அடி தண்ணீரைத் தந்தால் மட்டும் போதாது, இன்னும் 5 டி.எம்.சி. அடி தண்ணீரைத் தர வேண்டுமென்ற நடுவர்மன்றத் தீர்ப்பை மத்திய அரசே அந்த அரசாங்கத்திற்குச் சொல்லி, கர்நாடக அரசுக்குச்

சொல்லி தமிழகத்திற்கு இன்னும் தண்ணீரைப் பெற்றுத் தரவேண்டுமென்று பெற்றுத் தந்திருக்கிற ஒரே ஒரு காவிரித் தாய், இந்த தமிழகத்தினுடைய முதலமைச்சர், எங்கள் இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்வதிலே பெருமைப்படுகிறேன்.

அதுமட்டுமல்ல, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் சேது சமுத்திரத் திட்டம் பற்றி ஒரு கருத்தைச் சொன்னார்கள். அது இன்றைய நேற்றைய பிரச்சினை அல்ல. பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு முன்னாலே இருந்த தலைவர்கள் எல்லாம் போராடிக் கொண்டிருந்த பிரச்சினை. தென் மாவட்டங்களிலே இன்றைக்கும் நெஞ்சிலே ஏந்திக் கொண்டிருக்கிற பிரச்சினை சேது சமுத்திரத் திட்டம். கங்கைகொண்டான் திட்டம் என்பது 5 ஆண்டுக்காலத்திலே என்னவாயிற்று என்று கேட்டார்கள். நான் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டம் சம்பந்தமாக மத்திய அரசாங்கத்திடம் கடந்த 30 ஆண்டுக் காலமாகப் போராடிக் கொண்டிருக்கிறோம். 30 ஆண்டுக் காலமாக போராடிக் கொண்டிருக்கிற பிரச்சினை இது. தூத்துக்குடி, சென்னை, இடையிலே இருக்கிற மற்ற மாவட்டங்களுக்குக் கூட வழிவகை ஏற்படும். ஆகவே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று தென் மாவட்டத்திலே இருக்கின்றவர்கள் வாதாடிக் கொண்டிருக்கிற இந்தப் பிரச்சினையில், இன்னும் மாற்றாந்தாய் மனப் போக்கிலே மத்திய அரசாங்கம் தடைப்படுத்தி வைத்திருக்கிறது. இதை இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் டெல்லிக்குச் சொல்லி உடனடியாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று சொன்னார்கள். இன்னும் நிறைவேற்றாமல் அவர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். மத்திய அரசு இதிலே மெத்தனமாக இருந்துகொண்டிருக்கிறது. உடனடியாக இதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இங்கே தமிழகத்திலே கிறித்துவ சமுதாயத்திலே இருக்கின்ற மக்கள், ஆதி திராவிட மக்களுக்கு இணையாக அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய சலுகைகளை தங்களுக்கும் கொடுக்கவேண்டுமென்று மத்திய அரசாங்கத்திற்குச் சொன்னார்கள். ஆனால் அவர்கள் செய்யவில்லை. அவர்களைக் கண்டித்துக்கூட தென் மாவட்டங்களில் பல இடங்களிலே கருப்புக் கொடியைக் காட்டினார்கள். அதை மறந்துவிடக்கூடாது. ஆனால் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்து மதத்தைச் சேர்ந்த ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்பட்டு வரும் அதே சலுகைகளை கிறித்துவ மதத்தைச் சேர்ந்த ஆதி திராவிட மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று – கிறித்துவ

சமுதாய மக்கள் மத்திய அரசை வற்புறுத்தி பல இடங்களில் கருப்புக் கொடியை ஏற்றியதை இந்த நேரத்தில் நினைவுபடுத்துவதோடு இன்றைக்கு தமிழகத்தை ஆண்டுக்கொண்டிருக்கிற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்தான் இங்கே இருந்து மத்திய அரசுக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். இது அடிப்படை பிரச்சினை, கிறித்துவ மதத்தைச் சேர்ந்தவர்களுக்கும், இந்து மதத்தைச் சேர்ந்த ஆதி திராவிட மக்களுக்குக் கொடுக்கின்ற சலுகைகளை கொடுக்க வேண்டும் என்ற அம்மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, மத்திய அரசு உடனடியாக நிறைவேற்றித்தர வேண்டும் என்று இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்தான் கடிதம் அனுப்பினார்கள். அது இன்னும் செவி சாய்க்கப்படாமல் இருக்கிறது. அதை மத்திய அரசு நிறைவேற்றித் தரவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் *1–45*

அது மட்டும் அல்லாமல், தமிழகத்திலே எத்தனையோ முதலமைச்சர்கள் வாழ்ந்தார்கள். எத்தனையோ முதலமைச்சர்கள் ஆண்டு முடித்தார்கள். ஆனால் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற காலத்திலேயிருந்து, நாட்டு மக்களை ஒவ்வொரு மாவட்டம் தோறும் சந்தித்து, அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று உத்தரவு வழங்கிய ஒரே ஒரு முதலமைச்சர் புரட்சித் தலைவிதான் என்பதை யாரும் மறந்து விட மாட்டார்கள். அது மட்டும் அல்ல, ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியை தனியாக இதற்கென்று போட்டு, மக்கள் என்ன கோரிக்கை தருகிறார்களோ அந்த கோரிக்கையைப் பெற்று, அவர்களுக்குச் செய்ய வேண்டிய பணிகளைச் செய்ய வேண்டும் என்று *1991*–ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் *15.98* லட்சம் மனுக்கள் பெறப்பட்டு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடந்த *5* ஆண்டுகளில் *8* லட்சம் பேருக்கு *531* கோடி ரூபாய் அளவில் அவர்களுக்கு தேவையான உதவிகளை புரட்சித் தலைவி அரசு நிறைவேற்றி வந்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

காவல் துறையை எடுத்துக் கொண்டால், இந்திய துணைக் கண்டத்திலே ஆட்சிப்பொறுப்பிலே இருக்கிற பிரதமரிடத்திலே, புரட்சித் தலைவி ஆட்சிப் பொறுப்பை ஏற்ற உடனே தமிழகத்திலே தீவிரவாதிகள் ஊடுருவி இருக்கிறார்கள், அந்தத் தீவிரவாதிகளை அடக்க வேண்டும், அந்தத் தீவிரவாதிகளை ஒடுக்க வேண்டும் என்று கேட்டார்கள். இன்னும் சொல்லப்போனால் நீங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறீர்களே, எங்களுடைய ஒவ்வொரு வீட்டிலேயும் குடும்பத் தலைவனாக ஏற்றுக்

கொண்டிருக்கிறோம் திரு. ராஜீவ் காந்தி அவர்களை என்று. அப்படிப் பட்டவரையே கொலை செய்வதற்குக்கூட காரணமாக இருந்த தீவிர வாதிகளை அடக்குவதற்குத் தேவையான உதவிகளைச் செய்ய, காவல் துறையை நவீனப்படுத்த, காவல் துறைக்கு நீங்கள் நிதி கொடுக்க வேண்டும் என்று கேட்டால், 10 கோடி ரூபாய் கொடுத்துவிட்டு அதிலேயிருந்து நீங்கள் செலவு செய்துகொள்ளுங்கள் என்று சொன்னார்கள். ஆனால் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற 1991-லே 68,638 பேர்கள் காவல் துறையிலே காவலர்களாகப் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். ஆனால் தற்போது புரட்சித் தலைவி அவர்கள் இந்த 5 ஆண்டுக் காலத்திலே 78,428 ஆக காவலர்களின் எண்ணிக்கையை உயர்த்தியிருக்கிறார்கள்.

அது மட்டும் அல்ல, சகோதரி அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள், மற்ற மாநிலங்களில் ஏன் மற்ற நாடுகளில் கூட தாய்மார்களுக்கு ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால், பெண்களுக்கு ஒரு பாதுகாப்பு தேவை என்ற நிலைமை ஏற்பட்டால், அதற்கு எந்த அரசாங்கமும் எந்த மாநிலத்திலேயும் செய்யவில்லை, ஆனால் புரட்சித் தலைவி அரசாங்கம் மட்டும்தான் தனி காவல் நிலையத்தை உருவாக்கி பெண்களின் பிரச்சினையைத் தீர்க்கிறார்கள். 57 அனைத்து மகளிர் காவல் நிலையங்களை உருவாக்கியிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். காரணம், இன்றைக்கு குறைகள் என்று எடுத்துக் கொண்டால் எங்களுக்கு ஏதாவது பிரச்சினை என்று சொன்னால், எங்களுக்கென்று அம்மா அவர்கள் செய்திருக்கிற நல்ல காரியம், காவல் துறையை அணுகி எங்கள் குறைகளைச் சொல்வதற்கு, நிலையைச் சொல்வதற்கு நல்ல வழியை ஏற்படுத்தித்தந்திருக்கிறார்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

அது மட்டும் அல்ல, 1991-92-லேயிருந்து நம்முடைய மாநிலத்திலே மட்டும் 84 நீதிமன்றங்களை புதிதாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். அது மட்டும் அல்லாமல் வழக்கறிஞர்கள் என்று எடுத்துக் கொண்டால், எந்த ஒரு அரசாங்கமும் அவர்களுக்கு உதவிகள் செய்யவில்லை. தாய் உள்ளம் படைத்த புரட்சித் தலைவி ஒருவர்தான் தாம் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற இந்தக் காலக்கட்டத்தில் வழக்கறிஞர்களுக்காக சில உதவிகளைச் செய்திருக்கிறார்கள். சில வழக்கறிஞர்கள் உள்நோக்கத்தோடு, அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு, அவரைக் குறைச் சொன்னாலும் கூட, அவரை இழித்துப் பழித்துப் பேசினாலும்கூட, அதையெல்லாம் தூக்கி வைத்துவிட்டு, நாம் தாய் உள்ளத்தோடு இந்த தமிழகத்திலே ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறோம், எல்லோரும்

சகோதரர்கள் என்ற உணர்வோடு, பேரறிஞர் அண்ணா அவர்கள் எதைச் சொன்னார்களோ அதை மனத்திலே ஏற்றுக் கொண்டு புரட்சித் தலைவி அவர்கள், வழக்கறிஞர்களாக இருந்து வாழ்ந்து முடிக்கின்ற நேரத்திலே இறந்து விட்டால், அவர்களுக்கு ரூபாய் 1 லட்சம், அதேபோல ஓய்வு பெறும் போது 50 ஆயிரம் ரூபாய் என்று பல்வேறு திட்டங்களைப் புரட்சித் தலைவி அவர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 1–50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேசி முடித்துவிடலாம்.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம்: ஒன்றை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன். புரட்சித் தலைவி அவர்கள் ஏழை எளிய மக்களுக்காக, தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்காக, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக, வாழ முடியாமல் வாழ்ந்துக்கொண்டிருக்கிற அந்த மக்களுக்கு இலவச திருமணங்களைச் செய்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு காலக்கட்டத்திலே 1,100 திருமணம். இன்றைக்கு 5,004 திருமணம் என்ற உடனே எல்லோரும் கொச்சைப்படுத்திப் பேசுகிறார்கள். இந்தியத் துணைக் கண்டத்திலேயே, யாரும் இதுவரை எந்த மாநிலத்திலும் செய்யவில்லை. புரட்சித் தலைவி ஒருவர்தான், எவ்வளவு பணம் செலவு செய்கின்றோம் என்ற நிலை அல்ல, எவ்வளவு மக்களுக்கு நாம் நன்மை செய்கிறோம் என்ற உணர்வோடு புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்குத் தாயாக இருந்து இந்தத் திருமணங்களை நடத்தி வைத்திருக்கிறார்கள். அது மட்டும் அல்ல, இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்களை சிக்காக்கோ நகரத்திலிருந்து வந்தவர்கள் வீர நடை போடும் வீராங்கனை என்ற பட்டத்தைக் கொடுத்தார்கள். அந்தப் பட்டத்துக்கு எடுத்துக்காட்டாக திருச்சி மாநகரத்திலே, நாங்கள் எல்லாம் எண்ணி, எண்ணிப் பார்த்தோம், தமிழ்நாடே திருச்சிக்குள்ளே புகுந்துவிட்டதா என்ற ஒரு நிலை ஏற்பட்டது கடந்த வாரத்திற்கு முன்னாலே. ஆக, மக்கள் சக்தி வேறு யாருக்கும் இல்லை என்று அன்றைக்குச் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு புரட்சித் தலைவி ஒருவர்தான், தமிழகத்தில் இருக்கின்ற ஏழையெளிய மக்களின் தாயாக இருந்து கொண்டிருக்கிறார்கள். எந்த நிலையிலும் எந்த நேரத்திலும் புரட்சித் தலைவி எதைச் சொல்கிறாரோ, எதைச் செய்ய வேண்டும் என்று விரும்புகிறாரோ, அதைச் செய்வதற்குத்தான் அவர்களுக்கு வாக்கு அளிப்போம் என்ற நிலையிலே அந்த மாபெரும் சக்தியை நாங்கள் இன்றைக்குப் பெற்றிருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மேலும் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு இன்றைக்கு பல்வேறு சலுகைகளைச் செய்து இருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஆதிதிராவிட மக்களுக்கு குடியிருப்பு, வண்ணத் தொலைக்காட்சி, பெட்டி வசதி செய்யப்பட்டுள்ளது. அது மட்டுமல்ல இன்றைக்கு அப்படி ஒரு தனி வாய்ப்பு உருவாக்கித் தந்தவுடனே, அவர்கள் தினமும் நடக்கின்ற பிரச்சினைக்குக் கூட ஒரு முடிவெடுக்கின்ற அளவிலே, ஒரு நல்ல நிலை ஏற்படுகின்ற அளவிலே புரட்சித் தலைவி அவர்கள் ஆதிதிராவிட மக்களுக்கு பல்வேறு சலுகைகளை செய்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆதிதிராவிடர் கிராமங்களுக்கு குடி தண்ணீர் வசதி, விளக்கு எரிகின்ற பிரச்சினை, அடிப்படைத் தேவையான வீட்டு மனைப் பட்டா, ஆக இப்படி பல்வேறு சலுகைகளை அவர்களுக்கு செய்வது மட்டுமல்லாமல் ஒரு உயர் மட்டக் குழுவையும் அவர்களுக்கென்று உருவாக்கியிருக்கின்ற இந்தக் காலகட்டத்திலேதான், எந்தப் பிரச்சினை எந்த மாவட்டத்திலே ஆதிதிராவிட மக்களுக்கு இருந்தாலும், மற்ற சமுதாய மக்கள் வருகின்ற நேரத்திலே அவர்களை அழைத்துப் பேசுகிற தன்மையில் பிரச்சினைகள் குறைந்திருக்கிறது என்று சொல்லி என்னுடைய தொகுதியிலே ஒரு பிரச்சினை...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலில் தொகுதிப் பிரச்சினைப் பற்றிப் பேசுங்கள்.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர்அவர்களே, என்னுடைய தொகுதியிலே தொன்றுதொட்ட காலம் என்று சொல்வார்களே, அதைப் போல் எத்தனையோ ஆட்சிகள் இருந்த காலக்கட்டத்திலே, மருத்துவமனைக்கு வர வேண்டும் என்று சொன்னால், செங்கற்பட்டு அல்லது காஞ்சிபுரம்தான் வரவேண்டும். இன்றைக்கு என்னுடைய தொகுதியிலே 32 படுக்கைகள் கொண்டு ஒரு புதிய மருத்துவமனையை திறக்கின்ற நிலையை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அதற்குத் தொகுதி மக்கள் சார்பிலே முதலிலே அவர்களுக்கு நன்றி சொல்லி, என்னுடைய தொகுதியில் இன்னொரு பகுதியாக இருக்கின்ற வாலாஜாபாத் நகரத்திற்கு ஒரு மருத்துவமனைத் தேவை என்பதைச் சொல்லி, அதே நேரத்திலே வாலாஜாபாத்-சாலவாக்கம் பகுதியிலே ஒரு தீயணைப்பு நிலையம் வேண்டும் என்பதையும் இந்த நேரத்திலே சொல்லி, இந்த அரிய வாய்ப்பினை எனக்கு அளித்த எங்களுடைய இதய தெய்வம் தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இருக்கின்ற திசை நோக்கி மீண்டும் ஒருமுறை அவர்களுக்கு நன்றியைச் சொல்லி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைச் சொல்லி விடைபெற்றுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 1–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநருடைய உரையின்மீது நன்றி தெரிவித்து பேசுகின்ற வாய்ப்பினை உழவர் உழைப்பாளர் கட்சியின் சார்பாக எனக்கு அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இன்றைக்கு தமிழக அரசு மேதகு ஆளுநருடைய உரையின் மூலமாக கடந்த நாலே முக்கால் ஆண்டுகளில் என்னென்ன சாதனைகளை நிகழ்த்திக் காட்டியிருக்கிறது என்பதைப் பட்டியலிட்டுக் கொடுத்திருக்கிறார்கள். ஏழை எளியோருக்கான பாதுகாப்புத் திட்டம், சட்டம் ஒழுங்கு, காவல் துறையில் சீரமைப்பு, நீதி நிர்வாகம், தெற்காசிய விளையாட்டுகளிலே சிறப்பான ஏற்பாடுகள், திட்ட ஒதுக்கீட்டைச் செயல்படுத்தியதில் சாதனை, வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மக்களை மேல்நிலைக்கு உயர்த்திய பெருமை, பொது விநியோக முறையில் ஏழை எளிய மக்களுக்கு இரண்டு கிலோ அரிசியைத் தொடர்ந்து வழங்கி வருவது, விரைவான தொழில் வளர்ச்சி, வேளாண்மை உற்பத்தி அதிகரிப்பு, மின் திட்டங்களில் குறிப்பாக மரபுசாரா எரிசக்திக்கு முன்னுரிமை, கிராமப் பகுதிகளில் வறுமை ஒழிப்பு, வேலை வாய்ப்புகளைப் பெருக்குதல், குடிநீர் வசதிகள், தெருவிளக்கு, சாலைகள், துப்புரவு வசதிகள், மனித மேம்பாடு குறித்த ஆய்வு குறியீட்டில் கேரளாவிற்கும் பஞ்சாபிற்கும் அடுத்த நிலையைத் தமிழகத்திலே உருவாக்கியது, பிறப்பு, இறப்பு விகிதக் குறைப்பு, ஆதிதிராவிட மக்கள் மேம்பாடு, திருக்கோயில் நிர்வாகம் என பல்வேறு துறைகளில் தமிழக அரசு கடந்த ஆண்டுகளில் செய்த சானைகளை இங்கே பட்டியலிட்டுக் காட்டினார்கள். ஆனால் தமிழகம் துரதிஷ்டவசமாக இந்த ஆண்டு கடுமையான மழைத் தட்டுப்பாட்டின் காரணமாக வட கிழக்குப் பருவ மழையும் தென் மேற்குப் பருவ மழையும் பொய்த்ததன் காரணமாக மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகியிருக்கிறது. வட கிழக்குப் பருவ மழையினுடைய அளவு சராசரியாக 461 மில்லி மீட்டர் என்று இருக்க வேண்டியது இன்றைக்கு 259 மில்லி மீட்டர் மழைதான் பெய்திருக்கிறது. 44% குறைவாகப் பெய்திருக்கிறது. அதேபோல கோவை போன்ற மாவட்டங்கள் பயன் அடையும் தென் மேற்குப் பருவ மழையும் மிகவும் குறைவாகப் பெய்திருக்கிறது. அதனால் 15 மாவட்டங்கள் வறட்சியால் பாதித்த மாவட்டங்களாக இன்றைக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அதற்காக 70 கோடி ரூபாய் அளவிற்கு வறட்சி நிவாரண நிதியாகவும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வறட்சி என்று வருகின்றபோது அதிலே

முதலில் பாதிக்கப்பட்டவர்கள் விவசாயப் பெருமக்கள். விவசாயத் தொழிலாளிகள் அந்த வறட்சிப் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அடுத்து கால்நடைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. *14* இலட்சம் டன் உணவு தானியம் இழப்பு ஏற்பட்டிருப்பதாக இங்கே ஆளுநர் உரையிலே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு ஒரு டன்னுக்கு *3,000* ரூபாய் என்று கணக்கிட்டால் கூட *420* கோடி ரூபாய் அளவுக்கு உணவு தானிய இழப்பு மட்டும் ஏற்பட்டிருக்கிறது. வான் பொய்த்தும் தான் பொய்யா காவேரி இன்றைக்கு வற்றியிருக்கிறது. அதற்கு மழை மட்டும் காரணம் அல்ல. கர்நாடக அரசானது நமக்கு வரவேண்டிய சட்டப்படி கொடுக்க வேண்டிய, நடுவர் மன்றத் தீர்ப்புப்படி கொடுக்க வேண்டிய *11* டி.எம்.சி. அடி தண்ணீரைக் கூடக் கொடுக்காமல் வெறும் *6* டி.எம்.சி. அடி தண்ணீரை, அதுவும் உச்ச நீதிமன்ற உத்தரவுக்குப் பிறகு, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் அதற்குப் பரிந்துரை செய்த பிறகுதான் கடைசி நேரத்திலே வழங்கப்பட்ட காரணத்தினால் இன்றைக்கு தஞ்சை மட்டும் அல்லாமல் மற்ற மாவட்டங்களும் அதனால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இப்படியெல்லாம் பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளாகியிருக்கின்ற நேரத்தில் வேளாண்மைப் பெருமக்களுக்கு, விவசாயப் பெருமக்களுக்கு தமிழக அரசானது இன்றைக்கு சலுகை செய்தாக வேண்டிய காலகட்டத்திலே இருக்கிறது.

இன்றைக்கு விவசாயிகளைப் பொறுத்தவரையில் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். அவர்களுடைய தானியம் மட்டும் நஷ்டம் அடையவில்லை. அதற்கு முதலீடாகப் போட்ட பல்லாயிரம் கோடி ரூபாய் பெறுமானமுள்ள முட்டுவழிப் பொருள்களையும் இழந்து இருக்கிறார்கள். அதையெல்லாம் ஈடு செய்வதற்கு இன்றைக்கு எந்த காப்புறுதித் திட்டமும் அமுலாக்கப்படுவதில்லை. பயிர் இன்ஷூரன்ஸ் திட்டங்கள் போன்றவையெல்லாம் எல்லா விவசாயிகளுக்கும் பாதுகாப்பான திட்டங்களாக இன்றுவரை எந்த அரசாலும் உருவாக்கப்படவில்லை. இந்த நேரத்திலேதான் விவசாயிகளுக்கு அரசால் கொடுக்கப்பட்டு இருக்கின்ற கூட்டுறவு நிலவள வங்கிக் கடன்கள் போன்றவற்றில் சலுகையைக் கேட்க வேண்டிய காலத்தின் கட்டாயத்தில் இருந்துகொண்டிருக்கிறோம். இன்றைக்கு கூட்டுறவு வங்கியினுடைய கடனுக்கும், நிலவள வங்கியினுடைய கடனுக்கும் இந்த ஆண்டுக்கான வட்டி, அபராத வட்டிகளையாவது தள்ளுபடி செய்து பழைய கடன்களைப் புதுப்பித்து, குறுகிய காலக் கடனை நீண்டகாலக் கடனாகவும், நீண்ட காலக் கடனுக்குப் பல்வேறு தவணைகளையும் கொடுத்து விவசாயப் பெருமக்களை வாழ வைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நேரத்திலே கடந்த 13-ந் தேதியன்று இந்துப் பத்திரிகையிலே ஒரு செய்தி வந்ததைக் குறிப்பிடுகிறேன். அதிலே வேளாண்மை மற்றும் கிராமப்புற வளர்ச்சிக்கான தேசிய வங்கியினுடைய தலைமை பொது மேலாளர் திரு. சுப்பிரமணியம் என்பவர் ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார். அவர் சட்டமன்றம் கூடுவதற்கு முந்தைய நாளிலே இந்த வறட்சியின் காரணமாக தமிழக அரசு விவசாயிகளுக்கு ஏதாவது சலுகை செய்துவிடும் என்பதைக் கருத்தில்கொண்டோ என்னவோ அவர் கொடுத்திருக்கின்ற அறிக்கையில் இந்தக் குறுகிய காலக் கடனை நீண்டக்கால கடனாக தவணை மாற்றிக் கொடுப்பதற்கோ அல்லது கடன் தள்ளுபடி போன்ற சலுகைகளைச் செய்வதற்கோ தமிழக அரசு முனையக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு இந்த வறட்சியின் காரணமாகச் செய்ய வேண்டிய சலுகைகளுக்கு ஏதோ தடை விதிப்பதைப் போன்று அவர்களுடைய அறிக்கை இருக்கிறது.

அதுமட்டுமல்ல. அவர் இன்னொன்றையும் சொல்லியிருக்கிறார். தமிழக அரசும் நாபார்டு வங்கியும் செய்திருக்கின்ற ஒரு மெமோரேண்டம் ஆஃப் அண்டர்ஸ்டாண்டிங் என்பதிலே எந்தவிதமான கடன் தள்ளுபடியும் செய்யக் கூடாது என்ற ஒப்பந்தம் இருப்பதையும் அவர் அங்கே சுட்டிக்காட்டியிருக்கிறார். அதுமட்டுமல்ல. கடந்த காலங்களில் தமிழக கூட்டுறவுத் துறை வசூலிலே 80% குறுகிய காலக் கடனையும் 85% நீண்டகாலக் கடனையும் வசூலித்து இருக்கிறது.

பிற்பகல் 2.00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. நா.சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழக விவசாயிகளைப் பொறுத்தவரையில் தங்களால் கட்ட முடிந்த காலகட்டத்திலே அவ்வளவு கட்டியிருக்கிறார்கள். வேறு எந்த மாநிலத்திலும் இந்த அளவுக்கு வசூல் ஆகியிருக்க முடியாது. தொழில் துறைக்கு தேசிய மயமான வங்கிகள் மற்றும் தொழில் அபிவிருத்தி வங்கிகள் மூலமாகக் கொடுக்கப்படுகிற பல்லாயிரம் கோடிக் கடன்களை எல்லாம் அது நலிந்த தொழில் என்ற அடிப்படையில் தள்ளுபடி செய்ததை யாரும் தடுப்பது இல்லை. ஆனால் விவசாயிகளுக்கு அந்தத் தள்ளுபடி என்று வருகின்ற நேரத்திலேமட்டும் இப்படிப்பட்ட அதிகாரிகள் குறுக்கீடு தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது. உலக வங்கி தேசிய நீர் வளத் தொகுப்புத் திட்டத்திற்கு 1,700 கோடி ரூபாயைக்

கொடுப்பதற்கு இலவச மின்சாரத்தை ரத்து செய்ய வேண்டும் என்ற நிபந்தனையை விதித்து கூட, மத்திய அரசின் நிர்பந்தத்திற்கு தமிழக முதலமைச்சரவர்கள் ஆட்படாமல், நிபந்தனையை ஏற்றுக்கொள்ளாமல் தொடர்ந்து விவசாயப் பெருமக்களைக் காப்பாற்ற இலவச மின்சாரத்தைக் கொடுத்துக் கொண்டு இருக்கிறீர்களே அதைப்போல இந்தக் கூட்டுறவுக் கடன்கள், நிலவள வங்கிக் கடன்கள் எல்லாம் அவர்களுக்கு தள்ளுபடி செய்து விவசாயிகளுக்கு உதவ வேண்டும் என்ற வேண்டுகோளை இந்த நேரத்தில் நான சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கோவை மாவட்டத்திலே இன்றைக்கு பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்திலே பாசனம் பெறுகின்ற பகுதியிலே இன்றைக்கு 4-வது மண்டலத்திற்குத் தண்ணீர் விடப்பட்டிருக்கிறது. இந்த வறட்சியான காலத்திலே 4-வது மண்டலத்தில் இருக்கின்ற விவசாயிகளுக்குத் தண்ணீர் விடுவதை மனமாறப் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் பொள்ளாச்சிப் பகுதியில் பொள்ளாச்சி வட்டத்திலே கிணத்துக்கடவு தொகுதியில் இருக்கின்ற செங்குட்டபாளையம் வாய்க்கால், உடுமலைப் பகுதியில் இருக்கின்ற சாலையூர் வாய்க்கால், செல்லப்பம்பாளையம் வாய்க்கால் போன்ற பகுதியில் இருக்கின்ற 15, 20 ஆயிரம் ஏக்கர் தென்னை மரங்கள் காய்ந்து விடுகின்ற அபாயத்தில் இருந்து கொண்டிருக்கின்றன. அந்தத் தென்னை மரங்கள் எல்லாம் 30 ஆண்டுகளுக்கு முன்பு பயிரிடப்பட்ட மரங்கள். அன்றைக்கு மழை இவ்வளவு குறைவாக இருந்து இருந்தால் தென்னையை நட்டு இருக்க மாட்டார்கள். அந்தக் காலகட்டத்தில் தென்மேற்குப் பருவ மழை அபரிமிதமாகப் பெய்தது. அன்றைக்கு பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்திலே தண்ணீர் நிறைய விட்டார்கள். அதை நம்பித்தான் அந்தத் தென்னையை நட்டார்கள். 'என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில், ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்' என்று புரட்சித் தலைவர் அவர்கள் பாடினார்கள். அந்தத் தென்னை வளம் எல்லா வளத்தையும்விட சிறப்பான ஒரு வளம், கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சிப் பகுதியில் கிடைத்திருக்கிறது. லட்சக்கணக்கான விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் தென்னையை, தென்னையைச் சார்ந்த தொழிலை நம்பியிருக்கிறார்கள். தென்னை ஒருமுறை மடிந்து விட்டால் அதை மீண்டும் உயிர்ப்பிக்க முடியாது. அதைக் காய்க்க விடவும் முடியாது. மற்ற பயிர்கள் வேண்டுமானால் அடுத்த போகம் பயிரிட்டுக் கொள்ளலாம். ஆனால் தென்னையில் நிச்சயமாக 10 ஆண்டுகளுக்குப் பிறகுதான் பலனை எதிர்ப்பார்க்க முடியும். அங்கே விவசாயிகள் கண்ணீரோடு இருக்கிறார்கள். அவர்கள் அங்கே சாலை மறியல் போராட்டத்தை எல்லாம் நடத்தினார்கள். அது அரசை எதிர்த்து நடத்தியது அல்ல.

அவர்களுடைய உணர்வு தென்னை காய்ந்து விட்டதே என்ற அந்த ஆதங்கத்தில் செய்தது. அந்தச் சாலை மறியல் நடத்திய நேரத்தில் பொள்ளாச்சி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், உடுமலை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், மற்றும் நான் எல்லோரும் தலையிட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் சொல்லி, தென்னைக்கு எப்படியும் நாங்கள் உயிர் தண்ணீர் பெற்றுக் கொடுக்கிறோம் என்று சொன்னோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பக்கத்தில் இருக்கிற அமைச்சர்கள் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரைக் கொஞ்சம் கவனிக்க விடவும்.

திரு. நா.சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள்தான் இதை நன்கு கவனிக்க வேண்டும். அவர்களுடைய கையில்தான் தென்னையினுடைய உயிரே இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர் ஏற்கனவே எழுத்து மூலமாகக் கொடுத்து விட்டார்கள். அதிகாரிகளிடத்திலே பரிசீலனைக்காக அதை அனுப்பியிருக்கிறேன். சட்டமன்றத்திலே பேசினால்தான் மக்கள் மத்தியிலே எடுபடும் என்பதற்காகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். (சிரிப்பு) ஏற்கனவே என்னுடைய கவனத்திற்கு வந்து நான் அதிகாரிகளிடத்திலே சொல்லி, தண்ணீர் நிலைமை எப்படி இருக்கிறது, எவ்வளவு விடலாம் என்பதைப் பற்றி எல்லாம் ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்கு முறையான அறிக்கை வந்த உடனே அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படும். ஏன் என்றால் தண்ணீர் பற்றாக்குறை நேரத்திலே அரசு ஆய்ந்து முடிவு எடுக்கவேண்டிய நிலையில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏன் என்றால் நாளைக்கு எடுக்கக் கோரி இன்னொரு கவன ஈர்ப்பும் திரு. வி.பி. சந்திரசேகர் கொடுத்திருக்கிறார். இன்றைக்கு என் பிரச்சினையை சேர்த்து முடித்துக்கொள்ளலாம் என்பதற்காக உங்களிடத்திலே பதில் வாங்கினேன்.

திரு. நா.சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் தென்னைக்குக் கொஞ்சம் விரைவாகத் தண்ணீர் விட்டால் இருக்கின்ற தென்னையைக்

காப்பாற்றலாம், அதே நேரத்தில் 4-வது மண்டல விவசாயிகள் பாதிக்காத வகையில் அந்தத் தண்ணீரைப் பிரித்து...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4-வது மண்டலத்திற்கு 9 டி.எம்.சி. தண்ணீர் விட வேண்டும். அதற்கே 5 டி.எம்.சி. தண்ணீர்தான் இருக்கிறது. நிலைமைகள் இப்படி. மழை பெய்யாத காரணத்தால் பிரச்சினைகள் இருக்கின்றன. அப்புறம் தென்னைக்கு தண்ணீர் விட வேண்டும் என்று கேட்பார்கள், மற்ற விவசாயிகளுடைய பிரச்சினைகளையும் நாங்கள் பார்க்க வேண்டியிருக்கிறது. அரசு எல்லாவற்றையும் பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.பி. சந்திரசேகர்.

திரு. வி.பி. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். தற்போது தென்னைக்கு மட்டும் அல்ல, அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்களுக்குக் குடிநீர் தட்டுப்பாடு மிகவும் கடுமையாக இருந்து கொண்டிருக்கிறது. ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிக்க வேண்டும் என்று சொன்னால் தென்னைக்கும் தண்ணீர் கொடுக்கவேண்டும். தென்னைக்கு கொடுப்பதன் மூலமாக அங்கே குடியிருக்கின்ற மக்களுக்கும் தண்ணீர் கிடைக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 2-05

திரு. நா.சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அந்தப் பகுதியில் நிலத்தடி நீர் வளம் மிகவும் மோசமான நிலையை அடைந்திருக்கிறது. அங்கே பாறைப் பகுதியாக இருப்பதால் போர் வெல் போட்டால் கூட அதிகமாகத் தண்ணீர் வருவது இல்லை. இந்த நேரத்தில் இந்த அம்பராம்பாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் போன்ற திட்டங்களை விரைவாகச் செயல்படுத்தி எல்லா கிராமங்களுக்கும் உடனடியாகத் தண்ணீர் கிடைக்கச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்படி தென்னைக்குத் தண்ணீர் விடுவது என்பது ஏதோ தென்னை விவசாயிகளைக் காப்பாற்ற மட்டும் விடப்படுகின்ற தண்ணீர் அல்ல. அதனால் அந்தப் பகுதியில் நிலத்தடி நீர்வளத்தை மேம்பாடு செய்து குடிநீர் தட்டுப்பாட்டையும் போக்குவதற்கு அது உதவிகரமாக இருக்கும் என்ற நிலையில் தான் இந்தக் கோரிக்கையை

வைக்கின்றோம். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் கனிவோடு பரிசீலித்ததற்கு விவசாயப் பெருமக்கள் சார்பிலே நான் நன்றியையும் பாராட்டுதலையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு கடுமையான வறட்சியில் மனிதர்களுக்கு ஒரு பக்கத்தில் பாதிப்பு இருந்தாலும்கூட மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஏழையெளிய மக்களுக்கு 20 கிலோ அரிசியை, கிலோ 2 ரூபாயிலே வழங்குகின்ற ஒரு அருமையான திட்டத்தை நடைமுறைப்படுத்தி இன்றைக்கு ஏழையெளிய மக்களுக்கு பாதுகாப்பு அளித்து இருக்கிறார்கள். ஆனால் கால்நடைகள் இன்றைக்குத் தீவனம் இல்லாமல் அவதியுற்றுக்கொண்டு இருக்கின்றன. கால்நடைகள் தீவனம் வாங்குவது எனபது இன்றைக்கு விவசாயப் பெருங்குடி மக்களுடைய சக்திக்கு அப்பாற்பட்டதாக அதனுடைய விலை உயர்வு ஏற்பட்டிருக்கிறது. அதையும் வெளியூரிலே இருந்து, அதிலும் தொலைதூரத்திலேயிருந்துதான் கொண்டு வரவேண்டும். இன்றைக்குக் கால்நடைகளை, வறட்சியிலே வாடியிருக்கின்ற அந்தப் பகுதி மக்கள் அரைவிலைக்கு விற்றுக்கொண்டு இருக்கிறார்கள். கால்நடை வளம் அழிந்துவிடுமேயானால் நமக்கு நிச்சயமாக பால் பெருக்குத் திட்டம் போன்ற பல திட்டங்கள் பாதிக்கப்படும். எனவே, கால்நடைத் துறையின் மூலமாக வைக்கோல், சோளத்தட்டை போன்ற தீவனங்களை அரசாங்கம் தொலைதூரத்திலேயிருந்து கொண்டு வந்த விவசாயப் பெருமக்களுக்கு மானிய விலையிலே வழங்கி கால்நடை வளம் இந்த வறட்சியினால் பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற வேண்டுகோளையும் நான் இங்கே வைக்க விரும்புகிறேன். இன்றைக்கு இவ்வளவு கடுமையான வறட்சியில் விவசாயப் பெருமக்கள் பாதிக்கப்படுவதற்குக் காரணம், அவர்கள் சரியான காப்புறுதித் திட்டம் போன்ற எந்தத் திட்டத்திலும் சேர்க்கப்படவில்லை. பயிர் இன்சுரன்ஸ் திட்டங்கள் போன்ற அந்தத் திட்டங்களை அமலாக்கினால்தான் எதிர்காலத்திலே இப்படிப்பட்ட நிலைமைகள் வருகின்ற பொழுது ஒரு பாதுகாப்பைப் பெற முடியும். என்னுடைய தொகுதியிலே பல குளங்கள் இருக்கின்றன. கரப்பாடி குளம், கோதவாடிக்குளம் போன்ற குளங்கள் இருக்கின்றன. தேவம்பாடிவலசு போன்ற இடங்களிலே பெரிய குளங்கள் இருக்கின்றன. அந்தக் குளங்களில் மழைக்காலங்களிலே மட்டுந்தான் நீர்வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்திலே நிறைய நீர் இருக்கின்ற நேரத்திலே அவற்றிலே தண்ணீரை தேக்கி வைத்தால் சூலக்கல் ஆற்றின் வழியாக நீர்வர வாய்ப்பு உண்டு. புரவிபாளையம் என்ற இடத்திலே புலிப்பாறை அணைக்கட்டு

திட்டத்தை நீண்டகாலமாக அந்தப் பகுதி மக்கள் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அந்த அணைத் திட்டத்தை நிறைவேற்றினால் நிச்சயமாக அந்தப் பகுதியில் இப்படி வறட்சி ஏற்படுகின்றபொழுது நிலத்தடி நீர்வளம் பாதிக்கப்படாமல் அதற்கு பாதுகாப்பு கொடுக்க முடியும். எனவே, அந்தத் திட்டத்தைப் பரிசீலனை செய்து விரைவாக அந்தத் திட்டத்தை அமுலாக்கிக் கொடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளையும் இந்த நேரத்திலே நான் வைக்க விரும்புகிறேன்.

கிராமப்புறங்களில் இப்போது ஏழையெளிய ஆதிதிராவிட மக்களுக்கெல்லாம் நல்லமுறையிலே தொகுப்பு வீடுகளை அரசு கட்டிக்கொண்டு இருக்கிறது. இந்த கிராமப்பகுதிகளில் மின் விளக்குப் பிரச்சினைகளைச் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். எனவே, சோடியம் விளக்குகளை ஒவ்வொரு கிராமத்திற்கும் 4, 5 விளக்குகளையாவது போட்டால், அடிக்கடி மின்விளக்குகளில் பழுது ஏற்படும் நிலை மாறி, கிராமப் பகுதிகளுக்கும் ஒரு சரியான பாதுகாப்பு கிடைக்கும். இன்றைக்கு கிராமப்பகுதிகளில் தனித்தனியாக குடியிருக்கின்ற பகுதிகளில் எல்லாம் திருட்டு போன்ற குற்றங்களைத் தடுப்பதற்கு நல்ல விளக்கு அமைத்துக்கொடுத்தால், கிராமப் பகுதி மக்களுக்கு பாதுகாப்பாக இருக்கும். எனவே, இப்படிப்பட்ட பணிகளையெல்லாம் நம்முடைய அரசாங்கம் செய்து கொடுத்து இன்றைக்குத் தமிழகத்தில் பல சாதனைகளை இந்த ஐந்து ஆண்டுகளில் நிகழ்த்திய இந்த அரசு மேலும் இந்த வறட்சியான நேரத்திலே, வறுமையான நேரத்திலே தமிழக மக்களுக்கு ஒரு நல்ல பாதுகாப்பைக் கொடுத்து இந்த வறட்சியிலிருந்து தமிழகத்திலுள்ள விவசாய பெருமக்களுக்கும் மற்றவர்களுக்கும் நிவாரணம் அளித்து பாதுகாக்க வேண்டுமென்ற வேண்டுகோளையும் சொல்லி வாய்ப்புக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பிற்பகல் 2–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. கே. லட்சுமணன்.

திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் இங்கே ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கிற தீர்மானத்தின்மீது பேசுகின்ற வாய்ப்பு கிடைத்தமைக்கு நான் உங்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நான்தான் இங்கே மேதகு ஆளுநர் என்று சொல்லி இருக்கின்றேனேயொழிய, தமிழக அரசு இந்த முறை நமக்கு வழங்கிய இரண்டு புத்தகங்களிலும் மேதகு என்ற வார்த்தை விடப்பட்டு இருக்கிறது என்பதை நான் இங்கே வருத்தத்தோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சென்ற ஆண்டே சொன்னேன், நீங்கள் இதற்கு முந்தைய புத்தகங்களை எல்லாம் எடுத்துப் பாருங்கள். (குறுக்கீடு) சென்ற ஆண்டே இந்தப் பிரச்சினையைப் பற்றி சொல்லியபொழுது இதற்கு முந்தைய ஆண்டுகளின் புத்தகங்களையெல்லாம் எடுத்து வாசித்துக் காண்பித்து இருக்கிறேன். அதாவது, அந்தந்த ஆண்டு பேசுவதையே மறந்துவிட்டுப் போய் விடுவதாலே வருகிற தப்பு இது. டாக்டர் அலெக்சாண்டர் இருந்தார் அல்லவா? ஆளுநராகத்தானே இருந்தார்? அவர் இங்கே வந்து ஆளுநர் உரையைப் படித்த காலத்திலேயெல்லாம் அதை எப்படிப் போட்டிருந்தார்கள் என்பதையும் போய்ப் பார்த்து விட்டு வந்து இதைப் பேசுங்கள்.

திரு. வி.கே. லட்சுமணன்: இருந்தாலும்கூட, உறுப்பினரை மாண்புமிகு உறுப்பினர் என்று சொல்வதைப்போல...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தொன்று தொட்டு எது எப்படிப் பின்பற்றப்பட்டு வந்திருக்கிறதோ அதுவேதான் இப்போதும் போடப்பட்டிருக்கிறது. இது ஏதோ ஒரு பத்திரிகைக்காரர்கூட இன்றைக்கு ரொம்ப விவரமான பத்திரிகை என்று நினைத்துக்கொண்டு போட்டுக் கொண்டிருக்கிறார்கள். எப்பொழுதும் போடுகிற முறை இப்படித்தான். ஏனென்றால் இது அவருடைய உரை. அவரே தன்னை.....

திரு. வி.கே. லட்சுமணன்: மன்னிக்க வேண்டும். உரையை மட்டும் நான் சொல்லவில்லை. ஆளுநர் அவர்கள் இங்கே வருகின்றபொழுது என்ன முறைகள் பின்பற்றப்பட வேண்டுமோ அதற்கு ஒரு புத்தகம் அச்சிட்டுக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் புத்தகத்திலேகூட மேதகு ஆளுநர் என்று குறிப்பிடாமல் இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை அடுத்ததிலே பேசுங்கள். ஆளுநருடைய உரை இப்படித்தான் கொடுக்கப்பட்டு வருவது முறை. எப்பொழுதும் பின்பற்றப்பட்டு வந்திருக்கிற முறை. உள்ளே விவரம் இருந்தால் பேசுங்கள். வெளியிலே போய், அட்டையிலேயே பார்த்துப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். அட்டை எப்பொழுதும் அப்படித்தான் கொடுப்பது வழக்கம்.

திரு. வி. கே. லட்சுமணன்: எல்லாயிடத்திலேயும் ஆளுநருக்கு மரியாதை கொடுக்க வேண்டுமென்பதுதான் முறை. இந்த ஆளுநர் உரைக்குள்ளே எந்தயிடத்திலேயும் தமிழ்நாட்டுக்கு மிக இன்றியமையாத

நீர்ப்பாசனத் திட்டங்களைப்பற்றி ஒரு வரி கூட சொல்லப்படவில்லை. ஒருவேளை, நான் பேசுகின்றபொழுது பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தைப்பற்றித்தான் பேசுகிறேன் என்று நீங்கள் நினைக்கக் கூடும். ஆனால் அது மட்டுமல்ல; எந்த நீர்ப்பாசனத் திட்டங்களைப்பற்றியும் ஒருவரிகூட..... நீங்கள் அடிக்கடி சொல்லுகின்ற அச்சன்கோயில் பம்பா பற்றிக்கூட ஒரு வரி இங்கே சொல்லப்படவில்லை என்பதை நான் இங்கே வருத்தத்தோடு குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் சென்ற முறை இந்த மாமன்றத்திலே Common University Act என்று ஒரு சட்டமுன்வடிவைக் கொண்டு வந்தோம். அந்தச் சட்டமுன்வடிவு ஏன் சட்டமாக ஆகாமல் அது வாபஸ் பெறப்பட்டது என்பதைப்பற்றி இந்த இடத்திலே ஒரு வரிகூட குறிப்பிடவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர்:

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வழக்கம்போல மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஒரு தவறான கருத்தை இந்த அவையிலே வைக்கிறார்கள். அந்தச் சட்டமுன்வடிவு திரும்பப் பெறப்படவே இல்லை. மேதகு ஆளுநர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இன்னும் வந்து சேரவில்லை என்பதை அவரது மேலான கவனத்திற்கு நான் வைக்க விரும்புகிறேன்.

திரு. வி.கே. லட்சுமணன்: அந்தச் சட்டமுன்வடிவு இந்த மாமன்றத்திலே நிறைவேற்றப்படவில்லை.

***மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மீண்டும் ஒரு தவறான தகவலைத் தருகிறார். இங்கே நிறைவேற்றப்பட்டதற்குப் பின்புதான் அங்கே அனுப்ப முடியும். அங்கிருந்து இன்னும் திருப்பி அனுப்பவில்லை. இதிலேயிருக்கிற ஒரே பிரச்சினை என்னவென்றால், அரசமைப்புச் சட்டத்திலே இவ்வளவு நாட்களுக்குள் ஆளுநர் அதைத் திருப்பி அனுப்ப வேண்டுமென்ற நியதியில்லை. ஆகவே, அதைச் சாதகமாக வைத்துக்கொண்டு அந்தக்கோப்பு அங்கே இருக்கிறது.

திரு. வி.கே. லட்சுமணன்: அடுத்து, ஒவ்வொரு நவோதயா பள்ளிக்குப் பதிலாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு சீர்மிகு பள்ளி School of Excellence ஆரம்பிப்பதாக இந்த மாமன்றத்திலே உறுதியளிக்கப்பட்டது. ஆனால் அந்த நவோதயா பள்ளியைப் பற்றி இன்றைக்குச் சொல்லப்படவில்லை என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், இந்திய அரசில் சாசனத்தின் 45-வது ஷரத்துபடி 14 வயது வரை இலவசக் கட்டாயக் கல்வி அளிக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருந்தாலும் நாம் இயற்றியிருக்கிற சட்டம் தமிழ்நாடு அரசு Act No. 33/95 அதிலே, Compulsory என்ற சொல் மட்டும் இருக்கிறதேயொழிய இலவசம் என்ற சொல் இல்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இரண்டு முறை மாண்புமிகு உறுப்பினர் லட்சுமணன் லட்சுமணன் என்று எழுத வேண்டிய அவசியமில்லை. This is a constitutional provision இலவசக் கல்வி என்பது அரசமைப்புச் சட்டத்திலே கட்டாயமாக இந்தியா முழுவதற்கும் ஏற்படுத்தப்பட்ட ஒன்று. அதை ஒரு கொள்கை முடிவாகத் தமிழக அரசு ஏற்றிருக்கிறது. அதிலே எந்தவிதமான சந்தேகமும் இல்லை. ஆகவேதான் மீண்டும் மீண்டும் இலவசம் இலவசம் என்பதைச் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்பதால் அது விடப்பட்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் It is implied. இலவசக் கல்வியைக் கட்டாயமாக்குவதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழ்நாட்டிலேதான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் இதிலே குழப்பிக்கொள்ள வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் மாணவ மாணவியர்களை 5 வயது முடிந்தவர்களைக் கண்டிப்பாக அனுமதிக்க வேண்டும், படிப்பதற்கு சேர்க்க வேண்டும், அப்படி சேர்க்காத பெற்றோர்களுக்கு தண்டனை தருவதற்கு வழி வகுக்கும் சட்டம் அது. ஆகவே, கண்டிப்பாகப் படிக்க வைக்க வேண்டும், இலவசமாகப் படிப்பை தமிழக அரசு தருகிறது. அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்யாதவர்களைத் தண்டிப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட தனிப்பட்டச் சட்டம் அது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் குழப்பிக் கொள்ள வேண்டாம் என்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-15

திரு. வி.கே. லட்சுமணன்: சட்டம் ஒழுங்கு மிகச் சீராக இருப்பதாக பலமுறை இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. கோவை மாநகரிலே, கணபதி என்ற கிராமத்திற்கு அருகிலே கடந்த 10 நாட்களுக்கு முன்பாக 16 வயதுள்ள ஒரு அரிசனப் பெண் கற்பழிக்கப்பட்டு, நான் அந்தப் பெண்ணை அழைத்துச் சென்று காவலர் இடத்திலே சொல்லி, அந்தப் பெண்ணை கற்பழித்தவர்கள் கைது செய்யப்பட்டாலும்கூட, இந்தக்

கற்பழிப்புக்காக வழக்கமாக இந்த அரசு வழங்குகிற நஷ்ட ஈட்டுத் தொகையை வழங்கவில்லை என்பதை அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

சென்ற முறை, சட்டமன்றக் கூட்டத்திலே அடிக்கடி நான் பேசிய சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பற்றி இன்றைக்கு ஒரு குறிப்பையும் இங்கே காணோம். சந்தனக் கடத்தல் வீரப்பன் பிடிப்பட்டாரா இல்லையா, பிடிக்கப் போகிறோமா என்பதைப் பற்றி இந்த ஆளுநர் உரையிலே ஒரு வார்த்தை கூட குறிப்பிடப்படவில்லை என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த மாமன்றத்திலே பலமுறை கோவை மாநகருக்கு உயர்நீதிமன்றக் கிளை வேண்டுமென்று கேட்டிருந்தோம். ஆனால் அந்தக் கிளை இன்னும் அங்கே துவங்கப்படவில்லை என்பதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

சென்ற ஆண்டு, 1995–ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள்ளாக கிருஷ்ணா நதித் தண்ணீர் சென்னைக்கு வந்துவிடும் என்று சொல்லப்பட்டது. ஆனால் டிசம்பர் மாதம் போய் இன்றைக்கு மூன்று மாதம் ஆகிவிட்டது. அந்தத் தண்ணீர் வரவில்லை. ஆனால் நல்ல வேளையாக அந்தக் கிருஷ்ணா நதி தண்ணீராவது 'ஒப்பன் கனால்' வழியாக வந்து கொண்டிருக்கிறது. நாம் 100 கோடி ரூபாய் திட்டத்திலே, பில்லூரிலிருந்து கோவையின் பல பகுதிகளுக்கு தண்ணீர் கொண்டுவருவதற்கு குழாய்கள் போட்டோம். ஆனால், அங்கே, நாள்தோறும் பல குழாய்கள் உடைந்து வெள்ளம் போல் தண்ணீர் போய் கொண்டிருக்கிறது. ஒரு வேளை கிருஷ்ணா நதித் தண்ணீர் திட்டத்திலே 'ஒப்பன் கனாலுக்கு' பதிலாக குழாய்களைப் போட்டிருந்தால், பாதி தண்ணீர்கூட சென்னைக்கு வந்து சேர்ந்திருக்காது. ஆகவே, நம்முடைய குடிநீர் வடிகால் வாரியப் பொறியியல் வல்லுனர்கள் எந்த அளவுக்கு திறமை குறைவாக இருப்பதை இது காட்டுகிறது என்பதை நான் இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியாது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணா நதிநீர் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். இரண்டு மாநிலங்கள் செயல்படுத்த வேண்டிய திட்டம் இது. அதிலே நம்மைப் பொறுத்தவரை, தமிழக அரசைப் பொறுத்தவரை, அந்த நதிநீர் டிசம்பர் மாதத்திற்குள்ளாக

சென்னை மாநகரத்திற்கு வருவதற்கான அத்தனை வேலைகளையும் முடித்துவிட்டோம். நம்முடைய அரசைப் பொறுத்தவரை நாம் அவர்களுக்கு வழங்க வேண்டிய தொகையைக் கொடுத்துவிட்டோம். இங்கே முடித்து வைக்கப்படவேண்டிய பணிகளையும் முடித்துவிட்டோம். ஆந்திர அரசு சரியான முறையிலே அதை அணுகாத காரணத்தினாலே இந்தப் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. அரசு மட்டத்திலே தொடர்பு கொண்டிருக்கிறோம். அதிலே நல்ல ஒரு முடிவு ஏற்படும் எனறு எதிர்பார்க்கிறோம். அதோடு பில்லூர் குடிநீர் திட்டத்தை ஒப்பிட்டுப் பார்ப்பது சரியல்ல. கிருஷ்ணா நதிநீரைச் சொல்லிவிட்டு பில்லூரிலே ஏதோ குழாய்கள் உடைகிறது என்று சொன்னார்கள். அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறது. சில இடங்களிலே, ஒரு புதிய திட்டத்தைப் போடுகிறபோது 'டிரையல் ரன்' பார்க்கிறோம். சோதனை நீரோட்டம் போடுகிறோம். சோதனை நீரோட்டம் செல்கிறபோது, அந்தக் குழாய்கள், சில இடங்களில் பழுது ஏற்பட்டிருந்தால், வெடிக்க ஆரம்பிக்கும். பிரஷர் தாங்காமல் சில நேரங்களில் குழாய்களில் வெடிப்பு ஏற்படுவதுண்டு. தண்ணீர் வருவதுண்டு. இதையெல்லாம் இன்றைக்கு வாரியத்தினுடைய பொறியாளர்கள் சரி செய்து கொண்டிருக்கிறார்கள். அது சரி செய்யப்பட்டு விட்டது. இன்றைக்கு கோயம்புத்தூரிலே அந்த நிலைமை இல்லை. சீராகக் குடிநீர் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 2–20

திரு. வி.கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மன்னிக்க வேண்டும். அந்தக் குழாய்கள் இன்னும் சரி செய்யப்படவில்லை. நாள்தோறும் பல குழாய்கள் வெடித்து தண்ணீர் அங்கே வெள்ளமாகப் போய்க் கொண்டிருக்கிறது. நேற்றைக்குக்கூட அப்படி இருந்தது என்பதை மீண்டும் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைத்தான் ஏற்கனவே குறிப்பிட்டேன். புதியதாக ஒரு குடிநீர்த் திட்டத்தை, மிகப்பெரிய திட்டத்தைச் செயல்படுத்துகிறபோது நூற்றுக்கணக்கான கிலோ மீட்டர் தூரத்திலே இருந்து மிகப்பெரிய குழாய்களில், குடிநீர் கொண்டு வருகிறார்கள். சில இடங்களில் பிரஷர் தாங்காமல் அதாவது அழுத்தம் காரணமாக வெடிப்பு ஏற்படக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. எல்லாத் திட்டங்களிலும் இருக்கக்கூடிய வாய்ப்புதான் அது. எனவே, அந்தந்த இடங்களில் 'ஏர்

வால்வ்' போட வேண்டி இருக்கிறது. காற்றழுத்தத்தை கணக்கில் எடுத்து 'ஏர் வால்வ்' போட்டுச் சரி செய்ய வேண்டி இருக்கிறது. படிப்படியாக சோதனைகளைச் செய்கிறபோது சில இடங்களில ஏற்படுகிற பிரச்சினை இது. இது களையப்பட்டு இருக்கிறது. அது தொடர்ந்து நடைபெறும் ஒன்றாக இருந்தாலும் அது முழுமையாகக் களையப்பட்டுவிட்டது.

திரு. வி.கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் துவக்கப்பட்டு மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்களால் தொடரப்பட்டு இன்று நடைபெற்று வருகிற மதிய உணவுத் திட்டத்திற்கு மைய அரசு இந்திய உணவுக் கழகத்தின் மூலமாக அரிசி வழங்கி வருகிறது. மத்திய அரசினுடைய பங்கு அது. அதுகுறித்து இந்த ஆளுநர் உரையில் கொஞ்சம் விரிந்த மனத்தோடு குறிப்பிடாமல் இருப்பது எனக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு என்ற திட்டம் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் எந்தக் குடிசைக்கெல்லாம் பட்டா இருக்கிறதோ அந்தக் குடிசைக்கு மட்டும்தான் விளக்கு வசதி செய்யப்படுகிறது. ஆனால் கோவை போன்ற நகரங்களில் பல இடங்களில் பட்டா இல்லாத நிலை இருக்கிறது. அங்கே வாழ்கிற மக்களுக்கு பட்டா இல்லாத காரணத்தால் எந்தவிதமான அடிப்படை வசதியும் இல்லாமல் இருப்பதைப் பார்க்கிறோம். விளக்கும் கிடையாது. தண்ணீர் வசதியும் கிடையாது. பாதை வசதியும் கிடையாது. ஆகவே அந்த மக்களுக்கு ஒன்று, அதே இடத்திலே பட்டா போட்டுக் கொடுக்க வேண்டும், அல்லது வேறு இடத்தில் அவர்கள் வாழவதற்கு வகை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஒரே ஒரு காரியத்திற்காக நான் இந்த அரசைப் பாராட்டாமல் இருக்க முடியாது. மே மாதத்திற்குள்ளாகத் தேர்தல் வரும் என்று இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. கண்டிப்பாக மே மாதத்திற்குள்ளாகக் கூட்டுறவுத் தேர்தல் நடத்த. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.கே. சின்னசாமி.

திரு. வி.கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஐந்து அல்லது பத்து குடிசைகள் இருந்தால் கூட அங்கே ஆழ்குழாய்க் கிணறு அமைத்து நீராதாரத்தை ஏற்படுத்த வேண்டும் என்று எங்களுக்கு உத்தரவு போட்டிருக்கிறார்கள். மாண்புமிகு

உறுப்பினர் அவர்கள் சொல்கிற இடம் எதுவென்று குறிப்பிட்டுச் சொன்னால் நாங்கள் நடவடிக்கை எடுக்க வாய்ப்பு ஏற்படும். ஆகவே கோவை மாவட்டத்தில் எந்த இடத்தில் எந்தத் தொகுதியில் எந்தக் கிராமத்திற்கு குடிநீர் வசதி இல்லை என்பதையும், பட்டா இல்லாத இடங்களில் விளக்குவசதி இல்லை என்பதையும் தயவுசெய்து விளக்கினால் நன்றாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான் சொல்கிற இடங்களை எல்லாம் தயவுசெய்து குறித்துக்கொள்ள வேண்டும். மறக்காமல் குறித்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கோவை கிழக்குத் தெருவில் தனலட்சுமிநகர், ஹரிபுரம், சாஸ்திரி நகர், ஆட்டோ காலனி, ஆகிய இடங்களில் பட்டா வழங்கப்படவில்லை. அங்கே ஃபோக்கஸ் லைட் கூட கிடையாது. பாதை வசதியும் இல்லை. *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. பி. ராஜூ.

திரு. கே.பி. ராஜூ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற பகுதி முழுவதும் எனக்குத் தெரியும். அத்தனை இடங்களும் 'அன்அப்ரூவ்ட் சைட்ஸ்'.

திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து மன்னிக்க வேண்டும். அது 'அன்அப்ரூவ்ட்' இடம் அல்ல. புறம்போக்கு நிலம். புறம்போக்கு நிலத்திலே வாழ்கிற மக்களுக்கு நன்மை செய்கிற வகையில் ஒரு காலத்தில் எம்.ஜி.ஆர். அவர்கள், புறம்போக்காக இருந்தால் கூட ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு பட்டா இருந்தாலொழிய விளக்கு கொடுப்பதில்லை என்கிற முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள் சொல்வதை விட நீங்கள் சொல்வது இன்னும் மோசம். அவரவர்கள் இஷ்டத்திற்குப் போய் குடியிருந்து கொள்வது அது. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு என்று டார்கெட் ஃபிக்ஸ் பண்ணி 2 இலட்சம் குடிசைகளுக்குக் கொடுக்க வேண்டும்

என்று டார்கெட் ஃபிக்ஸ் பண்ணி பிறகு அந்த டார்கெட்டையும் மிஞ்சி இருப்பது குறித்துத்தான் இந்த கவர்னர் உரையிலே வந்திருக்கிறது. சில இடங்களில் அதாவது மாநகராட்சி, நகராட்சி போன்ற இடங்களில் இந்தத் திட்டம் கிடையாது. சில இடங்களிலே ரோட்டிலே என்க்ரோச் செய்து குடிசைகள் போட்டிருக்கிறார்கள். கவர்ன்மென்ட் நிலத்திலே அதாவது வேறு ஏதாவது பணிக்காக வைக்கப்பட்டிருக்கிற இடங்களில் போய் என்க்ரோச் பண்ணி குடிசைகள் போடுகிறார்கள். அப்படிப்பட்ட இடங்களில் கொடுக்க முடியாது. என்க்ரோச்மென்ட் பொறுத்தவரையில் பெர்மிஷன் இல்லாமல், என்.ஓ.சி. இல்லாமல் கொடுக்க முடியாது. ஆகவே அந்தமாதிரி இடங்களில்தான் பிரச்சினை இருக்கிறதே தவிர முறையான இடங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

பிற்பகல் 2–25

*மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது பெருந்தலைவர் காமராஜர் கொண்டு வந்த மதிய உணவுத் திட்டம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். தொடர்ந்தார் என்று சொன்னார்கள். மதிய உணவுத் திட்டம் என்பது வேறு. சத்துணவுத் திட்டம் என்பது வேறு. அது பள்ளிக்கூடங்களிலே மட்டும் போடப்பட்டது. ஆனால், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டு வந்தத் திட்டம் 68,000 சத்துணவுக் கூடங்களிலே, எல்லா கிராமப்புறப் பகுதிகளிலேயும் எல்லா குழந்தைகளுக்கும் பயனளிக்கக் கூடிய வகையிலும் செயல்படுத்தப்படும் திட்டம். அது வேறு; இது வேறு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.கே. லட்சுமணன்.

திரு. வி.கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நான் தெரிந்து கொள்ள விரும்புவது, இந்த உணவுத் திட்டத்திற்கு மைய அரசின் பங்கு உண்டா இல்லையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்ததே இந்தியாவிலேயே தமிழ்நாடு ஒன்றுதான். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு கொண்டு வந்த காரணத்தினால், அதிலே பலன் சம்பாதிப்பதற்கு இன்றைக்கு மத்திய அரசு எல்லா மாநிலங்களிலும் இந்தத் திட்டத்தை அமல்படுத்த முன்வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.கே. லட்சுமணன்.

திரு. வி.கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசுக்கு இந்திய அரசு மூலமாக, இந்திய உணவுக் கழகத்தின் மூலமாக இந்தத் திட்டத்திற்கு அரிசி வழங்கப்படுகிறதா, இல்லையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் வழங்குகிற அரிசியை இங்கே 68,000 சத்துணவுக் கூடங்களிலும் உள்ள 75 லட்சம் குழந்தைகளுக்கும் போடமுடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு எல்லா அரிசியையும் சும்மா கொடுக்கவில்லை. அதற்கு நம் அரசாங்கம் பணம் கொடுக்கிறது. ஏதோ இனாமாக எல்லா அரிசியையும் கொடுப்பதாக நீங்கள் பாட்டுக்குப் பேசிக்கொண்டிருப்பது சரியாக இல்லை. எனவே, மத்திய அரசாங்கம் கொடுக்கிற அரிசிக்கு பணம் கொடுக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.கே. லட்சுமணன்.

திரு. வி.கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரையிலே பொங்கல் அன்று ஏழை மக்களுக்கு வேஷ்டி சேலை வழங்குவதாகச் சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலே நானும் அந்த வேஷ்டி சேலைகளை வழங்குவதற்காக கூட்டுறவுச் சங்கத்திற்குப் போய் இருந்தேன். அப்படிப் போயிருந்தபோது வெகுநேரம் அங்கே மக்கள் காத்திருந்தார்கள். கடைசியிலே சொன்னார்கள், 60 சதவிகிதம்தான் வேஷ்டி சேலைகள்

வந்திருக்கின்றன, அதற்குப் பிறகு வரவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திற்கு முழுவதும் வழங்கப்பட்டுவிட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

திரு. கே.பி. ராஜு: பாயிண்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.பி. ராஜு.

திரு. கே.பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திற்கு நேற்றுகூட வழங்கியிருக்கிறோம். அனைத்தும் வழங்கியாகிவிட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர்அவர்களே, கோவை மாவட்டத்திற்கு 4,36,256 சேலைகளும், 4,02,058 வேஷ்டிகளும் ஒதுக்கப்பட்டிருந்தன. அவை முழுவதும் சப்ளை செய்யப்பட்டுவிட்டன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.கே லட்சுமணன்.

திரு. வி.கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருவேளை பொங்கலுக்குப் பின்னாலே கொடுத்திருக்கலாம். பொங்கல் அன்று கொடுக்கப்படவில்லை. அதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.கே. லட்சுமணன், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திரு. வி.கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் பேருரையிலே கோவையிலே மூடப்பட்டிருக்கிற தொழிற்சாலைகளைப் பற்றி எந்தக் குறிப்பும் இல்லை. இந்த மன்றத்திலே பலமுறை, கோவையிலே பல தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன, அதனால் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றெல்லாம் எடுத்துச் சொன்னேன். ஆனால், இன்றுவரை அந்தத் தொழிற்சாலைகள்

திறக்கப்படவில்லை என்பதை இங்கே நான் வருத்தத்தோடு குறிப்பிட விரும்புகிறேன்.

அரசு இலாக்காக்கள் சரியான முறையிலே செயல்படாததன் காரணமாக பல திட்டங்கள் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, டெண்டர்கள் விடப்பட்ட பின்னாலே கூட நிறைவேறாமல் இருப்பதை நான் இங்கே சொல்லாமல் இருக்க் முடியாது. குறிப்பாக, கோவையிலே இரண்டாவது பாதாளச் சாக்கடைத் திட்டம் இன்னும் முற்றுப்பெறாமலே இருக்கிறது. ஐந்து ஆண்டுகளாகச் சொல்லியும்கூட ஒரு கோடி ரூபாயிலே தொடங்கப்பட்ட திட்டம் 17 கோடி ரூபாய்க்கு அது திருத்தப்பட்டு தயார் செய்யப்பட்ட பின்னாலேகூட இன்றுவரை முற்றுப்பெறாமலே இருக்கிறது.

அதே போல, 1 கோடியே 17 லட்சம் ரூபாய் செலவிலே ஆடோமெடிக் டிராபிக் சிக்னல்கள் நிறுவ வேண்டும் என்று அரசு திட்டமிட்டு இருந்தும்கூட இன்றுவரை ஒரு சிக்னல்கூட அங்கே நிறுவப்படவில்லை என்பதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்டோமெடிக் டிராபிக் சிக்னல்கள் நிறுவுவதற்காக டி.என்.யூ.டி.பி. மூலம் டெண்டர்கள் எல்லாம் கோரப்பட்டு அவை எல்லாம் முடிவுக்கு வந்திருக்கின்றன. அதற்கான பணி ஆயத்த நிலையில் இருக்கிறது. டெண்டர்கள் எல்லாம் கோரப்பட்டு எல்லா வேலைகளும் முடிக்கப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டு இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.கே. லட்சுமணன்.

திரு. வி.கே. லட்சுமணன்: அதே போல், நஞ்சப்பா ரோடிலே ஒரு சுரங்கப்பாதையும், பெரிய கடை வீதியிலே ரயில்வே அண்டர் பிரிட்ஜும் அகலப்படுத்துவதற்கு டெண்டர் விடப்பட்டும்கூட இன்றுவரை வேலை துவங்கப்படவில்லை என்பதை இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 2–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.கே. லட்சுமணன், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திரு. வி.கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைமாற்று வாரியத்தில் கடந்த நான்கு ஆண்டுகளாக நிறைவேற்றப்பட வேண்டிய ஒரு மழைநீர் கால்வாய் திட்டம் நிறைவேற்றப்படாமல் இன்றைக்கு அந்த மக்கள் பெரிதும் அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே கூற விரும்புகிறேன். ஆக, இந்த ஆளுநர் உரையில் பல்வேறு கருத்துக்கள் சொல்லியிருந்தாலும்கூட, கடந்த ஐந்து ஆண்டுகளாக அது நேரிடையாக மக்களுக்கு போய் சேர்ந்ததா என்று பார்க்கும்போது சேரவில்லை என்பதைத்தான் இங்கே வருத்தத்தோடு சொல்ல வேண்டி இருக்கிறது. நான் குறிப்பிட்ட பல திட்டங்கள் நிறைவேறுவதற்கு அமைச்சர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு உரையை முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.கே. லட்சுமணன் பேசுகிறபோது ஆளுநர் உரை என்று மட்டும் போட்டிருக்கிறீர்களே, His Excellency என்று ஏன் போடவில்லை என்று கேட்டார். இதற்கு முன்னரும் அப்படியேதான் போடப்பட்டு வந்திருக்கிறது என்று நான் பதில் சொன்னேன். அதற்குக் காரணம் நம்முடைய Rules-ல் இருப்பதும்கூட The Governor's Address என்றுதான் இருக்கும். ஏற்கெனவே போடப்பட்டதைத்தான் போட்டு வந்திருக்கிறோம். இதிலே இப்போது எதையும் மாற்றவில்லை. உடனே என்ன கேட்டார் என்றால், ஆளுநர் வருகின்றபோது எப்படி வரவேண்டும், போகின்றபோது எப்படி போகவேண்டும் என்ற புத்தகத்திலேயும் நீங்கள் The Governor என்றுதான் போடுகிறீர்கள் என்று கேட்டார். The Rules and procedures to be followed என்று இருப்பதால் The Governor, The Speaker என்றுதான் இருக்கும். இதையெல்லாம் விதிகள் புத்தகத்திலே பார்த்து இருப்பீர்களேயானால் The Governor's Address என்றுதான் இருக்கும். His Excellency The Governor's Address என்று விதிகளில் இருக்காது. ஆளுநர் வருகின்றபோது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் என்ற விதிகள் இப்போது போடப்பட்ட ஒன்று அல்ல. இதை உங்கள் காமராசர் காலத்திலே நீங்கள் எப்படி போட்டுக் கொண்டு வந்தீர்களோ அதை அப்படியே அச்சிட்டு ஒவ்வோர் ஆண்டும் ஆளுநர் வருகின்றபோது உறுப்பினர்களுக்கு கொடுக்கிறோம். எனவே, எந்த மாற்றமும் இதிலே இல்லை. இந்த மாதிரி Rules and Procedures - இல் போய் His Excellency என்று எங்கேயும் போட்டுக் கொண்டிருக்க மாட்டார்கள்.

திரு. வி.கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது அப்படியே ஈ அடிச்சான் காப்பியாக இருக்க வேண்டும் என்பதில்லை. யாரேனும் தவறு செய்திருந்தாலும்கூட, நாம் அதைத் திருத்தி நடைமுறையை மாற்றிக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காமராசர் காலத்திலே போடப்பட்டு வந்த முறை என்று நான் சொன்னேன். யாராவது தவறு செய்திருந்தால் என்று நீங்கள் சொன்னால், காமராசர் தவறு செய்தார் என்று சொல்கிறீர்களா? இது விதிமுறைகளின்படி போடப்படுகிறது. என்ன என்ன விதிமுறைகள் என்று சொல்கிற ஒரு சிறு கையேடு. அதைப்போல ஆளுநர் உரை என்று போடுவதில் விதிகளில் என்ன முறை பின்பற்றப்பட்டு வந்ததோ அதுதான் பின்பற்றப்படுகிறது. ஆகவே உங்களுக்கு ஏதோ ஒரு மாயையில், எதையாவது பேசினால் என்ன கிடைக்கும் என்ற விதத்தில், 'யாராவது தவறு செய்தால்' என்று ஆரம்பித்து விட்டீர்கள் கடைசியில். உட்காருங்கள். காமராசரை அப்படியெல்லாம் சொல்லாதீர்கள்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (16-2-1996) காலை 10-00 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-33 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

1. 1978-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தின் பட்டியல் III-ல் திருத்தம் செய்வது குறித்து வருவாய்த்துறையின் 25-7-1995-ஆம் நாளிட்ட 712 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1978) 47(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

திரு. வி.கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது அப்படியே ஈ அடிச்சான் காப்பியாக இருக்க வேண்டும் என்பதில்லை. யாரேனும் தவறு செய்திருந்தாலும்கூட, நாம் அதைத் திருத்தி நடைமுறையை மாற்றிக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காமராசர் காலத்திலே போடப்பட்டு வந்த முறை என்று நான் சொன்னேன். யாராவது தவறு செய்திருந்தால் என்று நீங்கள் சொன்னால், காமராசர் தவறு செய்தார் என்று சொல்கிறீர்களா? இது விதிமுறைகளின்படி போடப்படுகிறது. என்ன என்ன விதிமுறைகள் என்று சொல்கிற ஒரு சிறு கையேடு. அதைப்போல ஆளுநர் உரை என்று போடுவதில் விதிகளில் என்ன முறை பின்பற்றப்பட்டு வந்ததோ அதுதான் பின்புற்றப்படுகிறது. ஆகவே உங்களுக்கு ஏதோ ஒரு மாயையில், எதையாவது பேசினால் என்ன கிடைக்கும் என்ற விதத்தில், 'யாராவது தவறு செய்தால்' என்று ஆரம்பித்து விட்டீர்கள் கடைசியில். உட்காருங்கள். காமராசரை அப்படியெல்லாம் சொல்லாதீர்கள்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (16-2-1996) காலை 10-00 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-33 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

1. 1978-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தின் பட்டியல் III-ல் திருத்தம் செய்வது குறித்து வருவாய்த்துறையின் 25-7-1995-ஆம் நாளிடட் 712 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1978) 47(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

1996 பிப்ரவரி 15]

2. துறையூர் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கத்திற்குச் சொந்தமான இயக்கூர்தி எண் TN. 45/Y-5192-க்கு மோட்டார் வாகன வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து உள்துறையின் 20-9-1995-ஆம் நாளிட்ட 1409 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழநாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன்வைக்கப் பெற்றது).

3. சென்னை, திருவாளர்கள் ப்ளு கிராஸ் ஆப் இந்தியா, சென்னை-15 எக்ஸ் மொபைல்ஸிடமிருந்து வாங்கப் பெற்ற சுவராஜ் மஸ்தா கால்நடை ஆம்புலன்ஸ் மாடல் WT-48E-க்கு விற்பனை வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 12-10-1995 ஆம் நாளிட்ட 327 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

4. திருவாளர்கள் பாபநாசம் பேப்பர் மில்ஸ் லிமிடெட்டிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய வரியினை 1989-90-லிருந்து 1993-94 வரை சில நிபந்தனைகளுக்குட்பட்டு ஐந்து ஆண்டுகளுக்கு தள்ளிப் போடுவது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 11-8-1995-ஆம் நாளிட்ட 257 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

5. 1986-87 முதல் 1990-91 வரை இண்டஸ்டிரியல் வால்வ் விற்பனையினால் செலுத்தப்பட வேண்டிய வரி வித்தியாசத்தினை தள்ளுபடி செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 29-9-1995 ஆம் நாளிட்ட 443 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவு, 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல்வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7(3) பிரிவுகளின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

6. 1-4-1982 முதல் 31-7-1987 வரையிலான காலங்களுக்கு சாம்பிராணி (BENZOIN) விற்பனையினால் செலுத்தப்பட வேண்டிய வரி வித்தியாசத்தினை தள்ளுபடி செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையில் 3-11-1995 ஆம் நாளிட்ட 350 ஆம்

எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவு, 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல் வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7(3) பிரிவுகளின் கீழ் பேரவை முன்வைக்கப் பெற்றது).

7. சென்னை (வடக்கு மற்றும் தெற்கு) வேலூர், திருச்சி, சேலம் ஆகிய கோட்டங்களில் 1985-86 மற்றும் 1986-87 ஆகிய காலங்களில் வெள்ளைப் பூண்டு விற்பனையினால் செலுத்தப்பட வேண்டிய வரி, மேல்வரி, கூடுதல் மேல்வரி, கூடுதல் வரி, மற்றும் தண்டத் தீர்வை ஆகியவைகளை தள்ளுபடி செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 10-10-1995-ஆம் நாளிட்ட 455 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவு, 1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல்வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7(3) பிரிவு மற்றும் 1970 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1970) 4(3) பிரிவுகளின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

8. கன்னியாகுமரி மாவட்டம், மூலச்சல், திருவாளர்கள் YMCA மகளிர் மறுசீரமைப்பு மையம் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு விற்பனை வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக் கட்டளைகள் துறையின் 14-11-1995 ஆம் நாளிட்ட 359 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

9. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 35-வது பிரிவின் கீழ் கடமையாற்ற இணை ஆணையர்கள் வணிகவரி அவர்களுக்கு உள்ளூர் எல்லையை நிர்ணயம் செய்ய சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் வணிகவரிகள் அவர்களுக்கு அதிகாரம் வழங்குவது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 14-11-1955 ஆம் நாளிட்ட 360 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1959-ஆம் ஆண்டு தமிழ்நரடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

10. 1981-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஓட்டல்கள், தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரி விதித்தல் சட்டப் பிரிவுகளில்

1996 பிப்ரவரி 15]

குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களை செயல்படுத்தவும் அவற்றை நிறைவேற்றவும் உரிய அதிகாரங்களை வழங்குதல் குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 18-9-1995 ஆம் நாளிட்ட 303 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஓட்டல்கள் தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரிவிதித்தல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 6/1981) 21(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

11. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (மொத்தமாக வழங்குதல்) விதிகளில் திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 12-9-1994 ஆம் நாளிட்ட 152 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

12. புதுக்கோட்டை, திருவாளர்கள் நிஜாம் பேப்பர் மற்றும் போர்டு மில்ஸ் லிமிடெட்டிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய வரியினை 1-4-1990-லிருந்து 31-3-1993 வரை சில நிபந்தனைகளுக்குட்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு தள்ளிப் போடுவது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 21-7-1995 ஆம் நாளிட்ட 232 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ பேரவைமுன் வைக்கப்பெற்றது).

13. 1994-95-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்தறித் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் இருபத்திரெண்டாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

14. 1994-95 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சரிகை லிமிடெட்டின் இருபத்திமூன்றாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

15. 1994-95-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் இருபதாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

16. 1994–95–ஆம் ஆண்டிற்கான அன்னை சத்தியா போக்குவரத்துக் கழகத்தின் எட்டாவது ஆண்டறிக்கை (1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

17. 1994–95–ஆம் ஆண்டிற்கான பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் இருபத்திமூன்றாவது ஆண்டறிக்கை (1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் இணைப்பு '2' ல் குறிப்பிடப்பட்டுள்ள பொது நிறுவனங்களின் பட்டியலிலிருந்து தமிழ்நாடு இறைச்சிக் கழகத்தினை நீக்குவது குறித்து 29–12–1995–ஆம் நாளிட்ட கடித எண் 24401/89–21 தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை (சமுவ–3)–இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

2. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் உரையாற்றும்போது பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறை பற்றிய புத்தகம். (தமிழ், ஆங்கிலம்).

3. 1996–ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 14–ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்).

4. உடுக்குறியிடாத வினாக்கள் – விடைகள் (பட்டியல் 1 முதல் 3 வரை) ஒவ்வொரு பட்டியலும் (வரிசை எண். 1 முதல் 100 வரை)

5. உடுக்குறியிடாத வினாக்கள் – விடைகள் (4–வது பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 50 வரை).

16. 1994–95–ஆம் ஆண்டிற்கான அன்னை சத்தியா போக்குவரத்துக் கழகத்தின் எட்டாவது ஆண்டறிக்கை (1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

17. 1994–95–ஆம் ஆண்டிற்கான பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் இருபத்திமூன்றாவது ஆண்டறிக்கை (1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் இணைப்பு ‘2’ ல் குறிப்பிடப்பட்டுள்ள் பொது நிறுவனங்களின் பட்டியலிலிருந்து தமிழ்நாடு இறைச்சிக் கழகத்தினை நீக்குவது குறித்து 29–12–1995–ஆம் நாளிட்ட கடித எண் 24401/89–21 தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை (சமுவ–3)–இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

2. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் உரையாற்றும்போது பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறை பற்றிய புத்தகம். (தமிழ், ஆங்கிலம்).

3. 1996–ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 14–ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்).

4. உடுக்குறியிடாத வினாக்கள் - விடைகள் (பட்டியல் 1 முதல் 3 வரை) ஒவ்வொரு பட்டியலும் (வரிசை எண். 1 முதல் 100 வரை)

5. உடுக்குறியிடாத வினாக்கள் - விடைகள் (4–வது பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 50 வரை).

1996 பிப்ரவரி 15]

இணைப்பு

(267 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்களே!

1996 ஆம் ஆண்டில், தமிழ்நாடு சட்டப்பேரவையின் முதலாவது கூட்டத் தொடரில் உங்கள் முன் உரையாற்றுவதில் நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன். உங்கள் அனைவர்க்கும் என்னுடைய உளம் கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. இது, தமிழ் நாடு 10 ஆம் சட்டப் பேரவையின் கடைசி கூட்டத்தொடராகும். இவ்வரசு அதன் ஐந்தாண்டுப் பதவிக் காலத்தை முழுமையாக முடிக்கவுள்ளது. ஐந்தாண்டுக் காலத்தைப் பின்நோக்கிப் பார்த்தோமானால், இம்மாநிலம் அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றமடைந்துள்ளதை நாம் காணலாம். 1991-92 ஆம் ஆண்டிலிருந்து ஆண்டுத் திட்ட ஒதுக்கீடுகள் ஒவ்வோராண்டும் விஞ்சப்பட்டு வந்துள்ளன. ஏழை எளியோர்க்கு விரிவான சமூகப் பாதுகாப்பு நலத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அனைத்துத் துறைகளின் வளர்ச்சிக்கும் அடித்தளமாக அமைகின்ற சட்டம்-ஒழுங்கு நிலைமை சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டுள்ளது. இந்தச் சிறந்த சாதனையை எண்ணி நாம் பெருமிதம் கொள்ளலாம். இம்மாநிலம் எதிர்காலத்திலும் இத்தகைய முன்னேற்றத்தைத் தொடர்ந்து பெற்றுவரும் என நான் நம்புகிறேன்.

3. இவ்வரசு பதவி ஏற்றபோது மாண்புமிகு முன்னாள் பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களின் படுகொலையைத் தொடர்ந்து ஏற்பட்ட இடர்ப்பாடான நிலைமையை மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்கள் நினைவுகூர்வர். வெளிநாட்டுப் போராளிகள், தீவிரவாதிகள் ஆகியோரால் உருவான அபாயம் உறுதியாக ஒருமித்த முறையில் சமாளிக்கப்பட்டது. இவ்வரசு பொறுப்பேற்ற ஒரு சில வாரங்களுக்குள் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. அதன் பின்னர், அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டதையடுத்து எழுந்த வன்முறைச் சம்பவங்களால் நாடு முழுவதும் பதட்டமடைந்த போது, தமிழ்நாடு மத இணக்கத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்கியது. வெடிமருந்துகளைப் பயன்படுத்தி கொடிய நோக்கங்களை எய்த இடதுசாரி தீவிரவாதிகளும், சமய அடிப்படைவாதிகளும் மேற்கொண்ட முயற்சிகள் உறுதியான தடுப்பு நடவடிக்கைகளால் தடுத்து நிறுத்தப்பட்டன. இம்மாநிலத்தில் ஏற்பட்ட பல்வேறு வெடிகுண்டு

விபத்து சம்பவங்கள் குறித்துப் புலனாய்வு செய்ய சிறப்புப் புலனாய்வுக் குழு ஒன்று அமைக்கப்பட்டதையடுத்து, வெடிகுண்டுச் சம்பவங்கள் தடுக்கப்பட்டன. தென் மாவட்டங்களில் அண்மையில் ஏற்பட்ட வன்முறைக் கலவரச் சம்பவங்கள் உடனடியாகக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் இப்பகுதிக்குச் சென்று நேரடியாக தலையிட்டதால், பொதுமக்களிடத்தில் நம்பிக்கை உணர்வு தோற்றுவிக்கப்பட்டதுடன், அங்குள்ள அதிகாரிகள் உடனடியாக உறுதியான நடவடிக்கை எடுக்கவும் வழிவகை செய்தது. இந்நடவடிக்கைகளினால் தென் மாவட்டங்களில் மீண்டும் அமைதி திரும்பியது.

4. இவ்வரசு கடந்த ஐந்தாண்டுக் கால அளவில் தொடர்ந்து மேற்கொண்ட நடவடிக்கைகளால், மாநிலக் காவல்துறை, புதிய நோக்கும், வழிகாட்டுதலும் பெற்று, நவீனமயமாக்கப்பட்ட, தொழில் சிறப்புப் பெற்ற மனிதாபிமானத்துடன் செயல்படும் படையாக மாற்றப்பட்டுள்ளது. காவல்துறைக்கான நவீன தகவல் தொடர்பு சாதனங்கள், படைக்கலங்கள், காவல்துறையின் புலனாய்வுக்கும், தகவல்களைப் பெறுதலுக்கும் உரிய வசதிகள் ஆகியவற்றுடன் காவல் படையை நவீனமயமாக்க மொத்தம் ரூ.50 கோடி செலவிடப்பட்டுள்ளது. காவல் துறையை நவீனமயமாக்க மாநில அரசின் தேவை ரூ.80.45 கோடியாயிருக்க, இந்திய அரசு ரூ.10 கோடி மட்டுமே வழங்கியுள்ளது. இதனால் தடைப்படாமல், மாநில அரசு, தன்னுடைய சொந்த நிதி ஆதாரங்களிலிருந்து போதிய நிதியை ஒதுக்கியுள்ளது. இம்மாநிலத்திலுள்ள 1172 காவல் நிலையங்கள் ஒவ்வொன்றுக்கும் தற்போது மோட்டார் வண்டி, தொலைபேசி வசதி, கம்பியில்லாத் தகவல் தொடர்பு சாதன வசதிகள் ஆகியவை செய்து கொடுக்கப்பட்டுள்ளன. சென்னைப் பெருநகர்ப் பகுதியில் காவல் பணியை மேம்படுத்தும் நோக்குடன், 1996 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 9 ஆம் நாளிலிருந்து அதிகரிக்கப்பட்ட காவலர்களையும், சாதனங்களையும் கொண்டு, முதற்கட்டமாக புறநகர்ப் பகுதிகளில் உள்ள 5 காவல் நிலையங்கள் சென்னை, காவல்துறை ஆணையரின் அதிகார வரம்பிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. 1991 ஆம் ஆண்டில் 68,638 ஆக இருந்த காவல் படையினரின் மொத்த எண்ணிக்கை. 1996 ஆம் ஆண்டில் 78,428 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மகளிருக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களைத் தடுக்க இம்மாநிலத்தில் 57 அனைத்து மகளிர் காவல் நிலையங்களைத் தொடங்கியதில் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் முன்னோடியாகத் திகழ்வதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இந்த முயற்சியை

1996 பிப்ரவரி 15]

மக்கள் பெரிதும் வரவேற்றுள்ளதுடன், உலக நாடுகள் அளவிலும் பரந்த அளவில் பாராட்டப்பட்டுள்ளது. இம்மாநிலத்திலுள்ள அனைத்துக் காவல் மாவட்டங்களிலும் தற்போது முழு அளவில் செயல்படும் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் உள்ளன. வன்முறைக் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், அவர்களுடைய குடும்பத்தினருக்கும் புது வாழ்வு அளிக்க, பாதிக்கப்பட்டோர் நல நிதி ஒன்று ஏற்படுத்தப்பட்டு, நாட்டிலேயே தமிழ்நாடு முதல் மாநிலமாகத் திகழ்கிறது. காவல்துறையில் ஒழுங்குணர்வைப் பேணிக் காப்பதற்காகத் தொகுதிக் காப்புறுதித் திட்டங்கள். சுகாதார நல நிதித் திட்டம். குறைந்த விலையில் உணவுப் பொருட்கள் வழங்கும் திட்டம், வீட்டுவசதித் திட்டம் ஆகிய திட்டங்கள் உட்பட காவல் துறையினருக்காக நலத் திட்டங்கள் பல மேற்கொள்ளப்பட்டுள்ளன. காவல்துறையின் அதிகாரிகளுக்கும், காவலர்களுக்கும் தரமான பயிற்சியளிப்பதற்காக, வீராபுரத்தில் காவலர் பயிற்சிக் கழகம் ஒன்று ரூ.20 கோடி செலவில் நிறுவப்பட்டு வருகிறது.

5. "நீதி காலதாமதப்படுகிறது எனில், நீதி மறுக்கப்படுகிறது" என்பதை முழுமையாக உணர்ந்து வழக்குகளை விரைந்து முடிப்பதற்காக புதிய நீதிமன்றங்கள் பல ஏற்படுத்தப்பட்டுள்ளன. 44 குற்றவியல் நீதிமன்றங்கள், உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களாக மாற்றப்பட்டு வருகின்றன. சென்னையில் 3 நீதி மன்றங்களும், மதுரை, சேலம், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் ஒரு நீதிமன்றம் வீதம், ஆக 6 குடும்ப நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில், 5 நீதிமன்றங்களில் பெண்கள் நீதிபதிகளாக உள்ளனர். கிருஷ்ணகிரியில் கூடுதலாக ஒரு நீதிமன்றமும், தூத்துக்குடி, நாகப்பட்டினம், திருவண்ணாமலை ஆகிய இடங்களில் புதிதாக 3 நீதிமன்றங்களும் உட்பட புதிதாக 4 தலைமை குற்றவியல் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. புதிதாக 9 சார்நீதிமன்றங்கள், கூடுதல் உரிமையியல் நீதிமன்றங்கள் உட்பட புதிதாக 7 உரிமையியல் நீதிமன்றங்கள் ஆகியவற்றை அமைக்க ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரியில் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் ஒன்றை அமைக்கவும் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. 1991–92–லிருந்து மொத்தம் 84 நீதிமன்றங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இது நாடு விடுதலை பெற்றதிலிருந்து நடைபெறாத ஒன்றாகும். அனைத்து மாவட்டங்களிலும் உள்ள தலைமை குற்றவியல் நீதிமன்றங்கள், கூடுதல் செசன்சு நீதிமன்றங்களாக நிலை உயர்த்தப்பட்டு, அவை மனித உரிமைகள் நீதிமன்றங்களாகப் பெயரிடப்பட்டு, மனித உரிமைகள் மீறப்படுவது தொடர்பான வழக்குகள் அனைத்தையும் விசாரிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளன. குறைந்த செலவில் வழக்குகளை

[*1996 பிப்ரவரி 15*

விரைவாக முடிக்க வழிவகை செய்ய பல்வேறு சிவில் நீதிமன்றங்களின் பணவகையிலான அதிகார வரம்புகளை அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை, நீதிமன்றக் கட்டிடங்கள் கட்டுவதற்கும், நீதித்துறை அலுவலர்களுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்கும் 1993-94 ஆம் ஆண்டிலிருந்து மொத்தம் ரூ.35.17 கோடி செலவில் 80 திட்டங்கள் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளன. வழக்குகளை விரைந்து முடிப்பதற்காக அரசு வழக்கு இயக்ககம் ஒன்றும், குற்ற வழக்கு இயக்ககம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளன. வழக்குரைஞர்கள் நல நிதியின் கீழ் வழக்குரைஞர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை வழக்குரைஞர் இறந்துவிடும் நேர்வில் ரூ.1 இலட்சமும் ஓய்வு பெறும் போது ரூ.50,000/-ம் வழங்க கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது.

6. தமிழ்நாடு கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது. வடகிழக்குப் பருவ மழைக் காலத்தின் போது சாதாரணமாகப் பெய்யும் மழை அளவு 461 மி. மீட்டராக இருக்க 1995 ஆம் ஆண்டில் பெய்த மழை அளவு 259 மி. மீட்டர் மட்டுமே ஆகும். இது 44 சதவீதம் குறைவாகும். சிதம்பரனார், கன்னியாகுமரி, இராமநாதபுரம், காமராசர், திருநெல்வேலி-கட்டபொம்மன், கோயம்புத்தூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி-பெரும்பிடுகு முத்தரையர், கரூர்-தீரன் சின்னமலை கவுண்டர், பெரம்பலூர்-திருவள்ளுவர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், மதுரை, திண்டுக்கல்-அண்ணா, நாகப்பட்டினம்-காயிதேமில்லத் ஆகிய 15 மாவட்டங்களை, வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் என்று அரசு அறிவித்துள்ளது. மேலும், தென் ஆர்க்காடு-வள்ளலார், சேலம், விழுப்புரம்-இராமசாமி படையாட்சியார், திருவண்ணாமலை-சம்புவராயர் ஆகிய மாவட்டங்களிலுள்ள 10 வட்டங்களும், வறட்சியால் பாதிக்கப்பட்ட வட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. குடிநீர்த் தட்டுப்பாடு, ஊரக வேலை வாய்ப்பின்மை, கால்நடைகளுக்குத் தீவனம் மற்றும் தண்ணீர் இல்லாமை ஆகிய நிலைமைகளைச் சமாளிக்க உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. குடிநீர் வழங்கல், ஊரக வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துதல், ஏனைய துயர்தணிப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றிற்கான செலவுக்கு முதற்கண் ரூ.70 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில், மொத்தம் 3,753 துளைக் கிணறுகள் அமைப்பதற்காகும் தொகையான ரூ.26.94 கோடியும் அடங்கும். இராமநாதபுரம் மாவட்டத்தில் நீரின் உப்புத் தன்மையை நீக்கும் 45 தளவாடங்களை மொத்தம் ரூ.65 கோடி செலவில் அமைக்கும் பணி போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மத்திய அரசு, இதற்காகும் செலவில் 75 சதவீதத்தை வழங்கும் என்று முதற்கண் உறுதி அளித்திருந்தபோதிலும்,

1996 பிப்ரவரி 15]

ஏற்கெனவே அளித்துள்ள ரூ.10.75 கோடியோடு தன் உதவித் தொகையை நிறுத்திக் கொண்டுள்ளது. எஞ்சியுள்ள செலவைத் தற்போது மாநில அரசு ஏற்க வேண்டியுள்ளது. மேலும், நீரின் உப்புத் தன்மையை நீக்கும் 155 சிறு தளவாடங்களை மொத்தம் ரூ.28.33 கோடி செலவில் அமைக்கவும் அரசு அனுமதி அளித்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், 1996 ஜனவரி 27 ஆம் நாளன்று இராமநாதபுரத்தில் வறட்சி நிலையினை நேரடி ஆய்வு செய்து ரூ.266 கோடி செலவிலான துயர் தணிப்புத் திட்டத்தை அறிவித்தார். இதில், குடிநீர் வழங்கும் பணிகளை உடனடியாக மேற்கொள்ளுவதற்காகும் கூடுதல் நிதி ரூ.72 கோடி அடங்கும். சாலைச் சீரமைப்புப் பணிகளை விரைவாக மேற்கொள்ளுவதற்காக, ரூ.35 கோடி ஒதுக்கப்படும். ஊரக வேலை வாய்ப்புகளை ஏற்படுத்த ரூ.85 கோடி செலவாகும். குடிநீர் வழங்கும் பணிகளை மேற்கொள்ளுவதற்காக திண்டுக்கல்–அண்ணா மாவட்டத்தில் உள்ள நகராட்சிகளுக்கு ரூ.5 கோடி மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இயற்கைச் சீற்றத் துயர்தணிப்பு தேசிய நிதியிலிருந்து மொத்தம் ரூ.630 கோடி நிதியுதவி கோரும் வறட்சி நிலை விவர அறிக்கை ஒன்றை மாநில அரசு தயாரித்து வருகிறது. இதுவரை ஏற்பட்டிராத வறட்சி நிலையைச் சந்திக்க, போதிய நிதிஉதவி அளித்து இம் மாநிலத்திற்கு உதவுமாறு, தமிழ்நாடு அரசு, மத்திய அரசைக் கேட்டுக் கொள்ளும்.

7. வடகிழக்குப் பருவமழை பொய்த்ததையடுத்து ஏற்பட்ட வறட்சி நிலைமை, தமிழ்நாட்டிற்கு விட வேண்டிய நீரை கருநாடக அரசு விடத் தவறியதால் மேலும் மோசமடைந்துள்ளது. இந்த நீர், இந்திய அரசின் 1991 ஆம் ஆண்டு டிசம்பர் 10 ஆம் நாளிட்ட அரசிதழ் தனி அறிவிப்பில் வெளியிடப்பட்ட காவிரி நீர்த் தகராறு குறித்த நடுவர் மன்றத்தின் 1991 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 25 ஆம் நாளிட்ட இடைக்கால ஆணையின் படி விட வேண்டியதாகும். கருநாடக அரசு, முந்தைய ஆண்டுகளில் நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையைச் செயல்படுத்தவில்லை என்ற போதிலும், மேட்டூர் நீர்த்தேக்கத்திற்குப் போதிய அளவுக்கு நீர் வரப் பெறுவதற்கு இயற்கை தாராளமாக உதவியது. 1995–ல் வடகிழக்குப் பருவமழை பொய்த்ததால், வாடும் பயிர்களைக் காப்பாற்ற இடைக்கால ஆணையின்படி நீர் விடுவதற்குக் கருநாடக அரசுக்கு உத்தரவு பிறப்பிக்க உச்சநீதி மன்றத்தையும் காவிரி நீர்த்தகராறு குறித்த நடுவர் மன்றத்தையும் தமிழ்நாடு அணுக வேண்டிய நிலை உருவாக்கப்பட்டது. இது தொடர்பாகத் தலையிட்டுத் தமிழ்நாட்டிற்கு உடனடியாக 11 டி.எம்.சி. நீர் விட 19–12–1995 ஆம் நாளிட்ட நடுவர்மன்றத்தின் இடைக்கால ஆணையைச் செயல்படுத்த அணுகுமுறை ஒன்றை உருவாக்க மாண்புமிகு

பாரதப் பிரதமர் அவர்களை உச்சநீதிமன்றம் கேட்டுக் கொண்டது உட்பட அடுத்தடுத்து ஏற்பட்ட நிலவரங்களையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். காவிரி நீர்த்தகராறு குறித்த நடுவர்மன்றம் வரையறுத்த மாதாந்திர அளவுடன், நாளொன்றுக்கு 1 டி.எம்.சி. என்ற வீதத்தில் 6 டி.எம்.சி. நீரைத் தற்காலிகமாக விடுமாறு மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் கருநாடக அரசைக் கேட்டுக் கொண்டார். மேலும் வாடும் பயிர்களின் நிலைமையை நேரடியாகக் கண்டு ஆய்வு செய்யவும், தண்ணீர்த் தேவை குறித்து ஆராயவும் வல்லுநர் குழு ஒன்றையும் நியமித்தார். தமிழ்நாட்டிற்கு 11 டி.எம்.சி. நீரை விட வேண்டுமென்ற நடுவர் மன்றத்தின் ஆணையில் எந்த மாற்றத்தையும் செய்ய உச்ச நீதி மன்றம் கருதவில்லை. மேலும், சட்டப்படி அமைக்கப்பட்ட நடுவர் மன்றம் இரு மாநிலங்களிலும் தற்போதுள்ள வாடும் பயிர்கள், தேக்கி வைக்கப்பட்டுள்ள நீரின் அளவு ஆகியவற்றைக் கருத்தில் கொண்ட பின்னர், தண்ணீரைத் திறந்துவிடுவது பற்றி ஏற்கெனவே ஆராய்ந்துள்ளதால், இதற்கென்று தனியாக "வல்லுநர் குழு" ஒன்றை அமைக்க வேண்டிய அவசியம் இருப்பதாகத் தெரியவில்லை. மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையில் அனைத்துக் கட்சிகளின் கூட்டம் ஒன்று கூட்டப்பட்ட பின்னர், இம் மாநிலத்திற்கு எஞ்சிய 5 டி.எம்.சி. நீரைப் பின்னர் பெற்றுத்தர மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் உறுதி செய்வார் என்பதை எதிர்நோக்கி, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின் முடிவை எதிர்ப்புடன் தமிழ்நாடு ஏற்றுக் கொண்டது. எஞ்சிய 5 டி.எம்.சி. நீரை இம் மாநிலத்திற்கு வழங்க கருநாடக அரசுக்கு உத்தரவு பிறப்பிக்க உச்சநீதிமன்றத்தில் விண்ணப்பம் ஒன்றைத் தமிழ்நாடு அரசு தற்போது தாக்கல் செய்துள்ளது. 1996 பிப்ரவரி 6 ஆம் நாள் புது டில்லியில் நடைபெற்ற தேசிய நீர் ஆதாரங்கள் குழுக் கூட்டத்தில், தமிழ்நாட்டின் அவசர, உடனடித் தண்ணீர்த் தேவை நிறைவு செய்யப்படாத நிலையில், பன்மாநிலங்களிடையே செல்லுகின்ற ஆறுகளிலிருந்து கிடைக்கின்ற நீரை மாநிலங்களுக்கிடையே பகிர்ந்தளிப்பது குறித்த வரைவுக் கொள்கை வழி காட்டிக் குறிப்புகள் பற்றி தற்போது விவாதிப்பது பயனற்றதாகும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுட்டிக் காட்டினார். நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையின்படி, எஞ்சியுள்ள 5 டி.எம்.சி. தண்ணீரைத் திறந்துவிட வேண்டியதன் அவசரத் தேவை குறித்து வலியுறுத்தினார். மேலும், 1991 டிசம்பர் 10 ஆம் நாளன்று, மத்திய அரசு, அரசிதழில் வெளியிட்ட காவிரி நீர்த் தகராறு குறித்த நடுவர் மன்றம் பிறப்பித்த இடைக்கால ஆணை, உண்மையில் செயலாக்கப்படுவதை உறுதி செய்வதற்காக, 1956 ஆம் ஆண்டு பன்மாநில

1996 பிப்ரவரி 15]

நீர்த் தகராறுகள் சட்டத்தின் 6A பிரிவில் கூறியுள்ளபடி, திட்டம் ஒன்றை உருவாக்கி, அத்திட்டம் செயல் படுத்தப்படுவதை உறுதி செய்ய கண்காணிப்புக் குழு மற்றும் செயலாக்கக் குழு ஆகியவற்றை அமைக்கும்படி மத்திய அரசிடம் முதலமைச்சர் அவர்கள் மீண்டும் வலியுறுத்தினார். கருநாடக அரசு தண்ணீர் விடாததால், இம் மாநிலத்தில் உணவு உற்பத்தியில் ஏற்பட்ட மொத்த இழப்பு 10 இலட்சம் டன்னுக்கும் அதிகமாக இருக்கும். சட்ட விதிகளைப் பின்பற்றவும், அரசியலமைப்புச் சட்ட நெறிமுறைகளின்படி நிருவாகத்தைத் தங்குதடையின்றி செயல்படுத்தவும், உச்சநீதிமன்றம் மற்றும் காவிரி நீர்த் தகராறு குறித்த நடுவர் மன்றம் போன்ற உரியவாறு அமைக்கப்பட்ட தீர்ப்பு வழங்கும் அமைப்புகள் ஆகியவற்றின் உத்தரவுகளையும் ஆணைகளையும் அனைத்துத் தரப்பினர்களும் ஏற்றுச் செயல்படுத்த வேண்டும். உச்சநீதிமன்றத்தின் ஆணைகளையும், காவிரி நீர்த்தகராறு குறித்த நடுவர்மன்றத்தின் ஆணைகளையும் கருநாடக அரசு ஏற்று நடக்க வேண்டும்.

8. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் தொலைநோக்கு ஆற்றலும், விரைந்து செயல்படும் பாங்கும், ஆர்வமும், கண்ணோட்டமும், உலக அளவில் சென்னையை மிகப் பெரிய போட்டி விளையாட்டுக்குரிய இடமாக உயர்த்தியுள்ளது. ஜவஹர்லால் நேரு தங்கக் கோப்பை பன்னாட்டு கால்பந்து விளையாட்டுப் போட்டி, பன்னாட்டு விளையாட்டுப் போட்டி ஆகியவற்றைத் தொடர்ந்து நடைபெற்ற ஏழாவது தெற்காசிய நாடுகள் கூட்டமைப்பு விளையாட்டுகள், சென்னை மாநகரில் இதற்கு முன்னர் எப்போதுமே நடந்திராத பெரிய போட்டி விளையாட்டு விழாவாகும். இந்த விளையாட்டுகளை மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்கள் 1995 டிசம்பர் 18 ஆம் நாள் தொடங்கி வைத்தார். மொத்தம் 7 "சார்க்" நாடுகளிலிருந்து வந்த தொழில்நுட்பப் பிரதிநிதிகள் உட்பட 2500 விளையாட்டு வீரர்கள் 14 வகை போட்டி விளையாட்டுகளிலும், 2 செயல்முறை விளக்க விளையாட்டுகளிலும் பங்கேற்றனர், ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கத்துடன், மேலும் 5 புதிய விளையாட்டு அரங்கங்கள், அதாவது செயற்கைப் புல்தரை "ஹாக்கி" விளையாட்டு அரங்கம், செயற்கை மேற்பரப்பு உடைய டென்னிஸ் விளையாட்டு அரங்கம். நவீன நீச்சல் வளாகம், முற்றிலும் குளிர்சாதன வசதி செய்யப்பட்ட பலநோக்கு அகவிளையாட்டு அரங்கம், உலகத் தரத்தில் அமைந்த குறிபார்த்துச் சுடுவதற்குரிய களம் ஆகியவை மொத்தம் ரூ.58 கோடி செலவில் கட்டப்பட்டன. மேலும், ரூ.5 கோடி மதிப்புள்ள உயர்தர போட்டி விளையாட்டுச் சாதனங்கள் பல்வேறு போட்டி

விளையாட்டு அரங்கங்களில் நிறுவப்பட்டுள்ளன. அனைத்து வசதிகளும் கொண்ட விளையாட்டுக் கிராமம் ஒன்று ரூ.101 கோடி செலவில் அமைக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித்த செயலூக்கத் திட்டம், இந்திய விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் 106 தங்கப் பதக்கங்களும், 60 வெள்ளிப் பதக்கங்களும், 19 வெண்கலப் பதக்கங்களும் வெல்வதற்குத் தூண்டுகோலாக இருந்தது. சென்னையில் போட்டி விளையாட்டுகளுக்காக உலகத் தரம் வாய்ந்த அடிப்படை வசதிகளை உருவாக்குவது. வருங்காலத்தில் பல முக்கியமான உலகப் போட்டி விளையாட்டுகள் நடைபெறுவதற்கு அனைவரும் விரும்பி ஏற்கும் ஓர் இடமாக சென்னை அமைவதோடு மட்டுமின்றி, தேசிய அளவிலும், உலக அளவிலும், சிறந்த சாதனை படைக்கும் பல போட்டி விளையாட்டு வீரர்களையும் உருவாக்கும் நிலைக்களனாகவும் அமையும்.

9. 1991-92 முதல், ஏற்பளிக்கப்பட்ட ஆண்டுத் திட்ட நிதிஒதுக்கீட்டினை, பெருமளவில் தொடர்ந்து அதிகரிப்பதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா மேற்கொண்ட சிறப்பான முயற்சிகளை, சட்டப் பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவர். கடந்த 4 ஆண்டுகளில், ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடுகளை, திட்டங்களைச் செயலாக்குகையில் விஞ்சுவதற்கு மாநிலம் வகை செய்தது. இக்கால அளவில், இம்மாநிலத்தின் நபர் வாரியான திட்ட ஒதுக்கீடு, தேசிய சராசரி அளவைக் காட்டிலும் அதிகமாக்கப்பட்டது. சிறப்பாகக் குறிப்பிடத்தக்க இச்சாதனை இம்மாநிலத்தின் வளர்ச்சியில் இந்த அரசு கொண்டுள்ள கடமையுணர்வைக் காட்டுகிறது. பல பெரிய மாநிலங்கள் அவற்றின் முதற்கண் ஏற்பளிக்கப்பட்ட ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டைச் சரிவரச் செயலாக்க இயலாத நிலையில் இருக்க, இம்மாநிலத்தின் சாதனையை மத்தியத் திட்டக்குழு பாராட்டியுள்ளது. 1991-92ல் ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீடு ரூ.1605 கோடி என்றிருக்க, அடைந்துள்ள சாதனை ரூ.1725.98 கோடியாக இருந்தது. 1992-93ல் ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீடு ரூ.1766 கோடியாக இருக்க, தமிழ்நாடு அடைந்துள்ள சாதனை ரூ.1935.14 கோடியாக இருந்தது. 1993-94ல் ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீடு ரூ.2101 கோடி என்றிருக்க, அடைந்துள்ள சாதனை ரூ.2234.79 கோடியாக இருந்தது. 1994-95ல் ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீடு 30.89 சதவீதம் அதிகரிக்கப்பட்டு ரூ.2750 கோடியாக நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும், இம்மாநிலம் ரூ.2845.70 கோடி அளவிற்குத் திட்டச் சாதனை புரிந்துள்ளது. 1995-96ல் ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீடு ரூ.3200 கோடி என்றிருக்க, வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.3250.58 கோடி நிதி ஒதுக்கீடு

1996 பிப்ரவரி 15]

செய்யப்பட்டுள்ளது. ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீட்டை இம்மாநிலம் எய்து விடும் என்ற நம்பிக்கை உள்ளது. 1996–97 ஆம் ஆண்டிற்குரிய, ஆண்டுத் திட்டத்தின் ஒட்டு மொத்த அளவை முடிவு செய்வது குறித்து மத்தியத் திட்டக் குழுவோடு நடத்தப்படும் பேச்சு வார்த்தை இன்னும் முடிவுறவில்லை. 1996–97 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு நடப்பு ஆண்டிற்குரிய அளவில் நிர்ணயிக்கப்பட்டாலுங்கூட, இம்மாநிலம், எட்டாம் ஐந்தாண்டுத் திட்ட பண வீக்கத்தைக் கணக்கில் கொள்ளாத ஒதுக்கீட்டு அளவான ரூ.10,200 கோடியை எளிதில் விஞ்சிவிடும் என்பதை, முதல் நான்கு ஆண்டுகளின் மாபெரும் சாதனை உறுதிப்படுத்துகிறது.

10. 1993–94, 1994–95 ஆம் ஆண்டுகளில் இருபது அம்சத் திட்டத்தைச் செயலாக்குவதில், நாட்டிலேயே தமிழ்நாடு முதலிடம் வகித்துள்ளது. இம் மாநிலம், திட்ட இலக்குகள் அனைத்தையும் எய்துவதில் 100 சதவீத சாதனை படைத்துள்ளது. திட்டமிடல்-திட்டச் செயலாக்க மத்திய அமைச்சர், நமது மாநிலத்தின் சிறந்த சாதனையைப் பாராட்டியுள்ளார். 1995–96 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து அதே அளவு சாதனை படைக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

11. இந்த அரசு பின்பற்றிய கொள்கைகள், கடந்த ஐந்து ஆண்டுகளில் இம்மாநிலம் சிறந்த பொருளாதாரச் சாதனை படைக்க வழி வகுத்தன. 1991–92ல் 2.69 சதவீதம் ஆக மட்டுமே இருந்த நிகர மாநில தன் உற்பத்தி மதிப்பீடுகளின் ஆண்டு வளர்ச்சி வீதம். 1994–95ல் 4.90 சதவீதம் ஆக அதிகரித்துள்ளது. எட்டாம் ஐந்தாண்டுத் திட்டக் கால அளவில் அமைப்பு ரீதியில் வரும் தொழில் துறையில் 1.59 இலட்சம் கூடுதல் வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்படும் என்று மதிப்பிடப்பட்டது. அதாவது, ஒவ்வோராண்டும் சராசரியாக 32,000 வேலை வாய்ப்புகள் ஏற்படுத்துவதாகும். இதில், எட்டாம் ஐந்தாண்டுத் திட்டக்காலத்தின் முதல் மூன்று ஆண்டுகளில் 1.29 இலட்சம் வேலைவாய்ப்புகள் ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டுள்ளன. இது, ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 42,000 வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதாகும். அமைப்பு ரீதியில் வரும் தொழில்களில் உருவாக்கப்பட்ட வேலை வாய்ப்புகளில் பாதிக்கும் மேலானவை. தனியார் துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதற்குக் காரணம், இந்த அரசு மேற்கொண்ட முதலீட்டாளருக்கு நேயமான தொழிற் கொள்கையாகும். மிகவும் குறிப்பிடத்தக்க மற்றொரு சாதனை. இம்மாநிலத்தின் ஊரக வறுமை நிலையின் ஒட்டுமொத்த அளவு வெகுவாகக் குறைந்துள்ளதாகும். இந்தியாவில் 1987–88 ஆம் ஆண்டில் சராசரியாக, வறுமைக் கோட்டிற்குக்

கீழ் உள்ளவர்களின் எண்ணிக்கை 39.18 சதவீதம் ஆக இருக்க, தமிழ்நாட்டில் உள்ள ஊரக மக்களில் 45.8 சதவீதத்தினர் வறுமைக் கோட்டிற்குக் கீழ் இருந்தனர் என்று மத்திய திட்டக்குழு அமைத்த வல்லுநர் குழு, நாட்டு மாதிரி ஆய்வுப் புள்ளிவிவரங்களின் அடிப்படையில் கணக்கிட்டது. வல்லுநர் குழு வரையறுத்த முறையைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட 1993-94 ஆம் ஆண்டிற்குரிய நாட்டு மாதிரி ஆய்வு தொடக்க விவரங்களின்படி இந்தியாவில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் கிராம மக்களின் சராசரி விகிதாச்சாரம் 37.53 சதவீதம் என்றிருக்க. தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களின் சராசரி விகிதாச்சாரம் 32.64 சதவீதமாகக் குறைந்துள்ளது என்று கணக்கிடப்பட்டுள்ளது. நாடெங்கிலும் வறுமை நிலை ஓரளவே குறைந்துள்ள போதிலும், தமிழ்நாட்டில் வெகுவாக வறுமை நிலை குறைந்திருப்பது குறிப்பிடத்தக்க ஓர் சாதனையாகும். இம்மாநிலத்தில் வறுமை நிலையை மேலும் குறைக்கத் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இந்தக் குறிக்கோளை எய்த, பல்வேறு பொருளாதாரத் துறைகளில் அரசின் கொள்கைகள் முனைந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

12. பண வீக்கத்திலிருந்தும் பொருளாதாரச் சீரமைப்பு நடைமுறைகளின் கடுமையிலிருந்தும், ஏழை மக்களைக் காக்கும் பொருட்டு, பொது விநியோக முறையின் கீழ் வழங்கப்படும் உணவுப் பொருட்களின் விலைகளைக் குறைந்த நிலையிலேயே வைத்து வர வேண்டியதின் முக்கியத்துவத்தை மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் ஆற்றிய தன்னுடைய ஒவ்வொரு உரையிலும் வலியுறுத்தி வந்துள்ளார். குறைந்த விலையில் உணவுப் பொருட்களை வழங்குவதால் அரசுக்கு நிதிச் சுமை ரூ.600 கோடியாக அதிகரித்த போதிலும், பொது விநியோக முறையின் கீழ் வழங்கப்படும் பொது ரக அரிசியின் விலையைக் கிலோ ஒன்றுக்கு ரூ.2/-ஆக அரசு குறைத்துள்ளது. வறட்சி நிலை காரணமாக நெல் விளைச்சல் குறையுமென்பதால், அரிசியின் விலை வெகுவாக அதிகரிக்கக் கூடும். இதனைத் தடுக்கும் நடவடிக்கையாக 1996 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1 ஆம் நாளிலிருந்து, திங்கள் தோறும், குடும்ப அட்டைதாரருக்கு 8 கிலோ அரிசி கூடுதலாக வழங்க, அரசு துணிகரமாக முடிவு செய்துள்ளது. இம்மாநிலத்தில் கிடைக்கப் பெறும் அரிசியின் மொத்த அளவை அதிகரிக்கும் வண்ணம், அதிகரித்த தேவைக்குரிய அரிசியை ஏனைய மாநிலங்களிலிருந்தும், இந்திய உணவுக் கழகத்திடமிருந்தும் அரசு கொள் முதல் செய்யும். இதனால் அரசுக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ.70 கோடி செலவாகும். அதாவது, நடப்பு ஆண்டிற்கு ரூ.210 கோடி

1996 பிப்ரவரி 15]

செலவாகும். இருப்பினும், இது, பொதுமக்களின் அடிப்படைத் தேவையை முழுமையாக நிறைவு செய்யும் அரசின் உறுதியைத் தளர்த்தவில்லை.

13. மாநிலத்தில் பெரும்பாலான மாவட்டங்களில் ஏற்பட்ட பாதகமான வறட்சி நிலை காரணமாகவும், கருநாடக அரசு காவிரியில் நீர் திறந்து விடாத காரணத்தாலும், 14 இலட்சம் டன் உணவுத் தானிய உற்பத்தி இழப்பு ஏற்பட்டுள்ளது என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையைச் சரி செய்யும் பொருட்டு, விதைகளையும், ஏனைய இடுபொருட்களையும் போதியளவு வழங்குவதற்கு உறுதி செய்வது உட்பட, சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டுள்ளது. உணவுத் தானிய உற்பத்தியில் ஏற்பட்ட இந்த இழப்பு, மாநிலம் கடந்த 4 ஆண்டுகளில் எய்திய குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தில் ஓர் பின்னடைவாகும். 1990-91 ஆம் ஆண்டில் மொத்தம் 74.94 இலட்சம் டன்னாக இருந்த உணவுத் தானிய உற்பத்தி 1994-95 ஆம் ஆண்டில் 100 இலட்சம் டன்னை எட்டியது. 1990-91 ஆம் ஆண்டிலிருந்து 1994-95 ஆம் ஆண்டு வரையிலான கால அளவில், நாட்டின் உணவு தானிய உற்பத்தியின் சராசரி ஆண்டு வளர்ச்சி வீதம் 5.5 சதவீதமாக இருந்தபோது இந்த வீதம் தமிழ்நாட்டில் 12.5 சதவீதமாக இருந்தது. 1990-91 ஆம் ஆண்டில் 57.82 இலட்சம் டன்னாயிருந்த அரிசி உற்பத்தி, 1994-95 ஆம் ஆண்டில் 78 இலட்சம் டன்னாக அதிகரித்தது. 1990-91 ஆம் ஆண்டில், சிறு தானியங்களின் உற்பத்தி 13.5 இலட்சம் டன்னாக இருந்தது. இது, 1995-96 ஆம் ஆண்டில் 17.20 இலட்சம் டன்னாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1990-91 ஆம் ஆண்டில் 3.59 இலட்சம் டன்னாயிருந்த பருப்பு வகைகளின் உற்பத்தி, 1994-95 ஆம் ஆண்டில் 5.20 இலட்சம் டன் என்ற அளவை அடைந்துள்ளது. 1990-91 ஆம் ஆண்டில், எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி 12.14 இலட்சம் டன்னாக இருந்தது. இது, 1994-95 ஆம் ஆண்டில் 21.60 இலட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. 1994-95 ஆம் ஆண்டில், கரும்பு உற்பத்தி, எப்போதும் கண்டிராத அளவான 379.81 இலட்சம் டன் என்ற அளவை எட்டியது. மாநிலத்தின் வேளாண் கொள்கை, தரமான வேளாண் இடுபொருட்கள் கிடைக்கச் செய்வது, மண் வளம் மற்றும் விதை தொழில் நுட்பம், உரிய நேரத்தில் பாசனமளித்தல் போன்றவற்றிலும், விவசாயிகள் தங்களுடைய உற்பத்திப் பொருட்களுக்கு ஆதாய விலை பெறுவதை உறுதி செய்வதிலும் கவனம் செலுத்தியுள்ளது. இதற்கிணங்க, வேளாண் விளைபொருட்களின் விலை மற்றும் கொள்முதல் குறித்த கொள்கைகள் வகுக்கப்பட்டுள்ளன. வேளாண்மைக்குக் கிடைக்கப் பெறும் தரமான பாசன வசதி மேம்படுத்தப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு, மாநிலம், உலக

வங்கியின் நிதியுதவியுடன் மொத்தம் ரூ.1240 கோடி செலவில், நீர் ஆதாரங்கள் தொகுப்புத் திட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளது. இத்திட்டம், தற்போதுள்ள 18 பெரிய, நடுத்தர அளவிலான பாசனத் திட்டங்களைச் சீரமைப்பதோடு, 9 பெரிய, நடுத்தர அளவிலான பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்படுவதற்கும் வழிவகை செய்யும். இத்திட்டத்தினால் மாநிலத்தில் பாசனம் பெறும் 16.68 இலட்சம் ஏக்கர் பரப்பளவுள்ள நிலம் பயன்பெறும்.

14. தமிழ்நாடு, தொழில் வளர்ச்சியில் தனி மேம்பாடடைந்துள்ள மாநிலம் என்ற நிலையைப் பாதுகாக்கும் பொருட்டும், புதிய தொழில் முதலீடுகளை ஈர்க்கும் பொருட்டும், அரசு, சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 1992 ஜூன் திங்களில் புதிய தொழிற் கொள்கையை அறிவித்தார்கள். அது. தமிழ்நாட்டில் துரித, விரைவான தொழில் வளர்ச்சிக்கு அடித்தளத்தை அமைத்துத் தந்துள்ளது. தொழில் வளர்ச்சிக்கு உகந்த சூழ்நிலையை ஏற்படுத்தவும், அடிப்படை வசதிகளைப் போதிய அளவுக்கு ஏற்படுத்தித் தரவும், மாநிலத்திற்குக் குறிப்பான செயல் திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு, அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளின் காரணமாக, மாநிலத்தில் தொழில் வளர்ச்சி, குறிப்பிடத்தக்க வகையில் முன்னேறியுள்ளது. தொழில் உற்பத்தி வளர்ச்சி 1994–95 ஆம் ஆண்டில் அனைத்திந்திய அளவில் 8.4 சதவீதமாகயிருக்க, தமிழ்நாட்டின் தொழில் உற்பத்தி வளர்ச்சி 8.7 சதவீதமாக இருந்தது. 1991 ஆம் ஆண்டு ஜூலை திங்களிலிருந்து மாநிலத்தில் தொழில், எரிசக்தி துறைகளில் முதலீடு செய்ய ஏற்றுக் கொள்ளப்பட்ட மொத்தத் தொகை ரூ.84,950 கோடியாகும். வெளிநாடுகளிலிருந்து விரும்பி வந்து முதலீடு செய்யும் ஓர் இடமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. வெளிநாட்டு முதலீட்டு மேம்பாட்டுக் கழகத்தினால் வழங்கப் பெற்ற இசைவைப் பொறுத்த மட்டில், நம் நாட்டில் மூன்றாம் நிலையை வகிக்கும் மாநிலமாகத் தமிழ்நாடு விளங்குகின்றது. 1991 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களிலிருந்து ரூ.2674.20 கோடி முதலீடு செய்யக்கூடிய 327 வெளிநாட்டு முதலீட்டுத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

15. அரசு, 1996 ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் உயர் பெரு தொழில்களுக்கென, திருத்தியமைக்கப்பட்ட செயலூக்கத் திட்டத்தை அறிவித்துள்ளது. துணைத் தொழில்கள் மூலம் அதிக வேலை வாய்ப்பை உருவாக்கும் பெரிய அளவிலான தொழில்களை இங்கு அமைக்க இத்திட்டம் ஈர்க்கும். மாநிலத்தின் எந்தவொரு பகுதியிலும் ரூ.1500

1996 பிப்ரவரி 15]

கோடியும், அதற்கு மேம்பட்ட அளவிலான முதலீட்டுச் செலவில் அமைக்கப்படும். பெருந்தொழில்களுக்கு இச்செயலூக்கத் திட்ட உதவிகள் கிடைக்கப் பெறும். நம் நாட்டிற்குள்ளும், வெளி நாடுகளிலிருந்தும் தொழில் முன்னேற்ற முதலீடுதாரர்களின் தொழில் பிரிவுகளை ஈர்க்கும் வகையில், மாநிலத்தில் வெவ்வேறு இடங்களில் போதிய அடிப்படை வசதிகளுடன் கூடிய பெரிய அளவிலான தொழிற்பேட்டைகளையும், தொழிற் பூங்காக்களையும் அமைப்பதற்கு அனைத்து முயற்சிகளையும் மாநில அரசு எடுத்து வருகின்றது. தற்போது ஸ்ரீபெரும்புதூர் அருகில், மொத்தம் 1600 ஏக்கர் நிலப்பரப்பில், சென்னை தொழில் பூங்கா அமைக்கப்படும். கும்மிடிப்பூண்டியில், 211 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ.20 கோடி செலவில், ஏற்றுமதி மேம்பாட்டு தொழில் பூங்கா அமைப்பது தொடர்பான பணியை "சிப்காட்" நிறுவனம் மேற்கொண்டுள்ளது. கடலூர், கும்மிடிப்பூண்டி, ஓசூர் ஆகிய இடங்களில் தற்போதுள்ள "சிப்காட்" தொழிற்பேட்டைகள் விரிவாக்கப்பட்டு வருகின்றன. பெரியார் மாவட்டத்திலுள்ள பெருந்துறை, திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள கங்கைகொண்டான் ஆகிய இடங்களில், தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாடு நிறுவனத்தின் (TACID) வளர்ச்சி மையங்கள் அமைப்பது தொடர்பான செலவிற்குத் தன்னுடைய பங்குத் தொகையை வழங்க, அனைத்திந்திய நிதி நிறுவனங்கள் முன்வரவில்லை. இப்பணி தொடர்பாக ஏற்படும் நிதிப் பற்றாக்குறையைச் சரி செய்ய, மாநில அரசு ரூ.20 கோடி வழங்க இருக்கிறது. மேலும், தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம், வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட நிலக்கோட்டை தொழில் வளாகம், பர்கூர் தொழில் வளாகம், திருவள்ளூர் தொழில் வளாகம் ஆகியவற்றின் மேம்பாட்டுப் பணிகளையும் இராணிப்பேட்டை தொழில் வளாகத்தின் மூன்றாம் கட்டப் (phase-III) பணிகளையும் மேற்கொண்டுள்ளது. இம்மாநிலத்தில், பல்வேறு இடங்களில் "சிட்கோ" நிறுவனம் 12 தொழிற்பேட்டைகளை உருவாக்கி வருகிறது. இது 28,400 பேருக்கு நேரடியாகவும் தொடர்புடைய ஏனைய வகையிலும் வேலை வாய்ப்புகள் அளிக்கும். திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கத்திற்கும், விழுப்புரம்-இராமசாமி படையாட்சியார் மாவட்ட சிறுதொழில்கள் சங்கத்திற்குமாக 2 தனியார் தொழிற்பேட்டைகளும் உருவாக்கப்பட்டு வருகின்றன.

16. இம்மாநிலம் எந்தெந்தத் தொழில் தொகுதிகளை நிறுவுவதற்குரிய அனுகூலங்களைப் பெற்றுள்ளதோ அத்தகைய தொழில் தொகுதிகளுக்குக் குறிப்பிட்ட கவனம் செலுத்துவது, ஒட்டுமொத்தத் தொழில் கொள்கைகளின் ஓர் முக்கிய அங்கமாகும். இதில், மோட்டார் வண்டித்

தொழில், குறிப்பிடத்தக்க ஓர் துறையாகும். நாட்டின் "மோட்டார் தொழில் தலைநகர்" என்ற நிலையைச் சென்னைக்கு மீண்டும் பெற்றுத் தருவதே அரசின் நோக்கமாகும். சென்னைக்கு அருகே, மறைமலைநகரில், ஆண்டொன்றுக்கு 1 இலட்சம் ஊர்திகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை அமைப்பது தொடர்பாகத் திருவாளர்கள் மகேந்திரா ஃபோர்டு (இந்தியா) லிமிடெட் நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டிருப்பது, இந்நோக்கத்தை விரைவில் எய்துவதற்கு வழி வகுக்குகிறது என்பதை அறிவிப்பதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். உலகில் பெரிய அளவில் தலைசிறந்த கார் நிறுவனமாகத் திகழும் ஃபோர்டு மோட்டார் நிறுவனம், தன்னுடைய தயாரிப்புத் தொழில்பிரிவு ஒன்றை அமைக்க, தமிழ்நாட்டைத் தேர்ந்தெடுத்திருப்பது, பெருமை சேர்க்கும் விஷயமாகும். மோட்டார் வண்டிகளின் உதிரிப்பாகங்கள், துணைப் பாகங்கள் ஆகியவற்றைத் தயாரிப்பது தொடர்பான பல துணைத் தொழிற்பிரிவுகள் அமைக்கப் பெறுவது உட்பட கணிசமான பயன்களை இத்திட்டம் அளிக்கும். உலக அளவில் புகழ்பெற்ற ஏனைய கார் தயாரிப்பு நிறுவனங்களும், தங்களுடைய தொழிற்பிரிவுகளைத் தமிழ்நாட்டில் தொடங்க அக்கறை காட்டியுள்ளன.

17. ஏனைய துறைகளில் பெருந்திட்டங்கள் பல இம்மாநிலத்தில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. ரூ.625 கோடி முதலீட்டில் திருவாளர்கள் தாபர் டுபாண்ட் நிறுவனத்தின் நைலான் இழை உற்பத்திப் பிரிவு, சென்னை அருகே கும்மிடிப்பூண்டியில் நிறுவப்படவுள்ளது. உற்பத்தித் திறனை இருமடங்காக்கக்கூடிய தமிழ்நாடு செய்தித்தாள்–காகித நிறுவனத்தின் விரிவாக்கத் திட்டம் முடிக்கப்பட்டு, வணிக உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது. மொத்தத் திட்டச் செலவுத் தொகையான ரூ.580 கோடியில் ஒரு பகுதி நிதியாக, தமிழ்நாடு செய்தித்தாள்–காகித நிறுவனம் பொதுமக்களிடமிருந்து பங்குத் தொகையை ஈட்டி ரூ.217 கோடி திரட்டியுள்ளது. இது, மாநில அரசுத் துறை நிறுவனம் ஒன்றின் தனித் தன்மை வாய்ந்த சாதனையாகும்.

18. நாட்டின் கடுமையான மின்தட்டுப்பாடு குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். கிட்டத்தட்ட ஒவ்வொரு மாநிலத்திலும் மின் வெட்டும் மின்பளு குறைவும் செய்யப்பட்டுள்ளது. இச்சூழ்நிலையில், தமிழ்நாட்டில் 1992 அக்டோபர் முதல் மின்வெட்டு இல்லாமலிருப்பது குறிப்படத்தக்கதாகும். தற்போதுள்ள நிலைமை மிகவும் பாதகமாகவுள்ளது. பருவ மழை பொய்த்ததன் காரணமாக புனல் மின் நீர்த்தேக்கங்களில் உள்ள நீரின் சேமிப்பு அளவு கணிசமாகக் குறைந்துள்ளது. தென் மின் தொகுப்பிலிருந்து ஆந்திரப் பிரதேமும்,

1996 பிப்ரவரி 15]

கருநாடகமும் மின்சாரத்தை அதிகமாக எடுத்துக் கொள்கின்றன. சிங்கரேணி மற்றும் கோல் இந்தியா நிறுவனத்தின் நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து நிலக்கரி வரத்து தடையின்றி நடைபெறவில்லை. வரும் மாதங்களில் வீடுகளுக்கும், தொழில் மற்றும் வேளாண் துறைகளுக்கும் போதிய அளவில் மின்சாரம் வழங்க தமிழ்நாடு மின்வாரியம் பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அனல் மின் நிலையங்களில் மின் உற்பத்தியை அதிகரிக்கவும். தேவையானால் இறக்குமதியின் வாயிலாக நிலக்கரியைப் போதுமான அளவுக்குக் கிடைக்கச் செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. வடசென்னை அனல் மின் நிலையத்தின் மூன்றாவது 210 மெகாவாட் உற்பத்திப் பிரிவு, 1996 பிப்ரவரி இறுதியில் மின் தொகுப்புடன் இணைக்கப்படும். எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட 4×30 மெகாவாட் திறன் கொண்ட பேசின் பாலம் மின் உற்பத்தித் திட்டத்தின் நான்கு பிரிவுகளும் 1996 மார்ச்சுக்கு முன்னர் மின் தொகுப்புடன் இணைக்கப்படும். இதன் மூலம் வரும் கோடை மாதங்களில் போதுமான அளவுக்கு மின்சாரம் கிடைக்க உறுதி செய்யப்படும்.

19. எரி சக்தித் துறையில் மேம்பாடு காண்பதற்கு இவ்வரசு உயர் முக்கியத்துவம் அளித்துள்ளது. 1991 ஜூன் திங்களிலிருந்து உள்ள கால அளவில், இம்மாநிலத்தின் நிறுவு திறனில் 648.02 மெகாவாட் திறன் சேர்க்கப்பட்டுள்ளது. எட்டாவது திட்டக் காலத்தின் இறுதிக்குள் மேலும் 645.5 மெகாவாட் திறன் சேர்க்கப்படும். மாநில அரசு அதன் மூலம் உயரளவு மின் தேவையில் 45.54 சதவீத அதிகரிப்பைப் போதிய அளவு நிறைவு செய்ய இயன்றது. இனி வருங்காலங்களில் கடுமையான மின்பற்றாக்குறை ஏற்படாமலிருப்பதை உறுதி செய்யும் நோக்குடன், எரிசக்தி மேம்பாட்டிற்காக நீண்டகாலத் திட்டம் ஒன்றையும் இத்துடன் அரசு உருவாகியுள்ளது. மொத்தம் 10,650 மெகாவாட் மின் உற்பத்திக்காக 16 ஒப்பந்தங்கள் தனியார் மின் உற்பத்தியாளர்களுடன் செய்து கொள்ளப்பட்டுள்ளன. இதில், 5320 மெகாவாட் மொத்த உற்பத்தித் திறனுடைய நிலக்கரி மற்றும் பழுப்பு நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட 7 மின் திட்டங்கள், 3300 மெகாவாட் மொத்த உற்பத்தித் திறனுடைய எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட 3 மின் திட்டங்கள், 400 மெகாவாட் மொத்த உற்பத்தித் திறனுடைய டீசலை அடிப்படையாகக் கொண்ட 3 மின் திட்டங்கள், 10 மெகாவாட் உற்பத்தித் திறனுடைய புனல் மின் திட்டம் ஒன்றும், 100 மெகாவாட் உற்பத்தித் திறனுடைய கடல் நீர் வெப்ப ஆற்றல் மின் உற்பத்தித் திட்டம் ஒன்றும் அடங்கும். மீண்டும் மீண்டும் வேண்டுகோள்கள் விடுத்துங்கூட, தமிழ்நாட்டில் மின்துறையில் மேலும் மத்திய அரசின்

முதலீடு இதுவரை செய்யப்படவில்லை. மொத்தம் ரூ.1590.58 கோடி செலவில் நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத்தின் சுரங்கம் I-ன் விரிவாக்கத்தின் அடிப்படையிலான 2 X 210 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையம் ஒன்றை அமைப்பதற்கான தொழில்-பொருளாதார அனுமதி ஏற்கெனவே 1995 ஜூன் திங்களிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. தேவையான நிருவாக அனுமதிகளை வழங்குமாறும், இத்திட்டத்தின் பணிகளை விரைந்து தொடங்குவதை உறுதி செய்யுமாறும் இந்திய அரசை, இவ்வரசு வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளும்.

20. மரபு சாரா எரிசக்தி ஆதாரங்களின் வளர்ச்சியில் தமிழ்நாடு முன்னோடியாக திகழ்வது குறித்து மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் நன்கு அறிவர். இம்மாநிலத்திலுள்ள காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களின் மொத்த நிறுவு திறனளவு 434 மெகாவாட் ஆகும். காற்றாலை மின் உற்பத்தியில் தனியார் துறையின் பங்கேற்பு தொடர்ந்து ஊக்குவிக்கப்பட்டு வந்துள்ளது. இதுவரையில் மொத்தம் 415 மெகாவாட் நிறுவு திறன் கொண்ட 1602 தனியார் காற்றாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. நகராட்சிகள் சேகரிக்கும் குப்பைக் கூளங்களிலிருந்து 5 மெகாவாட் மின் உற்பத்தியைப் பெறுவதற்குக் கூட்டுத் துறையில் மின் உற்பத்தித் திட்டம் ஒன்று சென்னையில் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. சர்க்கரை ஆலைகள், இரசாயனப் பொருட்கள் தயாரிப்புத் தொழிற்பிரிவுகள் ஆகியவற்றில் மின் உற்பத்திப் பிரிவையும் அமைப்பது முழு அளவில் ஊக்குவிக்கப்பட்டுள்ளது. இதுவரையில், 3 சர்க்கரை ஆலைகளில் மொத்தம் 29 மெகாவாட் திறன் கொண்ட மின்உற்பத்திப் பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளன. மேலும், 10 சர்க்கரை ஆலைகளில் மொத்தம் 171 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்திப் பிரிவுகளை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

21. சென்னை மாநகரம் அதன் கடுமையான தண்ணீர்ப் பற்றாக்குறையிலிருந்து முழுமையாக மீள்வதை உறுதி செய்வது இவ்வரசின், நோக்கங்களுள் ஒன்றாகும். ரூ.1638 கோடி செலவில் உலக வங்கி நிதி உதவியுடன் புதிய வீராணம் திட்டத்தைச் செயல்படுத்த இரண்டாவது சென்னைக் குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவுத் திட்டத்தைத் தொடங்கி வைத்தது, வடகிழக்குப் பருவ மழை பொய்த்து விடுவதால் ஏற்படும் தொல்லையிலிருந்து சென்னைக் குடிநீர் வழங்கல் நிலைக்குக் காப்பளித்து, சீரமைக்கும். மேலும், கிருஷ்ணா நதி நீர் சென்னைக்கு வரப்பெறும்போது, அதனைச் சுத்திகரித்து விநியோகிப்பதற்கான அடிப்படை வசதிகளுக்கு, நாம் உலக வங்கியுடன் பேச்சு வார்த்தை நடத்தி வருகிற மூன்றாவது சென்னை குடிநீர்

வழங்கல்-துப்புரவு திட்டம் வகை செய்யும். தெலுங்கு கங்கைத் திட்டத்தின் வாயிலாக கிருஷ்ணா நதி நீர் சென்னையை அடையும் போது மறைந்த புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், மறைந்த திருமதி இந்திரா காந்தி அவர்கள், மறைந்த திரு. என்.டி. ராமாராவ் அவர்கள் ஆகியோரது தொலைநோக்கு நிறைவேறும். தமிழ்நாடு, நீரைப் பெறத் தயாராகவுள்ளது. ஆந்திரப் பிரதேசத்தில் தெலுங்கு கங்கைத் திட்டப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன. மேலும், காலதாமதமின்றி சென்னை மாநகருக்கு நீரை விட ஆந்திரப் பிரதேச அரசை வலியுறுத்துவதில் மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் என்னுடன் இணைந்து கேட்டுக் கொள்வார்கள்.

22. கிராமப் பகுதிகளில் வறுமை ஒழிப்பு, வேலை வாய்ப்புகளைப் பெருக்குதல் மற்றும் குடிநீர் வசதிகள், தெருவிளக்கு, சாலைகள், துப்புரவு வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்தல் ஆகியவற்றிற்கு இவ்வரசு உயர் முக்கியத்துவம் அளித்துள்ளது. சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தை இவ்வரசு தொடங்கி வைத்து 1992-93ல் வெற்றிகரமாக முடித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் இம்மாநிலத்திலுள்ள 384 வளர்ச்சி வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும் ரூ.1 கோடி செலவிடப்பட்டது. மாவட்ட அளவில் பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்காகப் பயன்படுத்த குறிப்பிட்ட திட்டத்திற்கென்றில்லாது நிதியை வழங்க அதிகாரப் பரவல் முறையில் மாவட்ட அளவில் வகுக்கப்படும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்திற்குரிய நிதி ஒதுக்கீடு 1995-96ல் ரூ.50 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1991-92 ஆம் ஆண்டிலிருந்து ஐந்தாண்டுகளில் மொத்தம் ரூ.384 கோடி செலவில் 1.97 இலட்சம் வீடுகள் கட்டப்படவுள்ளன. இத்துடன், ஊரக வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் 1991-92லிருந்து மொத்தம் ரூ.140.97 கோடி செலவில் 1.80- இலட்சம் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இம்மாநிலத்திலுள்ள கிராமப் பகுதிகளில் 50 குடியிருப்புகளுக்கு மட்டுமே பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டியுள்ளது. 1996 மார்ச்சுக்குள் இக்குடியிருப்புகள் அனைத்துக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும். மேலும் இம்மாநிலத்திலுள்ள ஒவ்வொரு குடியிருப்பும் குறைந்தது பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஆதாரம் ஒன்றையாவது பெற்றிருக்கும். கிராமப் பகுதிகளிலுள்ள மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு, கிராமப்பகுதிகளில் 50 குடும்பங்களுக்கு அதிகமான குடும்பங்களைக் கொண்ட குடியிருப்புகள் அனைத்திற்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டத்தை அரசு தொடங்கிவைத்தது. இத்திட்டத்தின் கீழ், இம்மாநிலத்திலுள்ள குடியிருப்புகளுக்கு 45,302 வண்ணத் தொலைக்

காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. ஊரக நிலமற்ற வேளாண் தொழிலாளர்கள், நகர்ப் பகுதிகளிலுள்ள ஏழை எளிய மக்கள் ஆகியோருக்கு இலவசமாக சேலை-வேட்டிகள் வழங்கும் திட்டம், ஊரக கைத்தறிப் பணியாளர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. அவ்வகையில், இத்திட்டத்தின் கீழ், இவ்வாண்டு ரூ.76.29 கோடி செலவில் 72 இலட்சம் சேலைகளும், 68 இலட்சம் வேட்டிகளும் வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

23. மாசுக் கட்டுப்பாடு-சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கு, இவ்வரசு மிக உயர் முன்னுரிமை அளித்துள்ளது. மாசுக் கட்டுப்பாடு சுற்றுச் சூழல் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளவும், மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் முறைப்படுத்தும் பணிகளுக்கு உதவும் வகையிலும், சுற்றுச் சூழல் துறை என்கிற புதிய துறை ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1992 ஜூனில் ரியோ-டீ-ஜெனிரோவில் நடைபெற்ற சுற்றுச் சூழல்-வளர்ச்சி குறித்த ஐக்கிய நாடுகள் மாநாட்டில் முடிவு செய்யப்பட்ட நிகழ்ச்சி நிரல் 21-ன் கீழ் மாநிலச் செயல்திட்டத்தை இத்துறை உருவாக்கி, செயல்படுத்தும் கழிவுநீர்ச் சுத்திகரிப்பு வசதிகளை ஏற்படுத்தி, நிருவகித்து, பராமரிப்பதற்குரிய முழு பொறுப்புகளையும் அவற்றினால் பயனடையும் தொழிற்பிரிவுகள் ஏற்கும் என்கிற அடிப்படையில், கழிவு நீர் சுத்திகரிப்புக்கென்று பொதுவான சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவ இவ்வரசு நடவடிக்கை எடுத்துள்ளது. வடஆற்காடு-அம்பேத்கார், பெரியார் ஆகிய மாவட்டங்களிலுள்ள தோல் பதனிடு தொழிற்சாலைகள், துணி, சாயத் தொழிற்சாலைகள் ஆகியவற்றிலிருந்து வெளிவருகிற கழிவு நீரைச் சுத்திகரிப்பதற்கு இத்தகைய சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. ஆற்று நீர் மாசுக் கட்டுப்பாடு தேசிய செயல் திட்டத்தின் கீழ் ரூ.38.20 கோடி செலவில் காவிரி ஆற்றின் தெரிந்தெடுக்கப்பட்ட ஐந்து பகுதிகளில் மாசுக் கட்டுப்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ரூ.355 கோடி செலவில் சென்னை மாநகரின் நீர் வழிகளைச் சுத்தப்படுத்தவும், மேலும் தூய்மைக்கேடு ஏற்படாது தடுக்கவும் திட்டம் ஒன்று ஐரோப்பிய பொருளாதார அமைப்பின் நிதியுதவிக்காக அனுப்பப்பட்டுள்ளது.

24. கடந்த ஐந்தாண்டுகளில் தமிழ்நாடு அடைந்துள்ள மிகவும் குறிப்பிடத்தக்க சாதனை, மக்களுக்கு நல்ல வாழ்க்கைத் தரத்தை உருவாக்கித் தந்துள்ளது. மனித மேம்பாடு குறித்த ஆய்வுக் குறியீட்டில் நாட்டிலேயே தமிழ்நாடு மூன்றாவது இடத்தை அதாவது கேரளம், பஞ்சாப் மாநிலங்களுக்கு அடுத்த நிலையைப் பெற்றுள்ளதை அண்மைய ஆய்வு ஒன்று வெளிப்படுத்தியுள்ளது. முக்கியமான சமூக நலத் துறைகளில் நிதிமுதலீட்டை உறுதி செய்ய இவ்வரசு எடுத்த அயராத

1996 பிப்ரவரி 15]

முயற்சியினால் இச்சாதனையை அடைய முடிந்தது எனில், அதில் சிறிதும் ஐயமில்லை. மொத்தச் செலவின் சதவீதமாக சமூக நலத்துறைகள் குறித்த செலவினங்களைக் குறிப்பிடுகிற சமூக நலத் திட்ட நிதி ஒதுக்கீடு விகிதாச்சாரம் இம்மாநிலத்தில் கடந்த 4 ஆண்டுகளில் 40 சதவீதத்திற்கும் மிகையாக இருந்து வந்துள்ளது. இக்கட்டான நிதிநிலை இருந்துங்கூட, நிலையான அடிப்படையில், சமூக நலத்திட்ட நிதி ஒதுக்கீட்டின் இந்த உயர் அளவு விகிதாச்சாரத்தை உறுதி செய்து, நாட்டிலேயே ஒரே மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. இக்கொள்கை மக்களுக்கு உயர் வாழ்க்கைத் தரம் கிட்டும் வகையிலும் சமூகப் பதட்டங்களும் அமைதியின்மையும் அற்ற மாநிலமாக இம்மாநிலம் திகழும் வகையிலும் பெரும் பயன்களை அளித்துள்ளது என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

25. பொருளாதாரத்தின் நிலைத் தன்மை பேணப்பட்டு, அடிப்படைக் கட்டமைப்புச் சரிக்கட்டல்கள் செயல்முறைப்படுத்தப்பட்ட காலம் முதற்கொண்டு, தமிழ்நாடு முனைப்புடன் மேற்கொண்ட கொள்கையை, மத்திய அரசு, முடிவில் ஏற்றுக் கொண்டுள்ளது என்பது மகிழ்ச்சி அளிக்கிறது. பொருளாதாரச் சீர்திருத்த நடைமுறைகளின் பாதகமான விளைவுகளிலிருந்து ஏழை மக்களைப் பாதுகாப்பதற்காகச் சமூக நலன் சார்ந்த துறைகளுக்குரிய நிதி ஒதுக்கீடுகளைக் குறையாமல் பாதுகாத்து, முடிந்தால் உயர்த்தி, அவர்களுடைய நலனைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், தேசிய வளர்ச்சிக் குழுவின் பல கூட்டங்களில் பலமுறை வலியுறுத்தி உள்ளார். மத்திய அரசு, தேசிய சமூக நிதிஉதவித் திட்டத்தையும், பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவுத் திட்டத்தையும் அறிவித்ததன் மூலம், இது குறித்து வலியுறுத்தப்பட்டதை ஏற்றுக் கொண்டுள்ளது எனத் தெரிகிறது. 1995 ஆகஸ்டு 15 ஆம் நாள் முதல் தொடங்கப்பட்ட தேசிய சமூக நிதிஉதவித் திட்டத்தின் பகுதியாயுள்ள கூறுகள் மூன்றும், அதாவது, முதியோர் உதவித் தொகை, மகப்பேறுகாலப்பயன், குடும்ப நல உதவி ஆகிய மூன்று திட்டங்களும், தமிழ்நாட்டில் ஏற்கெனவே பல ஆண்டுகளாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டுவரும் முதியோர் உதவித் தொகைத் திட்டம், குடும்பத் துயர் தணிப்புத் திட்டம், விபத்து நிவாரணத் திட்டம் ஆகியவற்றின் கீழ் பயன்பெறுவோரின் எண்ணிக்கை, தேசிய சமூக நிதி உதவித் திட்டத்தின் கீழ் இம்மாநிலத்தில் பயன்பெறுவோரின் எண்ணிக்கையைக் காட்டிலும் மிக அதிகமாகும். இதே போன்று, தமிழ்நாடு, முதியோர் நிதி உதவித் தொகையாக மாதம் ஒன்றுக்கு ரூ.100/–வழங்குகையில், தேசிய சமூகநிதி உதவித் திட்டம்

மாதம் ஒன்றுக்கு ரூ.75/-மட்டுமே உதவித் தொகை வழங்குகிறது. மாநில அரசுகளின் சமூக நலத் திட்டச் செலவுகளுக்குத் துணை செய்யும் வகையில், தேசிய சமூக நிதிஉதவித் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதிகளை மாநில அரசுகளுக்கு வழங்கும்படி, தமிழ்நாடு அரசு, மத்திய அரசை வலியுறுத்தியது. எனினும், மத்திய அரசு, மாவட்டக் கணக்குகளுக்கு நேரடியாக நிதி வழங்க முடிவு செய்துள்ளது. இது, நமது நாட்டைப் போன்ற கூட்டாட்சி அமைப்புடைய நாட்டில் மத்திய-மாநில நிதி உறவுகளில் இருக்க வேண்டிய நம்பிக்கைக்கு உகந்ததாக இல்லை. மேலும், நன்கு நிலைத்த சமூகப் பாதுகாப்பு முறை அமைந்துள்ள தமிழ்நாடு போன்ற ஒரு மாநிலத்தில், மத்திய அரசின் இதுபோன்ற நேரடித் தலையீடு, நிருவாக இடர்ப்பாடுகளையும் குழப்பத்தையும் மட்டுமே ஏற்படுத்தும். இவை தவிர்க்கத் தக்கவையாகும். இது குறித்து, மத்திய அரசு வகுத்துள்ள வழிகாட்டிக் குறிப்புகளை மறுபரிசீலனை செய்யும்படி, இந்த அரசு, மீண்டும் மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளும்.

26. தமிழ்நாட்டின் மிகச் சிறந்த சாதனையை, அதன் பிறப்பு-இறப்பு முதலிய சமுதாய நிலை புள்ளி விவர ஆய்வு காட்டுகிறது. கி.பி. 2010 ஆம் ஆண்டுக்கென்று வரையறுக்கப்பட்ட பிறப்பு-இறப்பு வீத தேசிய இலக்கை, தமிழ்நாடு ஏற்கெனவே அடைந்துள்ளது என்பதை மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் ஏற்கெனவே அறிவர். கி.பி. 2010ல் பிறப்பு வீதம் ஆயிரத்திற்கு 21 என்று தேசிய இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்க, தமிழ்நாட்டில் 1994-ல் பிறப்பு வீதம் ஆயிரத்திற்கு 19 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. கி.பி. 2010 ஆம் ஆண்டிற்குள் இறப்பு வீதம் ஆயிரத்திற்கு 9 என்கிற தேசிய இலக்கை எய்த வேண்டும் என்று கருதியிருக்க, தமிழ்நாட்டில் 1994-ல் இறப்பு வீதம் ஆயிரத்திற்கு 7.9 ஆகும். குழந்தைகளின் சராசரி இறப்பு வீதம், தேசிய அளவில், உயிருடன் பிறக்கும் ஆயிரம் குழந்தைகளுக்கு 73 குழந்தைகள் என்றிருக்க, தமிழ்நாட்டில் 1994-ல் குழந்தைகள் இறப்பு வீதம் உயிருடன் பிறக்கும் ஆயிரம் குழந்தைகளுக்கு 59 என்றிருந்தது. டாக்டர் ஜெ. ஜெயலலிதா 15 அம்சத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள குழந்தைகள் நலன் குறித்த விரிவான நல்வாழ்வுத் திட்டத்தின் மூலம், குழந்தைகள் இறப்பு வீதத்தை மேலும் குறைக்க, அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும். தேசிய குடும்பச் சுகாதார ஆய்வின்படி, தமிழ்நாட்டின் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள், இந்நாட்டின் பெரிய மாநிலங்களிலேயே மிகச் சிறந்தவை என ஏற்கெனவே அங்கீகரிக்கப்பட்டுள்ளன. குழந்தைகளுக்கு வரும் நோய்கள் பெருமளவிற்குக் குறைக்கப்பட்டுள்ளன. குடும்ப நலத் திட்டத்தில் தமிழ்நாடு சிறந்த சாதனை எய்தியுள்ளதால், 1995-96 ஆம்

1996 பிப்ரவரி 15]

ஆண்டிலிருந்து இம்மாநிலத்திற்கு மிகச் சிறந்த சாதனை எய்துவதற்கு இலக்கு ஏதும் நிர்ணயிக்க வேண்டியதில்லை என மத்திய அரசு முடிவு செய்துள்ளது. உண்மையில் சொல்லப்போனால், தமிழ்நாடு செயல்படுத்தும் பொதுச் சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் குடும்ப நலத் திட்டங்கள், இந்நாட்டிலுள்ள பிற மாநிலங்களில் பின்பற்றப்படுவதற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. கி.பி. 2000 ஆண்டிற்குள் "அனைவருக்கும் நலவாழ்வு" என்கிற இலக்கை அடையும் நிலையில் இம்மாநிலம் உள்ளது.

27. 2000 ஆம் ஆண்டிற்குள் அனைவருக்கும் தொடக்கக் கல்வி அளிப்பதற்குரிய இலக்கை, எய்த முனைப்புடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழ்நாடு 1994 ஆம் ஆண்டு கட்டாய தொடக்கக் கல்விச் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 33/1995) முனைப்புடன் அரசு செயலாக்கும். தமிழ்நாட்டில் பிறப்பு வீதம் குறைந்து வருவதால், தொடக்கக் கல்விக்காக புதிய பள்ளிகள் தொடங்குவதற்குப் பதிலாக, அனைத்துச் சிறார்களும் தற்போதுள்ள பள்ளிகளிலேயே சேர்க்கப்பட்டு, தொடர்ந்து பயில்வதை உறுதி செய்வதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. பள்ளிப் பயிற்று முறையில் தரமான சீர்திருத்தங்கள் செய்வதன் மூலமாக மட்டுமே இதனை அடைய இயலும். குறைந்தளவுக் கற்றல் அடைவுகள் என்கிற அடிப்படையில் திருத்தியமைக்கப்பட்ட பாடத் திட்டமும் பாடப் புத்தகங்களும் 1995-96 முதல் அறிமுகப்படுத்தப்பட்டன. ஆசிரியர்களுக்கு மும்முரப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. முதலாம் வகுப்பிற்குப் பாடம் நடத்துகின்ற 28.500 ஆசிரியர்களுக்கு ஏற்கெனவே பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தொடக்கத்தில், கல்வி நிலையில் பின்தங்கிய 4 மாவட்டங்களுக்கு மட்டுமென்று உலக வங்கி நிதி உதவியுடன் 1994-95ல் தொடங்கப்பட்ட மாவட்ட தொடக்கக் கல்வித் திட்டம், 1996-97ல் மேலும் 3 மாவட்டங்களில் செயலாக்கப்படும். மேலும், உயர்நிலைப் பள்ளிகள், மேனிலை பள்ளிகள் ஆகியவற்றில் உள்ள வசதிகளின் தரத்தை மேம்படுத்த திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

28. மற்ற மாநிலங்களைக் காட்டிலும் மிக அதிக எண்ணிக்கையில் சிறார்களுக்குத் துணைச் சத்துணவு அளிக்க தமிழ்நாடு உறுதி செய்துள்ளது. உலக வங்கியின் ஆதரவுடன் செயல்படுத்தப்படுகின்ற தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம் குழந்தைகள் நலமேம்பாடு குறித்த ஒருங்கிணைந்த திட்டம் ஆகியவற்றால் அனைத்து மாவட்டங்களிலுள்ள சிறார்களும் பயனடைகின்றனர். இம்மாநிலத்திலுள்ள பிறந்தது முதல் 5 வயது வரையிலான சிறார்கள் அனைவரும், சிறார் வளர்ச்சி கண்காணிப்பு மற்றும் துணைச் சத்துணவு

வழங்கும் திட்டத்தின் கீழ் பயனடைகின்றனர். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ், 73.05 இலட்சம் பள்ளி செல்லும் சிறார்களுக்குச் சத்தான மதிய உணவு அளிக்கப்படுகிறது. "மகளிர் விழிப்புணர்வு திட்டம்-2000" என்கிற மகளிருக்குரிய விரிவான நலக் கொள்கை ஒன்றைத் தமிழ்நாடு உருவாக்கியுள்ளது. அரசுப் பணிகளில் மகளிருக்கு 30 சதவீத இட ஒதுக்கீடு செய்த முதல் மாநிலம் தமிழ்நாடே ஆகும். மகளிர் நலனைப் பாதுகாப்பதற்காக, மகளிர் மாநில ஆணையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. 1992 ஏப்ரலில் தொடங்கப்பட்ட "டாக்டர் ஜெ. ஜெயலலிதா பெண் குழந்தை நலத் திட்டம்", குறிப்பாக பெண் சிசுக் கொலையை ஒழிப்பதையும், குடும்ப நலத் திட்டத்தை மேம்படுத்துவதையும் இலக்காகக் கொண்டியங்குகிறது. "தொட்டில் குழந்தைத் திட்டம்" என்பது பெண் சிசுக் கொலையைத் தடுக்கச் செயல்படுத்தப்பட்டுவரும் புது முறையிலான மற்றும் பரிவுணர்வு கொண்ட திட்டமாகும். தமிழ்நாடு, உடல் ஊனமுற்றோரின் நலனுக்கென்று தனிக் கொள்கையை உருவாக்கிய முதல் மாநிலம் ஆகும். உடல் ஊனமுற்றோரின் நலனுக்கென்று தனியாக ஒரு துறை அமைக்கப்பட்டுள்ளது. உடல் ஊனமுற்றோரின் நலனில் போதிய அக்கறை செலுத்தி, அவர்கள் சமுதாயத்தில் ஏனையோருக்கு இணையாக நடத்தப்படுவதற்குத் தற்போது உறுதி செய்யப்பட்டுள்ளது.

29. சமுதாயத்தில் ஏனையோருக்கு இணையாக ஆதி திராவிடர்களை மேம்பாடடையச் செய்யும் வண்ணம் அவர்களின் சமூக, பொருளாதார, கல்வி மேம்பாட்டிற்காக அரசு அயராது முயன்றுவருகிறது. இவ்வரசு பதவியேற்றவுடன், ஆதி திராவிடர்களுக்கு அடிப்படை வசதிகளை அளிக்கவும், அவர்களது பொருளாதார நிலையை உயர்த்தவும், 10 அம்சத் திட்டம் ஒன்றை மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார். 10 அம்சத் திட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட இலக்கு 1996 மார்ச்சு மாதத்திற்கு முன்னரே முழுமையாக எய்தப்பெறும். ஆதி திராவிடர் குடும்பங்கள் அனைத்துக்கும் வீட்டுமனைகளுக்கு வகை செய்வது உட்பட ஆதி திராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளுக்கு வகை செய்வது குறித்த திட்டத்தின் செயலாக்கத்தை உயர்நிலை ஒருங்கிணைப்புக் குழு ஒன்று உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது. 1991-92 ஆம் ஆண்டிலிருந்து, ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு, இதுவரை மொத்தம் 8.40 இலட்சம் வீட்டுமனைகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. 1981-1991 ஆம் ஆண்டுக் கால அளவில் தமிழ்நாட்டில், ஆதி திராவிடர்களுக்காக் கட்டப்பட்ட காங்கிரீட் தள வீடுகளின் மொத்த எண்ணிக்கை 96.801 ஆகும். 1991-92 ஆம் ஆண்டிலிருந்து 1.27 இலட்சம்

1996 பிப்ரவரி 15]

காங்கிரீட் தள வீடுகள் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ளன. நடப்பாண்டில், 70,187 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. "ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு" என்ற திட்டத்தின் கீழ் 1.50 இலட்சம் வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்குவது என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்க, 2.18 இலட்சம் ஆதி திராவிடர் வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. 3.5 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்களுக்குப் பொருளாதார மேம்பாட்டிற்காக, உதவி வழங்குவது என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்க, இதுவரையில் 4.14 இலட்சம் குடும்பங்களுக்கு உதவி வழங்கப்பட்டுள்ளது. **இம்மாநிலத்திலுள்ள ஒவ்வோர் ஆதி திராவிடர் குடியிருப்பிற்கும் இந்த அரசு தெரு விளக்கு வசதியும் குடிநீர் வசதியும் செய்துள்ளது.** ஆதி திராவிடர்களின் பயனுக்காக மேலும் பல திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1994 டிசம்பரில் அறிவித்தார். மாண்புமிகு முதலமைச்சரைத் தலைவராகவும், ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்த பல்வேறு பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஏனைய 26 பேரை உறுப்பினர்களாகவும் கொண்ட மாநில ஆதி திராவிடர் நலக் குழு ஒன்று 1995 நவம்பர் திங்களில் அமைக்கப்பட்டுள்ளது. ஆதி திராவிடர் இன மக்களின் நன்மைக்காக கொள்கைகள், திட்டங்கள் ஆகியவற்றைச் சிறந்த முறையில் உருவாக்கி செயல்படுத்த இக்குழு உயர்நிலையில் விரிவான ஆலோசனைகளை வழங்கும் ஆதி திராவிடர் நலனுக்காக 9 உறுப்பினர்கள் அடங்கிய மாநில அளவிலான குழு ஒன்றையும் அரசு அமைத்துள்ளது. இக்குழு, ஆதி திராவிடர்களின் நலனுக்காக நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் குறித்து தனி ஆய்வு ஒன்றை மேற்கொள்ளும். இக்குழு, இம்மாநிலத்திலுள்ள ஆதி திராவிடர்களின் சமூக-பொருளாதார நிலைமைகளை விரிவாக ஆய்வு செய்து, அவர்களது நலனுக்குரிய பரிந்துரைகளை அரசுக்கு அளிக்கும்.

30. தமிழ்நாடு 1993 ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதி திராவிடர்/பழங்குடியினர் (கல்வி நிலையங்களிலும், மாநில அரசுப் பணிகளில் நியமனங்கள் மற்றும் பதவிகளிலும் இட ஒதுக்கீடு) சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 45/1994) இயற்றி, இந்திய குடியரசுத் தலைவரின் இசைவைப் பெற்று, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஒன்பதாம் விவர அட்டவணையில் சேர்க்கப்படுவதை உறுதி செய்ததன் மூலம், இந்த அரசு, தமிழ்நாட்டிலுள்ள பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் நலனைப் பாதுகாத்துள்ளது. இதனால், மாநிலத்தின் இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்கு அரசியலமைப்பு ரீதியாகப் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. சமூகக் கூட்டமைப்பு பதட்டமின்றி இருக்க இந்நடவடிக்கை பேருதவி புரிந்துள்ளது. பிற்படுத்தப்பட்ட

வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்குமாறு கோரி வரும் முறையீடுகளைப் பரிசீலிப்பதற்கென, நிரந்தரமாக பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆணையம் ஒன்றையும் இவ்வரசு அமைத்தது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் ஆகியோரின் பொருளாதார முன்னேற்றத்தை உறுதி செய்யும் பொருட்டு, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்–சிறுபான்மையினர் பொருளாதார வளர்ச்சிக் கழகம், மொத்தம் 29,083 நபர்களுக்கு நிதியுதவி வழங்கியுள்ளது. ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும், சீர் மரபினருக்கும் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. மீனவர் குடும்பங்களுக்கு இலவசமாக சேலைகள், வேட்டிகள் வழங்கும் திட்டமும் 1995–96 ஆம் ஆண்டு முதற்கொண்டு தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், மொத்தம் ரூ.2.33 கோடி செலவில் 2.03 இலட்சம் மகளிரும் 2.07 இலட்சம் ஆண்களும் பயனடைவர்.

31. இவ்வரசு, பொறுப்பேற்றதிலிருந்து மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சென்னையிலும், மாவட்டங்களில் மேற்கொள்கின்ற விரிவான சுற்றுப் பயணங்களின் போதும் பொதுமக்களை நேரடியாகச் சந்தித்து, அவர்களுடைய குறைகளைக் கேட்டு, அவற்றை உடனுக்குடன் போக்கி வருகிறார். பொது மக்களிடமிருந்து வரப்பெறும் மனுக்களைப் பரிசீலனை செய்து உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு உறுதிசெய்ய முதலமைச்சர் அலுவலகத்தில், இ.ஆ.ப. பதவித் தரத்தில் உள்ள ஓர் அதிகாரியின் தலைமையின் கீழ் தனிப்பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1991 ஆம் ஆண்டு ஜூன் திங்களிலிருந்து 15.98 இலட்சம் மனுக்கள் வரப்பெற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ரூ.531.36 கோடி மதிப்புள்ள உதவிகளை 8.03 இலட்சம் பேருக்கு நேரடியாக வழங்கியுள்ளார். வறுமை ஒழிப்பிற்குரிய பல்வேறு திட்டங்களின் பயன்கள் உண்மையில் ஏழை மக்களைச் சென்றடைய இது உறுதி செய்துள்ளது. பொது மக்களின் இன்னல்களைக் களையும் நோக்குடன், இயற்கைச் சீற்றங்கள், கடுமையான நோய்கள், விபத்துக்கள் முதலியவற்றால் பாதிக்கப்பட்ட 3.32 இலட்சம் பேர்களுக்கு முதலமைச்சர் பொதுநிவாரண நிதியிலிருந்து 1991 ஆம் ஆண்டு ஜூலை திங்களிலிருந்து ரூ. 17.84 கோடி வழங்க மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள்.

1996 பிப்ரவரி 15]

32. இம்மாநிலத்தில் திருக்கோயில்களின் நிருவாகத்தைச் சீரமைக்க மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் எடுத்துள்ள சீரிய முயற்சிகளை அனைவரும் நன்கு அறிவர். தமிழ்நாடு திருக்கோயில்கள் நிருவாகக் குழு அமைக்கப்பட்டுள்ளது. முழுவதுமாகப் புதுப்பித்து திருப்பணி செய்ய, முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி-பராமரிப்பு நிதியிலிருந்து *62* கோயில்களுக்கு, நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், அரசு மானியம், பணவசதி படைத்த கோயில்களின் உபரி நிதி, பொது நல நிதி ஆகியவையும் பல கோயில்களைப் புதுப்பிக்கும் பணிக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. கிராமக் கோயில்களுக்குத் திருப்பணி செய்ய ரூ. *1* கோடி மூல நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. திருப்பணிக்குப் பிறகு, *605* கோயில்களில் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டுள்ளது. இது இதுவரையில் நடைபெறாத ஒன்றாகும். ஒரு கால பூஜை திட்டத்தின் கீழ் முறையான பூஜை நடத்துவதற்கு நிதிவசதியில்லாத இம்மாநிலத்திலுள்ள அனைத்து கோயில்களுக்கும் அவற்றில் தினந்தோறும் ஒரு கால பூஜையாவது நடத்துவதற்கு உறுதிசெய்யும் வண்ணம் மூலநிதி ஏற்படுத்த நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. கோயில்களில் திருடுபோவதைத் தடுக்க கோயில் பாதுகாப்புப் படை அமைக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் முதன் முறையாக திருச்சிராப்பள்ளிக்கு அருகில் *23.4* ஏக்கர் நிலப்பரப்பில் வேத ஆகமக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் ஒன்று நிறுவப்பட உள்ளது.

33. தமிழ் மொழியையும், பண்பாட்டையும் பேணிக் காத்து வளர்ப்பதை இந்த அரசு, தலையாய பொறுப்பாகக் கொண்டுள்ளது. தஞ்சாவூரில் *1995* ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் நடைபெற்ற எட்டாம் உலகத் தமிழ் மாநாடு மிகவும் வெற்றிகரமாக நடைபெற்றது. இந்த மாநாட்டில், *23* நாடுகளைச் சேர்ந்த *1101* அறிஞர்கள் கலந்து கொண்டனர். இது தமிழ் மொழி, பண்பாடு ஆகியவற்றின் செறிந்த வளத்தையும் புகழையும் எடுத்துக் காட்டியது. இம்மாநாடு தொடர்பாக, அடிப்படைவசதிகளை மேம்படுத்த பெருமளவில் முதலீடு செய்யப்பட்டு, தஞ்சாவூர், நவீன மாநகராக மாற்றப்பட்டுள்ளது. தமிழ் மொழியை வளர்க்க இந்த அரசு எடுத்துள்ள ஏனைய நடவடிக்கைகளில், தமிழ் வளர்ச்சிக் குழுவை ஏற்படுத்தியதும், அரிய தமிழ் நூல்களை வெளியிடுவதற்கான ஒரு புதிய திட்டம் தொடங்கப்பட்டதும் அடங்கும். பேரறிஞர் அண்ணா அவர்களின இலக்கியப் படைப்புகள் அனைத்தும் நாட்டுடைமை யாக்கப்பட்டுள்ளன. அவருடைய துணைவியார் திருமதி இராணி அம்மையார் அவர்களுக்கு உரிமைத் தொகையாக ரூ.*75* இலட்சம் அளிக்கப்பட்டது. கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

அவர்களின் படைப்புகளும் நாட்டுடைமையாக்கப்பட்டு, உரிமைத் தொகையாக ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டது. தமிழ் பல்கலைக் கழகத்திற்கு மானியமாக ரூ.2 கோடி வழங்கப்பட்டுள்ளது.

34. தமிழ்நாட்டின் திரைப்படத் தொழில், நாட்டின் பெரிய திரைப்படத் தொழில்களுள் ஒன்றாகும். அத்தொழில் பலருக்கு வேலை வாய்ப்பளிக்கிறது. நாட்டின் திரைப்படத் தொழிலில் தமிழ்நாடு வகிக்கும் முன்னணி இடத்தைப் பேணிப் பராமரிக்கவும், திரைப்படத் தொழிலில் பணியாற்றுவோரின் நலனுக்கு உதவவும் இவ்வரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. உலக நாடுகள் தரத்திற்குச் சிறந்த திரைப்படத் தயாரிப்பு வசதிகளுடனும், உட்புற, வெளிப்புற படப்படிப்பு வசதிகள் பலவற்றை உள்ளடக்கியும், டாக்டர் ஜெ. ஜெயலலிதா திரைப்பட நகர் 1994 ஆகஸ்டு திங்களில் தொடங்கப்பட்டது. திரைப்படத் தயாரிப்புச் செலவைக் குறைக்கவும், நல்ல தரமான திரைப்படங்கள் தயாரிப்பதை உறுதிசெய்யவும், திரைப்பட கச்சா படச் சுருளுக்கு வரி குறைக்கப்பட்டது உட்பட திரைப்படத் தொழிலுக்காக பல்வேறு ஊக்கத் திட்டங்கள் வகை செய்யப்பட்டுள்ளன. திரைப்படத் தொழிலில் பணியாற்றுவோரின் நலனுக்காக, வேளச்சேரி-பள்ளிக்கரணையில் 85 ஏக்கர் நிலம் அவர்களது வீட்டுவசதித் திட்டத்திற்காக இலவசமாக ஒதுக்கப்பட்டுள்ளது. திரைப்படத் தொழிலில் பணியாற்றும் 60 வயது அடைந்துள்ளவர்களுக்கு மாதம் ரூ.300/-ஓய்வூதியம் வழங்கும் ஓய்வூதியத் திட்டம் ஒன்றும், இறப்பு-இயலாமை நேரும்போது அவர்களுக்கு ரூ.50.000 வரை வழங்க காப்புறுதி திட்டம் ஒன்றும் 1995 ஏப்ரலில் கொண்டுவரப்பட்டுள்ளன.

35. அரசுத் திட்டங்கள் மூலம் வறியவர்கள் பயனடைவதை மேம்படுத்தும் வகையில், நிருவாகத் திறனை மேம்படுத்த, இந்த அரசு எண்ணற்ற பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இவற்றில் ஒன்றாக, அரசு அலுவலகங்களை எளிதில் அணுகவும், மேற்பார்வைப் பணியைத் தரமான முறையில் மேம்படுத்தவும், நடைமுறைக்கேற்ற வகையில் நிருவாக அதிகார வரம்புகள் சீரமைக்கப்பட்டுள்ளன. தஞ்சாவூர், தென் ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்கள் உட்பட, பெரிய அளவிலான மாவட்டங்கள் ஏற்கெனவே சீரமைக்கப்பட்டுள்ளன. 1991 ஆம் ஆண்டு ஜூன் திங்களிலிருந்து 11 புதிய வட்டங்களும், 4 புதிய வருவாய்க் கோட்டங்களும் அமைக்கப்பட்டுள்ளன. விழுப்புரத்திலும், தஞ்சாவூரிலும் புதிய காவல் சரகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தேனியில் புதிய காவல் மாவட்டம் அமைக்கப்பட்டு வருவதன் மூலம் மதுரை ஊரகக் காவல் மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 1991 ஆம் ஆண்டு ஜூன்

1996 பிப்ரவரி 15]

திங்களிலிருந்து புதிதாக 111 காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அனைத்து நிலைகளிலும் செயல்பாடுகள் மேம்படுத்தப்படுவதை உறுதி செய்யும் முயற்சியின் ஓர் அங்கமாக. ஒட்டு மொத்த மதிப்பூதியம் பெற்று வந்த 91,000 மதிய உணவுத் திட்டப் பணியாளர்களும் 28,000 கிராம உதவியாளர்களும் முறையான காலச் சம்பள ஏற்றமுறை அடிப்படையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர். குற்றேவல் செய்வோர் என்று பொருள் குறித்த பழங்காலந் தொட்டு இருந்து வந்த "தலையாரி", "வெட்டியான்" என்ற பதவிப் பெயர்கள், தற்போது ஒரே சீராக "கிராம உதவியாளர்" என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. அப்பழுக்கற்ற வகையில் 25 ஆண்டுக் காலம் பணியாற்றியுள்ள அரசுப் பணியாளர்களுக்கு ரூ.500/-மதிப்புள்ள இந்திர விகாஸ் பத்திரம் ஒன்றைப் பரிசாக வழங்கும் புதிய திட்டமொன்று தொடங்கப்பட்டுள்ளது. பொதுமக்களின் புகார் மனுக்கள் குறித்து விரைந்து நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை உறுதி செய்யும் வகையில், ஒவ்வொரு மாவட்டத்திலும் பொது மக்கள் புகார் மனுக்களைப் பரிசீலிக்கும் பொறுப்பு வகிக்கும் தனித் துணை ஆட்சியர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டமொன்று தொடங்கப்பட்டுள்ளது.

36. அனைத்து துறைகளிலும், உயர்தரம் வாய்ந்த நிருவாகச் சாதனைக்கு உறுதி செய்ய, இவ்வரசு முன்னுரிமை அளித்துள்ளது. பல்வேறு துறைகள் மற்றும் மாநில பொதுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றின் சாதனை, தேசிய அளவிலான விருதுகள் அளிக்கப்பட்டதன் மூலம், அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்நாட்டிலேயே சிறந்த தரம் வாய்ந்த பணிக்குப் பெயர் பெற்ற மாநில அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், 1994-95 ஆம் ஆண்டில் மட்டும் 5 தேசிய விருதுகளைப் பெற்றுள்ளன. 1991-92 ஆம் ஆண்டிலிருந்து போக்குவரத்துக் கழகங்கள் மொத்தம் 34 விருதுகளைப் பெற்றுள்ளன என்பது அவற்றின் தரமான சேவைக்குரிய நற்சான்றிதழாகத் திகழ்கிறது. இதே போன்று, சமூகநலத்துறை, புதுவாழ்வு அளிப்பதில் சிறந்த சாதனை புரிந்த தற்காக, 1994-95 ஆம் ஆண்டில், 16 தேசிய விருதுகளைப் பெற்றுள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில், இத்துறை 66 தேசிய விருதுகளைப் பெற்றுள்ளது. வேளாண்மைத்துறை, வானவாரி பகுதிகளில் ஒருங்கிணைந்த நீர்வரத்துப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் சிறந்த சாதனை புரிந்ததற்காக, 1994-95 ஆம் ஆண்டில், தேசிய விருது ஒன்றைப் பெற்றுள்ளது. இதே போன்று, 1995 ஆம் ஆண்டில் கொச்சியில் நடைபெற்ற மூன்றாம் உலக நறுமணப் பொருட்கள் குழும மாநாட்டில், தமிழ் நாடு, ஏற்றுமதி செய்யத்தக்க சிறந்த நறுமணப் பொருள் வகையை உற்பத்தி செய்ததற்காக, முதல் பரிசைப் பெற்றுள்ளது. வேளாண்மை, விரிவாக்கம், புன்செய் நில சாகுபடி உயிரின கழிவு உர உற்பத்தி ஆகிய துறைகளில், இம்மாநிலம்; தொடர்ந்து தேசிய

[1996 பிப்ரவரி 15

உற்பத்தித்திறன் குழு விருதுகளைப் பெற்று வந்துள்ளது. தமிழ் நாடு கூட்டுறவு வீட்டுவசதிக் கூட்டமைப்பு புரிந்த சிறந்த சாதனையை அங்கீகரிக்கும் வண்ணம். அது, 1994-95 ஆம் ஆண்டில் இந்நாட்டில் சிறந்த முறையில் நிருவகிக்கப்படும் கூட்டுறவு வீட்டுவசதி தலைமை கூட்டமைப்பு என்று தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இத்துடன், ஊரக வீட்டு வசதி திட்டத்தைச் செயல்படுத்துவதில் மாண்புமிகு முதலமைச்சர் காட்டும் குறிப்பிட்ட அக்கறையைக் கருத்தில் கொண்டு, தேசியக் கூட்டுறவு வீட்டுவசதிக் கூட்டமைப்பு, "டாக்டர் ஜெ. ஜெயலலிதா விருது" என்ற விருதினை ஏற்படுத்தியுள்ளது. இந்த விருதினை தருமபுரிமாவட்டத்தில் உள்ள பாலக்கோடு வட்ட கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் பெற்றுள்ளது. தமிழ்நாடு கனிமவள நிறுவனம் (டாமின்), கருங்கற் பாளங்களை ஏற்றுமதி செய்துவருவதற்காக, தொடர்ந்து 6-வது ஆண்டாக, 1994-95 ஆம் ஆண்டில், சிறப்பு விருதினைப் பெற்றுள்ளது. காற்று விசையின் உற்பத்தியில், இந்நாட்டில், சிறந்து விளங்கும் மாநிலமாகத் தமிழ்நாட்டைத் தொடர்ந்து ஐந்தாவது ஆண்டாக மத்திய அரசு தேர்ந்தெடுத்துள்ளது.

37. ஜனநாயக ரீதியில் அதிகாரங்களைப் பரவலாக்க வேண்டும் என்ற நோக்கத்தை இந்த அரசு முழுமையாக ஏற்றுள்ளது. ஊராட்சித் தேர்தல்கள் 1995 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் நடைபெறும் என்று இந்த அரசு அறிவித்து, இதற்கான தேர்தல் அட்டவணை தயாரிக்கப்பட்டது. தேர்தல் தொடர்பான பொருட்களை வாங்குவது, தேர்தல் பணிக்கென பணியாளர்களை நியமிப்பது உட்பட அனைத்துத் தேர்தல் பணிகளையும் அரசு மேற்கொண்டது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும் போதிய அளவில் பிரதிநிதித்துவம் பெற வகை செய்வதற்கான ஒரு நடவடிக்கையாக இம்மாமன்றம் இட ஒதுக்கீடுகளுக்கு வகை செய்யும் சட்டத்தைக் கொண்டு வந்தது. இருப்பினும், இட ஒதுக்கீடு தொடர்பான இத் திட்டத்தை எதிர்த்து, உயர் நீதி மன்றத்தில் பல ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இது தொடர்பாக, இறுதியான தீர்ப்பு அளிக்கப்படும் வரையில், தேர்தல் அறிவிக்கை எதனையும் வெளியிட வேண்டாம் என்று மாநிலத் தேர்தல் ஆணையத்திற்கு உயர் நீதி மன்றம் ஆலோசனை நல்கியுள்ளது.

38. இம் மாநிலத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்த அரசு, 1992 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் அறிவித்தது என்பதை பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். உச்ச நீதி மன்றத்தில் பல வழக்குகள் நிலுவையாக இருந்தன. தேர்தல்களை நடத்துவதற்குத்

தடைவிதித்து சென்னை உயர் நீதி மன்றம் *1992* ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் ஆணை பிறப்பித்தது. *1995* ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் உச்ச நீதி மன்றம் பிறப்பித்துள்ள கட்டளைகளின் அடிப்படையில், உச்ச நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையாய் இருந்த பல ரிட் மனுக்கள் தொடர்பாக, உயர் நீதி மன்றத்தின் ஈராயம், மாநிலத்தில் உள்ள தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்கள் *1996* ஆம் ஆண்டு மே திங்களின் இறுதிக்குள் நடத்தப்படவேண்டும் என்று கட்டளையிட்டு தீர்ப்பளித்துள்ளது. வரையறுக்கப்பட்ட இக்கால அளவிற்குள் தேர்தல்களை நடத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகிறது.

39. கடந்த ஐந்து ஆண்டுகளில், இம்மாநிலம் அனைத்துத் துறைகளிலும் குறிப்பிடத்தக்க வகையில் முன்னேறியுள்ளது. சட்டம்-ஒழுங்கு சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வந்துள்ளது. இன்று தமிழ்நாடு அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது. இது பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளிலும் சீரான வளர்ச்சி ஏற்பட வித்திட்டுள்ளது. இம்மாநிலத்தில் வேளாண் உற்பத்தி மிகவும் அதிகரித்துள்ளது. இந்த அரசின் கொள்கைகள், விரைவான தொழில் வளர்ச்சிக்கு உறுதி செய்துள்ளன. தாழ்த்தப்பட்ட ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரம் முன்னேற்றமடைந்துள்ளது. ஏழைகளில் மிக மிக வறிய ஏழைகளின் வாழ்க்கைத் தரத்தை மேற்கொண்டும் மேம்படுத்த உறுதி செய்யும் வகையில், பல புதிய திட்டங்கள் தங்கு தடையின்றி செயல்படுத்தப்பட்டுள்ளன. *1991* ஆம் ஆண்டிலிருந்து கடந்த ஐந்து ஆண்டுகளில் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையில் அமைந்துள்ள இந்த அரசு, நிலையான வளர்ச்சிப் பாதையில் தமிழ்நாட்டை நடத்திச் சென்றுள்ளது என்று இங்கு குறிப்பிடுவது மிகை ஆகாது.

40. குறிப்பிடத்தக்க வகையிலான இச்சாதனை, விடா முயற்சிக்கும், கடின உழைப்பிற்கும் கிடைத்துள்ள வெற்றியாகும். இந்த அரசு எத்தனை இடர்பாடான சூழலில் தன்னுடைய ஆட்சிப் பொறுப்பை ஏற்றது என்பதை இப்பேரவையின் உறுப்பினர்கள் நன்கறிவர். சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை, நிதிப் பற்றாக்குறை, சமூக நல்லுறவுக்கும், சமூகக் கட்டமைப்புக்கும் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள். இம்மாநிலத்தின் உரிமைகளைப் பிறர் மீறி நடத்தல் ஆகிய ஒவ்வொரு வகையிலும் ஏற்பட்ட பாதகமான சூழ்நிலைகளுக்கு மனஉறுதியுடன் எதிர்கொண்டு தீர்வு காணப்பட்டுள்ளன. மாநிலத்தின் உரிமைகளை முழுவதுமாகப் பாதுகாக்கும் அதே நேரத்தில், தேசிய ஒருமைப்பாட்டைப் பேணிப்

பாதுகாப்பதிலும் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழவும் இந்த அரசு உறுதி செய்துள்ளது. தமிழ் நாடு பெருமிதம் கொள்ளத்தக்க அளவிற்கு முன்னேற்றப் பாதையில் செல்வது குறித்து, தேசிய அளவிலும், உலக அளவிலும் பாராட்டப் பெற்றுள்ளது. வளர்ச்சித் திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்தக் கூடிய தமிழ்நாட்டின் திறனை இருநாட்டு முகவரமைப்புகளும் பன்னாட்டு முகவரமைப்புகளும் அங்கீகரித்துள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் எழுச்சிமிகு தலைமை வெகுவாகப் பாராட்டப்பெற்றுள்ளது. இனி வரும் ஆண்டுகளிலும், இம்மாநிலம் நிலையான முன்னேற்றத்தையும், வளத்தையும் பெற்றுத் திகழும் என நான் உளமார நம்புகிறேன்.

41. இப்பேரவையின் விவாதங்கள், பொருள் பொதிந்தவையாகவும், சம நிலையுடையவையாகவும், ஆக்கப்பூர்வமானவையாகவும் அமைந்து, மாநில மக்களின் நலனைத் தொடர்ந்து பேணிக் காப்பதில் கவனம் செலுத்தும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

வணக்கம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

HONOURABLE MEMBERS OF THE LEGISLATIVE ASSEMBLY,

I have great pleasure in addressing you at the commencement of the first session of the Tamil Nadu Legislative Assembly for the year 1996. I extend my warm greetings to all of you.

2. This is the last Session of the 10th Legislative Assembly and this Government is set to complete its full term of five years. Looking back over the five year period, we find that the State has progressed on all fronts. The Annual Plan outlays have been consistently exceeded in each of the years since 1991-92. A comprehensive Social Safety Net has been provided for the poor and the down-trodden. Law and order which is the foundation for growth in all areas has been well maintained. We can look back with pride on this splendid record, and I hope that the State will maintain similar progress in the future as well.

3. Hon'ble Members of the House will recall the difficult situation following the assassination of Thiru Rajiv Gandhi, the Hon'ble former Prime Minister, when this Government took office. The danger posed by foreign militants and terrorists was dealt with firmly and in a concerted manner and the situation brought under control within a few weeks of this Government taking office. Thereafter, even when the country as a whole was rocked by violent incidents following the demolition of the Babri Masjid at Ayodhya, Tamil Nadu remained a model of communal amity. Attempts by left wing extremists and religious fundamentalists to achieve their nefarious ends by the use of explosives were countered with firm and deterrent action. A crack investigation team was formed to investigate the various explosiions in the State and the bomb blasts were ended. The recent incidents of violence in the Southern districts have been brought under control quickly. The personal intervention of the Hon'ble Chief Ministyer Dr. J. Jayalalitha, who visited the area, instilled a sense of confidence in the public and ensured that the officials on the spot took prompt and firm action. As a result of these measures, calm has returned to the Southern districts.

4. This Government, over the last five years, has through a series of measures transformed the State Police into a modern, professional and humane force, imbuing it with a new vision and direction. A total sum of

Rs.50 crores has been spent on modernising the Police Force, providing it with the latest communication equipment, modern arms and ammunition and up-to-date facilities for investigation and information retrieval. Against the State's requirement of Rs.80.45 crores, the Government of India released only Rs.10 crores, for the modernisation of Police. Undeterred by this, the State has ensured adequate provision of funds from its own budgetary resources. Each of the 1172 Police Stations in the State is now equipped with a vehicle, a telephone and a wireless set. With a view to improving the policing in the Madras Metropolitan Area, 5 Police Stations in the suburbs have been added to the jurisidiction of the Commissioner of Police, Madras in the first phase with increased man power and equipment with effect from 9th February, 1996. The total strenght of the Police Force has been increased from 68,638 in 1991 to 78,428 in 1996. Hon'ble Members are aware of the pioneering role of the Hon'ble Chief Minister Dr. J. Jayalalitha in setting up 57 All Women Police Stations to combat crime against women. This initiative has been greatly welcomed by the people and widely appreciated even at the international level. All Police Districts in the State now have fully functional All Women Police Stations. Tamil Nadu is the first State in the country to establish a Victims Assistance Fund to rehabilitate the victims of violent crime and their families. In order to preserve the morale of the Police Force, a number of welfare measures for policemen including group insurance schemes, a health fund scheme, provision of subsidised rations and provision of adequate housing have been taken up. To ensure that quality training is imparted to the police officers and men, a Police Academy at Veerapuram is being set up at a cost of Rs.20 crores.

5. Recognising that "justice delayed is justice denied", a number of new courts have been set up for speedier disposal of cases. 44 Judicial Magistrates Courts are being converted into District Munsif-cum-Judicial Magistrate Courts. 6 Family Courts including three at Madras and one each at Madurai, Salem and Coimbatore have been set up, of which 5 have women as presiding officers. 4 new Chief Judicial Magistrate Courts including an additional court at Krishnagiri and 3 new courts at Tuticorin, Nagapattinam and Thiruvannamalai have been set up. 9 new Sub-Courts and 7 new District Munsif courts including additional Munsif courts have been sanctioned. An additional District Court at Krishnagiri has also been sanctioned. A total number of 84 courts have been set up since 1991-92,

which is unprecedented in the period since Independence. The courts of the Chief Judicial Magistrates in all districts have been upgraded as Additional Sessions Courts and have been designated as Human Rights Courts and empowered to try all cases relating to human rights violations. Steps have been taken to enhance the pecuniary jurisdiction of various civil courts which will ensure expeditious disposal of cases at low cost. So far, 80 schemes at a total cost of Rs.35.17 crores have been sanctioned in the period from 1993-94 for the construction of court buildings and judicial officers' quarters. A Directorate of Government Litigation and a Directorate of Prosecution have been formed to ensure quicker disposal of cases. The benefits to advocates under the Advocates' Welfare Fund have been enhanced substantially to Rs. 1 lakh in the event of death and Rs. 50,000 on retirement.

6. Tamil Nadu is reeling under the impact of a severe drought. As against the normal rainfall level of 461 mm during the North East monsoon, the State received only 259 mm during 1995, a shortfall of 44%. The Government has declared 15 districts viz., Chidambaranar, Kanyakumari, Ramanathapuram, Kamarajar, Tirunelveli-Kattabomman, Coimbatore, Pudukottai, Thanjavur, Tiruchirappalli-Perumbidugu Mutharayar, Karur-Dheeran Chinnamalai Gounder, Perambalur-Thiruvalluvar, Pasumpon-Muthuramalinga Thevar, Madurai, Dindigul-Anna and Nagapattinam Quaid-e-Milleth as drought affected. In additional, 10 taluks in South Arcot Vallalar, Salem, Villupuram Ramasamy Padaiyatchiar and Tiruvannamalai Sambuvarayar districts have also been declared as drought affected. Immediate measures to combat drinking water scarcity, rural unemployment and non-availability of fodder and water for cattle have been undertaken. An expenditure of Rs.70 crores towards provision of drinking water, generation of rural employment and other relief measures was initially sanctioned. This included a sum of Rs.26.94 crores for providing a total number of 3753 borewells. The completion of the 45 desalination plants in Ramanathapuram district at a total cost of Rs.65 crores has been taken up on a war footing although as against the originally promised Central assistance to the extent of 75% of the cost, the Governmetn of India has now limited its assistance to the Rs.10.75 crores already released. The remaining cost will now have to be met by the State Government. The Government has also sanctioned the setting up of 155 additional smaller desalination plants at a total cost of

Rs.28.33 crores. The Hon'ble Chief Minister Dr. J. Jayalalitha undertook an on the spot review of the situation at Ramanathapuram on 27th January, 1996, and announced a relief package of Rs.266 crores. This includes an additional provision of Rs.72 crores to immediately take up works to provide drinking water. Rs.35 crores will be allocated for urgent road improvement works. Rs. 85 crores will be incurred on rural employment generation. Rs. 5 crores has been provided as a grant to municipalities in Dindigul-Anna district to take up drinking water works. The State Government is preparing a Memorandum on the drought situtation seeking a total assistance of Rs.630 crores from the National Fund for Calamity Relief. The State will request the Union Government to release adequate assistance to help the State to meet the unprecedented drought situation.

